
www.t.me/tamilbooksworld

# பணம் பெண் பாசம்



AVOID TO DOWNLOAD FROM userupload.net SPAM WEBSITE

ஜாவர் சீதாராமன்

# பணம் - பெண் - பாசம்

## 1

இருபதாம் நூற்றாண்டில் புராண காலத்து அரக்கர்களைக் காண முடியாது. சால் வயிறு, பெருத்த மீசை, தடித்த உடல், கோடாரிப் பற்கள் இம்மாதிரி லட்சணம் பொருந்திய அரக்கர்களை நாடகத்தில், சினிமாவில் வேடமணிந்த நிலையில் காணலாம். அல்லது மற்றப்படி காண முடியாது.

இரக்கமில்லாதவனை அரக்கனாக வர்ணித்தார் கம்பர். இரக்கமற்றவர்களை அரக்கர்கள் என்று கொண்டால், அம்மாதிரி மனிதர்களை நாம் இன்று தினமும் சந்திக்கிறோம். அரசியலில் இரக்கத்திற்கு இடமில்லை, வியாபாரத்தில் இரக்கத்திற்கு இடமில்லை, வாழ்விலே தாட்சண்யத்துக்கு இடமில்லை என்பதே இந்தப் போட்டி நூற்றாண்டின் சித்தாந்தமாக இருக்கிறது. கழிவிரக்கம் என்பது தோல்வி மனப்பான்மையின் அங்கமாகிவிட்டது.

'நான்'— 'எனக்கு' என்ற மந்திர ஜபத்தில் உருவாகி இருக்கும் பொருளாதார அமைப்பில், இரக்கம் என்பது ஆபத்தான உணர்ச்சியாக இருக்கிறது. தானம் வழங்குவது, தர்மம் கொடுப்பது என்ற செயல்கள் கூட விளம்பரத்தின் அடிப்படையிலோ, அல்லது வருமான வரியில் பெரும் அளவு பணத்தை மிச்சப்படுத்தும் நோக்கத்துடனோ செய்ய வேண்டியிருக்கிறது. பச்சாதாபத்தின் அடிப்படையில், கொடை வழங்கப்படுவதில்லை, இல்லை என்று கை நீட்டுபவன் ரசீதில் கையெழுத்திடத் தயாராக இருக்க வேண்டும். 'எடுத்துக் கொள்' என்று

கொடுப்பவன், ரசீதைப் பெற்றுக் கொண்டே பணத்தைக் கொடுக்கத் தயாராக இருக்கிறான்.

இந்தச் சூழ்நிலையை நன்கு புரிந்து கொண்டவன் சக்ரபாணி. இரக்கம், தாட்சண்யம், கொடை இவற்றுக்கு இடம் கொடுத்தால் தோல்வி என்று தன் பதினெட்டு வயதிலேயே புரிந்து கொண்டான். தன் வெற்றிக்கென்றே ஒரு புதிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன் தயார் செய்து கொண்டான். அந்த ஆத்திசூடியின் முதல் வாக்கியம்: 'ஊக்கமது கைவிடேல்; இரக்கமது கைவிடு!'

அவன் கண்டுபிடித்த புதிய தத்துவங்களில் சில பின் வருமாறு:

''கோவிலுக்குப் போகிறவன் ஒரு கோழை!''

''பஞ்சத்தால் மடங்காதவன் கூட வஞ்சத்தால் மடங்குவான்; அதிலும் படியாதவன் வஞ்சத்தில் அடங்குவான்!''

''வியாபாரப் போட்டியில் அடுத்துக் கெடுப்பதே ஆயுதம்!''

''செய்த உதவிக்கு நன்றி காட்டுவது நம்மை நடு வீதிக்குக் கொண்டு வந்துவிடும்!''

''மாதத்துக்கு மாதம் புது ஆடைகள் மாற்ற வேண்டும்; வருடத்துக்கொரு முறை கார்களை மாற்ற வேண்டும். உபயோகம் முடிந்ததும் நண்பர்களை மாற்ற வேண்டும்.''

—இவை சக்ரபாணி அடிக்கடி கூறும் பொன் மொழிகள்.

பலவீனமில்லாத மனிதன் கிடையாது. டீ, காப்பி, புகையிலை, சிகரெட்—சிலருக்குள்ள பலவீனம். அந்தப் பலவீனத்தைப் பயன்படுத்துவதே டீக்கடை, காப்பி ஓட்டலின் நோக்கம். சிலருக்குப் பெண் விஷயத்தில் பலவீனம். சிலருக்குத் தன் புகழ் கேட்பதில் பலவீனம். இன்னும் சிலருக்கு இன்னும் சில விஷயங்களில் பலவீனம்.

www.t.me/tamilbooksworld



எல்லோருடைய எல்லாப் பலவீனங்களையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்பவனே புத்திசாலி என்று உணர்ந்து சக்ரபாணி தன் நண்பர்கள்—விரோதிகளின் பலவீனங்களையெல்லாம் பயன்படுத்தி ஒவ்வொருவராய் அழித்து முன்னுக்கு வந்தவன்.

சக்ரபாணியைப் பொறுத்தவரையில் மன்னிக்க முடியாத பலவீனம் இரக்கம். மன்னிக்கக்கூடிய பலவீனம் பணத்தாசை. பணத்தாசை என்பது திட்டவட்டமாக இயங்கும்போது பலவீனமாக அல்லாமல், வல்லமை தரும் ஆயுதமாகவும் மாறும்என்பதை உணர்ந்திருந்தான். அவன் உடல் பூராவும் தலை முதல் கால்வரையில் தகதகவென்று எரிந்தது, பணத்தாசை என்ற நெருப்புத்தான்! அது அவன் தூக்கத்தை விரட்டி, அவன் பசியைப் போக்கி அதுவே உணவும் தூக்கமும் ஆகி, அவனுக்குப் பெரிய டானிக் போல் அவனை நிரந்தர இளமையில் வைத்திருந்தது.

நெப்போலியன் படைகளின் முன் ஐரோப்பிய நகரங்களாகிய மிலான், ஆஸ்டர்லிட்ஸ், ஜீனா ஒவ்வொன்றும் விழுந்தது போல் சென்னை மாவட்டத்திலுள்ள பல தொழில்கள் சக்ரபாணியின் சூது திட்டங்களின் முன் விழுந்து, அவன் கைக்கு மாறின. வெகு சீக்கிரத்தில் சக்ரபாணி சென்னையிலுள்ள தொழில் சாம்ராஜ்யத்துக்குச் சக்ரவர்த்தியாக மாறினான்.

சக்ரபாணியே பெருமையாகச் சொல்லிக்கொள்வான்; ''வேறு மாவட்டத்திலிருந்து சென்னைக்கு வந்து ஒருவன் சென்னையில் ஒரு வாரம் தங்கினால் குறைந்தது அவன் எனக்குப் பத்து ரூபாயாவது கொடுத்தாக வேண்டும். அவன் என் மூலதனத்தில் இயங்கும் ஓட்டல்களில் தங்கினால் எனக்குப் பணம்; என்னுடைய சினிமா தியேட்டர்களில் படம் பார்த்தால் எனக்குப் பணம்; என் பஸ்களில் பிரயாணம் செய்தாக வேண்டும்; அல்லது என் டாக்ஸிகளில் ஏறியாக வேண்டும்; என் துணிக்கடைகளில்

துணியாவது வாங்கியாக வேண்டும்; குறைந்தபட்சம் என்னுடைய ஆதரவில் விநியோகமாகும் சிகரெட்டுகளையாவது குடித்தாக வேண்டும்!''

இவ்வாறு பலவகைப்பட்ட பரந்த பல தொழில்களின் பின்புறம் கண்ணுக்குப் புலப்படாதவாறு சக்ரபாணியின் ஆக்ஞாசக்கரம் இயங்கியது. இவ்வளவு ஸ்தாபனங்களையும் நிறுவ, சக்ரபாணிக்கு எங்கிருந்து எப்படி மூலதனம் கிடைத்தது என்பது பலருக்கு விடை கிடைக்காத கேள்வியாக இருந்தது. ரிஷி மூலம், நதி மூலம் போல் சக்ரபாணியின் மூலதனத்தின் மூலத்தைப் பற்றிப் பல ஊகங்கள் உலாவின. ஒருவர், அவன் புதையலெடுத்திருப்பான் என்றார். சிலர் அவன் பர்மாவில் யாரையோ மோசம் செய்து, பணத்தோடு திரும்பிவிட்டான் என்று கூறினார்கள். சிலர், ரயிலில் சக்ரபாணி பயணம் செய்யும் போது யாரோ பணக்காரர் இறந்துவிட்டார் என்றும், அந்தப் பிணத்தின் தலைப்புறம் இருந்த பணப்பெட்டியை அபகரித்து, சக்ரபாணி முதலாளியானான் என்றும் கூறினர்.

ஆனால் சக்ரபாணியிடம் அவன் மூலதனத்தைப் பற்றி, அவன் பூர்வோத்தரத்தைப் பற்றிக் கேட்டபோது அவன் கூறிய பதில் இதுதான் : நீங்கள் நம்பும் கடவுளுக்கும் தாய் தந்தை யார் என்று தெரியாது. எனக்கும் அதே நிலைதான். நான் ஓர் அநாதைச் சிறுவன். என் மூலதனம் இதுதான் என்று தன் நெற்றியையும், இதயத்தையும் தொட்டுக் காட்டுவான். ''என் அறிவும் என் துணிவுமே என் சொத்து'' என்று பெருமையாகச் சொல்வான்.

சக்ரபாணிக்கு மூலதனம் எங்கிருந்து வந்திருந்த போதிலும் அதை வைத்து அவன் நிர்மாணித்த வியாபார சாம்ராஜ்யம், அவன் அறிவுக்கும், அவன் தைரியத்துக்கும் சான்றாக அமைந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக அவனுடைய கொள்கையற்ற பண்புக்கு விளக்கமாக இருந்தது.

www.t.me/tamilbooksworld



பல ஸ்தாபனங்களை நடத்த அவனுக்கு உண்மையான, நேர்மையான, ஒழுக்கமான உழைப்பாளிகள் தேவையாக இருந்தனர். அம்மாதிரி உழைப்பாளிகளையே சக்ரபாணி தேர்ந்தெடுத்தான். தன்னிடம் இல்லாத பண்புகளைத் தன்னுடைய நிர்வாகிகளிடம் எதிர்பார்த்தான். ஆகையால், நிறையப் பணம் கொடுத்து, தேவையான சொத்துக்களை அவர்களுக்கு அளித்து, அநுபவ பாத்யதையை மட்டும் அவர்களுக்குக் கொடுத்திருந்தான். எந்த நிமிஷம் அவர்கள் அவருக்கு விரோதமாக நடவடிக்கை எடுக்கத் துணிந்தாலும், அவர்களின் சொத்து அவர்களுக்கு இல்லாமல் அவனுக்கே மறுபடி திரும்பும்படி செய்து வைத்திருந்தான். அதோடு மட்டுமல்லாமல் அவர்களைச் சிக்கல்களில் மாட்டி வைத்து, சட்டப்படி அவர்களைக் குற்றவாளிகளாக்கும் பத்திரங்கள் அவன் வசம் இருந்தன. அவர்களின் உயிர் நிலையைத் தன்னிடம் வைத்துக் கொண்டு, அவர்களைப் பயத்தாலும் அன்பாலும் மாறி மாறி இயக்கி வந்தான்.

சக்ரபாணி என்ற பெயரைக் கேட்டவுடனே அவனுடைய ஸ்தாபன நிர்வாகிகள் நடுநடுங்கி உழைத்தனர். சில்லறை ஊழியர்களைப் பொறுத்தவரையில், தொழிலாளர் தலைவர்களுக்கு அவ்வப்போது வாய்க்கரிசி போட்டு, வேலை நிறுத்தம் முதலியவை இல்லாது இருபத்து நாலு மணி நேரமும் அவனது ஸ்தாபனங்கள் இயங்கும்படி வைத்திருந்தான்.

யாரும் அவனை விரும்பவில்லை. அவனும் அதை எதிர்பார்க்கவில்லை. எல்லோரும் அவனிடம் பயந்தனர். பயம்தான் நாகரிகத்தின் ஆணிவேர்; அதுதான் மனிதனை ஒழுங்காக வைத்திருக்கும் அடிப்படை உணர்ச்சி என்பதில் சக்ரபாணி அசையாத நம்பிக்கை வைத்திருந்தான்.

எகிப்து நாட்டுப் பிரமிட்டுகள், தாஜ்மஹால் கட்டுவதில் உழைத்த கூலிகள், பிரும்மாண்டமான கோபுரங்களைக் கட்டிய உழைப்பாளிகள் வெறும் கலை உணர்ச்சி

யால் மட்டும் அவைகளைச் சாதித்திருக்க முடியாது. சவுக்கடி, சிறை என்ற பீதியால் உந்தப்பட்டுத் தான் அவற்றைச் செய்திருக்க முடியும் என்பது சக்ரபாணியின் நம்பிக்கை.

மற்றவர்களை விரட்டியதைப் போலவே, தன்னையும் விரட்டிக் கொண்டு உழைத்தான். ஒரு நாள் முடிவதற்குள் குறைந்தது 50 மைலாவது காரில் பயணம் செய்து தன் அலுவலகங்களைப் பார்வையிடாமல் இருக்கமாட்டான். எந்த நிமிஷம் எங்கு இருப்பான் என்பது யாருக்கும் தெரியாது. 'புலி வருகிறது, புலி வருகிறது' என்ற பீதியி லேயே தயாராக இருப்பார்கள் சிப்பந்திகள் அலுவலகத்தில்.

வயது நாற்பற்தேழு ஆன போதிலும் அவன் நடை ஒரு வேங்கையின் நடை போலிருக்கும். அவன் உயர்ந்த ரகத்துணியால் மடிப்புக் கலையாத சூட்டும் கோட்டும் அணிந்து நடந்து வருவதே பார்ப்பதற்குக் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். முன் நெற்றியில் நரைத்திருக்கும் ஒரு கற்றையான ரோமத்தைத் தவிர, அவனுக்கு நாற்பது தாண்டி விட்டது என்பதற்கு அடையாளமே தெரியாது. துருதுருவென்று அங்குமிங்கும் ஓடி எல்லாவற்றையும் கவனிக்கும் கண்களின் சுறுசுறுப்பு சக்ரபாணியின் முகத்துக்குத் தனி வசீகரத்தைக் கொடுத்தது.

அன்று மணி பன்னிரெண்டு இருக்கும். சென்னை மவுண்ட் ரோடில உள்ள தன் காரியாலயத்துக்கு நூறு கெஜத்துக்கு முன்பே தன்னுடைய காரை நிறுத்திவிட்டு நடந்தே தன் காரியாலயத்தை நோக்கிச் சென்றான் சக்ரபாணி.

கறுப்புச் சலவைக் கல்லால் ஆன வெளிச்சுவர், அதன் மீது வரிசையாக அடுக்கப்பட்ட பித்தளைப் பலகைகள், அவனுடைய பல கம்பெனிகளின் பெயர்களைத் தாங்கி நின்றன. பாலா என்ஜினீயரிங் ஒர்க்ஸ், பாலா ரெஸ்டாரன்ட் கம்பைன், பாலா டெக்ஸ்டைல் மில்ஸ்,

www.t.me/tamilbooksworld



பாலா ஸ்பின்னிங் மில்ஸ், பாலா தியேட்டர் ஸிண்டிகேட், பாலா பஸ் டிரான்ஸ்போர்ட், பாலா டூரிஸ்ட் டாக்ஸி சர்வீஸ், பாலா பாங்கிங் கார்ப்பரேஷன் இப்படியே இன்னும் பல கம்பெனிகளின் போர்டுகள் வரிசையாக இருப்பதைப் பார்த்தபடி நின்றான். அந்தப் போர்டுகளின் கூட்டத்தைப் பார்க்கும் போது அவனுக்கு ஒரு தனி மகிழ்ச்சி. அந்தப் போர்டிலுள்ள 'பாலா' என்ற வார்த்தையைப் பார்க்கும் போது அவன் மனம் நெகிழ்ந்தது.

அதே சமயத்தில் தன் தலைமை அலுவலகத்தின் வெளிப்புறம் ஒரு ஸ்டூலில் உட்கார்ந்து கொண்டிருந்த கூர்க்கா, சாவதானமாகத் தன்னுடைய காக்கி உடையிலிருந்து, ஒரு பொட்டலத்தை எடுப்பதைப் பார்த்தான் சக்ரபாணி. அந்தப் பொட்டலத்தைப் பிரித்து, மெதுவாக ஒவ்வொரு நிலக்கடலையாக எடுத்து, தோலியைத் தேய்த்துவிட்டு, வாய்க்குள் போட்டுக் கொள்வதைப் பார்த்தான். சக்ரபாணிக்கு ஆத்திரமாக வந்தது. உயர்ந்த ரகக்காக்கியில் யூனிபாரம் தைத்துக் கொடுத்திருக்கிறோம், மங்காது பிரகாசிக்கும் பட்டன்கள் அணிந்த கூர்க்கா— அவனுக்குச் சம்பளம் நூறு ரூபாய்; அவனுக்கு வீட்டு வாடகை இனாம்; நடுப்பகல் சாப்பாடு, காலைச் சிற்றுண்டி இனாம்—இவ்வளவும் கொடுத்தும், தலைமை அலுவலகத்தின் வாசலில் கடலை உரித்துத் தின்கிறானே, அலுவலகத்தின் பெருமையையே குலைக்கிறானே என்று ஆத்திரப்பட்டான். கூடவே கூர்க்கா போன மாதந்தான் நியமிக்கப்பட்டவன் என்பது சக்ரபாணிக்கு ஞாபகம் வந்தது.

நேராக அவனை நோக்கி நடந்தான். கூர்க்கா, சக்ரபாணி பக்கம் திரும்பினான். ஆனால் வருவது தன் எஜமான் என்று தெரியவில்லை. எஜமான் காரில் வந்து தான் பழக்கம்.

யாரோ வருகிறார்கள் என்று சரியாகப் பார்க்காமல், அலட்சியமாகக் கடலையைத் தேய்த்துத் தோலியை ஊதி னான். நிலக்கடலைத் துகள்கள் சக்ரபாணியின் முகத்தின்

முன் பறந்தன. சக்ரபாணியின் அடக்கப்பட்ட ஆத்திரம் இன்னும் அதிகமாயிற்று.

சக்ரபாணி கூர்க்காவை நோக்கி இரண்டடிகள் நடக்கவும், கூர்க்கா, எஜமானனை அடையாளம் கண்டு கொண்டான். வழக்கமாக எஜமான் காரில் வருவார். எஜமானின் டிரைவர், ஆபீஸை நெருங்கும்போது, கார் ஹாரனை இருமுறை அழுத்துவான். சக்ரபாணியின் கார் ஹாரனின் பிரத்யேக சங்கீத ஒலியிலிருந்து, 'புலி வந்து விட்டது!' என்று அலுவலகத்தில் சிப்பந்திகள் புரிந்து கொள்வார்கள். உடனே எல்லாவற்றையும் சீர்படுத்தி, அவரவர் இடத்தில் அமருவார்கள். புலியின் வருகைக்குத் தயாராக இருப்பார்கள்.

இன்று சக்ரபாணி, காரை நூறு கெஜத்துக்கு முன் நிறுத்திவிட்டு நடந்து வருவான் என்று கூர்க்காவும் எதிர் பார்க்கவில்லை. மற்றவர்களும் எதிர்பார்க்கவில்லை. எஜமானைப் பார்த்ததும் சட்டென்று எழுந்து நின்று பட்டென்று சல்யூட் அடித்தான். சல்யூட் அடித்த அவசரத் தில் கடலைப் பொட்டலம் கீழே விழுந்தது. சக்ரபாணி சிதறிய கடலைப் பருப்புகளைப் பார்த்தான். பிறகு கூர்க்காவின் முகத்தைப் பார்த்தான். கூர்க்கா நடுக்கத் துடன் சல்யூட் அடித்தபடியே கையை மேலிருந்து இறக்காமல் நின்றான்.

சக்ரபாணி தன் சிப்பந்திகள் மீது ஆத்திரமடையும் போது அவன் முகம் செல்லும் போக்கே விசித்திரம். சக்ரபாணி தன் கொழுத்த முகத்தின் கீழ் உதடுகளைப் பிதுக்குவான். அம்மாதிரி கீழ் உதட்டைத் துறுத்தியபடி, ''இந்தக் கடலைப் பொட்டலத்தின் விலையென்ன?'' என்றான்.

கூர்க்கா ஒன்றும் பேசாமல் நின்றான்.

''இதன் விலையென்ன?''

''இதன் விலை பதினைஞ்சு பைசாங்க'' என்றான் கூர்க்கா, அரை குறைத் தமிழில்.



சக்ரபாணி, ''நீ சாப்பிட்ட கடலையின் விலை பதினைந்து பைசா அல்ல; பதினைந்து ரூபாய். டியூட்டி வேளையில் கடலை தின்றதற்கு உனக்கு அபராதம் பதினைந்து ரூபாய். அடுத்த மாதம் உன் சம்பளத்தில் பதினைந்து ரூபாய் குறைக்கப்படும்'' என்று சொல்லி விட்டு, மறுபேச்சுப் பேசாமல் உள்ளே சென்றான்.

வெளிப்புறமிருந்து கட்டிடத்தினுள் நுழைந்ததும், சக்ரபாணி ஒரு விநாடி தயங்கினான். நேராக குமாஸ் தாக்கள் வேலை செய்யும் ஹால் வழியே நுழைவதா, இல்லை இடது பக்கமாகத் தன் அறைக்குள் செல்வதா என்று யோசித்தான். ஹாலின் உட்புறமிருந்து கசமுச என்று சப்தம் வந்தது.

சக்ரபாணி, சப்தம் செய்யாமல் கதவைத் திறந்தான். பிரம்மாண்டமான ஹாலில், வரிசையாகச் சிறுசிறு மேஜைகள், அதன் எதிரே நாற்காலிகள் போடப் பட்டிருந்தன. இரண்டு வரிசைகளிலும் சேர்த்துச் சுமார் நூறு மேஜைகள் போடப்பட்டிருந்தன.

மூலைக்கு மூலை குமாஸ்தாக்கள் நின்று பேசிக் கொண்டிருந்தனர். சக்ரபாணியை இகழ்ந்து பேசிக் கொண்டிருந்தனர். ஹாலின் நடு மையத்தில் போடப் பட்டிருந்த மேஜையின் முன் உள்ள நாற்காலி காலியாக இருந்தது. அதன் இருக்கைக்கு உரியவர் சாரங்கன் என்ற மேனேஜர். ஆபீஸ் வேளையில் அவர் தம் இருக்கையில் இல்லாமல் எங்கே போயிருப்பார் என்று யோசித்தான் சக்ரபாணி.

அவர் மிகவும் பயபக்தியானவர். சக்ரபாணியோடு ஆரம்ப நாள் முதல் இருந்தவர். அவர் கூடவா முதலாளி இல்லாதபோது கடமையை மறந்து வெளியே சென்று விடுகிறார் என்று யோசித்தான் சக்ரபாணி.

அலுவலகத்தில் ஒரு நாள் திடும் பிரவேசத்தில் எவ்வளவு உண்மைகள் புலனாகின்றன என்று யோசித்

www.t.me/tamilbooksworld

தான். குமாஸ்தாக்கள், முதலாளி அதே ஹாலில் நிற்பதைக் கவனியாது பேசிக்கொண்டே இருந்தனர்.

சட்டென்று வடமூலையில் நின்ற குமாஸ்தா சக்ரபாணியைக் கவனித்தார். அவர் முகம் பீதியால் வெளுத்தது. அதைப் பார்த்த மற்றவர்கள் திரும்பினார்கள். சக்ரபாணி ஹாலின் நுழைவாசலில் பீரோ அருகில் நிற்பதைக் கவனித்தனர். ஒரு விநாடியில் சப்தம் அடங்கியது. அமைதி நிலவியது. விட்டத்திலிருந்து தொங்கிய மின்சார விசிறிகளின் 'ஞொய்' என்ற சப்தம் தான் அந்த ஹாலில் கேட்டது. கற்சிலைகள் போல் அவரவர் இடத்தில் நின்றனர் குமாஸ்தாக்கள்.

சிறு தவறுகளைக்கூட மன்னிக்காத முதலாளி என்ன செய்வானோ என்ற பயம்தான் எல்லோர் முகத்திலும் நிலவியது. ஆனால் சக்ரபாணி யாரும் எதிர்பார்க்காத ஒன்றைச் செய்தான். குமாஸ்தாக்களைப் பார்த்துப் புன்முறுவல் செய்தான். ''மன்னிக்கவும், திடீரென்று நான் நுழைந்து உங்கள் குதூகலத்தைக் கெடுத்துவிட்டேன்'' என்றான் சக்ரபாணி.

அவனுடைய ஒவ்வொரு சொல்லிலும் புரளி தொனித்தது. இதே சமயத்தில் எதிர்ப்புறமிருந்து அறைக் கதவு திறந்தது. சாரங்கன் நுழைந்தார். ஜரிகைத் தலைப் பாகையும், நெற்றி நிறைய நாமமும், உடலை சில்க் கோட் மூட, காதுகளில் வைரக் கடுக்கன் மின்ன, அவர் மாதா மாதம் பெறும் ஐயாயிரம் ரூபாய் சம்பளமும், அவரது ஐம்பது வயதும் அவர் தோற்றத்தில் தெரிந்தன.

ஹாலில் நுழைந்த சாரங்கன் முதலில் பீரோ மறைவில் நிற்கும் சக்ரபாணியைக் கவனிக்கவில்லை. குமாஸ்தாக்கள் ஸ்தம்பித்து நிற்பதைப் பார்த்தார். ''ஏன் இப்படி ஸ்தம்பிச்சு நிற்கிறீர்கள்?'' என்று கேட்டபடி மேஜை மீதிருந்த மூக்குக் கண்ணாடியைத் துடைத்துப் போட்டுக்கொண்டார். மூக்குக் கண்ணாடி அணிந்த பின்பும் அவர் பார்வையில் முதலாளி படவில்லை. ''ஏதாவது பேசுங்

www.t.me/tamilbooksworld



களேன். ஏன் எல்லாரும் வெறைச்சுப் போய் நிற்கிறீர்கள்? நான் வீட்டுக்கே போன் பண்ணிட்டேன். புலி—அதான் நம்ம டைகர்—காலங் காத்தாலே ஏழு மணிக்கே வீட்டை விட்டுப் புறப்பட்டுப் போயிடுச்சாம்! இப்போ மணி பன்னிரண்டாகுது. இன்னும் டைகர் ஹெட் ஆபீஸுக்கு வரல்லே. ஒரு வேளை இன்னிக்கு வராதோ என்னவோ!'' என்று சொல்லி முடித்ததும், அவர் பார்வை ஹால் கோடியில் பீரோவின் அருகே நிற்கும் சக்ரபாணியின் மீது படிந்தது. சாரங்கன் அப்படியே வாய் திறந்தபடி நின்றார். சக்ரபாணி வேங்கை போல் நடக்க ஆரம்பித்தான். சாரங்கனை நெருங்கியதும் சக்ரபாணி, ''மானேஜர்! ஐ ஆம் சாரி. புலி முடிவில் ஹெட் ஆபீஸுக்கு வந்தே விட்டது. டைகர் என்ற பெயர் உங்கள் கற்பனையா? அல்லது வேறு யாராவது செய்த கற்பனையா?'' என்று கேட்டான்.

சாரங்கன் திணறினார். வார்த்தைகள் வராமல் குழறின.

''யாராயிருந்தாலும் அந்தக் கற்பனையை நான் பாராட்டுகிறேன். எனக்குப் பிடித்தமான மிருகம் டைகர் தான். எனக்குப் பொருத்தமான பெயர். ஆனால் வேலை நேரத்தில் பொழுதை வீணாக்குவதை நான் பாராட்ட முடியாது; மன்னிக்கவும் முடியாது. அதற்குத் தக்க அபராதம் என்னவோ அதைச் சாரங்கனே தீர்மானிப்பார். சம்பளத்தில் எவ்வளவு அபராதமாகக் குறைப்பது என்பதை நீங்களே தீர்மானியுங்கள்'' என்று சொல்லி விட்டுத் தன் அறை நோக்கி நடந்தான். மறுபடியும் திரும்பி, ''கூர்க்காவின் சம்பளத்தில் பதினைந்து ரூபாய் குறைத்துவிடுங்கள். அடுத்த முறையும் அவன் தவறு செய்தால் அவனை நீக்கி விடுங்கள்'' என்று சொல்லி விட்டுத் தன் அறையில் போய் அமர்ந்தான்.

சக்ரபாணி ஆசனத்தில் அமர்ந்த சில விநாடிகளில் அவன் பின்புறம் உள்ள கதவின் மேலுள்ள சிவப்பு பல்பு

எரியத் தொடங்கியது. உடனே சக்ரபாணி தன் மேஜை மீதுள்ள, பட்டனை அழுத்தினான். பின்புறமுள்ள கதவு திறந்தது. அதன் வழியே மூவர் நுழைந்தனர். அந்தப் பின்புறக் கதவு வழியேதான் ஆபீஸுக்குத் தெரியாமல் சக்ரபாணியைப் பார்க்கச் சிலர் வருவார்கள். வந்த மூவரும், பயங்கர முகத் தோற்றத்தையும், மீசையையும் உடையவர்களாயிருந்தனர். இடுப்பில் கைலி அணிந்திருந்தனர். கொஞ்சமும் சக்ரபாணியின் அலுவலகத்தின் அந்தஸ்துக்கோ அல்லது சக்ரபாணியின் அந்தஸ்துக்கோ பொருத்தமானவர்களாக இல்லை. பெரிய குண்டர்கள் போலவே தோற்றமளித்தனர்.

அவர்களை நேரே நிமிர்ந்து பாராமலே சக்ரபாணி மேஜையைப் பார்த்தபடி பேசினான். ''என்ன, வேலை முடிஞ்சு போச்சா?''

குண்டர்களின் நடுவே நின்றவன், ''வேலை முடிஞ்சு போச்சுங்க. விடியற்காலமே ரங்கன் பால் வாங்கப் போனான். அவனைச் செமத்தியா அடிச்சுட்டோம். இப்ப அவன் ஜெனரல் ஆஸ்பத்திரியிலே இருக்கான். இனிமே வேலை நிறுத்தம் பத்திப் பேச்சே இருக்காதுங்க'' என்று முரடன் கூறி முடித்தான்.

சக்ரபாணி ஒன்றும் பதில் சொல்லவில்லை. டிராயரைத் திறந்தான். இரண்டு கட்டு ஐந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து வீசினான். முரடன் அதைப் பிடித்துக் கொண்டான். ''மகிழ்ச்சி எஜமான்!'' என்று கறை படிந்த தன் பற்களைக் காட்டினான்.

சக்ரபாணி திரும்பவே இல்லை. மேஜையைப் பார்த்த படியே, ''நீங்கள் வந்த வழியே சென்று விடுங்கள். நீங்கள் என்னைப் பார்த்ததோ, பணம் பெற்றுக் கொண்டதோ யாருக்கும் தெரியக் கூடாது, கூடாது'' என்று கண்டிப்பாகக் கூறினான்.

முரடர்கள் சென்றதும் கதவு மூடிக்கொண்டது. வேறு பட்டனை அழுத்தினான். முன்புறக் கதவு திறந்தது.

www.t.me/tamilbooksworld



சாரங்கன் நுழைந்தார். நுழையும்போதே அழுதபடி வந்தார். ''சார், நீங்க என்னை மன்னிக்கணும். இன்னிக்கு என் போறாத காலம் அப்படியெல்லாம் நடந்து போச்சு'' என்று அடுக்கிக்கொண்டே போனார்.

சக்ரபாணி எந்தவித உணர்ச்சி இல்லாமல், ''அது முடிந்த விஷயம். அதைப்பற்றி ஏன் பேசுகிறீர்கள்? நமது பஞ்சாலைத் தொழிலாளி ரங்கன் யாரோ முரடர்களால் அடிக்கப்பட்டு ஜெனரல் ஆஸ்பத்திரியில் இருக்கிறானாம். அவனுக்கு ஸ்பெஷல் வார்டு ஏற்பாடு செய்யுங்கள். மருந்து, பண உதவி எது வேண்டுமானாலும் நான் செய்வதாகச் சொல்லுங்கள். அவனை நான் விசாரித்த தாகச் சொல்லுங்கள்'' என்றான்.

இதைக் கேட்டதும் சாரங்கன் அதிர்ச்சி அடைந்தார். ''சார்! ரங்கன் பெரிய கம்யூனிஸ்டு சார்! அவனுக்கா உதவி!'' என்றார்.

''பெரிய கம்யூனிஸ்டும் ஒரு மனிதன்தான். நீங்க நான் சொல்றபடி செய்யுங்க. நான் ரங்கனுக்குப் பண உதவி செய்தது பத்திரிகையிலே வரணும்'' என்று கூறிவிட்டு எழுந்தான் சக்ரபாணி.

சாரங்கன் இருக்கைக்குச் சென்றார். பிறகு சக்ரபாணி கண்ணாடி முன் சென்றான். தன் தலையில் உள்ள நரைமயிர்க் கீற்றைக் கோதிவிட்டுக் கொண்டான். 'இரண்டில் ஒன்று நிச்சயம்; இன்று மாலை பேப்பரில் செய்தி வந்ததும் பஞ்சாலைத் தொழிலாளர்களில் ஒரு பகுதி சக்ரபாணி நல்ல முதலாளி என்பார்கள். மற்றப் பகுதி என் உதவியைப் பெற்றுக்கொண்ட ரங்கனை என் கைக்கூலி என்று திட்டுவார்கள். இதைவிட ரங்கனை அழிக்க வேறு அழகான திட்டம் தீட்ட முடியுமா?' என்று தன் உருவத்தைப் பார்த்துச் சொல்லிக் கொண்டான்.

திடீரென்று ஏதோ ஞாபகம் வந்தவன்போல் மேஜை அருகே வந்தான். நிகழ்ச்சி நிரல் புத்தகத்தைப் புரட்டி

னான். அதில் அந்தத் தேதியின் கீழ், 'மணி 12-30க்கு மனைவியைப் பரிசோதிக்க ஜெர்மன் டாக்டர் வருவார்' என்று குறிப்பு எழுதியிருந்தது. கடிகாரத்தில் மணி 12-25 காட்டியது. உடனே வேகமாக வலப்புறமாக உள்ள கதவு வழியாக வெளியேறினான். வேகமாகச் சென்று காரில் ஏறிக்கொண்டான். டிரைவரிடம், ''வேகமாக வீட்டுக்கு ஓட்டு'' என்றான்.

நுங்கம்பாக்கத்தில் உள்ள வீட்டை அடைந்தபோது, சக்ரபாணியின் கைக் கடிகாரம் 12—35 காட்டியது. வீட்டின் வெளிப்புறம் டாக்டரின் கார் நின்றது. சக்ரபாணி வேகமாக வீட்டின் உட்புறம் ஓடினான். படிக்கட்டுகளை இரண்டு மூன்றாகத் தாண்டினான். மாடியில் வலப்புறம் திரும்பினான். கம்பிக் கிராதிகள் போட்ட சிறை போன்ற அறையின் உட்புறம் சக்ரபாணியின் குடும்ப டாக்டரும், ஜெர்மனியிலிருந்து அவன் மனைவியைப் பார்ப்பதற்கென்றே தருவிக்கப்பட்ட ஜெர்மன் டாக்டரும் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் நடுவே சோபாவில் சக்ரபாணியின் மனைவி உட்கார்ந்திருந்தாள். அவள் தலை முடி கலைந்து தோளில் விழுந்திருந்தது. அவள் முகத்தில் வரிவரியாக ரத்தக் காயங்கள் இருந்தன. சக்ரபாணியின் மனைவி லக்ஷ்மி ஜெர்மன் டாக்டரையே பார்த்தபடி இருந்தாள். சக்ரபாணி அறையில் நுழைந்ததும், லக்ஷ்மி உட்கார்ந்திருந்த சோபாவிலிருந்து எழுந்தாள்! ''வா... மாப்பிள்ளை... வா மாப்பிள்ளை அழைக்க நேரமாயிடுச்சி... இன்னேரம் எங்கே போயிருந்தே? அண்ணா சந்திரன் எங்கே? அண்ணா உன் கூட வரல்லையா?'' என்று கேட்டாள்.

ஜெர்மன் டாக்டர் அவளையே பார்த்தபடி இருந்தார். உடனே லக்ஷ்மி கும்மியடித்துப் பாட ஆரம்பித்தாள். விரிந்து சிதறிக் கிடக்கும் அவள் தலைமயிர் காற்றில் பறந்து ஆட ஆரம்பித்தது. சக்ரபாணி வெட்கத்துடன் தரையைப் பார்த்தான்.

www.t.me/tamilbooksworld

## 2

லக்ஷ்மியின் கேசம் காற்றில் பறக்க, அழகான பற்கள் வெளேரென்று வெளியே தெரிய, கரிய விழிகள் அங்குமிங்கும் அலைய அவள் ஆடிய ஆட்டம் மாரியம்மன் திருவிழாவில் 'மருள்' வந்தவளைப் போல் தோற்றம் கொடுத்தது. அவள் முகத்தில் இருந்த வசீகரம் பருவகாலத்தில் லக்ஷ்மி சிறந்த அழகியாக இருந்திருப்பாள் என்பதை நன்கு வெளிப்படுத்தியது. சக்ரபாணியின் செருக்கைக் குலைப்பதற்கென்றே லக்ஷ்மியின் கோளாறு ஏற்பட்டதோ என்று தோன்றும்படி இருந்தது அவள் நிலை.

சக்ரபாணிக்கு லக்ஷ்மியைப் பார்ப்பதற்கே சங்கடமாக இருந்தது. அவளைக் காவல் காப்பதற்கென்றே நியமிக்கப்பட்டிருந்த இரு நர்ஸுகளும் அடுத்த அறையிலிருந்து கவலையோடு எஜமான் முகத்தைப் பார்த்தனர். சக்ரபாணியின் கண்கள் சிவந்தன. அவை லக்ஷ்மியின் ஆட்டத்தையும், அந்த ஆட்டத்தைக் கவனித்தபடி அமைதியாக இருக்கும் ஜெர்மன் டாக்டரின் முகத்தையும் பார்த்தன. சக்ரபாணியின் முகத்தில் தோன்றிய வேதனையை நர்ஸுகள் பார்த்ததும், தங்கள் கடமையில் தவறிவிட்டோம் என்ற பயம் அவர்களுக்கு ஏற்பட்டது. பொதுவாக சக்ரபாணியிடம் பணம் வாங்கி வேலை செய்பவர்கள் எல்லாருக்குமே சக்ரபாணியின் விழிகளைப் பார்க்கும்போது, ஏற்படும் உணர்ச்சி அதுதான். வார்த்தைகள் பேசாது; அவன் பார்க்கும் பார்வையொன்றே, சம்பளக்காரர்களுக்கு அவர்கள் எந்தவிதத் தவறு செய்யாத போதும், தவறு செய்துவிட்ட எண்ணத்தைக் கொடுக்கும். அந்த எண்ணமே அவர்களை இன்னும் அதிக சிரத்தையுடன் பணியாற்றச் செய்யும்.

இரு நர்ஸுகளும் உடனே லக்ஷ்மியை நெருங்கினர். ''அம்மா! அமைதியாக உட்காரும்மா! எஜமான் வந்திருக்

காரு" என்று லக்ஷ்மியைத் தடுத்து நிறுத்த முயன்றனர்.

ஆனால் லக்ஷ்மி அவர்களை அலட்சியமாகப் பார்த்து விட்டு, "யாருடி எஜமான்? எனக்கு யாரும் எஜமான் இல்லே! என்னுடைய எஜமான் சங்கு சக்ர கதாயுதபாணி. அவன் திருப்பதியில் வாழும் வெங்கடேஸ்வரன்! 'வேங்கடரமணா! சங்கட ஹரணா'!" என்று பாட ஆரம்பித்தாள். திடீரென்று பாட்டை நிறுத்தினாள்.

"பாலாஜி பிரபு, நான் உனக்குச் செலுத்த வேண்டிய காணிக்கையைச் செலுத்திடறேன்! என் அண்ணாவும் கணவனுமாகத் தவறாமல் அங்கு வந்து உன்னைச் சேவித்து உனக்குச் சேர வேண்டியதைக் கொடுக்கிறோம். கொஞ்சம் பொறுத்துக் கொள். என் புருஷனுக்குப் புத்தி சரியாகட்டும். பாவம், அவர் பேயாகத் தூங்காமல் அலைந்து கொண்டிருந்தார். அவருக்குப் பைத்தியம் தெளிந்ததும் அவரை நான் மலைக்கு அழைச்சிட்டு வர்றேன்" என்று சொல்லிவிட்டுச் சக்ரபாணியைப் பார்த்தாள். உடனே நேரே ஓடிவந்து அவனுடைய பாதத்தைத் தொட்டு நமஸ்கரித்துவிட்டு ஓடிப்போய் மறுபடியும் கும்மியடித்தபடி, 'பாலும் கசந்ததடி சகியே, படுக்கை நொந்ததடி" என்று பாடியபடி அறையைச் சுற்றி வந்தாள்.

சக்ரபாணி இடி இடிக்கும் குரலில், "லக்ஷ்மி! லக்ஷ்மி!" என்று இருமுறை அழைத்தான். உடனே பாடிக் கொண்டிருந்த லக்ஷ்மி அப்படியே ஆட்டத்தை நிறுத்தி நின்று விட்டாள். தன் கணவனின் விழிகளைப் பார்த்தாள். தன் கணவனைப் பார்த்துச் சோகப் புன்னகை புரிந்து கொஞ்சியபடி நடந்து வந்தாள்.

"என்னங்க, ஏன் என்னை இப்படி முறைச்சுப் பார்க்கிறீங்க? நான் என்ன தவறு செய்துவிட்டேன்? உங்க வார்த்தைக்கு நான் எப்போதாவது மறுப்பு சொல்லியிருக்கேனா?" என்றாள்.

www.t.me/tamilbooksworld



'மாடு மலை போனாலென்ன
மக்கள் சுற்றம் போனாலென்ன—கிளியே
லக்ஷ்மிக் கணவன் பேரைச் சொல்லி வாழ்வோமடி..."
என்று உருக்கமாகப் பாட ஆரம்பித்தாள்.

சக்ரபாணி கையை நீட்டித் தன் மனைவியைப் பிடித்தான்.

"போதும்! கையை விடுங்க! எனக்கு என்னவோ போல இருக்கு, நாலு பேரு இருக்கிறதை மறந்துட்டீங்களே?" என்று சொல்லி, அன்றுதான் மணந்து மணவறை புகுந்த புதுப்பெண் போல் வெட்கத்தோடு தரையைப் பார்த்தாள்.

ஜெர்மன் டாக்டருக்குத் தமிழ் புரியா விட்டாலும் லக்ஷ்மியின் முகபாவத்தில் இருந்த லஜ்ஜையைப் புரிந்து கொண்டு, புன்முறுவல் செய்தார். சக்ரபாணி, ஜெர்மன் டாக்டரின் முகத்தைக் கவனித்தான். லக்ஷ்மியிடம் திரும்பி, "லக்ஷ்மி, டாக்டர் வந்திருக்கிறார். நீ போய்ச் சோபாவில் உட்கார்" என்றான்.

"டாக்டரா? யாருக்காக வந்திருக்கார்? உங்களுக்கு ஒன்றுமில்லையே?" என்று கேட்டாள்.

"லக்ஷ்மி, என்னைக் கேள்வி கேட்காதே. நான் சொல்கிறபடி செய்" என்று உத்தரவிட்டான். லட்சுமி, சக்ரபாணியின் விழிகளையே பார்த்தபடி இருந்துவிட்டுப் போய் உட்கார்ந்தாள்.

சக்ரபாணியின் விழிகளுக்குக் கட்டுண்டு லட்சுமி போய் உட்காருவதை ஜெர்மன் டாக்டர் கவனித்தார். பிறகு, அவர் சக்ரபாணியின் குடும்ப டாக்டரிடம், இதுவரை சக்ரபாணி கூறியது, அதற்கு லட்சுமி கூறிய பதில்கள் இவற்றின் மொழிபெயர்ப்பைக் கேட்டார். குடும்ப டாக்டர் திணறினார். ஏதோ சொல்ல ஆரம்பித்தார்.

உடனே சக்ரபாணி குறுக்கிட்டான். சக்ரபாணி

அறையில் நுழைந்தது முதல் நடந்த சம்பாஷணைகள், லக்ஷ்மி பாடிய பாடல்கள் எல்லாவற்றையும் வரிக்கு வரி பிசகாமல் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கூறினான். ஜெர்மன் டாக்டரே திகைத்துவிட்டார்.

''மிஸ்டர் சக்ரபாணி, உங்களுக்கு அபாரமான ஞாபக சக்தி இருக்கிறது. அது மட்டுமல்ல, உங்கள் மனைவியைப் பொறுத்த விஷயமாக இருந்த போதிலும் கொஞ்சங்கூடக் கூச்சமில்லாமல், பதற்றமில்லாமல் அதை வர்ணிக்கிறீர்கள்'' என்று பாராட்டினார்.

''எவ்வளவோ வைத்தியர்களை வைத்து நான் பார்த்துவிட்டேன்; பலிக்கவில்லை. நீங்கள் மனோதத்துவத்தில் மேதை என்று கேள்விப்பட்டு உங்களைத் தருவித்து இருக்கிறேன். என் மனைவியின் குலைந்த சித்தத்தைச் சீர்படுத்திவிட்டால், அதற்கு நான் எவ்வளவு ரூபாய் வேண்டுமானாலும் தரத் தயாராக இருக்கிறேன்'' என்று சொன்னான் சக்ரபாணி.

ஜெர்மன் வைத்தியர் யோசித்தார். ''நீங்கள் வருவதற்கு முன்பே அவளை நான் பரிசோதனை செய்துவிட்டேன். மூளைக் கோளாறு உள்ள ஒவ்வொரு நபரும் ஒவ்வொரு விதம். உங்கள் மனைவி எந்தவிதம் என்று என்னால் இன்னும் நிர்ணயிக்க முடியவில்லை. அது ஒரு நாளில் நிர்ணயிக்கக் கூடிய விஷயமும் அல்ல. ஏதாவது நரம்புக்கோளாறு அல்லது தேகத்தில் தோன்றிய நோய் காரணமாக, மூளைக் கோளாறு ஏற்பட்டிருந்தால், தேகப் பரிசோதனையில் தெளிவாகி இருக்கும். உங்கள் மனைவியின் தேகத்தைப் பொறுத்தவரையில், எந்தவிதக் கோளாறும் இல்லை. அவளுக்கு ஏற்பட்ட மூளைக் கோளாறு மன அதிர்ச்சி காரணமாக ஏற்பட்டிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். அதை நான் புரிந்து கொள்ள நீங்கள் உதவ வேண்டும் சக்ரபாணி!'' என்று கூறினார் ஜெர்மன் வைத்தியர். சக்ரபாணியின் கண்கள் தரையை நோக்கின.

www.t.me/tamilbooksworld



''முதல் முதல் எப்போது உங்கள் மனைவிக்குச் சித்தக் குழப்பம் ஏற்பட்டது?'' என்று ஜெர்மானியர் கேட்டார். ஜெர்மன் வைத்தியருடன் வந்திருந்த குடும்ப டாக்டர், எதையோ சொல்ல வாயெடுத்தார். ஜெர்மன் டாக்டர் அவரைத் தடுத்தார்.

''நான் கேட்கும் கேள்விகளுக்கு அவரே பதில் சொல்லட்டும்'' என்று சற்றுக் கண்டிப்பாக உத்தரவு இட்டார் ஜெர்மானியர். சக்ரபாணியின் முகம் சிவந்தது.

''என்னை என்ன குற்றவாளிபோல் கேள்வி கேட்டுக் குறுக்கு விசாரணை நடத்துகிறீர்கள்?'' என்று சற்றுப் படபடப்புடன் பதில் அளித்தான் சக்ரபாணி.

''மனைவிக்குச் சித்தம் குலையும்போது கணவனும், கணவனுக்குச் சித்தம் குழம்பும்போது மனைவியும் நேரடிக் குற்றவாளியாகவோ அல்லது மறைமுகக் குற்றவாளியாகவோ இருப்பது இயற்கை. அதனால் உங்கள் மனைவியின் சித்தம் குலைந்த சூழ்நிலையைப் புரிந்து கொள்ளாமல் வைத்தியம் செய்வது கடினம். அது தவறும்கூட!'' என்று சொன்னார் வைத்தியர்.

சக்ரபாணி சில விநாடிகள் யோசித்தான். ''என் மனைவிக்கு இந்தக் கோளாறு முதல் முதல் ஏற்பட்டது பர்மாவில், நாங்கள் ரங்கூனில் இருந்தபோது'' என்று சொல்லிவிட்டு எதிரே உள்ள சோபாவில் உட்கார்ந்தான்.

'ரங்கூன்' என்று சொன்னதும், சக்ரபாணியின் மனைவி, தன் இருக்கையை விட்டு எழுந்தாள். ''ரங்கூன்!'' என்று சொல்லிக் கொண்டே, சக்ரபாணியை நோக்கி வந்தாள். அப்போதுதான் சக்ரபாணி, 'ரங்கூன்' என்ற வார்த்தையை லட்சுமியின் முன்னிலையில் சொன்னது பெரிய தவறு என்பதை உணர்ந்தான். பயத்தோடு, தன்னை நெருங்கும் லட்சுமியைக் கவனித்தான்.

பற்களை நறநறவென்று கடித்தாள். பேய் போலச் சக்ரபாணி மீது பாய்ந்தாள்.

''நான் சொல்வதை நல்லா கேளுங்க! சந்திரன்

இல்லாமல் நான் ரங்கூனை விட்டுப் புறப்பட மாட்டேன். அண்ணா சந்திரன் இல்லாமல் நான் ரங்கூனை விட்டுப் புறப்பட மாட்டேன்'' என்றாள். சக்ரபாணியின் தோளைப் பயங்கரமாக உலுக்கினாள். சக்ரபாணி லாவகமாக எழுந்தான்.

''லட்சுமி! போ உள்ளே!'' என்று இடி இடிப்பது போன்ற குரலில் கூச்சலிட்டான். சக்ரபாணியின் குரலைக் கேட்ட லட்சுமி துணிபோல் துவண்டு போனாள். மெல்ல அடிமேல் அடி எடுத்து வைத்து, லட்சுமி தன்னுடைய படுக்கை அறைக்குள் சென்றாள்.

சில விநாடிகளில் லட்சுமி தேம்பி அழும் குரல் கேட்டது. ஜெர்மன் வைத்தியர் எந்தவித உணர்ச்சியுமில்லாமல் அந்த அறையில் நடந்த நிகழ்ச்சியைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

சக்ரபாணி தன் கோட்டுப் பையிலிருந்து கர்சீப்பை எடுத்து, குப்பென்று வியர்த்த தன் முகத்தைத் துடைத்துக் கொண்டான். டாக்டர், சக்ரபாணியை நோக்கி, அவன் கண்களை ஊடுருவிப் பார்த்தபடி, ''மிஸ்டர் சக்ரபாணி ரங்கூனில் என்ன நடந்தது?'' என்று சாதாரணமாக ஒரு கேள்வியைக் கேட்டார்.

சக்ரபாணி லேசாகச் சிரித்தபடி, ''ரங்கூனில் என் வியாபாரம் நடந்தது. அதில் நல்ல லாபம் கிடைத்தது. அது மட்டுமல்ல அங்குதான் என் ஒரே மக பாலா பிறந்தாள். பாலாவைப் பெற்றெடுத்த பின்புதான் லட்சுமிக்கு இந்த மாறுதல் ஏற்பட்டது. அப்போது அவ்வளவு பயங்கரமாக இல்லை. இந்தியா வந்த பின்பு லட்சுமியின் நிலை மிகவும் மோசமாகிவிட்டது'' என்று அவசர அவசரமாகத் தேவையில்லாத விஷயங்களை அடுக்கிக் கொண்டே போனான்.

ஜெர்மன் டாக்டர் ஒன்றுமே பேசவில்லை. ஒரு பெருமூச்சு விட்டார். ''மிஸ்டர் சக்ரபாணி, எனக்கு ஒன்றும் சரியாக விளங்கவில்லை. ஒரு மாதக் காலமாவது நான்

www.t.me/tamilbooksworld



இங்கிருந்து, உங்கள் மனைவியை நேரடியாகக் கவனித்தால்தான் வைத்தியம் தொடங்க முடியும். அதற்குத் தக்கபடி நான் என் சொந்த அலுவல்களைச் சரிபடுத்திக் கொள்ள வேண்டும். நான் இங்கு இருப்பதால் ஊரில் நான் இழக்கப் போகும் வருமானத்தை நீங்கள் ஈடு செய்ய வேண்டும். இந்த ஊரில் எனக்காகும் செலவுகளை நீங்கள் கொடுக்க வேண்டும். உங்களுக்கு நிறையப் பொருட் செலவாகுமே'' என்றார். உடனே சக்ரபாணியின் முகத்தில் ஒரு நிம்மதி தெரிந்தது.

மேலும் சிக்கலான குழப்பம் தரும் கேள்விகள் கேட்காமல் அதோடு ஜெர்மன் டாக்டர் விட்டாரே என்ற நிம்மதிதான். உடனே கைக்கடிகாரத்தைப் பார்த்தான். மற்ற அலுவலகங்களுக்குச் சென்றால், ஒவ்வொரு நிமிஷத்தையும் ஆயிரம் ஆயிரமாகச் சம்பாதிக்கலாமே என்று தோன்றியது சக்ரபாணிக்கு.

''பணத்தைப்பற்றி யோசிக்காதீர்கள். உங்களுக்குத் தேவையான தொகை கொடுக்கத் தயாராக இருக்கிறேன். என் மனைவியின் மனம் சரியாக வேண்டும். அதுதான் முக்கியம்'' என்றார்.

ஜெர்மன் டாக்டர், குடும்ப வைத்தியரின் முகத்தைப் பார்த்தார். உடனே குடும்ப டாக்டர், ''ஜெர்மனியில் உள்ள அவர் மனைவிக்கு மூன்று லட்ச ரூபாய்க்கு ஈடான ஜெர்மன் மார்க்குகள் ஜெர்மனியில் சேரும்படி செய்ய வேண்டும். இந்த ஊரில் தங்கும் வரை இவருக்கு ஒரு பங்களா, கார், சாப்பாட்டுச் செலவு, தவிர அவர் கைச் செலவுக்கு 50 ஆயிரம் ரூபாய் வேண்டுமென்கிறார்'' என்று சொன்னார்.

அடுத்த விநாடியே சக்ரபாணியின் சுறுசுறுப்பான மூளையானது கம்ப்யூட்டர் போல் கூட்டல் கழித்தல் வேலை செய்ய ஆரம்பித்தது. ஜெர்மன் டாக்டரை நோக்கித் திரும்பினான்.

''டாக்டர் மூன்று லட்சம் என்ன, நான்கு லட்சம் உங்கள் மனைவிக்குச் சேர ஏற்பாடு செய்கிறேன். இங்கே தங்கும் வரையில் உள்ள செலவு என்னுடையது. 50 ஆயிரம் என்ற தடை உங்களுக்கு வேண்டாம், எவ்வளவு வேண்டுமோ எடுத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு ஓய்வு இருக்கும்போது நீங்கள் கல்கத்தா, பம்பாய், டெல்லி போன்ற இடங்களில் உள்ள சில பேஷண்டுகளைப் பார்க்க வேண்டும். அவர்களிடம் தொகை வசூலித்துக் கொள்வது முதலியன என் பொறுப்பு சம்மதந்தானே?'' என்று கேட்டான் சக்ரபாணி.

ஜெர்மன் டாக்டர் ஆச்சரியப்பட்டார். ''நான் உங்கள் மனைவிக்கு மட்டும் தானே வைத்தியம் செய்ய வந்தேன்?'' என்றார்.

''உண்மை! இருபத்து நாலு மணி நேரமும் என் மனைவியைக் கவனிக்கப் போவதில்லை நீங்கள். மற்ற நேரங்களில் நான் அனுப்பும் பேஷண்டுகளைக் கவனியுங்கள் போதும்'' என்றான்.

ஜெர்மன் டாக்டர் திகைத்தார்; ஆனால் அவன் திட்டத்தை ஒப்புக் கொண்டார். அடுத்த விநாடியே சக்ரபாணி, கடிகாரத்தைப் பார்த்தபடி வெளியேறினான்.

பக்கத்து அறைக்குச் சென்று டெலிபோனை எடுத்தான். தன் ஆபீஸ் மானேஜர் சாரங்கனை அழைத்தான். அவரிடம் சென்னையில் உள்ள பெரும்புள்ளிகள் சிலரின் பேரைச் சொல்லி, அவர்களைச் சந்தித்து, ஜெர்மன் டாக்டர் தன்னுடைய கெஸ்ட்டாக இருப்பதாகவும், அவரைச் சந்தித்துச் சிகிச்சை பெறலாம் என்றும், ஜெர்மனிக்குப் போய் வரும் செலவு மிச்சமென்றும் சொல்லி, பேஷண்டுகளை புக் பண்ணும்படி சொன்னான். அடுத்த படியாகக் கல்கத்தாவில் உள்ள சில லட்சாதிபதிகளின் முகவரியைச் சொன்னான். சாரங்கனுக்குத் திகைப்பாக இருந்தது.



''சார், நீங்கள் சொல்லும் யாருக்கும் மூளைக் கோளாறு இல்லையே? அவர்கள் ஏன் ஜெர்மன் டாக்டரிடம் வைத்தியம் செய்து கொள்ளப் போகிறார்கள்?'' என்றார் சாரங்கன்.

''நான் சொல்றபடி செய்யும்! பணக்காரன் புத்தி உமக்குத் தெரியாது. ஜெர்மன் டாக்டரைப் பார்ப்பதில் ஒரு திருப்தி. அவரிடம் மருந்து என்று ஏதாவது வாங்கிக் கொள்வதில் ஒரு திருப்தி அவர்களுக்கு ஏற்படும். அவர்கள் வாழ்க்கை போரடித்துப் போயிருக்கிறது. அவர்கள் வாழ்க்கையில் ஏதாவது நிகழ வேண்டும். இந்த ஜெர்மன் டாக்டரால் நிகழச் செய்யப் போகிறேன். அதற்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் அவர்கள் தருவார்கள். என் மனைவியின் மருத்துவம் ஒரு லாபகரமான திட்டமாக அமைய வேண்டும், தெரிந்ததா?'' என்றான்.

மனைவியின் வைத்தியத்தையே வியாபாரமாக்கும் இவனை என்னவென்று சொல்வது என்று புரியாது விழித்தார் மானேஜர் சாரங்கன். ஆனால் அவர் டெலிபோனில் பதில் சொல்லவில்லை. ''சரி, சரி'' என்று போனைக் கீழே வைத்தார். சக்ரபாணி வேங்கைபோல் நடந்தான், ஹாலை நோக்கி. அப்போது அவனுக்குத் தன் மகள் பாலாவின் நினைவு வந்தது.

## 3

மனைவியின் சிதைந்த சித்தத்தைச் சீர்படுத்தத் தொலைதூரத்திலிருந்து வரவழைத்த ஜெர்மன் டாக்டரின் திறமையை நண்பர்களிடம் அதிகத் தொகைக்கு விற்றுப் பணம் சம்பாதிக்க வாய்ப்பு ஏற்பட்டதை நினைத்ததும் சக்ரபாணிக்கு ஒரு திருப்தி. ஆனால் மனைவிக்குக் குணம் ஆவதில் அக்கறை இல்லாதவன் அல்ல சக்ரபாணி.

மனைவிக்குக் குணமாவது என்பது நிச்சயிக்க முடியாத பிரச்னை ஆகலாம்; ஆகாமலும் போகலாம். ஆனால்

www.t.me/tamilbooksworld

ஜெர்மன் டாக்டர் வந்து போவது என்பது செலவை ஏற்படுத்தும் பிரசினை. அந்தச் செலவைச் சரிக்கட்ட ஒரு திட்டம் வேண்டாமா? எந்தச் செலவும் வருவாய் தரும் செலவாக அமைய வேண்டுமல்லவா?

அடுத்தபடியாக, சக்ரபாணி கீழ்ப்பாக்கத்தில் உள்ள ஐரோப்பியனிடம் தான் அடைய வேண்டிய லாபத்தைப் பற்றி நினைத்தான். அந்த ஐரோப்பியனின் தந்தை ஜோன்ஸ் என்பவர் உதகமண்டலத்தில் டீ, காப்பி எஸ்டேட்டுகளையும், கோயம்புத்தூரில் பல வியாபார ஸ்தலங்களையும் மகனுக்கு வைத்து விட்டு இறந்து விட்டார். இறந்து போன ஜோன்ஸின் மகன் இளைய ஜோன்ஸுக்கு வியாபாரத்தில் பற்று இல்லை என்பதும், மதுபானம், ரேஸ் இவைகளில்தான் அக்கறை அதிகம் என்பதைப் பற்றியும் சக்ரபாணி உணர்ந்தவுடனேயே, இளைய ஜோன்ஸ் கவிழ்க்கப்பட வேண்டிய புள்ளி என்று தீர்மானித்தான்.

சென்னையில் சக்ரபாணி மெம்பராயுள்ள ரிம்ஜானா கிளப்பில் அந்த இளைய ஜோன்ஸும் மெம்பர் என்பதும், அவன் தினமும் சீட்டாட அங்கு வருகிறான் என்பதும் தெரிந்ததும், சக்ரபாணி வழக்கத்திற்கு மாறாக அந்தக் கிளப்புக்குச் செல்வது, சீட்டாடுவது போன்ற பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டான். சீட்டாட்டத்தில் தினமும் சக்ரபாணி இளைய ஜோன்ஸிடம் ஆயிரம், இரண்டாயிரம் தோற்றுக் கொண்டு வந்தான். யாராலும் ஏமாற்றப் படாத சூரன், எந்த வியாபாரத்திலும் தோற்காத மேதை என்றெல்லாம் பேசப்பட்ட சக்ரபாணி தன்னிடம் தோற்பதைப் பார்த்த இளைய ஜோன்ஸுக்கு மகிழ்ச்சி. சக்ரபாணியின் மீது அன்பும் ஏற்பட்டது. ஒரு நாள் சீட்டாடும்போது, தான் தோற்றுவிட்டதாக எண்ணி அவசரமாக இளைய ஜோன்ஸ் சீட்டுக்களைக் கீழே போட்டு விட்டான். சக்ரபாணி உடனே, தன்னுடைய சீட்டைப் பார்த்துவிட்டு உண்மையில் தோற்றது தானே



தான் என்று ஒப்புக்கொண்டு பணத்தையும் ஜோன்ஸிடம் கட்டி விட்டான்.

இந்த நிகழ்ச்சி இளைய ஜோன்ஸின் மனத்தில் சக்ரபாணி நல்லவன் என்ற எண்ணத்தையும் ஏற்படுத்தியது. ஒரு நாள் சக்ரபாணி கிளப்ஹாலில் நுழையும் போது அவன் வருவதை அறியாமல் இளைய ஜோன்ஸ் மற்றொரு நண்பனிடம் பின் வருமாறு ஆங்கிலத்தில் பேசிக் கொண்டிருந்தான். "மிஸ்டர் சக்ரபாணியை ஒரு பிஸினஸ் ஜீனியஸ் என்று நினைத்திருந்தேன். இப்பத் தான் புரிகிறது. சக்ரபாணி வெறும் லக்கி மேன். அவ்வளவுதான். அவ்வளவு இன்டலிஜென்ட் இல்லை; அதிர்ஷ்டம் மாறினால் அவன் கதை முடிஞ்ச மாதிரி தான்."

இதைக் கேட்ட சக்ரபாணிக்குச் சிரிப்புத்தான் வந்தது. சக்ரபாணி திட்டமிட்டிருந்த ஒரு பக்குவமான நிலைக்கு இளைய ஜோன்ஸ் வந்துவிட்டான் என்பதைப் புரிந்து கொண்டான். இனி ஜோன்ஸ் என்ற ஆட்டிற்கு மஞ்சள் நீராட்டிக் குங்குமப் பொட்டிட்டு, பூச்சூட்டி, அரிவாளை எடுக்க வேண்டியதுதான் என்று உடனே தீர்மானித்துவிட்டான். தன் கோட்டுப் பையிலிருந்து ஒரு சிறு குறிப்புப் புத்தகத்தை எடுத்தான். சக்ரபாணியின் ஆடிட்டர்கள் கோயம்புத்தூர், உதகமண்டலத்திலுள்ள தொழில் ஸ்தாபனங்களின் அன்றைய நிலையில், இளைய ஜோன்ஸுக்கு உள்ள கடன்கள், அந்தக் கடன்கள் எந்த அளவு நெருக்கடியில் இருக்கின்றன என்பதையெல்லாம் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தனர்.

சிறிது நேரம் கழித்து ஜோன்ஸுடன் பேசும்போது, சக்ரபாணி பேச்சுவாக்கில் அவன் திறமையைப் புகழ்ந்து பேசினான். ஜோன்ஸ் சலித்துக் கொண்டான். "நான் எவ்வளவு சாமர்த்தியமாக இருந்து என்ன செய்வது மிஸ்டர் சக்ரபாணி! எனக்கு அதிர்ஷ்டமில்லை" என்றான்.

www.t.me/tamilbooksworld

சக்ரபாணி விட்டுக் கொடுக்கவில்லை. ''நீங்க சொல்றது சரியில்லை மிஸ்டர் ஜோன்ஸ்! இந்த நாட்டிலே நீங்க பிஸினஸ் பண்றது முடியாது. நீங்க மலேயா, சிலோன், லண்டன் போன்ற இடங்கள்லே பிஸினஸ் பண்ணினால் வெற்றி கிடைக்கும்'' என்று அவன் மனத்தில் ஓர் ஆசை விதையைப் போட்டுவிட்டான்.

ஏற்கெனவே ஜோன்ஸின் மனைவி, சகோதரிகள் எல்லோரும் அவன் வருடந்தோறும் பணத்தை இழந்து தந்தையின் பெயரைக் கெடுக்கிறான் என ஏசி வந்தார்கள். சகோதரிகள் தங்கள் பங்குகளைப் பிரித்துக் கொடுக்கும்படி நெருக்கினார்கள். அவன் மனைவியும் லண்டனுக்கே போய் விடுவோம் என அவனை நச்சரித்துக் கொண்டிருந்தாள். இந்த அரசாங்கத்திடமிருந்து அந்நியச் செலாவணி பெருந்தொகை கிடைக்காது என்ற நிலையில் தவித்துக் கொண்டிருந்தார் ஜோன்ஸ். ஆகையால் சக்ரபாணியின் யோசனைகளைத் தன் ஆடிட்டர்களிடம் சொல்லிக் கேட்டான். அவனுடைய ஆடிட்டர்கள் ஏற்கெனவே சக்ரபாணியிடம் பக்ஷீஸ் பெற்றவர்களாக இருந்தபடியாலும், ஜோன்ஸின் சீர்கேடான நிலைமையைப் புரிந்துகொண்டவர்களாக இருந்தபடியாலும் சக்ரபாணியின் யோசனைபடி நடக்கச் சொன்னார்கள்.

பல நாட்களாக வகுத்த திட்டம் வேலை செய்ய ஆரம்பித்ததும், சக்ரபாணி ஜோன்ஸைப் பார்ப்பதை நிறுத்திக் கொண்டான். சக்ரபாணி சக்கரம் போல் தன் தொழில் ஸ்தாபனங்களுக்குச் சென்று கொண்டிருந்தமையால், ஜோன்ஸ் சக்ரபாணியை எங்கே பிடித்துச் சந்திப்பது என்று தெரியாமல் தவித்தான். ஜெர்மன் டாக்டர் பற்றிச் சாரங்கபாணிக்குத் தகவல் கொடுத்துவிட்டுச் சக்ரபாணி புறப்படும்போது ஜோன்ஸிடமிருந்து போன் வந்தது. சக்ரபாணி ஜோன்ஸைச் சம்ஹாரம் பண்ண அன்றுதான் நாள் பார்த்து இருந்தான்.

ஜோன்ஸின் குரலைக் கேட்டதுமே சக்ரபாணியின்

www.t.me/tamilbooksworld



நாக்கில் ஜலம் ஊறியது. மேய்ந்து கொண்டிருக்கும் பசுவின்மீது பாயப்போகும் வேங்கையின் துடிப்பு அவனுக்கு ஏற்பட்டது. துடிப்பைக் காட்டிக் கொள்ளாமல் ஜோன்ஸிடம் அலட்சியமாக, ''ஹல்லோ! மிஸ்டர் ஜோன்ஸ்! எஸ்டேட்டுகளை விற்பதை யோசனை பண்ணிச் செய்யுங்க... என்னென்னாலும் தகப்பனார் சம்பாதித்தது பாருங்கள்'' என்று நல்லவன்போல் புத்தி சொன்னான்.

ஜோன்ஸ் போனில் அவனைத் தன் வீட்டிற்கு வரும்படி அழைத்தான். தன் மனைவி, சகோதரிகள் எல்லாரும் அவன் வருகைக்காகக் காத்திருப்பதாகச் சொன்னான். சக்ரபாணி பெரிய தேசபக்தனல்ல; இருந்த போதிலும், 'நம் நாட்டை ஆண்ட பிரிட்டிஷ் இனத்தைச் சேர்ந்தவன் இப்போது நம் பிடிக்குள் வரப்போகிறான்' என்று நினைக்கவும் தன்னையும் அறியாமல் மகிழ்ச்சி அடைந்தான்.

உடனே வேலையை முடிக்க வேண்டுமென்று புறப்பட்டான். அதே சமயத்தில் ஜெய்ப்பூர் ஜ்வெல்லர் நகைப் பெட்டிகளுடன் எதிரே வந்தார். இன்னும் சில நாட்களில் பாலாவின் பிறந்த நாள் வரப்போகிறது. அதற்குப் பாலாவிற்குப் பிறந்த நாள் பரிசாக ஏதாவது வாங்க வேண்டுமென்று சாரங்கனிடம் கூறியிருந்தது ஞாபகத்துக்கு வந்தது. முக்கியமான வேலையாகப் போகும்போது சேட் கன்ஷ்யாம் வந்து விட்டானே என்று தோன்றினாலும் அடுத்த கணம் சக்ரபாணியின் மனக்கண் முன்பு அருமை பாலாவின் முகம் தோன்றியது. 'சே... சே... எவ்வளவு முக்கியமான வியாபாரமாக இருந்தால் என்ன? பாலாவைவிட முக்கியமானதா?' என்று நினைத்தான்.

கன்ஷ்யாம் பல வெல்வெட் நகைப்பெட்டிகளை எடுத்து வைத்தார். ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமான நெக்லஸ் இருந்தது. ஒன்று வைரம். மற்றொன்று வைரமும் சிவப்பும் கலந்தது. வேறொன்று முழுப்பச்சை

நெக்லஸ், இப்படி ரகரகமாக இருந்தது. சேட் ஒவ்வொரு நெக்லஸ்ஸும், நாற்பதாயிரம், லட்சம், ஒன்றரை லட்சம் என்று சொல்லிக் கொண்டு இருந்தார். சேட்டின் பேச்சைச் சக்ரபாணி காதில் வாங்கிக் கொள்ளவில்லை. சேட்டிடம் அலட்சியமாக, ''விலையைத் தீர்மானிக்க வேண்டியவன் நான். நீங்க சும்மா இருங்க. நீங்க பெட்டிகளை வச்சுட்டுப் போங்க'' என்றான். சேட் விழித்தார். ''நம்பிக்கையில்லையா?'' என்று சக்ரபாணி குரலை எழுப்பிக் கேட்டதும் சேட் உடனே, ''அப்படியெல்லாம் இல்லீங்க... நாளைக்கு வரேன்... எது பிடிக்குதோ, அதை எடுத்துக்கிட்டு மத்ததைக் கொடுங்க'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

சக்ரபாணி தன் மகளுக்கு வாங்கப்போகும் நகைகளை ஆசையோடு பார்த்தான். அவன் முகத்தில் எப்போதும் இறுக்கமாக இருக்கும் தசைகள் இளகின. கூட்டலும், கழித்தலும், ஆள் கவிழ்க்கும் அசுரத் திட்டங்களும் அவன் மூளையிலிருந்து விலகின. அவன் கண்களில் ஒரு குளுமை தென்பட்டது. சக்ரபாணி மனிதனானான்; ஒரு தந்தையானான். ஜோன்ஸ், அவன் மனைவி, அவன் சகோதரிகள் இவர்களைப் பார்க்க வேண்டும் என்பதையே சக்ரபாணி மறந்து போனான். உடனே காலிங்பெல்லை அழுத்தினான். வீட்டு வேலைக்காரன் ஓடிவந்தான். ''பாலா எங்கே... கூப்பிடு'' என்றான் ஆவலோடு.

''அம்மா இப்பத்தான் குளிக்கப் போறாங்க'' என்றான் வேலைக்காரன்.

சக்ரபாணி ஒரு விநாடி திகைத்தான். மறுபடியும் நெக்லஸ் பெட்டிகளைப் பார்த்தபடி உட்கார்ந்தான்.

பாலா எங்கே என்று கேட்டதும் வேலைக்காரன், 'குளிக்கப் போனாங்க' என்ற சாதாரணமாகச் சொல்லிவிட்டான். ஆனால் பாலாவைப் பொறுத்தவரையில் குளிப்பது என்பது பெரிய முக்கியமான விஷயம்; அவள் வாழ்க்கையில் அது ஒரு முக்கியமான அங்கம். சக்ரபாணியின் பணம், அவன் ஸ்தாபனங்களில் வேலை

www.t.me/tamilbooksworld



செய்யும் என்ஜினியர்களின் கற்பனை, தொழில் நுட்பம் எல்லாம் செலவழித்து வீட்டு மாடியில் ஒரு நீச்சல் குளம் பாலாவுக்காகத் தயாரிக்கப்பட்டு இருந்தது.

குளத்தில் படுத்தபடி புஸ்தகம் படிக்கச் சாதனம், டெலிபோன் இன்னும் வித விதமான வசதிகள் செய்யப்பட்டு இருந்தன. மீன்போல் நீந்திப் பொழுதைப் போக்குவதில் பாலாவுக்கு அலாதி ஆசை. பாலாவுக்குப் பிடித்த தாமரை மலரின் அமைப்பிலும், நிறத்திலும் நீச்சல் குளம் அமைக்கப்பட்டிருந்தது. அதுவே தண்ணீர்க் குளமாகவும், இளஞ் சூடுள்ள வெந்நீர்க் குளமாகவும் மாறப் பொறியியல் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பாலா மட்டும் தனியாகக் குளிக்கும் அக்குளத்தின் அறையின் கூரை தாமரை நிறம் பூசப்பட்ட துத்தநாகத் தகடுகளால் வேயப்பட்டு இருந்தது. பாலா தண்ணீரில் படுத்தபடியே ஒரு பொத்தானை அழுத்தினால் மேல் கூரையின் இருபுறமும் விலகிக்கொள்ளும். சூரிய வெளிச்சம் வீச வானம் தெரியும். இன்னொரு பொத்தானை அழுத்தினால் லேசான தகரத்தால் ஆன வர்ணம் பூசிய புஸ்தக ஸ்டாண்டு நீர் மட்டத்திற்கு மேல் தவழ்ந்து வரும். அதன்மேல், வாட்டர் ப்ரூப் உறையில் பொருத்தி வைக்கப்பட்டுள்ள பத்திரிகைகள், புத்தகங்களைத் தண்ணீரில் மிதந்தபடி படிப்பாள். அதே போல் இன்னொரு பொத்தானை அழுத்தினால் டெலிபோன் அவள் இருக்கும் இடத்திற்கு நகர்ந்து வரும். அதில் பேசி முடித்த பின்பு அதே பொத்தானை மறுமுறை அழுத்தினால் டெலிபோன் பழைய இடத்திற்கே போய் விடும். நீச்சல் குள அறையில் சுவரில் புதைக்கப்பட்டிருந்த ரேடியோகிராமிலிருந்து இன்னிசை சன்னமாக ஒலிக்கும். தேவையானபோது பாலா பொத்தானை அழுத்தினால் பணிப்பெண்கள் சூடான சூப் கொண்டு வருவார்கள். அதைக் குடித்துவிட்டு மறுபடியும் நீந்துவாள். பாலாவுக்கு மிக நெருங்கின சிநேகிதிகள் தவிர மற்றவர்கள் நீச்சல் குள அறையின் உட்புறம் அனுமதிக்கப்படுவதில்லை. சக்ரபாணியே அந்தக் குளம் கட்டி நிர்மாணம் செய்த

அன்று எல்லாவிதக் கருவிகளும் சரியாக இயங்குகின்றனவா என்று பார்க்க வந்ததுதான். அப்புறம் அவர்கூட அங்கு வருவது இல்லை.

பாலா குளிக்கப் போனால் சீக்கிரம் வரமாட்டாளே! எப்படி அவளிடம் நகைகளைக் காட்டுவது என்று யோசித்தான். கைக்கடிகாரத்தைப் பார்த்தான். ஜோன்ஸ் ஞாபகம் வந்தது. டெலிபோனைப் பார்த்தான். உடனே டெலிபோன் அருகே சென்று டயல் செய்தான்.

நீச்சல் குளத்தில், சன்னமான குறைந்த ஆடை அணிந்து, தங்கச்சிலை போன்ற உடலுடன் தண்ணீரில் லேசான வெப்பத்தால் கண் மூடிக் கனவு கண்டு கொண்டிருந்தாள் பாலா. நீச்சல் குள அறையில் 'கண கண' வென்று மணி அடித்ததும், அவள் கனவு சிதைந்தது. பாலாவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. உடனே கடுகடுப்புடன் பொத்தானை அழுத்தினாள். டெலிபோன் நகர்ந்து அவளை நெருங்கியது. அதை எடுத்துக் காதில் வைத்துக் கொண்டு சலிப்புடன், "ஹலோ! யார் பேசறது?" என்று கேட்டாள்.

"நான்தான் பேசறேன் பாலா டார்லிங்!" என்று சக்ரபாணியின் குரல் கேட்டது.

"ஓ... டாடியா... என்ன டாடி! நான் குளிச்சுகிட்டு இருக்கேன். டிஸ்டர்ப் பண்றீங்களே!" என்று கடுகடுப்புடன் சொன்னாள்.

"என்னை மன்னிச்சுடு பாலா... ஒரு முக்கியமான விஷயம் உன்கிட்டே பேச வேண்டியிருக்கு. ஜெய்ப்பூரிலேருந்து நெக்லஸ்கள் வந்திருக்கு. வைரம், பச்சை, வைரமும் சிவப்பும் கலந்த நெக்லஸ் இப்படிப் பல ரகம் வந்திருக்கு. உனக்கு எது பிடிக்கும். நெக்லஸ்களை வேணும்னா நீச்சல் அறைக்கே அனுப்பட்டுமா?" என்று குழைவோடு கேட்டான் சக்ரபாணி.

"எனக்கு எதுக்கு டாடி, இப்போ நெக்லஸ் எல்லாம்?" என்று பாலா சிணுங்கினாள்.

www.t.me/tamilbooksworld



"அதில்லே கண்ணு... எனக்கு ஒரு நெக்லஸ் வாங்கித் தரணும் போல ஆசையா இருக்கு..."

"போங்க டாடி... உங்களுக்கு நெக்லஸ் வாங்கணும் போல இருந்தா நான்தான் கிடைச்சேனா? எனக்கு இப்ப எல்லாம் நகைன்னாலே ஒரே போராயிருக்கு" என்றாள்.

"உன்னுடைய பிறந்த நாள் வருது பாலா... அதுக்கு நான் ஏதாவது கொடுக்க வேண்டாமா?"

"ஒவ்வொரு நாளும்தான் ஏதாவது கொடுக்கறீங்களே... பிறந்த நாளன்னிக்குத்தான் சும்மா இருங்களேன் டாடீ..." என்று சொல்லும்போதே அவள் நீச்சல் உடையின் மேல்பகுதி நழுவித் தண்ணீரில் மிதப்பதையும், செழுமையான அவள் உடம்பு தண்ணீரின் வெளிப்புறம் தெரிவதையும் உணர்ந்தாள்.

அறையில் யாரும் இல்லை என்பது உண்மை. இருந்தாலும் டெலிபோனில் பேசும் தந்தை அங்கேயே இருப்பது போல் ஒரு பிரமையின் காரணமாகப் பாலாவுக்குக் கூச்சம் ஏற்பட்டது. உடனே கைகளால் டெலிபோனை மூடினாள். டெலிபோன் ரிஸீவரில், "ஹலோ! ஹலோ!" என்று சக்ரபாணி கூப்பிடும் குரல் கேட்டது.

பாலா சற்றுக் கடுமையாக, "டாடீ... யூ ஆர் இன்டாலரபிள்... இங்க நான் ஒரு சின்ன அட்ஜஸ்ட்மன்ட் பண்ணிக்கிட்டிருக்கேன். அதுக்குள்ள 'ஹலோ... ஹலோ'ன்னு கத்தறீங்களே?" என்று சொல்லிவிட்டு நீச்சல் ஆடையின் மேல் பகுதியைச் சரி செய்து மூடிக் கொண்டாள்.

சக்ரபாணியின் முகம் கலவரமடைந்தது. "அட்ஜஸ்ட்மென்ட்டா... என்ன பாலா ஏதாவது எலக்ட்ரிக் கனெக்ஷன் வீக்கா... நான் வரட்டுமா?" என்று பதற்றத்துடன் கேட்டான்.

பாலா சிரித்தாள். "பதறாதீங்க அப்பா... சின்ன அட்ஜஸ்ட்மன்ட்தான்... அதெல்லாம் உங்ககிட்டே எப்படி

சொல்றது டாட... நீங்க எனக்கு நெக்லஸ் வாங்கித்தான் ஆகணுமா?'' என்று கேட்டாள்.

சக்ரபாணி, ''ஆமாம்... ஆமாம்... வாங்கித்தான் ஆகணும்!'' என்றான்.

''ஒரு ஐடியா டாடி... அதன்படி நடந்தா ஒப்புக் கறேன்...''

''என்ன ஐடியா? சொல்லு... பாலா, எனக்கு ஜோன்ஸ் துரை வீட்டுக்குப் போகணும்.''

''டாடி, என்னோட படிச்சவள் மீனாட்சின்னு ஒருத்தி, அவள் தினமும் வகுப்புக்கு ஒரு நெக்லஸ் போட்டுக்கிட்டு வருவா...''

''அது என்ன நெக்லஸ்? எந்தக் கடையிலே இருக்கு சொல்லு. உடனே வாங்கிடறேன்...'' என்றான் சக்ரபாணி அவசரமாக.

''என்னப்பா... இப்படி அவசரப்படறீங்களே...? சொல்றதைப் பூராவும் கேளுங்க... அந்த நெக்லஸ் எல்லாக் கடையிலும் கிடைக்கும். 'இமிடேஷன் கில்ட் கோல்ட்' நெக்லஸ். அதுதான் நான் இதுவரையில் போட்டுக்கலே, அதை வாங்கித் தாங்கப்பா... நான் போட்டுக்கிட்டுப் போய் என் சிநேகிதிகள் கிட்டக் காட்டறேன்'' என்று சிரித்தபடி சொன்னாள்.

''பாலா நான் என்னவோ நினைச்சேன்... நீ சுத்த முட்டாள்...'' என்று சொல்லிப் படீரென்று போனை வைத்து விட்டு, சக்ரபாணி கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டு வெளியேறினான், வேங்கைபோல் உறுமியபடி.

நீச்சல் குளத்தில் படுத்தபடி பாலா விழுந்து விழுந்து சிரித்தாள். உடனே எழுந்தாள். நீச்சல் குளத்தின் ஒரு திரையின் மறைவுக்குச் சென்றாள். அங்கு மடித்து வைக்கப்பட்டிருந்த புடைவை ரவிக்கை அணிந்து வெளியே வந்தாள். திடீரென்று அவளுக்குத் தாயின்



நினைவு வந்தது. ''ராணி... ராணி...'' என்று கூப்பிட் டாள். ''அம்மா சாப்பிட்டாச்சா?'' என்று கேட்டாள்.

''இன்னம் சாப்பிடலீங்க...'' என்று சொல்லிக் கொண்டே ராணி வந்தாள்.

''சாப்பாட்டை எடுத்துக்கிட்டு அம்மாவின் அறைக்கு வா...'' என்று சொல்லிவிட்டு ஒய்யாரமாக நடந்தாள் பாலா.

பாலா நினைவு தெரிந்த நாள் முதல் அவள் தாய் லட்சுமி சித்த சுவாதீனம் இல்லாதிருந்ததால், பாலாவுக்கு ஒரு பெரிய துக்கமாகத் தோன்றவில்லை. அவள் படிப்பு, விளையாட்டு இவற்றிலேயே பொழுது போக்கிவிட்டாள். எப்போதாவது தோன்றும்போது தாயின் அறைக்குச் செல்வாள். அம்மாதிரிதான் அன்றும் சென்றாள். ராணி சாப்பாடு கொண்டு வந்ததும் பிளேட்டை வைத்துத் தாய்க்குச் சாப்பாடு பரிமாறினாள்.

லட்சுமி, வெகுநாள் சாப்பிடாதவள் போல் அள்ளி அள்ளிச் சாப்பிட ஆரம்பித்தாள். பாலாவுக்குத் தாயைப் பார்க்கவே என்னவோ போல் இருந்தது.

## 4

பாலா ஒருநாள் கூட வாழ்க்கையின் அடிப்படைப் பிரசினைகளைப் பற்றி ஆராய்ந்தவள் அல்ல. தாயின் நிலை ஏன் இப்படி இருக்கிறது, தன் தந்தையினுடைய செல்வத்தின் வழிவாசல் என்ன, இம்மாதிரி கேள்விகளுக்கு இடம் கொடுத்ததில்லை. அவளுக்கு அவள் தந்தையின் புத்திசாலித்தனம் இருந்தது. எல்லாக் கலைகளையும் உடனே கற்றுக் கொள்ளும் திறமை இருந்தது. திடீரென்று ஒரு நாள் சமையலறைக்குச் சென்று சமையல் செய்வாள். செய்த சமையல் நளபாகமாக இருக்கும். இன்னொரு நாள் ஆஸ்பத்திரிக்குச் சென்று, பெண்கள் வார்டில் நர்ஸ்



www.t.me/tamilbooksworld

வேலை செய்வாள். அவளுக்கு எல்லாவற்றையும் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசை. தனக்குத் தெரியாத ஒன்று இருக்கக் கூடாது என்ற ஆசை அவளுக்கு. தனக்கு முடியாத ஒன்று இருக்காது என்று அவள் தந்தை நினைத்தது போல் பாலாவும் நினைத்தாள்.

தாயின் சித்தஸ்வாதீனம் இல்லாத நிலை அவளுக்குச் சிறுவயதிலிருந்து பழகிப்போன ஒரு துக்கமாக இருந்தது. வீட்டிலுள்ள நாற்காலிகள் மேஜைகள் போல், தாய் கம்பி அறையில் உலாவுவதையும் கூச்சலிடுவதையும் ஒரு சாதாரண விஷயமாகவே எடுத்துக் கொண்டாள்.

''அம்மா, மெல்ல சாப்பிடும்மா; ஏம்மா அவசரமா சாப்பிடறே?'' என்று பரிவோடு சொன்னாள்.

லட்சுமி, தன் மகள் முகத்தைப் பார்த்தாள். ''ரயிலுக்கு நேரமாச்சு. பெட்டி படுக்கையெல்லாம் அண்ணா எடுத்து வச்சுட்டான். சீக்கிரம் சாப்பிட வேண்டாமா பாலா?'' என்று கேட்டாள்.

பாலா, பதிலுக்கு ஒன்றும் சொல்லாமல் எழுந்தாள். அவள் தாய் அடிக்கடி தன் சகோதரனைப் பற்றிப் பேசுவது அவளுக்குத் தெரியும். தொன்மையான கடந்த காலத்தின் கனவு போல் அவள் மாமாவின் குடும்பத்தைப் பற்றிய காட்சிகள் பாலாவுக்கு நினைவுக்கு வரும். அந்த வீட்டில் அவள் தந்தை சக்ரபாணி, உறவினர்களை அனுமதிப்பதில்லை. உறவினர்களுடன் பேசுவதே கிடையாது. பந்துக்கள் யாரும் பங்களா வாசலிலுள்ள கூர்க்காவை, தாண்டி உள்ளே நுழைய முடியாது. ''பணத்தைட பறிக்க வரும் கூட்டம் பந்துக்கள்!'' என்று சக்ரபாணி கூறுவது உண்டு. அதை அப்படியே நம்பி யிருந்தவள் பாலா. தந்தையின் ஆதரவு, தந்தையின் அன்பு, இதுவே பாலா அறிந்த உறவு.

பாலா, பெருமூச்சு விட்டபடி எழுந்து அறையை விட்டு வெளியே வந்தாள். தலைவிரி கோலமாக உணவருந்திக் கொண்டிருந்த தாய் லட்சுமி, வெளியே



செல்லும் மகளைப் பார்த்தாள். ''பாலா!'' என்று இரு முறை கூப்பிட்டாள்.

பாலா, நின்றபடி திரும்பித் தாயைப் பார்த்தாள். அவள் தாய் லட்சுமி சோற்றுப் பருக்கை படிந்த கையோடு ஓடிவந்தாள்.

''பாலா, நீ என் கண்ணுல்லே, அப்பாகிட்டே நான் அவசர அவசரமா சாப்பிட்டதைப் பத்திச் சொல்லப் போறியா? அப்பாவிடம் சொல்லாதடி கண்ணு!'' என்று கெஞ்சினாள்.

பாலாவுக்கு வேதனையாக இருந்தது. 'என்னை அம்மா, தந்தையின் உளவாளியாகக் கருதுகிறாளோ! அப்பாவைக் கண்டு அம்மா ஏன் இப்படிப் பயப்படுகிறாள்? அப்பா பிரியத்தின் உருவமாச்சே!' என்று நினைத்தாள்.

''அம்மா, அப்பா உன்னை ஒன்றும் சொல்ல மாட்டார், அம்மா. அவர் நல்லவர்! நீ இப்படி இருக்கிறது அப்பாவுக்கு எவ்வளவு வேதனை தருகிறது தெரியுமா?'' என்றாள்.

லட்சுமி சிரித்தாள்.

''பாலா, உங்கப்பா பேர் என்ன தெரியுமா? 'சக்ரபாணி!' கையிலே சக்கரம் வச்சிருக்கார். பிடிக்காதவங்களைச் சக்கரத்தை வீசிக் கழுத்தை வெட்டிப்பிடுவார்! ஆனால் உன்னை ஒன்றும் பண்ண மாட்டார். நீதான் அவருடைய செல்லப் பெண்ணாச்சே!'' என்று கூறினாள்.

தந்தையைப் பற்றித் தாய் பேசுவதை கேட்கவே பாலாவுக்கு அருவருப்பாக இருந்தது. வாரத்தில் இரண்டு அல்லது மூன்று முறைதான் பாலா தாயையே சந்திப்பாள். 'ஒவ்வொரு சந்திப்பிலும் இப்படியா அப்பாவைப் பற்றி அம்மா அவதூறு பேசவேண்டும்? ஒவ்வொரு சிநேகிதி வீட்டிலும், பெற்றோர்கள் எவ்வளவு ஒற்றுமையாக இருக்கிறார்கள்! நம் வீட்டில் மட்டும் ஏன் இந்தக் குறை இருக்க வேண்டும்? எனக்கு எல்லாவித பாக்கியம்

இருந்தும், தாய் அன்பு என்ற பாக்கியம் இல்லையே!' என்று நினைத்து வருந்தினான்.

ஒரு மாதத்துக்கு முன்புதான் பாலா, சக்ரபாணியிடம் தாயின் நிலை பற்றிச் சொன்னாள்: ''அம்மாவுக்குப் பைத்தியம் தெளியவே தெளியாதா அப்பா?' என்று கேட்டாள்.

''என்ன பண்றது டார்லிங்? நான் எவ்வளவு வைத்தியர்களை அழைத்து முயற்சி பண்ணிப் பார்த்து விட்டேன். ஒன்றுமே பலன் தரல்லே...! நான் மனைவியின் அன்பில்லாமல் வாழப் பழகி விட்டேன். ஆனால், உனக்குப் புத்தியுள்ள தாய் இருந்தால் ஆதரவாக இருக்குமேன்னு பார்க்கிறேன். அதுக்காகத்தான் ஜெர்மனிக்கு எழுதியிருக்கேன். அங்கு பெரிய டாக்டர் இருக்காராம். அவர் வந்து உங்கம்மாவுக்கு வைத்தியம் செய்யப் போறார்' என்று சக்ரபாணி சொன்னான்.

தாய் பற்றிய பேச்சை அதிகம் பேச சக்ரபாணி விரும்புவதில்லை என்று பாலாவுக்குத் தெரியும். தாயைப் பற்றி நினைத்தால் தனக்கும் அது வேதனை தரும் என்பதைப் பாலா உணர்ந்தாள். ஆகையால் அதைப் பற்றித் தீவிரமாக நினைக்காமல் இருந்தாள். பாலாவின் சிநேகிதிகள் அவள் தாயைப் பற்றிப் பேசுவதே இல்லை. அவளிடம் பிடிக்காத விஷயங்களை, பிரசினைகளை மறப்பது நல்லதல்லவா!

சிந்தித்தபடி வீட்டின் வெளிப்புறம் பாலா வந்தாள். அங்கு வரிசையாகக் கட்டப்பட்டிருந்த கார் ஷெட்டுகளில் காத்து நின்ற கார்கள் எல்லாம், ஒரே சமயத்தில் புறப்பட்டு, படிக்கட்டில் நின்று கொண்டிருந்த பாலாவின் எதிரே வந்து நின்றன.

பாலா, வரிசையாக அணிவகுத்து நிற்கும் அயல் நாட்டுக் கார்களைப் பார்த்தாள். பதினெட்டாயிரம், நாற்பதினாயிரம், ஐம்பதினாயிரம், லட்சம் இப்படிப் பணம் கொடுத்து வாங்கப்பட்ட கார்கள் சூரிய வெளிச்சத்



தில் மின்னியபடி நின்றன. இன்று என்னவோ அவளுக்கு அந்தக் கார்களைப் பார்க்கவே பிடிக்கவில்லை. கோடீசுவரன் வீட்டில் கல்யாணச் சமையல் செய்யும் பெரிய சமையல்காரனுக்கு, டின்னர் முடிந்ததும், தான் செய்த சாப்பாட்டைத் தானே சாப்பிடப் பிடிக்காதாம். தன் சிறிய வீட்டுக்குச் சென்று, ஜீரக ரசத்தில் அன்னம் கலந்து சாப்பிடுவானாம். அதுபோல் இன்று பாலாவுக்கு விலையுயர்ந்த கார்களைப் பார்க்கவே அருவருப்பாக இருந்தது. அவளே, தந்தையிடம் சொல்லி வாங்கியவை அவ்வளவு கார்களும். ஆனாலும் இன்று அவை பிடிக்கவில்லை. அவள் பார்வை, ஷெட்டில் நிறுத்தப்பட்டிருந்த சாயம் மங்கிய மாரீஸ் மைனர் கார்மீது விழுந்தது. வீட்டுக்குக் காய்கறி, சாமான் வாங்கச் செல்லும் கார் அது. பொதுவாக வேலைக்காரர்கள் சமயத்தில் எடுத்து உபயோகிப்பதற்காக வாங்கப்பட்டது. அந்தக் காரைக் கொண்டுவரச் சொன்னாள்.

டிரைவர் ஆச்சரியத்துடன் கொண்டு வந்து நிறுத்தினான். பாலா, டிரைவரைக் காரிலிருந்து இறங்கச் சொல்லி விட்டுத் தானே டிரைவர் ஆசனத்தில் உட்கார்ந்தாள். ஓட்டினாள்.

வெளிவாயில் கதவண்டை உட்கார்ந்திருந்த கூர்க்கா, வண்டுபோல் உருண்டு வரும் மாரீஸ் மைனர் காரைப் பார்த்ததும் மார்க்கெட்டுக்குச் சாமான் வாங்கிவரக் கார் போகிறது என்று நினைத்தான். வீடு திரும்பும்போது டிரைவரை ஒரு பீடிக்கட்டு வாங்கிவரச் சொல்லுவோம் என்ற ஆசையில் எதிரே வரும் காரை நோக்கி, தன் கையை நீட்டி, ''அரே... டெரோ...'' என்று சொல்லி நிறுத்தினான். கார் நின்றதும், காரினுட்புறம் இருந்தது வழக்கம்போல் பரிசாரகன் அல்ல, கணக்குப் பிள்ளையும் அல்ல, எஜமானி அம்மாளே வீற்றிருக்கிறாள் என்று தெரிந்ததும் நடுங்கிவிட்டான். தன்னையுமறியாமல் அவன் கை பட்டென்று சல்யூட் அடித்தது. அவன் உதடுகள்,

'மன்னித்து விடுங்கள்' என்ற பொருள்படும்படி, ''மாஃபீகரோஜி'' என்று முணுமுணுத்தன.

இளைய ஜோன்ஸ் துரை வீட்டில், ஜோன்ஸ் துரையும், அவன் மனைவியும் சகோதரிகளும் சக்ரபாணி முன்பு வாய் திறந்து பற்களைக் காட்டியபடி நின்றனர். ஜோன்ஸ் குடும்பமே, தங்களைக் காப்பாற்ற வந்த கருணாமூர்த்தி சக்ரபாணி என்ற எண்ணத்தில் இருந்தது. சக்ரபாணியின் முன்பு ஒரு டீப்பாயில் பிஸ்கோத்துகள், கேக்குகள், ஸாண்ட்விச்சுகள் வைக்கப்பட்டிருந்தன. ஜோன்ஸ் துரையின் சகோதரி, பிஸ்கோத்துகளை எடுத்து ஊட்டவில்லை; அவ்வளவுதான். ''இதைச் சாப்பிடுங்கள்! அதைச் சாப்பிடுங்கள்!'' என்று சொல்லிக்கொண்டு, குனிந்து ஒவ்வொன்றாக எடுத்துக் கொடுத்தாள். அவள் அணிந்திருந்த ஸில்க் ஃப்ராக் அவள் மேனியின் மேற் புறத்தை ஓரளவு மூடியும் மூடாமலும் இருந்தது.

''இவ்வளவு இளைய வயதிலே இவ்வளவு ஸ்தாபனங் களைச் சமபாதித்து, நிர்வாகம் செய்கிறீர்களே! நீங்கள் ஒரு நெப்போலியன்தான்! நெப்போலியன் அஃப் பிஸினஸ்!'' என்று கூறிவிட்டு உடம்பை ஒருவிதமாக வளைத்தாள் அவள். ''உங்களுக்கென்ன முப்பத்தெட்டு வயது இருக்குமா?'' என்று வயதைக் குறைத்துக் கேட்டாள்.

சக்ரபாணி சிரித்தபடியே, ''நோ... நோ... நான் வயதானவன்! ஐ ஆம் ஓல்டர் தென் ஃபார்டி ஃபைவ்!'' என்றான்.

உடனே ஜோன்ஸின் சகோதரி பற்கள் தெரியும்படி உரக்கச் சிரித்தாள்.

''யூ டோண்ட் லுக்கிட் அட் ஆல்! பார்த்தால் தெரியல்லே!'' என்று சொன்னாள். இம்மாதிரி விரசமான பேச்சுக்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கத்துடன் சக்ரபாணி கடிகாரத்தைப் பார்த்தான்.

www.t.me/tamilbooksworld



ஜோன்ஸ், சக்ரபாணியின் நோக்கத்தைப் புரிந்து கொண்டான். ''சரி, உங்களுக்கு நிறைய வேலையிருக்கும். பிஸினஸ் பேசுவோம்'' என்று ஆரம்பித்தான்.

சக்ரபாணி விட்டத்தைப் பார்த்தபடி அலட்சியமாக, ''உங்கள் குடும்பச் சொத்துக்கள் பூராவையும் என்னிடம் விற்க, நீங்கள் என்னிடம் எவ்வளவு தொகை எதிர்பார்க் கிறீர்கள்?'' என்று சுற்றி வளைக்காமல் நேரடியாகக் கேள்வியைக் கேட்டான்.

ஜோன்ஸ், சக்ரபாணி ஒவ்வோர் 'அயிட்ட'மாக விலை பேசுவான் என்று எதிர்பார்த்தான். மொத்தமாக விலையை எடுத்த எடுப்பிலேயே கேட்டதும் அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவன் மனைவியும், சகோதரிகளும் சூழ அடுத்த அறைக்குச் சென்றான்.

சக்ரபாணி, எதிரே சுவரில் ஊர்ந்து கொண்டிருக்கும் பூச்சியையும், அதற்குச் சற்றுத் தூரத்திலே பூச்சிக்குத் தெரியாமல் நகர்ந்து வரும் பல்லியையும் பார்த்தபடி நின்றான்.

பக்கத்து அறையில் கசமுசவென்று ஜோன்ஸோடு, அவன் வீட்டுப் பெண்டிர் பேசிக் கொண்டிருந்தனர். ஜோன்ஸ் மனைவி, ''ஆடிட்டர் எவ்வளவுக்கு விற்கலாம் என்று சொல்கிறார்?'' என்று கேட்டாள்.

''ஒவ்வொரு அயிட்டமாக நிதானமாக விற்றால் 25 லட்சம் கிடைக்கும்'' என்றார்.

''சக்ரபாணி அவ்வளவு கொடுப்பாரா?'' என்று கேட்டாள் ஒரு சகோதரி.

''நிச்சயமாக 25 லட்சம் தரமாட்டார். மொத்தமாக வாங்குபவர்கள் குறைத்துத்தான் கொடுப்பார்கள்'' என்றான் ஜோன்ஸ்.

''உங்கப்பா இந்தியாவுக்குச் சரக்கு ஏற்றும் கப்பலில் டிக்கட் இல்லாமல் காப்டனின் தாட்சண்யத்தில் வந்தவர். இத்தனை நாள் ஆண்டு அனுபவித்துத் தின்றது மிச்சம்.

ஏது வந்தாலும் லாபம் என்று கொடுத்துவிட வேண்டும்'' என்றாள் ஜோன்ஸ் மனைவி.

''முதலில் ஐந்து லட்ச ரூபாய்க்குக் கடன் இருக்கிறது. அதை அடைக்காவிட்டால் சொத்து ஏலத்துக்கு வரும். கடனை அடைத்து, சகோதரிகளுக்குத் தலைக்கு ஒரு லட்சமாவது கொடுக்கவே ஏழு லட்சம் தேவை!'' என்று ஆடிட்டர் எழுதிக் கொடுத்த கணக்கைச் சொன்னான் ஜோன்ஸ்.

சக்ரபாணி பார்த்துக் கொண்டிருந்த பல்லி, பூச்சியை நெருங்கிக் கொண்டிருந்தது.

''இருபது லட்சம் கொடுத்தால், சொத்துக்களைக் கொடுத்து விடுகிறேன்'' என்றான் திரும்பி வந்த ஜோன்ஸ்.

சக்ரபாணி, ''ரொம்ப சீப்! என் கணக்குப்படி நியாயமாக உங்களுக்கு இருபத்தைந்து லட்சமாவது கொடுக்காவிட்டால் சரியில்லை'' என்றான்.

ஜோன்ஸ் இதை எதிர்பார்க்கவில்லை. ''மிஸ்டர் சக்ரபாணி, இருபத்தைந்து லட்சமா சொன்னீர்கள்?''

சக்ரபாணி, நகரும் பல்லியைப் பார்த்தபடியே, ''ஆமாம்!'' என்றான். ஜோன்ஸ், அவன் கைகளைப் பிடித்துக் குலுக்கியபடி, ''நீங்கள் ஜென்டில்மென்! நீங்க குட் ஜென்டில்மென்!'' என்றான்.

''ஆனால் ஒரு சிக்கல், நீங்க இவ்வளவு பெரிய தொகையை வெளிநாட்டுக்கு எடுத்திட்டுப் போக முடியாதே!''

ஜோன்ஸ் முகம் சுருங்கிவிட்டது. ''ஏதாவது ஒரு வழி பண்ணியாகணுமே?'' என்றான்.

''நான் ஒரு திட்டம் வச்சிருக்கேன்...''

''அது என்ன திட்டம்?''

''உங்களுக்கு இந்தியாவிலுள்ள கடன்களை என் பேரிலே சாட்டுதல் போட்டுக்கிறேன். அப்படி ஐந்து

www.t.me/tamilbooksworld



லட்சம் தீரும். அடுத்தபடியாக மூன்று லட்சத்துக்குச் செக் தர்றேன். உங்க சகோதரிகள் பங்கு சரியாய்ப் போகுது; உங்களுக்கும் ஒரு லட்சம் தொகையாய்க் கிடைக்குது. மீதி பதினேழு லட்சத்துக்கு மலேயாவிலே உங்களுக்கு ரம்போலா எஸ்டேட்டை என் சிநேகிதரை விட்டுச் சாஸனம் செய்யச் சொல்றேன். அது இருபது லட்சம் பெறும். அவர் எஸ்டேட்டை வித்திட்டு இந்தியா வருகிறார். அவருக்கு மெள்ளமாக இங்கே நான் பணம் கொடுத்துக்கறேன்'' என்றான் சக்ரபாணி.

ஜோன்ஸ், ''ஒண்டர்புல் சக்ரபாணி! ஒண்டர்புல்!'' என்று மகிழ்ச்சியோடு குதித்தான்.

சக்ரபாணி மூன்று லட்ச ரூபாய்க்குச் செக்கைக் கொடுத்து, ஜோன்ஸின் கையெழுத்தையும் பத்திரத்தில் வாங்கிக் கொண்டான். அதே விநாடி சுவரில் பல்லி, பூச்சியைக் கடித்தது. பூச்சியின் சிறகுகள் படபடவென்று அடித்துக் கொண்டு ஓய்ந்தன. சக்ரபாணி மகிழ்ச்சியுடன் ஒரு பெருமூச்சு விட்டான். ஜோன்ஸின் கையெழுத்துள்ள பத்திரத்தைப் பையில் போட்டுக் கொண்டான். புன்முறுவலுடன் ஜோன்ஸை ஆசீர்வசித்து விட்டுப் புறப் பட்டான்.

ஜோன்ஸ் குடும்பம், சக்ரபாணியை வாழ்த்தியது. ஆனால் அவர்களுக்குச் சில விஷயங்கள் தெரியாது. உதகமண்டலத்திலுள்ள ஜோன்ஸ் எஸ்டேட்டைச் சக்ரபாணி தன் மலேயா நண்பருக்கு முப்பது லட்ச ரூபாய்க்கு ஏற்கெனவே பேசியிருக்கிறான் என்பது தெரியாது. கோயம்புத்தூரிலுள்ள, சென்னையிலுள்ள கட்டிடங்கள் சக்ரபாணிக்கு மிச்சம் என்பதும் தெரியாது. ஒன்றுமே கொடுக்காமல் அவனுக்குக் கிடைக்கப் போவது ஏழு எட்டு லட்ச ரூபாய் பெருமானமுள்ள கட்டிடங்கள். தவிர, உதகமண்டலத்திலுள்ள ஜோன்ஸ் எஸ்டேட்டுகளின் வருமானத்தில் இருபது பர்சன்ட் மலேயா நண்பரிடம் சக்ரபாணி தனக்கென்று ஒதுக்கியிருந்தான்.

மும்முனையிலும் லாபத்துக்கு வழி வகுத்துவிட்டு நிம்மதியாகப் புறப்பட்டான் சக்ரபாணி. ஜோன்ஸுக்கு விஷயங்கள் புரிவதற்குள் அவன் மலேயா சென்றிருப்பான். அல்லது அவன் மனைவியோடு சீமைக்கே சென்றிருப்பான். நம் நாட்டை இது நாள் வரை சுரண்டிய இனத்திடம், நாம் சுரண்டி விட்டோம் என்ற திருப்தி அவனுக்கு. அவன் நடையிலே இப்போது இளமை தெரிந்தது. வேகமாக நடந்து தன்னுடைய காருக்குச் சென்றான்.

அப்போது ஜோன்ஸ் ஓடிவந்து அவனைத் தடுத்தான். ''மிஸ்டர் சக்ரபாணி! நான் ஊரைவிட்டுப் போகப் போகிறேன். என்னுடைய பழைய 'காடில்லாக்' கார் இனி எனக்குத் தேவையில்லை. அதை உங்களுக்கே அன்பளிப்பாகக் கொடுக்கிறேன். நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்'' என்றான்.

சக்ரபாணி மூளை உடனே வேகமாக வேலை செய்தது. 'இந்தப் பழைய கார் நமக்கெதற்கு? செலவு வைக்கும் ராசியில்லாத ஒன்று' என்று நினைத்தான். வேண்டாம் என்று சொல்லவும் மனமில்லை. ஜோன்ஸிடம் மரியாதையுடன், ''மிஸ்டர் ஜோன்ஸ், என்னிடம் நிறைய கார்கள் இருக்கின்றன. இதை உங்கள் ஆடிட்டருக்குக் கொடுத்து விடுங்கள். பாவம், அவர் உங்களுக்காக மிகவும் பாடுபட்டிருக்கார்'' என்று கூறினான்

ஜோன்ஸுக்கு ஆடிட்டர் செய்த துரோகத்துக்கு, ஜோன்ஸே சன்மானமளிப்பதில் சக்ரபாணிக்குத் திருப்தி.

மாரீஸ் மைனர் காரைப் பாலா புத்தகக் கடை முன் நிறுத்திவிட்டு, புத்தகம் வாங்க உள்ளே நுழைந்தாள். கடை வாசலில் அறுபது வயதுள்ள பெரியவர் ஒருவர் நின்று தன்னைக் கவனிப்பதைப் பார்த்தாள். அவர் சாதாரண கதர் ஜிப்பா அணிந்திருந்தார். அவர் முகத்தில் நரைத்த தாடி சுருண்டு வளைந்து பார்ப்பதற்கு அழகாக இருந்தது.

www.t.me/tamilbooksworld



பாலா, கடைக்குள் நுழைந்தாள். எந்தப் புத்தகம் வாங்கலாம் என்று நினைத்தபடி ஷெல்பில் அழகாக வைக்கப்பட்டிருந்த புத்தகங்களைப் பார்வையிட்டாள். அப்போது கிழவர் கடையினுள் நுழைவதைப் பார்த்தாள். கிழவரும் புத்தகங்களைப் பார்வையிட்டபடி மெள்ள அவளை நெருங்கினார். அவள் திரும்பியதும், கிழவரின் பார்வை தன் முகத்தில் லயித்திருப்பதைக் கண்டாள். சட்டென்று அவளுக்கு ஒரு பயம் ஏற்பட்டது.

சில நிமிடங்களுக்குப் பின் புத்தகத்துக்குப் பணம் கொடுத்துவிட்டு, பாலா கடைக்கு வெளியே வந்தாள். கிழவர் அவளுடைய கார் அருகே நின்று கொண்டிருந்தார். பாலாவுக்கு இப்போது ஆத்திரமே வந்தது. அவரைச் சட்டை செய்யாமல் காரில் ஏறிக் கொண்டு காரின் கதவை வேகமாக அடித்து மூடினாள்.

பாலாவின் கார் நகர்ந்தது. கிழவர் அவள் செல்வதையே பதற்றமில்லாமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

## 5

புத்தகக் கடை வாசலில் கண்ட பெரியவரின் முகத் தோற்றம் ஏனோ பாலாவின் மனத்தில் குழப்பத்தைக் கொடுத்தது. எவ்வளவோ ஆயிரம் கிழவர்களை அவள் சந்தித்திருக்கிறாள். ஆனால் எந்த முகமும் அவள் மனத்தை இம்மாதிரி அதிர்ச்சி அடையச் செய்ததில்லை. அந்தக் கிழவர் எழுப்பிய உணர்ச்சியின் தன்மை என்ன—பயமா, வெறுப்பா, அல்லது கவர்ச்சியா? பாலாவால் சொல்ல முடியவில்லை. அன்று நடந்த நிகழ்ச்சிகள் பலவற்றுக்குக் காரணத்தை அவளாலேயே கூற முடியவில்லை.

சக்ரபாணி அவளது பிறந்த நாளுக்கு நெக்லஸ் வாங்கித் தருகிறேன் என்று ஆசைப்பட்டபோது, அவள் அவனிடம் ஏன் 'இமிடேஷன்' நெக்லஸ் கேட்டு தந்தை

யின் மனத்தில் ஏமாற்றத்தை உண்டு பண்ணினாள் என்றும் புரியவில்லை. வீட்டை விட்டுப் புறப்படும்போது ஏன் விலையுயர்ந்த கார்களை ஒதுக்கிவிட்டு, இந்த மாரிஸ் காரை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள் என்று அவளா லேயே கூற முடியவில்லை. ஏதோ ஒருவிதச் சலிப்பு உணர்ச்சி அவளைப் பற்றிக் கொண்டது. உணர்ச்சிக்கு முற்றிலும் புதியவளாயிருந்தாள்.

எதையுமே பற்றிச் சிந்தியாமல், செல்வ வெள்ளத்தில் மிதந்து வாழ்ந்தவள் பாலா. ஒன்றை விரும்புகிறோம், அது கிடைக்காமல் போகிறது. ஏமாற்றமடைகிறோம், வேதனையடைகிறோம்; அப்போதுதானே நாம் சிந்திக்கத் தொடங்குகிறோம். பாலா விரும்பியது என்றுமே கிடைக்காமல் இருந்ததில்லை. ஏமாற்றம், வேதனை இந்த உணர்ச்சிகளை உணராத அவளுக்கு, ஆழ்ந்து சிந்திக்கவே வாய்ப்பில்லை.

பாலாவுக்கு வயது வந்தபின், அவளுடைய தாய்க்கு மூளைக் கோளாறு ஏற்பட்டிருந்தால், பாலா ஒருவேளை அதிர்ச்சியின் விளைவாகச் சிந்தித்து இருப்பாள். கட்டுப் பாடுமில்லாது கவலையுமில்லாது ஒரு குழந்தைபோல், ஓர் இன்பத்தினின்று மற்றோர் இன்பத்துக்குத் தாவிச் சென்று கொண்டிருந்த பாலா, கீழ்த்தரமான கெட்ட உணர்ச்சிகளுக்குப் பலியாகாமல் தப்பியதே ஆச்சரியம் தான். அவள் தந்தையின் உழைப்பு, வெற்றி ஆர்வம், இரண்டுமே அவளுக்கு இயற்கையாகவே சுபாவத்தில் இருந்ததால், அவள் தன் உணர்ச்சிகளைப் படிப்பிலும், பலவகைப்பட்ட நுண்கலைகள் பயில்வதிலும் திருப்பி விட்டாள். தையல் வேலை, சமையல் வேலை இவை களைக் கற்றுக்கொள்ள அவளுக்குத் தேவையில்லா விட்டாலும், அவைகளையும் பொழுது போக்கக் கற்றுக் கொண்டாள்.

வறுமை — அதன் கொடுமை — அக்கொடுமையின் விளைவாக மனிதன் மனத்தில் ஏற்படும் கோணல்கள்—

www.t.me/tamilbooksworld



இவையெல்லாம் பற்றிப் புத்தகங்கள் படித்துத்தான் உணர்ந்திருந்தாள். பாலாவுக்கு நேரடியாக வறுமையின் அநுபவம் இல்லாவிட்டாலும், சிலர் ஏன் செல்வத்தில் இன்பமாக இருக்கிறார்கள்; பலர் ஏன் வறுமையில் வாடு கிறார்கள் என்ற பிரச்னை அவள் மனத்தில் எழாமல் இல்லை. அந்தப் பிரச்னையைப் பாலா, அவள் தந்தை யிடம் கிளப்பியபோது, சக்ரபாணி அவளுக்கே உரித்தான முறையில் அதைத் தீர்த்து வைத்தான்.

"பாலா, காட்டில் பல மரங்கள், செடிகள் வளர் கின்றன. எல்லா மரங்களும் அதே பூமியில்தான் வளர்கின்றன. தென்னை ஒல்லியாக, உயர்ந்து வளர்கிறது. சில மரங்கள் மெலிந்து, குறைந்த உயரத்துக்குத்தான் வளர்கின்றன. மற்ற விருட்ச விதைகளைவிட மிகச் சிறியதான ஆலின் விதை, மண்ணில் ஆழமாக ஊன்றி, பரந்து உயர்ந்து பிரமாதமாக வளர்கிறது. மண்ணிலிருந் தும் காற்றிலிருந்தும் தேவையான சத்துக்களைப் பறித்துக் கொள்ளும் சக்தி ஆலின் விதைக்கு இருக்கிறது. அதே போல்தான் மனிதனும். வாழ்க்கையிலிருந்து தனக்குத் தேவையானவற்றை மட்டும் அறிந்து கொண்டு பயன் படுத்தும் திறமைதான் அவனுக்கு வெற்றியைத் தருகிறது. அவனைப் பெரிய மனிதனாக, செல்வந்தனாக ஆக்கு கிறது. பல சிறு விலங்குகளின் உயிரைப் பறித்துக் காட்டிலே பயத்தை ஏற்படுத்துவதால்தான், சிங்கம் புலிகள், விலங்கினத்திற்கே மன்னர்களாக வாழ முடிகிறது. இயற்கையின் சட்டம் அதுதான்."

இந்த விளக்கம் பாலாவுக்குப் பூரண திருப்தி அளிக்கா விட்டாலும், ஓரளவு அர்த்தமுள்ளதாகப் பட்டது. அன்புத் தந்தையின் விளக்கத்தில் தவறு இருக்க முடியுமா?

பாலா, தன் வீட்டுக்கு வந்ததும், உடை மாற்றிக் கொண்டு குளிர் சாதனப் பெட்டியைத் திருப்பி வேலை செய்ய வைத்துவிட்டு, மெத்தையில் படுத்தாள். அவள் சிந்தனை கலைந்து விலகியது.

படுக்கை அறையின் அடுத்த கதவு திறந்தது. அந்தக் கதவு வழியே அடுத்த அறையில் உள்ள பொருள்கள் தெரிந்தன. எழுந்து அடுத்த அறைக்குள் சென்றாள். அங்கு அவள் குழந்தைப் பருவத்தில் விளையாடிய பொம்மைகள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

கத்தும் புலி, குதிக்கும் குரங்கு, கவுன் அணிந்த பொம்மைகள், போலீஸ்காரன் பொம்மை, பார்லி லேடி பொம்மை இப்படி விதவிதமாக அவள் தந்தை அவளுக்காகப் பல நாடுகளிலிருந்து வாங்கிய பொம்மைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. பாலாவின் முகத்தில் சிரிப்பை வரவழைக்கச் சிறு வயதில் அவளுக்குச் சக்ரபாணி கொடுத்த காணிக்கைகள் அந்த ஆயிரக்கணக்கான பொம்மைகள். நவராத்திரி கொலுபோல் பல படிகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பொம்மைகளைப் பார்த்த போது, பாலாவுக்குக் குழந்தைப் பருவத்து உணர்ச்சி உள்ளத்தைத் தாக்கியது.

மூலையில் ஜன்னல் அருகில் பாவாடை சட்டையணிந்த சிறு பெண் பொம்மை செலுலாயிடில் செய்யப்பட்டது—வைக்கப்பட்டிருந்தது. அதை மட்டும் கையில் எடுத்தாள். அதைப் பார்த்ததும் அதன் முகஜாடை தன் குழந்தைப் பருவத்து முகஜாடை போல் இருப்பதாகத் தோன்றியது. பாலாவுக்கு அதைப் பார்க்கவே சிரிப்பாக வந்தது. அந்தப் பாவாடை சட்டையணிந்த பொம்மைக்கு ஒரு முத்தம் கொடுத்தாள். அதே பொம்மைக்கு வேறு யாரோ முத்தம் கொடுத்தது போன்ற ஞாபகம் எழுந்தது. ஆனால் யார் என்றுதான் தெரியவில்லை. சிந்தித்துப் பார்த்தாள். அவள் தந்தையாக இருக்குமோ என்று நினைத்துப் பார்த்தாள். அது அவள் தந்தையில்லை. ஒரே குழப்பமாக இருந்தது. கடந்த கால ஞாபகம் அவ்வளவு தெளிவாக இல்லை. சிந்தனை பலனளிக்காது போகவே மறுபடியும் பொம்மையைக் கீழே வைத்துவிட்டு, அறைக்கு வெளியே வந்து தன் படுக்கையில் படுத்துக் கொண்டாள்.



சக்ரபாணி, ஜோன்ஸிடம் கையெழுத்து வாங்கிய பத்திரத்தை எடுத்துக்கொண்டு நேரே தன் வீட்டுக்கு வந்தான். சாரங்கனுக்குப் போன் செய்தான். சாரங்கன் ஆபீஸ் வேலை முடிந்து வீட்டுக்குச் சென்று விட்டதாகத் தெரியவும், உடனே வீட்டுக்குப் போன் செய்தான். சாரங்கன் பதறியபடி போனுக்கு வந்தார். மடமடவென்று சக்ரபாணி சாரங்கனிடம் போனில் தகவல்கள் தெரிவித்தான். இரண்டு நாட்களுக்குள் ஜோன்ஸ் துரையின் எஸ்டேட்டுகளின் பெயர்விலாசம் முதலியவற்றை, 'பாலா எண்டர்ப்ரைசஸ்' என்ற பெயருக்கு மாற்றப்பட வேண்டுமென்றும், மலேயாவிலுள்ள நண்பரின் எஸ்டேட்டு ஜோன்ஸ் பெயருக்கு மாற்றப்பட வேண்டிய ஏற்பாடுகள் நடத்த வேண்டுமென்றும் உத்தரவு பிறப்பித்தான்.

ஜோன்ஸிடம் இதர கையெழுத்துக்கள், மாலை வேளையில் ஜோன்ஸ் மதுவருந்தி மந்தகாசமாக இருக்கும் போது வாங்க வேண்டுமென்று யோசனை சொல்லியவன், "சாரங்கன், சொத்துக்களைப் பற்றிய புள்ளி விவரங்கள், அவற்றின் மதிப்பு தினசரி ஏறிவருகிறது என்ற விவரங்கள், ஜோன்ஸ் காதுக்கு எட்டுவதற்குள் ஏற்பாடுகள் முடிவடைய வேண்டும்!" என்றும் சொன்னான். சாரங்கன் அப்படியே செய்வதாக ஒப்புக் கொண்டார்.

ஒரு வார காலத்துக்குச் சாரங்கனுக்குப் பசி தூக்கம் இல்லாமல் கோயம்புத்தூருக்கும் சென்னைக்குமிடையே அலைய வேண்டுமென்பது சக்ரபாணிக்கு நன்றாகத் தெரியும். ஆகையால் கனிவான குரலில், "மிஸ்டர் சாரங்கன், என்னுடைய இம்பாலா காரை எடுத்துக் கொள்ளுங்கள். செலவுக்குத் தேவையான தொகையை ஆபீஸிலிருந்து எடுத்துக் கொள்ளுங்கள். யார் யாருக்கோ எவ்வளவோ கொடுக்க வேண்டிவரும். ஆகையால், நீங்கள் கணக்குத் தரத் தேவையில்லை. காரியம் முடிவடைய வேண்டும். அவ்வளவுதான்" என்று சொன்னான். இம்பாலா காரில் சவாரியும், செலவுத் தொகையில் மிச்சம்

www.t.me/tamilbooksworld

பிடித்து ஒதுக்க ஒரு வாய்ப்பும் கிடைக்கும்போது, அதைவிடச் சாரங்கனுக்கு இஷ்டமானது வேறு என்ன இருக்கமுடியும் என்பது சக்ரபாணியின் தீர்மானம். நாம் ஜோன்ஸிடம் திருடுகிறோம்; சிறிய அளவில் நம்மிடம் சாரங்கன் ஒதுக்கப் போகிறார். இக்காரியத்தை அவர் முடிக்காவிட்டால், அவர் வேலைக்கே முடிவு வந்துவிடும் என்பது சாரங்கனுக்கும் புரியும் என்பது சக்ரபாணிக்குத் தெரியும்.

போனில் பேசி முடிந்ததும், சக்ரபாணி கைக்குட்டையால் நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொண்டான். நிம்மதியோடு பெருமூச்சு விட்டான். நம் பாலாவுக்குக் கிட்டத்தட்ட ஜோன்ஸ் எஸ்டேட் வகையில் அரைக்கோடி ரூபாய்க்கு வழி செய்து விட்டோம் என்ற திருப்தியுடன் கோட்டைக் கழற்றினான். குளியல் அறையில் சென்று பத்து நிமிஷத்தில் குளித்துவிட்டு வந்தான். அடி வயிற்றில் லேசாகப் பசிப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. பசி என்பது சக்ரபாணிக்கு எப்போதோ ஒருநாள் ஏற்படும் அநுபவம். ஆகையால் அதை மகிழ்ச்சியோடு வரவேற்றான்.

சாப்பிடும் அறைக்குள் சென்றான். சமையல்கார கோபாலசாமி காத்திருந்தார். அவரிடம், "சர்மா வந்தாகி விட்டதா?" என்று கேட்டான். சர்மா அடுத்த அறையில் காத்திருப்பதாகச் சொன்னார் கோபாலசாமி.

"சரி, அவரை அழைத்து வந்து உட்காரச் சொல்லுங்கள். உணவு பரிமாறுங்கள்" என்று சொன்னான் சக்ரபாணி. மேஜையின் முன் உட்கார்ந்து கொண்டான். சில நிமிஷங்களில் சர்மா மரியாதையாக வந்து மேஜையின் எதிரே உட்கார்ந்தார். பெருத்த வயிறும், கதுப்புக் கன்னங்களுடனும் காணப்பட்டார் சர்மா. அவர் பயத்துடன் சக்ரபாணியிடம், "நமஸ்காரம்!" என்று சொன்னார். சக்ரபாணி முகத்தைப் பாராமலே தலையை அசைத்தான்.



பல தட்டுக்களில் இட்லி, தோசை, சாதம் இவற்றை எடுத்து வந்து, மேஜையில் சர்மா முன் படைத்தார் சமையல்காரர். சக்ரபாணி வீட்டில் சைவச் சாப்பாடுதான். சக்ரபாணியின் சைவத்தைக் குறித்து ஒரு நண்பன் கேட்டபோது, சக்ரபாணி சிரித்தபடி கூறிய பதில் இது: "நான் வியாபார வாழ்க்கையில்தான் மனிதர்களைச் சாப்பிட வேண்டியிருக்கிறது. ஆகையால் வீட்டுச் சமையல் அறையில் மிருகங்கள், பறவைகளின் கொலை எதற்கு என்று விட்டு விட்டேன்!"

சைவச் சாப்பாடு கூடச் சக்ரபாணியால் சாப்பிட முடியாது. எப்போதாவது ஒரு நாள்தான் சிறிது தயிர் சோறு சாப்பிடுவான். மற்றபடி நாள் பூராவும் அவன் சாப்பிடும் உணவு ஹார்லிக்ஸ்தான். சுவையில்லாத பிஸ்கோத்துக்கள், ரொட்டிதான். மற்ற உணவுகள் சாப்பிட்டால் அவனுக்கு வயிற்றுக் கடுப்பும், வயிற்று உளைச்சலும் ஏற்பட்டுவிடும். பல டாக்டர்கள் சோதனை செய்தும் இந்தக் கோளாறின் காரணத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகையால் ஹார்லிக்ஸும் பிஸ்கோத்துகளும் சிறிதளவு சாப்பிட்டே ஜீவித்து வந்தான்.

ஆனால் வறுமைப் பருவத்தில் அவன் சாப்பிட்டு ரசித்த உணவின் ஞாபகங்கள், பூர்வஜன்ம கர்மாக்கள் போல் அவன் மனத்தைத் தொடர்ந்தன. ஏழையாக இருந்தபோது, தெருக்கோடி மண்டபத்து ஓட்டலில் தின்ற காரம் தடவிய உருளைக்கிழங்கு வதக்கல், கார சட்னி தடவிய இட்லி, இவைகளின் ஞாபகம் இன்னும் அவன் நாவில் ஜலம் ஊறச் செய்தன. அவனால் அவற்றை இப்போது உண்ண முடியவில்லை. அந்த நிலையில் சக்ரபாணி பணத்துக்கு ஆள் வைத்து அவன் உண்பதைப் பார்த்து ரசித்தான். அந்த ஆள்தான் சர்மா.

தினமும் சக்ரபாணி சாப்பிடும் வேளையில் சர்மா எதிரே உட்கார்ந்து சாப்பிடுவார். சக்ரபாணிக்குப் பிடித்த உணவுகளைத்தான் சர்மா சாப்பிட வேண்டும். சர்மா

என்பவரை அவருடைய ஜீரணப் புகழ் கேட்டு விஜயவாடா விலிருந்து பிடித்து வந்தான். ஒரு தட்டு வடையையும், ஐம்பது இட்லிகளையும் சாதாரணமாகச் சாப்பிட்டு ஜீரணிப்பவர் என்று கேள்விப்பட்டதும், அவருக்கு மாதம் ஐந்நூறு ரூபாய் சம்பளம் கொடுத்து, அவரைத் தனக்குச் சாப்பாட்டுத் துணையாக ஏற்படுத்தியிருந்தான். ஏழை சர்மாவுக்கு இது ஆரம்பத்தில் சுவாரசியமாக இருந்தது. நாளடைவில் அவருக்கும் ஜீரணசக்தி குறையவே, காரச் சாப்பாட்டைப் பார்க்கவே பயமாக இருந்தது. உண்மை தெரிந்தால் நல்ல சம்பளமுள்ள வேலை போய்விடுமே என்று பயந்து, தினமும் பிடிக்காத சாப்பாட்டைச் சாப்பிட்டு வந்தார்.

கோபாலசாமி, ரத்தச் சிவப்பாகச் சரக்கு மிளகாய்ச் சட்னியைத் தடவி இட்லியை எதிரே வைத்ததும், சர்மா அவற்றை விழித்துப் பார்த்தார். அவர் குடலில் நெருப்பு எரிவதுபோல் இருந்தது. கண்களை மூடியபடி இட்லியைப் பிட்டுத் தின்றார்.

அதைக் கவனித்தபடி இருந்த சக்ரபாணி, "சர்மாவுக்குச் சட்னி போடுங்க" என்றான். சக்ரபாணியின் எதிரே ஒரு சின்ன கிளாஸில் ஹார்லிக்ஸும், இரண்டு பிஸ்கோத்தும், ஒரு ஆரஞ்சு பழமும், நான்கு ரகமான வைடமின் மாத்திரைகளும் வைக்கப்பட்டிருந்தன.

கோபாலசாமி, ஒரு கரண்டியில் கொத்தாக எடுத்துச் சட்னியைச் சர்மாவின் பிளேட்டில் போட்டார். சர்மா திணறினார்.

"என்ன, திணர்றீங்க? ரசித்துச் சாப்பிடுங்க!"

சர்மாவால் பொறுக்க முடியவில்லை. "எப்படி எஜமான், ரசித்துச் சாப்பிடுவது? தினமும் காலையும் மாலையும் இப்படி நான் மிளகாயைத் தின்றால் என் குடல் வெந்து, செத்து போய் விடுவேன்" என்றார்.

சக்ரபாணி எந்தவித உணர்ச்சியுமில்லாமல், "பரவாயில்லை, சாப்பிடுங்க. உங்களை இன்ஷ்யூர் பண்ணி



விடுகிறேன். உங்க பிள்ளை குட்டிகளுக்குக் கவலையில்லை!" என்றான்.

"இங்கே சாப்பிட்டுப் போய் வீட்டிலே படுத்தால், உடல் எல்லாம் எரியுது. எஜமான், மாறுதலுக்கு ஒரு நாளாவது லீவு கொடுங்க" என்றார்.

சக்ரபாணி அவரைப் பார்த்தான். "முடியவில்லையென்றால், விலகிக் கொள்ளுங்கள். வேறு ஆள் பார்க்கிறேன்" என்று சொன்னவுடனே சர்மா கலக்கமடைந்தார். பள்ளியில் படிக்கும் தன்னுடைய பிள்ளைகளின் நினைவு வந்தது. அவர்களின் கலாசாலை வாழ்வுக்குச் சக்ரபாணி கொடுக்கும் பணம் தேவையல்லவா?

சர்மாவின் மனத்தில் உறுதி பிறந்தது. உடனே இட்டிலியை எடுத்துச் சட்டினியில் தோய்த்து விழுங்க ஆரம்பித்தார். சக்ரபாணி, சாப்பிடும் சர்மாவை வைத்த கண் வாங்காமல் பார்த்து மகிழ்ந்தான். சர்மாவின் கண்களிலிருந்து நீர் வழிந்தபடி இருந்தது.

"ஏன் சர்மா அழறீங்க? உங்களுக்கு யார் சாப்பாடு போட்டு ஐந்நூறு ரூபாய் கொடுப்பாங்க?"

சர்மா பதறியபடி, "நான் அழலீங்க; காரம் கண்ணிலே தண்ணீர் வருகிறது. எவ்வளவோ லட்சம் பேர், போர் முனையிலே வீர மரணம் அடைகிறார்கள். ஆனால் சரித்திரத்திலே முதன் முதலாகக் காரம் சாப்பிட்டு உயிர் விடப்போகிற வீரன் நான்தாங்க!" என்று சொன்னதும் சக்ரபாணி சிரித்தான். விழுந்து விழுந்து சிரித்தான்.

சர்மாவின் வயிறு திணறியது. ஆனால் அவர் மீதி வைக்காது சாப்பிட்டு முடித்தார். சக்ரபாணி சென்றதும் சர்மா சமையல் அறை அருகிலுள்ள பாத்ரூமில் சென்று, ஆசை திரச் சாப்பிட்டதை வாந்தியெடுத்தார்.

சக்ரபாணி தன் படுக்கை அறைக்குள் நுழைந்தான். அவன் படுக்கையில் சாய்ந்து உட்கார திண்டு, தலையணை

www.t.me/tamilbooksworld

களும் படுக்கை மீது குரோமியம் பிளேட்டில் செய்த ஒரு கனமில்லாத மேஜையும் வைக்கப்பட்டிருந்தது. அந்த மேஜைமீது கணக்குப் புத்தகங்கள், ஃபைல்கள் வைக்கப்பட்டிருந்தன. சக்ரபாணி இரவு ஆபீஸைத் தொடங்கினான். அவன் படுக்கை அறையை அடுத்த ஹாலில் இரவு ஷிப்டுக்கென்று நியமிக்கப்பட்டிருந்த குமாஸ்தாக்கள் காத்திருந்தனர். அவர்கள் கேட்கும்போது டீயும் ரொட்டியும் கொடுக்க ஒரு பையன் அமர்த்தப்பட்டிருந்தான்.

சக்ரபாணிக்கு இரவு படுத்தால் தூங்க முடிவதில்லை. பத்து நிமிஷம் கண் மூடித் தூங்கினால், உடனே மூச்சு அமுத்துவது போல் இருக்கும். உடனே திக்கு முக்காடி எழுந்து விடுவான். உடல் வியர்த்திருக்கும். தூங்கினால் மூச்சை அடைக்கும் வியாதி. அது என்ன வியாதி? யாருக்கும் புரியவில்லை. இரவு பூராவும் மற்றவர்களைப் போல் தூங்க முடியவில்லையே என்று சக்ரபாணி வருத்தப்படவில்லை. மற்றவர்கள் எட்டு மணி நேரம் வேலை செய்தால், நாம் இருபத்து நாலு மணி நேரமும் விழித்திருப்போம், வேலை செய்வோம் என்று தீர்மானித்து, படுக்கையறையை ஆபீஸாக மாற்றி, மற்றவர்களையும் அடுத்த ஹாலில் காத்திருக்க வைப்பான்.

'மகா பாவி! இவன்தான் தூங்க முடியவில்லையென்றால், நம்மையும் தூங்கவிட மாட்டேன் என்கிறானே?' என்று குமாஸ்தாக்கள் மனத்துக்குள் குமுறுவதை உணராதவன் அல்ல சக்ரபாணி. ஆகையால் இரவு வேலை செய்யும் குமாஸ்தாக்களுக்கு அதிகப்படியாக நூறு ரூபாய் சம்பளம் கொடுத்து வந்தான். நூறு ரூபாய் அதிகப் பணம் என்றதும், இரவுத் தூக்கத்தை மகிழ்ச்சியோடு விற்கத் துணிந்தனர் சில குமாஸ்தாக்கள்.

சக்ரபாணி படுக்கையில் உட்கார்ந்ததும், ஒரு குமாஸ்தா அறையில் நுழைந்தான்.

''சார், உங்களைக் குருமூர்த்தி என்பவர் பார்க்க வந்திருக்கிறார்'' என்று சொன்னான்.

www.t.me/tamilbooksworld



சக்ரபாணி, ''நான் எங்கேஜ்மெண்ட் கொடுத்திருக்கிறேனா?'' என்று கேட்டான்.

''இல்லை சார். அவர் தினமும்தான் வந்து போகிறார். நாங்கள் அனுமதிக்கிறதில்லை. இன்றைக்கு எப்படியும் உங்களைப் பார்த்து விட்டுத்தான் போவேன் என்று காத்துக் கொண்டிருக்கிறார்'' என்றான்.

சக்ரபாணி, ''குருமூர்த்தி... குருமூர்த்தி...'' என்று இருமுறை தனக்குத்தானே கூறிக் கொண்டான். சலிப்புடன், ''சரி வரச் சொல்லு'' என்று சொல்லியனுப்பினான்.

அடுத்த நிமிஷம் முப்பத்தைந்து வயது மதிக்கக்கூடிய ஒருவன், ஜிப்பாவும் வேட்டியும் அணிந்தபடி உள்ளே நுழைந்தான். சக்ரபாணி தன் முன்னால் இருக்கும் கணக்குப் புத்தகங்களைப் புரட்டியபடி வந்தவனைக்கூட நிமிர்ந்து பாராமல், ''நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்? என் டயத்தை வீணாக்காமல் சட்டென்று சொல்லுங்க'' என்று சற்று அதிகக் கடுமையுடன் கூறினான்.

குருமூர்த்தியின் கண்கள் அந்த அறையின் செல்வச் செழிப்பைத் திருதிருவென்று பார்த்தபடி இருந்தன. சக்ரபாணியின் குரலில் உள்ள கடுமையைக் கேட்டதும், குருமூர்த்தி வெல வெலத்துப் போனான். அவன் கேட்க வந்தது நடக்குமோ நடக்காதோ என்று குழம்பியவன், பலவீனமான குரலில், ''சார்... சார்... என்னை உங்களுக்குத் தெரியவில்லையா?'' என்று சொல்லி நிறுத்தினான்.

சக்ரபாணி நிமிர்ந்து பார்த்தான். ''என்னைத் தெரியவில்லையா என்றால், நீ என்ன மெட்ராஸ் கவர்னரா? இல்லை நாட்டின் முதலமைச்சரா? இல்லை சினிமா ஸ்டாரா? நீ யார்?'' என்று வெடுவெடுவென்று கேட்டான்.

குருமூர்த்தி, திரும்பி விடலாமா என்றுகூட நினைத்தான். தைரியத்தை வரவழைத்தபடி, "சார், நான்தான் லால்குடி சீனிவாசன் என்பவரின் முதல் மகன் குருமூர்த்தி!" என்று சொன்னதும், சக்ரபாணியின் முகத்தில் ஓர் அதிர்ச்சி தென்பட்டது. அவன் கையிலிருந்த பேனா, அவனையும் அறியாமல் படுக்கையில் விழுந்தது!

## 6

சக்ரபாணியின் மூச்சு வேகமாக வந்து போயிற்று. அவருடைய நெற்றி வியர்த்தது. சீக்கிரமாகத் தன்னைச் சமாளித்துக் கொண்டார். "சரி, சரி. புரிகிறது. உனக்கு என்ன வேண்டும்?" என்று சொல்லிவிட்டு, குருமூர்த்தியைத் திரும்பிக் கூடப் பாராமல் மஞ்சத்தில் நீண்டு கிடக்கும் தனது இரண்டு கால்கட்டை விரல்களையும் பார்த்தார்.

"சார், சார், எங்க அம்மாதான் என்னை இங்கே அனுப்பினாங்க. இப்போ நாங்க ரொம்பக் கஷ்டமான நிலையிலே இருக்கிறோம் சார். எனக்கு இருந்த வேலையும் போய், கடனும் வந்துவிட்டது சார்!" என்று சொல்லிவிட்டு சக்ரபாணியின் முகத்தைப் பார்த்தான். அவர் முகத்தில் ஏதாவது கருணைக் குறிகள், நம்பிக்கையூட்டக்கூடிய குறிகள் இருக்குமா என்று பார்த்தான்.

சக்ரபாணியின் முகம் கல்போலத் தெரிந்தது. அவரது பார்வை, முன்னும் பின்னும் ஆடும் கால் கட்டை விரல்களின் மீது இருந்தது. 'நீயும் உன் சோகக் கதையும், என் கால் கட்டை விரலுக்குச் சமானம்!' என்று சொல்லாமல் சொல்லியது சக்ரபாணியின் பார்வை.

குருமூர்த்தி கஷ்ட நிலையில் இருந்தாலும், தினமும் யாரிடமும் கைநீட்டிக் கேட்டுப் பழகியவன் இல்லை.

"சார், எங்கப்பா எவ்வளவு நல்லவர், உங்களுக்கு அவர் எவ்வளவு உதவியிருக்கிறார் என்பது பற்றி நான்

www.t.me/tamilbooksworld



சொல்ல வேண்டாமென்று நினைக்கிறேன்" என்று சொல்லிவிட்டு நிறுத்தினான்.

சக்ரபாணியின் கைகள், தனது இடதுபுறம் கட்டிலில் உள்ள ஒரு பொத்தானை அழுத்தின. உடனே அடுத்த அறையிலிருந்து சக்ரபாணியின் சிப்பந்தி ஒருவர் அறையில் நுழைந்தார். "வாங்க மிஸ்டர் குருமூர்த்தி! உங்களுடைய இன்டர்வ்யூ முடிஞ்சு போச்சு!" என்றார் அவர்.

குருமூர்த்திக்கு மனம் பதறியது. தன்னையும் மறந்தான். "சார், சக்ரபாணி சார், எங்கப்பா உங்களுக்காக எல்லாம் கொடுத்தார். கடைசியிலே உங்களாலே மானம் இழந்து, மனம் உடைந்து, இறந்தும் போனார். இத்தனை வருஷமா நான் உங்ககிட்டே கை நீட்டி ஒன்றுமே கேட்கவில்லை. இப்போ பத்தாயிரம் ரூபாய் கொடுத்தீர்களானால் போதும் சார். நாங்க வாழ முடியும்!"

சக்ரபாணி பேசாமல் இருந்தான். ஆனால் சக்ரபாணியின் சிப்பந்தி, "வாங்க குருமூர்த்தி!" என்று அவன் தோளின் மீது கை வைத்தான்.

குருமூர்த்தி, "கோடிக் கணக்கிலே வைத்துக் கொண்டிருக்கிறவருக்கு ஒரு பத்தாயிரம் ரூபாய் பெரிசா சார்? அதுவும் திருப்பிக் கொடுத்து விடுவேன். கடனாகக் கேட்கிறேன் பத்தாயிரம், கொடுங்க. முடியவில்லையானால் ஐயாயிரம் கொடுங்க" என்று கூச்சல் போடத் தொடங்கினான்.

சிப்பந்தி, குருமூர்த்தியை நெட்டித் தள்ளினான், அறையைவிட்டு.

"எங்கப்பாவைத்தான் அழிச்சிட்டீங்க? என் குடும்பம் அழிந்து போகாமல் காப்பாற்றுங்கள் சார்! அதுவாவது ஒரு பிராயச்சித்தமா இருக்கும் சார். எங்க குடும்பம் அழியாமே காப்பாற்றுங்க சார். ஒரு நாலாயிரம் ரூபா கொடுங்க சார். இல்லை, மூவாயிரமாவது கொடுங்க சார். அன்றைக்கு எங்கப்பாவை முதலிலே சந்திச்சப்போ

ரயில் வண்டியிலே, நீங்க இருந்த நிலையிலே நான் இன்றைக்கு இருக்கிறேன் சார். மறந்துடாதீங்க'' என்று கூச்சலிட்டான்.

சக்ரபாணியின் கையாள், குருமூர்த்தியைத் தள்ளிய படி இருந்தான். அப்போதுதான் சக்ரபாணியின் பின்புறப் படுக்கை அறையின் கதவைத் திறந்தபடி பாலா நுழைந்தாள். அவள் பார்வையில் குருமூர்த்தி அலறுவதும், அவன் வெளியே தள்ளப்படுவதும் தெரிந்தது.

குருமூர்த்தி திமிறிக்கொண்டு வெறியோடு, ''டேய் சக்ரபாணி! உன் மனைவியின் தலைமகள் பிரசவத்தின் போது, எங்கம்மா மாங்கல்யத்தை விற்று, பிரசவம் பார்த்தாங்கங்கிறதைக்கூட மறந்துட்டு, என்னை நாயை விரட்டுகிற மாதிரி விரட்டுகிறாயே, நீ நன்றாக இருப் பாயா?'' என்று கூச்சலிட்டான்.

இதைப் பார்த்த பாலாவின் வயிற்றில் வேதனை யெடுத்தது. அடுத்த விநாடி குருமூர்த்தியின் குரல் ஓய்ந்தது. சக்ரபாணி பெருமூச்சுவிட்டான். பாலா குழப் பத்துடன், ''அப்பா'' என்று அழைத்தபடி அறையில் நுழைந்தாள்.

பாலா நுழைந்ததைப் பார்த்ததும் சக்ரபாணி திடுக் கிட்டான்.

சக்ரபாணி படபடப்புடன், ''நீ எப்பம்மா உள்ளே வந்தே?'' என்று கேட்டான்.

''இப்பா ஒருத்தரை வெளியே தள்ளிட்டிருந்தாங் களே, அப்போதான் வந்தேன். அவர் யாருப்பா? அவர் உதவி கேட்டு வந்தாராப்பா? அவரை ஏனப்பா இப்படி இரக்கமில்லாமல் நடத்தணும்?'' என்று கேள்விகளை அடுக்கிக் கொண்டே சென்றாள்.

சக்ரபாணியின் மூச்சு முட்டியது. ''குழந்தே, அதெல் லாம் உனக்குப் புரியாது. இது உன் பார்வையிலே நடந் திருக்கவே கூடாது. அந்த செக்ரடரி முட்டாள். இந்த



மாதிரி பிச்சைக்காரப் பசங்களை உள்ளே அனுமதிக்கா தேன்னு சொன்னேன், கொஞ்சம்கூட அவனுக்குத் தெரியலே'' என்று சலித்துக் கொண்டான்.

''அவரைப் பார்த்தால் பிச்சைக்காரனாத் தெரி யலியே அப்பா; நல்லவராத் தெரியுது. பாவம், ரொம்பக் கஷ்டப்படறவர் மாதிரி இருக்கே. நாலாயிரம் ரூபாய் தானே கேட்டார்? கொடுத்திருக்கலாமே! எவ்வளவோ பணம் வீணாகச் செலவழியுதேப்பா!''

சக்ரபாணியின் பொருளாதாரத்தைப் பற்றிப் பாலா பேசியதும், சக்ரபாணிக்குக் குழப்பம் ஏற்பட்டது. அதைச் சமாளித்துக் கொண்டு, ''பாலா ஒரு பணக்காரன்னு இருந்தா அவனிடம் பிடுங்கித் தின்ன ஆயிரம் பேர் வருவாங்க. எல்லாருக்கும் கொடுக்க முடியுமா?'' என்றான்.

''அம்மாவின் பிரசவத்துக்கு அவரது தாய் மாங்கல் யத்தை விற்றுப் பிரசவம் பார்த்தாங்கன்னு சொல்றாரே, அவரை எப்படியப்பா பிச்சைக்காரர்னு சொல்றீங்க? நாம அவ்வளவு ஏழையாகவா இருந்தோம் ஒரு காலத்திலே? எனக்கு முன்னாலே அமுதான்னு ஒரு குழந்தை இருந்து, இறந்து போச்சுன்னு சொல்வீங் களே, அவள் பிரசவத்தைப் பற்றித் தானேப்பா அவர் சொன்னார்.

இந்தப் பேச்சைக் கேட்கவே சக்ரபாணிக்குப் பிடிக்க வில்லை. இதுவரை ஓர் இரும்புத் திரைக்குப் பின்னால், சில குடும்ப விஷயங்களைச் சென்ஸார் செய்து மகளை வளர்த்திருந்தார். அவளுக்குப் பூர்வ விருத்தாந்தங் களைக் கூறுவதா? ஆத்திரத்துடன் துடித்தார். தன்னையும் மறந்தார்.

''பாலா, என்னைக் கேள்விகள் கேட்காதே! தயவு செய்து போய்ப் படுத்துக் கொள்'' என்று கூச்ச லிட்டார்.

தந்தை கோபமாகக் கூச்சலிட்டதைப் பாலா இதுவரை பார்த்ததே இல்லை. அது அவளுக்கு முதல் முறையாகத் தந்தையிடம் பயத்தையும், சிறிது கிலேசத்தையும் கொடுத்தன. உடனே விர்ரென்று எழுந்து, தன் படுக்கை அறைக்குப் போய்விட்டாள்.

பாலா, படுக்கையில் படுத்தபடி சில விநாடிகள் சிந்தித்தபடி இருந்தாள். பிறகு விளக்கை அணைத்து விட்டு, குளிர்சாதனப் பெட்டியின் ஸ்விட்ச்சைப் போட்டு விட்டுத் தூங்க ஆரம்பித்தாள். மனச்சோர்வினால் உடனே தூங்க ஆரம்பித்தாள். ஆனால் அவளுக்கு அமைதியான தூக்கம் வரவில்லை. கோவையற்ற கனவுகள் தோன்றின.

புத்தகக் கடை வாசலில் பார்த்த பெரியவரின் முகம் அவளை நோக்கி வந்தது. அந்த முகம் பாலாவைப் பார்த்து ஏளனமாகச் சிரிக்கிறது. உடனே தொலைவிலிருந்து அவளது தந்தை சக்ரபாணியின் முகம், கிழவரின் முகத்தைத் துரத்துவது போன்ற ஒரு காட்சி தொடர்கிறது. அடுத்தபடியாக, பக்கத்து அறையில் அவள் வைத்திருந்த பாவாடை சட்டையணிந்த பொம்மை சிரித்தபடி வருகிறது.

'பாலா! நீ என் மாதிரி இருந்தவள். இப்போ எவ்வளவு பெரிசா வளர்ந்துட்டே. நீ ரொம்ப மாறிப் போயிட்டே பாலா!' என்று பொம்மை சொல்கிறது. அந்தப் பொம்மையின் பின்புறமிருந்து மவுத் ஆர்கன் வாசிக்கும் சத்தம் கேட்கிறது. அரை நிஜார் அணிந்த, அரைக் கை சட்டை அணிந்த ஒரு பாலகன் தோன்றுகிறான். அவன் தலைமுடி முன் நெற்றியில் படிந்திருக்கிறது. அவன் மவுத் ஆர்கன் வாசித்தபடி, பாலாவின் பொம்மையை நெருங்குகிறான். அந்தப் பொம்மை வெட்கப்படுகிறது. அந்த ஒன்பது வயதுச் சிறுவன், பாலாவின் பொம்மையை முத்தமிடுகிறான். பொம்மை

www.t.me/tamilbooksworld



வெட்கத்துடன் தன் கைகளால் முகத்தைப் பொத்திக் கொள்கிறது.

பாலா உடனே விழித்துக் கொண்டாள். குளிர் சாதனம் வேலை செய்யும் அந்த அறையில் அவள் முகம் வியர்த்திருந்தது. அவளையே யாரோ முத்தமிட்டது போன்ற ஓர் உணர்வு அவளுக்கு ஏற்பட்டது. தன் உதடுகளை விரலால் துடைத்துக் கொண்டாள். எழுந்து அடுத்த அறைக்குச் சென்று விளக்கைப் போட்டாள். அங்கு பொம்மை அதே இடத்தில் இருந்தது.

இத்தனை வருடங்கள் இல்லாது இப்போது திடீரென்று அந்தப் பொம்மையை மையமாக வைத்துக் கனவு ஏன் ஏற்பட்டது என்று சிந்தித்தாள். மனத்தின் பழைய நினைவுகள் அடித்தளத்திலிருந்து மேலுக்கு வருகின்றனவா? அப்படியென்றால், கனவில் அந்த மவுத் ஆர்கன் வாசித்த சிறுவன் யார்? ஞாபகங்களைக் குடைந்து கடைந்து பார்த்தாள். ஒன்றும் தெளிவாகத் தோன்றவில்லை.

மறுபடியும் விளக்கை அணைத்துவிட்டு வந்து படுக்கையில் படுத்தாள், அதிருப்தியோடு தூங்கினாள்.

விடிந்து எழுந்ததும், ஒரு சோர்வுதான் இருந்தது. தூக்கத்தில் பல கனவுகளில், பல அநுபவங்களில் ஈடுபட்ட சோர்வு! எந்தக் கனவைப் பற்றியும் தெளிவாக ஞாபகம் இல்லை. ஞாபகம் இல்லாவிட்டாலும், கனவுகள் கண்டபோது அவள் மனம் தீவிரமாக உழன்றிருக்கிறது. அதன் விளைவாகத்தான் இந்தச் சோர்வும் அதிருப்தியும் என்று புரிந்து கொண்டாள். இது நாள்வரை அவளுக்கு அதிருப்தியே தெரியாது. ஒருவேளை சுகமாக உடம்பு அலுங்காமல் வாழ்வதால்தான் இந்தக் கனவுகள் தோன்றுகின்றனவோ?

உடல் உழைத்தால் ஒருவேளை அமைதியும் திருப்தியும் ஏற்படலாம் என்று எழுந்தவுடன் பல் விளக்கிவிட்டு, சிநேகிதிக்குப் போன் செய்துவிட்டு, வீட்டின் கோடியி

லுள்ள பாட்மின்டன் கோர்ட்டுக்குச் சென்றாள். அங்கே சிநேகிதியுடன் உடல் வியர்க்கும் வரை பந்து ஆடிவிட்டு நீச்சல் குளத்தில் வந்து நீந்திக் குளித்தாள். ஆடை மாற்றி வெளியே வரும்போதே பசி ஏற்பட்டது.

சாப்பிடும் அறைக்குச் சென்றாள். கோபாலசாமி "பலகாரம் தயார்! உணவும் தயார்!" என்றார்.

இரண்டையும் கலந்து வயிறு நிறையும் வரை தின்றாள்.

சாப்பிட்டுவிட்டுத் தாயின் அறைப் பக்கம் சென்றாள். அங்கு ஜெர்மன் டாக்டர் உட்கார்ந்து, தாயிடம் கேள்விகள் கேட்டுக் கொண்டு, அதை ஒரு நோட்டுப் புத்தகத்தில் குறித்துக் கொண்டிருந்தார். தாய், ஒரு சோபாவில் சாய்ந்தபடி பாதி கண்கள் மூடிய நிலையில் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள். ஜெர்மன் டாக்டர், ஏதோ ஆங்கிலத்தில் கேட்டார். தாயும் ஆங்கிலத்தில் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அங்கு செல்லவே பாலாவுக்கு வேதனையாக இருந்தது. தன் அறைக்குச் சென்று படுத்தாள். நிறைய உணவு தின்றதன் காரணமாக, படுத்தவுடனேயே தூக்கம் கண்களைச் சுழற்றியது. நிம்மதியாகத் தூங்கினாள்.

கண் விழித்துப் பார்த்தபோது, மணி இரண்டாகி யிருந்தது. இவ்வளவு நேரம் தூங்கிவிட்டோமே என்று ஆச்சரியப்பட்டாள். வாஷ் பேஸினில் வாய் முகம் கழுவி விட்டுத் தலையை லேசாகச் சீப்பினால் வாரிக் கொண் டாள்.

டிரெஸ்ஸிங் ரூமுக்குள் நுழைந்தாள். பீரோக்கள் நிறையத் துணிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. டெரிலின் புடைவைகள், பனாரஸ் புடைவைகள், காஞ்சி புரம் பட்டுக்கள், நிறைய ஜரிகை போட்டவை, குறைந்த ஜரிகை போட்டவை. இப்படிப் பலரகமான புடைவைகள்



இருந்தன. முடிவில் கறுப்புக் கலர் புடைவையில் சிவப்புப் பொட்டுப் போட்ட ஆடம்பரமில்லாத புடைவை ஒன்றைத் தேர்ந்தெடுத்தாள். அது நூல் புடைவை. அதையும் ஒரு சாதாரணக் கறுப்பு ரவிக்கையையும் அணிந்து கொண்டாள். கை வளையல்களை எடுத்துப் பெட்டியில் வைத்தாள். கழுத்தில் தொங்கிய வைர நெக்லஸைக் கழற்றி வைத்தாள். பிறகு கண்ணாடியில் அழகு பார்த்தாள். பாலாவுக்கே அவளுடைய மாறுபட்ட தோற்றம் ஆச்சரியமாக இருந்தது. நீண்ட உறுதியான கழுத்தில் மின்னியது ஒற்றைவடச் சங்கிலி. அந்த ஓர் ஆபரணமே போதும் என்று நினைத்தாள். கைகளில் ஒரு ஜதைக் கண்ணாடி வளையல்களை அணிந்து கொண் டாள். ஏழைப் பெண் போன்ற தோற்றத்தைப் பார்த்துச் சிரித்து மகிழ்ந்தாள். இப்படியே வெளியில் போய் வரவேண்டும் என்று நினைத்தாள். மணி நான்கு ஆனதும் புறப்பட்டாள்.

வீட்டின் வெளிப்புறம் வந்ததும், வழக்கம்போல் கார்கள் காத்து நின்றன. "இன்று நடந்து போகப் போகிறேன்" என்று நடக்க ஆரம்பித்தாள்.

டிரைவர்களில் முதுமையானவன், "அம்மா, அந்தச் சின்னக் காரையாவது எடுத்துப் போங்கம்மா" என்றான்.

"வேண்டாம் இன்று நடைதான்!" என்று கூறி வேகமாக நடந்தாள்.

டிரைவர்கள் திகைத்து நின்றனர். "சின்னம்மாவாலே வம்புதான் வரப்போகுது!" என்று கவலை அடைந்தனர்.

இரண்டு பர்லாங்கு நடந்ததும், பாலாவுக்குக் கால் சதைகளில் சிறிது வலி ஏற்பட்டது. நடைக்குப் பழகாத கால்கள் நடக்க மறுக்கின்றன என்று நினைத்துக் கொண்டு மேலும் நடந்தாள். ஒன்றேகால் மைல் நடந்ததும், ஒரு பிரபல காப்பி ஓட்டலில் நுழைந்து, தயிர் வடையும் காப்பி யும் சாப்பிட்டாள்.

பிறகு எதிரேயிருந்த புத்தகக் கடைக்குள் சென்றாள். அது பாடப் புத்தகங்கள் விற்கும் கடை. அவள் தேடிய புத்தகங்கள் எதுவும் கிடைக்கவில்லை. ஏதாவது வாங்க வேண்டுமே என்று எட்வின் ஆர்நால்ட் எழுதிய 'ஆசியாவின் ஒளி' என்ற புத்த பகவான் சரித்திரத்தை வாங்கிக் கொண்டாள்.

மணி ஐந்தரைதான் ஆகியது. எதிரேயிருந்த சிறிய பூங்காவில் போய் உட்கார்ந்தாள். புத்தபகவானின் பிறப்பு வளர்ப்பைப் பற்றி ஆர்நால்ட் எழுதிய ஆங்கில வரிகளைப் படித்தாள். தத்துவப் புத்தகங்கள் அதிகம் படித்தவள் அல்ல பாலா. கவிதைப் புத்தகங்களும் அவளுக்குப் பிடிக்காது. இன்று என்னவோ ஆர்நால்ட் எழுதிய வரிகளின் பொருள் அவள் மனத்தைப் பற்றி இழுந்தது.

இன்பத்துக்குத் தடைகள், துக்கம், இழப்பு. இவை ஏற்பட்டால்தானே மனது ஆழ்ந்து சிந்திக்க வாய்ப்பு ஏற்படுகிறது? களிப்பு என்ற சறுக்குப் பாறையில் அவள் இதுவரை சறுக்கியிருக்கிறாள். வயிறு வலிக்கச் சிரித்திருக்கிறாள். ஆனால் தலை நோக அவள் சிந்தித்ததில்லை.

பூங்காவில் மர பெஞ்சியில் அமர்ந்து புத்தகத்தைப் படித்தவள், புத்தகத்தை மூடிவிட்டுத் தலையை நிமிர்த்தினாள். தொலைவில் உள்ள ஒரு மர நிழலில் ஒரு கிழவர் நிற்பதைக் கவனித்தாள்.

நெற்றியில் கோபி சந்தனம், நரைத்த முடி. புத்தகக் கடையில் பார்த்த கிழவரேதான். பாலாவுக்கு அச்சம் ஏற்பட்டது. எழுந்து நடக்க ஆரம்பித்தாள்.

கடைத் தெருவில் நடந்து வந்தாள். அவள் தந்தைக்குச் சொந்தமான சிற்றுண்டி ரெஸ்ட்டாரன்ட்டுகள், துணிக் கடைகள் எல்லாம் பலகைகளில் அவளது பெயரைத் தாங்கி நின்றன. அவற்றைக் கடந்ததும், அவள் தந்தைக்குச் சொந்தமான திரைப்படம் காட்டும் தியேட்டர் ஒன்று, அவளை வழி மறித்துக் குறுக்கிட்டது. க்யூ வரிசையில் பெரிய கூட்டம் நின்று, டிக்கெட்டுகளுக்குக்

www.t.me/tamilbooksworld



காத்திருந்தது. தியேட்டரின் உச்சியை அண்ணாந்து பார்த்தாள். அங்கு ரத்தச் சிவப்பு நியான்ஸன் எழுத்துக்களில் 'சக்ர-பாலா' என்ற தியேட்டரின் பெயர் மாறி மாறி அணைந்து எரிந்து கொண்டிருந்தது.

கூட்டத்தோடு கூட்டமாக, பாலாவும் அவளுக்குச் சொந்தமான தியேட்டருக்குள் நுழைந்தாள். உயர்ந்த வகுப்பு டிக்கெட் கொடுக்கப்படும் ஜன்னல் வழியே பணம் கொடுத்து டிக்கெட் வாங்கிக் கொண்டு, மாடியில் உள்ள மேல் வகுப்பில் போய் அமர்ந்தாள். தியேட்டர் சிப்பந்திகள் அவளை அடையாளம் கண்டு கொள்ளவில்லை.

படத்தில் காதல் காட்சிகள் வந்து போயின. பிறகு ஹாஸ்யக் காட்சிகள் வந்து போயின. தியேட்டரிலே சிரிப்புச் சத்தமும், கைதட்டலும் பயங்கரமாக ஒலித்தன. ஆனால் பாலாவின் மனத்தை அவை கவரவில்லை. ஆனால் ஒரு காட்சி அவளை மிகவும் கவர்ந்தது. சமூகக் கதையின் நடுவே, கதாநாயகன், 'பட்டினத்தார்' நாடகம் நடத்துகிறான். அந்த நாடகத்தில் கதாநாயகனே பட்டினத்தாராக நடிக்கிறான். மகன் வெளிநாடு சென்று சரக்கு அனுப்புகிறான். தந்தை பெட்டியைத் திறந்ததும், அதில் வரட்டிகளும் ஊசியும் இருக்கின்றன. மகன் எழுதிய ஒரு சிறு கடிதமும் இருக்கிறது. 'காதற்ற ஊசியும் வாராது காண் கடை வழிக்கே' என்ற வாக்கியத்தைப் பாத்திரம் படிக்கும்போது, பாலாவின் இதயம் சிலிர்த்தது.

இந்தக் காட்சியை ஏன் பார்க்க வந்தோம் என்று வருத்தப்பட்டாள். இதர காட்சிகளில் பாலாவின் மனம் செல்லவே இல்லை.

படம் முடிந்து, வெளியே வந்ததும், பாலாவின் பள்ளிச் சிநேகிதிகள் சிலர் வந்திருப்பதை அறிந்தாள். பாலா படம் பார்க்கக் காரில் வந்திருப்பாள் என்று அவர்கள் நினைத்தனர். அவள் நடந்து தியேட்டருக்கு

வெளியே செல்லும்போதுதான், அவர்களுக்கு உண்மை தெரிந்தது. ஒரு சிநேகிதி, ''பாலா, கார் கொண்டு வரலியா?'' என்று கேட்டாள்.

''இல்லை, இன்று நடந்து செல்லலாம் என்று இருக்கிறேன்'' என்று சொன்னாள்.

இன்னொரு சிநேகிதி, ''பாலா, நான் வேணும்னா உன்னை வீட்டிலே டிராப் செய்துடறேன்'' என்றாள்.

பாலா, ''நோ-தாங்க்ஸ்! இன்றைக்கு நடக்க ஆசையாயிருக்கிறது. நான் நடந்தே போறேன்!'' என்று சொல்லிவிட்டு நடக்க ஆரம்பித்தாள்.

சிநேகிதிகள் திகைப்போடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''ராத்திரி வேளையிலே தனியா நடந்து போறாளாம்!''

''சுத்தக் கிறுக்குடி! அப்பா மாதிரிதானே பொண்ணும் இருப்பா!'' என்று பேசிக்கொண்டனர். இரவுக் காற்று ஜில்லென்று வீச, பாலா தெரு வீதியிலே வேகமாக நடந்தபடி வந்தாள். பெரிய தெருக்களைக் கடந்து, ஜன சந்தடியில்லாத சிறு தெருக்களைக் கடக்க ஆரம்பித்தாள்.

பின்னால் யாரோ வரும் சத்தம் கேட்டு நின்று திரும்பிப் பார்த்தாள். பின்புறம் சற்றுத் தூரத்தில் நரைத்த முடியுள்ள கிழவர் வந்து கொண்டிருந்தார். பாலா வேகமாக நடந்தாள். கிழவரும் வேகமாகப் பின் தொடர்ந்தார். தெரு விளக்குகளின் ஒளிகூட இல்லாத பகுதி வந்ததும், பாலாவுக்கு உண்மையிலேயே பயம் ஏற்பட்டது. பாலா ஓட ஆரம்பித்தாள். பின்னால் நரை முடி மனிதரும் ஓடி வருவதைப் பார்த்தாள். பாலா இன்னும் வேகமாக ஓடினாள்.

ஒரு சந்துக்குள் திரும்பி ஓடினாள். எதிரே நேராக ஒரு கரிய உருவம் தோன்றி, அவளைத் தடுத்தது. ஓடி வந்த வேகத்தில் தடுக்கப்பட்டதால், அவள் தெருவில்

www.t.me/tamilbooksworld



விழுந்தாள். அவள் மீது அந்த உருவம் விழுந்தது. கொள்ளிக் கண்களும், கிருதா மீசையும் உள்ள அந்த உருவம், ''ஹி...ஹி...'' என்று விகாரமாகச் சிரித்தது.

அவன் மூச்சில் மதுவின் துர்நாற்றம் வீசியது. அவன் முகமும் சிரிப்பும், அவன் எதற்கும் துணிந்தவன் என்று காட்டின.

பாலா எழுந்தாள். அவள் பின்புறம் ஒருவன் சிரிப்பதைப் பார்த்தாள். ஓட அடி எடுத்து வைத்தாள். அந்த முரடன் கை நீட்டி இழுத்தான். ''எங்கே ஓடறே மைனா?'' என்றான். அடுத்த விநாடி அவளை இழுத்து அணைத்தான்.

## 7

வாழ்க்கையில் அவள் கனவிலும் நினைத்துப்பாராத ஒருவித ஆபத்து ஒரு விநாடிக்குள் ஏற்படவும், பாலாவுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. இருள் கவிந்த சந்து, மது நெடி வீசும் முகம்! பின்னால் நின்று சிரித்தவன் முகம் மேலும் பயங்கரமாக இருந்தது. இருவரும் சிரிக்கும் விதத்திலிருந்து அவர்கள் இருவரும் ஒரே நோக்கத்தில் இருப்பவர்கள் என்பது தெளிவாகத் தெரிந்தது. அவளுக்கு முற்றிலும் பழக்கமில்லாத இடம், எப்படித் தப்பி, எங்கு ஓடுவது என்று புரியாமல் தவித்தாள்.

மெள்ள அடிமேல் அடிவைத்துப் பின்னால் நகர்ந்தாள். முரடர்கள் இருவரும் சிரித்தபடி நிதானமாக நெருங்கினார்கள். அவள் அவர்கள் பிடியிலிருந்து தப்பவே முடியாது. அவர்கள் செய்ய நினைக்கும் தீச்செயலை அங்கு யாரும் வந்து தடுக்கப் போவதில்லை என்ற உறுதியில் உருவானது அவர்களுடைய நிதானம். ஒருவன், ''அண்ணே! சரியான உருப்படி! முதல்லே நீ; அப்புறம் நான்!'' என்றான்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட பாலாவுக்கு அடி வயிற்றிலிருந்து குமட்டல் எடுத்தது. இடது புறமாக நகர்ந்தாள். ஒருவன் பாய்ந்து அவளைப் பிடித்தான். உடனே அவள், தன் காலால் அவனை எட்டி உதைத்தாள். தாறுமாறாக விழுந்த காரணத்தாலோ என்னவோ, அவன் "ஐயோ!" என்று ஓலமிட்டான். அதற்குள் மற்றவன் இரண்டு கைகளாலும் அவளது தோளைப் பிடித்தான். பாலா அவன் பிடியிலிருந்து விடுவித்துக்கொள்ளத் திமிறினாள். அவளது வாயல் ரவிக்கை கிழிந்து உடல் தெரிந்தது. முரடன் கண்களில், அவன் மனத்தில் குமுறிய வெறி ஒளி வீசியது. "அல்வா மாதிரி இருக்கே! உன்னை விட மாட்டேன்!" என்றான்.

பாலா அவன் முகத்தில் குத்தினாள். அவன் பிடி சற்றுத் தளர்ந்தது. அதற்குள் விழுந்திருந்தவன் ஓடி வந்து பாலாவின் கால்கலைப் பற்றிக் கொண்டான்.

அவனது முரட்டுப் பிடியின் காரணமாக, இடுப்புச் சேலை நழுவுவதைப் பாலா உணர்ந்தாள். இன்னும் சில விநாடிகளில் தன் மானமே போய்விடப் போகிறது என்ற பீதி அவளைத் தாக்கியது. "ஐயோ, அப்பா" என்று தன்னையும் அறியாமல் கூச்சல் போட்டாள். அதே சமயத்தில் அவன் கைகள், தன் கால்களைவிட்டு நகருவதை உணர்ந்தாள்.

திரும்பிப் பார்த்தபோது, புத்தகக் கடையில் சந்தித்த அந்தக் கிழவர், பிறகு பூங்காவில் பார்த்த அதே கிழவர்— முரடனை எட்டி உதைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். அவர் தன்னைப் பின் தொடர்வதைப் பார்த்துப் பயந்து போயல்லவா, இந்தச் சந்தில் ஓடி வந்து இப்படி முரடர்களிடத்தில் மாட்டிக் கொண்டாள்!

"டேய் கிழவா! உனக்குப் பாடை கட்டறேன் பாரு!", என்று சொல்லியபடி ஒரு முரடன் கிழவர் மீது பாய்ந்தான். மூச்சு வாங்க. முதுமை அவரது சதைகளைத் தளரச்

www.t.me/tamilbooksworld



செய்திருந்த போதிலும், அவர் ஒரு வெறியோடு அந்த முரடனிடம் போராடினார்.

அவரும் முரடனும் தரையில் உருண்டனர். "குழந்தை, நீ ஓடிப் போயிடு!" என்று பாலாவை எச்சரித்தார் கிழவர்.

பாலா ஓட ஆரம்பித்தாள். மற்றவன் பாய்ந்து தடுத்தான். பாலா அவன் முகத்தைப் பிராண்டினாள். அவன் விடாது அவளைக் கட்டிப் பிடித்தான். "இம்மா தூரம் இடக்கா பண்றே? உன்னைப் பிழிஞ்சு எடுத்திடறேன் பாரு!" என்று சொல்லியபடி அவளது காலைப் பற்றினான். தன் கற்பைக் காப்பாற்றிக் கொள்ளத் தரையில் குப்புற விழுந்தாள் பாலா.

அடுத்த விநாடி 'பட்பட் தட்தட்' என்ற சத்தத்துடன் ஒரு ஸ்கூட்டர் அந்தச் சந்தில் நுழைந்து வந்தது. அதிலிருந்து ஒருவன் இறங்கி ஓடி வந்தான். பாலாவின் மீது விழுந்த மிருகத்தைப் பற்றி இழுத்தான். முரடன் அவன் மீது பாய்ந்தான். கிழவரைத் தள்ளிவிட்டு மற்றவனும் ஸ்கூட்டர் ஓட்டி வந்த ஆசாமி மீது பாய்ந்தான்.

பாலா ஓடிப்போய்க் கிழவரைப் பார்த்தாள். கிழவரின் முகமெல்லாம் ரத்தக்காயமாக இருந்தது. "நல்ல வேளை! உனக்கு ஒரு ஆபத்தும் இல்லையே? சின்னப் பெண்ணு நீ. இந்தச் சந்து வழியாப் போகாதே என்று சொல்லத்தான் ஓடி வந்தேன். ஆனால் நீ என்னைப் பார்த்துப் பயந்து ஓடிட்டே!" என்று மூச்சு வாங்க, அந்தப் பெரியவர் சொன்னார்.

பாலா அவரைத் தூக்கி விட்டாள்.

ஸ்கூட்டரில் அந்த இளைஞன், பாய்ந்து பாய்ந்து முரடர்களை அடித்துக் கொண்டிருந்தான். அவன் கைகள் வெகு லாகவமாக மாறி மாறி இருவரையும் தாக்கின. முரடர்களில் ஒருவன், "அண்ணே! இளவட்டம் கசரத்

பழகியிருக்கான் போலிருக்கு! என்ன போடு போட றான்!" என்று சொல்லிவிட்டு ஓடி விட்டான்.

சிறியவன் ஓடியதைப் பார்த்த பெரியவனும் ஓடினான்.

பெரியவர் இளைஞனை நெருங்கினார். "தம்பி! நீ நூறாண்டு நல்லா இருக்கணும்!" என்று வாழ்த்தினார். பாலாவும் நன்றியோடு இளைஞனைப் பார்த்தாள். இளைஞன் கிழவர் பேசியதைக் கேட்டதும், ஆச்சரியம் அடைந்தான், "என்ன! தாத்தாவா? இங்கே எப்படித் தாத்தா வந்தீங்க?" என்று கேட்டான்.

கிழவரும் ஸ்கூட்டர் வெளிச்சத்தில் இளைஞனைக் கூர்ந்து கவனித்தார். "யாரு? நம்ம மோகனா?" என்று கேட்டார்.

"ஆமா தாத்தா! நான் மோகன்தான்!" என்று அவன் கூறினான்.

கிழவர் உடனே சிரித்தார். "உலகம் எவ்வளவு சின்னது பாத்தியா? நாம எவ்வளவு பிரிஞ்சு இருந்தாலும், ஆபத்து சமயத்திலே பந்துக்களா சந்திக்கிறோம்! நம்ம பந்துக்கள்தான் நமக்கு உதவறாங்க. ஆண்டவன்தான், உன்னை இந்தச் சமயத்திலே இங்கே கொண்டு வந்தார். மோகன்! நீ இங்கே எப்படி வந்தே?" என்று கேட்டார்.

அதற்கு மோகன், "தாத்தா! ஒரு சிநேகிதனோடு சினிமாவுக்குப் போயிட்டு, அவனை ஸ்கூட்டர்லே கொண்டு போய் அவனுடைய வீட்டிலே விட்டுட்டுத் திரும்பி வர்றேன்" என்று கூறினான்.

தாத்தாவும் பேரனும் பேசிக் கொண்டிருந்தபோது, பாலாவின் மனம் வேகமாக வேலை செய்தது. இம்மாதிரி, தெரு மூலையில் அவள் மாட்டிக் கொண்ட செய்தி போலீஸுக்குத் தெரிந்தால், மறுநாள் தினசரிகளில் அவள் பெயர், அவள் தந்தையின் பெயர் இரண்டும் சேர்ந்து வெளிவருமே என்ற பயம் அவளைத் தாக்கியது. அவள்



தந்தை அடிக்கடி சொல்லும் எச்சரிக்கை அது. "ஸ்தாபனங்களுக்குத்தான் விளம்பரம் தேவை; ஸ்தாபனங்களின் சொந்தக்காரர்கள் மறைவிலேயே இருக்கணும்."

பாலா அதையெல்லாம் நினைத்துப் பார்த்தாள். இன்றிரவு நடந்த நிகழ்ச்சி தந்தைக்கும் தெரியக் கூடாது, உலகத்துக்கும் தெரியக்கூடாது என்ற எண்ணம் தோன்றியது. எதிர் காலத்தில், தந்தைக்குத் தெரியாத பல நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டியிருக்கும் என்று விதி நினைத்திருப்பதைப் பாலா அப்போது புரிந்து கொள்ளவில்லை.

ஸ்கூட்டரில் வந்த இளைஞனுக்கு இருளில் நின்ற பாலாவின் முகம் தெளிவாகத் தெரியவில்லை. அவன் தாத்தாவிடம், "இந்தப் பெண் யார் தாத்தா?" என்று கேட்டான்.

இந்தக் கேள்வியை இளைஞன் கேட்டதும், பாலாவுக்குக் கவலை ஏற்பட்டது. புத்தகசாலை, பூங்கா, பிறகு தியேட்டர் வெளிப்புறம் வரை பாலாவைத் தொடர்ந்த கிழவருக்கு அவள் யார், அவள் தந்தை யார் என்று தெரியாமல் இருக்க முடியாது. கிழவர் சொல்லிவிடுவாரோ என்று பயந்தாள்.

கிழவர் பாலாவைப் பார்த்தார். பாலா தரையைப் பார்த்தாள். கிழவர் கனைத்தபடி, "மோகன் எனக்கே தெரியாதுப்பா. நானும் உன்மாதிரிதான் எதேச்சையாக வந்தேன். அந்த முரடர்கள் இந்தப் பெண்ணோடு வம்பு செய்திட்டிருந்தாங்க. என்னாலே முடிந்த வரையிலே தடுத்தேன்" என்று சொல்லிவிட்டுப் பாலாவைப் பார்த்தார்.

"சுத்த அக்கிரமம்! உடனே போலீஸ் ஸ்டேஷன்லே ரிப்போர்ட் பண்ணணும் தாத்தா!" என்றான் மோகன்.

பாலா எது வேண்டாம் என்று பயந்தாளோ அதையே அல்லவா மோகன் சொல்கிறான்! பாலா படபடப்புடன்,

"போலீஸ்லே எதுக்குச் சொல்லணும்?" என்றாள். உடனே கிழவர், "அவள் சொல்றதும் சரி, நீ ஆபத்திலிருந்து காப்பாத்திட்டே. இனி மேல் போலீஸ்லே போய்ச் சொன்னா, அந்தப் பெண்ணுக்குத்தான் சங்கடம். அவள் இந்தச் சந்து வழியா ராத்திரியிலே வந்தது, ஊருக்கே தெரிஞ்சு போகும்" என்றார். பாலா கிழவரை நன்றியோடு பார்த்தாள்.

"இந்த மாதிரி ஏழைப் பெண்கள், ராத்திரியிலே கௌரவமா நடமாட முடியாதபடி ஊர் இருக்கிறது சரியா?" என்று மோகன் கேட்டான். பாலாவின் முகத்தைக்கூடப் பாராமல், சட்டென்று அவளை ஓர் ஏழைப் பெண் என்று மோகன் கூறியது, கிழவருக்கு வேடிக்கையாக இருந்தது. பாலாவின் மனத்துக்கு, தன்னை அவன் ஏழைப் பெண் என்று சொல்வதைக் கேட்க, சற்று இனிமையாக இருந்தது. மோகன் அலட்சியமாக, "தாத்தா இந்தப் பெண்ணோட வீடு இருக்கிற இடம் தெரிஞ்சா, நீங்களே துணையாகப் போய், அவளை வீட்டிலே விட்டுடுங்களேன்" என்று சொன்னான்.

உடனே தாத்தா, "இல்லேப்பா எனக்கு ரொம்பக் களைப்பா இருக்கு. எனக்கு இவள் அட்ரஸும் தெரியாது. நீயே வேணாம்னா அவளை உன் ஸ்கூட்டர்லே ஏத்திட்டுப் போய் வீட்டிலே விட்டுடேன்" என்றார்.

பாலாவுக்குக் கிழவர்மீது கோபமாக வந்தது. 'என்ன குறும்புக்கார ஆள்! வயசுக்குத் தக்கபடி பேச்சு இல்லையே! என்னை அந்த இளைஞனுடைய ஸ்கூட்டரிலே ஏறிக்கொள்ளச் சொல்றாரே!' என்று நினைத்தாள். கிழவர் பாலாவைப் பார்த்து, "என்னம்மா யோசிக்கிறே? இப்போ ஸ்கூட்டர்லே போறது நாகரிகம்தானே? ஏறிக்க" என்றார்.

'நிஜமாகவே நான் சக்ரபாணியின் மகள் என்று கிழவருக்குத் தெரியாதா?' என்ற ஐயம் எழுந்தது பாலாவுக்கு.

www.t.me/tamilbooksworld



மோகனும் தயங்கினான். "உனக்கு ஆட்சேபணை இல்லேன்னா, நான் உன்னை என் ஸ்கூட்டர்லே ஏத்திக்கிட்டுப் போறேன்" என்றான்.

பாலா கிழவரை ஒருமுறை பார்த்துவிட்டு, ஸ்கூட்டரில் ஏறிக்கொண்டாள். கிழவர் சிரித்தபடி, "ஒரு வார்த்தை நன்றி கூடச் சொல்லாமல் போறியே அம்மா?" என்றார். அதைக் கேட்ட பாலா, "நன்றி தாத்தா. நீங்க பத்திரமா வீட்டுக்குப் போங்க" என்று ஒப்புக்காகக் கூறினாள்.

ஸ்கூட்டர் புறப்பட்டது. பாலாவுக்கு, ஸ்கூட்டரின் பின்புறம் உட்கார்ந்து சென்று பழக்கம் இல்லையாகையால், அவளது உடல் அப்படியும் இப்படியும் ஆடும்போது, முதலில் பயமாக இருந்தது. எங்கு பிடித்துக் கொண்டால் 'பாலன்ஸ்' கிடைக்கும் என்று தெரியாததால் கையை அப்படியும் இப்படியுமாகச் சீட்டின் மீது நகர்த்தினாள். அப்போது அவளது கை, மோகனின் உடலில் பட்டு, அவனுக்குக் கூச்சத்தை உண்டு பண்ணியது. "என்ன பொண்ணு நீ! கிசுகிசு மூட்டறே? நீ இதுக்கு முன்னாடி ஸ்கூட்டரிலேயே போனது கிடையாதா?" என்று கேட்டான்.

பாலா தன்னையுமறியாமல் சிரித்தாள்.

மோகன், "என்ன? கேள்வி கேட்டால் சிரிக்கிறாயே?" என்றான்.

"நான் ஸ்கூட்டரிலே போறது இதுதான் முதல் தடவை என்னை மன்னிச்சிடுங்க" என்று பாலா கூறினாள்.

"ஆமாம். நான்தான் முட்டாள். எல்லாப் பெண்களும் ஸ்கூட்டர்லே போயிருக்க முடியுமா? அந்த அளவுக்குத் தமிழ் நாடு என்ன, செல்வம் செழிக்கும் அமெரிக்காவா?" என்று மோகன் கேட்டான்.

பாலா ஒன்றும் தெரியாதவள் போல் மோகனிடம், "இந்த ஸ்கூட்டர் வாங்குவதற்கு நிறையப் பணம் தேவைப்படுமா?" என்று கேட்டாள்.

மோகனுக்கு உடனே தன்னைப்பற்றியே பெருமை ஏற்பட்டது. ''ஸ்கூட்டர்னா என்ன, சைக்கிள்னு நினைச்சியா? நூத்துக்கணக்கிலே கொடுத்தாலும் கிடைக்காது. மூவாயிரத்துக்கும் மேலே ஆகும்!'' என்று கூறினான்.

''அப்படியா? அவ்வளவு ரூபாய் ஆகுங்களா?'' என்று அவன் திருப்தியைக் கெடுக்கக் கூடாது என்று பாலா மீண்டும் கேட்டாள்.

''சும்மா இல்லே, ரெண்டு வருஷம் சீட்டுப் பிடிச்சு, பணம் கட்டி, இதை வாங்கினேனாக்கும்!'' என்று கம்பீரத்தோடு கூறினான் மோகன். அப்போது தெருவில் ஒரு திருப்பம் வரவே, வேகத்தைக் குறைக்காமலேயே ஸ்கூட்டரைத் திருப்பினான். விழுந்து விடுவோமோ என்ற பயத்தில், பாலா அவன் இடுப்பைத் தன் இரு கரங்களாலும் வளைத்துக் கட்டிக் கொண்டாள். மோகனுக்கு அது என்னவோ போல் இருந்தது.

வைரம் பாய்ந்த மோகனின் முதுகுச் சதைகளை, பாலாவின் உடல் ஸ்பரிசித்தது. அவனது உடல் மிக்க வலிமை வாய்ந்தது என்று பாலா நினைத்த போது, அவளையும் அறியாமல் அவளை வெட்கம் குழப்பியது. அடுத்தபடி மோகன் பேசிய வார்த்தைகள் பாலாவுக்கு வெட்கத்தோடு அதிர்ச்சியையே கொடுத்தன.

''அந்தத் திருப்பத்தைத்தான் தாண்டியாச்சே. இப்போ நேர் ரோட்டிலேதானே ஸ்கூட்டர் போயிக்கிட்டிருக்கு? நீ கையை எடுத்திடலாமே!'' என்று கூறினான் மோகன். அப்போதுதான் பாலா, தனது கரங்கள் இன்னும் மோகனுடைய இடையை வட்டமிட்டபடி இருக்கின்றன என்பதை உணர்ந்தாள். உடனே கரங்களை எடுத்துக் கொண்டாள்.

சில விநாடிகளுக்கு மௌனம் நிலவியது. அவர்கள் சென்று கொண்டிருந்த பாதை அவள் வீட்டுக்குப் போகும் பாதையை எங்கோ தாண்டிவிட்டது என்பதைப் பிறகே உணர்ந்தாள். 'அவனிடம் என்ன அட்ரஸ் கூறி, வீட்டுக்கு



ஓட்டு என்று சொல்வது?' என்று சிந்தித்தாள். தன் தந்தையின் பெயரைச் சொல்வதா, இல்லை ஏதாவது பொய் சொல்வதா என்று அவள் யோசித்துக்கொண்டு இருக்கும் போதே, அவள் தந்தைக்குச் சொந்தமான மில் நெருங்கியது.

மில்லின் வெளிப்புறம் ஒரு கூட்டம் கூச்சலிட்டபடி நின்று கொண்டிருந்தது.

மோகன் அதைப் பார்த்து, ''சக்ரபாணியின் மில் இல்லே இது? அதுதான் கூச்சல், திடீர்னு ஆட்களை எடுப்பான். திடீர்னு ஆட்களை நிறுத்துவான். ஒரு கேள்வி முறை கிடையாது. கோர்ட்டுக்குப் போனாலும், வெற்றி அவனுக்குத்தான்!'' என்று சலிப்புடன் கூறினான்.

மோகன் தன் தந்தையைப்பற்றிக் கேவலமாகப் பேசியது பாலாவுக்குப் பிடிக்கவில்லை. அதற்காக, 'நான்தான் சக்ரபாணியின் மகள்' என்று சொல்லவும் அவள் விருப்பவில்லை.

திடீரென்று மோகன், ''ஆமாம். நீ எங்கே போகணும்னு கேட்காமலே ஓட்டிக்கிட்டுப் போறேனே!'' என்றான்.

பாலா திகைத்தாள். என்ன சொல்வது என்று யோசித்தாள். ''இங்கேயே வேணும்னாலும் விட்டுடுங்க. நான் போயிடறேன்'' என்றாள்.

மோகன், ''உனக்குன்னு ஒரு அட்ரஸ் கிடையாதா?'' என்று கேட்டான்.

## 8

பாலா மழுப்பினாள்.

''அட்ரஸ் இருக்கிறது. அங்கே திடீரென்று இந்த ராத்திரி வேளையிலே உங்களோடு வந்து இறங்கினால், பார்க்கிறவர்கள் ஏதாவது சொல்லுவாங்க.''

www.t.me/tamilbooksworld

உடனே மோகன், "எங்க வீட்டிலே எங்கம்மாதான் இருக்கிறாங்க. அவுங்க என்னைப் பற்றித் தப்பாகவே நினைக்க மாட்டாங்க. என் மேலே அவ்வளவு நம்பிக்கை!" என்றான்.

"அப்படியா?" என்று சொல்லிவிட்டுப் பாலா சில விநாடிகள் சும்மா இருந்தாள்.

"எங்க வீடு நெருங்கிவிட்டது. எங்க வீட்டிலே இரண்டு நிமிஷம் தங்கிட்டுப் போறதிலே உனக்குக் கஷ்டமில்லையே? நேரமாகுதே. சினிமா முடிஞ்சு இன்னும் நான் வரலியேன்னு எங்கம்மா கவலைப்படுவாங்க! நான் சாப்பிடாமல், அவுங்க சாப்பிட மாட்டாங்க. நான் சீக்கிரமாச் சாப்பிட்டுவிட்டு, உன்னை உன் வீட்டு அருகிலே கொண்டு போய் இறக்கி விட்டு விடுகிறேன்."

பாலா ஒன்றுமே சொல்லாது இருந்தாள். "என்ன, ஒன்றுமே பேசாமல் இருக்கிறாய்? என் திட்டம் சரிதானே?" என்று கேட்டான் மோகன்.

"நீங்க சொல்றபடியே செய்யுங்க. ஆனால் உங்க அம்மா முன்னாலே இந்த ராத்திரி வேளையிலே என்னைக் கூட்டிட்டுப் போனா...அவுங்களுக்குக் குழப்பமா இருக்காது— என்னதான் நம்பிக்கையுள்ளவங்களா இருந்தாலும்?" என்று சொல்லி இழுத்தாள். மோகன் சிரித்தான்.

"எங்கம்மாவைப் பற்றி உனக்குத் தெரியாது. அவுங்க மற்றத் தாயார்கள் மாதிரி இல்லை. உனக்குப் பார்த்தால் புரியும். தவிர எங்க தாத்தா சாட்சி இருக்கிறதே எனக்கு? அவர் தானே உன்னை என்னோடு அனுப்பினார்" என்றான்.

"தாடி வைத்த பெரியவர் உங்கம்மாவுக்கு அப்பாவா?" என்று கேட்டாள்.

"இல்லை, அவர் எங்கப்பாவுக்கு அப்பா. எங்கப்பா உயிரோடு இல்லை. தாத்தாதான் எங்க வீட்டிலே

www.t.me/tamilbooksworld



பெரியவர். ஆனால் அவர் எங்களோடு தங்குவது இல்லை. எங்க குடும்பமே ஒரு மாதிரி!" என்று சொல்லிவிட்டு ஸ்கூட்டரின் வேகத்தைக் குறைத்தான்.

மயிலாப்பூரைச் சேர்ந்த தெரு ஒன்றின் வழி சென்று ஸ்கூட்டர் நின்றது. சாதாரண வீடு. ஆனால் பார்ப்பதற்கு அழகாக இருந்தது அதன் வெளிப்புறம் உள்ள மணியை அழுத்தினான். உடனே விளக்கு எரிந்தது. கதவு திறந்தது. பாலாவின் தாயைவிட இரண்டு மூன்று வயது மூத்த அம்மாள் சிரித்த முகத்தோடு வந்து கதவைத் திறந்தாள். முதலில் அந்த அம்மாள் பாலாவைக் கவனிக்கவில்லை. பிறகு ஸ்கூட்டரின் அருகில் பாலா நிற்பதைப் பார்த்ததும், அவள் மனத்தில் ஆச்சரியம் தெரிந்தது.

அந்த அம்மா தன்னை ஒரு வேளை கேவலமாக நினைத்தால் என்ன செய்வது என்று வருந்தினாள் பாலா. ஆனால் மோகன் சிறிதுகூடத் தயக்கமில்லாமல், "பாரும்மா பார். அடிக்கடி சொல்லுவாயே, பெண்கள் போனால் அந்தப் பக்கம் என் பிள்ளை தலை நிமிர்ந்து பார்க்க மாட்டான் என்று...அவன் சங்கோஜி, கோழை என்று சொல்லுவாயே. இன்றைக்குப் பார். உன் பிள்ளை ஸ்கூட்டரிலேயே ஏற்றிக்கொண்டு வந்திருக்கிறான்! என்ன சொல்கிறாய் இப்போது?" என்று சொன்னான்.

மோகனின் தாய் முதலில் சிரித்தாள். "வாம்மா உள்ளே வா!" என்றாள்.

பாலாவுக்கு அந்தப் பெண்மணியின் கனிவு மனத்துக்கு ஒருவிதக் கவர்ச்சியைக் கொடுத்தது. அதுமட்டுமல்லாமல் மோகனின் தாயின் சிரிப்பு வெகு நாள் பழகிய ஒருவரிடம் பேசுவது போன்று பிரமையைக் கொடுத்தது. பாலா வணக்கம் தெரிவித்து உள்ளே நுழைந்தாள்.

மோகனின் தாய், "மோகன் சுத்த வாயாடி?" என்று கூறிவிட்டு, மோகனிடம், "டேய்! நீ இந்தப் பெண்ணை ஸ்கூட்டரிலே கூட்டிக்கொண்டு வராமல், தலையிலேயே

தூக்கிக்கொண்டு வந்தாலும் நான் தப்பாக நினைக்க மாட்டேன்!'' என்று கூறிவிட்டு, பாலாவிடம் திரும்பி, ''ஏம்மா, உன் பெயர் என்ன?'' என்று கேட்டாள்.

மோகன், ''அவள் பெயர்...'' என்று சொல்லி இழுத்தான். பாலா என்ன சொல்வது என்று தெரியாமல் தயக்கத்தோடு நிற்கும்போது, ''என்னடா பிரமாதமாக மார் தட்டினியே, இன்னும் அந்தப் பெண் பேரைக்கூடக் கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லையே நீ! ஏம்மா, நீயே சொல்லு? உன் பெயர் என்ன?'' என்றாள்.

பாலாவுக்கு என்னவோ, பாலா என்று கூறிக் கொள்வது சரியாகத் தோன்றவில்லை. தன்னுடைய முழுப்பெயர் பாலா திரிபுர சுந்தரி; அதன் கடைசிப் பகுதியான சுந்தரி என்ற பெயரைச் சொல்லிக்கொள்வது அவளுக்குப் பொருத்தமாகப்பட்டது. ''என் பெயர் சுந்தரி! உங்க பிள்ளை என்னை ஒரு நெருக்கடியான ஆபத்திலிருந்து காப்பாற்றினார். அவர் சமயத்திலே வரவில்லையென்றால், என் மானமே போயிருக்கும்!'' என்றாள்.

''இரண்டு முரடர்கள் ஒரு இருண்ட சந்திலே சுந்தரியுடன் தகராறு பண்ணிக்கிட்டிருந்தாங்க. பாவம், நம்ம தாத்தா வேறே காப்பாற்ற வந்திருக்கிறார். அவரையும் அடிச்சுப் போட்டுட்டாங்க'' என்று கதை கூறத் தொடங்கினான் மோகன்.

இதைக் கேட்டதும் அந்த அம்மாளின் முகத்தில் கவலை படிந்தது. ''தாத்தா வேறே வந்திருந்தாரா? அவருக்கு ஒரு ஆபத்தும் இல்லையே?'' என்றாள், பதற்றத்துடன்.

''அவருக்கு ஒன்றுமில்லை. அவர்தான் என்னோடு இந்தப் பெண்ணை அனுப்பினார்.''

''ஏம்மா, துணையில்லாமல் தனியா இப்படியெல்லாம் வரலாமா? டேய் மோகன். நீ தண்டால், பாக்ஸிங்எல்லாம் பழகினதற்கு இன்றைக்குத்தான் பலன் கிடைத்திருக்கிறது

www.t.me/tamilbooksworld



போலிருக்கிறது'' என்று பெருமையோடு கூறினாள் மோகனின் தாய்.

''அம்மா, வளவளவென்று பேசாமல் சீக்கிரம் இலையைப் போடு. நான் சாப்பிட்டு விட்டு இந்தப் பெண்ணை அவள் இருக்கிற இடத்திலே கொண்டு போய்விடணும்'' என்றான் மோகன்.

''உங்களுக்குச் சிரமம் வேண்டாம்! ஒரு டாக்ஸி பார்த்துக் கொடுங்கள். நானே போய் விடுகிறேன்'' என்றாள் பாலா.

''நல்லாயிருக்கிறது. ராத்திரியே போகணுமா? விடிந்தவுடன்போனால் போதாதா? நீ இங்கேயே இருந்துடலாம். உங்க வீட்டுக்குப் பக்கத்திலே டெலிபோன் இருந்தால், அதிலே உங்கம்மா அப்பாவுக்குத் தகவல் சொல்லிடலாமே!'' என்றாள்.

மோகன் வெளியே சென்று ஸ்கூட்டரை எடுத்து வீட்டுக்குள் வைப்பதில் ஈடுபட்டிருந்தான்.

பாலாவுக்கு அந்த வீட்டின் நடுக்கட்டுக்கு வந்ததும் சில மணி நேரமாவது அங்கே தங்கவேண்டும் என்று ஆசை எழுந்தது. சிறிய அறைகள் கொண்ட சிறிய வீடு. அம்மாதிரி வீடுகளில் அவள் நுழையும்படியான ஒரு வாய்ப்பே, இதுவரை அவளுக்குக் கிடைக்கவில்லை. புரியாத ஒரு கவர்ச்சி. தெளியாத ஒரு ஞாபகம் இரண்டும் சேர்ந்து அவளை அழுத்தின. நடு அறையை ஒருமுறை பார்த்தாள். அவள் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து ஏதோ ஒன்று வெளிவரத் துடித்தது. இன்னதென்று அவளுக்கே புரியவில்லை.

''என்னம்மா யோசிக்கிறே? ராத்திரியே போகணுமா?'' என்று மறுபடியும் கேட்டாள் மோகனின் தாய்.

''இல்லையம்மா, ராத்திரி இங்கேயே படுத்திருந்து

விட்டுக் காலையிலே போகிறேன். எனக்கும் களைப்பாக இருக்கிறது.''

''உங்கம்மா அப்பா தகவல் தெரியாமல் கவலைப்பட மாட்டார்களா?'' என்றாள் மோகனின் தாய்.

இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று புரியவில்லை. ''அவர்களுக்குச் சொல்லத் தேவையில்லையம்மா!'' என்று சொல்லிவிட்டுத் தரையைப் பார்த்தாள். தாய் தந்தையர் பற்றிக் கேட்டதும், சரியான பதில் சொல்லாமல் பாலா தரையைப் பார்த்ததும், அது பற்றி விசாரிப்பதும் அவளுக்குப் பிடிக்கவில்லை என்று காமாட்சி புரிந்து கொண்டாள்.

இதற்குள் மோகன் ஸ்கூட்டரை வைக்க வேண்டிய இடத்தில் வைத்துவிட்டு உள்ளே வந்தான்.

''அம்மா, சாப்பாடு...சாப்பாடு...'' என்று சொல்லிக் கொண்டே பாலாவைப் பார்த்துச் சிரித்தான். அவன் தாய் அவன் தலையில் குட்டினாள்.

''டேய் மோகன், சுந்தரியை ராத்திரி தங்கச் சொல்லிட்டேன். நின்று நிதானமாகச் சாப்பிடலாம். சுந்தரி காலையிலேதான் போகப் போகிறாள்'' என்றாள்.

''வெரிகுட்! ரொம்ப நல்லதாகப் போயிற்று. ஸ்கூட்டரிலே ஒரு டிரிப் மிச்சம்'' என்று சொல்லிக்கொண்டே, நடு ஹாலை அடுத்தபடி இருந்த குளிக்கும் அறைக்குள் போய், முகம் கழுவிக்கொண்டான்.

காமாட்சி சமையலறைக்குப் போய் இரண்டு இலைகளைப் போட்டாள். பாலா எல்லாவற்றையும் பார்த்தபடி நின்றாள். என்ன சொல்வது, என்ன செய்வது என்று அவளுக்குப் புரியவில்லை.

எதிரேயிருந்த சிறு கண்ணாடியில் பாலா தன்னைப் பார்த்துக் கொண்டாள். ஆடம்பரமான உடை இல்லாது, நகையில்லாத தற்செயலாகப் புறப்பட்டது எவ்வளவு நல்லதாகப் போய்விட்டது என்று நினைத்தாள்.

www.t.me/tamilbooksworld



அதற்குள் மோகன் குளியல் அறையிலிருந்து வெளியே வந்தான். ''நீ வேணுமானால் போய்க் கால் முகம் கழுவிக் கொள்ளலாம்'' என்றான்.

பாலா, சிறிய பாத்ரூமுக்குள் நுழைந்தாள். மூன்றடி தூரம், அதில் ஒரு பக்கெட், சிறு குழாய், சோப்பு ஸ்டாண்ட், பாசியில் அவள் கால் வழுக்கியது. அவளுடைய வீட்டுப் பாத்ரூமுக்கும் இதற்கும் எவ்வளவு வித்தியாசம்? கால் கழுவிக்கொண்டு, வாய் கொப்புளித்துவிட்டு வந்தாள்.

காமாட்சி இரண்டு இலைகளிலும் சாப்பாடு பரிமாறினாள். மோகன் சட்டையை நீக்கிவிட்டு, பனியனோடு இலை முன்பு உட்கார்ந்தான். உருளைக் கட்டைகள் போன்ற அவன் புஜச் சதைகள் நன்றாகத் தெரிந்தன. வலிமை மிகுந்த உடலமைப்பு, அவன் பனியனோடு உட்காரும்போதுதான் நன்றாகத் தெரிந்தது.

''வாம்மா, நீயும் உட்கார்'' என்றாள் காமாட்சி. பாலா இலையை நெருங்கியதும் உடனே உட்கார்ந்து சாப்பிடத் தயங்கினாள். ''பெரியவங்க, நீங்களும் உட்காருங்க, நானே இரண்டு பேருக்கும் பரிமாறுகிறேன்'' என்றாள்.

''வேண்டாம்மா. என் பிள்ளைக்குப் பரிமாற என்னால் தான் முடியும்! நீ உட்கார்'' என்றாள். பாலாவும் உட்கார்ந்தாள். தேகப் பயிற்சியின் காரணமாக, மோகனுக்கு ஜீரண சக்தி அதிகமாக இருந்ததனாலோ என்னவோ அவன் சிறு மலை போல் அரிசிச் சோற்றைக் குவித்து, அதில் குழம்பை விட்டு குழப்பி ரசித்துச் சாப்பிட்டான். கூச்சமில்லாமல் அவன் சாப்பிடுவது பாலாவுக்கு வேடிக்கையாக இருந்தது.

அவன் சாப்பிடுவதையே பாலா கவனிப்பதைக் கண்ட மோகன், ''என்ன வெளுத்துக் கட்டுகிறேன் என்று பார்க்கிறாயோ? நான் சாப்பாட்டிலே பீமன், பிளஸ் பகாசுரன்'' என்று சொல்லிக் கொண்டான்.

பாலா தலையைக் குனிந்தபடி சாப்பிட்டாள். அவள் வீட்டில் அவள் தந்தையால் சாப்பிடவே முடியாது. அவள் தாய் வற்புறுத்தல் பேரில் சாப்பிடுவாள். பல பொருள்கள் தயார் செய்யப்பட்டும் அவை வீட்டு முக்கியமான நபர்களால் சுவைத்து உண்ணப்படாமல் வேலைக்காரர்களின் பந்திக்குச் செல்வதும் தெரிந்த உண்மை.

காமாட்சி அம்மாள் பரிமாறும் போதும் சிரித்தபடி அவளை உபசரிக்கும்போதும் பாலாவின் மனத்தின் ஒரு பகுதி படபடப்புடன் இருந்தது. ஞாபகங்கள் தாறுமாறாக அவளை வந்து தாக்கின. சாப்பிட்டு எழுந்ததும் அவள் நடு ஹாலுக்கு வந்தாள். அந்த நடு ஹால் மறுபடியும் அவள் மனத்தில் ஒருவிதக் குழப்பத்தை உண்டு பண்ணியது.

இம்மாதிரியான ஓர் இடத்தை எங்குப் பார்த்திருக்கிறோம் என்று நினைத்தாள். அதே சமயத்தில் காமாட்சி, "டேய் மோகன், நீ போய் இன்று வாசல் அறையில் படுத்துக் கொள். நானும் சுந்தரியும் இந்த ஹாலில் படுக்கிறோம்" என்றாள்.

மோகன் விசில் அடித்துக்கொண்டே வாசல்புற அறைக்குச் சென்றான். காமாட்சி ஹாலைச் சுத்தம் செய்துவிட்டுப படுக்கை விரிக்க ஆரம்பித்தாள்.

வயதானவர்கள் வேலை செய்யும்போது சும்மா இருப்பது சரியில்லை என்று பாலாவுக்கு இயற்கையாகத் தோன்றவே, பாலா காமாட்சியின் கையிலிருந்த ஜமுக்காளத்தை வாங்கித் தானே விரிக்க ஆரம்பித்தாள். "நீங்களே எல்லாம் செய்திட்டுப் போனால் நான் என்ன கை கால் இல்லாதவளா?" என்று சிரித்துக்கொண்டு பெரியம்மாளுக்குப் படுக்கையை விரிக்க ஆரம்பித்தாள்.

அப்போது ஜமுக்காளத்தைப் பாலாவிடம் கொடுத்துவிட்டுக் காமாட்சி திகைத்து நின்றாள். காமாட்சியின் கண்கள் கொட்டாமல் பாலாவைப் பார்த்தபடியே இருந்தன. வாய் திறந்தபடி இருந்தது. பாலாவுக்கு மனத்தில் கலவரம் ஏற்பட்டது. "என்னம்மா, நான் ஏதாவது தவறாகச் சொல்லிவிட்டேனா?" என்றாள்.

www.t.me/tamilbooksworld



காமாட்சி உடனே சமாளித்துக் கொண்டு, "ஒன்றுமில்லை சுந்தரி. நீ சிரித்துக் கொண்டு என் கையிலிருந்து வேலையைப் பிடுங்கிச் செய்தது எனக்குப் பழைய கால ஞாபகத்தைக் கொண்டு வந்தது. இப்படித்தான் அந்தக் காலத்திலே என்னுடைய கணவனுடைய சகோதரி என்னை ஒரு வேலை செய்யவிடாமல் அவளே செய்வாள். நீ சிரிக்கிறதுகூட என் நாத்தியார் லட்சுமி சிரிப்பதுபோல இருக்கிறது" என்று காமாட்சி சொன்னதும் பாலாவின் கைகள் நடுங்கின.

'லட்சுமி! லட்சுமி!' அந்தப் பெயர் பாலாவின் தாயார் பெயர். பாலாவுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி வெளிக் காட்டிக்கொள்ளாமல் இருக்கும் பண்பில் அவள் தந்தையைப் போல் இருந்தாள்.

"உங்கள் நாத்தியார் இப்போது எங்கே இருக்கிறார்கள்?" என்றாள்.

காமாட்சி சோகப் புன்னகையோடு பதில் சொன்னாள்: "அவள் இப்போ தங்கமாளிகையிலே வசிக்கிறாள். இதே ஊரிலேதான் இருக்கிறாள். இருந்தாலும் எங்கோ எட்டாத உயரத்தில் இருக்கிறாள். அவளுக்குச் சித்த சுவாதீனம் இல்லாது போய்விட்டது. அவள் கணவன் சக்ரபாணி எங்களைப் போன்ற சாதாரண உறவினர்களை உள்ளே அனுமதிப்பதில்லை. நாங்களும் அங்கே போவதில்லை. சம்பந்தம் அறுந்து போய் எவ்வளவோ வருடமாகிறது. என் மாமனார் லட்சுமியின் தகப்பனாரே அந்த வீட்டிலே நுழைய முடிவதில்லையே" என்று சொன்னாள்.

காமாட்சி அம்மாள் பேசிக்கொண்டே போகும்போது பாலாவின் மனத்தில் உணர்ச்சிகள் குபுகுபுவென்று எழுந்தன.

இப்போது எல்லாம் தெளிவாயின. அவளை முரடர்களிடமிருந்து காப்பாற்ற வந்த பெரியவர் அவள் தாயின் தந்தை.

தன்னை ஸ்கூட்டரில் ஏற்றி வந்தவன் அத்தான் மோகன். கதைகளில்தான் இப்படி நிகழ முடியும். வாழ்க்கையில் இம்மாதிரியான ஒரு சந்திப்பு நிகழுமென்றே பாலாவால் நம்ப முடியவில்லை.

## 9

படுக்கையில் படுத்த பாலா, ஒன்றன் மேல் ஒன்றாகத் தொடர்ந்து நிகழ்ந்த நிகழ்ச்சிகளின் கோவையில் மனத்தைத் திருப்பினாள்.

அன்று ஏன் அவள் சாதாரணப் புடைவை ரவிக்கை அணிந்து, நகைகள் ஏதுமில்லாது வீட்டிலிருந்து நடந்து புறப்பட்டாள்? அந்த வேஷம் எவ்வளவு பொருத்தமாகத் தன்னை ஓர் ஏழைப் பெண்ணாக்கிக் காட்டிவிட்டது! அவள் அந்தச் சந்தின் வழியாக நடந்து வராவிட்டால் மோகனைச் சந்தித்திருக்க முடியுமா? மோகனால் காப்பாற்றப்பட்டிருக்க முடியுமா?

மோகன்! அவள் மாமாவின் மகன்! இறந்துபோன அவள் மாமாவின் வீட்டில் அவள் படுத்திருக்கிறாள்! இதே சென்னையில் மாமாவின் குடும்பம் சாதாரண நிலையில் இருக்கிறது. அவளும் அப்பாவும் செல்வத்தின் சிறப்போடு இருக்கிறார்கள். மோகன், சீட்டுப் பிடித்துச் சேர்த்த தொகையில் ஸ்கூட்டர் வாங்கியதாகப் பெருமைப் படுகிறான். அவள் தந்தையின் வீட்டிலோ ஏறிச் சவாரி செய்ய ஆள் இல்லாமல் லட்ச ரூபாய் விலையில் கார்கள் காத்துக் கிடக்கின்றன. மோகனின் தாய், மோகன், இவர்கள் அவளது வீட்டுக்குள் அடி எடுத்து வைக்க முடிவதில்லை.

'தந்தை சக்ரபாணி அவளைச் சுற்றிச் செல்வம் என்ற ஓர் இரும்புத்திரை—இல்லை, ஒரு வைரத்திரையையே போட்டு விட்டாரா?' என்று நினைத்தாள். அரசியல் புத்தகங்களில், இரும்புத்திரைக்குப் பின் வாழும் நாட்டு

www.tamilbooksworld



மக்கள், மற்ற நாடுகளைப்பற்றி ஒன்றும் தெரியாமல் வாழ்கிறார்கள் என்று படித்திருக்கிறாள். அவள் நிலையும் அப்படித்தானே? அவளும் திரைக்குப் பின்னால் வாழ்ந்தவள்தானே?

அவளுக்கு ஒரு மாமா இருக்கிறார்; மாமாவுக்கு ஒரு மகன் உண்டு என்பது பற்றித் தெரியாமல் இல்லை. அவள் தாய் திடீர் திடீர் என்று மாமாவைப் பற்றிக் குறிப்பிடுவது உண்டு. மாமாவின் மகனைப் பற்றி அவள் மனத்தின் மூலையில் ஆழமான கிணற்று நீரின் நிழல் போல் குழம்பிய ஞாபகங்கள் உண்டு. அந்த ஞாபகங்கள் மறுபடி எழாமலே சென்று விட்டது அவள் வாழ்வில். எப்போதோ இதே ஹாலில் பாலா நின்றிருக்கிறாள். ஆனால் எப்போது, ஏன் என்றுதான் விளங்கவில்லை. இன்னும் எவ்வளவு உறவினர்கள் அவளுக்கு உண்டோ? அவர்கள் என்ன நிலையில் இருக்கிறார்களோ? தன் தாயோ, பேசிப் பழக மனத்தெளிவில்லாத நிலையில் இருக்கிறாள். தந்தையோ ஓயாது ஓடியாடி உழைத்துக் கொண்டிருக்கிறார். அவளுக்குத் தெரிந்த உறவுமுறை, அவள் இட்ட பணி செய்யும் வேலையாட்களின் உறவுதான்.

பள்ளிச் சிநேகிதிகள் பலருண்டு. எல்லோருமே அவள் தந்தையின் பெயர், பணம், பலம் பற்றித் தெரிந்து வாயடைத்துப் போனவர்கள்தான்! எல்லோருமே அவளிடம் மரியாதையுடனும் சிரித்தபடியுமே பேசிக் கண்டிருக்கிறாள். அவளை யாருமே சாதாரணப் பெண்ணாக நினைத்து இரக்கப்பட்டுப் பழகியது கிடையாது.

ஒரு சாதாரண பெண் என்ற அந்தஸ்தை இன்று மோகன் வீட்டில்தான் அவள் அடைந்தாள். அந்த அந்தஸ்தில்தான் எவ்வளவு கனவு! குளிர் சாதனப்பெட்டி இல்லாத அறையில் படுத்திருப்பதிலே அவளுக்கு ஒரு புதுமை இருந்தது. இரவு வேளையில் சைக்கிள்களின் 'ஙண ஙண' சத்தம், ரிக்ஷாக்களின் சத்தம், பறக்கும் சிறு

கொசுக்களின் ரீங்காரம், இவையெல்லாம் அவளுக்கு இனிமையாக இருந்தன.

படுக்கையில் படுத்தபடி திரும்பிப் பார்த்தாள். காமாட்சி அம்மாள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். குறட்டையின் சத்தம் லேசாக வந்தது. பாலாவுக்கு மட்டும் தூக்கம் வரவில்லை. அந்த இடத்து நாலு சுவர் களையும் சுற்றிப் பார்த்தாள். மங்கலான விடிவிளக்கின் வெளிச்சத்தில் சுவர்களில் பல படங்கள் மாட்டியிருப்பது தெரிந்தது. அவற்றுள் மூலையில் மாட்டியிருந்த ஒரு படம் அவள் கவனத்தைக் கவர்ந்தது.

பாலா, படுக்கையிலிருந்து மெள்ள எழுந்தாள். அவளையும் அறியாமல் ஒரு சக்தி, அவளை அப்படத்தை நோக்கி உந்திச் சென்றது. அந்தப் படத்தில், நடுவில் அரைநிஜார் அணிந்து ஒரு சிறுவன் நின்று கொண்டிருந் தான். அவன் அருகில் இன்னும் சில சிறுவர்களும், சிறுமி களும் ஒரு பெஞ்சின் மீது நின்று கொண்டிருந்தனர். அந்தப் போட்டோவின் மங்கிய நிறத்திலிருந்து, அது வெகு நாட்களுக்கு முன்பு எடுக்கப்பட்ட போட்டோ என்பது தெளிவாகத் தெரிந்தது. அந்தப் போட்டோவின் நடுமையத்தில் அரைநிஜார் அணிந்த சிறுவனுக்கு அருகில் ஒரு சிறுமி நின்று கொண்டிருந்தாள்.

அந்தச் சிறுமியின் ஆடை பளபளப்பாக இருந்தது. பணக்கார வீட்டுச் சிறுமிபோல் இருந்தாள். வயது நான்கு ஐந்துக்கு மேல் இராது.

பாலாவின் பார்வை அந்தச் சிறுவன் சிறுமி முகத் திலேயே நின்றது. அந்தச் சிறுமியின் கையில் ஒரு பொம்மை இருந்தது. அந்தப் பொம்மை அவள் வீட்டில் உள்ள பாவாடை சட்டை அணிந்த பொம்மைபோல் இருந்தது. ஒருவேளை அந்தப் பொம்மைதானோ? இது விடிவிளக்கின் மங்கலான வெளிச்சத்தில் தோற்றங்கள் தெளிவாக இல்லை.

பாலா சுவரிலிருந்த போட்டோவைக் கையில் எடுத்துக் கொண்டு வராந்தா பக்கம் போனாள். அங்குள்ள விளக்கைப் போட்டாள். அதன் பிரகாசமான வெளிச்சத்தில் மறுபடியும் போட்டோவைப் பார்த்தாள். சந்தேகமே இல்லை. போட்டோவில் உள்ள பொம்மை, அவள் வீட்டிலுள்ள பொம்மையின் நகலேதான். அந்தப் பொம்மையை வைத்துக் கொண்டிருக்கும் சிறுமியின் முகத்திலும் தெரிந்த களை இருந்தது. நல்ல வேளை, படத்தின் கீழே படத்தில் இருப்பவர்களின் பெயர்கள் எழுதப்பட்டிருந்தன. பள்ளிக்கூடப் போட்டோக்களில் அம்மாதிரி எழுதுவது வழக்கம். அந்தப் பெயர்கள் இடமிருந்தது வலம் என்ற அமைப்பில் எழுதப் பட்டிருந்தன.

அந்தப் பெயர்களைப் படிக்க ஆரம்பிக்கும்போதே, அவள் நெஞ்சு திப்திப் என்று அடித்துக்கொண்டது. போட்டோவில் கே. ரகு, பி. கோபால், எம். சரளா, ஆர். வாசு, ஆர். மோகன், ஸி. பாலா திரிபுர சுந்தரி, என். மஞ்சுளா, எல். விசாலம், ஏ. மூர்த்தி என்று அந்த வரிசையில் பெயர்கள் இருந்தன. பொம்மை வைத் திருந்த சிறுமியின் பெயர் ஸி. பாலா திரிபுரசுந்தரி என்று கண்டு கொண்டாள். அதே விநாடி அவள் மனக்கண் முன்பு புதைந்து கிடந்த நினைவுகள் வெளித்தோன்றின. பல வருடங்களாக ஏற்பட்ட புதிய அநுபவங்கள், புதிய ஞாபகங்களைக் கிழித்துக்கொண்டு பழைய காட்சிகள் தோன்றின.

ஓர் ஒழுங்கில்லாமல் பள்ளிக்கூடம், டிபன் சாப்பிடும் அறை, பள்ளியின் அருகே உள்ள சாக்கடை— இப்படித் தாறுமாறாகப் பல சூழ்நிலைகளைக் கொண்ட காட்சிகள் பாலாவின் மனத்தில் தோன்றி மறைந்தன. இசையின் ஸ்வரங்கள் ஒலிகளாகத் தோன்றி அடங்குவதுபோல் இருந்தது. அவளை அறியாமலே பாலாவின் கைகள் நடுங்கின. வராந்தா விளக்கை அணைத்துவிட்டு, பாலா மறுபடியும் நடு ஹாலுக்கு வந்தாள். படத்தை மறுபடியும்

சுவரில் மாட்டினாள். காமாட்சி அம்மாள் குறட்டை விட்டபடி தூங்கிக் கொண்டிருந்தாள். பாலா விரிக்கப்பட்டிருந்த ஜமுக்காளத்தில் உட்கார்ந்தபடி எழுந்து மறையும் நினைவுகளைச் சீர்படுத்தத் தொடங்கினாள். சுக்கு நூறாகக் கிழித்துப் போட்ட ஒரு கடிதத்தை, மறுபடியும் ஒன்றாகச் சேர்த்து முழுக் கடிதம் ஆக்கும் முயற்சியைப் போல் இருந்தது பாலாவுக்கு. ஆனால் பாலா தன் சிதறிய ஞாபகங்களை விடாமல் நூத்திப் பிடித்து நிறுத்தினாள். முடிவில் அவள் வாழ்வில் எப்போதோ நடந்த பகுதி தெளிவாகத் தோற்றம் கொடுத்து நின்றது.

பல வருடங்களுக்கு முன்பு நடந்தது அது. பாலா பழைய மாடல் போர்டு காரில் வந்து கொண்டு இருக்கிறாள். அப்போது அவளுக்கு நான்கு வயதுதான் இருக்கும். வெள்ளை சில்க் கவுன் அணிந்து இருக்கிறாள். ரோஜாப் பூக்கள் போட்ட கவுன். அன்று அந்தக் கவுனைப் பெருமையோடு அணிந்திருந்திருந்தாள். அவள் ஏறி வந்த கார் அப்போது ஒரு வீட்டின் முன்பு திடீரென்று நின்று விடுகிறது. டிரைவர் இறங்கி, கார் பானெட்டைத் தூக்கி எதையோ ரிப்பேர் செய்கிறான். எதிரே உள்ள வீட்டுக் கதவு திறக்கிறது. அழுக்குப் படிந்த அரை நிஜார் அணிந்த சிறுவன் சிரித்தபடி வருகிறான். காரைப் பார்த்ததும் மகிழ்ச்சியால் குதிக்கிறான். இப்போது பெரிய மோகன் சிரிப்பது போலவே இருக்கிறது, அன்று மோகன் சிரிப்பதும்!

''என்ன பாலா, ஸ்கூலுக்குப் போறியா? நானும் உன்னோட ஸ்கூலுக்கு வர்றேன் பாலா'' என்கிறான்.

உடனே குழந்தை பாலா திமிராகப் பதில் சொல்கிறாள். அவள் தந்தையைப் போல் திமிராக, இரக்கமில்லாமல் பேசுகிறாள். ''நீ அழுக்குச் சட்டை, அழுக்கு நிஜார் போட்டிருக்கே. நீ ஏறினால் கார் அழுக்காப் போயிடும்'' என்று கூறுகிறாள்.

www.t.me/tamilbooksworld



சிறுவன் மோகன் முகம் பொலிவிழந்து நிற்கிறான். இதைப் பார்த்த அவன் தாய் காமாட்சி வெளியே வந்து அவனை அழைக்கிறாள். ''ஏன்டா பக்கிரி! உனக்குக் கார்ச் சவாரி கேட்குதா? உங்கப்பா கொடுத்த பிச்சை வாழ்விலே வந்ததுடா பாலா ஏறிச் செல்லும் இந்தக் காரு. கார் இல்லாட்டி என்னடா? நடந்து போடா'' என்கிறாள்.

கார் ரிப்பேர் முடிந்து புறப்படுகிறது. குழந்தை பாலா கர்வத்தோடு காரில் செல்கிறாள். அப்புறம் பாலாவுக்கு என்ன நடந்தது என்று ஞாபகம் வரவில்லை. அவளுக்கு அடுத்தபடியாக ஞாபகம் வந்த காட்சி:

பள்ளியில் நடுப்பகல் உணவு இடைவேளை. பாலா அங்குள்ள ஷெட்டில் டேபிள் முன்பு உட்கார்ந்திருக்கிறாள். அவள் முன்பு ஓர் ஆயா, பிரம்புப் பெட்டியிலிருந்து பிளேட்டுகளை எடுத்து வைத்து உணவு பரிமாறுகிறாள். ஒரு பிளேட்டில் தோசை, மற்றப் பிளேட்டில் கேசரி—இப்படியாக, வரிசையாகப் பாலாவின் முன் பலவிதப் பலகாரங்களை வைக்கிறாள். அப்போது மோகன் ஷெட்டில் நுழைகிறான். அவன் கையில் உலர்ந்த இலையில் சுற்றிய தயிர் சாதம் இருக்கிறது. ஆயா அங்கு மோகன் நுழைந்ததைப் பார்த்ததும் சற்று கடுமையாக, ''இங்கே ஏன் தம்பிவர்றே? பாலா சாப்பாட்டிலே திருஷ்டி விழுந்துடப் போகுது! வேறு எங்கேயாவது போ'' என்று திட்டுகிறாள்.

சிறுவன் மோகனுடைய முகம் சிவக்கிறது. மோகன் கோபத்துடன், ''பாலா ஒண்ணும் சிமையிலேயிருந்து வந்துடலே. அவ என்னுடைய அத்தை மகதான். அவளுக்கு இந்தத் தயிர் சாதத்தைப் பிச்சையாகக் கொடுத்துட்டுப் போகத்தான் வந்தேன்'' என்று சொல்லிவிட்டு, இலையில் உள்ள தயிர் சாதத்தைப் பிளேட்டில் போட்டு விட்டுப் போய் விடுகிறான்.

குழந்தை பாலா விக்கி விக்கி அழுகிறாள். அன்று

மாலை பள்ளி முடிந்ததும் தந்தை அனுப்புவதாகச் சொன்ன காருக்காகப் பாலா காத்திருக்கிறாள். அதே இடத்தில் மோகனும் நிற்கிறான். அவர்கள் இருவருக்கும் தெரிந்த டிரில் மாஸ்டர், மோகனிடம் ஒரு போட்டோவைக் கொடுக்கிறார். உடனே அவர் பாலாவையும் கவனிக்கிறார். "பாரு பாலா. இந்தப் போட்டோவிலே நீயும், உங்க அத்தானும் சேர்ந்து நிக்கறீங்க!" என்று சொல்லி விட்டுச் சிரிக்கிறார்.

அவருடைய சிரிப்பின் அர்த்தம், பாலாவுக்கு விளங்கவில்லை. ஆனால் அது மோகனுக்குப் புரிந்துவிட்டது போல் அவன் வெட்கத்தோடு தலையைத் தாழ்த்துகிறான். அப்போது மோகன் கையில் இருந்த பாவாடை சட்டை அணிந்த பொம்மை, பாலாவின் பார்வையில் விழுகிறது. அந்தப் பொம்மையை மோகனிடம் கடனாக வாங்கிக் கையில் வைத்துக் கொண்டுதான் போட்டோ எடுத்துக் கொண்டாள். அது தனக்கு இருக்கக் கூடாதா என்ற ஆசை எழுகிறது. ஆனால் மோகனைக் கேட்கப் பயம். சும்மா இருந்து விடுகிறாள்.

புத்தகப் பையைச் சுமந்தபடி பள்ளியின் வெளியே வருகிறாள். அப்போது அங்கே மாணவர் கூட்டம் நிற்கிறது. அதில் ஒருவன், "பாலாவுக்குத் திமிருடா! பணக்காரி என்கிற திமிருடா!" என்கிறான்.

இன்னொருவன், "அவ யார்கிட்டேயும் பேசறதில்லே. நம்மகிட்டே வந்தா, அழுக்கு அவளுக்கு ஒட்டிக்குமாம்!" என்கிறான்.

அந்தக் கூட்டத்தில் உள்ள ஒருவன், "இவளை அப்படியே சாக்கடையிலே முழுக்கிட்டா அப்போ ஊர் அழுக்குப் பூராவும் ஒட்டிக்குமே! அப்போ பாலா என்னடா செய்வா?" என்கிறான்.

உடனே மாணவர்கள் கூட்டமாகச் சிறுமி பாலாவை நோக்கி ஓடிவருகின்றனர். பாலா நடுங்குகிறாள். மாணவர்கள் அவளைக் கரகரவென்று இழுத்துச் சாக்கடையில்

www.t.me/tamilbooksworld



தள்ளுகின்றனர். பாலா கூச்சலிடுகிறாள். அவள் பட்டுக் கவுன் பூராவும் சாக்கடைத் தண்ணீரில் நனைகிறது. அவள் முகத்தை இருவர் தண்ணீருக்குள் முழுக்க நனைக்கின்றனர்.

திடீரென்று மோகன் அங்கு வருகிறான். மாணவர்களைத் தடுக்கிறான். அவர்கள் மோகனை அடிக்கின்றனர். மோகன் பாய்ந்து அவர்களோடு சண்டையிடுகிறான். இன்று இருளில் முரடர்களை அடித்தமாதிரி! மாணவர்கள் ஓடி வருகின்றனர். பாலா அழுதபடி சாக்கடையில் நிற்கிறாள். பாலாவைக் கை கொடுத்துக் கரையேற்றுகிறான் மோகன். மறுபடியும் பாலா அழுகிறாள்.

பாலாவிடம் சிறுவன் மோகன் சலிப்புடன், "எல்லாரும்தான் ஓடிப்போயிட்டாங்களே. இன்னும் ஏன் அழுது தொலைக்கிறே?" என்று கேட்கிறான்.

பாலா கண்களைத் துடைத்துக் கொண்டு, "அத்தான் சாக்கடையிலே விழுந்ததுக்காக அழலே! என்னை நீ காப்பாத்திட்டே. உன்னை அன்னிக்குக் கார் அழுக்காயிடும், காரிலே ஏறாதேன்னு சொன்னதுக்காக இப்போ அழறேன்!" என்கிறாள்.

சிறுவன் மோகன் சிரிக்கிறான். "அதுக்கு இப்போ என்ன செய்யணுங்கிறே" என்கிறான்.

பாலா, "அத்தான்... அத்தான்..." என்கிறாள். திடீரென்று ஏதோ தோன்றுகிறது. "நீ ரொம்ப நல்லவன் அத்தான்!" என்று சொல்லி அவனை முத்தமிட்டு விடுகிறாள்.

மோகன் சற்று வயது கூடியவனாகையால் வெட்கப்படுகிறான். "ஏன் அத்தான் கீழே பார்க்கிறே? முத்தம் கொடுத்தா உனக்குப் பிடிக்கலையா? இல்லை, சாக்கடைத் தண்ணீர் உன் சட்டையிலே பட்டுட்டதேன்னு பார்க்கறியா?" என்று வெகுளியாகக் கேட்கிறாள்.

மோகன், அவளை ஒருமுறை பார்த்துவிட்டு, அவள் கையிலுள்ள பொம்மையை முத்தமிடுகிறான். "இது உன் மாதிரியே இருக்கு பாலா?" என்கிறான்.

அப்போது, அங்கு அவள் தந்தையின் கார் வருகிறது. தந்தை காரிலிருந்து கோபத்தோடு இறங்குகிறார்.

## 10

காரிலிருந்து இறங்கிய சக்ரபாணி, சாக்கடை அருகில் தன் மகள் பாலா நனைந்துபோன கௌனுடனும் சிறுவன் மோகனுடனும் நிற்பதைப் பார்த்தான். மோகன், அவனுடைய இறந்துபோன மைத்துனன் மகன். மைத்துனன் சம்பந்தப்பட்டவர்களைப் பார்க்கும் போதெல்லாம் சக்ரபாணிக்குப் பிடிக்காத ஞாபகங்கள் எழும். பழைய ஞாபகங்கள், பழைய மனிதர்கள், பழைய விஷயங்கள் என்றால் பிடிக்காதவன் சக்ரபாணி.

'நேற்று சாப்பிட்டதை எடுத்து மறுபடியும் சாப்பிடுகிறோமா? கிழிந்துபோன பழைய துணிகளை எடுத்து மடித்து வைக்கிறோமா? அது போலத்தான் பழைய உறவுகளும், பழைய மனிதர்களும். கட்டிய மனைவி இன்றியமையாத உறவு. ஆகையால் வைத்துக் காப்பாற்ற வேண்டும். மற்றவர்களைப் பற்றி ஏன் அக்கறை கொள்ள வேண்டும்? எதிர்காலத்துக்குத் தேவையான மனிதர்கள், நாளைக்குப் பயன்படுபவர்களைப் பற்றி அக்கறை எடுத்துக் கொள்வதுதான் புத்திசாலித்தனம்' என்பது சக்ரபாணியின் கொள்கை. அதுவுமில்லாமல் அவனது இறந்த காலத்தில், பெருமைப்படும்படியான விஷயங்கள் எதுவும் இல்லை. அதை மனத்தின் முன் கொண்டு வராமல் இருப்பதே மேல் என்று நினைத்தான்.

மோகன் சந்திரனின் மகன். சந்திரனைப் பற்றி நினைக்கவே சக்ரபாணிக்குக் கஷ்டமாக இருந்தது. சந்திரன் அழிந்து போய் விட்டான். அவன் மனைவி

www.t.me/tamilbooksworld



எங்கோ விதவையாக வாழ்ந்து வருகிறாள். வெற்றி வெள்ளத்தில் கால் வைத்திருக்கும் தன் பாதையில் இந்தத் துக்கிரிகள் ஏன் குறுக்கிட வேண்டும் என்று நினைத்தான் சக்ரபாணி.

எனவே கோபத்துடன், "டேய் மோகன்! நீதானேடா இவளைச் சாக்கடையிலே தள்ளினே? அவள் கவுன் பூராவும் நனைஞ்சு போயிருக்கே?" என்று கத்தினான்.

இதைக் கேட்ட குழந்தை பாலா, "இல்லேப்பா! மோகன் தள்ளிவிடலைப்பா. வேறு பையன்கள் தள்ளினாங்க. மோகன் அத்தான்தான் என்னைக் காப்பாத்தினான்" என்று சொன்னாள்.

"சரி, சரி, காரிலே ஏறிக்கோ, கண்ணு!" என்று சொல்லி அவளைக் காரில் ஏற்றினான் சக்ரபாணி. காரில் ஏறிக் கொண்ட பாலாவுக்கு, மோகனுக்கு ஏதாவது நல்லது செய்ய வேண்டும் போல் தோன்றியது. "அத்தான், நீயும் காரிலே ஏறிக்கொள்" என்று சொன்னாள்.

ஆனால் மோகன் ஆத்திரத்துடன், "வேண்டாம்! நான் காரிலே ஏறினால் அழுக்கு உங்க கார்லே ஒட்டிக்கும்! எங்கப்பாவின் உதவியினாலேதான் உங்கப்பாவுக்குப் பணம் வந்ததாம்! இந்தப் பொம்மையும் நீயே வச்சுக்கோ!" என்று அதைக் காரில் அலட்சியமாக வைத்து விட்டு வேகமாக நடந்தான். பாலா, "அத்தான்! அத்தான்!" என்று கூப்பிட்டாள். ஆனால் அது அவன் காதில் விழவில்லை.

சக்ரபாணி, "அவன் திமிர் பேச்சைப் பார்த்தியா? இவனோடு நீ சேரவே கூடாது!" என்று சொல்லி, பொம்மையை எடுத்து எறியப் போனார். பாலா தந்தையைத் தடுத்தாள். "பொம்மை எனக்கு வேணும்பா!" என்று பறித்துக் கொண்டாள்.

அப்புறம்? பெரிய பாலாவின் ஞாபகங்கள் குழம்பிப் போயின. மற்றச் சம்பவங்கள் நினைவு வரவில்லை. அடுத்து, சற்றுத் தெளிவாக உருவான காட்சி குழந்தை பாலா இதே வீட்டின் நடுஹாலில் நின்று கொண்டிருக் கிறாள்.

பாலாவுக்குக் காமாட்சி அம்மா பலகாரம் கொடுக் கிறாள். பாலா அதைச் சாப்பிட்டுக் கொண்டே அத்தான் மோகனைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள் சிறுவன் மோகன் ஒரு சிறு காகிதப் பட்டம் தயார் செய்து கொண் டிருக்கிறான். காமாட்சி அம்மாள், ''வீட்டுக்குத் தெரியாமல் ஸ்கூல்லேருந்து வந்துட்டியே? அப்பா உன்னைத் தேடமாட்டாரா?'' என்று கேட்கிறாள்.

குழந்தை பாலா, ''அத்தானோடு இங்கேயே உங்க வீட்டிலேயே இருந்துடலாம் போலிருக்கு'' என்று பதில் சொல்கிறாள். காமாட்சி அம்மாள் சிரிக்கிறாள்.

அப்போது வெளி வராந்தாக் கதவை உதைத்துக் கொண்டு சக்ரபாணி நுழைகிறான். ஆத்திரத்தோடு, காமாட்சி அம்மாளை முறைத்துப் பார்க்கிறான். பிறகு காரசாரமாக என்னமோ வார்த்தைகள் பேசுகிறான். முடிவில், ''பாலாவின் பள்ளிக்கூடத்தை மாற்றி விடுகிறேன்!'' என்று சொல்லிவிட்டு, பாலா கதறக் கதற அவளை இழுத்துக் கொண்டு காருக்குச் செல்கிறான்.

இத்தோடு அவளுக்கு மோகனைப் பற்றிய ஞாப கங்கள் முடிந்தன. சில விநாடிகள் சிந்தித்துப் பார்ந்தாள். ஒன்றும் தோன்றவில்லை. அப்படியே மறுமுறை அந்தக் குழந்தைப் பருவத்துப் புகைப்படத்தைப் பார்த்தாள். பிறகு எழுந்து வந்து படுத்துக் கொண்டாள். தூக்கம் வரவில்லை, கொசுக்கடி வேறு. அவளே உணராமல் தூக்கம் அவள் கண்களைத் தழுவும்போது மணி இரண்டு.

மறுநாள் காலை சூரியன் உதித்த பின்புதான் எழுந் தாள். அப்போது அவள் மட்டுமே படுக்கையில் இருந்தாள்,

www.t.me/tamilbooksworld



காமாட்சி அம்மாள் சமையல் அறையில் வேலை செய்து கொண்டிருக்கும் சந்தடி கேட்டது. விழித்த பின்பும் படுக்கையில் படுத்திருக்கிறோமே என்ற வெட்கம் அவளைப் பற்றிக் கொண்டது.

தினமும் அவள் தன் வீட்டில் எழுந்திருக்கவே மணி எட்டாகும். இன்று கடிகாரத்தில் மணி ஏழுதான் ஆகி யிருந்தது. இருந்தாலும் இந்த வீட்டில் அப்படித் தூங்குவது சரியில்லை என்ற உணர்ச்சி ஏற்பட்டது. எழுந்து மடமடவென்று படுக்கையைச் சுருட்டி வைத்தாள்.

நடு ஹாலை அடுத்து உள்ள குளிக்கும் அறைக்குச் சென்று, பல்பொடி எடுத்துப் பல் தேய்த்து விட்டு வாய் கொப்புளித்தாள். மறுபடியும் நடுஹாலுக்கு வந்தாள். வாசல்புற அறை ஜன்னல் வழியே உள்ளே பார்த்தாள். மோகன் இன்னும் எழுந்திருக்காமல் தூங்கிக் கொண்டிருப் பான் என்று நினைத்தாள். ஆனால் அறையின் உட்புறம் பார்த்த காட்சி அவளைத் திடுக்கிடச் செய்தது.

''புஸ்...புஸ்'' என்ற இரைச்சலுடன் மோகன் தரையில் மேலும் கீழும் போய்க் கொண்டிருந்தான். அவன் தண்டால் எடுத்தபடி இருந்தான். அவன் உடலி லிருந்து வியர்வை வழிந்தபடி இருந்தது. அவன் முதுகுச் சதைகள் உருண்டு நெளிந்தன.

பாலா கூச்சத்துடன் நகர்ந்தாள், சமையல் அறை நோக்கி.

காமாட்சி அம்மாள் கையில் சூடான காப்பியுடன் சமையல் அறையிலிருந்து வந்தாள். ''காப்பி சாப் பிடம்மா!'' என்று பரிவோடு கொடுத்தாள்.

''மன்னிச்சிடுங்க. ரொம்ப நேரம் தூங்கிட்டேன்'' என்றாள் பாலா.

''பரவாயில்லை. இந்தக் காலத்திலே எல்லாருமே அப்படித்தான் தூங்குறாங்க'' என்று சொல்லிவிட்டு, மோகன் அறை நோக்கி நகர்ந்தாள் காமாட்சி அம்மாள்.

''டேய் மோகன், போதுமடா சுசரத் பழகினது. நீ என்ன போலீஸ் வேலையிலேயா இருக்கே? காய்ச்சி வச்ச பால் ஆறிப் போகுது. வந்து குடிடா!'' என்றாள்.

அறையினுட்புறமிருந்து, ''இதோ வந்துட்டேம்மா'' என்று மோகன் சொல்லும் பதில் கேட்டது. இரண்டு விநாடிகளுக்கெல்லாம் ஒரு டர்க்கி டவலைப் போர்த்திய படி மோகன் வெளியே வந்தான். அந்தத் துண்டினால் உடலைத் துடைத்தபடி தாயைப் பின் தொடர்ந்து சமையல் அறைக்குள் சென்றான்.

பாலா, பகல் வெளிச்சத்தில் மறுபடியும் போட்டோவைப் பார்த்தாள். அதைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போலிருந்தது. அவள் படத்தைப் பார்த்தவாறு நிற்கும்போது மோகன், காய்ச்சிய பாலைக் குடித்தபடி ஹாலுக்குள் வந்தான். பாலா அந்தப் படத்தைப் பார்ப்பதைக் கவனித்தவுடன், ''என்ன பார்க்கிறே? நான் சிறுவனா இருந்தப்போ ஸ்கூல்லே எடுத்த போட்டோ! எவ்வளவு மாறிப் போயிட்டேன் அப்போதைக்கு இப்போ! அந்தப் போட்டோவிலே நான் யாருன்னு காட்ட முடியுமா?'' என்று கேட்டான்.

''ஓ! நல்லா தெரியுதே! இதுதானே நீங்க!'' என்று படத்திலுள்ள சிறு மோகனைத் தொட்டுக் காட்டினாள் பாலா.

மோகன் ஆச்சரியம் அடைந்தான். ''பலே! என் சிநேகிதங்க எவ்வளவோ பேருகிட்டே இந்தப் போட்டோவைக் காட்டி, 'என்னைக் கண்டுபிடிங்கடா' என்பேன். ஒரு பயலாவது கரெக்டா சொன்னது கிடையாது. எல்லாரும் அந்தக் கோடியிலே உட்கார்ந்திருக்கிற குண்டுப் பையனைத்தான் நான்னு காட்டுவாங்க. நான் இன்னிக்கு வளர்ந்திருக்கிறதைப் பார்த்து அன்னிக்கு அப்படித்தான் இருந்திருப்பேன்னு சட்டென்று முடிவு கட்டிடுவாங்க. நீ எப்படிக் கரெக்டா கண்டுபிடித்தாய்?'' என்று அவளைக் கூர்ந்து பார்த்தான்.

www.t.me/tamilbooksworld



பாலாவுக்கு என்ன சொல்வது என்று புரியவில்லை. சிரித்தபடி, ''ஏதோ குருட்டாம் போக்கிலே சொன்னேன். சரியாப் போச்சு'' என்று சமாளித்தாள்.

''அதானே பார்த்தேன். லேசிலே கண்டுபிடிக்க முடியாது'' என்று திருப்தியோடு சொன்னான் மோகன்.

அவன் தன் அறைக்குச் சென்று உடை மாற்றிக் கொண்டு வந்தான். ''உனக்கு ஒரு டாக்ஸி பார்த்துக் கொண்டு வருகிறேன்'' என்றான். பாலா உடனே, ''உங்களுக்கு அநாவசிய சிரமம் வேண்டாம். எங்கு டாக்ஸி கிடைக்கும் என்று சொல்லுங்கள். நானே போய் ஏறிச் செல்கிறேன்'' என்றாள். பாலாவுக்கு அந்த இடத்தை விட்டுப் போக வேண்டியிருக்கிறதே என்று தோன்றியது. காமாட்சி அம்மாளின் முகத்தைப் பார்த்தாள். அந்த முகத்தில் பெண்ணின் சோகம் இருந்தது. அதோடு ஒரு கம்பீரம், பண்பு, பயமற்ற தன்மை இருந்தது. உடனே பாலா தன் தாயின் முகத்தை ஒப்பிட்டுப் பார்த்தாள். தாயின் பார்வையில் விளக்க முடியாத ஒரு பயம் இருந்தது. தாயின் சுழலும் விழிகள் வேங்கை துரத்திவரும் மானின் பார்வையை ஞாபகப்படுத்தின.

பாலா, காமாட்சி அம்மாளின் பாதங்களைத் தொட்டு வணங்கினாள். காமாட்சியோ, மோகனோ இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. திகைத்துப் போயினர்.

''உங்க உதவிக்கு நன்றி! நான் வருகிறேன்'' என்றாள்.

''ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் எங்க வீட்டிலே பூஜை உண்டு. உன்னாலே வர முடிஞ்சுதுன்னா வா! எனக்குத் திருப்தியாயிருக்கும்'' என்றாள் காமாட்சி. இந்த அழைப்பு பாலாவுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. அந்த வீட்டுக்கு மறுபடி வர ஒரு வாய்ப்பைக் கொடுத்தது அல்லவா! மகிழ்ச்சியோடு பாலா புறப்பட்டாள். மோகனும் அவளோடு தொடர்ந்தான்.

அந்தப் பகுதியில் வீடுகள் அடுத்து அடுத்து இருந்தன. காலை வேளையில் பக்கத்து வீட்டுப் பெண்மணிகள் கீரை காய்கறி வாங்கியபடி வாசல்படியில் நின்றனர். அவர்கள் பார்வை மோகன் மீதும், அவனருகில் நடந்து வரும் பாலாவின்மீதும் விழுந்தது. அந்தப் பார்வையின் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட மோகன், தரையைப் பார்த்தபடி நடக்க ஆரம்பித்தான். அதைப் பாலா கவனித்தாள். அந்தத் தெரு பெண்மணிகள் மோகனைச் சிறு வயதிலிருந்து உணர்ந்திருக்க வேண்டும். அவன் இதுவரை வேறு பெண்ணுடன் நடந்து செல்வதைப் பார்த்திருக்க மாட்டார்கள். அதனால் இன்று அவளோடு துணைக்கு வருபவனை ஆச்சரியத்துடன் பார்க்கிறார்கள் என்று பாலா புரிந்து கொண்டாள். "பாருங்க மோகன், என்னாலே உங்களுக்கு ரொம்பக் கஷ்டம். அக்கம் பக்கத்துக்காரர்கள் ஒரு மாதிரியாப் பார்க்கிறாங்க. நீங்க வீட்டுக்குப் போயிடுங்க. நானே டாக்ஸி பார்த்திட்டுப் போறேன்" என்றாள்.

"நாங்க இதே வீட்டிலேதான் பல வருஷமா இருக்கிறோம். அக்கம்பக்கத்துக்காரங்களுக்கு எங்களை நல்லாத் தெரியும். எனக்கு எப்போ கல்யாணம்னு எங்கம்மாவிடம் ஓயாமல் வம்பளப்பாங்க. அம்மா, என் பிள்ளை கல்யாணத்தை நான்தான் முடிவு பண்ணணும்னு சொல்லியிருக்காங்க. இன்னிக்கு மத்தியானம் ஒவ்வொருத்தரா எங்கம்மாவைப் பார்க்க வருவாங்க. 'காமாட்சி, அந்தப் பெண் யாருடி தந்தச் சிலை மாதிரி? காலையிலே மோகனோட போயிட்டிருந்தாளே?' என்று கேட்பாங்க. எங்கம்மா, சாங்கோ பாங்கமா நேத்து ராத்திரி உனக்கு ஏற்பட்ட நெருக்கடியைக் கண்ணும் மூக்கும் வைச்சு விளக்குவாங்க. இன்னிக்கு மத்தியான்னம் நடக்கப் போற காலட்சேபத்துக்கு நீதான் ஹீரோயின்!" என்றான்.

பாலா குறும்புத்தனமாக மோகனைப் பார்த்தபடி, "நான் தந்தச் சிலை மாதிரியா இருக்கேன்?" என்று கேட்டாள்.



மோகனுக்கு தான் என்ன சொல்லுவது என்று தெரியாமல் திகைத்தான். பிறகு சமாளித்தபடி சிரித்தான். "அக்கம் பக்கத்துக்காரங்க உன்னை அப்படி வர்ணிப்பாங்கன்னு சொன்னேன்" என்றான்.

இருவரும் பேசாமல் நடந்தனர். எதிரே ஒரு டாக்ஸி வந்தது. அதில் பாலா ஏறிக் கொண்டாள். மோகன் தன் பையிலிருந்து மூன்று ஒரு ரூபாய் நோட்டுக்களை எடுத்து, "டாக்ஸி செலவுக்காக வைத்துக்கொள்" என்று நீட்டினான்.

மோகன் அவளை ஓர் ஏழைப் பெண் என்று நினைத்துத் தான் பணத்தை நீட்டுகிறான் என்பது அவளுக்குத் தெரியும். அவளை ஏழை என்று அவன் நினைப்பதில் அவளுக்கு ஓர் அலாதியான இன்பம் இருந்தது. பணத்தை மறுத்தால், மோகனின் ஆணவத்துக்குக் குறைவு ஏற்படும் என்றும் எண்ணினாள். அதனால், பணத்தைக் கை நீட்டி வாங்கிக்கொண்டாள். பிறகு, "இந்த மூன்று ரூபாயை நான் திருப்பிக் கொடுக்கும்போது நீங்கள் மறுக்காமல் வாங்கிக் கொள்ள வேண்டும். அந்த நிபந்தனையின் பேரில்தான் நான் இதை உங்களிடமிருந்து பெற்றுக் கொள்கிறேன்" என்று கூறினாள்.

டாக்ஸி நகரும்போது அவளையே பார்த்தபடி நின்றான். பாலாவுக்கும் இதயத்தில் ஒருவிதப் பளு ஏற்பட்டது.

டாக்ஸிக்காரன், "எங்கேம்மா போகணும், சொல்லுங்க!" என்று கேட்டான். பாலா தன் வீட்டுக்கு அருகிலுள்ள ஒரு தெருவின் பெயரைச் சொன்னாள். டாக்ஸி வேகமாகப் பறந்தது.

வீடு வருமுன்பே பணத்தை டாக்ஸிக்காரனிடம் கொடுத்துவிட்டு இறங்கிக் கொண்டாள் பாலா. டாக்ஸி சென்றதும் வேகமாக நடந்து வீட்டுக்குச் சென்றாள். ஓர் கூர்க்கா பாலாவை ஆச்சரியத்துடன் பார்த்தான்.



www.t.me/tamilbooksworld

இரவு பூராவும் வீட்டில் இல்லாமல் வெளியே கழித்திருக்கிறோம் என்ற குற்ற உணர்ச்சி பாலாவின் மனத்தில் இருந்தது. தந்தைக்கு விஷயம் தெரிந்தால் அவர் கோபப்படுவாரோ? அவர் கேள்விகள் கேட்டால், என்ன பதில் சொல்லுவது? பலவிதச் சிந்தனைகள் அவளைத் தாக்கின.

வீட்டின் வெளிப்புறத்திலுள்ள டிரைவர்கள் எல்லோருமே பயந்தபடி அவளைப் பார்த்தனர். அவர்களுக்கெல்லாம், இரவு அவள் வீட்டில் இல்லை என்பது தெரிந்திருந்தது. தந்தை, இரவு அவள் இல்லாதது குறித்து மற்றவர்களைத் திட்டி இருப்பாரோ? யாருக்காவது வேலை போயிருக்குமோ? பலவாறு சந்தேகம் எழுந்தது.

## 11

தின் அறையினுள் நுழைந்த தந்தையைப் பார்த்ததும் பாலா முதலில் குழப்பமடைந்தாலும், உடனே சமாளித்துக் கொண்டாள். இன்று என்னவோ அவளுக்குத் தந்தையிடம் பயம் இல்லை. 'இரவு பூராவும் நீ எங்கே போயிருந்தாய் என்று அப்பா கேட்டால் அதற்குப் பயம் இல்லாமல் பதில் சொல்வேன்' என்று தனக்குத்தானே தீர்மானித்துக் கொண்டாள். 'என் தவறுக்காகத் தந்தை யாரையாவது வேலையிலிருந்து நீக்கவோ, தண்டிக்கவோ செய்தால், நான் சும்மா இருக்கப் போவதில்லை' என்றும் கூறிக்கொண்டாள்.

சக்ரபாணி, அவளை ஒருமுறை விறைத்துப் பார்த்தான். பிறகு வேகமாக அவளை நோக்கி நடந்து வந்தான். அவள் முகத்தை ஒரு விநாடி கூர்ந்து கவனித்தான். பிறகு அவள் கழுத்தை, கைகளைப் பார்த்தான். அவன் கண்கள் கலக்கமடைந்தன.

''என்ன பாலா, கையிலே முகத்திலே எல்லாம் திட்டுத் திட்டாகச் சிவந்து போயிருக்கிறதே? கொசுக்கடியா? இந்த ஏர்கண்டிஷன் ரூமில் கொசு கடிக்குதா? என்ன பாலா, கண் சிவந்து போயிருக்கிறதே! ராத்திரி பூரா நீ தூங்கலியா?''



சக்ரபாணி பதற்றத்துடன் பாலாவின் நெஞ்சங் குழியில் கையை வைத்துப் பார்த்தான். ''ஒரேயடியாச் சுடுதே! உனக்கென்னம்மா உடம்புக்கு? உடனே டாக்டருக்குச் சொல்ல வேண்டாமா? நானும் உங்கம்மாவும்தான் ராத்திரி தூக்கமில்லாமல் இந்த வீட்டிலே உலாத்திக்கிட்டு இருக்கோம்...'' என்று அடுக்கிக் கொண்டே போனான். பணம் சம்பாதிக்கும் யந்திரமாயிருந்த சக்ரபாணி ஒரு விநாடிக்கு மனிதனானான். அவன் முகத்தில் அயர்வும் சோர்வும் தெரிந்தன. அப்படியே கால் தள்ளாட அருகிலிருந்த சோபாவில் உட்கார்ந்தான்.

பாலாவின் முகத்தில் சற்று முன் தந்தையிடமிருந்த கசப்பும் பயமும் மறைந்தன. அவள் பார்வையில் தந்தை ஒரு குழந்தையாகத்தான் தோன்றினார். சக்ரபாணி மீது அவளுக்குப் பச்சாதாபம் ஏற்பட்டது.

''என்னப்பா, உங்க முகம் படபடப்பா இருக்கு?'' என்று கேட்டாள்.

''ராத்திரி பூரா மில்லிலே கலாட்டா. ஒரே கூச்சல். சோம்பேறிப் பசங்களை வேலையிலிருந்து நீக்கிட்டதுக்காகக் கூச்சல் போடறாங்க! பருத்தி ஷெட்டுக்குத் தீ வைச்சிட்டாங்க. அது விஷயமா இரண்டு மணி வரையிலே மில்லுலேதான் இருந்தேன்'' என்று கூறியபடி தன் நெற்றியைத் துடைத்துக் கொண்டான் சக்ரபாணி. அவன் மூச்சு, பேசும்போது 'புஸ்... புஸ்...' என்று வேகமாக காற்று வந்து சென்றது.

''நேற்று ராத்திரி மில்லிலேருந்து வந்ததும் உன்னைப் பார்க்க உன் ரூமுக்கு வரலாம் என்று இருந்தேன். அப்புறம் உன்னைத் தூக்கத்திலே டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்னு ஆபீஸ் ரூமுக்குப் போயிட்டேன்'' என்றான்.

www.t.me/tamilbooksworld

தான் முதல் நாள் இரவு பூராவும் வீட்டில் இல்லை என்ற விஷயம் தந்தைக்கு இன்னும் தெரியாது என்பது பாலாவுக்குத் தெளிவாகியது.

சக்ரபாணி எழுந்தான். பாலாவின் அறையை ஒரு முறை பார்த்துவிட்டு, ''உடனே வேலுவைக் கூப்பிட்டுக் கொசு மருந்து அடிக்கச் சொல்லணும். இப்படிக் கொசுக் கடியிலே நீ எப்படித் தூங்கறது?'' என்று சொல்லிவிட்டு, எப்படித் திடீரென்று அறையில் நுழைந்தானோ, அப்படியே திடீர் என்று வெளியே போய் விட்டான்.

சக்ரபாணி அறையைவிட்டுப் போன பின்பு, மாலா கூறியதிலிருந்து வீட்டுச் சிப்பந்திகள் எல்லாருமாகப் பாலா வீட்டில் இல்லையென்ற விஷயத்தைச் சக்ரபாணியிடம் எப்படிக் கூறுவது என்று தவியாய்த் தவித்தது பற்றி உணர்ந்தாள். காலையில் பாலா வீட்டினுள் நுழைந்த போது எல்லோர் முகத்திலும் ஏற்பட்ட தெளிவுக்கும் மகிழ்ச்சிக்கும் காரணம், இப்போதுதான் பாலாவுக்குப் புரிந்தது. அவள், அத்தான் வீட்டில், குழந்தைப் பருவத்து நிகழ்ச்சிகளை ரசித்துக் கொண்டிருந்தபோது இங்கு வீட்டில் வேலைக்காரர்கள் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு தவித்திருக்கிறார்கள் என்பது தெளிவாயிற்று.

அவள் மோகனுடன் ஸ்கூட்டரில் அமர்ந்து சென்ற போது மில் வெளியே ஒரு கூட்டம் நின்று கூச்சலிட்டது ஞாபகத்துக்கு வந்தது. அந்த மில்லில் சில மணி நேரங்களில் தீ விபத்து ஏற்பட்டதால் தந்தையின் கவனம் பூராவுமே தீ விபத்தில் இருந்ததால் அவள் வீட்டில் இல்லாததைக் குறித்து, அவர் நினைக்கவே இல்லை. அத்தான் மோகன் வீட்டில், அவன் வீடு திரும்பும் வரை தாய் உணவருந்தாமல் காத்திருக்கிறாள். ஆனால் இங்கு பாலா வீட்டில், அவள் ஓர் இரவு வீடு திரும்பாதது பற்றித் தந்தைக்குத் தெரியவில்லை. அவள் தாயோ அதைப் புரிந்து கொள்ளும் நிலையில் இல்லை. பாவம், வேலைக்



காரர்கள் மட்டும் கவலையோடு இருந்திருக்கின்றனர். வேலையாட்களின் கவலை, அவர்களின் வேலை போய் விடுமோ என்ற பயத்தால்தான். பாலாவின் மீது உள்ள அன்பு காரணமாக அல்ல.

காமாட்சி அம்மாளின் சிறிய வீட்டில் இருந்த ஒரு விஷயம் நீண்டு அகன்ற அடுக்கு மாடி வீட்டில் இல்லை. அது என்ன? அன்பு இல்லையா? அவள் தந்தை அவருக்குத் தெரிந்த அளவுக்கு, அவள் மீது உயிரையே வைத்திருந்தார். அவரது பேய் உழைப்புக்குக் காரணமே பாலாவை ஒரு கோடீசுவரியாக்கும் நோக்கம்தானே! அவள் மீதுள்ள அன்புதானே, சக்ரபாணியின் கொழிந்துவிட்டு எரியும் வியாபார தீபத்துக்கு எண்ணெய் திரியெல்லாம். மற்றச் சாதாரண வீடுகளில் இருந்த ஒன்று, இந்தப் பளிங்கு மாளிகையில் இல்லை. அதுதான் 'குடும்ப அமைப்பு!' அப்பா—அம்மா— குழந்தைகள் இவர்களிடையே உள்ள இனிமையான பிணைப்பு; கடன் தொல்லை, ஏழைமை, பணத்தட்டு இந்தப் பூச்சாண்டிகள் சுற்றிலும் நர்த்தனமாடும் போதுகூடச் சிறிதளவு இன்பத்தை நுகர வைப்பது இந்தக் குடும்பப் பிணைப்புத்தான்.

தினமும் தூங்கும்போது நாளைக்கு என்ன வருமோ என்ற அச்சத்தில் தூங்கினாலும், விடிந்து எழும்போது இன்று எப்படி முடியுமோ என்ற பீதியோடு எழுந்தாலும், சாதாரண மக்கள், என்றாவது ஒரு நாள் நாம் நிம்மதியாக நன்றாக வாழ்வோம் என்ற நம்பிக்கையோடு வாழ்கின்றனர். கணவனால் விடியாத துக்கம், மகனால் விடியும் என்று நம்பி, துக்கத்தைச் சுமக்கின்றனர். நேற்றும் இன்றும் நம்முடையதாக இல்லாவிட்டாலும், நாளைய பொழுதாவது நமக்கு விடியும் என்று நம்பிக்கையில் வாழ்கின்றனர். அந்த நம்பிக்கைதான் பொதுக் குடும்பக் கஷ்டத்தைக் குடும்பத்தார் சேர்ந்து பகிர்ந்து கொள்ளச் செய்கிறது.

சக்ரபாணியின் வீட்டில் நபர்கள் பகிர்ந்து கொள்ள

www.t.me/tamilbooksworld

மிஞ்சி இருந்தது எல்லாம் செல்வம்தான். துக்கம் இணைக்கும் பசையுடையது. செல்வம் ஒரு பிரிக்கும் கத்திரி. செல்வம் இருக்கும் நிலையில் அனுதாபத்துக்கு இடமில்லை! 'நாளை நம்முடையது' என்ற நம்பிக்கை சக்ரபாணியின் வீட்டில் வேதையில்லாமல் போய்விட்டது. காரணம், இன்றே அவனுடையது. அவன் எல்லையற்ற செல்வத்துக்கு உரியவன். பாலாவுக்கு எதிர்காலத்தைப் பற்றிய பயமே இல்லை. அதனால் வீட்டிலுள்ள மூன்று நபர்களுக்குள் ஓர் இணைப்பு இல்லை. தாய்க்கும் மகளுக்கும்—தந்தைக்கும் மகளுக்கும் என்ன இணைப்பு இருக்கிறது? பாலா சிந்தித்தாள். சிந்திக்கச் சிந்திக்க அவளுக்குக் குழப்பமே ஏற்பட்டது.

தன் படுக்கையைவிட்டு எழுந்து குளிக்கும் அறைக்குள் சென்றாள். அங்கு ஆடைகளைக் களைந்துவிட்டு ஒரு ஸ்விட்சை அழுத்தினாள். குளத்தில் வெந்நீர் நிரம்பியது. வெந்நீரில் இறங்கினாள். இளம்சூடு அவள் மேனியில் தாக்க, அது அவள் மனத்துக்கு ஆறுதலாக இருந்தது. கண்கள் தாமாகவே மூடிக்கொண்டன. குழப்பம் அளித்த சிந்தனைகள் மறைந்தன. உள்ளம் ஓய்வெடுத்துக் கொள்ளவே உடலில் லயித்து நின்றாள். அந்த உடல் லேசான வெப்பத்தில் மிதந்தது. வெப்பம் உடல் பூராவும் பரவும் நிலையில் மறுபடியும் உடலில் மனம் வேலை செய்ய ஆரம்பித்தது.

இப்போது அவள் சிந்தனை, பணம், பாசத்தைப் பற்றி அலசி ஆராயவில்லை. வெந்நீரின் வெப்பம் அவள் மனதுக்குக் கொடுத்த கற்பனை, அத்தான் மோகனைப் பற்றி. அவன் அந்தச் சிறு வீட்டு அறையில் மூச்சு முட்டிய படி தண்டால் எடுத்த காட்சி மனத்தில் தோன்றியது. அவனுடைய மேல் புஜத்துச் சதைகள் நெளிவதும், அவனுடைய பட்டு மேனி வியர்வையில் மின்னுவதும், அவன் யதார்த்தமாகச் சிரிப்பதும் கவனத்துக்கு வந்தன. அடுத்தபடியாக அவள் கற்பனை, மோகன் அதே நீச்சல்

www.t.me/tamilbooksworld



குளத்தில் நீந்தும் காட்சியை உருவாக்கிப் பார்த்தது. இருவரும் கைகள் சேர்த்து மிதப்பது போல் நினைத்துப் பார்த்தாள்.

கண்களைத் திறந்து குளத்தைப் பார்த்தாள். அவள் உடல் மட்டும் தனிமையில் நீரில் மிதந்து கொண்டிருந்தது. அந்த உடலில் கொசுக்கடியால் ஏற்பட்ட தடிப்பு திட்டுத் திட்டாகத் தெரிந்தது. அந்தக் கொசுக்கடித் திட்டுக்களை அன்போடு விரலால் நெருடினாள். அத்தான் வீட்டுக் கொசு கடித்த இடம் என்ற பரிவா? அவள் தனக்குத் தானே சிரித்துக் கொண்டாள். கால்களை உதைத்து நீந்தியபடி போய் நீச்சல் குளத்தின் சுவர் ஓரத்தில் இருந்த ஸ்விட்ச்சைப் போட்டாள். ரேடியோவிலிருந்து ஒரு பழைய பாடல் ஒலித்தது. எஸ். ஜி. கிட்டப்பா அந்தக் காலத்தில் பாடிய இசைத்தட்டு ''ஐந்து கரனுக்கு இளையோனே!'' என்ற பாடல்.

பொதுவாக ஐரோப்பிய சங்கீத இசைத் தட்டுக்களில் மனம் லயித்துப் பழகிய பாலாவுக்கு, இன்று கிட்டப்பாவின் பாடல் புதுக் கவர்ச்சியோடு ஒலித்தது.

''பிஞ்சிலே கூடினேனடி
பிரிய மனம் இல்லையடி!''

—என்ற வரிகள், பாலா—மோகன் குழந்தைப் பருவத்து வாழ்வையே சித்திரிக்கும் வரிகள் போலத் தோன்றின.

பள்ளியின் வெளிப்புறத்துச் சாக்கடை அருகில், மோகன் அவளைச் சாக்கடையிலிருந்து எடுத்து விட்டவுடன், நன்றி உணர்ச்சியோடு பாலா, மோகனை விகற்பமில்லாமல் முத்தமிட்ட காட்சி மறுபடியும் அவள் மனக்கண் முன்பு எழுந்தது.

பாலா தனக்குத்தானே சிரித்துக் கொண்டாள்.

குளித்துவிட்டுப் புது ஆடை மாற்றிக் கொண்டு, தன் அறைக்கு வந்தாள். அறையில் சிற்றுண்டி தயாராக வைக்கப்பட்டிருந்தது. அதைத் தனிமையில் சாப்பிடவே அவளுக்கு என்னவோ போல் இருந்தது. அங்கிருந்து

தன்னுடைய தாயின் அறைக்குச் சென்றாள். சிற்றுண்டியை அங்கே கொண்டு வரும்படி வேலையாளிடம் சொன்னாள்.

பாலாவின் தாய் விரித்த தலையோடு ஜன்னல் வழியே வெளியே பார்த்தபடி இருந்தாள்.

பாலா, ''அம்மா! அம்மா!'' என்று சொல்லிக் கூப்பிட்டாள். தாய் அவளைத் திரும்பிப் பார்த்தாள். லட்சுமியின் பார்வையில் பயம் இருந்தது.

''இங்கே வாம்மா!'' என்று கனிவோடு அழைத்தாள். என்றுமே இல்லாத ஒருவித அன்புணர்ச்சியோடு இன்று தான் பாலா தன் தாயைப் பார்த்தாள்.

தாய், பயந்து கொண்டே பாலாவிடம் வந்தாள். ''என்னைப் பார்த்து நீ பயப்படாதேம்மா!'' என்றாள் பாலா. லட்சுமி திருதிருவென்று விழித்தாள். கூடவே நர்சுகள் வந்தனர். பாலாவுக்கு அவர்களைப் பார்க்கவே வெறுப்பாக இருந்தது.

அவர்கள் அருகில் இருக்கும்போது தாயோடு பேசுவதே அவளுக்கு இயற்கையாகத் தோன்றவில்லை. ஜெயிலில் வார்டர்கள் இருக்கும்போது கைதியுடன் பேசுவதுபோல் இருந்தது. நர்சுகளைப் பார்த்து, ''நீங்கள் இரண்டு பேரும் கொஞ்சம் வெளியே போங்க'' என்றாள். நர்சுகள் ஒருவரையொருவர் பார்த்தபடி நின்றனர். அவர்கள் நகரவில்லை.

''நான் சொல்றேன், போன்னு. ஏன் சும்மா நிக்கறீங்க?'' என்று கேட்டாள் பாலா.

''அம்மாவைத் தனியா ஒருநிமிடம் கூட விடக்கூடாது என்பது எஜமான் உத்தரவு'' என்றாள் ஒரு நர்ஸ்.

''பரவாயில்லே. நீங்க ரெண்டு பேரும் போய் வராண்டாவிலே இருங்கள். எஜமான் கேட்டா, நான் உத்தரவு இட்டேன்னு சொல்லுங்க'' என்றாள் பாலா.

நர்சுகள் அதற்குமேல் ஒன்றும் பேசாமல் சென்றனர்.

www.t.me/tamilbooksworld



நர்ஸ் கதவருகில் சென்றதும், ''நாளைக்குப் பௌர்ணமி. அம்மாகிட்டே ஜாக்கிரதையா பேசுங்க'' என்று சொல்லி விட்டு வராண்டாவுக்கு வெளியே சென்றதும், பாலா கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

அறையின் மூலையில் ஒரு விலங்குபோல் பதுங்கியபடி லட்சுமி எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தாள். ''இரண்டு பீடையும் தொலைஞ்சுதா? நல்லதாப் போச்சு'' என்று சிரித்தபடி வந்து பாலா அருகில் உட்கார்ந்தாள்.

பாலா, ''அம்மா! பலகாரம் சாப்பிடறியா?'' என்று கேட்டாள். ''ஓ! சாப்பிடறேனே!'' என்று குழந்தை போல் உற்சாகத்துடன் லட்சுமி கூறினாள். அங்குள்ள டீப்பாயில் இலையை வைத்து, அதில் ரவா தோசையை வைத்துச் சட்டினியைப் போட்டாள் பாலா.

''சாப்பிடம்மா!'' என்றாள்.

தோசையை எடுத்து லட்சுமி தூக்கிப் பார்த்தாள். ''பாருடி தோசையை பொட்டுப் பொட்டா ஒரே ஓட்டையா இருக்கு. சல்லடை மாதிரி இல்லே!'' என்று கேட்ட லட்சுமி உடனே அழ ஆரம்பித்தாள்.

''ஏம்மா அழறே? தோசையைச் சாப்பிடும்மா'' என்றாள் பாலா. உடனே லட்சுமி தோசையைத் தட்டில் வைத்துவிட்டு அதையே பார்த்தபடி இருந்தாள். பாலா, ''சும்மா தோசையைப் பார்த்திட்டிருந்தா? சாப்பிடம்மா'' என்றாள்.

உடனே வேகமாக லட்சுமி திரும்பினாள். அவள் முகத்தில் ஒரு கலவரம் ஏற்பட்டது. ''பாலா! நீ என்னை வேவு பார்க்க வந்து இருக்கே. உங்கப்பா உன்னை இங்கே அனுப்பியிருக்கார். சொல்லு, உண்மையா இல்லியா?'' என்று கேட்டாள்.

''யாரும் என்னை அனுப்பலேம்மா. நான் உன் பொண்ணும்மா. நானேதான் வந்தேன்.''

''நீ பொய் சொல்றே. உங்கப்பா உன்னை இங்கே

அனுப்பி இருக்கார்!'' என்று கூறிவிட்டு லட்சுமி பற்களை நறநறவென்று கடிக்க ஆரம்பித்தாள். அவள் கைகள் துடித்தன. அவள் விழிகள் நட்டுக் கொண்டன. ''சந்திரா! சந்திரா!'' என்று இருமுறை கூறிவிட்டு, குபீரென்று பாலாவின் மீது பாய்ந்தாள். லட்சுமியின் கரங்கள் பாலாவின் கழுத்தைப் பற்றிக் கொண்டன. லட்சுமி சிரிக்க ஆரம்பித்தாள். பாலாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. தனக்கு உயிர் கொடுத்த தாய், தன்னை ஏன் வெறுப்போடு அப்படிப் பார்க்க வேண்டும்? லட்சுமியின் விரல்களின் பிடி, பாலாவின் கழுத்தை அழுத்தியது. பாலாவுக்குப் பயமே ஏற்பட்டது.

பாலா திமிறினாள். ''எங்கே தப்பி ஓடப் பார்க்கிறே? உன்னை விடமாட்டேன்'' என்றாள் தாய். தாயின் கை பாலாவின் கழுத்தை வலுவாக அழுத்தியது. பாலா வீரிட்டலறினாள். பல முறை அலறினாள். லட்சுமி சிரித்தாள்—பாலாவின் கண்கள் இருண்டன. கைகளின் பிடி நழுவியது. பாலா, ''அப்பா! அப்பா!'' என்று அலறியபடி தரையில் விழுந்தாள்.

## 12

பாலா தரையில் மயங்கி விழுந்ததும், அறையின் தாழ்ப்பாள் வெளிப்புறமிருந்து தள்ளப்பட்டது. கதவு படீரென்று திறந்து கொண்டது. இரண்டு நர்ஸுகளும் ஓடி வந்தனர். அவர்களைத் தொடர்ந்து சக்ரபாணியும் அறைக்குள் ஓடிவந்தான். அருமை மகள் தரையில் கிடப்பதையும், அவள் கழுத்தைப் பிடித்தபடி மனைவி லட்சுமி இருப்பதையும் பார்த்தான். அவன் முகம் சிவந்தது. வேங்கை பாய்வது போல் மனைவியின்மீது பாய்ந்தான். லட்சுமியின் முகத்தில் மழை போல் அறைகள் விழுந்தன. லட்சுமி தரையில் சுருண்டு விழுந்த பின்பும், சக்ரபாணி அதை உணராமல் லட்சுமியை அறைந்தபடி இருந்தான்.

www.t.me/tamilbooksworld



பாலாவுக்கு இருண்ட உலகம் மெள்ள ஒளியோடு திரும்பியது. தந்தை தன் தாயை அடிப்பதைப் பார்த்தாள்.

''அப்பா, அம்மாவை ஒண்ணும் செய்யாதிங்கப்பா!'' என்று தந்தைமீது பாய்ந்து தடுத்தாள்.

சக்ரபாணி, மகளிடம் திரும்பினான். ''நீ ஏன் பாலா, இந்த அறைக்குள்ளே தனியே வந்தே?'' என்று கேட்டான்.

''அம்மாவுக்குப் பலகாரம் கொடுக்கலாம்னு வந்தேன். அம்மாவும் சாதுவாத்தான் இருந்தாங்க. நான் ரவா தோசையை எடுத்து ப்ளேட்டில் வச்சதும், அம்மா அதைப் பார்த்தாங்க. அம்மாவிடம் திடீர்னு ஒரு மாறுதல் வந்தது. வேவு பார்க்க அப்பா உன்னை அனுப்பினாரான்னு கேட்டாங்க. அப்புறம் என் கழுத்தைப் பிடிச்சு நெறிச்சிட்டாங்க'' என்று பாலா கூறினாள்.

சக்ரபாணி உடனே தன் கோபத்தை நர்ஸுகள் மீது திருப்பினான். ''லட்சுமி அறைக்குள் சில பொருள்களைக் கொண்டு வரக்கூடாது என்று டாக்டர் கூறி இருக்கிறார். அதில் ரவா தோசை ஒன்று என்பது உங்களுக்குத் தெரியாது?'' என்று கோபத்துடன் சத்தம் போட்டான்.

''தெரியும் பாஸ். ஆனால் பாலா தான் சாப்பிடும் பலகாரத்தை இங்கே உட்கார்ந்து ஆர்டர் பண்ணினாங்க. எங்களுக்கு மூடி வச்ச ப்ளேட்டில் என்ன இருக்குன்னு தெரியாதுங்க. பௌர்ணமி நெருங்கிடுச்சு. தனியா நீங்க இந்த அறையிலே இருக்கக் கூடாதுன்னு எவ்வளவோ சொன்னோம். சின்ன எஜமானியம்மா கேட்கல்லே, நான் அப்பாகிட்டே சொல்லிக்கிறேன்னு சொல்லி எங்களை அனுப்பிட்டாங்க'' என்று கூறினாள் நர்ஸ்.

''அப்பா, அவர்கள் மேல் எந்தவிதத் தப்பும் இல்லே, எனக்கு இன்னிக்குத் திடீர்னு அம்மாவைப் பார்த்துப் பலகாரம் கொடுக்கணும்போல் இருந்தது. இந்த மாதிரி நடக்கும்னு தெரியாதுப்பா! அம்மா வேணும்னா செய்

தாங்க? தன் மகளையே கொலை செய்யத் துணி வாங்களா?'' என்றாள் பாலா.

அறை மூலையில் லட்சுமி அமர்ந்திருந்தாள். அவள் முகம் இப்போது வியர்த்திருந்தது. அவளைத் தாக்கிய திடீர் வெறி வந்துபோய்விட்டது என்பதற்கு அறிகுறியாக முகம் வியர்த்து, சோர்வுடன் காணப்பட்டாள். அவள் பார்வை இப்போது பாலாவைக் கனிவுடன் பார்த்தது. அவள் கண்கள் அழுதபடி இருந்தது.

''கண்ணே பாலா! நீ இனிமேல் என்னைத் தனியாகப் பார்க்க வராதே! என்னோடு தனியாகவே இருக்கா தேம்மா. உங்கம்மா இறந்துட்டதாக நினைச்சு, நீ வராமலே இருந்துடு, பாலா!'' என்றாள்.

உடனே லட்சுமி குழந்தை போல் விசித்து விசித்து அழ ஆரம்பித்தாள். பாலாவுக்குத் தாயைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது. சக்ரபாணி முரட்டுத்தனமாக லட்சுமியின் முகத்தில் அறைந்தபோது அவள் முகத்தில் ஏற்பட்ட கீறல்கள் ஓரிரண்டு இடத்தில் தெரிந்தன. விழுந்த அடியின் காரணமாக லட்சுமியின் சிவந்த மேனி, மேலும் சிவந்து போயிருந்தது.

சக்ரபாணியின் கலங்காத சித்தமே வழக்கத்துக்கு மாறாக இன்று அடிபட்ட மனைவியைப் பார்த்ததும், சிறிது குழம்பியது அவன் கண்களில் தெரிந்தது.

''இதுவரை உன் அம்மா இரண்டு வார்த்தைகள் கூடத் தெளிவாகப் பேசியதில்லை பாலா. இன்று அவள் பேசுவதைக் கேட்க எனக்கே ஆச்சரியமாயிருக்கு பாலா!'' என்றான்.

''ஒவ்வொரு பௌர்ணமி அமாவாசைக்குப் பெரி யம்மாவுக்கு இந்த மாதிரி வெறி ஏற்படும். அது தணிய இரண்டு நாளாவது பிடிக்கும். ஆனால் இந்த முறை ரொம்பச் சீக்கிரமா தீர்ந்து போச்சு. அதோடு தெளி வோட பேசறாங்க'' என்றாள் முதிய நர்ஸ்.

www.t.me/tamilbooksworld



''அப்பா, அம்மாவுக்குப் பூரண குணம் ஏற்படும்னா நான் தினமும் இந்த ஆபத்தைச் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொள்வேன் அப்பா!'' என்றாள் பாலா.

சக்ரபாணி ஒன்றும் பேசவில்லை.

''ஜெர்மன் டாக்டர் சொன்னது சரியாயிற்று. இந்த ரூமின் வெளிப்புறத்திலிருந்து இந்த ரூம் தாழ்ப்பாளைத் திறக்கும் ஸ்பிரிங்கு அமைக்க வேண்டும் என்று அவர் சொல்லித்தான் போட்டோம். அது மட்டும் செய்திரா விட்டால் பாலா உனக்கு என்ன ஆகியிருக்குமோ? வா. பாலா'' என்று மகளை அன்போடு அழைத்துக் கொண்டு வெளியே வர முயன்றான்.

பாலா அவன் அணைப்பிலிருந்து திமிறிக் கொண்டு தன் தாயிடம் சென்றாள். அழுதபடி தாய், பாலாவைப் பார்த்தாள்.

''அழாதேம்மா, நான் உன் பெண்ணம்மா! நீ சுமந்து பெற்ற பெண்ணம்மா! உனக்கு என்னை அடிக்க உரிமை இருக்கு. வருத்தப்படாதேம்மா!'' என்றாள் பாலா.

லட்சுமி முகத்தை மூடிக்கொண்டு எழுந்து அடுத்த அறைக்கு ஓடினாள். உணர்ச்சிகள் மனிதனைக் கோழை யாக்குகின்றன என்பதில் நம்பிக்கையுள்ளவனாகையால், சக்ரபாணிக்கு அங்கு நிற்கப் பிடிக்கவில்லை. ''வா, போகலாம்!'' என்று மகளை அழைத்துக் கொண்டு வெளியே வந்தான். ரூமின் கதவருகில் நின்றபடி நர்ஸுகளைப் பார்த்தவன், ''இனியொருமுறை இம்மாதிரி நிகழாமல் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று எச்சரித்தான்.

சக்ரபாணி பாலாவின் அறைவரை அவளைத் தொடர்ந்தான். பாலாவைக் கழுத்தை நெறித்துக் கொல்ல நினைத்த அந்த ஒரு நிமிடத்தில் பாலாவின் தாய், பாலாவின் மனத்தில் ஒரு நெருக்கத்தையும்,

முக்கியத்துவத்தையும் பெற்றுவிட்டாள் என்பது சக்ரபாணிக்குத் தெரியாது.

"அப்பா, உங்கள் பணம், அந்தஸ்து இரண்டாலும் அம்மாவின் புத்திக் கோளாறைக் குணப்படுத்த முடியவில்லையே அப்பா. பணத்தால் முடியாததும் இருக்கு இல்லையாப்பா? வெறும் பணத்தைவிடச் சிறந்த விஷயங்கள் சிலவும் இருக்குமில்லையா?" என்றாள் பாலா.

சக்ரபாணி அப்படியே திகைத்துப் போனான். "என்ன பாலா பேசறே? பணத்தைப் புறக்கணிக்க முடியாத நூற்றாண்டம்மா இது! செல்வம் செல்லாத இடமில்லை. எவ்வளவோ லட்சங்கள் உனக்காகச் சேர்த்து வைத்திருக்கேன். அதையெல்லாம் நாளைக்கு நிர்வாகம் பண்ண வேண்டியவள் நீ! நீயா இப்படிப் பேசறது?" என்று சொல்லிவிட்டுச் சக்ரபாணி மனக் கசப்புடன் அங்கிருந்து நகர்ந்தான்.

பாலா தன்னுடைய அறைக்குச் சென்று படுத்தாள். படுக்கை ஓரத்தில் வைக்கப்பட்டிருந்த புத்தக ஷெல்பிலிருந்து ஏதேச்சையாக ஒரு புத்தகத்தை எடுத்தாள். அது தேசிக விநாயகம்பிள்ளை எழுதிய கௌதம புத்தர் வாழ்வின் கவிதை. சில கவிதைகளைப் படித்தாள். படிப்பதே அவளுக்குக் கஷ்டமாக இருந்தது. கண்ணை மூடிக்கொண்டு சிந்திப்பதே அவளுக்கு இனிமை தருவதாக இருந்தது. கண்ணை மூடியதும் கற்பனைகள் வளமாக இருந்தன.

சித்தார்த்தன் இருபத்தைந்து நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த இளவரசன். சித்தார்த்தனின் தந்தை நோய், முதுமை, மரணம் என்ற வாழ்க்கைக்கு இயற்கையான மூன்று களங்களைச் சித்தார்த்தன் சந்திக்காதபடி அவனை வளர்த்திருந்தான். இருந்தபோதிலும் ஓர் நாள்



சித்தார்த்தன் அம்பினால் தாக்கப்பட்ட ஓர் அன்னத்தைப் பார்க்கிறான். மனம் குழம்புகிறான். ஒரு நோயுற்ற வயோதிகனைச் சந்திக்கிறான். தன் இளமை நிரந்தரமானது அல்ல; அழியக் கூடியது என்பதை உணர்ந்து கொள்கிறான். இந்த உடலும் சதமல்ல என்பதைப் புரிந்து கொள்கிறான். சித்தார்த்தனைப் புதுக் கருத்துக்கள் திடீரென்று வந்து புயல் போல் தாக்கின. உலகில் துன்பமில்லாமல் இன்பமாக இருப்பதற்கு என்ன வழி என்று ஆராயத் தொடங்கினான். ஆசையைத் துறப்பதே திறவுகோல் என்பதை வெகு நாட்களுக்குப் பின் கண்டு கொண்டான்.

தெரிந்த கதையின் நிகழ்ச்சிகள், பாலாவின் மனத்தில் மறுபடி ஓடின. பாலா தனக்கும் சித்தார்த்தனுக்கும் ஒரு வித ஒற்றுமை இருப்பதை உணர்ந்தாள். அவள் தந்தை சக்ரபாணியும் அவள் இளமைப் பருவத்தை இன்பத்தால் சூழவைத்து, சில உண்மைகளை அவள் சிந்திக்காமலே செய்துவிட்டான். 'என் தாய் பைத்தியமாக இருப்பதும், என் தந்தை தூங்க முடியாமல், சாப்பிட முடியாமல் வாழ்வதும் ஏன்? செல்வம் இல்லாத மோகனின் வீட்டில் இருக்கும் திருப்தி, அமைதி என் வீட்டில் இருக்கிறதா? ஒரு மனிதனுக்குச் செல்வம் எவ்வளவு தேவை? அந்தச் செல்வத்தை எப்படி வேண்டுமானாலும் அடையலாமா?' என்ற அடிப்படைக் கேள்விகளைப் பாலா இதுவரையில் இதயபூர்வமாகச் சிந்திக்காமலே இருந்து விட்டாள். இன்று தாயின் பரிதாபமான முகம் அவள் மனத்தில் அந்தக் கேள்விகளை எழுப்பியது.

கேள்விகள் எழுந்ததும், சித்தார்த்தனுக்கு அரண்மனைச் சூழ்நிலை எப்படி வெறுப்பைக் கொடுத்ததோ, அதேபோல் பாலாவுக்கும் அவளுடைய செல்வச் செழிப்பு நிறைந்த அறை வாசம் அருவருப்பைக் கொடுத்தது. அறையைவிட்டு வெளியே வந்தாள். வேலைக்காரிகள்,

வீட்டுச் சிப்பந்திகள் எல்லோருமே பூதகணங்கள் போல் தோன்றினர். மறுபடியும் சிறிது நேரமாவது வீட்டை விட்டு வெளியே சென்று வருவோம் என்று தோன்றியது. உடனே வீட்டின் வெளிப்புறம் வந்தாள். பின்புறத் தோப்பின் கோடியில் ஒரு பக்கம் விக்கட் கேட் இருந்தது. அங்கு கூர்க்காவின் நடமாட்டம் இல்லை. யாருக்கும் தெரியாமல் இந்தக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள்.

என்ன ஆச்சரியம்! கதவைத் திறந்து சாலைக்கு வந்ததும், அவள் பார்வையில் நரைத்த தாடிக் கிழவர் தெரிந்தார். அவர், அவளுடைய வீட்டின் மாடியைப் பார்த்தபடி நின்றிருந்தார்.

## 13

பாலா விக்கட் கேட்டைத் திறந்து கொண்டு வெளியே வந்ததை அந்த நரைத்த தாடிக் கிழவர் கவனிக்கவில்லை. அவர் நின்று கொண்டிருந்த ரோடு ஓர் ஒதுக்குப்புற ரோடு. அங்கு அதிகக் கார் நடமாட்டம், ஆள் நடமாட்டம் கிடையாது. கிழவர் தன்னையும் மறந்து எதையோ அண்ணாந்து பார்த்தபடி இருந்தார்; பட்டம் விடும் பருவத்தில் சிறுவர்கள் பட்டத்தை ஆர்வத்துடன் பார்ப்பது போல் இருந்தது அவர் நின்று கொண்டிருந்த விதம், பார்வை எல்லாம்.

கிழவர் எதை அப்படிச் சுவாரசியத்துடன் பார்க்கிறார் என்ற ஆவல் உந்தவே பாலாவும், தன் வீட்டு மாடியை நோக்கிப் பார்வையைச் செலுத்தினாள்.

மாடி பால்கனி கம்பிகளால் அடைக்கப்பட்டு ஒரு சிறை போல் இருந்தது. அது பாலாவின் தாய் தங்கும் அறையை அடுத்த பால்கனி. அவள் தாய் தவறிவிழுந்துவிடக்கூடாது

www.t.me/tamilbooksworld



என்பதற்காகச் செங்குத்தான கம்பிகள் பொருத்தப்பட்டிருந்தன. அந்தக் கம்பிகளின் இடையே பாலாவின் தாயினுடைய முகம் தெரிந்தது.

பாலாவின் தாய், தெருவில் நிற்கும் கிழவரையோ, அல்லது பாலாவையோ கவனிக்கவில்லை. அவளுடைய பார்வை எதிரே உள்ள பழமையான வைரம் பாய்ந்த வேப்ப மரத்தின் கிளையில் லயித்திருந்தது. அந்தக் கிளையை நோக்கிப் பாலாவின் பார்வையும் திரும்பியது. அந்தக் கிளையில் ஒரு வயதான குரங்கு. ஒரு பெண் குரங்குக்குப் பேன் எடுத்துக் கொண்டிருந்தது. அருகில் குரங்குக் குட்டிகள் கிளைக்குக் கிளை தாவியபடி மகிழ்ச்சியுடன் இருந்தன. அந்த மரத்தில் ஒரு குரங்குக் குடும்பம் அமைதியாக இன்பம் அநுபவித்தபடி வாழ்ந்தது. அதைத்தான் லட்சுமி மகிழ்ச்சியுடனும், ஆச்சரியத்துடனும் கவனித்துக் கொண்டிருந்தாள்.

குடும்ப ஒற்றுமை இல்லாத சக்ரபாணியின் வீட்டில் வளர்ந்த வேப்பமரத்துக் கிளையில், குடும்ப சௌக்கியத்தோடு ஒரு குரங்குக் குடும்பம் வீற்றிருக்கும் விந்தையைத் தாய் பார்த்துக் கொண்டிருக்கிறாளோ? இந்தக் கேள்வி பாலாவின் மனத்தில் எழுந்தது. தந்தை சக்ரபாணி போன அருகில் வியர்த்து விருவிருத்துப் பேசிக் கொண்டிருந்தார். தாய், கம்பிகளின் பின்புறமிருந்து எதையோ கவனித்துக் கொண்டிருந்தாள். தாயைப் பெற்ற தாத்தா, அந்நிய மனிதர்போல், வீட்டின் பின்புறச் சந்திலிருந்து தன் மகளை அண்ணாந்து பார்க்கிறார். அவர் பேத்தி, அந்த வீட்டிலிருந்து யாருக்கும் தெரியாமல் செல்ல வேண்டுமென்று முயலுகிறாள்.

'அறிவு இல்லாத இந்தக் குரங்குகளிடையே நிலவிய வாத்சல்யமும் பிணைப்பும்,அந்தக் குரங்கிலிருந்து பிறந்து, காலப் போக்கில் முன்னேறிவிட்ட மனிதனின் வாழ்வில் இல்லையே?' என்று பாலா எண்ணினாள் தாத்தாவைத்

திரும்பிப் பார்த்தாள். தாத்தாவின் பார்வை இன்னமும் கம்பிகளுக்கிடையே தெரிந்த அவள் தாயின் முகத்தில் லயித்திருப்பதைக் கவனித்தாள். கிழவரின் விழியோரத்தில் கண்ணீர் வழிந்தோடுவதையும், அவர் தொண்டையில் துக்கம் அடைத்துக் கொள்வதையும் கவனித்தாள். புழுதி படிந்த கால்களோடு அவர் இந்த வயதில் தெருவில் நிற்பதே பரிதாபமாக இருந்தது.

பாலா தன்னையும் மறந்தாள். ''தாத்தா! தாத்தா'' என்று இரு முறை கூப்பிட்டாள். கிழவர் திடுக்கிட்டுத் திரும்பினார். மிட்டாயைத் திருடும்போது பிடிபட்ட சிறுவன் போல் அசடு வழிய நின்றார்.

''அன்று இரவு வந்து என்னைக் காப்பாற்றியதற்கு நன்றி தாத்தா!'' என்றாள் பாலா.

கிழவர் அவளையே உற்றுப் பார்த்தார். 'தாத்தா' என்ற சொல்லை உரிமையோடு, உறவுச் சொல்லாகப் பாலா சொல்கிறாளா? அல்லது பொதுவாக அவர் வயதைக் குறிக்கும் விளிச் சொல்லாக உபயோகிக்கிறாளா? அவருக்குப் புரியவில்லை. மோகனின் வீட்டுக்குக் போயிருந்தபோது. பாலா அங்கிருந்து புறப்பட்டுத் தன் வீட்டுக்குப் போய்விட்டாள் என்று அவருக்குத் தெரிந்தது. காமாட்சி அம்மாள், மோகன் இவர்களிடம் பேசியபோது, அவர்கள் பாலாவை, 'சுந்தரி' என்ற பெயரில்தான் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதும் அவருக்குத் தெரிந்தது. அவள் தந்தை யார் என்ற விவரமோ, அவள் அவர்களுக்கு நெருங்கிய உறவினர் என்பது போன்ற விவரங்களோ தெரியாமல் இருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டார். பாலா, தன்னுடைய தந்தையின் விலாசத்தைத் தெரிவிக்காமல் இருப்பது இயற்கையே. அதே போல் அவளுக்கு மாமன் வீட்டில்தான் தங்கினோம் என்று ஊகிக்க நியாயமில்லை என்றே நினைத்தார்.

சிறு வயது போட்டோ, பால பருவத்து நிகழ்ச்சிகள், பாலாவின் மனத்தில் பழைய நினைவுகளைக் கிளறி விட்டி

www.t.me/tamilbooksworld



ருக்கும் என்பது அவருக்குத் தெரியவில்லை. அவரும், மோகனிடமோ, காமாட்சியிடமோ, பாலா யார் என்ற உண்மையைக் கூறாமலே இருந்துவிட்டார். ஆகையால் பாலா, தன்னை வயதைக் குறித்துத்தான் 'தாத்தா' என்று அழைக்கிறாள் என்று நினைத்தார். நாம் வீட்டைப் பார்த்துக் கொண்டிருப்பதை அவள் உள்ளிருந்து கவனித்திருக்க வேண்டும்; இரவு ஆபத்தில் வந்து உதவியவருக்கு, சாதாரணமாக நன்றி தெரிவிக்கும் நோக்கத்தோடு வந்திருக்கிறாள் என்று நினைத்தார். வேற்று மனிதன்போலவே பேச ஆரம்பித்தார்.

'என்னம்மா, அன்றிரவு பத்திரமாக வீடு வந்து சேர்ந்தாயா? என் பேரன் ரொம்ப நல்ல பிள்ளை. மரியாதை தெரிந்தவன்!'' என்று சொன்னார்.

பாலா அவரைப் பார்த்தபடி இருந்தாள். ''அன்றிரவு உங்கள் பேரன் வீட்டில் தங்கி விட்டுத்தான் வந்தேன். அவர்களுக்கு நான் யாருடைய மகள் என்று சொல்லவில்லை. செல்வந்தர் மகள் என்று தெரிந்திருந்தால், அவர்கள் என்னிடம் சாதாரணமாகப் பழகியிருக்க மாட்டார்கள். அதனால்தான் சொல்லவில்லை!''

''ஏம்மா, உன் செல்வத்துக்குத் தகுந்த மரியாதை செலுத்துவதில் உனக்குப் பிரியமில்லையா? மற்றவர்கள் உன்னிடம் சாதாரணமாக நடக்கிறது தான் உனக்குப் பிடிக்குதா?'' என்று கிழவர் கேட்டார்.

''இக்கரைக்கு அக்கரை பச்சை. எப்பப் பார்த்தாலும் எல்லோரும் பயந்து பயந்து நம்மோட பழகுகிறபோது, யாரு உண்மையா நம்மை விரும்பறாங்க, யாரு பொய்ச் சிரிப்புச் சிரிக்கிறாங்க, நம் உண்மைத் தகுதிதான் என்னு தெரியாமல் போயிடுது, பாருங்க. அதனாலேதான் நம்ம யாருன்னு தெரியாதவங்ககிட்டே, உண்மையைச் சொல்வானேன்னு சும்மா இருந்திட்டேன்!'' என்றாள் பாலா. கிழவராகத் தன்னைப் பேத்தி என்று அழைக்

இறாரா பார்ப்போம் என்று பாலாவும் காட்டிக்கொள்ளாமல் இருந்தாள்.

கிழவர் உடனே, "அம்மா, உங்கப்பா பெரிய புத்திசாலி! அதே புத்திசாலித்தனம் உனக்கும் இருக்கு!" என்று பாராட்டினார்.

"எங்கப்பாவை உங்களுக்குத் தெரியுமா?"

"ஒரு காலத்திலே தெரியும். இப்போ அவ்வளவு பரிச்சயம் இல்லை."

"எங்கப்பாவைப் பத்திப் பேசறீங்க. ஆனால் நீங்க இங்கே நின்னுட்டு எங்க அம்மாவையல்லவா பாத்திட்டு இருக்கீங்க!" என்று பாலா கேட்டாள்.

கிழவர், என்ன பதில் சொல்வது என்று புரியாமல், எச்சிலை விழுங்கினார்.

"ஏன், எங்கம்மாவையும் உங்களுக்குத் தெரியுமா?"

கிழவர் உதடுகள் துடித்தன. "தெரியுமா என்றா கேட்கிறாய்? உங்கம்மா என் பெண்ணும்மா! என்னுடைய செல்லப் பெண்! தாயில்லாப் பெண்ணாக இருந்தவளுக்கு, நானே குளிப்பாட்டி, நானே தலை சீவி வளர்த்தேன். ஒரு பிள்ளையை வளர்த்துக் கல்யாணம் செய்து பெரிய மனிதனாக்கினேன். அவன் பர்மாவிலே இறந்து போயிட்டான். பேர் சொல்ல ஒரு மகனையும் நினைச்சு அழ ஒரு மனைவியையும் வச்சிட்டுப் போயிட்டான்!" என்று உணர்ச்சிவசப்பட்டுப் பேசிக் கொண்டே போனவர், பேச்சைத் திடீரென்று நிறுத்தினார். "என் வேட்டியையும் ஷர்ட்டையும் பார்த்தால், நான் உன் தாத்தா என்று உனக்கு நம்பிக்கை ஏற்படாதும்மா" என்று சொல்லிவிட்டுக் கிழவர் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

"நீங்க என் தாத்தா என்று எனக்கு முதல்லே தெரியலே. உங்க பேரன் மோகன் வீட்டுக்குப் போனதும் புரிஞ்சு போச்சு. எப்படிப் புரிஞ்சுதுன்னு என்னைக் கேட்காதீங்க. ஆனால் நான்தான் மோகனின் அத்தை மகள்

www.t.me/tamilbooksworld



என்று அவங்ககிட்டே காட்டிக் கொள்ளாமல் வந்துட்டேன். காமாட்சி மாமியும் மோகனும், என்னை யாரோ ஓர் ஏழைப் பெண் என்று நினைக்கிறாங்க. அவங்க அப்படியே நினைக்கட்டும் தாத்தா! வீட்டுக்குள்ளே வரீங்களா, தாத்தா? நீங்க பெற்ற மகளை நடுத்தெருவிலிருந்து பார்க்க வேண்டாம். வீட்டுக்குள்ளேயே வந்து பாருங்களேன்!" என்று அழைத்தாள்.

அவள் குரலில் தொனித்த சோகத்தைப் பெரியவர் உணர்ந்தார்.

"வேண்டாம்மா. நான் வந்து பார்க்கிறதுனாலே உங்கம்மாவுக்குப் புத்தி தெளியப் போறதா? வரக்கூடாதென்று தடுத்து விரட்டிய வீட்டுக்குள்ளே நான் வர மாட்டேன். நீ என்னோடே பேசினது உங்கப்பாவுக்குத் தெரிந்தால்கூட அவனுக்குக் கோபம் வரும்!"

"எங்கப்பா கோபத்துக்கு நான் பயப்படப் போறதில்லே, தாத்தா! நீங்க தைரியமாய் வாங்க!"

"உங்கப்பா உன் மேலே உயிரையே வச்சிருக்கிறான். அது ஒன்றை வைத்துத்தான், அவனை மனுஷனாய்ப் பேச முடியுது. அவனிடமிருந்து நான் உன்னைப் பிரிக்க விரும்பலேம்மா. நான் என் பெண்ணிடமிருந்து பிரிஞ்சு வாழறது போதும். நீ உங்கப்பாவிடமிருந்து பிரிந்து வாழணுமா? வாழ வேண்டிய பெண்ணுக்கு, நான் என்னம்மா செய்ய முடியும்? நீ போம்மா உள்ளே."

"தாத்தா, நான் இப்போ ஏதோ கனவிலிருந்து விழித்தவள் போல இருக்கிறேன். என் மனசிலே உள்ளதை யாரிடமாவது பேசணும் போலிருக்கு. நான் வாய்விட்டு அம்மாவோடே பேச முடியுமா? நான் பேச வேண்டிய விஷயங்களை அப்பாவோடேதான் என்னால பேச முடியுமா? சொல்லுங்க தாத்தா! இன்னிக்கு அம்மா என் கழுத்தை நெறிச்சுக் கொல்லப் பார்த்தாள். அது தெரியுமா உங்களுக்கு? நான் இதையெல்லாம் வாய்விட்டு

உங்களிடம் பேசாமல், யாரிடம் தாத்தா பேசறது?'' என்று கேட்டாள் பாலா.

கிழவர் அப்படியே பதறி விட்டார். ''அப்படியா! பாவம் லட்சுமிக்குத் தன் குழந்தை என்று கூடவா அடையாளம் தெரியலே?''

''தாத்தா, நான் உங்களிடம் ரொம்ப விஷயங்கள் பேசணும். நீங்கள் எங்க வீட்டுக்குள்ளே வரத்தானே அப்பா தடை போட்டிருக்கிறார்? நீங்கள் இருக்கிற இடத்துக்கு நான் வரத் தடையொன்றுமில்லையே?'' என்று பாலா கேட்டாள் கண் கலங்கியபடி.

''பாலா, வாம்மா போவோம்!'' என்று சொல்லிப் பாலாவுடன் கிழவர் புறப்பட்டார்.

இருவரும் பஸ் ஏறி, சிந்தாதிரிப்பேட்டைக்கு வந்தனர். கிழவர், பாலாவைச் சந்துகள் வழியே அழைத்துப் போனார். வழியில் நடு ரோடில் மாடுகளை நிறுத்திப் பால் கறந்து கொண்டிருந்தனர். பனியன் அணிந்த கறுத்த மேனியுடன் சில சோதாக்கள் நின்று, பாலாவைக் கவனித்தபடி இருந்தனர். பாலா, அவள் வாழ்விலேயே இம்மாதிரி வட்டாரத்தில் நடந்து வந்தது இதுதான் முதல் தடவை. தெருவின் நெடி அவள் மூக்கைத் துளைத்தது. தன் காலில் ஏதாவது அசுத்தம் பட்டுவிடுமோ என்று அவள் ஒதுங்கி நடந்து வந்தாள். கிழவர் அவள் படும் கஷ்டத்தைக் கவனித்தார்.

''பாலா மில்ஸ், பாலா டெக்ஸ்டைல்ஸ், பாலா ரெஸ்ட்டாரண்ட் முதலியவற்றின் சொந்தக்காரியை, ஒரு கோடீசுவரியை, இம்மாதிரி பகுதிகள் வழியே நடத்தி அழைத்து வருகிறேன். மன்னித்து விடம்மா!'' என்று சொன்னார்.

பாலாவும் சிரித்தபடியே, ''அந்தக் கோடீசுவரி இப்போது அவள் தாத்தா வீட்டுக்குப் பெருமையோடு போகிறாள் என்பதை மறந்து விட்டீர்களே!'' என்றாள். கிழவர் சிரித்தார்.

www.t.me/tamilbooksworld



ஒரு பெரிய வீட்டின் கொல்லைப்புறம் இருவரும் வந்தனர். கொல்லைக் கதவைத் திறந்து கொண்டு கிழவர் நுழைந்தார். திறந்தவெளி. அதன் நடுவே பெரிய கிணறு. கிணற்றின் அருகில் பல பெண்மணிகள் தண்ணீர் எடுக்க நின்று கொண்டிருந்தனர். திருப்பதி சத்திரம் போல் பல சிறு பகுதிகள் கொண்ட பழைய வீடு. ஒரு கார் ஷெட் அளவு பரிமாணமுள்ள இடத்துக்குள் கிழவர் பாலாவை அழைத்துச் சென்றார். அதில் இரண்டே அறைகள். ஒன்று சமையல் அறை. மற்ற அறை படிக்க, படுக்க, வந்தவர்களை உபசரிக்கத் தகுந்த அறை. ராமாயணம், மஹாபாரதம், பக்தவிஜயம் போன்ற புத்தகங்கள் மர ஷெல்பில் இருந்தன. அறையின் நடுவே ரவிவர்மாவின் ராஜராஜேசுவரி படம் வைக்கப்பட்டிருந்தது.

''இது தானம்மா நான் இருக்கிற இடம், உட்காரம்மா!'' என்று ஒரு மர முக்காலியைக் காட்டினார்.

''பாலா நீ வந்த உடனே இந்த வீட்டுக்குக் களை கட்டிவிட்டது'' என்று கிழவர் திருப்தியுடன் சொல்லி முடிக்கு முன்பே வெளிப்புறத்தில் பெண்மணிகள் கூடிவிட்டனர். கிணற்றடியில் நின்ற பெண்களுக்கு, கிழவருடன் அழகே உருவான ஒரு பெண் நுழைவதைப் பார்த்ததும், உடனே அவள் யார் என்று தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டுவிட்டது.வெளியே கூடிவிட்டனர். அவர்களில் முதிய பெண்மணியாகிய நாகு, ''தாத்தா, யார் இந்தப் பெண்? பண்ருட்டி பலாச்சுளை மாதிரி இருக்கிறாளே! உங்களுக்குத் தெரிந்தவர் வீட்டுப் பெண்ணா? உங்களுக்குக் குடும்பம், சொந்தம் எதுவும் கிடையாது. நீங்கள் ஒண்டிக்கட்டை என்றல்லவா நினைத்தோம்?'' என்றாள்.

கிழவர் நாகுவைப் பார்த்துப் பெருமையோடு புன்னகை புரிந்தார்.

## 14

"ஆமாம், நாகு மாமி. நான் ஒண்டிக்கட்டைதான் இந்தப் பெண் எனக்கு வேண்டியவர்கள் வீட்டுப் பெண். இந்தப் பெண்ணோட தாயாரை என் பெண்ணாகவே வளர்த்தேன். அப்புறம் அவர்கள் குடும்பத்துக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லாமல் போயிடுச்சு. திடீர்னு இன்னிக்குப் பார்த்தேன். கூட்டிக்கொண்டு வந்தேன்" என்று சொன்னார் கிழவர்.

"அப்படியா, ரொம்ப சந்தோஷம். நீங்க பேசிக் கொண்டிருங்கள். நான் காப்பி போட்டுக்கொண்டு வருகிறேன்."

"மாமி உங்களுக்குச் சிரமம் வேண்டாம். நானே போட்டுக் கொடுக்கிறேன்."

"நன்றாயிருக்கிறது. நீங்கள் எங்களுக்கெல்லாம் எவ்வளவு உதவியாக இருக்கிறீர்கள். இதுகூடச் செய்ய வில்லையானால்..." என்று சொல்லிவிட்டு, நாகு மாமி போனாள். அவளோடு பெண்கள் கூட்டமும் போய் விட்டது.

"இவர்களுக்கெல்லாம் நீங்கள் யாரென்று தெரியாதா?"

"ஆமாம் பாலா. இவர்களில் பலரின் கணவன்மாருங்க உங்கப்பாவின் கம்பெனிகளில் குமாஸ்தாவாக வேலை பார்க்கிறவங்க. சின்னச் சம்பளம் வாங்கறவங்க. அடிக்கடி திடீரென்று அபராதம் என்று பணம் பிடிச்சவுடனே, என் காது கேட்க உங்கப்பாவைத் திட்டுவாங்க. நான் சக்ரபாணியின் மாமனார் என்று தெரிந்தால், நான் இங்கே நிம்மதியா வாழ முடியுமா? நான் இங்கே இருக்கிற பெண்மணிகளுக்கு, சாமான் காய்கறி வாங்கிக் கொடுப் பேன். சமயத்திலே, கிணற்றிலிருந்து தண்ணீர் இழுத்துக் கொடுப்பேன். ராத்திரி வேளையிலே குழந்தைகளுக்குக்

www.t.me/tamilbooksworld



கதை சொல்லுவேன். பணம் வாங்காமல் உதவி செய்யற தினாலே, எனக்கு இங்கே பெரிய மதிப்பு. எனக்குத் தலையை, காலை வலித்தால் இங்குள்ள அத்தனை பெண் மணிகளும் அவுங்க அவுங்க புருஷனை டாக்டரிடம் விரட்டு வாங்க. என் வீட்டிலே நான் தாத்தாவாக இல்லாவிட்டா லும், இங்கிருக்கிற குடும்பங்களுக்கு நான்தான் தாத்தா. புருஷன் பெஞ்சாதி சண்டையென்றால், எங்கிட்டதான் வருவாங்க. என் தீர்ப்பு கோர்ட்டுத் தீர்ப்பு மாதிரி அவுங் களுக்கு!" என்று கிழவர் சொல்லி முடிப்பதற்குள் முறுக்கு சீடை தட்டுடன் பாலாவுக்குக் காப்பியை எடுத்துக் கொண்டு நாகு மாமி வந்துவிட்டாள்.

"என்ன கேட்டீர்களா? என் இரண்டாவது பிள்ளை சீனுவுக்குப் பிரமோஷன் ஆகி, பம்பாயிலிருந்து டெல்லிக்கு மாற்றி விட்டார்கள். அவன் உங்களுக்கென்று இந்தப் போர்வையை வாங்கி அனுப்பியிருக்கிறான்" என்று கூறிக் கொண்டே ஒரு காகிதப் பெட்டியிலிருந்து சிவப்புப் போர்வையை எடுத்துக் கொடுத்தாள் நாகு மாமி. கிழவ ருக்கு அதைப் பார்த்துக் கோபம்தான் வந்தது.

"இதெல்லாம் எதற்கு மாமி? பிள்ளையாண்டானை இந்த மாதிரி ஊதாரிச் செலவு செய்யக் கூடாதென்று சொல்லி எழுதுங்கள்" என்றார்.

நாகு மாமி பாலாவின் பக்கம் திரும்பி, "கேட்டாயா கிழவர் பேசுவதை? இவருக்குப் போர்வை வாங்கினால் அது ஊதாரிச் செலவாம். என் பிள்ளை வேலையிலே சேரப் பம்பாய்க்குப் போகிறபோது, பணம் ஐம்பது ரூபாய் குறைவாயிருந்தது. இவர்தான் கொண்டு வந்து கொடுத்தார். அப்புறம்தான் தெரிந்தது. ஆறுமாசக் கடன் காரன் கிட்டே வாங்கியிருக்கிறார் என்று. அந்தக் கடனை அடைக்க இவர் ஆயிரம் விளக்கு சாயபு கடையிலே ஒரு மாதம் கணக்கு எழுதி இருக்கிறார். இவர் மட்டும் எங்களுக்குக் கொடுப்பாராம். ஆனால், நாங்க ஒன்னும் இவருக்குக் கொடுக்கக் கூடாதாம்! இவர் என்ன

லட்சாதிபதியின் தகப்பனாரா, அல்லது கோடீசுவரன் மாமனாரா?'' என்று கேட்டாள்.

அதற்குக் கிழவர் ''நாகு மாமி! புதிதாக வந்திருக்கிற பெண்ணிடம் பழைய பஞ்சாங்கத்தைப் படிக்கறீங்களே? இந்தப் போர்வையை உங்க வீட்டுக்காரருக்குக் கொடுத்திடுங்க'' என்று குழப்பத்தோடு சொன்னார்.

பாலாவுக்குத் தன்னலமற்ற தன் தாத்தாவின் முகத்தைப் பார்க்கும்போது, கண்ணீர் கலந்த சிரிப்பு ஏற்பட்டது.

அப்போது அறையின் வெளிப்புறமிருந்து ஒரு குரல் கேட்டது. ''என்ன சம்பந்தய்யா! போர்வையைக் கொடுத்தா நீங்க இப்படிச் சொல்லுவீங்கன்னு என் பிள்ளைக்கும் தெரிந்திருக்கிறது. அதுதான் அவன் கடிதத்திலே எழுதியிருக்கிறான் பாருங்கள், என்ன எழுதியிருக்கிறான்'' என்று கூறி, பிரித்த கடிதத்துடன் நாகு மாமியின் கணவர் சர்மா நுழைந்தார். சர்மாவுக்குச் சுமார் ஐம்பது வயது இருக்கும்.

சம்பந்தய்யா என்று அழைக்கப்பட்ட பாலாவின் தாத்தா, ''வாங்க சர்மா!'' என்று அழைத்தபடி எழுந்தார். அறை முழுவதும் பார்த்தார். அறையில் அவரை உட்காரச் சொல்ல ஒரு ஸ்டூலோ, நாற்காலியோ இல்லை. இருந்த ஒரே ஸ்டூலில் பாலா உட்கார்ந்திருந்தாள்.

பாலா கிழவரின் தவிப்பை உணர்ந்து கொண்டு, கிழவர் உட்கார்ந்திருந்த கயிற்றுக் கட்டிலிலே கிழவர் அருகில் தான் உட்கார்ந்து கொண்டு, ஸ்டூலைக் காலி செய்தாள். கிழவர் சர்மாவை அந்த ஸ்டூலில் உட்காரச் செய்தார். சீனு எழுதியிருந்த கடிதத்தைச் சர்மா பெருமையுடன் படிக்க ஆரம்பித்தார். அந்தக் கடிதம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது.

''சம்பந்தய்யா கோல்டு ஸ்மித் எழுதிய 'மேன் இன் பிளாக்' போன்றவர். மற்றவர்கள் தங்கள் தவறுகளை,

www.t.me/tamilbooksworld



திருட்டுத் தனத்தை மூடி வைப்பது போல், அவர் தமது பண்பை நற்செயல்களை மூடி வைப்பவர். ரகசியமாக நல்லது செய்பவர். எவ்வளவோ முறை எனக்குப் பரீட்சைக்குத் தேவையான புத்தகங்களை, பழைய புத்தகக் கடையிலிருந்து விலை கொடுத்து வாங்கிக் கொடுத்திருக்கிறார். ஆகையால் நான் சம்பாதித்த பணத்தில் வாங்கிய போர்வையை அவர் ஏற்றுக் கொள்ளா விட்டால், நான் வேலையிலிருந்து விலகிக் கொள்வேன் என்று அவரிடம் சொல்லுங்கள்'' என்று எழுதி இருந்தான்.

அதைப் படிக்கும்போதே சர்மாவின் கண்கள் கலங்கின. கிழவர் மன நெகிழ்வுடன் போர்வையை வாங்கிக் கொண்டு பாலாவின் பக்கம் திரும்பினார். ''பாரும்மா குழந்தை. நீ வந்த வேளை, எனக்குப் போர்வை கிடைத்திருக்கிறது. நீ அதிர்ஷ்டசாலிதான்!'' என்று சிரித்தபடி சொன்னார்.

கிழவர் பாலாவின் பக்கம் திரும்பியதும், நாகு மாமி புரிந்து கொண்டாள். ''பெரியவருக்கு அதிசயமா விருந்தாளி வந்திருக்கிறது. அவர் ஏதாவது பேசிக் கொண்டிருக்கட்டும். நீங்க வாங்க நாம் போவோம்'' என்று கூறித் தன் கணவர் சர்மாவை அழைத்துக்கொண்டு நாகு மாமி புறப்பட்டாள்.

தனிமையில் விடப்பட்ட பாலாவும் சம்பந்தய்யாவும் சில விநாடிகள் பேசாமல் இருந்தனர். பாலாவுக்கு அவரிடம் எவ்வளவோ பேசவேண்டும் போல் இருந்தது. ஆனால் முதலில் எதைப் பேசுவது என்றுதான் தெரியவில்லை. கிழவரே முதலில் மௌனத்தைக் கலைத்தார். ''பாலா! போர்வை கொண்டு வந்தாரே சர்மா, அவர் உங்க அப்பாவின் மத்திய ஆபீஸில் டைப்பிஸ்ட். வெகு நாட்களாக அதே சம்பளத்தில் வேலை செய்கிறார்'' என்று கூறி நிறுத்தினார்.

உடனே பாலா, ''கொஞ்ச நேரத்தில் நான் ஒரு புது உலகத்துக்கே வந்து விட்டது போல் தோன்றியது

தாத்தா. இந்த இடத்திலே, ஏழ்மையின் இடையேயும் வளமான ஒன்று இருக்கிறது. அது தான் அன்புச் செல்வம். எனக்கு உங்களை எவ்வளவோ கேள்விகள் கேட்கணும் போல் இருக்கு தாத்தா'' என்றாள்.

''உனக்கு என்னிடத்தில் எது கேட்கணும்னு தோணுதோ, அதைக் கேளும்மா.''

''தாத்தா! குழந்தையிலிருந்து என் உலகத்தின் மையமே எனக்கு அப்பா தான். ஆனால் அவர் யாரென்றே எனக்குப் புரியவில்லை. நான் பார்க்கிற போதெல்லாம் அவர் எங்கிட்டே சிரித்த முகத்தோடு தான் பேசறார். என்னைப் பொறுத்த வரையிலே அவர் என் சந்தோஷத்துக்காக எதுவும் செய்வாரென்று தோன்றுகிறது.''

''உன் மேலே இருக்கிற அன்பு ஒன்றுதாம்மா, சக்ரபாணியின் இருண்டு போன மனத்திலே இருக்கிற சிறு ஒளி. அதனாலேதான் அவனுக்குச் சாப விமோசனம் ஏற்பட்டால் ஏற்படணும். நீ குழந்தையாக இருந்த போது, உனக்குப் பேர் வைக்கிற பெருமையை மட்டும் சக்ரபாணி, எனக்கு என்னவோ கொடுத்து விட்டான். பாலா திரிபுர சுந்தரி என்கிற பேர், என்னைப் போன்ற பழங்கால மனிதன் வைக்கிற பேர் என்று பெயரைப் பார்த்தாலே தெரியவில்லையா? உங்கப்பாவைப் போல, பழையது என்றாலே வெறுப்பவன். நாகரிகமானவன் தேர்ந்தெடுக்கும் பெயர் அல்ல அது. அது மட்டுமில்லை. உன் பெயரின் முதல் பகுதியாகிய பாலாவை அவன் கம்பெனிகளுக்கெல்லாம் வைத்திருக்கிறான். ஏதோ உங்கிட்டேயும் உன் பேரிலேயும் அதிர்ஷ்டம் இருக்கிறதாக அவனுக்கு நம்பிக்கை. அவ்வளவுதான், அவனுக்கு எங்கிட்டே இருக்கிற மரியாதை!'' என்று சொல்லிவிட்டு நிறுத்தினார். பாலா ஒன்றுமே பேசவில்லை.

பிறகு, ''ஏன் தாத்தா! எங்க வீட்டுக்கு உள்ளே தான் நீங்க வராதபடி ஆயிட்டுது ஆனால், நீங்க மோகன்

www.t.me/tamilbooksworld



அத்தான் வீட்டிலே இருக்கலாமே அதுவும் உங்க பிள்ளை வீடுதானே?'' என்று கேட்டாள்.

கிழவர் புன்முறுவல் செய்தார். ''இருக்கலாம். அங்கே நான் இருக்கணும்னுதான் காமாட்சியும் மோகனும் வேண்டிக்கிட்டாங்க. ஆரம்பத்திலே மோகன் குழந்தையா இருந்தப்போ, காமாட்சி விதவையா இருக்கும் போதுகூட, நான் அங்கு அடிக்கடி போய் வருவேன். பணம் கொடுத்து உதவி இருக்கேன். ஆனால், அங்கே தங்க எனக்கு இஷ்டமில்லை. என் வாழ்வு முடியறதுக்குள்ளே, ஒரு காரியம் முடியணும். அப்புறம் தான் நான் நிம்மதியா பிறத்தியாருக்கு உழைக்காமல், சொந்தக்காரங்க வீட்டிலே சாப்பிட முடியும்'' என்று கூறினார்.

''அது என்ன காரியம் தாத்தா?'' என்று பாலா ஆவலுடன் கேட்டாள்.

''அதை நான் இப்போ சொன்னா, நீ என்னைப் பைத்தியக்காரன்னு நினைப்பே. மோகனும் அப்படித்தான் நினைப்பான்னு அவன்கிட்டேயும் நான் அதைப் பற்றிப் பேசுவதில்லை. சில விஷயங்கள் சில பேருக்குப் புரியாது. சில விஷயங்களைப் புரிந்துகொள்ளப் பருவம் வேணும். பருவம் இல்லைன்னாலும், அதற்கு ஒரு மனப் பக்குவம் வேணும் பாலா'' என்று சொல்லிவிட்டு நிறுத்தினார்.

''என்ன தாத்தா! புதிர் போட்டுப் பேசறீங்க! விளக்கமாச் சொல்லுங்க.''

''சில விஷயங்களை விளக்கமாச் சொல்ல முடியாதும்மா. அதுவும் உங்கப்பாவைப் பற்றிய விஷயங்களை, உங்கிட்டே நான் சொல்ல முடியாதும்மா'' என்றார்.

''நான் உங்களோட இன்னிக்கு வந்ததன் காரணமே, எனக்கு நம் குடும்பத்தைப் பற்றிய பழைய விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றுதான். உலகத்திலே அப்பாவைத் தவிர, எனக்கு நெருக்கமானவர் யாரு

மில்லை. இருந்தாலும் அவரைப் பற்றிய உண்மை தெரியணும். நான் பார்த்துப் புரிஞ்சிக்கிட்ட அப்பாவைப் பற்றி, எனக்கு நல்லாத் தெரியும். ஆனா, உலகம் பார்க்கிற கண்ணோட, நான் அப்பாவைப் பார்க்கணும். அவர் உண்மையிலேயே யார், அவர் ஏழ்மை நிலையிலே எப்படி இருந்தார், செல்வம் வந்த பிறகு எப்படி மாறினார்? எங்கம்மா எப்படி முதலிலே இருந்தாங்க? எங்க மாமா யாரு? அம்மா ஏன் அடிக்கடி மாமா பெயரைச் சொல்லிக்கிட்டே இருக்காங்க? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் எனக்கு விடை தெரியணும் தாத்தா. இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லக் கூடிய தகுதி உள்ளவர் நீங்க ஒருத்தர்தான்'' என்று உணர்ச்சித் துடிப்புடன் கேள்விகளைக் கேட்டபடி பெரியவரின் முகத்தைப் பார்த்தாள்.

''உண்மைகள் எப்போதும் துக்கத்தைத் தரும். உண்மை உனக்கு எதுக்கம்மா? புண்ணியம் செய்து இன் பத்தை அநுபவிக்கப் பிறந்தவள் நீ. பழைய விஷயங்களை மறந்து விட்டு. உன் வாழ்க்கை உன்னை அழைக்கும் திசையில் நீ செல்வது தானம்மா சரி. நாம ரெண்டு பேரும் சந்திச்சே பேசி இருக்கக் கூடாதம்மா. உங்கம்மாவைத் தூரத்திலிருந்து பார்த்துத் திருப்தி அடைவது போல், நான் உன்னையும் பார்த்துத் திருப்தியோடு இருந்திருப் பேன். ஆனால் அன்று இரவு சினிமா பார்த்து விட்டு, சந்திலே நீ நடந்து போகவில்லையானால், அந்த முரடர் கள் உன்னைத் தாக்கவில்லையென்றால், எல்லாம் பழையபடி இருந்திருக்கும்'' என்றார்.

''நீங்க நினைக்கிறது தப்பு தாத்தா. அன்றைக்கு ராத்திரி நிகழ்ந்த நிகழ்ச்சி என்னை உங்களைச் சந்திக்க வச்சுது. அத்தான் மோகன் வீட்டுக்கு என்னை இழுத்துச் சென்றது என்னவோ உண்மை. ஆனால் அதற்கு இரண்டு நாள் முன்பிருந்தே என்னை அறியாமல் என் மனத்தில் ஓர் அமைதியின்மை இருந்தது. சாதாரண உடை உடுக்க



வேண்டும், எல்லோரையும்போல் நானும் கார் உதவி யில்லாமல் நடந்து செல்ல வேண்டும் என்று எனக்குச் சிந்தனை ஏற்படுவானேன்! அன்றைக்கு இரவு சந்தில் நடந்தது திடீரென்று நிகழ்ந்தாலும் முன்னும்பின்னுமாகக் கோக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சிச்சங்கிலியில் அது முக்கியமான 'கணு' என்றுதான் நினைக்கிறேன், தாத்தா. காகம் உட்காருவதால் மட்டும் பனம்பழம் விழுவதில்லை. பனம் பழம் விழத் தயாரான நிலையில்தான் காக்கா வந்து உட்காருகிறது என்று சொல்ல வேண்டும். இல்லையா தாத்தா?'' என்றாள் பாலா.

முதலில் கிழவர் பாலாவை ஆச்சரியத்துடன் உற்றுப் பார்த்தார். அடுத்த விநாடி விழுந்து விழுந்து சிரித்தார்.

''ஏன் தாத்தா சிரிக்கிறீங்க? நான் ஏதாவது பொருத்த மில்லாமல் பேசி விட்டேனா?'' என்று குழப்பத்துடன் கேட்டாள்.

''சக்ரபாணியின் பெண்ணாகப் பிறந்த நீ தத்துவம் பேசுவதைக் கேட்டதும் எனக்குச் சிரிப்பு வந்தது. ஒரு மனிதன் தோல்வி அடைந்து விட்டான் என்பதன் அடையாளம் அவன் பேசும் தத்துவப் பேச்சுதான் என்று சொல்வான் சக்ரபாணி. அவன் மகளாகப் பிறந்த நீ இப்படிப் பேச உனக்கு ஏற்ற சூழ்நிலையாக வறுமையும் இல்லை, துக்கமும் இல்லையேம்மா. உனக்கு அந்த இரண்டும் ஏற்படவும் வேண்டாம்'' என்றார்.

அப்போது அந்தச் சிறு அறைக்குள் இருபது வயது மதிக்கத் தக்க ஒரு பெண் நுழைந்தாள். ''தாத்தா, குழந்தை கத்துகிறது. பால் கொடுக்கப்போறேன். இரண்டு குடம் தண்ணீர் இழுத்துக் கொடுக்கறீங்களா?'' என்று உரிமையுடன் கேட்டாள். அந்தப் பெண் கேட்ட குரலில் அவர் தண்ணீர் இழுக்க வேண்டியது அவர் கடமை என்று அவருக்கு அறிவுறுத்துவது போல் இருந்தது. கிழவர் அதைக் கொஞ்சம் கூடப் பொருட்படுத்தாமல், ''இரு

பாலா, ஒரு நிமிஷத்திலே வந்து விடுகிறேன்'' என்று சொல்லிவிட்டுக் கிணற்றை நோக்கிச் சென்றார். பாலா வெளிப்புறம் வந்து நின்றாள்.

கிழவர், அந்தப் பெண்ணின் சம்பளக்காரன் போல் குடத்தைக் கயிற்றில் கட்டித் தண்ணீர் இழுக்க ஆரம்பித்தார். அந்தப் பெண்ணும், அழும் குழந்தையைக் கையில் ஏந்தியபடி தன் மார்பில் பால் கொடுத்தபடி நின்றாள். அவள் தலை பரட்டையாக இருந்தது. அவள் ஆடை அழுக்கேறியிருந்தது. அவள் நெற்றி பாழாக இருந்தது. உலகத்தையே அலட்சியத்தோடு பார்த்தபடி நின்றாள். கிணற்றுக்குச் சற்றுத் தூரத்தில் நின்று கொண்டிருந்த ஒருவர், அந்தப் பெண்ணையே கவனிப்பதையும் அந்தப் பெண் கவனிக்கவில்லை. பால் அருந்தும் குழ்ந்தையையும் அவள் கவனிக்கவில்லை. எதையோ பார்த்தபடி எதற்கும் துணிந்தவள் போல் நின்றாள்.

ஆசை வெறியோடு அந்தப் பெண்ணைக் கவனிக்கும் மனிதரைப் பாலா பார்த்தாள். அவள் உதடுகள் துடித்தன வெட்கமில்லாமல் அந்த மனிதர் அந்தப் பெண்ணைப் பார்த்தபடி நின்றார். பால் கொடுத்துக் கொண்டிருந்த பெண் திடீரென்று குழந்தையின் தலையில் அடித்துவிட்டு, ''உன் பசிக்கு யாரிடம் பாலிருக்கு?'' என்று குழந்தையைப் பிடுங்கித் தோளில் வைத்துக் கொண்டாள். பாதி உணவில் பறிக்கப்பட்ட குழந்தை வீறிட்டலறியபடி இருந்தது.

பாலாவுக்கு, அந்தப் பெண் ஒரு கொடுமைக்காரிஅவள் பெற்ற பச்சைக் குழந்தையை இப்படி இரக்கமில்லாமல் அடிக்கிறாளே என்று தோன்றியது. உடனே அவளுக்கு, தன் தாய் தன் கழுத்தை நெறித்த காட்சி ஞாபகத்துக்கு வந்தது. உடனே, 'என் தாயும் ஒரு கொடுமைக்காரியா? என் தாய் பைத்தியம். அவளுக்கு என்ன செய்கிறோம் என்று தெரியாமல் செய்தாள். ஆனால் இவள் சோம்பேறி, இரக்கமற்றவள்!' என்று முடிவு கட்டி மனத்தைச் சமாதானப்படுத்தினாள்.



தண்ணீர் இறைப்பதனால் தாத்தாவுக்கு மூச்சு வாங்குவதைக் கவனித்தாள் பாலா. கிழவர் குடத்து நீரை அண்டாவில் கொட்டிவிட்டு, ''முத்தம்மா, ஆறு குடம் இழுத்திட்டேன். வயசாகிவிட்டது பார், மூச்சு வாங்குது. ராத்திரி மறுபடியும் இழுத்துக் கொட்டுகிறேன்'' என்றார்.

''ஆமாம் தாத்தா, உங்களுக்குப் பணக்கார விருந்தாளி வந்திருக்கிறாப்போல இருக்கிறது. அவளோடு பேசணும். இல்லையா! போங்க போங்க'' என்றாள் அசடு வழியச் சிரித்தபடி.

தாத்தா, அவள் செய்த அலட்சியத்தைச் சிறிதும் பொருட்படுத்தாமல், தன் அறை நோக்கி மூச்சு வாங்க நடந்தார். பாலாவுக்கு அந்த முத்தம்மாவின்மீது ஆத்திரம் இன்னும் அதிகமாகியது. அவள் தன் தோளில் பசிக்காக அழும் குழந்தையைச் சிறிதும் கவனியாமல் தன்னையே முறைத்துப் பார்த்தபடி நிற்பதைப் பாலா கவனித்தாள். ஓடிப் போய் அவளை அறையலாமா என்றுகூடத் தோன்றியது. அதற்குள் தாத்தா அருகில் வந்துவிடவே, பாலா தன்னுள் பொங்கி எழுந்த கோபத்தை வார்த்தைகளில் கொட்டினாள்.

''யாரு தாத்தா அந்த முத்தம்மா? சுத்த பஜாரியா இருப்பா போலிருக்கே! கொஞ்சம்கூட வெட்கமோ, நன்றி உணர்ச்சியோ இல்லாதவளாக இருப்பாள் போலிருக்கிறதே! உங்களுக்கு என்ன தலைவிதியா அவளுக்குத் தண்ணீர் இழுத்துக் கொட்ட...?'' என்று சற்றுக் கடுமையாகச் சொன்னாள்.

''பாலா, சத்தம் போட்டுப் பேசாதே! முத்தம்மா காதில விழுந்திடப் போகுது. உள்ளே வா, பேசலாம்'' என்று பாலாவை அழைத்துக் கொண்டு போனார்.

முத்தம்மா அலட்சியமாக அவர்களைக் கவனித்தபடி நின்றாள். தாத்தா அந்தப் பெண்ணிடம் பயப்படுவது பாலாவுக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை.

"என்ன தாத்தா, உங்களுக்குச் சம்பளம் கொடுக்கிற மாதிரி பேசுகிறாள், அந்தப் பிச்சைக்காரி! அவளிடம் ஏன் இப்படிப் பயப்படறீங்க? ஏதோ அவளிடம் தவறு செய்த மாதிரி தாட்சண்யம் காட்டி நடந்துக்கறீங்களே!" என்றாள்.

"ஆமாம்மா! பெரிய தவறுதான் செய்திட்டேன்" என்றார் சம்பந்தய்யா.

## 15

முத்தம்மா விஷயத்தில் தவறுதான் செய்துவிட்டேன் என்று கிழவர் ஒப்புக்கொண்டது பாலாவுக்குச் சிறிதும் புரியவில்லை. 'தவறு' என்ற பதத்துக்கு ஆண்—பெண் உடல் தொடர்பால் வரும் தவறைப் பாலா சிறிதும் நினைக்கவில்லை. பருவம் மீறிய ஆண்களுக்கும் சிறு வயதுப் பெண்களுக்குமிடையே அம்மாதிரியான வெட்கக் கேடான உறவுகள் இருக்க முடியும் என்பதே பாலாவின் மனத்துக்கும் சூழ்நிலைக்கும் அப்பாற்பட்ட விஷயம்.

பாலாவின் வீட்டில் பல பெண்மணிகள் வேலைக்கு இருந்தும், சக்ரபாணிக்கு மனைவியின் சுகம் என்பதே பல வருடங்களாக இல்லாமல் போயிருந்தபோதிலும்சக்ரபாணியின் நடத்தையில் அம்மாதிரி அவதூறு ஏற்படவில்லை. சக்ரபாணியின் வாழ்வு ஒரேவிதமான வறண்ட பாதையில் சென்று கொண்டிருந்தது. 'வெற்றி—பணம்' என்ற இரு தாரக மந்திரங்களில் லயமாக அமைந்துவிட்டபடியால் சக்ரபாணிக்கு, அவளோடு அங்கு நின்றான், இங்கு சுற்றினான், அதைச் செய்தான் என்ற பலவீனங்களுக்கு இடமே இல்லாமலிருந்தது. அம்மாதிரி பலவீனங்கள் இருக்கக்கூடாதா, அதைக்கொண்டு அவனிடம் சலுகைகள் பெறலாமே என்று ஏங்கிய சிப்பந்திகள் எவ்வளவோ பேர். சக்ரபாணியின் செல்வ சாம்ராஜ்யக் கோட்டையில்

www.t.me/tamilbooksworld



பெண்ணாசை என்ற ஒரு துவாரம் மட்டுமிருந்திருந்தால், அதன் வழியே நாச சக்திகளை நுழைத்து, அவனை அழித்து விடலாமே என்று ஏங்கினார்கள் அவன் எதிரிகள்.

சக்ரபாணியின் மனத்தை அன்றாடம் நன்கு உணர்ந்த சாரங்கன்கூடத் தமாஷாகக் கூறுவார்: "நல்ல அழகான பெண்ணை அலங்காரம் செய்து சக்ரபாணியின் முன் நிறுத்தினால் அவன் அவள் அணிந்திருக்கும் கம்மலின் விலை, அவள் மூக்குத்தியின் விலையைத்தான் கணக்கிடுவான். அவளுடைய கவர்ச்சி அவன் கண்ணில் படாது" என்று கேலியாகச் சொல்வார்.

ஆகையால் பாலாவின் மனத்துக்கு ஆண்களின் பயங்கரமான மிருகப் பசியைப் பற்றி உணர்ந்துகொள்ள வாய்ப்பே இல்லை. புத்தகங்களில் அதைப்பற்றிப் படித்திருந்தாள். கல்லூரியில் சில மாணவிகள், மட்டரகமான உடல் தொடர்பின் கவர்ச்சியைக் கோணலாக வர்ணிக்கும் புத்தகங்களை மூடிவைத்துக்கொண்டு படிப்பதைப் பார்த்திருக்கிறாள். அவளுக்கு அம்மாதிரிப் புத்தகங்களைப் படிக்க வேண்டும் என்ற ஆவல் ஒரு சமயம் ஏற்பட்டது. எல்லோராலும் தடுக்கப்பட்ட புத்தகங்களில், மற்ற மாணவிகள் அவ்வளவு ஆர்வத்துடனும் ரகசியத்துடனும் படிக்கும் புத்தகங்களில் என்னதான் எழுதப்பட்டிருக்கும் என்று தெரிந்துகொள்ளும் ஆவல் காரணமாக, ஒரு புத்தகத்தைச் சிநேகிதியிடமிருந்து வாங்கிப் படித்தாள். அந்தப் புத்தகத்தின் பெயர் 'இரண்டாவது இளமையில் விளைந்த தவறு.' எழுபது வயது அடைந்த ஒருவர், சிறு பெண்ணிடம் நடத்திய காதலை வர்ணிக்கும் கதை. அந்தக் கிழவர் சிறு பெண்ணின் வாழ்வைப் பாழாக்கியதன் விளைவாக அவளிடம் அடிமையாகிறார். அந்தப் பெண் அவரிடம் மரியாதைக் குறைவாக நடந்துகொள்கிறாள். அவரை ஒரு வேலைக்காரனைப் போல் நடத்துகிறாள். முடிவில், அவள் அவரைக் கொலை செய்துவிடுகிறாள் என்பதுதான் கதை.

பாலாவுக்கு அந்தக் கதையைப் படித்த பின்புதான் வயதானவர்களுக்கும் இளம் பெண்களுக்கும் இம்மாதிரி ஒரு தொடர்பு ஏற்பட முடியும் என்பதே புரிந்தது. அந்தப் புத்தகத்தைப் படித்து முடிக்கவே அருவருப்பாக இருந்தது. உடலைப் பொறுத்த வரையில் இவ்வளவு ஆபாச உணர்ச்சிகளைத் தூண்டும் புத்தகத்தை வெளியிட்டது தவறு. அதை ஆர்வத்துடன் படிக்கும் சிநேகிதிகளின் மனப்பக்குவம் மிகவும் மட்டரகமானது என்று கண்டித்தாள். அவள் சிநேகிதிகள், பாலாவை அவள் அபிப்ராயங்களுக்காக ஒரு பச்சைக் குழந்தை, உலகம் தெரியாதவள் என்று கேலி செய்தனர்.

''இந்தப் புத்தகம் சித்திரிக்கும்படியான காம உலகத்தைப் பற்றி எனக்குத் தெரியவே வேண்டாம்'' என்று ஆக்ரோஷத்துடன் பாலா பதில் கூறினாள்.

கிழவர், முத்தம்மா விஷயத்தில் காட்டிய பயம் கலந்த பரிவு, பாலாவுக்கு அந்தப் புத்தகத்தின் ஞாபகத்தை ஏற்படுத்தியது. அந்தப் புத்தகத்தில் வரும் கிழவரையும் தன்னுடைய தாத்தா சம்பந்தய்யாவையும் ஒப்பிடுவதே பாவம் என்று அவள் மனமே முடிவு கூறியது. இருந்த போதிலும், இவ்வளவு அலட்சியமாகப் பேசும் முத்தம்மாவுக்கு இவர் ஏன் குற்றேவல் புரியவேண்டும் என்பதும் புரியாத விஷயமாக இருந்தது.

கிழவர் சம்பந்தய்யா அவள் மனத்தில் நிகழும் குழப்பத்தைப் புரிந்து கொண்டாரோ, இல்லையோ? அவர் அடுத்தபடி கூறிய விவரம் அவள் குழப்பத்தைத் தெளிவு படுத்தியது.

''முத்தம்மாவை உனக்குத் தெரியாது பாலா. அவள் சிறந்த உத்தமி. அவள் இன்று சித்தம் குழம்பிய நிலையில் இருக்கிறாள். அவளுக்கே என்ன பேசுகிறோம். என்ன செய்கிறோம் என்று தெரியாமல் இருக்கிறது. அவள் துக்கத்தை யாரும் பகிர்ந்துகொள்ள முடியாத ஒரு நிலையில் இருக்கிறாள். அவளைப் பார்க்கும்போது எனக்கு உன் தாய் லட்சுமியின் நினைவுதான் வருகிறது. அதிக அன்பு வைப்பவர்கள் அந்த அன்புக்கு இலக்கான பொருளை இழக்கும்போது பித்தம் பிடித்தவர்போல் ஆகிறார்கள். உங்கம்மா லட்சுமியும் அப்படித்தான். அண்ணா சந்திரன் மீது உயிரையே வைத்திருந்தாள். சந்திரன் போனதும் அவளுடைய புத்தி பேதலித்துவிட்டது! ரங்கூனுக்கு வியாபாரத்துக்காகப் புறப்படும்போது சந்திரன், சக்ரபாணி, லட்சுமி மூவரும் சென்றார்கள். சந்திரன் மனைவி காமாட்சி போக முடியவில்லை. காரணம், குழந்தை மோகனுக்கு அம்மை போட்டிருந்தது. ரங்கூனிலிருந்து திரும்பியபோது சக்ரபாணியும், லட்சுமியும், குழந்தையாகிய நீயும்தான் திரும்பினீர்கள். ஆனால் லட்சுமி, உன்னைத் தன் குழந்தை என்றுகூடப் புரிந்து கொள்ளாத பைத்தியமாகத் திரும்பினாள். சந்திரன் திரும்பவே இல்லை. சந்திரனின் மரணம்தான் லட்சுமியின் இந்நிலைக்குக் காரணம் என்று உங்கப்பா சொன்னான். அந்த மனக்கசப்பில் சந்திரனுக்கு வேண்டிய பந்துக்கள் யாருமே தன் வீட்டுக்கு வரவேண்டாம் என்று சொல்லி விட்டான். அப்போது முறிந்த உறவுதான்'' என்று கிழவர் சொல்லி நிறுத்தினார்.

பாலா, முத்தம்மாவைப் பற்றிப் பேசப் போக, தன் தாயைப் பற்றிய, புதிய விஷயங்கள் தெரியவே, சிறிது நேரம் சிந்தித்தபடி சும்மா இருந்தாள்.

''ஏன் தாத்தா, முத்தம்மாவுக்கு வேண்டியவர்களை அவள் இழந்து விட்டாளா?'' என்று கேட்டாள்.

''முத்தம்மாவின் துக்கத்தைப் புரிந்துகொள்ளு முன்பு நீ அவள் யார் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். சென்னை நகரம் ஒருமனித சமுத்திரம். அந்தச் சமுத்திரத்தில் நூற்றுக்கணக்கான மனிதத் திமிங்கிலங்களும், சுறா



www.t.me/tamilbooksworld

மீன்களும் பங்களாக்களில் வாழ்கின்றன. மற்ற லட்சக்கணக்கான சிறு மனித மீன்கள் இந்தத் திமிங்கிலங்களிலிருந்து தப்பி வாழ முயலுகின்றன. அம்மாதிரியான சிறு மீன் முத்தம்மா. அவளுக்கு அப்பா யாரென்று தெரியாது. காரணம், அவளுக்குத் தாய் சொல்லவில்லை. தாய் சொல்லாததற்குக் காரணம், முத்தம்மாவுக்கு நினைவு வருமுன்பே தாய் இறந்துவிட்டாள். முத்தம்மாவுக்கு நான்கு வயதாக இருக்கும்போது, அவள் தாய் வேகமாகச் சென்ற காரால் அரைக்கப்பட்டு இறந்தாள். தாய் இறந்துவிட்டாள் என்பது கூட உணராமல், முத்தம்மா பேசாத தன் தாயின் உடலருகில் அழுது கொண்டிருந்திருக்கிறாள். சவம் ஆஸ்பத்திரிக்குச் சோதனைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. ஆஸ்பத்திரி வாசலில் அழுது கொண்டு நின்றிருக்கிறாள். ஒரு வாரத்துக்கு, அப்புறம்தான் முத்தம்மாவுக்கு, அவள் குடியிருந்த கோவில் எரிக்கப்பட்டுவிட்டது என்ற உண்மையை யாரோ உணர்த்தியிருக்கிறார்கள். அன்றுதான் முத்தம்மா 'சாவு' என்ற ஒன்று இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறாள். அப்புறம் தெருவிலேயே தானே ஸ்வயம்புவாக வளர்ந்திருக்கிறாள்.

"ஓட்டல் வெளிப்புறம், ஹைக்கோர்ட் வெளிப்புறம் நின்று கை நீட்டிப் பிச்சை எடுத்து வாழ்ந்திருக்கிறாள். அந்த வாழ்க்கைக்கும் அவள் பருவம் குறுக்கே வந்திருக்கிறது. இந்த நகரத்துக் கண்ணியவான்கள் சிலர் பிச்சை போடுவதற்குப் பிரதியாக அவளிடம் ஏதோ ஒன்றைக் கேட்டனர். முத்தம்மாவுக்கு அதைக் கொடுக்க இஷ்டமில்லை. முத்தம்மாவின் கற்புக்குப் படிப்போ, போதனையோ, அந்தஸ்தோ காரணமல்ல, இயற்கையாகவே அவளுக்குக் கற்புணர்ச்சி தோன்றியிருக்கிறது. பிச்சைக்காரர்கள் கும்பலில் பண்போடு இருந்த முத்தம்மாவை, மற்றவர்கள் விரும்பவில்லை. எந்த இனமும், அதற்கு அப்பாற்பட்டவர்களை ஒதுக்குவது இயற்கை



தானே! அந்தப் பிச்சைக்கார இனம் அவளைத் தங்கள் நிலைக்குக் கொண்டுவர முயன்றது. அதனால் முத்தம்மா பிச்சை எடுப்பதை நிறுத்தி, பூ விற்க ஆரம்பித்தாள்.

"அப்போதுதான் நான் அவளைச் சந்தித்தேன். அதுவரை தெருவிலே தூங்கிய முத்தம்மா, தன் கற்புக்கு அது ஆபத்து என்று உணர்ந்து, என்னிடம் இரவு தூங்க ஒரு பத்திரமான இடம் கேட்டாள். நான் இந்த வீட்டின் வெளிப்புறத்தில் படுக்க அனுமதித்தேன். இந்த உதவிக்குப் பிரதியாக என் வேட்டியைத் துவைப்பது, என் பாத்திரங்களைக் கழுவுவது போன்ற வேலைகளைச் செய்து வந்தாள். இந்தக் காம்பவுண்டில் உள்ள மற்றக் குடித்தனக்காரர்களுக்கும் வேலை செய்து கொஞ்சம் பணம் சேர்த்தாள். பிறகு துணி வாங்கி, வெட்டி, கர்சீப் தைத்து, மாலையில் பூவோடு கர்சீப்பும் விற்க ஆரம்பித்தாள். கர்சீப் விற்கும் காலத்தில்தான் அவள் உன் தந்தையின் பர்ஸைக் கார் பார்க்கில் கண்டு எடுத்தாள். அதில் ஐம்பதினாயிரம் இருப்பதைக் கண்டு பயந்து போய்விட்டாள். பர்ஸிலிருந்த உன் தந்தையின் அட்ரஸைத் தெரிந்து கொண்டு, தந்தையின் மத்திய ஆபீஸுக்குச் சென்றிருக்கிறாள். விஷயத்தைச் சொல்லாமல், உன் தந்தையைப் பார்க்க வேண்டுமென்று மட்டும் சொல்லியிருக்கிறாள். சிப்பந்திகள் ஒவ்வொரு நாளும் அனுமதிக்காமல் மறுத்திருக்கிறார்கள். அதற்குள் உன் தந்தை காணாமல் போன பர்ஸைத் திருப்பிக் கொடுப்பவர்களுக்கு ஆயிரம் ரூபாய் சன்மானம் அளிப்பதாகப் பத்திரிகையிலும் பிரகரித்துவிட்டார்.

"முடிவில் ஒருநாள் அவளுக்கு உன் தந்தையைப் பார்க்க அனுமதி கிடைத்திருக்கிறது. உன் தந்தையைப் பார்த்துப் பர்ஸைக் கொடுத்திருக்கிறாள். சக்ரபாணி பர்ஸை வாங்கியவுடன் பணம் சரியாக இருக்கிறதா என்று எண்ணியிருக்கிறான். பணம் ஓர் அணா குறையாமல் சரியாக இருக்கவே, முத்தம்மா சன்மானத்துக்காகக்

www.t.me/tamilbooksworld

காத்து நிற்கிறாள் என்று நினைத்திருக்கிறான். முத்தம்மா பேப்பரே படிப்பதில்லை; அவளுக்குச் சன்மானம் பற்றிய விஷயமே தெரியாது என்று அவனுக்குத் தெரியவில்லை. சக்ரபாணி 250 ரூபாயிலிருந்து சன்மானத்தைப் பேரம் பேச ஆரம்பித்திருக்கிறான். முத்தம்மா எதற்கு இருநூற்றைம்பது தருகிறார் என்று புரியாமல் வாயடைத்து நின்றிருக்கிறாள். முத்தம்மாவின் மௌனத்தைச் சக்ரபாணி தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறான். படிப்படியாகத் தொகையை எழுநூற்றைம்பது வரை கொண்டு வந்திருக்கிறான்.

''சக்ரபாணியின் பேச்சிலிருந்துதான் முத்தம்மாவுக்குப் பத்திரிகையில் வெளிவந்த சன்மானத்தைப் பற்றியே விவரம் தெரிந்திருக்கிறது. அதைக் குறைத்து வாங்கிக் கொள்ளச் சொல்கிறார் என்பதும் புரிந்திருக்கிறது. உடனே முத்தம்மாவுக்குச் சிரிப்பு வந்திருக்கிறது. 'எனக்குச் சன்மானமாக எந்தத் தொகையும் நீங்க கொடுக்க வேண்டாம். உங்களுக்குச் சேர வேண்டியதைச் சேர்த்துட்டேன்' என்று சொல்லியிருக்கிறாள். இந்த விஷயத்தைப் பூராவும் விஸ்தாரமாகக் கூறிவிட்டு முத்தம்மா என்னிடம் என்ன சொன்னாள் தெரியுமா, பாலா?'' என்று கேட்டார் கிழவர்.

பாலா பெருமூச்சு விட்டபடி, ''முத்தம்மா என்ன தாத்தா சொன்னாள்?'' என்று கேட்டாள்.

''கோடிக் கணக்கிலே பணம் இருந்தும் அந்தச் சக்ரபாணி நானே வாங்கிக் கொள்ளத் தயாராக இல்லாத சன்மானத் தொகையை எனக்குக் கொடுக்காமல் இருக்க அவர் பட்ட பாட்டைப் பார்த்ததும், எனக்கு அவர் மேலே வருத்தமே ஏற்பட்டுடுச்சு. ஏழை—பசிக்குப் பழகிப் போன மாதிரி, வண்டி மாடு— வண்டி சுமக்கப் பழகிப் போன மாதிரி, பாவம், சக்ரபாணி— பணத்தைச் சுமக்கப் பழகிப் போயிட்டாரு!'' என்றாள்.



''அந்த நிகழ்ச்சிக்கும், இன்று முத்தம்மாவின் நிலைக்கும் என்ன சம்பந்தம் தாத்தா?'' என்று பாலா கேட்டாள்.

''நிறையச் சம்பந்தம் இருக்கிறது பாலா! ஒரு பெண் ஐம்பதினாயிரம் ரூபாயை லட்சியம் செய்யாமல் திருப்பிக் கொண்டு வந்து கொடுத்த செய்தி, சக்ரபாணியின் காரியாலயங்களில் பெரிய பேச்சை ஏற்படுத்திவிட்டது. பத்திரிகைக்காரர்கள் வரை விஷயம் பரவி, ஒரு பத்திரிகை நிருபர், முத்தம்மாவைப் பேட்டி காணவே வந்துவிட்டார். ஒரே நாளில் முத்தம்மா பிரபலமாகி விட்டாள். சக்ரபாணியின் காரியாலயத்தில் சின்ன சம்பளத்தில் வேலை செய்த சோமு என்ற குமாஸ்தா இதன் காரணமாகவே முத்தம்மாவைச் சந்தித்துப் பழகியிருக்கிறான். அவனுக்கு அவள் மீது காதல் ஏற்பட்டு, கல்யாணத்துக்கு அவள் சம்மதத்தைக் கேட்டிருக்கிறான். பால பருவத்தில் ஆண்களின் மிருக உணர்ச்சியைப் பற்றி நேரடியாகப் புரிந்து கொண்ட முத்தம்மா, கல்யாணத்துக்கு ஒப்புக் கொள்ள முதலில் மறுத்தாள். பிறகு என்னிடம் விஷயத்தைக் கூறி முடிவு கேட்டாள். நான் சோமுவை மணக்குமாறு வற்புறுத்தினேன். என் வார்த்தைக்கு மதிப்பு வைத்து, சோமுவை மணந்தாள். அவன் மீது உயிரை வைத்தாள். பூ விற்கப் போவதையே விட்டு விட்டாள். குழந்தையும் பிறந்தது. இந்தச் சமயத்தில் காரியாலயத்தில் காணாமல் போன ஐந்நூறு ரூபாய் பணத்தைச் சோமு எடுத்துவிட்டான் என்ற குற்றச்சாட்டு எழுந்தது.

''சோமு நிரபராதி என்று எனக்கும் முத்தம்மாவுக்கும் நன்றாகத் தெரியும். முத்தம்மா கண்ணகியைப் போல் ஆத்திரமடைந்து சக்ரபாணியைப் பார்க்கச் சென்றாள். சக்ரபாணியிடம், 'ஐம்பதினாயிரம் ரூபாய் தெருவில் கிடந்தபோது, ஒரு காசு எடுத்துக் கொள்ளாமல் திருப்பிக்

கொடுத்தவள் நான். என் கணவன் பணத்தை எடுத்திருந்தால், உடனே நான் திருப்பிக் கொடுத்திருப்பேன். திருட்டுப் பணத்தில் நகை, புடைவை வாங்கிக் கொள்பவள் அல்ல நான்!' என்று கூறியிருக்கிறாள். ஆனால் சக்ரபாணி போலீஸில் பிராது கொடுத்து விடவே நடவடிக்கை ஆரம்பமாயிற்று. சோமு, அவமானத்தைத் தாங்க முடியாமல் மனைவியையும், குழந்தையையும் விட்டுவிட்டு ஓடிவிட்டான். அன்றுதான் முத்தம்மாவின் மனத்தில் இடி இடித்தது. என்னிடம் ஓடி வந்தாள்.

"'பூ விற்று ஒருவேளை சாப்பாடு நிம்மதியாகச் சாப்பிட்டு வந்தேனே! திருமணம் செய்து வைத்து என் வாழ்வைப் பாழாக்கிவிட்டீர்களே ஐயா! அவர் காரியாலயத்தில் திருடவில்லை. என் வாழ்வின் சுதந்திரத்தை, என் அமைதியை, என் தூக்கத்தைத் திருடிச் சென்று விட்டார்!" என்று அலறினாள். அப்புறம் ஒரு வாரத்தில் பைத்தியக்காரி போல் ஆகிவிட்டாள். தினமும் காலையில் எழுந்து தெருக்கோடியில் போய் நிற்பாள், சோமு வருகிறானா என்று எதிர்பார்த்தபடி. இரவு வேளைகளில் குழந்தை அழுதால், அதைச் சோமுவின் பிரதிநிதியாக நினைத்துத் திட்டுவாள். அவளுக்கு என் சக்திக்குள்ள அளவுக்கு வைத்தியம் செய்து வருகிறேன்" என்று சொல்லி முடிக்கு முன்பே பேரிரைச்சல் கிணற்றடியிலிருந்து கேட்டது.

கிழவரும் பாலாவும் பதறிப் போய் எழுந்து வெளியே வந்தனர்.

## 16

சம்பந்தய்யாவும் பாலாவும் வெளியே ஓடிவந்ததும், கிணற்றுக்குச் சற்று அருகில் உள்ள சிறு அறையின்

www.t.me/tamilbooksworld



வெளிப்புறம் கூட்டம் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தனர். உட்புறமிருந்து முத்தம்மாளின் குரல் தெளிவில்லாமல் கேட்டது. முத்தம்மாளின் குரலோடு இழைந்தபடி சிறு குழந்தையின் பேரிரைச்சலும் கேட்டது.

கிழவர் சம்பந்தய்யா, முத்தம்மாள் வசிக்கும் அறை நோக்கி ஓடினார். அவரைத் தொடர்ந்து பாலாவும் ஓடினாள். அது ஒரு நீண்ட அறை; இரண்டாகத் தடுக்கப்பட்டிருந்தது. ஒரு பகுதி சமையலுக்கும் சாப்பாட்டுக்கும், மறுபகுதி படுப்பதற்கும் வருபவரை வரவேற்பதற்கும் என்று இருந்தது. சம்பந்தய்யாவின் வாழ்வுப் பகுதியை விடச் சிறியது அந்த இடம். அந்த அறை வெளிப்புறம் பூராவும் பெண்களும் ஆண்களுமாக நின்றனர். முத்தம்மா, குனிந்து உட்கார்ந்திருக்கும் ஒரு நபரை ஒரு சிறு தண்ணீர்த் தவலையால் இடித்துக் கொண்டிருந்தாள். முத்தம்மாளின் கூந்தல் அவிழ்ந்து அவள் தோள்களிலும், பின்புறமும் புரண்டபடி இருந்தது. அவள் மேலாடை நழுவி, தரையில் புரண்டபடி இருந்தது. கைக் குழந்தை சற்று அருகில் பாயில் கிடந்தபடி அலறிக்கொண்டிருந்தது. குனிந்து உட்கார்ந்திருப்பவன் நழுவ முடியாதபடி அவன் தலைதொங்கும் தூளியில் பொருத்தப்பட்டிருந்தது. அவன் முகம் தூளியின் வெளிப்புறம் நீட்டியபடி இருந்தது. பாத்திரத்தினால் மடமடவென்று இடிக்கும் அடியால், அவன் முகம் சிவந்து தக்காளிப்பழம் போல் பரிதாபமாகவும் வேடிக்கையாகவும் இருந்தது.

அவன் முகத்தைப் பார்த்ததும் பாலாவுக்குப் புரிந்து விட்டது. அரைமணி நேரத்துக்கு முன் கிணற்றங்கரையில் முத்தம்மாவைக் கவனித்துக் கொண்டிருந்தவன்தான் இப்போது அல்லல்படுகிறான் என்பது தெளிவாகியது. முப்பது வயதுக்கு மேற்பட்ட ஆண்பிள்ளை கழுத்து வரை தூளியில் மாட்டிக்கொண்டு செப்புப் பாத்திரத்தால் அடிபடுவது, அங்கு நின்ற சில பெண்களுக்கு ஒரு ஹாஸ்யக்

காட்சியாகவே பட்டது. சிலர் சிரித்தனர். சிரிப்பொலி கேட்டு ஆத்திரமடைந்த முத்தம்மா, தன் கோபத்தை அருகில் நின்ற பெண்கள் மீது திருப்பினாள்.

''என் வயிறு நெருப்பாய் எரியுது. உங்களுக்குச் சிரிப்பா வருது! கை பிடிச்சவன் கைவிட்டுப் போனால் நான் ஊருக்கெல்லாம் பெண்சாதியாயிடுவேனா? ஏண்டி சிரிக்கிறீங்க! வேணும்னா இந்தக் குரங்கை உன் வீட்லே கொண்டு போய் வெச்சுக்கிறியா?'' என்று தூளியில் கிடந்தவனை, சிரித்த பெண்ணிடம் தள்ளினாள்.

கிழவர், ''என்ன நடந்தது முத்தம்மா? பாசு என்ன செய்தான்?'' என்று அடி வாங்கிவிட்டு அசடு வழிய நின்ற பாசுவைப் பார்த்தபடி கேட்டார்.

''இந்த எழவுக்குப் பயந்துதான் தெருவிலே பூவிக்கிறதை நிறுத்தி, உங்க பேச்சைக் கேட்டுக் கல்யாணம் கட்டிக்கிட்டேன். இப்போ என்ன ஆச்சு, தாத்தா? ஹோட்டல்லே சரக்கு போட்ற பயல் இந்த பாசு, என் கை தொட்டுப் பேச வர்றான்! எனக்கு ஆதரவாய் இருந்து சோகம் தரப் போறானாம். முகத்தைப் பாரு. தகரக் குவளை மாதிரி!'' என்றாள்.

பாசு என்பவன் விர்ரென்று வெளியேறினான். சாதாரணமாகவே பார்ப்பதற்கு ஒரு தகரக் குவளை போன்ற பாசுவின் முகம் இப்போது ஒரு நசுங்கிய தகரக் குவளையைப் போல் இருக்கிறது என்று வெறுப்போடு நினைத்தாள் பாலா. மற்றப் பெண்கள் பாதையிலிருந்து விலகி அவனுக்கு வழிவிட்டனர்.

பெரியவர் சம்பந்தய்யா ஒன்றும் சொல்லாமல் கீழே அழுது கொண்டிருந்த குழந்தையை எடுத்து முத்தம்மாளிடம் நீட்டினார். ஆத்திரம் காரணமாக ஏற்பட்ட அதிர்ச்சி முத்தம்மாவின் சன்னமான உடலில் இன்னும் மறையவில்லை. அவள் உடல் நடுங்கியபடி இருந்தது.

www.t.me/tamilbooksworld



அழுத அவள் கண்கள் கிழவரைப் பார்த்தன. இப்போது கோபம் இருநத இடத்தில் மரியாதைதான் இருந்தது.

''அய்யா, நாக்குப் போன போக்கிலே உங்களைப் போய்ப் பேசிட்டேன்'' என்று சொல்லிவிட்டுக் குழந்தையை வாங்கிக் கொண்டாள்.

கிழவர், ''பரவாயில்லே முத்தம்மா. நீ கொஞ்சம் அமைதியா தரையிலே உட்கார்ந்து குழந்தைக்குப் பால் கொடு'' என்று சொல்லி, குழந்தையை முத்தம்மாவிடம் கொடுத்தார். நாகு மாமியின் பக்கம் திரும்பினார். ''நாகு மாமி, உங்கள் வீட்டிலே பசும் பால் இருந்தால் கொஞ்சம் கொண்டுவந்து கொடுக்கிறீங்களா?'' என்று கேட்டார்.

நாகு மாமி உடனே பால் எடுத்து வரச் சென்றாள். மற்றப் பெண்களும் ஆண்களும் மெள்ள நகர்ந்தனர். அங்கு கீழே கிடந்த வெண்கலப் பாலாடையை எடுத்துப் பாத்திரத்தில் சத்தம் உண்டு பண்ணினார். அந்தச் சத்தம் கேட்டுக் குழந்தை அழுகையை நிறுத்திவிட்டுக் கிழவரைப் பார்த்தது.

நாகு மாமி பால் கொண்டு வரவும், அந்தப் பாலை எடுத்து முத்தம்மா தன் குழந்தைக்குப் புகட்டினாள். பால் புகட்டும்போது முத்தம்மாவின் முகத்தில் தாய்மை நிலவியது. குழந்தை மடக் மடக்கென்று பாலைத் திருப்தியுடன் குடித்தது. அப்போதுதான் முத்தம்மா, கிழவரின் அருகில் திறந்த விழிகளுடன் புரியாத காட்சிகளைப் பார்த்தபடி, நிற்கும் பாலாவைக் கவனித்தாள். உடனே கனிவுடன், ''தாத்தா! உங்களுக்குத் தொந்திரவு...! உங்களைப் பார்க்க வந்திருக்கிற பெண்ணோடு நீங்க பேசிட்டிருந்தது கெட்டுப் போச்சு. நீங்க போங்க தாத்தா; எனக்கு ஒரு ஆபத்தும் இல்லை!'' என்றாள்.

கிழவர் புன்முறுவல் செய்தபடி பாலாவுடன் தன்னுடைய அறைக்குத் திரும்பி வந்தார்.

ஒரு நிமிஷம் கோபம்; மறு நிமிஷத்தில் கழிவிரக்கம்! இது செல்வந்தர்களுக்கு மட்டுமில்லை; ஏழைகளுக்கும் உள்ள பலவீனம்! தெரியாமலா கீதையில் பகவான் சொன்னார். 'குணங்கள் குணங்களில் சுழல்கின்றன' என்று.

பாலாவுக்குக் கீதையின் வாக்கியம் எவ்வாறு புரியாமல் இருந்ததோ, அதைவிடப் புரியாமல் இருந்தது இன்று நடந்த நிகழ்ச்சிகளும் அதன் கோவையும். காமம், கற்பு இரண்டுக்குமிடையே ஏற்பட்ட அந்த நாடகம், பாலாவின் பார்வைக்கென்றே கடவுள் நிகழ்த்திய நாடகம் போல் தோன்றியது பாலாவுக்கு. திடீரென்று ஒரு காற்று அடித்துத் திரை விலகி வாழ்க்கையின் உண்மை அவள் கண்களுக்கு முன்பு காட்டப்பட்டது போல் தோன்றியது. அவள் தாத்தா தங்கிய அந்தப் பகுதி, அதன் பிரச்சினைகள் இவையெல்லாம் அவள் எப்போதோ படித்த மேல்நாட்டுக் கதைகளின் மொழி பெயர்ப்பில்தான் பார்த்திருக்கிறாள். அது வாழ்வில் நடக்குமென்றே பாலா எண்ணிப் பார்த்ததில்லை.

தாத்தாவின் அறை வெளிப்புறம், கிணற்றடியில் மறுபடியும் பெண்கள் சிரித்தபடி தண்ணீர் இழுத்துக் கொண்டுதான் இருந்தனர். எந்தவித அதிர்ச்சியும் யாருக்கும் இல்லை. நோய், பிணி, மரணம் மூன்றையும் நாம் சாதாரணமாக ஏற்றுக் கொண்டுதான் போகிறோம். ஆனால் இன்பச் சுவர்களின் நிழலிலே போற்றி வளர்க்கப் பட்ட சித்தார்த்தனுக்குத்தான் அவை அடிப்படை பிரச்சினையாக ஆகின. சித்தார்த்தனும் தனக்கு அந்தப் பிணி மூப்பு, மரணம் ஏற்படுமே என்று நினைக்க நினைக்கப் பீதி அடைந்து, அந்தச் சுயநலத்தின் பீதியிலே பிறந்தது தானே புத்த மதம்! அதே போலப் பாலா, தன்னை அந்த முத்தம்மாளின் நிலையில் வைத்துப் பார்க்கவே பயந்தாள். பண்பு, சீலம், கற்பு இவற்றைப் போதிக்க யாரும் இல்லாத நிலையிலே, அவள் இயற்கையாகவே சீலமாக

www.t.me/tamilbooksworld



வாழ்ந்தாள். பாலாவுக்கு ஐம்பதினாயிரம் ரூபாய் பணத்திலே கவர்ச்சி இல்லை. அதே போல்தான் முத்தம்மாவும் பணத்தால் கவரப்படவில்லை. 'தெருவிலே அன்றாட வாழ்வுக்குப் போராடும் நிலையில்கூட, பணம் அவளைக் கவரவில்லை! அவளுக்கு மட்டும் ஏன் இப்படிச் சோதனைகள் அடுக்கடுக்காக வரவேண்டும்? நான் மட்டும் ஏன் அடுக்கடுக்காக இன்பங்களை அனுபவித்து வாழ வேண்டும்? என் தந்தையின் செல்வம் எனக்கு எப்படிப் பட்ட பாதுகாப்பைக் கொடுத்திருக்கிறது?' என்று ஒரு விநாடி நினைந்தாள். அந்தப் பாதுகாப்பையும் தாண்டி விதி அவள் தாயின் வாழ்வோடு விளையாட வில்லையா?

பாலாவின் மனத்தில் நிகழும் சிந்தனைகளின் சிக்கலை ஒருவாறு புரிந்துகொண்டவர்போல் சம்பந்தய்யா, ''பாலா சில மணி நேரம் வாழ்க்கையை நேரடியாகப் பார்த்ததுமே உனக்கு அதிர்ச்சி ஏற்பட்டு விட்டதல்லவா? உன் உள்ளுணர்வுகள், திரண்ட செல்வத்தின் மையத்தில் இருந்தாலும், இன்னும் கெட்டுப் போகவில்லை என்பது புரிகிறது. உன் இதயம் இருக்க வேண்டிய இடத்தில், அதற்கு இருக்க வேண்டிய துடிப்போடுதான் இருக்கிறது என்பது தெளிவாகப் புரிகிறது பாலா! உன்னால் நம் குடும்பத்துக்கே விமோசனம் ஏற்படலாம்'' என்று சொன்னார்.

பாலா பதில் பேசவில்லை.

''தாத்தான்னா பேத்திக்கு நல்ல நகை, அல்லது புடைவை, ரவிக்கைத் துண்டாவது அன்போடு வாங்கிக் கொடுப்பாங்க. இந்தத் தாத்தா இவ்வளவு பணக்காரப் பேத்திக்கு என்ன வாங்கித் தர முடியும்? ஒன்றுமில்லை! இந்த மாதிரி பேத்தியின் மனத்தைக் குழப்பித் துக்கத்தைத் தான் தர முடியுது'' என்று தன்னைத்தானே இகழ்ந்து கொண்டார்.

பாலாவுக்குத் தாத்தாவைப் பார்க்கவே பரிதாபமாயிருந்தது. ''நீங்க ஒரு தவறும் செய்யலே தாத்தா!

உங்களை நான் குற்றம் சொல்லலே! பழக்கமில்லாத சில விஷயங்களைப் பார்த்ததும் மனம் குழம்பிப் போயிட்டுது. அவ்வளவுதான்'' என்று சொல்லிச் சமாளித்தாள்.

''பாலா, முத்தம்மாவைப் பார்த்து நீ வருந்தக் கூடாது. அவள் எவ்வளவோ பட்டுவிட்டாள். இனிமேல் அவளுக்கு நல்லதுதான் நடக்கும். ஆனால் தூக்கமே பாராமல், பார்த்தாலும் புரிஞ்சுக்காமல் தொடர்ந்து தவறு செய்யறவங்களைப் பார்த்துத்தான் நாம் வருந்தணும். தினமும் பல்வலி, தலைவலி, வயிற்றுவலி வர்றவாங்க ஏதாவது மருந்து சாப்பிட்டுச் சரி செய்துக்லாம்; ஆனால் வலியே இல்லாமல் திருடன்போல் நம் உடலிலே வளருதே புற்று நோய், அதுக்கு மருந்தும் கிடையாது; அதுலே பிழைக்கவும் முடியாது. அது போலத்தான் உங்கப்பா நிலை! கடவுளின் சித்தம் வேடிக்கையா இருக்கு. தொடர்ந்து அருள் இல்லாமல் வாழறவங்களைத்தான் கடவுள், அவுங்க பாதையிலே செல்லும்படி விட்டு விடறான். அவுங்களை வளர்த்தும் விட்டு விடறான். ஏதோ பெரிய தண்டனைக்காகத்தான் அப்படி விட்டுவிடறானா, என்னன்னு புரியலே! ஏசுநாதர், 'உலகம் பூராவும் அடைந்தென்ன, ஒருவன் அவன் ஆன்மாவையே இழந்த பின்...' என்று சொன்னார். அந்த வாக்கியம்தான் உங்கப்பாவை வர்ணிக்குது.''

''போதும் தாத்தா! இன்னிக்கு இதுக்கு மேலே என்னைச் சித்திரவதை செய்யாதீங்க!'' என்று பாலா கூச்சலே போட்டு விட்டாள்.

கிழவர் திடுக்கிட்டு நின்றார். பாலா கட்டிலிலிருந்து எழுந்தாள். ''நான் வர்றேன் தாத்தா'' என்று கூறியபடி வெளியே நடக்க ஆரம்பித்தாள்.

அவள் அந்தத் தெரு மூலைக்கு வரும்போது, முத்தம்மா குழந்தையோடு யாரின் வருகைக்காகவோ



காத்திருப்பவள் போல் நின்றிருந்தாள். இம்முறை பாலாவைப் பார்த்ததும் அவள் சிரித்தாள்.

''ஏம்மா, நீ தாத்தாவுக்குச் சொந்தமா?'' என்று கேட்டாள்.

பாலா தயக்கத்துடன். ''ஆமாம்'' என்றாள்.

''பாவம் தாத்தா!'' என்றாள் முத்தம்மா. ''கடவுளுக்கே கண்ணில்லே! அவன் எங்கேயோ ஆகாசத்திலே தூங்கறான். இந்தத் தாத்தா அவன் சார்பிலே, அவனை நல்லவனாக்கப் பார்க்கிறார்! இந்த வயசிலே கஷ்டப்படாமல் அவரை உங்க வீட்ல கொண்டு போய் வச்சுக்கப்படாதா?'' என்று கேட்டாள்.

பாலாவுக்கு என்ன பதில் சொல்வது என்று புரியவில்லை. பேசாமல் நடந்தாள்.

''சொந்தக்காரங்களாம்... சொந்தக்காரங்க! எல்லாம் வந்து பார்க்கிறதோட சரி. தொட்டுக்கவும் மாட்டாங்க, ஆளைச் சும்மா விட்டுக்கவும் மாட்டாங்க!'' என்று முத்தம்மா சொல்வது பாலாவின் காதுகளில் விழுந்தது.

சொந்தம் என்று சொல்லிக் கொள்ள யாருமே இல்லாத ஜீவன், எப்படிச் சொந்தக்காரர்களைப் பற்றித் தத்துவம் பேசுகிறாள் என்பது பாலாவுக்கு விளங்கவே இல்லை.

சிந்தாதிரிப்பேட்டை தெருக்களைக் கடந்து, பஸ்ஸில் வீடு திரும்பிய பாலாவுக்கு உடலும் உள்ளமும் அயர்ந்து போயிருந்தன. குளித்துவிட்டுச் சாப்பிடுவோம் என்று, குளியல் அறைக்குப் போனாள். அந்த அறையின் பளபளப்பு ஏற்பாடுகளை எல்லாம் பார்க்கவே அவளுக்குப் பிடிக்கவில்லை. அருகில் உள்ள சாதாரண பாத்ரூமில் குளித்து விட்டுச் சாப்பிட வரும்போது சக்ரபாணி அவளைச் சந்தித்தான். அவன் முகம் சிரித்தபடி இருந்தது. அவன் கண்களில் ஒருவித ஒளியிருந்தது. காரியத்தைச் சாதிக்கும்போது வரும் ஒளி!

"என்ன பாலா, இந்த மாதிரி சாதாரணமா டிரஸ் பண்ணிட்டிருக்கே? போய் நல்ல பனாரஸ் சாரி, வைரம் வைத்த நெக்லஸ் போட்டுட்டு வா!" என்றான் சக்ரபாணி.

"அதெல்லாம் எதுக்கப்பா?" என்றாள் பாலா.

"இன்னைக்கு யாரு சாப்பிட வந்திருக்காங்க தெரியுமா? கோயமுத்தூர், பெங்களூரிலே எல்லாம் பெரிய புள்ளியான மிஸ்டர் தியாகராஜனும் அவருடைய பிள்ளை மணியும் வந்திருக்காங்க. அவுங்களிடம் உன்னை அறிமுகம் பண்ணி வைக்கப் போகிறேன்" என்றான் சக்ரபாணி.

"உங்க வியாபாரிகளிடம் எனக்கு எதுக்கப்பா அறிமுகம்?" என்றாள் பாலா.

"முட்டாள்தனமாய்ப் பேசாதே பாலா! தியாகராஜன் வெறும் வியாபாரியில்லை. என் சம்பந்தியாக ஆனாலும் ஆவார். அவருக்கு ஒரே பிள்ளை. அவன் வெளிநாடு போய்த் திரும்பியவன்" என்றான் சக்ரபாணி.

பாலாவில் கால்கள் தள்ளாடின.

## 17

தந்தையின் திருப்திக்காக இன்று வைர நகைகளை அணிவதா, வேண்டாமா என்று யோசித்தாள் பாலா. சுற்றிச் சுற்றிச் சுழன்று வரும் எண்ணச் சுழல் அவள் உள்ளத்துக்கு, உடலுக்கு ஒரு சோர்வைக் கொடுத்திருந்தது. வீம்புக்காக வம்பு செய்து, தந்தையைத் திணற வைக்க அவள் மனத்தில் பலம் இல்லை. அதில் அவளுக்கு இச்சையுமில்லை. காலையிலிருந்து மாலை வரையில் உடல் வருந்த உழைத்தவன் இரவில் படுக்குமுன், எப்படி உற்சாகம் இல்லாமல் ஒப்புக்காகச் சில வேலைகளைச் செய்வானோ, அதுபோல் இருந்தது பாலாவின் நிலை,

www.t.me/tamilbooksworld



எந்தவித உற்சாகமும் இல்லாமல் ஆடைகளை மாற்றினாள். மின்னும் வைரங்களை இரும்புப் பெட்டியிலிருந்து எடுத்து அணிந்து கொண்டாள். சாப்பிடும் அறைக்குச் சென்றாள். அங்கே சமையல்காரர், எல்லாருக்கும் அவரவர் இடத்தில் வெள்ளிப் பிளேட்டுகளும், தங்கக் கிண்ணிகளும் வைத்திருந்தார். வெள்ளிப் பிளேட்டுகளும் முத்துப் பதித்த தங்கக் கிண்ணிகளும் வைக்கப்பட்டதிலிருந்து, இன்றைய விருந்து மிகவும் முக்கியமானது என்று பாலா புரிந்து கொண்டாள். சாப்பாடு அயிட்டங்களும் நிறைய, திகைக்க வைக்கும் அளவுக்கு இருக்கும் என்று அவளுக்குத் தெரியும்.

இம்மாதிரி விருந்தின்போது மேஜை மீது படைக்கப்படும் பொருள்கள் அவ்வளவும் சாப்பிடப்படுவதில்லை. சீர்வரிசைபோல் பெருமைக்காகப் பார்வைக்கு வைக்கப்படும். சாப்பிட்டு முடிந்தானதும் விருந்தாளிகள் எழுந்து வரவேற்பு அறைக்குச் சென்றதும், தித்திப்புப் பதார்த்தங்கள் 'செல்லுலோஸ்' பேப்பரில் பாக் செய்யப்பட்டு, சக்ரபாணியின் ரெஸ்டாரண்டுகளுக்கு அனுப்பப்படும். அங்கு அவைகளுக்கு ஒரு விலை போடப்பட்டு ரெஸ்டாரன்ட் கணக்கிலிருந்து பணம் சக்ரபாணியின் கைக்கு மாறி வந்துவிடும். இந்த விஷயம் விருந்தாளிகளுக்குத் தெரியாது. ஆனால் இந்தச் சிறிய விஷயத்தைக் கூடச் சக்ரபாணி மறப்பதில்லை. மறு நாள் காலை அவர் டேபிளில் அந்தப் பணியாரங்களின் விலை அதற்கென்று வந்த தொகையும் இருக்க வேண்டும். ஆகையால் இம்மாதிரி விருந்துகள் டாம்பீகமாக நடந்தாலும் உண்மையிலேயே சக்ரபாணியின் சொந்தக் கணக்கில் லாபம் காட்டாமல் இருக்காது. விரயத்தையும் லாபமாக்க வேண்டும் என்பதே அவனுடைய வியாபார முறை அல்லவா? இம் மாதிரி விருந்து நடக்கும்போது சக்ரபாணியின் பார்வையில் சம்பளம் கொடுத்துச் சாப்பிடும் சர்மா அழைக்கப்படுவதில்லை. அவருக்கு அன்று விடுமுறை.

சாப்பிடும் அறையில் உள்ள ஏற்பாடுகளைப் பார்த்து விட்டுப் பாலா பக்கத்து அறைக்குச் சென்றாள். பக்கத்து அறையில்தான், சாப்பிடப் போகும் முக்கிய விருந்தாளிகள், சாப்பிடுமுன் அமருவார்கள். அங்குள்ள சோபாக்களின் குஷன்களில் உட்கார்ந்ததும், புதை மணலில் இறங்கியது போன்ற உணர்வு ஏற்படும். ஆனால் ஆபத்துக் கிடையாது. விளக்குகள் முற்றிலும் நவீன முறையில் அமைக்கப்பட்டிருந்தன. விளக்குகள் மறைவிலிருந்து ஒளி வீசும். கால் புதையும் கம்பளங்கள், மல்லிகையின் நறுமணம் வீசும் குளிர் சாதனப் பெட்டி, இவையெல்லாம் சக்ரபாணியின் ஏற்பாடு.

சக்ரபாணி மது அருந்துவதில்லையானாலும், விருந்தாளிகளுக்குத் தேவைப்பட்டால் மது கொடுக்கப்படும். மது பாட்டில்கள், கோப்பைகளுடன் ஒரு பார் சுவரில் புதைக்கப்பட்டிருந்தது. ஒரு பித்தானை அழுத்தியதும், காதுக்கினிய இசையோடு சுவரிலிருந்து அந்த 'பார்' வெளிவரும். வெளிநாட்டவர்கள், ஐரோப்பிய விருந்தாளிகள் வரும்போதுதான் அந்த பாருக்குத் தேவை ஏற்படும். அற்புதமாக அலங்கரிக்கப்பட்ட அந்த அறையில் சக்ரபாணி தங்குவதே இல்லை. பாலாவும் அங்கு வருவதில்லை.

வேலையாள் ஒருவன், ஒரு வெள்ளி ட்ரேயில் சிறிய கிளாஸ்களில் சீரகம் மிளகு போட்ட தக்காளி சூப் போன்ற ஒன்றை நிரப்பிக்கொண்டு உள்ளே நுழைந்தான். சிவன் கோவில் உற்சவங்களில், உற்சவமூர்த்திக்குப் பத்தடி முன்னால் சிறிய பல்லக்கில் சிறு சிலையைத் தாங்கிச் செல்வது பற்ற முடியாத மரபு சிவனுக்கு முன்னால் சண்டிகேசுவரர் செலவது ஐதிகம். அதுபோல் நாகரிக டின்னர்களில், பெரிய சாப்பாட்டுக்கு பசியைக் கிளறி விடும் 'அப்பிடைசர்' என்ற திரவத்தைத்தான் வேலையாள் உள்ளே தாங்கிச் சென்றான். அவனைத் தொடர்ந்து பாலாவும் உள்ளே சென்றாள்.



நரைத்த தலையுடன் சில்க் ஜிப்பா அணிந்த பெரியவர் அறையில் இருந்தார். அவருக்குச் சற்று அருகில் சில்க் போன்று மின்னும் புஷ் ஷர்ட்டும் அதைவிட அதிகமாக மின்னும் 'பேன்ட்டும்' அணிந்த இளைஞன் இருந்தான். அவன் அணிந்திருந்த துணிகள் வெளிநாட்டில் வாங்கப் பட்டவை என்று தெளிவாகத் தெரிந்தது. அவன் அணிந்திருந்த கைக்கடிகாரத்தில் மணி காட்டும் நம்பர்கள் இருக்க வேண்டிய இடங்களில் சிறு வைரக் கற்கள் புதைக்கப்பட்டிருந்தன.

பாலா அறையில் நுழைந்ததும், வீட்டுப் பெண் நுழைந்து விட்டாள். பெண் இனத்துக்கு மரியாதை காட்ட வேண்டும் என்ற மேல்நாட்டுப் பண்பாட்டின் விளக்கமாக இளைஞன் எழுந்து நின்றான். ஆனால் தியாகராஜன் சுருட்டைப் புகைத்தபடியே சோபாவில் அமர்ந்திருந்தபடி புன்முறுவல் செய்தார். பாலா வணக்கம் தெரிவித்தாள்.

''என்னம்மா பாலா, நல்லாருக்கியா?'' என்று பழங்காலத்துக் கோவில் கதவு திறக்கும்போது ஏற்படும் ஓர் ஓசையில் கேள்வியைக் கேட்டார் தியாகராஜன். பாலாவுக்கு ஏற்கனவே அவர் ஓரளவு அறிமுகம் ஆனவர் ஆகையால், அவள் பொய்ப் புன்னகையை வரவழைத்துக் கொண்டு, ''நல்லாருக்கேங்க. நீங்க சுகமா?'' என்று கேட்டாள்.

''கழுதை, என்ன சொகம் வேண்டியிருக்கு? சொம்மா ஊசி போட்டுட்டிருக்கேன். ஊசி பலத்திலே வாழறேன்! எங்கய்யா இன்னமும் உயிரோடு இருக்கார். வருஷா வருஷம் பழனிக்குக் காவடி எடுக்கிறாரு! வல்லாரையும் பழைய சோறும், முருக பக்தியும் அவரை நல்லா வச்சுருக்கு. நான் பாவியத்திலே ஆடின விளையாட்டு... இப்போ என்னைப் பாடாப் படுத்துது!'' என்றார்.

www.t.me/tamilbooksworld

என்னடா இந்த மனிதன் தன் மகன் முன்னால் ஏதேதோ சொல்லிக் கொண்டு போகிறாரே என்று சக்ரபாணி வேதனைப்பட்டான். உடனே பேச்சை மாற்றும் நோக்கத்துடன் சக்ரபாணி, ''பாலா பெரியவருக்கும் மணிக்கும் சூப் எடுத்துத் தாம்மா!'' என்றார்.

பாலா, வேலையாள் நீட்டிய ட்ரேயிலிருந்த சூப் கிளாசை எடுத்து முதலில் தியாகராஜனிடம் கொடுத்தாள். பிறகு அடுத்த கிளாஸை எடுத்துத் தந்தையிடம் கொடுக்கப் போனாள். சக்ரபாணி மரியாதையாக, ''மணியிடம் கொடும்மா'' என்றான்.

பாலா சூப் கிளாசை எடுத்துப் போகும்போது மணி புன்முறுவலுடன் எழுந்து கிளாஸை வாங்கிக் கொண்டு, ''தாங்க் யூ'' என்றான். அவன் கண்கள் அவள் முகத்திலிருந்து கழுத்து வரை இறங்கி, அவள் மார்பில் நிற்பதை உணர்ந்தாள். அவன் உதடுகள் கோணலாகப் புன்னகை புரிந்தபடி இருந்தன. பாலா விர்ரென்று திரும்பி அடுத்த சூப் கிளாஸைத் தந்தையிடம் கொடுத்தாள். தியாகராஜனின் குரல் பின்புறம் கேட்டது.

''பாலா, இன்னொரு கிளாஸ் சூப் கொடும்மா! நல்லா செய்திருக்கான். நம்ம ஊட்லேயும் சமையல்கார நாய் சூப் தயார் பண்றானே... பூண்டு நாத்தம்தான் இருக்குது! சக்ரபாணி சார், நீங்க எதையுமே சாலக்காகத்தான் செய்யறீங்க!'' என்றார்.

பாலா சிரித்தபடி அவரிடம் சூப் கிளாஸைக் கொடுத்தாள். அவருடைய கையிலிருந்த சுருட்டின் நெடி அவளுக்கு வேதனை கொடுத்தது.

தியாகராஜன், பாலாவுக்குத் தன் மகன் மணியைச் சுட்டிக் காட்டி, ''படிப்பை முடிச்சிட்டு மணி கோயமுத்தூர்லேதான் ஓடியாடிக்கிட்டு இருந்தான். நான்



தான், 'போக்கத்த பயலே! இங்கே என்னடா வெறும் பயலாச் சுத்தறே?... சீமை அமெரிக்காவிலே போய்ச் சுத்துடா'ன்னு சொல்லி அனுப்பிச்சேன். எக்சேஞ்ச் கிடைக்காது, அப்படி இப்படின்னு கவர்மென்ட்லே இருக்கிற பசங்க சொன்னாங்க. கொடுக்கிற எக்சேஞ்சைக் கொடுறா, மீதித் தேவைக்கு நான் திருடிக்கிறேன். நான் பெத்த நாய் சீமைக்குப் போயாகணும். உள்ளூர் உதவாக்கரையா உப்பிலிபாளையம் ரோட்லே திரியக் கூடாது'ன்னு அந்த டில்லி ஆபீஸ் செக்ரடரிகிட்டேயே சொல்லிட்டேன்!''

மகனை 'நாய்' என்று அழைக்கும் தியாகராஜன் பாஷையே பாலாவுக்குக் குமட்டல் எடுத்தது. 'அப்படி நாயென்று கூப்பிட்ட பின்பும் சிரித்தபடி பயந்து நிற்கும் கோழை மகன் எந்த ஊர் போய்த் திரும்பினால் என்ன, எந்த ஆடைகள் அணிந்து நின்றால் என்ன, அவன் மனிதனல்ல' என்ற தீர்மானத்துக்கு வந்துவிட்டாள்.

சக்ரபாணி, தன் மகளின் முகத்தில் ஏற்பட்ட குறிப்பைப் புரிந்து கொண்டான். சித்தம் போன போக்கில் பேசிக் கொண்டே போகும் தியாகராஜனின் பேச்சை எப்படி நிறுத்துவது என்று புரியவில்லை. பேச்சை நிறுத்தும் நோக்கத்துடன் சக்ரபாணி, ''சாப்பிடப் போகலாம்'' என்று அழைத்தான்.

தியாகராஜன் எழுந்தார். மகன் மணியும் எழுந்தான். பாலா முதலில் போய் டைனிங் ரூமில் தியாகராஜனுக்கு நாற்காலியைக் காட்டினாள். பிறகு மணி உட்கார வேண்டிய இடத்தைக் காட்டினாள். பிறகு சக்ரபாணி உட்கார்ந்தான். அவனுக்கு எதிராக நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். மேல்நாட்டு முறைப்படி வந்தவரை உபசரிக்கத் தாயின் உதவி, தந்தைக்கு இல்லையாகையால், தாயின் இடத்தை வகித்தாள் பாலா.

தியாகராஜன், ''பார் மணி, சக்ரபாணி சார் வீட்லே எல்லாம் இங்கிலீஷ் பாணிதான்! அவர் சம்சாரத்துக்கு

உடல் சரியில்லை. அதனால் பாலாவே வந்தவர்களை, வான்னு சொல்லி உபசாரம் பண்ணுது'' என்றார்.

தித்திப்பு வகைகள் பரிமாறப்பட்டன. சக்ரபாணி ஒன்றும் சாப்பிடாமல், காரட் ஜூஸ் மட்டும் குடித்தபடி உட்கார்ந்திருந்தான். தியாகராஜன் எல்லாவற்றையும் விழுங்கியபடி இருந்தார். மேஜைமீது விரிக்கப்பட்டிருந்த துணியில் பலகாரங்கள் விழுந்து கறைப்படுத்திக்கொண்டிருந்தன. தியாகராஜனின் பேச்சோ பாலாவுக்குக் காது கொடுத்துக் கேட்க முடியாதபடி இருந்தது. அவருடைய பங்களாவைக் கட்டும் என்ஜினீயர் ஒரு நாய்! அவருடைய மானேஜர் ஒரு கழுதை! இப்படி அவருக்குத் தெரிந்தவர்களையெல்லாம் நாய் கழுதை என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

சக்ரபாணி இடையிடையே பம்பாய் வியாபாரத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்.

''அந்தச் சிந்திப் பசங்களோட நம்மாலே பேச முடியலீங்க சக்ரபாணி சார்! என்னுடைய பம்பாய் வியாபாரத்தை நீங்களே ஒரு வருஷம் இரண்டு வருஷம் பார்த்துக் கொள்ளுங்க. மணி சென்னையிலேயே இருந்து, உங்களோடு சேர்ந்து வியாபாரத்தைக் கவனிச்சிக்கட்டும்!'' என்றார்.

''பாலாவும் மணியும் வெளியே உலவி விட்டுவரட்டும்; அதற்குள் நாம் வியாபாரத்தைப் பற்றிப் பேசுவோம்'' என்றான் சக்ரபாணி.

தியாகராஜன், ''அதுவும் சரி. மணி, நீ பாலாவோடு போய்விட்டு வா'' என்றார். மணி அசடு வழியச் சிரித்தபடி புறப்பட்டான்.

உடனே சக்ரபாணி எழுந்து வரவேற்பு அறைக்குள் நுழைந்தான். மணி அடித்து, சாரங்கனை வரவழைத்தான். சாரங்கன் டைப் செய்த காகிதங்களுடன் நுழைந்தார். அத்துடன் கையெழுத்திட வேண்டிய செக்குகளையும் எடுத்து வந்தார். காகிதங்களைத் தியாகராஜன்

www.t.me/tamilbooksworld



முன்னால் நீட்டினார். அந்தக் காகிதத்தில் தியாகராஜனுடைய பம்பாய் வியாபார விஷயங்கள் பூராவும் இருந்தன.

தியாகராஜன் கையெழுத்திட வேண்டிய இடம் மட்டும் காலியாக இருந்தது. ஒரு லட்ச ரூபாய் செக்கில் கையெழுத்திட்டுச் சக்ரபாணி நீட்டினான்.

தியாகராஜன் திகைத்து விட்டார். சாப்பிடும்போது விளையாட்டாக, 'பம்பாய் வியாபாரத்தை நீ எடுத்துச் செய்' என்று சொன்னதை, உடனே மனிதன் செயல் படுத்தச் சொல்கிறானே என்று திகைத்தார்.

''வெள்ளிக்கிழமை, செக்கை வேண்டாங்காதீங்க. வாங்குங்க'' என்றான் சக்ரகாணி.

தியாகராஜன் ஒன்றும் தோன்றாமல் கையெழுத்திட்டார். கையெழுத்திட்ட பேப்பரைப் பார்த்தார். அதில் பதினைந்து வருட காலத்துக்குத் தன்னுடைய ஏஜன்ஸி மாற்றம் குறிப்பிடப்பட்டிருப்பதை உணர்ந்தார். மகனுடைய பெயரே அந்த ஏஜன்ஸியில் இல்லை என்பதையும் தியாகராஜன் புரிந்துகொண்டார். ''என்னங்க! பத்திரத்திலே மணி பேரே இல்லியே! நான் இரண்டு வருஷம்னு சொன்னேன். நீங்க பதினைந்து வருஷம்னு போட்டு இருக்கீங்களே! எதுக்கும் கோயம்புத்தூர் போய் எங்க ஆபீஸ் நாய்களோடவும் கலந்துட்டப்புறம் முடிவு பண்ணுவோமே'' என்று இழுத்தார்.

சட்டென்று சக்ரபாணியின் முகம் இருண்டது. ''மிஸ்டர் தியாகராஜன்! நாம் அப்படிப் பிஸினஸ் பண்றதில்லே. முடிவெடுத்தப்பறம் பின் வாங்கறதில்லே. உங்களுக்கு இஷ்டமில்லைன்னா சொல்லுங்க. இந்த ஒப்பந்தத்தையும் செக்கையும் இப்பவே கிழிச்சுப் போட்டுடலாம் என்றான்.'' தியாகராஜன், அமைதியாக உறுதியோடு கூறப்பட்ட வார்த்தைகளைக் கேட்டுத் திடுக்கிட்டார். ''சரி சார். உங்க இஷ்டப்படியே இருக்கட்டும்.''

இதே வேளையில் பாலா, மணியைக் காரின் முன் சீட்டில் அமர்த்தி, சென்னை பீச் ரோட்டில் கொண்டு நிறுத்தினாள்.

மணி வெளிநாட்டுக் கடற்கரைகளைப் பற்றியும், வெளிநாட்டு நங்கையர்களைப் பற்றியும் பெருமையாகப் பேசிக்கொண்டே இருந்தான். அவன் ஒன்றுமே உழைக்காமல், குடும்பச் சொத்தில் செலவு செய்து பெருமைப்படுவது அவளுக்கு வேடிக்கையாக இருந்தது.

''இந்த மாடல் ஷெவர்லே கார் மெட்ராஸ்லே அபூர்வம் என்று நினைக்கிறேன்'' என்றான், பாலாவைத் திருப்தி செய்யும் நோக்கத்துடன்.

''எந்த விஷயத்தில் அபூர்வம் என்கிறீர்கள்? மற்றவர்கள் உழைத்துச் சம்பாதித்துக் கார் வாங்கி ஓட்டிச் செல்கிறார்கள். நான் எங்கப்பாவின் பணத்தில் வாங்கிய காரில் உலாவுகிறேன். அதுவும் அபூர்வம்தானே!'' என்றாள் குத்தலாக. அதை மணி புரிந்துகொள்ளவில்லை.

''என்ன பாலா அப்படிச் சொல்றே? நம்ம அப்பா பணம் நம்முடையதுதானே? நான் அப்பாவுக்கு ஒரே பிள்ளை. நீ அப்பாவுக்கு ஒரே பொண்ணு. இந்த ஓல்டு பெக்கர்ஸ் (கிழட்டுப் பிச்சைக்காரங்க) நமக்காகத்தானே சம்பாதிக்கிறாங்க!'' என்றான்.

இதற்கு மேல் பாலாவால் பொறுக்க முடியவில்லை. ''ஐ ஆம் சாரி...! நான் எங்கப்பாவை ஓல்டு பெக்கர்னு நினைக்கவுமில்லே; அவர் என்னைத் தான் பெத்த தாயின்னும் நினைக்கிறதில்லே!'' என்று சுடச் சுடச் சொன்னாள்.

மணியின் முகம் வியர்த்து விட்டது. பதில் சொல்லாமல் வியந்து உட்கார்ந்திருந்தான். அதே படபடவென்ற சத்தத்துடன் ஒரு ஸ்கூட்டர், புதுமாடல் ஷெவர்லே காரை நெருங்கியது. அந்த ஸ்கூட்டரிலிருந்து இறங்கியவன் வேறு யாருமில்லை; மாமா மகன் மோகன் தான்!



## 18

மோகன் ஸ்கூட்டரைத் நிறுத்தி விட்டுத் திரும்பினான்.

மோகன் தன்னைப் பார்த்து அடையாளம் கண்டு கொள்வானோ என்ற திகிலுடன் இருந்தாள் பாலா. தன்னை ஏழை என்று நினைத்து வீட்டுக்கு அழைத்துச் சென்ற மோகன், இவ்வளவு விலை உயர்ந்த காரில் தன்னைப் பார்த்தால், என்னவென்று நினைப்பான்? அதுவும் மணியோடு உட்கார்ந்திருப்பதைப் பார்த்தால்...

மணிக்கும் அவளுக்கும் அதிக நாள் பரிச்சயம்கூட இல்லை. மணி தந்தையின் விருந்தாளி. அவனோடு பீச்சுக்குக் காரில் வந்தது படித்த பெண்ணான பாலாவுக்குத் தவறாகப் படவில்லை. இருந்தாலும் மோகன் பார்வையில் மணியோடு காரில் உட்கார்ந்திருப்பதே புனிதக் குறைவாகத் தோன்றியது. காரை ஸ்டார்ட் செய்தால் அது மோகன் கவனத்துக்கு வரும். அவன் காருக்குள்ளே யார் இருக்கிறார்கள் என்று உற்றுக் கவனிக்க நேரும். அங்கிருந்து நகராமல் காரிலே உட்கார்ந்திருந்தால், ஸ்கூட்டரை விட்டு இறங்கிய மோகன், கார் அருகே நடந்து வரலாம், அப்போதும் அவன் அவளைக் காணலாம். நல்ல உடை அணிந்த இளைஞர்களோடு காரில் சுற்றும் ரகம் என்று தன்னை நினைத்து விட்டால்? பாலா திகைத்தாள்.

அப்போது விளக்குக் கம்பத்தினடியில் நின்றபடி மோகன் குனிந்து தன்னுடைய டிரவுசர்களை முழங்கால் வரை மடக்கி விட்டுக் கொண்டான். குனிந்தவன் நிமிர்ந்ததும், அவன் பார்வை காரில் விழுந்தது. மோகன்

வெளிச்சத்தில் நின்றதால், அவன் எங்கு பார்க்கிறான் என்பது பாலாவுக்குத் தெளிவாகத் தெரிந்தது. அவன் பார்வை, காரில் தான் உட்கார்ந்திருந்த இடத்தின் மீது விழுவதைப் பார்த்தாள். தலையிலிருந்த ரத்தம் பாதம் நோக்கி இறங்குவதை உணர்ந்தாள். மூச்சே நின்று விடும் போல் இருந்தது. அடுத்த விநாடி, 'என்ன சுந்தரி?' என்று அழைத்தபடி காரை நோக்கி வரப் போகிறான். 'இந்த மைனர் யார்?' என்று மணியைச் சுட்டிக் காட்டிக் கேட்கப் போகிறான். அதற்குள் நாம் இறங்கி ஓடி விடுவோமா, இல்லை காரின் அடியில் நழுவி உட்கார்ந்து விடுமோமா என்று அசட்டுத்தனமான யோசனையெல்லாம் செய்ய ஆரம்பித்தாள்.

ஒரு விநாடி காரையே பார்த்தபடி நின்ற மோகனின் முகத்தில் எந்தவித மாறுதலும் ஏற்படவில்லை கோபம், சிரிப்பு, ஆச்சரியம் எதுவுமே தென்படவில்லை. சாதாரணமாகக் கண்களை இடுக்கியபடி பார்த்தான்.

சட்டென்று பாலாவுக்கு விஷயம் புரிந்தது. மனதுக்கு ஒரு நிம்மதியும் ஏற்பட்டது. மோகன் நின்று கொண்டு இருந்த இடத்தில் விளக்கின் ஒளி காரின் பளபளப்பான முன் புறத்திலும், சன்ஷேடிலும் விழுந்து எதிரொளியாக மோகன் பார்வையைத் தாக்கவே, அவன் கண் கூசியது. குழப்பான அந்த ஒளியில் அவனுக்கு அவள் உட்கார்ந்திருந்த இடம் தெளிவாகத் தெரியவில்லை என்பதைப் புரிந்து கொண்டாள். அவள் மனத்திலிருந்த பயம் நீங்கியதும் தன் உணர்வு பெற்றாள்.

அப்போது ஒரு கை அவள் தோளிலிருந்து இறங்கி, முதுகில் நகருவதை உணர்ந்தாள் பாலா. மோகன் அடையாளம் புரிந்து கொள்வானோ என்ற குழப்பத்தில் கவனிக்காமல் இருந்தபோது, மணியின் கை விஷமம் செய்திருக்கிறது. பாலா கவமிழந்து மௌனமாக இருந்தபடியால் மணி அதைச் சம்மதம் என்று எடுத்துக் கொண்டிருக்கின்றான். உடனே மணியின் மூளை, மேலும்

www.t.me/tamilbooksworld



முன்னேறும்படி உத்தரவிட்டிருக்கிறது என்பதைப் பாலா புரிந்துகொண்டாள். மணியைத் திரும்பிப் பார்த்தாள்.

அவன் அசட்டுப் புன்னகை புரிந்தபடி அமர்ந்திருந்தான். அவன் கால்கள் அவள் முழங்காலை உராய்வதை உணர்ந்தாள். சில விநாடிகளில் மணி மிகவும் நெருங்கி விட்டான் என்பதையும் புரிந்து கொண்டாள். மற்றப் பெண்களைப் போல் பதறவில்லை. அன்று இருண்ட சந்தில் முரடர்கள் தாக்கியபோது ஏற்பட்ட பீதிகூட இப்போது ஏற்படவில்லை பாலாவுக்கு.

இக்கட்டான சூழ்நிலையில் சக்ரபாணி பதற்றமில்லாமல் சிந்திப்பது போல் மகள் பாலாவும் சிந்தித்தாள். 'இந்த அத்தான் மோகன் தோன்றும் போதெல்லாம் நான் ஏன் ஓர் ஆண் மிருகத்தின் பிடியில் இருக்கிறேன்? கதவைத் திறந்து வெளியேறலாம் என்றால், அத்தான் பார்த்து விடுவார். அது கூடாது! என்ன செய்வது...!' என்று யோசித்தாள்.

அதற்குள் மணியின் கை விரல்கள், எதிரி நாட்டில் துருப்புகள் வெற்றி நடை போடுவதுபோல் நகர்ந்தபடி இருந்தன. போதாதற்கு மணியின் மூச்சு வேறு குப்பென்று உஷ்ணமாக வெளி வந்தது. மணி, கையின் படையெடுப்பைச் சத்தமில்லாமல் நிறுத்த வேண்டும்; என்ன வழியென்று நினைத்தாள். மெள்ள தன் கையால் மணியின் கையை எடுத்தாள்.

மணி குதூகலத்துடன், ''மை ஸ்வீட்டி!'' என்றான்.

பாலா மற்றக் கையால் கார் சாவியைத் திருப்பி, காரை ஸ்டார்ட் செய்தாள். மணி, ''என்ன காரை ஸ்டார்ட் செய்துட்டே? ஓ...! இங்கே ரொம்ப வெளிச்சமா இருக்குன்னு நினைச்சு வேறு இடத்துக்குக் கொண்டு போறியா?'' என்றான்.

பாலா ரிவர்ஸ் கியரைப் போட்டாள். கார் பின்னால் போகும் போது ஒருவேளை தன் முகம் மோகனுக்குத் தெரிந்துவிடுமோ என்று பயம் ஏற்பட்டது. மணியின்

கையை எடுத்துத் தன் முகத்துக்கு நேரே மறைத்தபடி ரிவர்ஸில் சென்றாள்.

மணிக்குச் சந்தோஷம், தன் கையை அன்போடு முத்தமிடப் போகிறாள் என்று. தன் விரல்களால் பாலாவின் உதட்டைத் தடவினான். இதுதான் சமயம் என்று பாலா தன் பற்களைத் திறந்து மணியின் விரலை லபக்கென்று கடித்துவிட்டாள்.

மணி, கத்தியபடி விரலை எடுக்கப் பார்த்தான்.

பாலா விடாமல் சில விநாடி கடித்து அப்புறம் விட்டாள். மணி சில விநாடி ஒன்றும் புரியாமல் கைகளை உதறினான். ரத்தம் வழிவதைப் பார்த்து மணி "அய்யோ, ரத்தம் வந்து விட்டதே!" என்றான்.

பாலா காரைத் திருப்பியபடியே சிரித்துக் கொண்டு, "அது ரத்தமாயிருக்காது வெறும் உப்புத் தண்ணியாயிருக்கும்" என்றாள்.

அவள் கேலியைப் புரிந்து கொள்ளாமல், "இல்லை, ரத்தம்தான்" என்று மணி சொன்னான்.

"உங்க தேகத்திலே உண்மையிலேயே மனித ரத்தம் ஓடினால் முதல்சந்திப்பிலேயே எங்கிட்டே இப்படி நடந்து கொள்ளமாட்டீங்க! உங்கப்பா சொல்றது சரிதான்!"

மணி ஆத்திரத்துடன், "என்ன எங்கப்பா சொல்றது, சரி?" என்றான்,

"அதுதான் 'நான் பெற்ற நாய்'ன்னு உங்களைச் சொல்றாரே; அதைத்தான் சொல்றேன், நான் கடிச்சவுடனே நீங்க நாய் மாதிரியே 'லொள்'ன்னு சத்தம் போட்டீர்களே!"

மணி, ரத்தத்தை வாயால் உறிஞ்சினான். பிறகு, கர்சீப்பை எடுத்துச் சுற்றினான். "நீ இப்படிக் கடிப்பேன்னு நான் நினைக்கலே" என்று அசடு வழியச் சொன்னான்.

"நானும் நீங்க இப்படி நடந்து கொள்வீர்கள் என்று நினைக்கலே! அதுதான் மேல் நாட்டிலே கற்றுக் கொண்

www.t.me/tamilbooksworld



டீர்களா? இல்லை, கோயம்பத்தூர்லே கற்றுக் கொண்டீர்களா? அதை எங்கிட்டே வைத்துக் கொள்ளாதீர்கள்!"

"உனக்குப் பிடிக்கலேன்னா வேண்டாம்னு சொல்றது தானே?" என்று மணி மீண்டும் உளறினான்.

பாலாவுக்கு மணியின் பேச்சைக் கேட்கச் சிரிப்பாக வந்தது. "இன்னிக்கு ஒரு இடத்துக்குப் போயிருந்தேன். அங்கே முத்தம்மான்னு ஒரு ஏழைப் பெண். அவகிட்டே உங்க மாதிரி ஒருத்தர் நடந்து கொண்டார். அவள் ஒரு தவலையாலே தலையிலே விளையாடினாள். திடீர்னு காருக்குள்ளே தற்காப்பு ஆயுதமா தவலை கிடைக்குமா? உள்ளதெல்லாம் பல்லுதான்! இதை வைத்துத்தானே என்னை நான் காப்பாற்றிக்கொள்ள முடியும்!" என்றாள்.

அப்புறம் வீடு வரும்வரையில் மணி பேசவில்லை. கர்சீப்பால் சுற்றிய விரலுடன் மணி வீட்டுக்குள் நுழைந்தான். அப்போதுதான் மணியின் தந்தை தியாகராஜன், சக்ரபாணியிடம் பேசிவிட்டு, விருந்தினர் தங்கும் விடுதிக்குப் புறப்படத் தயாராக இருந்தார். பாலாவும் மணியும் சேர்ந்து வரும் காட்சியைப் பார்த்ததும், தியாகராஜனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. 'நாம் வியாபாரத்தில் தான் கோட்டை விட்டு விட்டோம். மகன் திருமண விஷயத்திலாவது முன்னேற்றம் இருக்கும்' என்று நினைத்தார்.

அவன் விரலைச் சுற்றியிருந்த கர்சீப்பைப் பார்த்ததும், "என்ன மணி, விரலுக்கு என்ன? அடிபட்டுவிட்டதா...?" என்றார்.

மணி அசடு வழிய பாலாவைப் பார்த்து விட்டு, "ஆமாம்ப்பா, கார் கதவு சாத்தறப்போ விரல் நடுவிலே சிக்கிக்கிடுச்சு" என்றான்.

உடனே தியாகராஜன், "கதவிலே சிக்கிச்சா? ஏண்டா நாய்! நீ கார்லே போனதே இல்லையா? இனம் கெட்ட இடத்திலே ஏண்டா கையை வைக்கிறே?" என்று கடிந்து கொண்டார்.

மணி தலையைக் குனிந்தபடியே, "அது சரிப்பா;

வியாபார விஷயமெல்லாம் பேசியாச்சா?'' என்று பேச்சை மாற்றும் நோக்கத்துடன் கேட்டான்.

''எல்லா எழவும் பேசியாச்சு. சக்ரபாணி நமக்கு விருந்து வச்சார். அப்போ நாம சாப்பிட்டோம். அவர் சாப்பிடாமல் ஜூஸ் குடிச்சுக்கிட்டு இருந்தார். வெளியே ரூம்லே வந்ததும், அவர் என்னைச் சாப்பிட்டுட்டார். பம்பாய் பிஸினஸ் இனிமேல் அவருதுதான்! கையெழுத்து போட்டாச்சு. நீ சம்பளத்துக்கு அவரோட இருந்து கவனிச்சுக்கோ! சக்ரபாணி ஆளை எப்படி முழுசா முழுங்கிறார்ங்கறதை அவர்கிட்டே இருந்து கவனிச்சுக்கோடா நாய்!'' என்றார்.

சக்ரபாணி சிரித்தபடியே, ''என்ன தியாகராஜன், கரெக்டா பிஸினஸ் பண்ணினா, ஆளை முழுங்கறதுன்னா அர்த்தம்? இனிமேல் என் பிஸினஸ் வேறே, உங்க பிஸினஸ் வேறயா?'' என்றான்.

தியாகராஜன், ''வர்ரேம்மா!'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டார். மணியும் ஒரு விதமாகப் பாலாவைப் பார்த்துவிட்டு வெளியே புறப்பட்டான்.

சக்ரபாணி, தியாகராஜனைக் காரில் அனுப்பிவிட்டு, பாலாவின் அறைக்கு வந்தான். சக்ரபாணி சிரித்தபடியே, ''எப்படியம்மா இருக்கான் மணி? எப்படி என் சாய்ஸ் மாப்பிள்ளை'' என்றான்.

பாலாவும் சிரித்தபடி, ''அப்பா, நீங்க பார்க்கிற மாப்பிள்ளையைக் கடித்துத்தான் திங்கணும்!'' என்றாள்.

அவள் குரலில் இருந்த ஏளன தொனியைப் புரிந்து கொண்டு, ''ஏன், உனக்குப் பிடிக்கல்லியா பாலா?'' என்றான் சக்ரபாணி.

''போங்கப்பா! நான் தூங்கப் போறேன்'' என்று செல்லமாகத் தந்தையைக் கண்டித்தபடி அவரை அறைக்கு வெளியே தள்ளியிட்டுப் பாலா கதவைச் சாத்தினாள்.

படுக்கையில் வந்து படுத்தாள். அவள் மனத்தில் அத்தான் மோகனின் நினைவு வந்து தாக்கியதும் சிரித்தபடியே கண்களை மூடினாள்.

www.t.me/tamilbooksworld



பொழுது விடிந்ததும் பாலாவுக்குத் தாத்தாவைப் பார்க்கவேண்டுமென்ற அவாதான் முதல் எண்ணமாக இருந்தது. எழுந்து பல் துலக்கிவிட்டு, மணி அடித்து டிபனை அறைக்கே கொண்டு வரச் செய்தாள். டிபன் சாப்பிட்டு முடிந்ததும் சத்தமில்லாமல் அறைக்கு வெளியே வந்தாள். நடுக்கட்டு வழியே நடந்து வாசல்புறம் வந்தாள். அங்குள்ள டிரைவர்கள், வழக்கம் போல், அவளருகே வந்து எந்தக் கார் வேண்டும் என்று கேட்டனர். கார் என்ற வார்த்தையைக் கேட்டதும் பாலாவுக்கு முதல் நாள் இரவு நிகழ்ச்சிகள்தான் ஞாபகத்துக்கு வந்தன.

''எந்தக் காரும் வேண்டாம். நடந்துவிட்டு வரப் போகிறேன்!'' என்று சொல்லிவிட்டு நடக்க ஆரம்பித்தாள்.

சில வாரங்களாக, பாலா திடீரென்று நடந்து செல்வது, நடந்து வீடு திரும்புவது போன்ற பழக்க வழக்கத்துக்கு டிரைவர்கள் பழகிவிட்டார்கள். ஆகையால் பதில் சொல்லாமல் நகர்ந்தனர்.

பாலா வேகமாக நடக்க ஆரம்பித்தாள். காலை வெயிலும், அதோடு கலந்த இளந் தென்றலும், அத்தான் மோகன் நினைவும் ஒரு புதுவிதமான எக்களிப்பைத் தந்தன. நடையிலே ஒருவிதத் துள்ளலும் இருந்தது. வழியிலே சைக்கிளில் செல்பவர்கள், துள்ளி நடக்கும் போது பாலாவின் உடலில் ஏற்பட்ட அங்க அசைவுகளின் கவர்ச்சியைப் பார்த்தபடி சைக்கிளை நிறுத்திவிட்டு அவளைக் கவனிப்பதை அவள் உணரவில்லை.

வீட்டை விட்டு முக்கால் மைல்தூரம் நடந்ததும், அவள் கால்களில் சிறு அசதி ஏற்பட்டது. சிந்தாதிரிப் பேட்டைக்குச் செல்வதா, இல்லை, திருவல்லிக்கேணியில் உள்ள அத்தான் மோகன் வீட்டுக்குச் செல்வதா என்று

தீர்மானிக்க முடியாமல் குழம்பினாள். இந்தக் காலை வேளையில் அத்தான் தொழிற்சாலைக்குப் புறப்பட்டுக் கொண்டிருப்பார். மோகன் இல்லாத போது அங்கே போய் என்ன பலன் என்று யோசித்தாள். அவள் பின்னால் வந்த ஒரு கார் ஹாரனின் ஒலியைக் கவனியாமல் நடந்து கொண்டிருந்தாள்.

அந்தக் கார் ஒதுங்கி அவளைக் கடந்து சில கஜம் சென்று நின்றது. அதிலிருந்து அவள் தந்தை இறங்கி அவளை நோக்கி நடக்கவுமே, பாலா நின்றாள். அவள் தந்தையின் முகத்தில் இப்போது கோபம் இல்லை. தன் கோட்டுப் பையிலிருந்து ஒரு கர்சீப்பை எடுத்து அவள் முகத்தில் அரும்பிய வியர்வையைத் துடைத்தான்.

பாசம் நிறைந்த குரலில், "என்ன பாலா, காரிலே போகாமல் நடந்து போறே?" என்று கேட்டான்.

அவன் கண்களில் முதன் முறையாகச் சோகத்தைப் பார்த்தாள். அந்த ஒரு வாக்கியத்தை அவன் சொன்ன விதத்தில் எவ்வளவோ அர்த்தம் தொக்கி நின்றது. அவன் அந்த முக்கால் மைல் தூரத்தை நடந்தால் கூடப் பரவாயில்லை. மகள் முக்கால் மைல் நடப்பது அவள் முப்பது மைல் நடந்து விட்டுக் களைத்துப் போனது போன்ற ஒரு விதப் பிரமையுடன் அவன் பேசினான். அன்போடு அவள் தோள்மீது கையை வைத்தான். "வா பாலா, காருக்குப் போவோம்" என்று அணைத்தபடி மகளைத் தன்னுடைய பெரிய ஷெவர்லே காருக்கு அழைத்துப் போனான்.

டிரைவரை இறங்கி ஆபீஸுக்கு வரும்படி கூறிவிட்டு, சக்ரபாணி டிரைவர் சீட்டில் அமர்ந்தான். அவன் அருகில் பாலா பேசாமல் உட்கார்ந்தாள்.

சக்ரபாணி, "வீட்டிலே எவ்வளவு கார் இருக்கு. ஏன் நடந்து போறே? இன்னிக்குத்தான் டிரைவர் சொன்னான் நீ இப்படித்தான் கொஞ்ச நாளாவே நடந்து போகிறேன்னு...உனக்கு என்ன பைத்தியம் பிடிச்சிருக்கா?" என்றான்.

www.t.me/tamilbooksworld



"ஏம்பா, கார்லே போகாமல் நடந்து போனால் பைத்தியம் பிடிச்சிருக்குன்னு அர்த்தமா? அப்பா, உங்களுக்கு என் வயசிருக்கும் போது நீங்க கார்லேயா போயிட்டிருந்தீர்கள்?" என்று பாலா கேட்டாள்.

சக்ரபாணி ஒரு விநாடிக்குத் திகைத்துப் போய் விட்டான். "இதென்ன பாலா, அசட்டுக் கேள்வி கேட்கிறே? எனக்கு எங்கப்பா அம்மா முகமே தெரியாது. நான் ஒரு அநாதைப் பையன். நீ அப்படி இல்லேயே? என் பெண் இல்லையா? யாருக்காக நான் சம்பாதிக்கிறேன்? சரி, நீ எங்கே போகணும், சொல்லு. இறக்கி விட்டுட்டுப் போறேன்" என்றான்.

'எனக்கு எங்கப்பா அம்மா முகமே தெரியாது. நான் ஒரு அநாதைப் பையன்' என்று சக்ரபாணி சொன்ன போது பாலாவுக்கு உண்மையிலேயே தந்தை மீது பச்சாதாபம் ஏற்பட்டது. ஆனாலும் தந்தையிடம் தாத்தாவைப் பார்க்கப் போகிறேன் என்று சொல்லத் துணிவு இல்லை.

"அப்பா, நான் ஹிக்கின்பாதம்ஸுக்குப் போகப் போறேன். புஸ்தகம் வாங்க வேண்டும்" என்று துணிந்து ஒரு பொய்யைச் சொன்னாள்.

சக்ரபாணி காரை ஓட்டியபடி மகளைப் பார்த்தான். "பாலாக் கண்ணு, நீ பொய் சொல்லக் கத்துக்கிட்டே! கையிலே ஹாண்ட்பாக், பர்ஸு இல்லே. புஸ்தகம் வாங்கப் போறேன்னு சொல்றியே, யாரை ஏமாத்தறே?" என்றான்.

பாலா, ஒரு விநாடி திகைத்து விட்டாள்!

## 19

அப்பாவிடம் அசட்டுப் பொய் சொல்லிவிட்டோமே என்று குழம்பிய பாலா, மெல்லச் சமாளித்தாள்

"ஆமாம்ப்பா, பணம் எடுத்திட்டு வர மறந்துவிட்டேன்" என்றாள்.

"பணம் எடுத்திட்டு வராவிட்டால் என்ன பாலா, சக்ரபாணி பேரே செக் மாதிரிதானே! உன் பேர்தான் ஊர் தெரிஞ்ச பேராச்சே! பாலா எண்டர்ப்ரைசஸ் ப்ரொப்ரைட் ரீக்ஸ்ன்னு சொல்லி விட்டு, சென்ட்ரல் ஆபீஸுக்குப் போன் பண்ணு. ஒரு கிளார்க் பணத்தை எடுத்துக்கிட்டு ஓடி வர்ரான்" என்றான் சக்ரபாணி பெருமையோடு.

பாலாவுக்குத் தப்பித்தோம் என்ற நிம்மதி. "என்னப்பா, நான் பணம் எடுக்க மறந்துட்டு வந்ததுக்காக—ஒரு சின்ன விஷயத்துக்காக—ஆபீஸ் கிளார்க் ஓடி வரணுமா? நீங்க அந்தக் கோயமுத்தூர் தியாகராஜன் மாதிரி பேசறீங்களே! இன்னும் கொஞ்ச நாள்ளே கிளார்க் நாய் ஓடி வர்ரான்னு சொல்லுவீங்க போலிருக்கே!" என்று செல்லமாகக் கண்டித்துச் சொன்னாள்.

சக்ரபாணி உடனே சிரித்தான், உடல் குலுங்கச் சிரித்தான். "தியாகராஜனுக்குப் பேச்சிலே பாலிஷ் போறாது, பாலா! சிப்பந்திகளை நாய் மாதிரி நடத்தினாலும், நாய் என்று சொல்லக்கூடாது! தியாகராஜன் நாய் என்று கூப்பிடறதோடு சரி; சமயத்திலே அவுங்களோடு சரிசமமாகச் சேர்ந்து உட்கார்ந்து ஓட்டலில் சாப்பிடுவார். குமாஸ்தாவின் வெற்றிலைப் பெட்டியிலேருந்து வெற்றிலை எடுத்துப் போடுவார். கிளார்க் வீட்டுக் கல்யாணத்திலே போய், சாப்பாடு பரிமாறுவார். அதனாலே அவர் சிப்பந்திகள், அவர் குலைக்கிறதோடு சரி, கடிக்கமாட்டார் என்று தெரிஞ்சிக்கிட்டிருக்காங்க" என்றான்.

புத்தகக் கடை வந்ததும், அவன் பாலாவை இறக்கி விட்டான். தன் பர்ஸிலிருந்து நூறு ரூபாய் எடுத்து அவளிடம் செலவுக்குக் கொடுத்துவிட்டுப் புறப்பட்டான்.

சிறிது நேரம் புத்தகக் கடையிலுள்ள நூல்களைப்



பார்வையிட்ட பாலா, அங்கிருந்து வெளியே வந்து ஒரு பழக்கடைக்குச் சென்று, ஒரு டஜன் ஆப்பிள், ஒரு டஜன் சாத்துக்குடி பழம் வாங்கிக்கொண்டு நூறு ரூபாய் நோட்டை மாற்றினாள். பிறகு ஒரு டாக்ஸி அமர்த்திக் கொண்டு சிந்தாதிரிப்பேட்டைக்கு வந்தாள். தாத்தா சம்பந்தய்யா இருக்குமிடம் சரியாகத் தெரியவில்லையாதலால் ஒவ்வொரு இடமாகச் சொல்லி, பல சந்துகளில் நுழைந்து திரும்பி முடிவில் தாத்தா இருக்குமிடத்துக்கு வந்தாள்.

டாக்ஸிகாரனுக்கு ஒரே சலிப்பு. "அட்ரஸ் சரியாய்த் தெரிந்து வைத்துக் கொள்ளாமல் ஏம்மா உயிரை வாங்குகிறீர்கள்?" என்று கடிந்து கொண்டான்.

அவனுடைய டாக்ஸி மீட்டர் காட்டிய தொகையை விடச் சற்று அதிகமாகவே கொடுத்துவிட்டு, பழப் பையுடன் இறங்கினாள் பாலா.

கிணற்றங்கரையில் யாருமில்லை. முத்தம்மா மட்டும் அவள் வீட்டுப் பகுதியின் வெளியே நின்று கொண்டிருந்தாள். பாலாவைப் பார்த்ததும் முத்தம்மா சிரித்தாள். பாலாவின் மனத்தில் ஒரு கிளர்ச்சி ஏற்பட்டது. முத்தம்மாவின் வீட்டுக்கு நேரே சென்றாள்.

"சம்பந்தய்யாவைத் தேடி ஒருத்தர் வந்திருக்கிறார். அவரோடு பேசிட்டிருக்கார்" என்றாள் முத்தம்மா.

பாலா, "குழந்தை தூங்குதா?" என்று கேட்டாள், தூங்கும் குழந்தையைப் பார்த்தபடி.

"ஆமாம். இப்பத்தான் குளிப்பாட்டி, பால் கொடுத்தேன். தூங்குது" என்றாள் முத்தம்மா.

"முத்தம்மா, நீ இந்தப் பழத்தைச் சாப்பிடு" என்று பாலா மூன்று ஆப்பிள் பழங்களையும் மூன்று சாத்துக்குடி பழங்களையும் எடுத்து வைத்தாள். முத்தம்மா சிரித்தாள். சிரித்தபோது நரம்புத் தளர்ச்சி காரணமாக முத்தம்மா அவள் முகம் ஒருவிதமாகக் கோணிக் கொண்டது.

''எனக்கு எதுக்கு ஆப்பிள் பழம்? ஒரு பழம் ஒரு ரூபாய் இருக்குமே!'' என்றாள் அவள், ஒரு பழத்தைத் தடவியபடி. ''இந்தப் பழமெல்லாம் நாங்கள் கடையிலே பார்க்கிறதுக்காக வைச்சிருக்கு. வாங்கிறதுக்கு இல்லே! தாத்தாவுக்கு வாங்கியாந்தியா?'' என்றாள்.

''ஆமாம்'' என்றாள் பாலா.

''அவர் எங்கே தின்னப் போகிறார்? துண்டம் போட்டுக் குழந்தைகளுக்குக் கொடுத்துவிடுவார். அவர் கிட்டேயே கொடுத்துவிடு'' என்றாள் முத்தம்மா.

''அவருக்கும் பழங்கள் வைத்திருக்கிறேன். நீ எடுத்துக் கொள் முத்தம்மா. இந்த ஆப்பிள் மாவு மாதிரி. இதை மசித்து வெந்நீரில் கலந்து குழந்தைக்குப் புகட்டு, நல்லது!'' என்றாள்.

''இந்த அதிர்ஷ்டக்கட்டை இன்னிக்கு ஆப்பிள் பழம் வந்திருக்கு. சரி, எடுத்துக்குறேன்'' என்று முத்தம்மா வாங்கிக் கொண்டாள்.

உடனே பாலா எழுந்து வெளியே வந்தாள். தாத்தாவின் வீட்டின் வெளிப்புறம் ஒருவர் இறங்கிச் சென்று கொண்டிருந்தார். அவர் பாலாவைக் கவனிக்கவில்லை. அவர் முகம் எங்கோ பார்த்த முகம் போல் தெரிந்தது. எங்கே பார்த்தோம் என்று யோசித்தாள். உடனே ஞாபகம் வந்தது.

ஒரு நாள் இரவு. தன் தந்தையின் படுக்கை அறையில் உதவி கோரி நின்றவர் என்பது நினைவுக்கு வந்தது.

பாலா, தாத்தாவின் விடுதியில் நுழைந்தாள். தாத்தா ஆச்சரியத்துடன், சந்தோஷத்துடன் அவளைப் பார்த்தார் ''நீ எப்படிம்மா வந்தாய் தனியா? வழி தெரிஞ்சுதா? உட்காரும்மா!'' என்று உபசரித்தார். அவர் குரலில் ஒரு விதக் கரகரப்பும், அவர் விழியில் கலக்கமும் இருந்தன.

''என் தாத்தா கண்கலங்கிப் போய் இருக்கு? இப்போ



வந்தவர் ஏதாவது சொல்லிவிட்டுப் போனாரா?'' என்று பாலா கேட்டாள்.

கிழவர் ஒரு விநாடி திகைத்து நின்றார். ''பாலா! முகத்தைப் பார்த்து எண்ணங்களைப் புரிந்து கொள்கிற சக்தியை உனக்கு இந்த வயதிலேயே ஆண்டவன் கொடுத்திருக்கிறான். நீ நினைத்தது சரியம்மா. வந்தவர் சொன்னதைக் கேட்டதும் நான் கலங்கிப் போய்விட்டேன். இப்போது வந்துட்டுப் போனானே, அவன் பேர் குருமூர்த்தி. பெரிய பெரிய தர்மங்கள் செய்த குடும்பத்திலே பிறந்தவன். இன்றைக்குக் குடும்பம் நடத்த முடியாமல் கஷ்டப்படுறான். அவன் அப்பா பேர் லால்குடி சீனிவாசன். வலக் கை கொடுக்கிறது இடக் கைக்குத் தெரியாமல் கொடுத்தவர்!'' என்று அவர் சொல்லி முடிக்கு முன்பே பாலா, ''ஆமாம் தாத்தா, அவர் என் அப்பாகிட்டேகூட உதவி தேடி வந்தார். அப்பாதான் அவரை விரட்டி விட்டார்'' என்று கூறினாள்.

அதற்குக் கிழவர், ''அதையும் என்னிடம் சொன்னான். சக்ரபாணி அவனுக்கு உதவி செய்யா விட்டால் கூடப் பரவாயில்லை. ஒரு நல்ல வார்த்தையாவது சொல்லி அனுப்பக் கூடாதா? குருமூர்த்தி ஏதோ ஒரு கம்பெனியிலே வேலை தேடிப் போனானாம். தன் குடும்ப யோக்கியதையைப் பற்றிச் சக்ரபாணியைக் கேட்டால் தெரியும் என்று அந்தக் கம்பெனி முதலாளியிடம் சொல்லியிருக்கிறான். உடனே அந்த முதலாளி, சக்ரபாணியைப் போனில் விசாரித்திருக்கிறார். அப்போதுகூடச் சக்ரபாணி ஒரு நல்ல வார்த்தை சொல்லவில்லை. அதனாலே அவனுக்கு அந்த வேலையும் கிடைக்கவில்லை. குருமூர்த்திக்கு ஒரு வயதான தாய், காலேஜிலே படிக்கிற தம்பி, தங்கை, இரண்டு குழந்தைகள், மனைவி!—இவ்வளவு பேரோடும் தவிக்கிறான் பாவம்! அவனுடைய சம்சாரம் மூன்றாவது குழந்தையைப் பிரசவிக்கிற நிலையிலே இருக்கிறாள்.

"குருமூர்த்தியின் தந்தை சீனிவாசன் கை நீட்டினால், மற்றவர்களுக்குக் கொடுப்பதற்காகத்தான் இருக்கும். ஆனால் அவருடைய மகன் கை நீட்டுவது வாங்குவதற்காக இருக்கிறது! சீனிவாசன் கொடுத்ததை நான் வாங்கி இருக்கிறேன். உன் அப்பா முழுக்க முழுக்க அவரிடம் வாங்கியிருக்கிறார். வாங்கினதோடு அல்லாமல் முடிவிலே அவரையும் அழித்து விட்டான். அதற்குப் பிராயச்சித்தமாகவாவது மகனுக்கு ஏதாவது செய்யக்கூடாதா?" என்று கேட்டார்.

'அன்போடு பழங்களை வாங்கிக் கொண்டு வந்த பேத்தியிடம் இவர் இதைத் தானா பேச வேண்டும்? வந்தவுடன் அப்பாவைத் திட்டத்தானா செய்யவேண்டும்' என்று பாலாவின் உள்ளம் நினைத்தது.

சம்பந்தய்யா அவள் முகத்தில் ஏற்பட்ட மாறுதலைக் கவனித்தார்.

"பாலா, நான் உன் அப்பாவைப் பற்றிப் பேசுவதிலே எனக்கு ஒரு லாபமும் இல்லையம்மா! லால்குடி சீனிவாசன் குடும்பம் கண்ணீர் விடுகிற வரையிலும் நமக்கு நல்லதில்லை. அவ்வளவு கடமைப்பட்டிருக்கிறோம் அவரிடம். அதற்சாகத்தான் நான் சொன்னேன். ஒருவனிடம் கடன் வாங்கித் திருப்பிக் கொடுக்காவிட்டால் கோர்ட்டிலே கூட் போட்டு வாங்கிவிடுவான். ஆனால் வேறு சில வகைக் கடன்களை அந்தக் கோர்ட்டிலே வசூலிக்க முடியாது. அந்த வகையான கடன் சீனிவாசனிடம் உன் அப்பா வாங்கியிருப்பது. ஆண்டவன் கோர்ட்டிலேதான் அதைச் செலுத்தியாகணும். ஆனால் அங்கே காலதாமதமாய்த்தான் கடன் அடைகிறது. வாங்கினவன் சில சமயம் அடைக்காமலேகூடப் போய் விடுகிறான். ஆனால், அவன் பிள்ளை குட்டிகள் அனுபவித்து வேதனைப்பட்டு அடைக்க வேண்டி வருகிறது. அந்தக் கோர்ட்டிலே கணக்குத் தப்பாது பாலா, தப்பாது! நான் பேசுவது பைத்தியக்காரன் பேச்சு மாதிரி இருக்கிறது இல்லையா?"

www.t.me/tamilbooksworld



பாலா சிறிது நேரம் ஒன்றும் சொல்லாமல் இருந்து விட்டு, "லால்குடி சீனிவாசன் குடும்பத்துக்கு அப்பா எப்படிக் கடன் பட்டார் தாத்தா?" என்று கேட்டாள்.

"அது பெரிய கதை பாலா!" என்றார் கிழவர்.

"எனக்கு எல்லாம் தெரியணும், தாத்தா! சொல்லுங்க" என்றாள் பாலா.

"உன் அப்பா செங்கல்பட்டிலே ஒரு பாங்க்கிலே காஷியராக இருந்தான். அப்போது அவனுக்கு வயது 19 இருக்கும். சுறுசுறுப்பாய் வேலை செய்து, பாங்கு டைரக்டர்களின் நம்பிக்கையைப் பெற்றான். பாங்கிலே சக்ரபாணியை நம்பியே எல்லாம் நடந்தது.

"சீக்கிரம் பணக்காரனாகணும் என்கிற ஆசை அப்பவே அவனுக்கு இருந்திருக்கிறது. முதலில்லாமல் பணம் சம்பாதிக்கிறவர்கள் மாதிரி, உன் அப்பாவும் குதிரைப் பந்தயத்திலே நம்பிக்கை வைத்திருக்கிறான். அந்தச் செங்கல்பட்டு பாங்கு சனிக்கிழமை பிற்பகலும், ஞாயிற்றுக் கிழமையும் மூடியிருக்கும். ஒவ்வொரு சனிக் கிழமையும் பாங்குப் பணத்தை எடுத்துக்கொண்டு கிண்டிக்கு வந்து குதிரைப் பந்தயத்திலே ஆடிவிட்டுப் போவது சக்ரபாணியின் வழக்கம்.

"இரண்டு மூன்று தரம் அதிர்ஷ்டம் சக்ரபாணிக்குச் சாதகமாக இருக்கவே, ஆயிரம் ரூபாய் வரையிலும் சம்பாதித்திருக்கிறான். பெரிசாய் ஒரு தொகை அடித்து விட்டு, பாங்கை விட்டே விலகணும் என்று தீர்மானித்திருக்கிறான். அப்போது 'கவர்னர்ஸ் கப்' என்று ஜனவரி முதல் தேதியன்று ஒரு பந்தயமுண்டு. அதற்குப் பாங்கிலேருந்து 5 ஆயிரம் ரூபாய் பணத்தைத் தெரியாமல் எடுத்து வந்திருக்கிறான். ஜெயித்தால் மறுபடியும் கொண்டு போய் யாருக்கும் தெரியாமல் வைத்துவிடலாம் என்கிற ஆசையிலே எடுத்து வந்திருக்கிறான்.

''பல்லாவரத்திலே ஒரு குதிரை டிரெயினர், சய்யாஜின்னு பேர். அவர் உன் அப்பாவிடம் 'பாலம்' என்கிற குதிரைதான் நிச்சயமாய் ஜெயிக்கும், அதிலே கட்டினால் பத்துப் பன்னிரண்டு பங்கு கிடைக்கும் என்று உறுதி கொடுத்திருக்கிறான்.

''ஐந்து ஆயிரத்தையும் ஒரு ரூபாய் விடாமல் அந்த 'பாலம்' என்கிற குதிரை மேலே கட்டிவிட்டான் சக்ரபாணி. அந்தக் குதிரை எதிர்பார்த்தபடியே முதலிலே வந்து விட்டது! அநாதை என்ற நிலையில் இருந்த உன் அப்பா 60 ஆயிரம் ரூபாய்க்கு அதிபதியாகிவிட்டோம் என்ற மகிழ்ச்சியிலே தன்னையும் மறந்து குதித்திருக்கிறான். அந்த விநாடியே சைரன் ஊதிவிட்டது! வெள்ளைக் கொடி ஏற்றிவிட்டார்கள், அதாவது, இரண்டாவதாக வந்த குதிரை 'அயேஷா'வின் குறுக்கே வந்து தவறான முறையிலே பாலம்' ஜெயித்து விட்டதென்று அயேஷாவில் ஏறிய ஜாக்கி முறையிட்டிருக்கிறான் என்று அர்த்தம். அதனால் எது முதலில் வந்தது என்று ஜட்ஜ்கள் தீர்மானிக்கப் போகின்றனர் என்று ஒலி பெருக்கியிலே சொல்லிவிட்டார்கள்.

''கொஞ்ச நேரத்திலே முடிவும் தெரிந்தது. இரண்டாவதாக வந்த 'அயேஷா'தான் முதல் என்று முடிவு சொல்லிவிட்டார்கள். குதிரைப் பந்தய நடுவர்கள்!

''உன் அப்பா கையிலே இரண்டு நிமிடத்துக்கு முன்னாலே 60 ஆயிரம் ரூபாய் பெறுமானமாக இருந்த சீட்டுக்கள், அரைக்காசு மதிப்பும் பெறாத வெறும் காகிதமாக ஆகிவிட்டன. சக்ரபாணி அப்படியே மூர்ச்சை போட்டு விழுந்துவிட்டான். அப்போது லால்குடி சீனிவாசன் பக்கத்திலே இருந்திருக்கிறார். அவர் இவனைத் தூக்கி, தண்ணீர் தெளித்து, தன் விடுதிக்கு அழைத்துச் சென்றார்.

''ஐயாயிரம் ரூபாயை ஒரு குதிரை மேல் ஒருவன் கட்டணும் என்றால் அவன் பெரிய வீட்டுப் பிள்ளையாகத்



தான் இருக்கணும் என்று லால்குடி சீனிவாசனுக்கு நினைப்பு. அவரும் அன்று 'பாலம்' என்கிற குதிரையிலே 500 ரூபாயை அன்றைக்கு இழந்தவர்தான். உன் அப்பா, தான் யாரென்று சொல்லிக் கொள்ளவில்லை.

''சீனிவாசன் அன்று இரவு ரயிலிலே லால்குடிக்குப் புறப்பட்டவர், உன் அப்பாவையும் தன்னோடு தன் ஊருக்கு வரும்படி கூப்பிட்டிருக்கிறார். சக்ரபாணி ஒப்புக் கொண்டு அவரோடு முதலாவது வகுப்பிலே புறப்பட்டான். உன் அப்பாவின் மனத்தில் ஒரே பயம். மறுநாள் பாங்கிலே பணம் காணவில்லை என்று தெரிந்ததும், அவனைத்தானே தேடுவார்கள்? சிறைவாசம் நிச்சயம் என்ற பயம் அவனை வாட்டியிருக்கிறது.

''ஓர் இரவுக்குள் ஐயாயிரம் ரூபாய் எங்கே எப்படிப் புரட்டுவது என்று யோசித்தபடி இருந்தவன், ஒரு கோழைத்தனமான முடிவுக்கு வந்தான். ரயில் செங்கல் பட்டை நெருங்குவதற்கு முன்பு கதவைத் திறந்து கொண்டு கீழே குதித்து வாழ்வை முடித்துக் கொள்வது என்பதுதான் அவன் முடிவு! அதற்குச் சாதகமாக அந்தச் சமயத்தில் சீனிவாசன் தூங்கிக் கொண்டும் இருந்திருக்கிறார். வண்டியில் வேறு யாருமில்லை'' என்று சற்று நிறுத்தினார் சம்பந்தய்யா.

பாலா அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

## 20

''சக்ரபாணி கதவைத் திறந்து குதிக்கத் தயாராயிருந்திருக்கிறான்'' என்றார் சம்பந்தய்யா.

''அப்பா குதித்து விட்டாரா? அவர் விழுந்து விட்டாரா?'' என்று தன்னையும் மறந்த நிலையில் கேட்டாள் பாலா. பாலாவின் நெற்றி வியர்த்திருந்தது

அவளுக்கு அவள் தந்தைமீது உள்ள அன்பின் ஆழம், தன்னையும் மறந்த நிலையில் வெளிப்பட்டது.

கிழவர் சிரித்தார். ''அவன் குதிச்சு மடிஞ்சிருந்தா அப்புறம் கதையேதும்மா? நான், உங்கம்மாவை அவனுக்கு கட்டிக் கொடுக்கிறது ஏது? நீ, அவனுக்கு மகளாப் பிறக்கிறது ஏது? ஒரு அநாதை இளைஞன் முன்னிரவு வேளையில் ஓடும் ரயிலில் இருந்து குதித்து மடிந்தான் என்ற செய்தி மறுநாள் பத்திரிகையில் வந்திருக்கும். எவ்வளவோ முற்றுப் பெறாத வாழ்க்கைகளைப் போலச் சக்ரபாணியின் வாழ்க்கையும் முடிந்திருக்கும். மஹாலட்சுமி தன் அன்புப் புத்திரனாகச் சக்ரபாணியைத் தேர்ந்தெடுத்திருக்கும்போது, அம்மாதிரி நிகழ முடியுமா? அவன் கதவைத் திறக்கும் சத்தத்தில் விழித்துக் கொண்டலால்குடி சீனிவாசன், கதவைத் திறந்து குதிக்கத் தயாராகும் சக்ரபாணியைப் பார்த்திருக்கிறார். நல்ல காலம், அவர் கதவோரம் படுத்திருந்திருக்கிறார். அவர் பார்வையில், சக்ரபாணி குதிக்கும் முன்பு கண்களை மூடிக் கைகளைத் தூக்கி ஏதோ தெய்வத்தைக் கும்பிடும் தோற்றம் சந்தேகத்தைக் கொடுத்திருக்கிறது.

''படுத்தவாறே அவர் கையை நீட்டிச் சக்ரபாணியின் வேட்டியை இழுத்திருக்கிறார். சக்ரபாணி, சாகக் கிடைத்த பொன்னான சந்தர்ப்பத்தை நழுவவிட விரும்பாதவன் போல் அவர் பிடியிலிருந்து விலகத் திமிறியிருக்கிறான். அவன் இடுப்பிலிருந்து வேட்டி நழுவ, சக்ரபாணி தன்னையும் மறந்த நிலையில் அதைச் சரி செய்யக் கையை இடுப்புக்குக் கொண்டு வந்திருக்கிறான். சீனிவாசன் படுத்தவாறே சக்ரபாணியின் கையைப் பற்றி இழுத்து, வண்டியின் உட்புறம் தள்ளியிருக்கிறார். வண்டியின் மூலையில் விழுந்த சக்ரபாணி எழுந்து வருவதற்குள் சீனிவாசன் பாய்ந்து ரயில் வண்டிக் கதவைத் தாளிட்டிருக்கிறார்.

''உங்கப்பா, தீர்மானித்த காரியத்தைத் தவறாமல் முடிக்க வேண்டுமென்ற நோக்கத்தில் மறு கதவைத்

www.t.me/tamilbooksworld



திறப்பதற்குள் வண்டி மெள்ளச் சென்று, நின்றுவிட்டது. இனிமேல் விழுந்தாலும் உயிருக்கு ஆபத்து இல்லை என்ற நிலையில் சக்ரபாணி குதித்திருக்கிறான். தலையில் சிறு காயம் ஏற்பட்டிருக்கிறது. ரயில்கார்டு வந்ததும் சக்ரபாணி தூக்கத்தில் ரயிலில் நடந்து, ஏற்கனவே திறந்திருந்த கதவு வழியே குதித்து விட்டதாகச் சீனிவாசன் ஒரு பொய்க்கதை கட்டி விட்டிருக்கிறார்.

''ரயில் கார்டு இந்தக் கதையைத் தான் நம்ப மறுத்த போதிலும் வம்பு எதற்கு என்று எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் விட்டுவிட்டார். ரயில் புறப்பட்டதும் சீனிவாசன், உங்கப்பாவைக் கண்டித்திருக்கிறார். உங்கப்பா உண்மை பூராவும் அவரிடம் கூறியிருக்கிறான்.

''சார், நான் இறப்பதால் யாருக்கும் நஷ்டமில்லை. நீங்கள் என்னைக் காப்பாற்றிப் போலீஸுக்கும் அவமானத்துக்கும் என்னை அர்ப்பணிக்கப்போகிறீர்கள்!'' என்று அழுது இருக்கிறான்.

அன்று இரவு சீனிவாசனும் செங்கல்பட்டில் இறங்கி, மறு ரயிலில் சக்ரபாணியுடன் சென்னை வந்து, சீனிவாசனின் நண்பர் ஒருவரிடம் ஐயாயிரம் ரூபாய் தொகை வாங்கி, மறு நாள் பாங்கு திறப்பதற்கு முன்பே பணத்தைக் கட்டி, சக்ரபாணியைக் காப்பாற்றியிருக்கிறார். அன்று முதல் சக்ரபாணிக்குச் சீனிவாசன் ஒரு தெய்வம் போல் ஆனார். சீனிவாசன் சென்னை வரும் போதெல்லாம் சக்ரபாணி, அவருக்கு ஒரு ஊழியன் போல் வேலை செய்து வந்தான். சீனிவாசன், சௌகார்பேட்டையில் உள்ள ஒரு சேட்டிடம் சக்ரபாணிக்கு வேலை வாங்கிக் கொடுத்தார்.

சக்ரபாணியின் சுறுசுறுப்பினாலும், புத்திசாலித்தனத்தினாலும், வியாபாரம் பெருகவே, சேட் லாபத்தில் சிறு பங்கைச் சக்ரபாணிக்குக் கொடுத்திருக்கிறான். வந்த லாபத்திலிருந்து, சக்ரபாணி, சீனிவாசன் ஆபத்தில்

கொடுத்து உதவிய ஐந்து ஆயிரத்தைத் திருப்பிவிட்டான். ஸ்ரீனிவாசனுக்கு, சக்ரபாணி மீது நம்பிக்கை இன்னும் அதிகமாகியிருக்கிறது.

சேட்டின் வீட்டு நிர்வாகம் முதல் வியாபாரம் பூராவும் சக்ரபாணியின் கைக்கு மாறியது. அந்த சேட்டுக்கு ஒரே ஒரு பெண். அவள் சென்னையில் படித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு ராஜஸ்தானில் தன் பந்துக்களில் ஒரு பையனைப் பார்த்துச் சேட் கல்யாணம் நிச்சயம் செய்திருக்கிறான். அந்தப் பெண்ணுக்கு ராஜஸ்தான் பையனை மணக்க இஷ்டமில்லை. அவள் மனம் உங்கப்பாவை நாடியிருக்கிறது. அவள் தன் மனத்தில் உள்ளத்தை உங்கப்பாவிடம் கூறியிருக்கிறாள்.

கல்யாணத்துக்குத் தேதி வைத்ததும், இரண்டு லட்ச ரூபாய் நகையுடன் ஓடிப் போய்விடுவோம் என்று சொல்லியிருக்கிறாள். இது சக்ரபாணிக்கு இஷ்டமில்லையென்றால், தான் கிணற்றில் விழுந்து இறந்து விடுவேன் என்று சொல்லியிருக்கிறாள். இந்தச் சிக்கலில் சக்ரபாணி தனக்கே உரித்தான அமைதியுடனும் சாமர்த்தியத்துடனும் நடந்து கொண்டிருக்கிறான். அந்த சேட்டின் மகளின் காதலை உடனே மறுக்கவில்லை. அவளுக்கு அவன் மீதிருந்த ஆசை, ஒரு மயக்கம் என்று புரிந்து கொண்டு அதற்குத் தக்கபடி நடந்து கொண்டிருக்கிறான். அந்த நிலையில் எந்த இளைஞனுமே செய்யாத ஒன்றை உங்கப்பா செய்தானம்மா...!''

சக்ரபாணியின் முன் கதையை விவரமாகக் கூறிவிட்டுக் கிழவர் பாலாவைப் பார்த்தார்.

''இதெல்லாம் கேட்கவே எனக்கு விசித்திரமாக இருக்கு தாத்தா...''

''உங்கப்பாவின் கடந்த கால வாழ்வின் இம்மாதிரி சம்பவங்களைப் பற்றிப் பேசவும் எனக்குக் கஷ்டமாக இருக்கும்மா. உங்கப்பா ஒரு சாதாரண மனிதன் இல்லை.

www.t.me/tamilbooksworld



அவன் வாழ்வுச் சம்பவங்களும் சாதாரணமில்லை. சக்ரபாணியின் ஒரே வாரிசான உனக்கு இதெல்லாம் தெரிஞ்சாகணும். அதனாலேதாம்மா சொல்கிறேன்!''

''எங்கப்பா என்ன செய்தார்?'' என்று கேட்டாள் பாலா வெட்கத்துடன். தந்தையின் வாழ்வில் ஏற்பட்ட காதலைப் பற்றி நினைக்கவும் அவளுக்குக் கூச்சமாக இருந்தது.

''அன்று சக்ரபாணி நடந்து கொண்டதுதான், அந்த இளமையிலேயே அவனுக்கு உணர்ச்சி வசப்படாமல் நடந்து கொள்ளும் திறமை உண்டு என்பதைக் காட்டியது. அவன் நேரே சேட்டிடம் சென்று விஷயத்தைக் கூறியிருக்கிறான். சேட் புரிந்து கொள்ளாமல் சக்ரபாணியிடம் கூச்சல் போட்டிருக்கிறான்.

''நன்றி கெட்டவனே! என் பெண் வாழ்வைக் கெடுக்கப் பார்க்கிறாயா?'' என்று கூறிய சேட்டிடம் அமைதியாகச் சக்ரபாணி பின்வருமாறு கூறியிருக்கிறான்:

''உங்க மகள் வாழ்வைக் கெடுப்பவனாக இருந்தால் அவளோடு இரண்டு லட்சம் ரூபாய் நகைகளோடு நகர்ந்திருப்பேன். வெண்ணெயும், பாலும், பால் கோவாவும், உழைப்பற்ற வாழ்வும், காதல் கதைகளும் உங்கள் மகள் உஷாவின் மனத்தைக் குழப்பியிருக்கின்றன. கண்ணுக் கெட்டும் வரம்பில் உள்ள ஒரே இளைஞன் நான். அவள் தன் உணர்ச்சிகளைக் கொட்ட என்னை மையமாக்கி இருக்கிறாள். அவளுக்கு, அவள் தேவை என்னவென்று தெரியவில்லை. கதைப் புத்தகத்தில் வரும் காதல், வாழ்வில் ஏமாற்றமளிக்கும் என்பதைத் தெரிவிக்க வேண்டியது உன் கடமை! இப்போது அது என் வேலையுமாகிவிட்டது. சேட்டு, உனக்குப் புத்தியிருந்தால் நான் சொல்லுகிறபடி நீ செய்ய வேண்டும்!''

இதைக் கேட்டதும் சேட் கோபத்தில் சக்ரபாணியை அறைந்து, கடையைவிட்டு விரட்டியிருக்கிறான். வீட்டில்

போய் மகள் உஷாவிடம் கோபிக்கவே அவள் தைரியமாக, 'திருமணம் வேண்டாம்! திருமணம் செய்தால் வீட்டை விட்டு ஓடி விடுவேன்' என்று திட்டமாகக் கூறியிருக்கிறாள்.

சேட்டின் மனைவி கொஞ்சம் புத்திசாலி. 'சக்ரபாணி நல்ல பிள்ளை. உண்மையை முதலில் உங்களிடம் கூறியிருக்கிறான். அவன் சொன்ன யோசனையை என்னவென்றுதான் கேளுங்களேன்'' என்று கூறியிருக்கிறாள். சேட் ஆத்திரம் நீங்கி, அழுகையோடு மறுபடியும் சக்ரபாணியிடம் புத்திமதி கேட்க வந்திருக்கிறான்.

சக்ரபாணி தன் திட்டத்தைக் கூறியிருக்கிறான். 'கல்யாணத் தேதியை ஒத்திப் போடுங்கள். உங்க மகளும் நானும் கொஞ்ச நாள் தங்கு தடையின்றித் தனித்துப் பழக வேண்டும்'' என்று சொல்லியிருக்கிறான்.

சேட் திகைத்துப் போய் 'தனித்துப் பழகுவதென்றால் என்னடா அர்த்தம்?'' என்று கேட்டிருக்கிறான்.

'கோபப்பட்டால் புண்ணியமில்லை சேட். பள்ளி விட்டால் வீடு என்று சிறை வாழ்க்கை வாழ்கிறாள் உன் மகள். அவள் என்னைக்காதலிப்பதாக நினைத்து, அதற்கு உயிரையும் இழக்கத் தயாராக இருக்கிறாள். அவள் காதல் அஸ்திவாரமில்லாத ஒன்று என்று அவளுக்குக் காட்ட வேண்டும். அவளுக்குக் காதல் நோய் தந்த நானேதான் அதைத் தீர்க்கமுடியும். நாங்கள் நெருங்கிப் பழகுவது உங்கள் உறவினருக்குத் தெரியவேண்டாம். ஒரு மாத காலத்தில் நான் அவளைச் சரிப்படுத்தி விடுகிறேன்!' என்று உறுதிமொழி கொடுத்தான். சேட் வெறுப்போடு சக்ரபாணியின் திட்டத்துக்கு ஒப்புக் கொண்டான்.

அப்புறம் சக்ரபாணி உஷாவுடன், தனியே பீச்சுக்கு நாடகங்களுக்குப் போக ஆரம்பித்தான். எந்தச் சுயேச்சைக் காதல் வாழ்க்கைக்காக உஷா துடித்துக் கொண்டிருந்தாளோ, அது கிடைக்கவும், அவள் மகிழ்ந்தாள். ஒரு நாள்

www.t.me/tamilbooksworld



வீட்டில், பெற்றோர் இல்லை என்ற துணிவில் உஷா, சக்ரபாணியிடம் உடலளவு நெருங்கிப் பழகத் துடித்திருக்கிறாள். அப்போது சக்ரபாணி அன்போடு அவளிடம் கூறியிருக்கிறான்: 'உஷா பொறு; அந்த இன்பம் என்றும் உன்னுடையதுதான். திருமணம்வரை பொறு. பின்பு நாம் இஷ்டம்போல அநுபவிக்கலாம்' என்று சொல்லி, நெறி தவறும் நிலையில் இருந்த உஷாவைத் தடுத்திருக்கிறான். இதைச் சேட்டின் மனைவி மறைந்து கவனித்திருக்கிறாள். சக்ரபாணியின் பண்பு அந்த அம்மாளின் மனத்தைக் கவர்ந்திருக்கிறது. ஒரு மாத காலத்தில் படிப்படியாக உஷாவின் காதல் மயக்கம் குறைய ஆரம்பித்தது.

சக்ரபாணியின் கோபம், அவனுக்கு வியாபாரத்தில் இருக்கும் அக்கறை, காதல் வாழ்வில் இல்லை என்பதைப் புரிந்து கொண்டாள். பொதுவாக எந்த ஆணும் காதல் நாவல்களில் வரும் கதாநாயகர்கள்போல் இருக்கமாட்டான் என்பதைச் சக்ரபாணி அவளுக்குப் புரியவைத்தான். பெற்றோர்கள் தேர்ந்தெடுத்த மாப்பிள்ளை, பண விஷயத்தில், பேசும் மொழி விஷயத்தில், கலாசார முறைப்படி அவளுக்குத் தகுந்தவன் என்ற உண்மையை அவளுக்கு உணர்த்தினான்.

உஷாவின் ஆர்வம் படிப்படியாகக் குறைந்தது. தந்தை பார்த்த இடத்திலே மணக்க அவள் ஒப்புக் கொண்டாள்.

சக்ரபாணி உஷாவிடம், 'முப்பது நாள் மயக்கத்துக்காக உன் வாழ்நாள் பூராவும் வீணாக்காமல் பிழைத்தாய்' என்று கூறினான். இடைக் காலத்தில் தன் கற்பைப் பறிக்காமல் புனிதத் தன்மையோடு பழகிய சக்ரபாணிக்கு உஷா நன்றி தெரிவித்தாள். அக்கம் பக்கத்து உறவினர்களுக்கு விஷயம் தெரியாமல் உஷாவின் காதல் முயற்சி முடிவில் ராஜஸ்தான் கல்யாணத்தில் முடிந்தது. உஷா, தந்தை தேர்ந்தெடுத்த லட்சாதிபதி பிரபுவைக் கற்போடு கன்னியாக மணந்தாள்.

சேட்டும் அவன் மனைவியும், பெண்ணோடு ராஜஸ்தான் சென்றனர். சென்னையில் சேட்டு நடத்திவந்த வெளிநாட்டு ஏற்றுமதிக் கடை, சக்ரபாணியின் பெயருக்கு மாறியது.

கொழு கொழுவென்று தந்தச் சிலை போன்ற பெண்ணோடு தினமும் நெருக்கமாகப் பழகி, அவள் வற்புறுத்தியும் ஆசைக்குப் பலியாகாமல் இளமையில் உறுதியோடு நின்ற சக்ரபாணியின் பண்பு பற்றி நினைக்கும்போது, நான் இன்னும் ஆச்சரியப்படுகிறேன்!''

தந்தையின் பண்பைப் பற்றித் தாத்தா புகழ்ந்து கூறிய இந்த நிகழ்ச்சி, பாலாவுக்குப் பெருமையும் மகிழ்ச்சியும் தந்தது. இந்த நிகழ்ச்சி பற்றிக்கூறிய ஒவ்வொரு வார்த்தையும் உண்மையாக இருக்கவேண்டும் என்று விரும்பினாள்.

''இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தாத்தா தெரியும்?'' என்று கேட்டாள் பாலா.

''லால்குடி சீனிவாசன் பொதுப்படையாகச் சொன்னார். ஆனால் சேட்டின் மகள் உஷாவே கூறும்போது எப்படி இது பொய்யாக இருக்க முடியும்?'' என்றார் பெரியவர்.

''உஷாவே இதைச் சொன்னாளா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் பாலா.

## 21

''உஷாதான் ராஜஸ்தானுக்குச் சென்றுவிட்டாள் என்று கூறினீர்களே, அவள் எப்படித் தாத்தா இதுபற்றி உங்களிடம் கூற வாய்ப்பு ஏற்பட்டது?'' என்று கேட்டாள் பாலா.

''முதல் முதலில் இதுபற்றி என்னிடம் கூறியது லால்குடி சீனிவாசன் தான்!'' என்று தாத்தா தொடர்ந்தார்.

''அப்போது நான் அதை நம்பவில்லை. உங்கம்மா



ஜாதகத்தை எடுத்துக்கொண்டு சீனிவாசன் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்குத் திருமணம் பேசப்போனேன். அந்தப் பையன் பூனாவில் மிலிடரி அக்கவுண்ட்ஸ் டிபார்ட்மெண்ட்டில் பரீட்சை எழுதி ஆபீசர் உத்தியோகத்தில் இருந்தான். அந்தக் காலத்தில் கவர்மெண்ட் வேலையில் ஆபீசர் பதவியில் இருப்பவர்களுக்குப் பெண் கொடுப்பது ஒரு பாக்கியமாகக் கருதப்பட்டது. பிறருக்கு உதவி செய்வது ஒன்றே வாழ்க்கை இன்பம் என்று கருதி வாழ்ந்தவர் சீனிவாசன். அதனால், அவர் தம் செலவிலேயே பூனாவிலிருந்து பையனைப் பெண் பார்க்கச் சென்னைக்கு வரும்படி ஏற்பாடு செய்திருந்தார். உங்கம்மா கொஞ்சம் செல்லமாக வளர்க்கப்பட்டவளாயிருந்தாள். உன் மாமா சந்திரன் 'ஒரே தங்கை. அவள் மனம் கோணாத இடத்தில் தான் அவளுக்கு மணம் செய்விக்கவேண்டும்' என்று பிடிவாதமாயிருந்தான்.

மிலிட்டர் அக்கவுண்ட்ஸ் ஆபீசர் பெண் பார்க்க வரும்போது அவருடன் லால்குடி சீனிவாசனும் சக்ரபாணியும் வந்தனர். உங்கம்மாவின் அழகில் மயங்கிய ஆபீசர் உடனே கல்யாணத்துக்குச் சம்மதித்துவிட்டார். மறுநாளே சீனிவாசனும் நானும், சீனிவாசனின் கையாள்போல இருந்த சக்ரபாணியும் ஜோசியர் வீட்டுக்குப் போய் ஜாதகத்தைக் காட்டினோம். ஜோசியர், ஜாதகம் ஓரளவு தான் பொருந்தியிருக்கிறது. உங்கம்மா ஜாதக அமைப்பு அரசாங்க உத்தியோகத்திலிருப்பவனை மணக்கும்படியாக இல்லை என்று மட்டும் சொன்னார். சீனிவாசனும் நானும் ஜோசியர் சொன்னதைப் பெரிதாக மதிக்கவில்லை. வீட்டுக்கு வந்து கல்யாண ஏற்பாடுகளைத் தொடங்க நினைத்தோம்.

அன்றிரவு திடீரென்று உங்கம்மா அதிர்ச்சி தரும்படியாக நடந்து கொண்டாள். ''எனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாம் அப்பா'' என்று பிடிவாதமாகச் சொன்னாள்.

ஓர் ஆபீசர் கணவனாக வரும்போது வேண்டாமென்கிறாளே என்று எனக்கு ஆத்திரமாக வந்தது.

உன் மாமா சந்திரனிடம்தான் உங்கம்மா மனம் திறந்து பேசுவாள். பெண் பார்க்க வந்தவனின் உருவத் தோற்றம் அவளுக்குப் பிடிக்கவில்லை என்பதைச் சந்திரன் தெரிவித்தான். அந்தக் காலத்தில் பெண்கள், கணவன் அழகாயில்லை என்று மறுத்ததை நான் கேள்விப்படவில்லை. எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. பெரிய மனிதர் சீனிவாசனிடம் போய் எப்படி விஷயத்தைச் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. மகள் மனம் மாறுவாள் என்று இரண்டு மூன்று நாட்கள் காத்திருந்தேன்.

தினமும் சக்ரபாணி என்னைத் தேடி வருவான். ''எப்போது முகூர்த்தம் என்ன முடிவு செய்தீர்கள்?'' என்பான்.

நான் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி அனுப்புவேன். சக்ரபாணி சேட்டு வியாபாரத்தை எடுத்து நடத்தி ஒரு மாத காலத்தில் எல்லாம் இழந்து கடனாளியாகிவிட்டான். எப்போதும் அன்றாட சாப்பாட்டுக்கே வால்குடி சீனிவாசனை நம்பியிருக்கிறான். அதனால்தான் அவன் அவர் காரியமாகத் தினமும் வருகிறான் என்று தெரியும்.

''என்னப்பா! இந்தக் கல்யாணத்திலே இவ்வளவு அக்கறையாக இருக்கிறாயே நீ சீனிவாசனுக்குப் பந்துவா! இல்லை, அந்த ஆபீசருக்குப் பந்துவா?'' என்று எரிச்சலுடன் கேட்டேன்.

அதற்குச் சக்ரபாணி அன்று சொன்ன பதில் இன்னும் என் மனத்தில் இருக்கிறது. ''நான் பாப்பர் சார்! தினசரி சாப்பாட்டுக்குச் சீனிவாசன் கையை நம்பி இருக்கிறேன். அவர் அனுப்புகிறார்; நான் வருகிறேன். உண்மையிலேயே இந்தக் கல்யாணம் நடக்கக் கூடாது என்று விரும்புகிறேன்'' என்றான்.



''ஏன் அப்படிச் சொல்கிறாய்?'' என்று கேட்டேன்.

''பின்னே எப்படி சார் சொல்வேன்? உங்கள் பெண்ணை நானே மணந்து கொள்ள ஆசைப்படுகிறேன். என்னிடம் காசு இல்லை, அந்தஸ்து இல்லை. நான் ஓர் அநாதை! கிடைத்த வியாபாரத்தையும் இழந்து நிற்கிறேன். ஆனால் ஒரு நாள், இந்த நகரத்திலேயே பெரிய மனிதனாவேன் என்ற நம்பிக்கை மட்டும் இருக்கிறது. வெறும் நம்பிக்கையின் பேரில் செக் கொடுத்தால் செல்லாது'' என்று சொன்னான்.

எனக்குச் சக்ரபாணி மட்டமானவன் என்று அவன் மீது ஆத்திரமே வந்தது. ''சீனிவாசன் அனுப்பிய ஆள் நீ. அவருக்கு எதிராக வேலை செய்கிறாயே! இது நன்றாயிருக்கிறதா?'' என்று படபடப்புடன் அவனைக் கேட்டேன்.

''சீனிவாசனுக்கு ஒன்றும் தெரியாது சார் வெளுத்ததெல்லாம் பால் என்று நினைக்கிறவர். உங்கள் பெண்ணைப் பார்க்க வந்தவன் ஆபீசராக இருக்கலாம். ஆனால் மட்டமானவன்! பெண் பார்க்க வந்த சமயத்தில் சென்னையில் தாசி வீடு எங்கே இருக்கிறது என்று சீனிவாசன் வீட்டுச் சமையல்காரனிடம் விலாசம் கேட்டிருக்கிறான். அவனுக்குக் குடிப்பழக்கம் வேறே இருக்கிறது சார். இதெல்லாம் சீனிவாசனுக்குத் தெரியாது சார். அது மட்டுமல்ல, அவனுக்கு இருதய நோய் வேறே இருக்கிறது. இந்த இடத்திலே ஏன் சார், உங்கள் பெண்ணைக் கொடுக்க வேண்டும்?'' என்று என்னிடம் கூறினான் சக்ரபாணி.

எனக்குச் சக்ரபாணியின் மீது ஆத்திரம் வந்தது. அவனை, ''வீட்டை விட்டு வெளியே போ!'' என்று விரட்டி அனுப்பினேன்.

நான் சக்ரபாணியிடம் பேசிக் கொண்டிருந்ததை லட்சுமி மறைவிலிருந்து கேட்டுக் கொண்டிருந்திருப்பாள்

www.t.me/tamilbooksworld

என்று நினைக்கிறேன். சக்ரபாணி சென்றதும், லட்சுமி வெளியே வந்தாள்.

''அப்பா, இப்போது என்னப்பா சொல்கிறீர்கள்? என்னை அந்த ஆபீசருக்குச் கொடுக்கப் போகிறீர்களா?'' என்று கேட்டாள்.

''அந்த அன்னக்காவடி சொல்கிறது பூரா பொய் லட்சுமி. தக்கிடிப் பயல்! வியாபாரத்திலே தோற்றுவிட்டு நிற்கிறான்! அவன் பேச்சை நம்பமாட்டேன்'' என்று சொன்னேன்.

இரண்டு வாரத்துக்கெல்லாம், அந்த ஆபீசர் குடி போதையில் பூனா ரயில்வே ஸ்டேஷனில், ரயில்வே லைனைக் கடக்கும் போது எஞ்ஜின் மோதி இறந்தான் என்று செய்தி வந்தது. சக்ரபாணி சொன்னது அவ்வளவும் உண்மை என்று புரிந்தது. அதற்குள் நான் பிடிவாதமாகத் தேதி வைத்து, திருமண அழைப்புக்கூடத் தயார் செய்து விட்டேன். நல்ல வேளை, தாலி கட்டவில்லை! திருமணம் ஆகியிருந்தால் என்ன ஆகியிருக்கும் என்று நடுங்கினேன். சீனிவாசனும் மிகவும் திகைத்துப் போய் விட்டார். அவரே சக்ரபாணிக்கு உன் அம்மாவைக் கொடுக்கும்படி சொன்னார்.

''ஒதுங்க ஒரு குடிசையோ, கைப்பிடித்தவளைக் காப்பாற்ற ஒரு வேலையோ இல்லாதவனுக்கு எப்படி சார் பெண் கொடுக்கிறது'' என்று சொன்னேன்.

அப்போதுதான் அவன் ஸேட் வீட்டில் சக்ரபாணி நடந்து கொண்டதையும், எப்படி ஸேட் பெண் உஷா வைத் திருத்தி ஸேட் குடும்பத்துக்கு நல்லது செய்தான் என்பதையும் சொன்னார்.

''சம்பந்தய்யா, கவலைப்படாதீங்க! நான் லால்குடியி லுள்ள இருபது காணி நிலத்தை விற்று, அந்தப் பணத்தில் வியாபாரம் தொடங்கப் போகிறேன். அந்த வியா பாரத்தை நடத்தப் போவது சக்ரபாணிதான்! பர்மா

www.t.me/tamilbooksworld



வோடு மிளகாய் மற்றப் பொருள்கள் ஏற்றுமதி வியாபாரம் செய்யப் போகிறோம். ஐந்து வருஷத்திலே அவன் லட்சாதிபதியாகி விடுவான்!'' என்றார்.

எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. ஆனால் சந்திரன் வற்புறுத்தியதன் பேரிலும், உங்கம்மா சக்ரபாணியை விரும்பினாள் என்பதற்காகவும்தான் கல்யாணத்துக்காக ஒப்புக் கொண்டேன். அந்தக் கல்யாணத்துக்கு ஸேட் பெண் உஷாவும் கணவனுடன் வந்திருந்தாள்.

கல்யாணம் முடிந்ததும், உஷா என்னிடம் சொன்னாள்: ''பெரியவரே, உங்கள் பெண் லட்சுமி அதிர்ஷ்ட சாலி! இவ்வளவு நல்ல மனிதரை மணந்துகொள்ள எந்தப் பெண் வாழ்விலும் உணர்ச்சிகளால் குழப்பம் ஏற் படும் சந்தர்ப்பம் ஒன்று வரும். அம்மாதிரி சந்தர்ப்பம் எனக்கு நேர்ந்த போது நான் சக்ரபாணி என்ற யோக்கிய மானவரைச் சந்தித்தேன். என் வாழ்வைப் பாழாக்காமல் என்னை அவர் காப்பாற்றினார்'' என்று சொன்னாள்.

அவள் பேச்சிலிருந்து லால்குடி சீனிவாசன் சக்ரபாணி யைப் பற்றிக் கூறியது வரிக்கு வரி உண்மை என்று உணர்ந் தேன். சக்ரபாணி பர்மாவுடன் தொடங்கிய வியாபாரத் தின் கூட்டில் உஷாவின் கணவனும் சேர்ந்தார்.

ஸேட்டின் பணம், சீனிவாசன் சொத்து விற்றுக் கொடுத்த பணம், எல்லாம் சேர்ந்து ஆரம்பித்த கம்பெனிக்குச் சந்திரன் பர்மா மானேஜராக ரங்கூனுக்கு அனுப்பப்பட்டான். அப்போதுதான் சந்திரன் மனைவி, மோகனைப் பிரசவித்திருந்தாள். ஆகையால், காமாட்சி யையும் மோகனையும் அழைத்துச் செல்லாமலே சந்திரன் மட்டும் சென்றான். முதலில் சக்ரபாணியும் தனியாகப் போவதாக ஏற்பாடு இருந்தது. ஆனால் உங்கம்மா மலேரியா ஜுரமானாலும் சரி, எந்த ஊரானாலும் சரி, கணவனோடுதான் செல்வேன் என்று பிடிவாதம் பிடித் தாள். லட்சுமியும் உடன் சென்றாள்.

முதல் வருட வியாபாரத்தில் அமோகமான லாபம் கிடைத்தது. அதிலிருந்து உஷாவின் கணவன் கொடுத்த தொகையைக் கொடுத்து ராஜஸ்தான் ஸேட்டைக் கூட்டிலிருந்து வெட்டிவிட்டான் சக்ரபாணி!'' என்று கூறி விட்டு நிறுத்தினார்.

''ஏன் தாத்தா, எங்கப்பா அம்மாவிடம் பிரியமாகத் தானே இருந்தார்? உஷாவை ஒதுக்கி வலுவில் வந்து அம்மாவை அப்பா மணக்க வேண்டுமென்றால் அவர் அம்மாவிடம் பிரியமாகத்தானே இருந்திருக்கவேண்டும்?'' என்று கேட்டாள்.

பாலா கேள்வி கேட்ட விதத்திலிருந்து சக்ரபாணி, அவள் தாயைக் காதலித்தான் மணந்தார் என்று கேட்கவே விரும்புகிறாள் என்பது கிழவருக்குப் புரிந்தது. அவள் விரும்பாத பதிலைக் கொடுக்கவும் கிழவருக்கு வேதனையாகவே இருந்தது.

''உங்கப்பா ஒரு பிரத்தியேகமான பிறவி! அவன் உணர்ச்சிகள் எல்லாமே தனிப்பட்ட ரகம் பாலா! அவனைச் சாதாரண வரம்புக்குள் அடக்க முடியாதம்மா!'' என்றார்

## 22

**பா**லா, சம்பந்தப்யாவின் வார்த்தைகளின் பொருள் விளங்காமல் தயங்கினாள். ''என் அப்பா பிரத்தியேக மானவர் என்றால் எந்த விதத்தில் தாத்தா!'' என்று கேட்டாள் பாலா.

''சக்ரபாணி உன் அம்மாவை விரும்பவில்லை என்று நான் சொல்லவில்லை. லட்சுமியின் அழகு அவனை மயக்கியது என்பதில் சந்தேகமில்லை. பூனா மாப்பிள்ளை பெண் பார்க்க வருவதற்கு முன்பே உன் தாயைப் பார்த்த சாரதி கோவிலில் சந்தித்திருக்கிறான். அவளை மௌன மாகப் பின் தொடர்ந்திருக்கிறான். அப்புறம் அடிக்கடி

www.t.me/tamilbooksworld



என் வீட்டுக்கு வரும்போதெல்லாம் அவன் லட்சுமியை விரும்புவதைக் கண்களால் தெரியப்படுத்தியிருக்கிறான். வேறு இடத்தில் வரன் பார்க்கிறேன் என்பதை உணர்ந்து தன்னுடைய ஏழ்மை நிலையை எண்ணிப் பேசாமல் இருந்திருக்கிறான். நான் பார்த்த மாப்பிள்ளை பொருத்தமில்லாதவன் என்பதை உணர்ந்த பின்புதான் அவன் தைரியமாக என்னிடம் பேசியிருக்கிறான். ஆனால் உன் தாயின் மீது உள்ள காதல் சக்ரபாணியின் மனத்தை ஆண்ட முக்கிய உணர்ச்சி என்று கூற முடியாது. வசதியில்லாது, தனிமையில் அநாதையாக வாழ்ந்து படிப்படியாக முன்னேறிய அவன், செல்வம்தான் அந்தஸ்து கொடுக்கிறது என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறான். அந்தச் செல்வத்தை யாரும் வலியத் தானே வந்து கொடுக்க மாட்டார்கள். அதை முயற்சி செய்து வாழ்க்கையிலிருந்து பறிக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறான். பால பருவத்தில் யாரும் அவனுக்கு இரக்கம் காட்டவில்லை. அவனும் தன் மன அமைப்பிலிருந்து இரக்கத்தை விலக்கியிருக்கிறான். ஆகையால் இரக்கத்தின் சகோதர உணர்ச்சியான காதல் என்பது அவன் மனத்தில் இடம் பெற்றிருக்குமா என்பதே எனக்குச் சந்தேகம்! உன் தாயின் அழகில் அவனுக்குக் கவர்ச்சி ஏற்பட்டிருக்கும். ஆனால் அந்தக் கவர்ச்சிகூட அவனை அடிமையாக்கவில்லை என்பது நிச்சயம்!

''கல்யாணமான பின்பு மாப்பிள்ளை வீட்டார் மறு விருந்து வைப்பது வழக்கம். சக்ரபாணிக்குத் தந்தை தாய் இல்லாமையால், அந்த விருந்தை லால்குடி சீனிவாசனே கொடுக்கும்படி ஆயிற்று. அன்று அவன் கூறியது என் நினைவில் இன்றும் இருக்கிறது...''

பாலா, ''அன்று என் அப்பா என்ன தாத்தா சொன்னார்?'' என்று கேட்டாள்.

''பெரியவரே லட்சுமியின் ஜாதகத்தை ஜோஸ்யனிடம் காட்டியபோது அவன் சொன்னானாம், 'லட்சுமி

யின் பிறந்த குடும்பத்துக்குப் பலன் தராத ஜாதகம் இது! சகோதரனுக்குத் தீமை விளைவிக்கும்! ஆனால் பிச்சைக் காரக் கணவனையும் இந்த ஜாதகம் கோடீசுவரனாக்கி விடும்!' என்று. அதைக் கேட்ட சக்ரபாணி, ''இதுவரை எனக்கு அறிவும் ஆற்றலும் இருந்திருக்கிறது. ஆனால் அதிர்ஷ்டம்தான் என்னுடைய ஒவ்வொரு முயற்சியையும் தரைமட்டமாக்கி விட்டது. இனி மேல் லட்சுமி என் கை பிடித்த பிறகாவது என் துரதிஷ்டம் மாறும் என்று நினைக் கிறேன்'' என்று சொன்னான்.

''அந்த ஜோஸ்யன் சொன்னது பொய்க்கவில்லை. சக்ரபாணி கோடீசுரவனாகி விட்டான். ஆனால் அவன் லட்சுமி தான் பைத்தியக்காரியாகிவிட்டாள். அது இரண்டு விதத்திலும் உண்மை. அவன் மனைவி லட்சுமி மட்டும் புத்தி இழக்கவில்லை. சக்ரபாணியிடம் வாசம் செய்யும் அந்த லட்சுமி தேவதையும்தான் சித்தஸ்வாதீனம் இல்லாதவளாக இருக்கிறாள்! இரண்டுக்கும் ஏதோ ஒரு பிணைப்பு இருக்க வேண்டும். சக்ரபாணியின் லட்சுமி கடாட்சத்துக்குப் பித்தம் தெளியும் போதுதான் அவன் மனைவிக்கும் பித்தம் தெளியும் என்பதே என் நம்பிக்கை. அதற்காகத்தான் நான் உன்னைச் சந்திக்க விரும்பினேன் பாலா!'' என்றார் சம்பந்தய்யா.

''நான் என்ன தாத்தா செய்ய வேண்டும்? சொல்லுங் கள்!'' என்றாள் பாலா.

''நீ சிறு பெண்; நாகரிகத்தில் வளர்ந்தவளம்மா நீ. நான் சொல்வதை நீ நம்பமாட்டாய்! ஏன், இன்று மேல் நாட்டுப் படிப்புப் படித்தவர்கள் யாருமே நம்பமாட்டார் கள். விஞ்ஞானத்தின் அஸ்திவாரத்தில் எழுந்த படிப்பு, நீ படித்தது. விஞ்ஞானம், ஓரளவுக்குத்தான் ஞானம்; அளவுக்கு மீறி அதற்கு நாம் மதிப்புக் கொடுக்கும்போது விஞ்ஞானமே அஞ்ஞானம் ஆகிறது; அறிவற்றதாகிறது.''

''நீங்கள் சொல்லுவதை விளக்கமாய்ச் சொல்லுங்கள் தாத்தா'' என்றாள் பாலா.

www.t.me/tamilbooksworld



''நான் எவ்வளவு விளக்கமாய்ச் சொன்னாலும் நம்பிக்கை ஏற்படாது. அது வெறும் மூட நம்பிக்கையாகத் தான் தோன்றும். நான் சொல்லப் போகும் கருத்து, அறிவு கொண்டு ஆராய்ந்தால் பைத்தியக்காரத்தனமாய்த் தெரியும். இருதயத்தை வைத்துப் பார்த்தால் அது புரியும்! விஞ்ஞானம் செய்த பெரும் தீங்கு—மனிதனை, அறிவை நம்பி வாழ வைத்ததுதான்!'' என்றார் சம்பந்தய்யா.

''அறிவுதானே தாத்தா மனிதனை மிருகத்தின் நிலை யிலிருந்து உயர்த்தியது?'' என்றாள் பாலா.

''ஆமாம், அறிவு அவனை மிருக நிலையிலிருந்து உயர்த்தியது உண்மை! ஆனால் அதிக அறிவு அதே மனிதனை, மனித நிலையிலிருந்து உயர்த்தி, உயர்த்தி இப்போது ராட்சதன் என்ற நிலைக்குக் கொண்டு வந்து விட்டது. அறிவு ஓர் ஆயுதம், பணம் ஓர் ஆயுதம். ஆயுதம், எப்போதும் உபயோகப்படுத்துகிறவனுக்குக் கட்டுப்பட்டு இருக்க வேண்டும். ஆயுதமே எஜமான் ஆகும்போதுதான் பயங்கர விளைவுகள் ஏற்படுகின்றன! மனிதனின் அறிவு என்ற சின்ன ஆயுதம் பீரங்கி, அணுகுண்டு, ஜலவாயுக் குண்டு இப்படிப் பல ஆயுதங்களை ஏற்படுத்தி, மனிதன் என்ற பிராணியே பூமியில் இல்லாமல் போக்கிவிடும் நிலைக்கு வந்து விட்டது. அந்தக் காலத்திலே மதங்கள் என்ற பள்ளிக் கூடங்கள் மூலமாக இதயத்தையும் அதன் உணர்ச்சிகளையும் வளர்த்தார்கள். மாட்டு வண்டிக்குப் பதிலாக, ஷவர்லே மோட்டார் வந்து விட்டது; விமானம் வந்து விட்டது. ஆனால் இதய உணர்ச்சிகளை, அன்பை வளர்க்க எதுவும் வரவில்லை. இதயத்தைப் பொறுத்தவரையிலே மனிதன் பழையபடியே இருக் கிறான்! திருட்டு, கோபம், காமம், பொறாமை முதலிய உணர்ச்சிகள் மூவாயிரம் வருடத்துக்கு முன்னாலே இருந்த மாதிரியேதான் இப்பவும் இருக்கின்றன. அப் போது கத்தி, அம்பினாலே பத்து இருபது பேரைக் சொன்று கொண்டிருந்த மனித இனம், இப்போது

விஞ்ஞான அறிவாலே லட்சக்கணக்கான பேரைக் கொல்லத் தயாராகி விட்டது. மன்னித்து விடு பாலா! சொல்ல வந்ததை விட்டுவிட்டு ஏதேதோ லெக்சர் பண்ணுகிறேன்'' என்று புன்முறுவலுடன் நிறுத்தினார் சம்பந்தய்யா.

''சொல்லுங்கள் தாத்தா! நீங்கள் சொல்கிற கருத்துக்கள் என் மனத்துக்குப் புதுசாய் இருந்தாலும், உண்மை என்று தோன்றுகிறது. இது வரையிலும் குளிர்ந்த அருவியிலே குளித்த அநுபவம்தான் எனக்கு உண்டு. இன்றைக்கு என் மனமே நீரில் முழுகி, சுத்தமாக எழும் உணர்வு ஏற்படுகிறது!'' என்றாள் பாலா.

''அந்த அளவுக்கு நீ என் பக்கத்திலே இருக்கிறது எனக்கு மகிழ்ச்சிதானம்மா! எங்கே கிழவர் உளறுகிறார் என்று நினைத்துவிடுவாயோ என்று எனக்குப் பயமாயிருந்தது. நான் உனக்கு வகுத்த திட்டத்தைச் சொல்லப் போவதற்கு முன்னாலே உன் அப்பா கதையின் கடைசிப் பகுதி உனக்குத் தெரியணும். லால்குடி சீனிவாசன் சொத்தின் பெரும் பகுதியைப் பர்மா வியாபாரத்திலே போட்டார். பர்மாவிலே என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியாது. சக்ரபாணி வியாபாரத்தை முடித்துவிட்டு ஊர் திரும்பின போது சந்திரன் திரும்பவில்லை. திரும்பியிருந்தால் உண்மை தெரிந்திருக்கும். உன் அம்மாவாது புத்தியோடு திரும்பியிருந்தால் உண்மை தெரிந்து கொள்ளலாம்.

''சக்ரபாணி, வியாபாரம் பெரும் நஷ்டம் என்று சொன்னான். லால்குடி சீனிவாசன் இன்ஸால்வென்ட் கொடுக்கும் நிலைக்கு வந்து விட்டார். அந்த அவமானத்தைத் தடுக்க ஏதேதோ செய்தார். அவர் சம்பந்தப்பட்டிருந்த பாங்கிலேயிருந்து தவறான முறையில் பணம் எடுத்து, பட்டாணியனின் ஆயிரம் ரூபாய் கடனை அடைக்கப் பார்த்தார். போலீஸார் அவரை இழுத்துக் கொண்டு போய் விடுவார்கள் என்ற நிலையிலே அவர்

www.t.me/tamilbooksworld



ஓர் ஆயிரம் ரூபாய் பணத்துக்காகச் சக்ரபாணியின் வீட்டுக்கு வந்தார். சக்ரபாணி இரக்கமில்லாமல் மறுத்து அனுப்பிவிட்டான். பர்மா வியாபாரத்திலே ஒதுக்கிய பணத்திலேதான் 'பாலா என்டர்ப்ரைசர்' ஆரம்பித்தது. லால்குடி சீனிவாசனின் ரத்தத்திலேதான் ஆரம்பித்தது என்று சொன்னால்கூடப் பொருத்தமாயிருக்கும். போலீசுக்குப் பயந்து ரயிலிலேயிருந்து விழவிருந்த இளைஞனுக்கு, தன் நிலத்தை விற்றுப் பணம் கொடுத்துக் காப்பாற்றியவரை, அவன் போலீஸ் வருகிறபோது காப்பாற்ற மறுத்து விட்டான். தன் பிள்ளை போல அவனுக்குக் கல்யாணம் செய்து வைத்தவரை மறந்து விட்டான். அந்தக் குடும்பம் இன்றைக்குக் கஷ்டப்படுகிறது. அவர்கள் விடுகிற பெருமூச்சு ஒவ்வொன்றும் உன் அப்பா, உன் அம்மா, உன்னையும் தாக்காமல் போகாது பாலா! என் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு!'' என்று கூறினார் சம்பந்தய்யா.

''லால்குடி சீனிவாசன் என்ன ஆனார் தாத்தா?'' என்றாள் பாலா.

''மறு நாள், போலீஸ் வரும் நிலையில் என்னிடம் வந்தார் சீனிவாசன். 'ஆயிரம் ரூபாய் கடன் கொடுங்கள். என் சம்சாரத்தின் சின்ன வீடு சென்னையிலே இருக்கிறது. அதை விற்கலாம். ஆனால் மனைவியின் சொத்தை—பெண்பிள்ளையின் சொத்தை விற்றுக் கடன் அடைக்கிறது கேவலம் என்று பார்க்கிறேன்!' என்றார். பழங்கால மனிதர். நான் ஆயிரம் ரூபாய் புரட்டிக்கொடுத்தேன். 'சம்பந்தய்யா, உங்க மாப்பிள்ளை இருக்கிறானே, அவனை என்னவோ என்று நினைத்தேன். அவன் ரொம்பப் பாவத்தைச் சுமக்கிறான். பாவம்! அவனை உங்கள் தர்மத்தாலே காப்பாற்றுங்கள்' என்று சொல்லி விட்டுப் போனார். இரண்டு நாட்கள்தான். இறந்து போய் விட்டார். அவர் உடலை மயானத்துக்கு எடுத்துப்

போனபோது கூடச் சக்ரபாணி வரவில்லை! நான் மட்டும் போயிருந்தேன். அவர் மனைவியின் சகோதரன், சீனிவாசனால் முன்னுக்கு வந்தவர், மயானச் சடங்குகளுக்காகவும், குடும்பத்துக்காகவும் தன் பணத்திலிருந்து பத்தாயிரம் ரூபாய் கொடுத்தார். சீனிவாசன் உயிரோடு இருந்திருந்தால் மனைவியின் தம்பியிடம் பணம் பெற்றுக் கொண்டிருக்க மாட்டார். பழங்காலப் பிடிவாதம் உள்ளவர். அவர் இறந்ததே அந்தக் குடும்பத்துக்கு இந்த விஷயத்தில் நல்லதாயிற்று.''

பாலா, முகம் சிவந்து பேச்சு மூச்சில்லாமல் இடிந்து போய் உட்கார்ந்து விட்டாள். 'ஓர் ஆயிரம் ரூபாயைக் கொடுக்க தன் தந்தை மறுத்தாரா? தன்னை வாழ வைத்தவர் இறந்த போதுகூட அவரைப் பார்க்கப் போகவில்லையா!' என்று சிந்தித்தாள்.

## 23

**பா**லாவின் மனத்தில் பலவித எண்ணத் தொடர்கள் எழுந்து மறைந்தன. அவள் மனத் திரையில் சித்தார்த்தன் உருவம் எழுந்தது. சில அடிப்படை உண்மைகளிலிருந்து மறைத்து வைக்கப்பட்ட சித்தார்த்தனின் கண் முன்பு அவைகள் தோன்றியதும், அவன் மனம் என்ன பாடு பட்டிருக்கும்? சித்தார்த்தனிடமிருந்து பொது உண்மைகள் மறைக்கப்பட்டன. ஆனால் பாலாவுக்கு அந்த நிலை ஏற்படவில்லை. குடும்பம் பற்றிய உண்மைகள்தான் அவளுக்குத் தெரியாமல் இருந்தது.

தன் தந்தையைத் தாத்தாவின் விழிக் கோணத்திலிருந்து பார்த்தாள். தாத்தாவின் கோணத்திலிருந்து விமரிசிக்கப்பட்ட தன் தந்தை அவ்வளவு கவர்ச்சியாக இல்லை. ஆனால் தாத்தா, தந்தையைக் கண்டிக்கவேண்டுமென்று கண்டிக்கவில்லை. சம்பந்தய்யாவின் கண்டனத்தில் அன்பு நோக்கும் கலந்துதான் இருந்தது. சம்பந்தய்யாவின் வாழ்க்கை மிகச் சாதாரணமானது. சக்ரபாணியின் வாழ்வுபோல் வெற்றி மேடுகள் இல்லாத ஒரு சம பரப்பு சம்பந்தய்யாவின் வாழ்வு அமைப்பு. ஆனால் அதில் உண்மை இருந்தது. நேர்மை இருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக இரக்கமும் மென்மையும் இருந்தன. இடிக்கு உள்ள 'பளீர்'ப் பளபளப்பும் இரைச்சலும் சக்ரபாணியின் வெற்றிகளுக்கு இருந்தன. ஆனால் சம்பந்தய்யாவின் வாழ்வு 'பிசுபிசு' மழையின் குளுமையும் பலனும் கொண்டதாக இருந்தது.



லால்குடி சீனிவாசனின் நினைப்பு, முடிவாக அவர் சம்பந்தய்யாவிடம் கூறிச் சென்ற வார்த்தைகளின் அர்த்தம் பாலாவுக்கு அவ்வளவாக விளங்கவில்லை. ''உங்கள் மாப்பிள்ளை பெரும் பாவத்தைச் சுமக்கிறான். அவனை எப்படியாவது காப்பாற்றுங்கள்'' என்று தானே காப்பாற்றப்பட வேண்டிய நிலையில் இருந்தவர் கூற வேண்டுமென்றால், அதன் பொருள்தான் என்ன? புரியாமல் உட்கார்ந்திருந்தாள்.

''என்னம்மா யோசிக்கிறே பாலா? சீனிவாசன் விஷயத்திலே உங்கப்பா நடந்து கொண்டதைப் பற்றித் தானே?'' என்று எப்படியோ அவர் மனத்தில் எழும் எண்ணங்களை எக்ஸ்ரே போட்டோ எடுத்துப் புரிந்து கொண்டவர் போல் பேசினார் சம்பந்தய்யா.

''ஆமாம் தாத்தா. அவ்வளவு உதவியருக்கு ஓர் ஆயிரம் கொடுப்பதால் அப்பாவுக்குக் குறைந்து விடாதே. அவர் இறந்த பின் மயானத்துக்கு வந்தால் என்ன? அப்பா, அப்படிச் சிக்கனமான வாழ்வு நடத்துபவரும் அல்லவே!'' என்றாள் பாலா.

கிழவர் மெள்ளச் சிரித்தார். ''இது சிக்கலான விஷயம் பாலா. உனக்குப் புரிவது கடினம். சக்ரபாணியின் சூழ்நிலையில் அல்லது ஒரு செல்வந்தனுடைய சூழ்நிலையில் இருந்து பார்த்தால்தான் அது புரியும். வீட்டு வாசலில் நிற்கும் பிச்சைக்காரனுக்குப் பத்துப் பைசா போட மறுத்துத் தடி

www.t.me/tamilbooksworld

கொண்டு துரத்தும் லட்சாதிபதி. அடுத்த ஐந்து நிமிடங்களில் பத்தாயிரம் ரூபாய்க்கு நன்கொடைக்காகச் 'செக்' எழுதுவது இல்லையா? அவனைச் சிக்கனமானவன் என்று கூற முடியுமா? பணக்காரன் என்பவன் ஒருவித மன அமைப்பைப் பெறும்போது தான் பணம் அவனை அடைகிறது. தினமும் டென்னிஸ் ஆடுபவனுக்கு முழங்கை மணிக்கட்டுச் சதைகள், சாதகத்தால் கெட்டியாக அமைகின்றன. தினமும் ஓட்டப் பந்தயத்திற்குத் தயார் செய்து கொள்ளுபவன் கால் சதைகள் ஒருவிதமாக அமைகின்றன. தினமும் அருணோதயத்தில் எழுந்து சங்கீத சாதகம் செய்து கொள்ளுபவனின் குரல்வளையும், சுவாசப் பையும் ஒருவித அமைப்புக்குள் வருகின்றன. அதே போல்தான் வாழ்வில், வெற்றியும் பணமும் வேண்டுபவனும் தன் மன அமைப்பைச் சாதகப்படுத்திக்கொள்கிறான். அதிகமாகச் சாதகம் செய்யும் நிலையில், அதுவே தவமாக மாறி விடுகிறது. எந்தவிதத் தவத்துக்கும் பலன் உண்டு. எந்த விதத் தவத்துக்கும் முறைகளும் உண்டு. முறைப்படி பணத்தை வேண்டித் தவம் செய்தவன் உன் தந்தை. அந்தத் தவத்தின் ஓர் அங்கம், மனத்தைக் கல்லாக்கிக் கொள்வது. இயற்கையாக யாருக்கும் மனம் இரங்கி எதையும் கொடுக்கக்கூடாது என்பது ஒரு பயிற்சியாக இருக்கும் என்று நினைக்கிறேன். வாழ்வில் தோல்வி அடைந்தவர்களைச் சந்தித்துப் பழகுவதே தவறு என்ற எண்ணம் அந்த வெற்றி மன அமைப்புக்கு வந்துவிடும் என்று நினைக்கிறேன். இல்லாவிட்டால் சக்ரபாணி ஏன் சீனிவாசனை மதிக்காமல் அனுப்ப வேண்டும்? அவர் மகன் குருமூர்த்தியை வெளியே தள்ளும்படி ஏன் சொல்ல வேண்டும்? பொதுவாக, இல்லுமுல்லுத்தனத்தால் முன்னுக்கு வந்தவர்கள் வந்த பாதையில் திரும்பிப் பார்க்கவே துணிவு இல்லாதவர்களாகி விடுகின்றனர். அவர்கள் மனம் எதிர்காலத்தை நோக்கியே இருக்கும். இறந்த காலத்தை நோக்கவே விரும்பாது.



"அந்த வெற்றிப் பாதை வட்டமாக வளையக்கூடியது. அது அவர்கள் அறியாமலே அவர்கள் விரும்பாத இறந்த காலமாகிய தோல்வியை நோக்கித் திரும்புவதை உணர மாட்டார்கள். வியர்த்து விறுவிறுத்துச் சுற்றி முடிவில் ஆரம்பித்த இடத்தில் வந்து நிற்கிறோமே என்று உணரும் போது வாழ்வு முடியும் நிலைக்கு வந்துவிடுகிறது. யாருக்காக, எதற்காகப் பொருள் தேடினோம் என்ற கேள்வி மனத்தில் ஒலித்துக் கொண்டே இருக்கும்போது, தேடிய செல்வம் உடன் வராமல் படுக்கை ஓரத்தில் நின்று சிரிக்க, அந்தப் பொருளை அநுபவிக்கப் போகிற சந்ததிகள் படுக்கையின் வேறு மூலையில் கண்ணீர் விட்டபடி நிற்க, செல்வந்தனுடைய ஆவி பிரிகிறது.

"தன்னலம் தெரியாத பாபம் சுமக்கும் இந்தப் பணக்காரனை எப்படிச் சுயநலவாதி என்று சொல்வது? உண்மையிலேயே தெளிந்த சுயநலக்காரர்கள் ஞானிகள் தான்! புத்தர், பரமஹம்ஸர், பட்டினத்தார் போன்றவர்களின் போதனைகளில் எல்லாம் ஒவ்வொரு தனி மனிதனின் 'நிரந்தரமான தெய்வீக சுயநலமே' போதிக்கப் படுகிறது. இந்தக் கருத்தை மனத்தில் வைத்துக்கொண்டு தான் அன்று சீனிவாசன், 'உங்கள் மாப்பிள்ளையைக் காப்பாற்றுங்கள்' என்று சொன்னார் என்பது புரியவில்லையா?" என்று பாலாவைக் கேட்டார் கிழவர்.

பாலாவுக்குச் சிறிது ஆத்திரமே வந்தது.

"என்ன தாத்தா, இந்த உலகத்திலே எவ்வளவோ பணக்காரங்க இருக்காங்க. எல்லாருமே சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தப்பு தவறு செய்துதான் பணம் சேர்க்கிறாங்க! எங்கப்பா மட்டும்தான் பாபம் செய்கிறாரா?" என்றாள் பாலா.

"இந்த அண்ட சராசரம் ஒரு நெல் களஞ்சியம்னா, இந்தப் பூமி அதிலே ஒரு நெல் தான்யம். அதிலேதான் எத்தனை எத்தனை உயிர் வகைகள்! பணக்காரங்க தொகை மிக மிகக் குறைவு. இவ்வளவு பரந்த பெரிய

அண்டசராசரங்கள் உள்ளும் புறமும் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்து ஆட்டிவைக்கும் சக்தி, சில சட்டங்கள் கொண்டு இயங்குகிறது. சட்டத்தை மீறுவது, அதுதான் பாபம்! அதற்குத் தண்டனை இருக்கும்! தவறுக்கும் தண்டனைக்கும் இடையே உள்ள கால அளவு மனிதப் பரிமாணத்திலிருந்து சற்று அதிகமாக இருப்பதனாலே தண்டனையே கிடையாதுன்னு சொல்ல முடியாது பாலா!'' என்றார்.

''நீங்க சொல்றது ஒண்ணுமே புரியவில்லை தாத்தா'' என்று கடுகடுப்புடன் கூறினாள் பாலா.

கிழவர், ''பாலா, என்னுடன் வா'' என்று அழைத்தார். சிறிய அறையின் வெளிப்புறம் பாலாவும் சம்பந்தய்யாவும் வந்து நின்றனர்.

கிழவர், ''அந்தக் கிணற்றைப் பார்'' என்றார். பாலா திகைப்புடன் கிணற்றைப் பார்த்தாள்.

ஒரு பெண், குடத்தில் தண்ணீர் இழுத்தபடி இருந்தாள். ''ஒரு பெண் தண்ணீர் இழுக்கிறாள்!'' என்றாள்.

''அது சரி; தண்ணீர் இப்படித்தான் இழுக்கணும் என்று சட்டம் இருக்கிறது இல்லையா? நேராகக் குடத்தைக் கிணற்றில் வீசி எறிந்து, அதன் பின்னால் கிணற்றில் குதித்து, தண்ணீர் எடுத்து வரலாம்; கயிறு உதவியில்லாமல்! அது பயங்கர முயற்சி. ஒவ்வொரு குடம் தண்ணீருக்கும் கிணற்றில் குதித்து நீந்திப் பிறகு கரையேற வேண்டும். உயிருக்கு ஆபத்து; சேலை நனைந்து போகும். பூ ஆகர்ஷண சக்தியின் வேகத்தைத் தடுக்க, அந்த மர உருளை, கயிறு எல்லாம் உபயோகப்படுகின்றன. கைக்குக்கூட அதிகம் சிரமம் இல்லாமல் குடத்தில் நீர் நிரப்பி மேலே கொண்டு வருகிறது. இதுவே மின்சார என்ஜின் பம்பு மூலம் செய்தால், பள்ளத்திலிருக்கும் நீர் தானே மேல் நோக்கி வந்து கொட்டும். பௌதிகப் பொருட்களைப் பௌதிகச் சட்டங்கள் மூலம் தாக்கும் போது, அவை மனிதனுக்கு உதவுகின்றன. அதேபோல்

www.t.me/tamilbooksworld



தான் ஆன்மிகத் துறையிலும் சட்டங்கள் இருக்கின்றன. அந்தச் சட்டங்களின்படி வாழ்ந்தால், அருள், நிரந்தர அமைதி, அணிமா மகிமா சித்திகள் கிடைக்கின்றன. அதை மீறி வாழ்கிறவர்கள், ஒவ்வொரு குடத்துக்கும் கிணற்றில் குதித்துத் தண்ணீர் எடுப்பவன் போல் அவதிப்படுகின்றனர். 'துன்பத்தை விளைவித்தவன் துன்பத்தை எடுக்கிறான். இன்பம் விளைவித்தவன் இன்பம் எடுக்கிறான்' என்பது அம்மாதிரி ஒரு சட்டம்'' என்றார்.

''ஆன்மிகத் துறையில் எல்லாம் சட்டப்படி நடக்கிறதா?'' என்று சலிப்புடன் கேட்டாள் பாலா.

''எல்லாம் சட்டப்படிதான் நடக்கின்றன. உருளை, பக்கெட், தண்ணீர் குழாய், எஞ்சின் போல் கண்ணுக்குத் தெரியாதவை ஆன்மிகத் துறையின் சாதனங்கள். உட்கண் திறந்தவர்களுக்கு அவை புலப்படும். மற்றவர்கள் நம்பித்தான் அந்தத் துறையில் இயங்க வேண்டும்!''

உடனே சம்பந்தய்யா, அங்கு எரியும் மின்சார விளக்கின் ஸ்விட்சைப் போட்டார். ''இந்த ஸ்விட்சை அழுத்தினால், இந்த விளக்கு எரியும் என்பது உனக்குப் புரிகிறது. படிப்பே சிறிதும் இல்லாதவன் அல்லது பதினோறாவது நூற்றாண்டிலிருந்து அழைத்து வரப்பட்ட மனிதனுக்கு, ஸ்விட்ச் போட்டு விளக்கு எரியும் நிகழ்ச்சி மந்திரம் போல்தான் தோன்றும். இன்னும் சில நூற்றாண்டுகள் கழித்து ஆன்மிகத் துறையின் அற்புதங்களைக்கூட, அன்றாட நிகழ்ச்சியாக எடுத்துக் கொள்ளலாம் அல்லவா?''

''ஆன்மாவைப் பொறுத்த வரையில் அப்பா ஒரு நோயாளி. அவருக்கு மருந்து தேட வேண்டும் என்பது மட்டும் எனக்குப் புரிகிறது'' என்றாள் பாலா.

கிழவர் அன்போடு பாலாவை அணைத்துக் கொண்டார்.

''அன்பும் தொழுகையும்தான் எல்லாத் துயர்களையும் உலகத்திலிருந்து துடைக்கக் கூடிய மருந்து! தொழுவதால்

முடியாதது எதுவுமே இல்லை. நம்பித் தொழுதால் அது மின்சாரத்தைவிட பலமான ஒரு சக்தி பாலா'' என்றார் கிழவர்.

''நான் என்ன செய்ய வேண்டும்? அதைச் சொல்லுங்கள் தாத்தா!'' என்று கேட்டாள்.

''லால்குடி சீனிவாசன் குடும்பத்துக்கும் உன் தந்தைக்குமிடையே தீராத ஒரு கணக்கு இருக்கிறது. அந்தக் கணக்குத் தீர வேண்டும்! அதை உன் தந்தை தீர்க்க மாட்டார். ரத்தக்கறை படிந்த அவர் செல்வத்தையெல்லாம் அடையப் போகும் நீதான் அதைத் துடைக்க வேண்டும் பாலா! அப்போதுதான் உங்கம்மாவின் பித்தம் தெளியும்!'' என்று கூறிவிட்டு வெளியே வந்தார். இருவரும் நடந்தபடி சில தெருக்களைக் கடந்தனர்.

''எங்கே தாத்தா போகிறோம்?''

''கொஞ்சம் பொறு பாலா! லால்குடி சீனிவாசன் குடும்பம் வாழும் இடத்துக்குப் போகிறோம்!'' என்றார்.

## 24

சம்பந்தய்யாவும் பாலாவும் பஸ்ஸில் ஏறிக் கோபாலபுரம் வந்தனர். கோபாலபுரத்துக்கும் லாயிட்ஸ் ரோடுக்குமிடையே உள்ள நடுத்தர மக்கள் வாழும் பகுதியில் நுழைந்தனர். மஞ்சள் காவி அடித்த ஒரு வீட்டைச் சம்பந்தய்யா காட்டினார்.

''அதுதான் லால்குடி சீனிவாசனின் மனைவி வீடு. சீனிவாசன் மனைவி மரகதம்மாள், ஒரு அக்கவுண்ட்ஸ் ஆபீஸரின் மகள். அவர் இறக்கும்போது சீதனமாக விட்டுச் சென்ற வீடு. மனைவியின் சொத்தை விற்பது கேவலம் என்ற பிடிவாதம் சீனிவாசனுக்கு. அதனால் தான் இன்று அவர் குடும்பம் சென்னையில் வீட்டு வாடகை தர முடியாமல் வாழ்கிறது'' என்றார்.



''வீடு சற்றுப் பெரியதாக இருக்கிறதே!'' என்றாள் பாலா.

''அந்தக் காலத்தில் மரகதத்தின் தந்தை வாங்கிய வீடு. உங்கப்பா சீனிவாசனுடன் இந்த வீட்டில்தான் வாழ்வைத் தொடங்கினார். அந்த நாட்களில் கூடப் பெயருக்காகச் சீனிவாசன் ஒரு வாடகைத் தொகையை மனைவியின் பெயரில் பாங்கில் போட்டு விடுவார். இப்போது வீட்டின் மாடிப் பகுதியை நூறு ரூபாய் வாடகைக்கு விட்டு, அந்தப் பணத்தைக் கொண்டுதான் சீனிவாசனின் மகனும், மகளும் படிக்க முடிகிறது. குருமூர்த்தி வேலையிலிருந்த போது அவன் கொண்டு வரும் பணம் சாப்பாட்டுக்கு உதவியாக இருக்கும். குருமூர்த்தி வேலை இழக்கும்போதே தந்தையின் பழைய நண்பர்களைப் பார்த்துக் கடன் வாங்கிச் சமாளிப்பான்.

''குருமூர்த்தியைவிட ஏழைகள் இல்லாமல் இல்லை. செல்வமாக வாழ்ந்த குடும்பம் ஏழ்மைக்கு வரும்போது தான் கஷ்டமாக இருக்கிறது. சக்ரபாணியின் பேச்சைக் கேட்டு வியாபாரத்தில் இறங்கவில்லை என்றால், இன்று அவர்கள் நிலை இப்படி ஆகியிருக்காது'' என்றார்.

அப்போது அந்த வீட்டின் வெளிப்புறம் முப்பது வயது மதிக்கத்தக்க பெண்மணி நிறை கர்ப்பிணி தோற்றத்துடன் வெளிவந்தாள். சரியான உணவு இல்லாத காரணத்தில் அவள் கைகள் மெலிந்து காணப்பட்டன. கையில் காலி மருந்து பாட்டிலுடன் வந்தாள். அவளைத் தொடர்ந்து இரண்டு சிறுவர்கள் கூச்சல் போட்டபடி வந்தனர்.

''அம்மா, நானும் டாக்டர் வீட்டுக்கு வரேம்மா'' என்று கூறி அடம் பிடித்தனர்.

''தரித்திரங்களே, இந்த முறை நான் ஆஸ்பத்திரியிலிருந்து உயிரோடு திரும்பப் போகிறதில்லை. உங்கள் தொந்தரவு எனக்கு இருக்காது. உயிரை வாங்காமல்

உள்ளே போய்க் கிடங்கள்'' என்று சலித்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தாள்.

''வா, பாலா... உன்னை அன்னபூரணியிடம் அறிமுகப் படுத்துகிறேன்'' என்று அழைத்தார் சம்பந்தய்யா.

பாலா குழம்பிய முகத்தோடு காணப்பட்டாள். ''வேண்டாம் தாத்தா! எதற்காக அவளைச் சந்திக்க வேண்டும்? எனக்கு அந்த அன்னபூரணியோடு பேசவே பயமாயிருக்கிறது தாத்தா. எவ்வளவு மனம் நொந்து போயிருந்தால் அவள் இந்த முறை தான் ஆஸ்பத்திரியிலிருந்து உயிரோடு திரும்பப் போகிறதில்லை என்று தான் பெற்ற குழந்தைகளிடமே சொல்லுவாள்? என்னைப் பார்த்தால் இன்னும் என்னென்ன சொல்வாளோ?'' என்றாள்.

அப்போதுதான் சம்பந்தய்யாவுக்கு, பாலா சாதாரண குடும்ப நிகழ்ச்சிகளில் சராசரி துக்கங்களுக்குக்கூடப் பழக்கப்படாத பிறவி என்பது ஞாபகத்துக்கு வந்தது.

''பாலா, ஆயிரக்கணக்கான வீடுகளிலே பணத்தட்டு, மனக்கசப்பு ஏற்படும்போது இந்த மாதிரி சம்பாஷணை ஏற்படுவது சகஜம். இந்த வார்த்தைகளைச் சொன்ன அன்னபூரணியும் அதன் பூரா அர்த்தத்தை எண்ணிச் சொல்லவில்லை. அவள் வார்த்தைகளைக் கேட்ட குழந்தைகளும் அந்த அர்த்தத்தில் எடுத்துக் கொள்ளவில்லை...'' என்று மழுப்பினார்.

''இருந்தாலும் தாத்தா, நாம் இன்று எதற்கு அந்த வீட்டுக்குப் போக வேண்டும்?'' என்று கேட்டாள்.

''ஏழைகளின் மனஅழைப்பை நீ உணரவில்லை பாலா. செல்வந்தன் சக்ரபாணியின் மகள் பாலா வீடு தேடி வந்தாள் என்ற ஒரு விஷயமே அவர்களை மகிழவைக்கும். நாளைக்கு உன்னால் உதவிகள் ஏற்படலாம் என்ற நம்பிக்கையே அவர்களுக்குப் போதும் பாலா!''

www.t.me/tamilbooksworld



பாலா சிந்தித்தாள். ''வெறும் பேச்சு, நம்பிக்கையால் மட்டும் ஒன்றும் பலனில்லை தாத்தா. நீங்கள் பல விஷயங்களைக் கூறி என் மனத்தைக் குழப்பி விட்டீர்கள். இன்று இதுபோதும். நான் உடனே வீட்டுக்குப் போக விரும்புகிறேன். நீங்கள் கூறியதைப் பற்றி நான் சிந்திக்க விரும்புகிறேன். இன்றைக்கு எனக்கு லால்குடி சீனிவாசன் வீட்டுக்குள்ளே போகத் துணிவில்லை. என்னை வற்புறுத்தாதீர்கள்'' என்று சொல்லிவிட்டு, கிழவரின் பதிலுக்காகக்கூடக் காத்திராமல் வந்த வழியே நடக்க ஆரம்பித்தாள் பாலா.

கிழவர் ஏமாற்றத்துடன் நின்றார்.

'நிறை கர்ப்பிணியான அன்னபூரணியைப் பார்த்ததும், அவள் கூறிய வார்த்தைகளைக் கேட்டதும்தான் பாலாவின் முடிவே மாறிவிட்டது! ஒரே நாளில் பாலாவின் பிஞ்சு மனம் எவ்வளவு அதிர்ச்சி தரும்படியான விஷயங்களைத்தான் தாங்க முடியும்? அவளை அழைத்துப் போய் வெறும் வார்த்தைகள் பேச வைப்பதால், லால்குடி சீனிவாசன் குடும்பத்துக்கு என்ன லாபம் இருக்க முடியும்?' என்று தன்னைத்தானே திருப்திப்படுத்திக் கொண்டார்.

பாலா நூறு அடிதான் சென்றிருப்பாள். மறுபடியும் திரும்பி வந்தாள்.

''தாத்தா, என்னை இன்று மன்னித்து விடுங்கள்! ஈன்று புறந்தருதல் தாயின் கடமை, சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே என்று புறநானூற்றுப் பாட்டைப் பள்ளியிலே படித்திருக்கிறேன். என்னைச் சான்றோன் ஆக்கிய பெருமை என் தாத்தாவுடையது. அதற்கு நன்றி!'' என்று சொல்லிவிட்டு வீடு நோக்கி நடந்தாள்.

கிழவருக்கு மனம் குளிர்ந்தது. பாலாவின் தாய் லட்சுமியை மகளாகப் பெற்ற பயனை இன்று அடைந்தது போல் களிப்பெய்தினார்.

பாலா, ஆத்திரத்தோடு வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தாள். உடனே தந்தையைச் சந்தித்து அவரிடம் காரசாரமாகப் பேசிவிட வேண்டும் என்று துடித்தாள். வீடு திரும்பியவுடன் தந்தையைப்பற்றிச் சிந்திப்பதிலேயே தன் மனத்தில் பொங்கி எழுந்த ஆத்திரத்தை ஒருவாறு செலவழித்தாள்.

அவள் மனக்கண் முன்பு நிறைந்த வயிற்றுடன் தள்ளாடிச் செல்லும் அன்னபூரணியின் உருவமும் அவளைத் தொடர்ந்து குறுஞ் சிரிப்புடன் வந்த குழந்தைகளும்தான் நின்றன.

அன்னபூரணியைப் போல் குழந்தைகள் பெற்ற ஒரு மூத்த சகோதரி தனக்கு இருந்தால், வாழ்வு எவ்வளவு இனிப்பாக இருக்கும் என்று நினைத்தாள்.

நடை பாதையில் செல்லும் ஆண்களுக்குப் பாலா வியர்த்த நிலையில் நடந்து செல்வதும், அவள் ஆடை சற்று விலகியிருப்பதும் ஒரு கவர்ச்சியான காட்சியாக இருந்தது. மற்றவர் சிந்தனைகள் அவள் உடலில் லயிக்க, பாலாவின் சிந்தனை அவள் தந்தையின் கடந்த கால வாழ்க்கையிலே நிலைத்தது.

திடீரென்று பட்பட்டென்று சத்தம் செய்தபடி ஒரு ஸ்கூட்டர் அவளை நெருங்குவதை அவள் கவனிக்கவில்லை. அதில் அமர்ந்தபடி வரும் மோகனையும் அவள் கவனிக்கவில்லை.

மோகன் ஸ்கூட்டரின் வேகத்தைக் குறைத்து, "என்ன சுந்தரி!" என்று மூன்று முறை கூப்பிட்ட பின்பே பாலா திரும்பினாள்.

மோகன் சிரித்தான். "ஏதாவது வாக்கிங் ரேஸிலே பேர் கொடுத்திருக்கிறாயா? இவ்வளவு வேகமாக நடக்கிறாயே! ஸாரியைக் கொஞ்சம் சரி செய்துகொண்டு நடக்கக் கூடாது..." என்று சொல்லியபடி தலை குனிந்தான்.

www.t.me/tamilbooksworld



அப்போதுதான் பாலாவும் தன்னுடைய சேலை ஒதுங்கியிருப்பதை உணர்ந்தாள். மோகனைச் சற்றும் எதிர் பார்க்கவில்லை. முதலில் பாலாவுக்கு என்ன பேசுவது என்றே புரியவில்லை.

மோகன் அணிந்திருந்த 'டீ ஷர்ட்' அவனுடைய பருத்த புஜங்களையும், புடைத்து நிமிர்ந்திருந்த கழுத்தையும் நன்கு காட்டியது.

இதுவரை தந்தையின் கடந்த காலத்தில் வேதனையோடு நிலைத்திருந்த பாலாவின் மனம் இப்போது மோகன் உடலில் நிலைத்தது. கொஞ்சங்கூடக் கூச்சமில்லாமல் அவனை ஆசையோடு பார்த்தாள்.

மோகனுக்கே பாலாவின் ஆசை நிறைந்த பார்வை குழப்பத்தைக் கொடுத்தது. இருவரும் ஒன்றும் பேசாமல் ஒருவரை ஒருவர் பார்த்தபடி நின்றனர்.

"எங்கே போக வேண்டும் நீ?" என்று மோகன் கேட்டான்.

"எங்கேயாவது போக வேண்டும்." பாலா மனத்தில் இருந்த வேதனை வெளிப்படச் சொன்னாள்.

"எங்கே போக வேண்டுமென்று சொன்னால் நான் உனக்கு ஒரு டாக்ஸி கொண்டு வருகிறேன்" என்றான் மோகன்.

"நீங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று பதிலுக்குக் கேட்டாள் பாலா.

"இன்றைக்கு ஃபாக்டரியிலே சீக்கிரம் விட்டுட்டாங்க. அதனாலே ஒரு இங்கிலீஷ் சினிமா போகலாம்னு புறப்பட்டேன்."

பாலா உடனே, "நானும் இங்கிலீஷ் சினிமா பார்த்து நாளாச்சு..." என்று சொல்லிவிட்டு நிறுத்தினாள்.

பச்சையாகத் தன்னுடன் சினிமாவுக்கு வருகிறேன் என்கிறாளே, என்று மோகன் துணுக்குற்றான்.

"நான் பாலா தியேட்டரில்— 'ரோமன் ஹாலிடே' என்ற பழைய படம் ஒன்று; அதைப் பார்க்கப்போகிறேன்.

உனக்கு அது பிடிக்குமா...?'' என்று சொல்லித் தட்டிக் கழிக்கப் பார்த்தான்.

''உங்களுக்குப் பிடித்த படமாயிருந்தால், அது நல்ல படமாகத்தான் இருக்க வேண்டும்.''

அப்போது ஒரு டாக்ஸி அவர்கள் பக்கம் நெருங்கியது.

''நான் ஸ்கூட்டரில் முதலில் தியேட்டருக்குப் போய் டிக்கெட் வாங்கி வைக்கிறேன். நீ, டாக்ஸியில் வந்து சேருகிறாயா?''

''டாக்ஸி எதற்கு? நான் உங்களோடு ஸ்கூட்டரிலே வருகிறேன்!''

மோகன் திடுக்கிட்டான்.

பாலா, ''அன்று இரவு நீங்கள் என்னை ஸ்கூட்டரில் ஏற்றிக்கொண்டு செல்லவில்லையா? அன்றாவது இரவு; இன்று மாலைப் பொழுது! ஏன் தயங்குகிறீர்கள்?'' என்றாள்.

இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று மோகனுக்குப் புரியவில்லை. ஒருமுறை அசடு வழியக் கனைத்துக் கொண்டான்.

''சரி, ஸ்கூட்டரின் பின்புறம் ஏறிக்கொள்'' என்று மோகன் விருப்பமில்லாமல் கூறினான்.

பாலா மகிழ்ச்சியோடு ஏறிக்கொண்டாள். அவளுக்குத் தன் அத்தானை ஸ்பரிசித்தபடி உட்கார்ந்ததுமே தந்தையின் தவறுகள் எல்லாம் மறைந்தன. அவளையும் அறியாமல் ஓர் அமைதி மனத்தில் இறங்கியது.

ஸ்கூட்டர் மவுண்ட்ரோடில் திரும்பியது. அப்போது வேறு ஒரு ஸ்கூட்டரில் ஓர் இளம் கணவனும் மனைவியும் வந்தனர். இரண்டு ஸ்கூட்டர்களும் ஒன்றை அடுத்து ஒன்று சென்றது. அவர்கள் சமீபத்தில் மணமாகிய தம்பதிகளாயிருக்க வேண்டும். புது மனைவி கணவனோடு செல்கிறோம் என்று பெருமையுடன் அலங்காரம் செய்து கொண்டிருந்தாள்.

www.t.me/tamilbooksworld



ஸ்கூட்டரில் அமர்ந்தபடி அந்தப் பெண் பாலாவைப் பார்த்து, ''என்ன, பிக்சருக்கா?'' என்றாள்.

பாலா, ''ஆமாம். நாங்களும் பிக்சருக்குத்தான் போகிறோம்'' என்றாள்.

'நாங்களும்' என்ற வார்த்தையைப் பாலா உச்சரித்த விதம், தன்னை அவள் கணவனாக்கிச் சொன்னதுபோல் பட்டது மோகனுக்கு.

அடுத்த ஸ்கூட்டரில் வந்த பெண் பாலாவைப் பார்த்து, ''முதலிலே இவர் தனியாப் போகிறதாகத்தான் இருந்தார். நான்தான் பிடிவாதமாகக் கூட வருவேன் என்று ஸ்கூட்டரிலே ஏறிட்டேன்'' என்றாள், அசடு வழியச் சிரித்தபடி.

பாலாவும் குறும்புடன் சிரித்தபடி, ''இவரும் அப்படித்தான். தானே தனியாகப் போகணும்னு நினைத்தார். நானாகத்தான் சேர்ந்துகொண்டேன்!'' என்றாள்.

மோகனுக்குக் கோபம் கோபமாக வந்தது. இரண்டு முறை இருமினான்.

அடுத்த ஸ்கூட்டரில் வந்தவள், ''அவருக்கு உடம்பு சரியில்லையா? இருமுகிறாரே!'' என்றாள்.

''பார்க்கிறதுக்குப் பலசாலியாத்தான் இருக்கிறார். ஆனால் வாரத்திலே இரண்டு நாள் ஏதாவது உடம்பைப் படுத்தாமல் இருக்கிறதில்லே!'' என்றாள் பாலா.

மோகனின் பொறுமை எல்லை மீறியது. ''நீ சும்மா இருக்கமாட்டே சுந்தரி?'' என்று கடிந்து கொண்டான்.

பாலாவுக்குச் சிரிப்பாக வந்தது. அடுத்து வந்த ஸ்கூட்டர் அவர்களைத் தாண்டிச் சென்றது.

''என் மேலே ஏன் கோபிக்கிறீங்க? அவர்களாக நம்மைப் புருஷன் பெண் ஜாதின்னு நினைத்தால் நான் என்ன செய்கிறது! நானா அப்படின்னு சொன்னேன்?'' என்றாள்.

தியேட்டர் போகும் வரையில் மோகன் பேசாமலே ஓட்டிச் சென்றான். அப்போதுதான் பாலாவுக்கும் பைத்தியக்காரத்தனமாக ஏன் இப்படி ஸ்கூட்டரில் ஏறிக் கொண்டோம் என்று தோன்றியது.

தியேட்டர் வந்ததும் மோகன் ஸ்கூட்டரை நிறுத்தி விட்டு டிக்கெட் வாங்கப் போனான். பாலா சிந்தித்தபடி நின்றாள்.

மோகன் இரண்டு டிக்கெட்டுகளுடன் வந்தான். ஒரு டிக்கெட்டை அவளிடம் நீட்டினான். ''நீ போய் உள்ளே உட்கார்ந்து கொள்'' என்று சற்று அலட்சியமாகச் சொன்னான்.

பாலாவுக்குச் சுருக்கென்றது. ''நீங்கள் வர வில்லையா?'' என்றாள்.

''நான் அப்புறம் வந்து உட்காருகிறேன்...'' என்று தயங்கியபடி சொன்னான்.

'என்னைத் தனியாகப் போய் உட்கார்ந்து கொள்ளச் சொல்லுகிறார் அத்தான். என்னோடு சேர்ந்து காணப் படுவதில் அவருக்கு இஷ்டமில்லை' என்பது பாலாவுக்குச் சட்டென்று விளங்கியது. 'அத்தான் என்னை வெட்க மில்லாத நடத்தை கெட்டவள் என்று நினைக்கிறாரோ?' என்று நினைக்கவும் பாலாவுக்கு அழுகையாக வந்தது. பாலா, மோகனிடம் டிக்கெட்டைத் திருப்பிக் கொடுத் தாள்.

''வேண்டாம், நான் படம் பார்க்கல்லே!'' என்றாள்.

மோகனுக்குக் கோபமே வந்தது. ''டிக்கெட் வாங்கினப்புறம் படம் பார்க்கலைன்னா என்ன அர்த்தம்? நான் 1.66 டிக்கெட்தான் வாங்குவேன். உனக்காக இன்னிக்கு 2.50 டிக்கெட் வாங்கியிருக்கேன்'' என்றான்.

அவள் பெயர் கொண்ட அந்தப் பாலா தியேட்டரில் அவளுக்கு டிக்கெட் தேவையில்லை என்பதை அவன் உணரவில்லை. அவள் வீட்டிலேயே குளுகுளு தியேட்டர் இருக்கிறது; அதில் படம் பார்க்க முடியும் என்பதும் அவனுக்குத் தெரியாது.



பாலா கையிலிருந்து ரூ. 2.50 அவனிடம் கொடுத்து விட்டு, ''உங்களுக்கு நஷ்டம் வேண்டாம்'' என்று கூறிவிட்டு நடக்க ஆரம்பித்தாள்.

மோகன் அவளைத் தனியே உள்ளே போகச் சொன்ன தன் காரணம் கூச்சம். அவள் அதை வேறுவிதமாக எடுத்துக் கொண்டு விட்டாள் என்பதை உணர்ந்து கொண்டு, ''சுந்தரி! சுந்தரி!'' என்று அழைத்தபடி பின் தொடர்ந்தான்.

பாலா திரும்பிப் பாராமல் தன் பெயர் தாங்கிய தன் தந்தையின் தியேட்டரின் வெளிப்புறம் நடக்க ஆரம்பித் தாள்.

## 25

கொந்தளிக்கும் எண்ணங்களுடன் பாலா, தியேட்டரை விட்டு நடக்க ஆரம்பித்தாள். 'சுந்தரி' என்று அழைத்தபடி மோகன் பின் தொடருவதை அவள் பொருட்படுத்தவில்லை. வேகமாகத் திரும்பித் தெருமூலைக்கு வந்தாள். அங்கு வந்து நின்ற பஸ்ஸில் ஏறிக்கொண்டாள். மோகன் திகைப்போடு தியேட்டரை நோக்கித் திரும்பினான்.

பாலா, பஸ் நகர்ந்த பின்புதான், அது திருவல்லிக்கேணி செல்லும் பஸ், நுங்கம்பாக்கம் செல்லும் பஸ் அல்ல என்பதைப் புரிந்து கொண்டாள். நல்லவேளை, கூட்டத் தில் அவளிடம் கண்டக்டர் டிக்கெட் கேட்கவில்லை. அதற்குள் அடுத்த நிறுத்தத்தில் கீழே இறங்கினாள். அங்கிருந்து நடக்க ஆரம்பித்தாள்.

உள்ளம் அலுத்து உடல் களைத்துப் போயிருந்தது. அன்று காலையிலிருந்து உணர்ந்த உண்மைகள்

www.t.me/tamilbooksworld

திடீரென்று அவளுக்கு ஒரு முதிர்ச்சியைக் கொடுத்தன. அவளுக்கு நடக்கவே சலிப்பாக இருந்தது. வழியில் செல்லும் டாக்ஸிகள் வேகமாகச் சென்று கொண்டிருந்தன. சில நிமிடங்கள் டாக்ஸிக்காகக் காத்திருந்தாள். முடிவில் அவள் நிற்குமிடத்துக்கு அருகில் ஒரு காலி ஆட்டோ ரிக்ஷா வந்து நின்றது. அதில் ஏறிக் கொண்டாள். நுங்கம்பாக்கத்தில் அவள் வசிக்கும் பகுதிக்கு ஓட்டச் சொன்னாள்.

அவள் மனத்தில் லால்குடி சீனிவாசன் மருமகளின் நிறை கர்ப்பிணியான தோற்றம் வந்து போய்க் கொண்டிருந்தது. இடையிடையே அத்தான் மோகனின் உருவமும் வந்து அவள் மனத்தை வேதனைப்படுத்தியது.

வீடு சென்றதும் முதல் முதலாகச் செய்ய வேண்டியது என்ன என்று நினைத்தாள். தந்தையைச் சந்தித்து அவரிடம் மனம் திறந்து கேள்விகள் கேட்க வேண்டும். அவர் வாழ்க்கை முறையில் ஒரு மாறுதலை ஏற்படுத்த வேண்டும். அவருடைய வாழ்க்கையில் கடந்த கால நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசினால் அவர் அதை எப்படி எடுத்துக் கொள்வார், என்ன சொல்வார் என்றெல்லாம் நினைத்தாள்.

வீடு நெருங்கியது. ஆட்டோ ரிக்ஷாவை அனுப்பி விட்டு வீட்டினுள் நுழைந்தாள்.

வீட்டின் வெளிப்புறத் திறந்த வெளியில் அயல் நாட்டுக் கார் ஒன்று நின்று கொண்டிருந்தது. சூரியன் அஸ்தமனமாகும்போது ஏற்படும் மங்கலான மயக்கும் ஒளியில் அந்தக் காரின் சிவப்பு நிறம் பயங்கரமாக ரத்தம் சிதறியதுபோல் தெரிந்தது. அது இளைய ஜோன்ஸின் கார் என்று அவளுக்குத் தெரியும்.

நேரே வீட்டினுட்புறம் சென்றாள். அங்கு அலுவலகச் சிப்பந்திகள் ஹாலில் ஏதோ ஒருவித அச்சத்துடன் காத்திருந்தனர். சில புது மனிதர்களும், அவள் இதுவரை



பார்த்திராத மனிதர்களும் இருந்தனர். ஆனால் அவர்கள் முகத்தில் ஒருவிதக் கவலையும் துடிதுடிப்பும் இருந்தன.

தந்தையின் வரவேற்பு அறை நோக்கி நுழைந்த போது பெரிய இரைச்சல் கேட்டது. பாலா இதுவரை கேட்டறியாத ஒரு குரல் ஆங்கிலத்தில் கூச்சலிடுவது கேட்டது. பாலா மெள்ள தன் தந்தையின் அறை நோக்கி நகர்ந்தாள். மெள்ள கதவைத் திறந்தாள். அவள் எதிரே இருந்த திரை, உள்ளே இருந்தவர்களின் பார்வையிலிருந்து அவளை மறைத்தது.

அவள் தந்தை அமைதியாக உட்கார்ந்திருந்தார். அருகில் ஜோன்ஸ் படபடப்புடன் தன்னை மறந்து கூச்சலிட்டபடி இருந்தான். சாரங்கன் நின்று கொண்டிருந்தார். அருகில் சில பிரபலமான வக்கீல்கள் கறுப்புக் கோட்டுடன் அமர்ந்திருந்தனர். கோர்ட் வேலை முடிந்து வீடு செல்லாமல் நேரே இங்கு வந்திருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டாள்.

அந்த அறையில் பல டீப்பாய்களில் பரப்பி வைக்கப்பட்டிருந்த தண்ணீர் டம்ளர்கள், பலகாரத் தட்டுகள் ஆகியவற்றைக் கண்டதும், அங்கு ஒரு மகாநாடே வெகு நேரமாக நடந்து கொண்டிருக்க வேண்டும் என்பதும் தெரிந்தது.

இளைய ஜோன்ஸை அவளுக்குத் தெரியும். அவளுக்கு அன்பளிப்பாக ஓர் உயர்ந்த ஜாதி நாய்க்குட்டி கூடக் கொடுத்திருந்தான். பாலா, நாய்கள் வளர்ப்பதில் உயிரையே வைத்திருந்த தன் சிநேகிதி யொருத்திக்கு அதைக் கொடுத்து விட்டாள். எப்போதும் சிரித்த முகமுள்ள அந்த ஜோன்ஸ் படபடப்புடன் ஏதோ குடியே மூழ்கிப் போனவன்போல் காணப்படுவது ஏன் என்று பாலாவுக்குத் தெரியவில்லை. அவன் கண்கள் சிவந்திருந்தன. கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன.

திரைக்குப் பின் நின்றபடி கவனித்த பாலாவின் காதில் பின்வரும் உரையாடல் கேட்டது.

''உன் முடிவுதான் என்ன, சக்ரபாணி'' என்று ஜோன்ஸ் கேட்டான்.

''மிஸ்டர் சக்ரபாணி என்று சொல்லுங்கள், மிஸ்டர் ஜோன்ஸ்! உங்க 'மானர்ஸ்' எங்கே போச்சு?''

''மானர்ஸ்! மானர்ஸ்! நீ ஒரு 420 சீட். உங்கிட்டே மானர்ஸ் வேறேயா காட்டணும்?''

''ஜோன்ஸ்! படபடப்பாகப் பேசாதீங்க. விஷயத்தை மட்டும் பேசுங்க சார்'' என்றார் ஜோன்ஸின் வக்கீல்.

'என் மனைவி என் முகத்திலே காறித் துப்பி விட்டாள் சார், நான் ஏமாளின்னு சொல்லி! நம்பினேன், ஏமாத்திட்டான் சார்!'' என்றான் படபடப்புடன் ஜோன்ஸ்.

சக்ரபாணி துளிக்கூட உணர்ச்சி இல்லாமல் அமர்ந்திருந்தான். ஜோன்ஸின் வக்கில், ''மிஸ்டர் சக்ரபாணி, நீங்கள் ஜோன்ஸினுடைய எஸ்டேட்டுகளை மிகக் குறைந்த விலைக்கு வாங்கியிருக்கிறீர்கள். மார்க்கெட் விலைக்கும் நீங்கள் கொடுத்திருக்கும் விலைக்கும் பொருத்தமே இல்லை. அவர் கடன்களைக் கட்டி, குடும்பத்திலே பாகப் பிரிவினை பண்ணினால் ஒன்றுமே மிஞ்சாது போலிருக்கிறது!'' என்றார்.

சக்ரபாணி சிரித்தபடி, ''வக்கீல் சார், குறைந்த விலைக்கு வாங்கி நிறைய விலைக்கு விற்கிறதுதான் வியாபாரம்! ஜோன்ஸ், அவர் ஆபீஸ் ஆட்கள் எல்லாரும் சேர்ந்து ஆலோசனை பண்ணித்தான் அந்த முடிவுககு வந்தார்கள். இப்போது அது முடிந்துபோன விஷயம்!'' என்றான்.

''என் ஆபீஸ் ஆட்களுக்கு லஞ்சம் கொடுத்து என்னை 'சீட்' பண்ணிட்டே சக்ரபாணி!'' என்று ஜோன்ஸ் இரைந்தான்.

''வக்கீல் சார், நீங்கள்தான் சாட்சி. என்னை, என் வீட்டிலேயே, 'சீட்' '420' என்றெல்லாம் அவதூறாகப் பேசுகிறான். நான் மான நஷ்ட வழக்குப் பெருந் தொகைக்குத் தொடரலாம் இல்லையா?'' என்று சக்ரபாணி ஜோன்ஸின் வக்கீலையே கேட்டான்.



வக்கீல், ''ஜோன்ஸ், கொஞ்சம் ஜாக்கிரதையாகப் பேசுங்கள். சட்டப்படி நமக்கு ஒருவிதப் பிடிப்பும் இல்லை. அவர் சொல்கிறபடி அவதூறு வழக்குத் தொடர்ந்தால்...'' என்றார்.

''தொடர்ந்தால் என்னய்யா! எப்படியும் இன்ஸால்வன்ட் ஆகப்போகிறேன் இவனாலே! எவ்வளவு தொகைக்கு இன்ஸால்வன்ட் ஆனா என்ன? டேய் சக்ரபாணி, உன்னை ஜென்ட்டில்மேன்னு நினைச்சேன். நீ ஒரு சைத்தான்! முடிவாகக் கேட்கிறேன். இந்தியாவிலுள்ள கடன்களை அடைக்க எனக்கு ஆறு லட்சம் தேவை. என்கிட்டே ஏமாற்றி எடுத்தது முப்பது லட்சத்துக்கு இருக்கும். அதிலே ஆறு லட்சம் கொடுக்கறியா, இல்லையா?'' என்று கேட்டான்.

சக்ரபாணி பேசாமல் எழுந்தான். ''முடிந்த விஷயம் முடிந்த விஷயமே! 'ஆன் பிரின்ஸிபிள்' ஆறு பைசா கூடக் கொடுக்க முடியாது!'' என்றான்.

ஜோன்ஸ் தன்னை மறந்தான். தன் கையிலிருந்த சுருட்டை எடுத்துச் சக்ரபாணியின் முகத்தில் விட்டெறிந்து விட்டு வெளியேறினான். ஜோன்ஸின் வக்கீல்கள் பதறிப் போய் நின்றனர்.

சக்ரபாணி சிறிதுகூட உணர்ச்சி வசப்படாமல், பேசாதிருக்கவே வக்கீல்கள் தாங்கள் கொண்டு வந்த பத்திரங்களை எடுத்துக் கொண்டு பேசாமல் நகர முயன்றனர்.

பாலாவால் பொறுக்க முடியவில்லை. ''அப்பா, அவர் கேட்கும் ஆறு லட்சத்தைக் கொடுத்தால் என்னப்பா? ஏம்பா இப்படி இரக்கமில்லாதவராய் இருக்கிறீர்கள்?'' என்று தன்னையும் மறந்த நிலையில் கூச்சலிட்டாள்.

அப்போதுதான் சக்ரபாணி தன் மகள் அந்த அறையில்



www.tamilbooksworld

நிற்பதை உணர்ந்தான். இதுவரை குழப்பமே தோன்றாத அவன் முகத்தில் ஒரு விநாடிக்குக் கலக்கம் ஏற்பட்டது. அடுத்த விநாடி அவன் முகத்தில் மறுபடியும் உறுதி படர்ந்தது.

"பாலா, இந்த விஷயத்தின் அடியோ நுனியோ உனக்குத் தெரியாது. நீ இந்த அறைக்குள் நுழைந்திருக்கவே கூடாது!" என்றான்.

"விஷயத்தைப் பற்றி விளக்கம் எனக்கு வேண்டாமப்பா. ஜோன்ஸுக்கு ஆறு லட்சம், வாழ்வா—சாவா என்ற உயிர்ப் பிரச்னை. அது அவர் முகத்திலிருந்தே தெரிகிறது; உங்களுக்கு ஆறு லட்சம் அவ்வளவு பெரிய விஷயம் இல்லை. கொடுத்தால் என்னப்பா? ஏனப்பா இரக்கம் காட்டக்கூடாது?"

உடனே சாரங்கன் குறுக்கிட்டார். "குழந்தை சொல்வது நூற்றிலே ஒரு வார்த்தை! ஆறு லட்சம் பெரிசில்லை நமக்கு. ஜோன்ஸ் எஸ்டேட்டிலே நமக்கு வரப்போகிற லாபம் பல லட்சம். கொடுத்திட்டால் நமக்கு ஊரிலே நல்ல பேர் கூட ஏற்படும்... சக்ரபாணி நல்லவர்ன்னு சொல்லுவாங்க!"

சக்ரபாணி, "ஷட் அப்!" என்று கூச்சலிட்டான். அவன் உதடுகள் துடித்தன. கண்கள் சுழன்றன. "எனக்கு எதற்கய்யா நல்ல பேர்? நான் என்ன எலெக்ஷனுக்கா நிற்கப் போகிறேன்? நல்லவன் என்று பேர் வந்தால், அதுதான் என் அழிவுக்கு ஆரம்பம்! ஊரிலே உள்ள பிச்சைக்காரர்கள், சோம்பேறிகள் எல்லாம் கூட்டமாய்க் கையேந்திக் கொண்டு வருவார்கள்! ஆகையினாலே, சக்ரபாணி நல்லவன் என்று மட்டும் பேர் வந்துவிடக் கூடாது! சாரங்கா, வாழத் தெரியாதவன், இல்லாத அடுத்த உலகத்தைப் பற்றிக் கனவு காணுகிறவன், கையாலாகாதவன்; ஓட்டுத் தேடும் அரசியல்வாதி—இந்த மாதிரி பிச்சைக்காரப் பசங்களுக்குத்தான் நல்லவன் என்ற பேர் வேண்டும். எனக்கு அது தேவையில்லை! பணத்தைக்

www.t.me/tamilbooksworld



கொடுத்தால் குறைந்தபட்சம் விளம்பரமாவது கிடைக்க வேண்டும். ஜோன்ஸுக்குப் பல லட்சம் கொடுக்கிறதை ஒரு லட்ச ரூபாய் செலவு பண்ணினால் என்னை நல்லவன் என்று புகழ ஊரிலுள்ள எல்லாப் பத்திரிகையும் போட்டி போடுமே! ஜோன்ஸ் அழியப் பிறந்தவன். அவன் அழிவைத் தடுப்பது தவறு!" என்று கூறிவிட்டு, பாலாவின் புறம் திரும்பினான். "பாலா, நீ ஏம்மா இந்த விஷயத்தைப் பத்திப் பேசறே? நீ போம்மா!"

பாலாவுக்குத் தந்தையின் வியாபாரத் தத்துவம் குமட்டலெடுத்தது. அறையை விட்டு ஓடினாள் வெளியே.

தன் அறையை அடைந்தாள். தலை சுற்றியது. பாத்ரூமுக்குள் சென்றாள். குபுக்கென்று வாந்தியெடுத்தாள். வாயைக் கழுவிவிட்டுக் குளிர்ந்த நீர் குடித்து விட்டுப் படுக்கையில் அமர்ந்தாள். வேலைக்காரி வந்து சாப்பிட அழைத்தபோது பசியில்லை என்று சொல்லி விட்டாள். தூங்காமல் அப்படியே விறைத்துப் பார்த்தபடி படுக்கையில் உட்கார்ந்திருந்தாள்.

நேரம் போனதே தெரியவில்லை. இரவு மணி பன்னிரண்டு அடித்தது. பாலாவின் அறையை அடுத்த ஹாலில் டெலிபோன் மணி அடித்தது. அறையைவிட்டு வெளியே வந்து டெலிபோனை எடுத்தாள்.

சாரங்கன்தான் டெலிபோனில் பேசினார். "யார், சக்ரபாணி சாரா?"

"இல்லை, நான் பாலா பேசுகிறேன்."

"அப்பாவோடு பேசணும்."

அதற்குள், சக்ரபாணியே வந்து டெலிபோன் ரிசீவரை எடுத்துக் கொண்டான்.

"என்ன மிஸ்டர் சாரங்கன்?" என்றான். பாலா அருகிலேயே நின்றபடி இருந்தாள். எங்கிருந்தோ பேசும் சாரங்கனின் குரல் சன்னமாகக் கேட்டது.

"ஜோன்ஸ் ஏகப்பட்ட தூக்க மாத்திரை விழுங்கி விட்டானாம். ஜோன்ஸின் மனைவி கதவை உடைத்து

உள்ளே போயிருக்கிறாள். உடனே ஜோன்ஸை ஆஸ்பத்திரிக்கு எடுத்துக்கொண்டு போயிருக்கிறார்கள்...".

"எங்கிருந்து பேசறீங்க?" என்றான் சக்ரபாணி.

"ஜோன்ஸ் வீட்டிலிருந்து பேசறேன். ஜோன்ஸின் லாயர் போன் பண்ணியதால் இங்கே வந்தேன்."

"மாத்திரை சாப்பிடுவதற்கு முன்னே ஏதாவது லெட்டர் எழுதி வைத்திருக்கிறாரா, அதிலே என்னைப் பற்றி எழுதியிருக்கிறானா என்று பாருங்கள். இருந்தால் அதை உடனே கொளுத்திவிடுங்கள். ஜோன்ஸ் மனைவியிடம் என் அனுதாபத்தைச் சொல்லுங்கள். பத்திரிகையிலே நம்ம பேர் வரக்கூடாது. தேவையானால், ஜோன்ஸ் மனைவியிடம் லட்ச ரூபாய் வரையிலும் தருவதாகச் சொல்லுங்கள். அவள் நம்ம விஷயமாய் வெளியே பேச மாட்டாள்" என்றான்.

"ஜோன்ஸ் பிழைச்சுடுவான்னு டாக்டர் அபிப்பிராயப் படுகிறார்."

"அப்படியானால் பரவாயில்லை. ஜோன்ஸின் வக்கீலிடம் சொல்லுங்கள். எஸ்டேட் கை மாறினாலும் அவர்தான் எஸ்டேட்டுக்குத் தொடர்ந்து வக்கீலாயிருப்பார் என்று சொல்லுங்கள்!"

பாலாவுக்குத் தந்தையைப் பார்க்கவே பிடிக்கவில்லை. தந்தையிடம் வியாபாரம் செய்தவன், அதன் விளைவாகத் தற்கொலை செய்துகொள்ள முயற்சி செய்கிறான். அவன் உயிரைப் பற்றி அப்பாவுக்கு அக்கறையில்லை! அவன் ஏதாவது கடிதம் எழுதியிருக்கிறானா, அதில் தன் பெயர் இருக்கிறதா என்றுதான் பயப்படுகிறார். 'இவர் என்ன மனிதர்!' என்று வெறுப்புடன் நினைத்தாள்.

www.t.me/tamilbooksworld



## 26

தந்தையின் கேள்வி மொழியைக் கேளாமலேயே உள்ளே சென்ற பாலாவுக்கு ஒருவிதத் துவேஷம் எழுந்தது. எல்லாவற்றிலும், எல்லார் மீதும் வெறுப்பு ஏற்பட்டது. உண்மையைச் சொன்னதற்காகச் சம்பந்தய்யா மீது கோபம் வந்தது. சம்பந்தய்யா கூறிய விஷயங்கள் அவ்வளவும் உண்மையாகத்தான் இருக்க வேண்டும் என்பதை இளைய ஜோன்ஸ் விஷயத்தில்தான் நிதரிசனமாகக் கண்டு கொண்டாளே! இளைய ஜோன்ஸின் நாடகத்தில் ஒவ்வொரு அங்கமும் தெரியாவிட்டாலும், அதன் உச்சக் காட்சியான தற்கொலை முயற்சியிலிருந்து அவன் எப்படி ஏமாற்றப்பட்டிருப்பான் என்பது தெளிவாகத் தெரிந்தது. அவள் மனக்கண் முன்பு இளைய ஜோன்ஸின் முகம்தான் நின்றது.

பாலா, கண்ணாடியில் தன் உடலைப் பார்த்தாள். அந்த உடல், அவள் தந்தையின் உதிரத்திலிருந்து உண்டானது தானே! அந்த உடலுக்குள்ளே இருக்கும் மனமும் ஆன்மாவும் வேறாக இருந்தாலும், அந்த உடலின் ஒவ்வொரு அணுவின் பகுதியும் தந்தையின் உதிரமும் தாயின் ரத்தமும் சேர்ந்து உண்டானதுதான். இந்த உடலைச் சிறு குழந்தையிலிருந்து வளர்த்தது தந்தையின் பணம்; அவர் அன்புப் பராமரிப்புத் தானே?

லால்குடி சீனிவாசனை ஏமாற்றி வந்த பணம், அவள் குழந்தையாயிருந்தபோது அவளுக்குப் பால் புட்டிகள் வாங்கியிருக்கிறது, டானிக்குகள் வாங்கியிருக்கிறது; பட்டுக் கௌன்கள் வாங்கியிருக்கிறது. அப்புறம் எவ்வளவு பேருடைய உதிரத்தால் அவள் உடலும் சுகமும் வளர்க்கப்பட்டதோ?

ஒரு வேளை அவள் தாயும் இம்மாதிரி ஒரு நிகழ்ச்சியைப் பார்த்து, அதன் விளைவாக அவளைப் போல் இது

விஷயமாக திரும்பத் திரும்பச் சர்ச்சை செய்து புத்தி குழம்பிப் போனாளோ? தந்தையின் பண்புக்கும், தாயின் பித்தம் பிடித்த நிலைக்கும் ஒரு பிணைப்பு இருக்க வேண்டும். ஏதோ விபரீதம் ரங்கூனில் நடந்திருக்க வேண்டும். இவ்வாறெல்லாம் அவள் மனம் சிந்திக்கத் தொடங்கியது.

அப்பாவிடம் இது பற்றிப் பேசி, அவரைத் திருத்துவோம் என்று பாலா நினைத்திருந்தாள். அது நடக்காது என்று அவளுக்கு இப்போது புரிந்து போய்விட்டது. அவர் தன் போக்கிலிருந்து திரும்பவே மாட்டார்.

விதியே அவர் விஷயத்தில் மாறித் தொடர்ச்சியாக இடிமேல் இடியாகத் தோல்விகள் அளித்தால்தான் அவருடைய சுபாவத்தில் மாறுதல் ஏற்பட வழியுண்டு. தோல்விகளால் கூட அவர் இரக்கமுள்ளவராக மாறுவாரா? கருணை என்பது அன்பில் பிறப்பது. அவருக்குத்தான் அன்பு இல்லையே. அன்பு பூராவும் இல்லையென்று சொல்ல முடியுமா? என் மீது அவர் அன்பு காட்டவில்லையா? ஒரு வேளை எனக்குத் தீங்கு நேர்ந்தால், அவர் கல் மனம் இளகுமா?'

பாலா இவ்வாறு சிந்திக்கும்போது லால்குடி சீனிவாசன் வீட்டில் குருமூர்த்தியின் மனைவிக்கு, இரவு வேளையில் வயிற்றில் வலி கண்டது குருமூர்த்திக்கு ஒன்றுமே விளங்கவில்லை. வலியின் காரணமாகக் குருமூர்த்தியின் மனைவி அன்னபூரணி பிதற்றினாள்.

குருமூர்த்தி உடனே, ''டாக்ஸி கொண்டு வரட்டுமா? ஆஸ்பத்திரிக்குப் போவோம்'' என்று சொன்னான்.

அவன் தாய் மரகதம், ''ஏண்டா கேட்டுக் கொண்டு நிற்கிறாய்! போய்க் கொண்டு வாயேன்! குழந்தை துடியாகத் துடிக்கிறாள்!'' என்று மகனைக் கடிந்து கொண்டாள்.

www.t.me/tamilbooksworld



அன்னபூரணி வலியின் தீவிரத்தை அடக்கியபடி குருமூர்த்தியை விறைத்துப் பார்த்தாள். அந்தப் பார்வையில் இருந்த கொடுமையைக் குருமூர்த்தியால் சகிக்க முடியவில்லை. அந்தப் பார்வை அவனை, 'நீ கையாலாகாதவன்' என்று குற்றம் சாட்டுவதுபோல் இருந்தது.

ஆஸ்பத்திரிக்கோ, நர்ஸிங்ஹோமுக்கோ செல்லக் கையில் பணமில்லை என்பது அவனுக்குத் தெரியும். அவன் மனைவி அன்னபூரணிக்கும் தெரியும். அதை அன்னபூரணியும் அவனும், தாய் மரகதத்திடம் மறைத்து வைத்திருந்தனர். பிள்ளைப் பேறுக்கு ஆஸ்பத்திரிக்கு மனைவியை அழைத்துச் செல்லக்கூட வசதியில்லாதவன், ஏன் பிள்ளையைப் பெற வேண்டும், என்று சொல்லாமல் சொல்வதுபோல் இருந்தது குருமூர்த்திக்கு, அன்னபூரணியின் பார்வை. கையைப் பிசைந்து கொண்டு நின்றான்.

''ஏன் கையைப் பிசைந்து கொண்டு நிற்கிறீங்க? ஆஸ்பத்திரிக்குப் போக நேரமில்லை. உடனே ஓடிப் போய் நர்ஸ் ரோஸைக் கூட்டிக் கொண்டுவாங்க'' என்றாள் அன்னபூரணி முனகலிடையே. அதன் அர்த்தம், சும்மா நிற்காமல், ஏதாவது செய்கிற மாதிரி நடியுங்கள் என்பதுதான்.

அன்னபூரணிக்கு முதலில் பிறந்த இரண்டு குழந்தைகள் ரகுவும் சுகுவும் சற்றுத் தொலைவில் நிம்மதியாக ஒருத்தரை ஒருத்தர் அணைத்தபடி தூங்கினார்கள். குருமூர்த்தி வெளியே ஓடினான்.

கணவன் மனைவி இருவரிடையே உலவிய உட்கருத்தைப் புரிந்து கொள்ளாமல் மரகதம்மாள் பழம் பெருமையைப் பற்றிப் பிதற்றியபடி அருகில் அமர்ந்தாள்.

''அந்தக் காலத்தில் உன் மாமனார் இருக்கிறப்போ, ஊர்லே யார் வீட்டிலே பிரசவம் நடந்தாலும் உடனே கஸ்தூரி கொடுத்தனுப்புவார். யார் வீட்டிலே கல்யாணமானாலும் வாழை மரம், வாழைத் தார் வெட்டி அனுப்புவார். அவர் மருமகப் பெண்ணாக வந்த உனக்கு

மருத்துவச்சிக்கு வழியில்லாமல் போச்சா! அய்யோ கடவுளே, தாயுமான ஸ்வாமி!'' என்றாள்.

அறைக்கதவு திறந்தது. மரகதம்மாளின் இரண்டாவது மகன் ரங்கன் உள்ளே நுழைந்தான். அவனோடு அவன் சகோதரி கமலாவும் உள்ளே நுழைந்தாள்.

ரங்கன், ''என்னம்மா, தாயுமான சுவாமியைக் கூப்பிடுகிறே? அவர்தான் நம்ம குடும்பத்தைப் பொறுத்த வரையிலும் செவிடு குருடாயிட்டாரே!'' என்றான்.

மரகதம்மாள் திருச்சி ஜில்லாவைச் சேர்ந்தவளாகையால் அடிக்கடி திருச்சி மலைகோட்டையில் வாசம் செய்யும் அவள் குடும்பத்தின் குலதெய்வமான தாயுமான சுவாமியை அழைப்பது வழக்கம். ரங்கன் பள்ளிப் படிப்பு முடிவதற்குள்ளேயே குடும்பச் சொத்துக்கள் போய், வீட்டில் திண்டாட்டம் ஏற்பட்டு விட்டதால் ரங்கனுக்குத் தாயுமான ஸ்வாமியின் மீது நம்பிக்கையே போய்விட்டது. அடிக்கடி அழைக்கப்பட்டும் எந்தவித உதவியும் செய்யாத ஒரு கடவுள் அவர் என்பது அவன் அபிப்பிராயம்.

''அம்மா, உன் தாயுமானவர் திருச்சி மலைமேலே இருக்கிறார். அவர் படியிறங்கி, திருச்சி ஜங்ஷன் வந்து ஒரு டிக்கெட் வாங்கிச் சென்னைக்கு வரணும். அவரிடம் டிக்கெட்டுக்குப் பணம் இருக்கிறதோ, இல்லையோ? அது வரையிலும் அண்ணி பிரசவம் தாங்குமா அம்மா?'' என்று நகைச்சுவையாகப் பேசினான்.

சந்தர்ப்பம் தெரியாமல் அவன் நகைச்சுவையாகப் பேசியது மரகதம்மாளுக்கு எரிச்சலைத் தந்தது.

''போடா ரங்கா. போய்ப் படுத்துத் தூங்கு. உனக்கும் கமலாவுக்கும் என்னடா வந்தது? குழந்தை அன்னபூரணி துடிக்கிறாள். இப்போதுதான் வேடிக்கை பேசுவதா?'' என்று கடிந்து கொண்டாள். அப்போதுதான் படுக்கையில் படுத்துப் பற்களைக் கடித்தபடி தனக்கு ஏற்பட்ட வலியை அடக்கிக்கொண்டு கிடந்த அன்னபூரணியின் உண்மை நிலை புரிந்தது ரங்கனுக்கு.

www.t.me/tamilbooksworld



''நான் வேண்டுமானால், டாக்டர் வீட்டுக்குப் போய் வரட்டுமா அம்மா?''

''உங்கண்ணா போயாயிற்று. நீ ஒன்றும் செய்ய வேண்டாம். அவன்தான் பிறந்திருக்கிறானே குடும்ப பாரத்தைத் தாங்க. அவன் அப்பா வசதியான நிலையிலே ஊர் பாரத்தைத் தாங்கினார். பிள்ளை இப்போது குடும்பத்தைத் தாங்குகிறான். அந்தப் படுபாவி சக்ரபாணி மட்டும் இந்த வீட்டிலே நுழையவில்லையென்றால், நாம் இப்படி வாழ வேண்டாமே!'' என்றாள்.

அப்போது சுதவு திறந்தது. குருமூர்த்தி கவலையோடு வந்தான்.

''மருத்துவச்சி ரோஸம்மாள் வேறு கேஸுக்குப் போய் விட்டாள். வந்தவுடனே அனுப்பச் சொல்விட்டு வந்திருக்கிறேன்'' என்றான் குருமூர்த்தி.

குருமூர்த்தி சொன்னது பூராவும் பொய் என்பது அன்னபூரணிக்குத் தெரியும். ஏனென்றால், ரோஸம்மாளிடம் முதல் நாள் போனபோதே, அவள் பழைய பாக்கிகளைத் தீர்க்காமல் இங்கு வரவேண்டாம் என்று திட்டவட்டமாய்ச் சொல்லியிருந்தாள். அன்னபூரணி படுக்கையில் படுத்தபடி கடவுளைத்தான் வேண்டிக் கொண்டிருந்தாளே அல்லாமல், மருத்துவச்சி ரோஸம்மாளைக் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை. குருமூர்த்தி வெளியே போய் ரோஸம்மாளைப் பார்த்து வருவது வெறும் நாடகம். மரகதம்மாள் மனத்திருப்திக்காக நடத்தப்பட்ட நாடகம்.

அன்னபூரணியின் வேண்டுதலுக்குக் கடவுளே இறங்கியது போல், அன்னபூரணியின் வலியும் வேதனையும் குறைய ஆரம்பித்தது. அன்னபூரணி படுக்கையில் திரும்பிப் படுத்தாள்.

''எனக்கு வலி குறைஞ்சு போச்சு. எனக்கு ஒன்றுமில்லை. இது மிரட்டல் வலி என்று நினைக்கிறேன்

அம்மா, நீங்க போய்ப் படுத்துக் கொள்ளுங்க" என்று பரிவுடன் மாமியாரை நோக்கிச் சொன்னாள்.

மரகதம்மாள் நிம்மதியுடன் பெருமூச்சு விட்டாள். "கமலா, நீதான் இங்கே அண்ணிக்குத் துணையாய்ப் படுத்துக் கொள்ளேன்" என்றாள்.

அன்னபூரணி, "வேண்டாம்மா, கமலா போய்த் தூங்கட்டும். எனக்கு ஒன்றுமில்லை" என்று கூறினாள்.

இனிமேல் நாம் தூங்கலாம் என்ற மன நிம்மதியோடு கமலா அறையை விட்டு வெளியேறினாள்.

அறையில் கணவனும் மனைவியும் மட்டுமே இருந்தனர். குருமூர்த்தி பரிதாபமாக மனைவியைப் பார்த்தான். அன்னபூரணிக்கு வலிகூடப் பெரியதாகத் தெரியவில்லை. அவள் கணவனின் திறமையற்ற பரிதாபத் தோற்றம்தான் அவளை வதைத்தது.

"இப்படி வாங்க" என்றாள். குருமூர்த்தி அவளை நெருங்கினான்.

"என்னைப் பற்றிக் கவலைப்படாதீங்க. எவ்வளவோ ஏழைகள் வயலில் வேலை செய்கிறபோதுகூடப் பெற்றுக் கொள்கிறதில்லையா? பலசரக்குக் கடைக்காரன் கடனை எப்படியாவது அடைச்சிடுங்க. என் சங்கிலியை விற்றாவது பணத்தைக் கொடுத்திடுங்க. பதினைந்து பவுன் சங்கிலி. குறைஞ்சது ஆயிரம் ரூபாயாவது கிடைக்கும்" என்றாள்.

"எங்கப்பா கடன் சுமை தாங்காதப்போகூட, அம்மா வீட்டை விற்கவில்லை. இந்த வீட்டிலே குடியிருந்த போதுகூட அம்மாவுக்கு வாடகைப் பணம் கொடுக்கத் தவறினதில்லை. நான் எப்படி அன்னம் உன் சங்கிலியை விற்கிறது?" என்றான்.

"பழம் பெருமை நமக்குச் சோறு போடாது. அதை என் சங்கிலி என்று சொல்லாதீங்க! நான் யார்? உங்கம்மா மாதிரி ஸ்திரீதனத்தோட இந்த வீட்டிலே நுழைந்த சீமாட்டியா? உங்கப்பா பண்ணையிலே வேலை செய்த

www.t.me/tamilbooksworld



வருடைய பொண்ணு. நான் அழகாயிருந்ததனாலேயும், எங்கப்பா மேலே இருந்த விசுவாசத்தினாலேயும் நான் உங்களைக் கட்டிக் கொள்ள முடிந்தது. உங்கப்பாவிட்ட சம்பாதித்த பணத்திலேதான் இந்தச் சங்கிலியை எங்கப்பா எனக்குப் போட்டார். நான் சாப்பிட்டது, வளர்ந்தது எல்லாமே உங்க சொத்துதானே? யோசிக்காதீங்க. உடனே பலசரக்குக் கடைக்காரன் கடனை அடைச்சுடுங்க" என்றாள்.

"அதெல்லாம் பார்த்துப்போம் அன்னம்" என்று மழுப்பினான் குருமூர்த்தி.

"போன தடவை வந்தப்பவே அந்தக் கடைக்காரன், சாமானை எடுத்து வெளியே வச்சிடுவேன்னு சொன்னான். எனக்கு என்னவோ பயமாயிருக்கிறது. எனக்கு ஏதாவது இந்த முறை பிரசவிக்கிறபோது தாறுமாறா ஆயிற்றென்றால், என் உடல் கிடக்கிறபோது அவன் வந்து சாமானை எடுத்து வைத்தால் என்ன செய்வீங்க? கேவலமில்லையா?"

குருமூர்த்தி குழந்தை போல் அழுதான். "அதை மட்டும் சொல்லாதே அன்னம். உனக்கு ஒன்றும் ஆகாது!" என்று அவள் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

குருமூர்த்தியின் களைத்துப் போன முகத்தைப் பார்த்த அன்னம் மனத்தில் அவன் ஒரு குழந்தை போலத் தோன்றினான்.

"நெருப்புன்னா வாய் வெந்திடுமா? எல்லாவற்றுக்கும் நாம் தயாராத் தானே இருக்கணும். உங்கப்பா நல்ல நாளிலே உங்களைச் செல்லமாக வளர்த்திட்டார். உங்களாலே வெறும் வார்த்தைகளைகூடப் பொறுக்க முடியவில்லை. போய்ப் படுத்துக் கொள்ளுங்கள்" என்றாள்.

குருமூர்த்தி சில விநாடிகள் அவளையே பார்த்தபடி இருந்தான். அப்புறம் எழுந்து போய்த் தூங்கும் ரகுவின் அருகில் படுத்துக் கொண்டான்.

தூரத்திலிருந்து அன்போடு அன்னம் அவளுடைய தூங்கும் குழந்தைகளையும் அவள் கணவனையும் பார்த்தாள். மூவரும் அவளுக்குக் குழந்தைகளாகவே தோற்றமளித்தனர்.

அவளுக்கு ஒரு சந்தேகம் வந்தது.

'நான் போய்விட்டால், பாவம் அவர், குழந்தைகளோடு என்ன செய்வார்? எப்படிச் சமாளிப்பார்?' என்று தோன்றியது. இந்தக் குடும்ப வறுமைச் சுழலிலிருந்து மரணம் மூலமாகத் தப்பிவிட நினைத்தது எவ்வளவு பெரிய கோழைத்தனம் என்று தோன்றியது. தன் கணவனுக்காகவாவது வாழ வேண்டும் என்று தோன்றியது.

அதே விநாடி அன்னத்தின் அடிவயிற்றிலிருந்து ஒருவித வலி சுருக்கென்று எழுந்தது. வயிற்றுக்குள் ஆயிரம் தேள்கள் சேர்ந்து கொட்டுவதுபோல் இருந்தது அன்னத்துக்கு.

அதே சமயத்தில் வெளியே திடீரென்று மழை பெய்யத் தொடங்கியது. நடு நடுவே இடியும் ஒலித்தது.

வலியைப் பொறுத்தபடி மெள்ள எழுந்து வாசல்புற ஹாலில் உள்ள மண் பானையை நோக்கி நடந்தாள். மண் பானையிலிருந்து குளிர்ந்த தண்ணீர் குடிப்போம் என்று புறப்பட்டாள். ஒவ்வொரு அடியும் எடுத்து வைக்க முடியாமல் தவித்தாள்.

வாசல் கதவை யாரோ தட்டுவதுபோல் தெரிந்தது. வாசல்புறக் கதவின் கண்ணாடியில் யாரோ நிற்பதன் நிழல் தெரிந்தது. அதே சமயத்தில் அன்னத்தின் கண்கள் இருண்டன!

## 27

அன்னபூரணி தள்ளாடியபடியே வாசல்புற ஹாலில் வைக்கப்பட்டிருந்த நாற்காலியில் சாய்ந்தாள். ஆனால்

www.t.me/tamilbooksworld



அவள் பார்வையில் வாசல்புறக் கதவு தெரிந்தது. பளீர் என்று வீசிய மின்னல் ஒளியில், கதவின் கண்ணாடியில் உருவத்தின் நிழல் தெரிந்தது. மறுபடியும் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

இந்த இருட்டு வேளையில், இடிமழையில் யார் வந்து கதவைத் தட்டுவார்கள் என்று அன்னபூரணிக்குப் புரியவில்லை. ஒருவேளை அவள் கணவர் நிஜமாகவே போய் மருத்துவச்சி ரோஸ் அம்மாளை அழைத்திருப்பாரோ? அப்படி அவர் தகவல் கூறியிருந்தாலும், ரோஸ் அம்மாள் உடனே வரமாட்டாளே! அவளுக்குப் பாக்கி தீராத வரையில் அவள் ஏன் வரப் போகிறாள்? அதுவும் இந்தப் பேய் மழையிலா அவள் வரப்போகிறாள்? ரோஸ் அம்மாளும் பெண்தானே? அவளுக்குத் திடீரென்று இரக்கம் ஏற்பட்டிருக்கலாம் அல்லவா! மனிதர் வந்து சொல்லியிருக்கிறாரே; என்னவோ ஏதோ பார்ப்போம் என்று வந்திருக்கலாம்.

அன்னபூரணி இவ்வாறு நினைத்துக்கொண்டிருக்கும் போது அவள் வயிற்றில் ஏற்பட்ட வலி, அவள் கண்களை மூட வைத்தது. சுமார் இரண்டு நிமிடங்களுக்கு அன்னபூரணிக்கு ஒன்றுமே புரியவில்லை.

மறுபடியும் கண் திறந்தபோது, கதவின் கண்ணாடியில் அந்த நிழல் தொடர்ந்து நின்று கொண்டிருந்தது. கதவை வெளிப்புறமிருந்து அந்த நிழலுருவம் தள்ளியபடி இருந்தது. அந்த வாசல் கதவை யாராவது போய் திறக்கக் கூடாதா என்று நினைத்தாள்.

ஹாலில் நாற்காலியில் கிடந்தபடி, "என்னங்க! என்னங்க உங்களைத்தானே?" என்று கணவன் படுத்திருக்கும் அறை நோக்கிக் குரல் கொடுத்தாள்.

கடன் தொல்லை, பண நெருக்கடி, அன்று பகல் எல்லாம் தெருவில் சுற்றிய களைப்பு எல்லாம் சேர்ந்து அவனை அசத்திவிட்டன! இடி இடிக்கும் சத்தமே அவனை எழுப்பவில்லையென்றால், முனகல் குரலில்

அன்னபூரணி கூப்பிடுவதைக் கேட்டா அவன் எழுந்திருக்க போகிறான்? அயர்ந்து தூங்கியபடி இருந்தான்.

ஹாலில் வலதுபுற அறையில்தான் ரங்கனும் கமலாவும் தூங்கிக் கொண்டிருந்தனர். அந்த அறைக் கதவு நன்றாக மூடப்பட்டிருந்ததால், அன்னத்தின் குரல் அங்கே கேட்க நியாயமில்லை.

அன்னபூரணிக்கு என்ன செய்வது என்றே விளங்க வில்லை. வாசல் கதவின்மேல் படிந்திருந்த நிழல் உருவம் நகராமல் அப்படியே ஒவ்வொரு மின்னலுக்கும் தோற்றம் கொடுத்தபடி இருந்தது. அன்னபூரணி வேறு வழியில்லா மல் நாமோ போய்க் கதவைத் திறப்போம் என்று ஒரு கையால் வயிற்றைப் பிடித்தபடி எழுந்து நடந்தாள்.

இரண்டடி வைப்பதற்குள் ஹாலில் போட்டிருந்த பழைய காலத்துச் சோபாக்கள் குறுக்கிட்டன. லால்குடி சீனிவாசனின் பழைய பெருமை, இன்று அவர்களை வாழ வொட்டாமல் தடுத்தது போல், அவர் வாங்கி வைத்து விட்டுப் போன சோபாக்கள் இப்போது அவளைக் கதவு நோக்கி நகரவிடாமல் குறுக்கிட்டன. மெள்ள அந்த நீண்ட சோபாக்களைத் தாண்டி நகர்ந்தாள். ஒவ்வோர் அடியும் எடுத்து வைக்கவும் அன்னபூரணிக்கு ஒரு மணி ஆனதுபோல் தோன்றியது!

கால அளவு மனத்தைப் பொறுத்த விஷயம். இன்ப நாட்கள் நிமிடத்தில் கடப்பதுபோல் தோன்றுவதற்கும் துன்பமும் வலியும் யுகமளவு நீடிப்பது போல் தோன்று வதற்கும் மனத்தின் இயற்கைதானே காரணம்?

அன்னபூரணி வாசல் கதவை நெருங்கும்போது அவளால் நிற்கவே முடியவில்லை. கதவின் மேல் படிந் திருந்த நிழல் உருவம் பயங்கரமாகத் தோன்றியது. அது அவள் விதிபோல் தோன்றியது!

கதவுத் தாழ்ப்பாளைத் திறந்து விட்டு, கீழே சாய்ந்தாள் அன்னபூரணி! கதவு திறந்ததும் காற்று,

www.t.me/tamilbooksworld



மழை நீரை அள்ளி உள்ளே அன்னபூரணியின் உடல் மீது இறைத்தது. அன்னபூரணி அப்படியே மயங்கிக் கிடந் தாள்.

உள்ளே நுழைந்த உருவம், கீழே துடித்தபடி விழுந்து கிடக்கும் அன்னபூரணியைப் பார்த்துத் திகைத்து நின்றது. அன்னபூரணியின் நிலையைப் புரிந்துகொண்டு உடனே பாய்ந்து அன்னபூரணியைத் தூக்கியது. அருகிலுள்ள சோபாவில் கிடத்தியது.

அந்த உருவம், அடுத்த அறைக்குள் சென்றது. மங்கலான வெளிச்சத்தில் குருமூர்த்தியும் குழந்தைகளும் நிம்மதியாகத் தூங்குவதைக் கவனித்தது. மறுபடியும் ஹாலுக்கு வந்தது. ஹாலிலிருந்து ஒரு கதவைத் திறந்து, மங்கிய வெளிச்சத்தில் அந்தப் பாதையில் சென்றது.

பத்தடி தூரத்தில் உள்ள சமையல் அறையில் உருவம் விளக்கைப் போட்டது. பரபரப்புடன் அடுப்பைப் பற்ற வைத்தது. ஒரு பாத்திரத்தில் வெந்நீர் கொதிக்க வைத்தது.

மறுபடியும் அந்த உருவம், குருமூர்த்தி தூங்கும் அறைக்கு வந்தது. அங்குள்ள பெட்டிகளைத் துழாவியது. ஒரு பெட்டியில் சலவை மடிப்புக் கலையாத துணிகள் இருந்தன. அந்தத் துணிகளில் ஒன்றை எடுத்துக்கிழித்தது. அங்கு ஷெல்பில் உள்ள டெட்டால் பாட்டில், அதன் கண்களில் பட்டது. அந்தப் பாட்டிலையும் துணிகளையும் எடுத்துக் கொண்டு சமையலறைக்குச் சென்றது. கொதிக்கும் வெந்நீரை எடுத்துக் கொண்டு மறுபடியும் ஹாலுக்கு வந்தது.

ஹாலில் சோபாவில் படுத்தபடி மூச்சு முட்ட, பற்கள் நறநறவென்று கடித்தவாறு கிடந்தாள் அன்னபூரணி.

ஹாலுக்கு வந்த உருவம் தட்டித் தடவி விளக்கைப் போட்டது. வெளிச்சத்தில் ஹாலின் மூலையில் வைக்கப் பட்டிருந்த மர ஸ்க்ரீன் தெரிந்தது. உருவம் அந்த ஸ்க்ரீனைத் தள்ளியபடி நகர்த்தி வந்து, அன்னத்தை

மறைத்தது. உடனே ஸ்க்ரீனுக்குள் சென்று வெந்நீரில் டெட்டால் துளிகளைத் தெளித்தது. துணியை டெட்டால் கலந்த தண்ணீரில் போட்டது. துடித்தபடி இருக்கும் அன்னத்துக்குப் பிரசவம் பார்க்க ஆரம்பித்தது.

சில விநாடிகளில், மர ஸ்க்ரீனுக்கு அப்புறமிருந்து பச்சைக் குழந்தை கத்தும் சப்தம் கேட்டது. அடுத்த அறையில் தூங்கிக் கொண்டிருந்த குருமூர்த்தி எழுந்து வந்தான். குழந்தையின் அழுகை தொடர்ந்து கேட்டது. ஹாலுக்குக் குருமூர்த்தி ஓடிவந்தான்.

ஹாலில் விளக்கு எரிவதும், ஒரு சோபாவைச் சுற்றி மர ஸ்க்ரீன் தடுப்பு இருப்பதையும் கவனித்தான். மர ஸ்க்ரீனுக்கு அப்புறம் என்ன நிகழ்கிறது என்று தெரியவில்லை. அங்குப் போய்ப் பார்க்கவும் அவனுக்குக் கூச்சமாக இருந்தது. ஆனால் அவனாக ஊகித்து ஒரு முடிவுக்கு வந்தான். அவன் தாய் மரகதம்தான் ஸ்க்ரீனுக்கு அப்புறம் இருந்து மருத்துவம் பார்க்கிறாள் என்று நினைத்துக் கொண்டு, "அம்மா அன்னத்துக்கு ஆபத்து ஒன்றும் இல்லையே?" என்று ஸ்க்ரீனுக்கு வெளியே நின்று கேட்டான்.

ஸ்க்ரீனுக்கு உட்புறம் நின்ற பெண் உருவத்துக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை.

"குழந்தையும் தாயும் சௌக்கியம்!" என்று சொல்லி வைத்தது.

ஸ்க்ரீனுக்கு உட்புறமிருந்து வந்த குரல், அவன் இதுவரை கேட்ட குரலாகத் தெரியவில்லை. ஒருவேளை அவன் தாய் மரகதம், அவள் தூங்கிக் கொண்டிருந்த போது, தானே போய் நர்ஸை அழைத்து வந்திருப்பாளோ என்று நினைத்தான். அப்படியென்றால் நர்ஸை அழைத்து வந்த தாய் எங்கே சென்றிருப்பாள் என்று விளங்கவில்லை. குருமூர்த்தி யோசித்தபடி நிற்கும்போது, ஹாலின் பக்கத்து அறைக் கதவு திறந்தது. அவன் தாய் மரகதம்,

www.t.me/tamilbooksworld



குறைத் தூக்கத்தில் விழித்த நிலையில் நின்று கொண்டிருந்தாள்.

"குரு என்னடா கலாட்டா? இதென்ன ஸ்க்ரீன் வச்சிருக்கு? ரோஸ் அம்மா வந்து விட்டாளா?" என்று சாவதானமாகக் கேட்டவள், குருமூர்த்தியின் பதிலுக்குக் காத்திராமலே நேராக ஸ்க்ரீனுக்குப் பின்புறம் சென்றாள்.

"நீ யாரும்மா? நர்ஸ் புதுசா இருக்கு. ரோஸ் அம்மா உன்னை அனுப்பினாங்களா?" என்று மழையில் நனைந்த உருவத்தைக் கேட்டாள்.

அந்த உருவம் புன்முறுவல் செய்தபடி "யாரு அனுப்பினா என்னங்க? சுகப் பிரசவம் ஆயிற்று. தாயும் குழந்தையும் நல்லா இருக்காங்க. நீங்களே கவனிச்சிக்குங்கம்மா" என்று கூறிவிட்டு ஸ்க்ரீனுக்கு வெளியே வந்தது.

மரகதம் தன் பேரக் குழந்தையைப் பார்த்த மகிழ்ச்சியில் புதிய பெண் உருவத்தின் விசாரணையை நிறுத்திக் கொண்டாள். மகிழ்ச்சியுடன் குழந்தையிடம் சென்றாள்.

"டேய், குரு! உனக்குப் பெண் பிறந்திருக்குடா!" என்றாள்.

வெளியே நின்ற குரு. சலிப்புடன், "ஆமாம், அது ஒன்றுதான் குறைச்சல்! பணம் கொட்டிக் கிடக்கு. நகையும் புடவையும் பண்ண!" என்று கூறினான்.

குருமூர்த்தியின் முகத்திலுள்ள வேதனையைக் கவனித்தாள் அந்தப் பெண். உடனே அவனை நெருங்கி, "நீங்க உடனே போய் ஹார்லிக்ஸும், இந்த மருந்துகளும் வாங்கிட்டு வாங்க" என்று சொல்லி அவனிடம் ஒரு சீட்டைக் கொடுத்தாள்.

குருமூர்த்தி ஓடிப் போய் மேஜையைத் துழாவினான். அதில் முப்பது ரூபாய் இருந்தது. அதை எடுத்துக்கொண்டு ஓடினான். அவனும் நள்ளிரவில் வீட்டில் நுழைந்த புதியவள் யார் என்று கேட்கவில்லை. அவளை ஒரு

மருத்துவச்சியாக நினைத்துக் கொண்டு அவள் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து ஓடினான்.

குருமூர்த்தி மருந்து, ஹார்லிக்ஸுடன் திரும்புவதற்குள், விடியற்காலை நாலு மணியாகி விட்டது. எல்லோரும் எழுந்து விட்டனர். எல்லோரும் மயங்கித் தூங்கும் அன்னத்தின் சோபாவைச் சூழ்ந்து கொண்டிருந்தனர்.

இரவில் வீட்டில் நுழைந்த புதியவள், குருமூர்த்தியிடமிருந்து மருந்தை வாங்கி, சிறு டம்ளரில் ஊற்றி, அன்னத்துக்குப் புகட்டினாள். மரகதம்மாளிடம், அன்னம் கண் விழித்ததும் அவளுக்கு ஹார்லிக்ஸ் கரைத்துக் கொடுக்கச் சொன்னாள்.

மரகதம் மனதார மருத்துவச்சியை வாழ்த்தினாள். ''நடு ராத்திரியிலே மழை என்று பாராமல் வந்து என் மருமகளைக் காப்பாத்தினியே, நீயும் உன் குடும்பமும் ஆயிரங்காலத்துக்கு நல்லா இருக்கணும்.''

மருத்துவச்சி மகிழ்ச்சியோடு வெளியே நகரப் போனாள். அப்போது அடுத்த அறையில் தூங்கிக் கொண்டிருந்த ரகுவும் அவன் தம்பியும் விழித்துக் கொண்டு அழுதபடி ஓடிவந்தனர்.

''அம்மா பசிக்குதம்மா, ஏதாவது கொடம்மா'' என்று ஹாலுக்கு ஓடி வந்தனர்.

குருமூர்த்தி, குழந்தைகள்மீது எரிந்து விழுந்தான். ''விடிஞ்ச உடனே பசி அலறல்தானா! தரித்திரப் பசங்களா, போங்கடா!''

மருத்துவம் பார்த்தவள், ''குழந்தைகளை ஏன் திட்டறீங்க?'' என்று சொல்லிவிட்டு, குழந்தைகளைப் பார்த்து, ''உங்களுக்குத் தங்கச்சி பாப்பா பொறந்திருக்கு. நீங்க வாங்க என்னோடே நான் காப்பி வச்சுத் தர்றேன்'' என்று குழந்தைகளைச் சமையல் அறைக்கு அழைத்துச் சென்றாள்.

www.t.me/tamilbooksworld



உண்மையிலேயே மருத்துவச்சிக்கு நல்ல பசி! ஏதாவது சாப்பிட வேண்டும்போல் இருந்தது.

சமையல் அறையில் நுழைந்த ரகு ''உப்புமா பண்ணத் தெரியுமா?'' என்று நர்ஸைக் கேட்டான்.

''ஓ! தெரியுமே!'' என்றாள் நர்ஸ். ரகு உடனே ரவை, எண்ணெய், உளுத்தம் பருப்பு, கடுகு எடுத்துக் கொடுத்தான்.

நர்ஸ், உப்புமாவும் காப்பியும் தயார் செய்தாள். குழந்தையோடு ஒரு குழந்தைபோல் நர்ஸ் தானும் உட்கார்ந்து, உப்புமா, காப்பி சாப்பிட ஆரம்பித்தாள்.

திடீரென்று அவளுக்கு ஒரு சந்தேகம் வந்தது. மரகதம்மாள், அவர்கள் வீட்டு உப்புமாவைச் சாப்பிடுவது குறித்துக் கோபம் கொண்டால் என்ன செய்வது என்ற சந்தேகம்.

அதே விநாடி இரு குழந்தைகளும் நர்ஸுடன் உட்கார்ந்து உப்புமா சாப்பிடும் காட்சியை மரகதம்மாள் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

## 28

யாருக்கும் அடங்காத துடுக்குத்தனமுள்ள பேரப் பிள்ளைகள் ரகுவும் சுகுவும் அமைதியாக உட்கார்ந்து உப்புமா சாப்பிடுவதும், அவர்களுக்குத் தாயினும் பரிவாக, முற்றிலும் பழக்கமில்லாத ஒரு மருத்துவப் பெண் பரிமாறுவதும் ஆச்சரியமாக இருந்தது மரகதம்மாளுக்கு.

தவணைப்படி பாக்கிப் பணம் கொடுக்கும் வழக்கமில்லை குருமூர்த்தி வீட்டில். எனவே அந்த வீட்டுக்கு வரும் டாக்டர்கள், நர்ஸுகள், கொஞ்சம் சலிப்புடனே வருவார்கள். ரிக்ஷா, டாக்ஸிக்கு முன் பணம் கொடுக்க வேண்டும். அவர்கள் பெட்டியைத் தோல் பையைக்

குருமூர்த்தி எடுத்துவர வேண்டும். ரோஸம்மாளிடம் பத்துக் கேள்விகள் கேட்டால், ஒரு கேள்விக்கு அக்கறையில்லாத பதில் வரும். சில சமயம், ''சும்மா தொண தொணன்னு பேசாதிங்க!'' என்று ரோஸம்மாள் எரிந்து விழுவதும் உண்டு.

நன்றாக வாழ்ந்து இன்று நொடித்துப் போனவளாகையால், மரகதம்மாளுக்கு இது அவமானமாக இருக்கும். ஆனால் இன்றைய நிலையை நினைத்துப் பொறுத்துப் போவாள். போன மாதம் சாப்பிட்டது இன்றைய பசிக்கு உதவாது! நேற்று வாழ்ந்த சிறப்பினால் இன்றைக்கு என்ன பலன் என்று புரிந்து கொண்டு வாழ்ந்தவள்.

அந்த ரோஸம்மாள் அனுப்பிய நர்ஸ் சத்தமில்லாமல் அன்னபூரணிக்குப் பிரசவம் பார்த்துவிட்டு ஒரு சமையல்காரிபோல் வீட்டுக் குழந்தைகளுக்குக் காப்பி உப்புமா தயார் செய்வாள் என்பது கொஞ்சமும் நம்பும் படியாக இல்லை. மருமகளுக்கு ஏற்பட்ட சுகப்பிரசவம், மரகதம்மாளின் மனத்தில் பால் வார்த்த மாதிரி இருந்தது. அவள் கண்களில் நன்றியுடன் நீர் நிறைந்தது.

''என்ன நர்ஸ், உன்னை ரோஸம்மா அனுப்பினாங்களா? உனக்குக் கோடிப் புண்ணியம் அம்மா! எங்களை யாரையும் எழுப்பாமல் என் மருமகளுக்குப் பிரசவம் பார்த்திருக்கிறாய். எப்படித்தான் உனக்கு நன்றி தெரிவிக்கிறது என்று தெரியவில்லை'' என்று மரகதம்மாள் சொல்லும்போது, நர்ஸ் சொட்டச் சொட்ட நனைந்த ஆடையோடு உட்கார்ந்திருப்பதைக் கவனித்தாள். நன்றாக நனைந்த ஆடைகளில் நர்ஸின் உருண்டு திரண்ட அவயங்கள் அவள் மிக்க இளம் வயதினள் என்பதைக் காட்டின.

மரகதம்மாள் நன்றி தெரிவிக்கும்போது அந்த நர்ஸ் என்ன சொல்வது என்று தெரியாமல் அசடு வழியச் சிரித்தாள். அவள் முத்துப் பற்களும், அவள் நெற்றியில்



விழுந்திருந்த கேசமும் மேகத்தின் நடுவே ஒளிவீசும் பூர்ண சந்திரனை நினைவுபடுத்துவதாய் இருந்தன.

மரகதம்மாள் ஆச்சரியத்துடன், ''சின்ன வயசுப் பெண்ணாக இருக்கிறாயே. பளபளவென்று பீங்கான் சிலை மாதிரி அழகாய் இருக்கிறாய். எப்படியம்மா நீ ரோஸம்மாகிட்டே வந்து நர்ஸ் வேலைக்குச் சேர்ந்தாய்?'' என்று கேட்டாள்.

அந்தப் பெண் இனிமேலும் பேசாமல் இருப்பது சரியில்லையென்று, ''நான் ரோஸம்மாள் அனுப்பி வரலேம்மா. சொல்லப் போனால் நான் ஒரு நர்ஸே இல்லை!'' என்றாள்.

இதைக் கேட்டதும் மரகதம்மாளுக்கு இன்னமும் ஆச்சரியமாக இருந்தது.

''அப்படியா! என் மருமகளுக்கு வலி எடுக்கிற நேரம் பார்த்து நள்ளிரவிலே எப்படியம்மா வந்து சேர்ந்தாய்? நர்ஸ் இல்லாமல் சுச்சிதமாய்ப் பிரசவம் பார்த்திருக்கிறாயே! நீ யாரம்மா?'' என்றாள்.

அந்தப் பெண் இதற்குப் பதில் சொல்லத் தயங்கினாள். பெரியம்மாள் முகத்தையும், குழந்தைகளின் முகத்தையும் ஒரு விநாடி பார்த்தாள்.

''நான் நேத்து ராத்திரி தெருவிலே போயிட்டிருந்தேன். திடீரென்று மழை வந்திடுச்சு. சேலையெல்லாம் நனைஞ்சு போச்சு. உங்க வீட்டுப் பக்கம் ஒதுங்கினேன். இடி மின்னலிலே தனியா வெளியே நிற்க பயமா இருந்துச்சு. கதவைத் தட்டினேன். ரொம்ப நேரம் தட்டியிருப்பேன். உங்கள் மருமகள் வந்து கதவைத் திறந்தாங்க. அப்படியே மயங்கி விழுந்துட்டாங்க. நான் குனிஞ்சு பார்த்தேன்; எனக்கு விஷயம் புரிஞ்சுது. எனக்கு ஓரளவு மருத்துவம் தெரியும். உடனே உங்கள் மருமகளைச் சோபாவிலே படுக்க வைத்து மருத்துவம் பார்த்தேன்'' என்று சொல்லி நிறுத்தினாள்.

''தாயுமானஸ்வாமி தான் உன்னை அனுப்பியிருக்

றார்! இன்னும் ஈரத்துணியோடு நிற்கிறாயே? பாவம்! வாம்மா என்னோடே!'' என்று சொல்லிப் பக்கத்து அறைக்கு அழைத்துச் சென்று, தன் மகள் கமலாவின் புடைவை, ஜாக்கெட்டை எடுத்துக் கொடுத்தாள் மரகதம்மாள்.

நர்ஸ் அதை நன்றியோடு வாங்கி அணிந்து கொண்டாள். மரகதம்மாள் நர்ஸிடம் காப்பியும் உப்புமாவும் சாப்பிடச் சொன்னாள். நர்ஸ் திருப்தி யுடன் உண்டாள். அவள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது, குருமூர்த்தி அறையினுள் நுழைந்தான்.

மரகதம்மாள், ''கேட்டாயாடா குருமூர்த்தி அதிசயத்தை! இந்தப் பெண், ரோஸம்மா அனுப்பி வந்தவள் இல்லேடா!'' என்றாள்.

குருமூர்த்தி ரோஸம்மாளிடமே போகவில்லை யாதலால் அவனுக்கு அது ஆச்சரியமாக இருக்கவில்லை.

மரகதம்மாள் தொடர்ந்து, ''மலைக்கோவில் பெருமானுக்குத் தாயுமானவர் என்று பேர் வந்ததற்கு ஒரு கதை சொல்வார்களே, அது மாதிரியே எங்கிருந்தோ மழையிலே ஒதுங்க வந்த பெண்ணான நீ எங்கள் வீட்டுத் தாயையும் சேயையும் காப்பாற்றி விட்டாயம்மா!'' என்றாள்.

அதே சமயத்தில் உள்ளே நுழைந்த ரங்கன், ''அம்மா, இது ஒரு அதிசயம்தான்! நீ கூப்பிட்டாய். தாயுமான ஸ்வாமி டிக்கெட் வாங்காமல், ரயில் ஏறாமல், ஏரோ ப்ளேனில் வந்திருப்பாரோ! இல்லை, திருச்சி மலைக் கோட்டையிலிருந்து நேரே இங்கே வந்து குதித்திருப் பாரோ!'' என்று கிண்டலாகக் கூறிவிட்டு ஒரு முறை நர்ஸைக் கவனித்தான்.

அப்போது நர்ஸாக நின்றவளின் கண்கள் அயர்வால் பாதி மூடியபடி இருந்தன. உடனே ரங்கன், ''அம்மா நீ என்ன என்னவோ பேசிக் கொண்டிருக்கிறாய். பாவம், அந்த நர்ஸுக்குத் தூக்கம் கண்ணைச் சுற்றுகிறது



ராத்திரி பூராவும் நமக்காகப் பாடுபட்டிருக்காங்க. அவர் களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டாயா? இல்லை, அவர்கள் பேர் என்ன என்றாவது கேட்டாயா?'' என்றான்.

''ஆமாமடா, எனக்கு இருந்த குழப்பத்திலே, சுயநலத்திலே, பேர்கூடக் கேட்கவில்லை.''

''கரெக்ட் அம்மா! நாம் அன்னதான பிரபு லால்குடி சீனிவாசனின் குடும்பமில்லையா? அதனாலேதான் அண்ணியின் உயிரைக் காப்பாற்றிய உத்தமியின் பேரைக் கூடக் கேட்கவில்லை. மறந்துவிட்டோம்!'' என்று ரங்கன் கசப்புடன் சொல்லிவிட்டு, பெண் பக்கம் திரும்பி னான். ''உன் பேர் என்னம்மா?'' என்றான்.

அந்தப் பெண் குழப்பத்துடன் காணப்பட்டாள். ''என் பேர் சுமதி!'' என்றாள்.

''எந்த அட்ரஸுக்குப் போகணும் என்று சொன்னால், நான் ஒரு டாக்ஸி கொண்டு வருகி றேனம்மா!'' என்றான் ரங்கன்.

அந்தப் பெண் தயங்கினாள். ''என்னுடைய அட்ரஸ்... என்னுடைய அட்ரஸ்...'' என்று இருமுறை இழுத்தாள். அவள் கண்களில் கண்ணீரும் குழப்பமும் வெளிப் பட்டன.

அதற்கு மேல் அவளைக் கேள்வி கேட்டால், அது அவளுக்கு வேதனை தரும் என்பதைப் புரிந்து கொண்டாள் மரகதம். ''நீ ரொம்பக் களைத்துப் போயிருக்கிறாய். கொஞ்சம் ஓய்வெடுத்துக்கொள்'' என்று கூறிவிட்டு, ஒரு பாயும் பழைய தலையணையும் கொண்டு வந்து மரகதம்மாள் தன் கையாலேயே விரித்தாள். சுற்றிலும் தட்டுமுட்டுச் சாமான்கள், பழைய பெட்டிகள், சிலந்தி வலை, புழுதி முதலிய அலங்காரங்கள் கொண்ட அறையின் மூலையைக் கவனித்தாள், புதிதாக நள்ளிரவில் மழையிலே நுழைந்தவள். அவளுக்கென்று பாய் விரிக்கப்

பட்ட இடத்துக்கு மேல் ஒரு பெரியவர் உருவப்படம் இருந்தது. அந்தப் பெரியவர் அகன்ற விழிகளோடும், சிரித்த முகத்தோடும் அருள் வடியும் பார்வையோடும் காட்சியளித்தார்.

அந்தப் பெண், படத்தைப் பார்ப்பதைக் கவனித்த மரகதம்மாள், ''அவர்தானம்மா என் புருஷன். சிறப்பாக வாழ்ந்து, சிறப்பு மறைவதற்குள்ளே காலமாகி விட்டார். அவர் இருக்கிற போது இந்த வீட்டிலே முன்பின் தெரியாத விருந்தாளிகள் நடமாடுவது வழக்கம். சாகிற அன்றைக்குக்கூட அவர் ஒருத்தரைச் சாப்பிடக் கூட்டிட்டு வந்திருந்தார். சாப்பிட்டப்புறம், விருந்தாளி யாரென்று கேட்டேன். 'எனக்குத் தெரியாது. பாவம், பசி என்றான். அழைச்சிட்டு வந்தேன். பசியோடு வருகிறவனுக்குத் தானே விருந்து வைக்கணும்?' என்றார். அவர் போனப்புறம் இந்த வீட்டுக் கதவு விருந்தாளிகளுக்குச் சாத்தின படிதான் இருந்தது சுமதி. இத்தனை வருஷத்திலே யாரென்று தெரியாத நிலையிலே உள்ளே வந்தவள் நீதானம்மா. அந்த உத்தமர் செய்த புண்ணியம்தான் உன் உருவத்திலே வந்து என் மருமகள் அன்னத்தைக் காப்பாற்றியிருக்கு! படுத்துக்கம்மா!'' என்று கூறிவிட்டு மரகதம்மாள் வெளியேறினாள்.

தனியே விடப்பட்ட பெண், அழுக்குப் படிந்த தலையணையையும் பாயையும் பார்த்தாள். மறுபடியும் படத்திலிருக்கும் லால்குடி சீனிவாசனைப் பார்த்தாள்.

பாயில் படுத்தாள். அவளே அறியாத நிலையில் ஆழ்ந்த நித்திரை அவளைப் பற்றிக் கொண்டது. கள்ளமில்லாத மனத்தோடு தூங்கினாள்.

அந்த வீட்டில் அதே சமயத்தில், புதிதாகப் பிறந்த சிசுவைத் தொட்டபடியே ஆனந்த நித்திரையில் ஆழ்ந்திருந்தாள் அன்னபூரணி.

ஆச்சரியத்திலும் பெரிய ஆச்சரியம்! நித்திராதேவி தொடாமல் தன் ஆலிங்கனத்திலிருந்து ஒதுக்கி வைத்

www.t.me/tamilbooksworld



திருந்த ஒரு தனி மனிதன் சக்ரபாணி அன்று கண் மூடியது தான்!

சக்ரபாணி, அவன் வீட்டில் ஸ்பிரிங் மாட்ரஸில் விரித்த 'பைல்கள்' திறந்தபடி இருக்க, கையில் திறந்து பிடித்திருந்த பேனா உருண்டு படுக்கையில் கிடக்க, தன்னையும் அறியாமல் கண்மூடிக் கிடந்தான்!

இரவு ஆபீஸ், சாதாரணமாகக் காலை ஐந்து மணி வரை பங்களாவில் நடக்கும். எப்போது சக்ரபாணியின் அறைமணி அழைக்கும் என்று அங்கே 'இரவு மானேஜர்கள்', 'இரவு குமாஸ்தாக்கள்', 'இரவு டைப்பிஸ்டுகள்' ஆகியோர் வெகு நேரம்வரை காத்திருந்தனர்.

அரைமணி நேரத்துக்கு மணி அடிக்கவே இல்லை. மாமூலாகப் பத்து நிமிடத்துக்கு ஒரு முறை மணி அடிக்கும். உடனே சிப்பந்திகள் பதறிக்கொண்டு உள்ளே ஓடுவது வழக்கம்.

இன்று மணி அடிக்காததற்குக் காரணம் அவர்களுக்குப் புரியவில்லை.

[இரண்டாம் பாகம் தொடர்கிறது.]

# பணம்-பெண்-பாசம்

## பாகம்—2

### 29

மணி வேலை செய்யவில்லையா? இல்லை, சக்ரபாணி தூங்கிவிட்டானா என்ற சர்ச்சை எழுந்தது.

''சக்ரபாணி தூங்க முடியாது. அதற்குக் கொடுத்து வைக்காதவன் அவன்! காலிங் பெல்லில்தான் மிஸ்டேக்!'' என்றார் ஒரு குமாஸ்தா.

மணி அடித்து, யாரும் வரவில்லை என்றால் அடுத்த நிமிடம் அவன் தனது குளுகுளு படுக்கை அறைக் கதவைத் திறந்து கொண்டு பெரிய இரைச்சலுடன், ''டெஃப்! இடியட்ஸ்! முட்டாள்கள்!'' என்று அலறியபடி வந்திருப்பான்.

''ஒருவேளை சக்ரபாணிக்கு இதயம் நின்று, முடிவு ஏற்பட்டிருக்குமோ?'' என்ற அச்சத்தைத் தெரிவித்தான் ஒரு டைப்பிஸ்ட்.

''அப்படி இருக்கவே இருக்காது! சக்ரபாணி இறக்க முடியாது. அவன் வரம் வாங்கி வந்திருக்கிறான்!'' என்றார் இரவு மானேஜர்.

''என்ன வரம் வாங்கி வந்திருக்கிறான்?'' என்று ஆவலுடன் கேட்டான் மற்றவன்.

''புராண கால ராட்சதர்களுக்கு உயிர் நிலை எங்கோ ஒரு கண்ணற்ற தீவிலே ஒரு சிரஞ்சீவிப் பட்சியின்

www.t.me/tamilbooksworld



உடலிலோ அல்லது ஒரு பூனை பாம்பு போன்ற சிரஞ்சீவிப் பிராணியிலோ இருக்கும். அந்தப் பிராணி அல்லது பட்சி மடிந்தால்தான் அரக்கனுக்குச் சாவு உண்டு என்று கதை சொல்வார்கள். அதுபோலச் சக்ரபாணிக்கும் ரகசிய உயிர்நிலை இருக்கிறது'' என்றார் இரவு மானேஜர், கள்ளக் கடத்தலில் சக்ரபாணி அதிக விலை கொடுத்து வாங்கிய வெளிநாட்டு பிஸ்கட் ஒன்றை டீயில் தோய்த்துச் சாப்பிட்டபடி.

சற்றுத்தூரத்தில் லெட்ஜரைப் புரட்டியபடி உட்கார்ந்திருந்த முதியவர் ஒருவர், ''சக்ரபாணியின் பிஸ்கட்,டீயை சாப்பிட்டுக்கிட்டு அவனையே புரளி பண்ணுகிறீங்களே? நன்றாயிருக்கிறதா?'' என்றார்.

உடனே ஓர் இளைஞன் குறுக்கிட்டான். ''உமக்கென்னய்யா தெரியும்? நம்ம மானேஜர் பொருத்தமில்லா வயசிலே இளைய சம்சாரத்தைக் கல்யாணம் செய்து நாலு மாசம்தான் ஆகுது. அவரை ராத்திரி இங்கே கொண்டு வந்து மடக்கினால் அவருக்குக் கோபம் வராதா? அதுதான் பேசறார்!''

இரவு மானேஜருக்கு முகம் வெட்கத்தால் சிவந்தது.

''அதெல்லாம் ஒண்ணுமில்லே! என் மனைவிக்கு இந்த ஏற்பாடுதான் பிடிச்சிருக்கு. காலையிலே பத்து மணிக்குச் சாப்பிட்டுட்டு, தூங்கிட்டு, ரெண்டு பேரும் இங்கிலீஷ் பிக்சர் மாட்டினிக்குப் போயிடறோம்!''

''ஓ! மாட்டினி ஷோவா!'' என்றான் இளைஞன், நையாண்டியாக. கொல்லென்ற சிரிப்பு எழுந்தது அறையில்.

பேச்சை மாற்றும் நோக்கத்தில் அருகிலிருந்த டைப்பிஸ்ட், ''ஆமாம், சக்ரபாணியின் ரகசிய உயிர் நிலைன்னு சொன்னீரே, அது எங்கேய்யா இருக்கிறது?'' என்று கேட்டார்.

''உமக்குத் தெரிந்தால் என்ன செய்யப் போகிறீர்? அதைத் தாக்கப் போகிறீரா?'' என்று பதிலுக்குக் கேட்டார் மானேஜர்.

''இல்லய்யா. தெரிந்து கொள்ளலாமே என்று கேட்டேன். பெரிய வரம் வாங்கின அரக்கர்கள்கூட, ஏன் பீஷ்மர் கூட ஒரு நாள் முடிவை அடைந்திருக்கிறார்கள். சக்ரபாணியும் அவர்களைப் போல ஒரு தனிப் பிறவிதான். அவன் முடிவையும் தெரிந்து கொள்வதிலே என்ன தப்பு?''

''இத்தனை வருடம் ஒழுங்காகத் தூங்காமல், சாப்பிடாமல், நாளுக்கு நாள் பலம் அதிகமாகிக் கொண்டே வருகிறார். அவருக்குப் பதிலாகக் கூலிக்குச் சாப்பிட வந்த சர்மாதான் 'டியோடினல் அல்ஸர்' வந்து, ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கிறான். சக்ரபாணியின் உயிர்நிலை இரண்டு இடத்திலே ஏதாவது ஒன்றிலே இருக்க வேண்டும்'' என்று கூறிவிட்டு மானேஜர் நிறுத்தினார்.

''எந்த இரண்டு இடம், சக்ரபாணியின் உயிர்நிலை?'' என்று ஆவலுடன், அந்த ஹாலில் கூடியிருந்தவர்கள் கேட்டனர்.

''ஒன்று பணம். வியாபாரத்திலே தோல்வி மேல் தோல்வி வந்து எல்லாப் பணமும் நஷ்டமாகித் தெருவுக்கு வந்துவிட்டார் என்றால் சக்ரபாணி மனம் உடைந்து, முடிவு வந்து விடும்!'' என்றார் மானேஜர்.

''சக்ரபாணிக்காவது, பணம் போகிறதாவது? 'நஷ்டம்' என்பதைத்தான் சக்ரபாணி முதலிலேயே நஷ்டமாக்கி விட்டானே! இந்தியா பூராவும் கம்யூனிஸம் வந்து விட்டால் கூடச் சக்ரபாணி மட்டும் 'ஸ்பெஷல் லைசென்ஸ்' வாங்கி, முதலாளியாகத்தான் இருப்பான். அதிலே சந்தேகமில்லை.''

''பணம்தான் சக்ரபாணியின் உயிர்நிலை என்றால், அவன் சிரஞ்சிவிதான்!'' என்றான் டைப்பிஸ்ட்.

''இன்னொரு உயிர்நிலை இருக்கிறது'' என்று தொடங்கினார் மானேஜர். ''அதாவது அவனுடைய மகள் பாலாவுக்கு ஏதாவது விபத்து ஏற்பட்டால்—இல்லை அவள் வாழ்க்கையிலே ஏதாவது கோளாறு ஏற்பட்டால்—சக்ரபாணியின் உறுதி, பலம் எல்லாமே தளர்ந்து போய் விடும்!'' என்றார்.



''கரெக்ட்! மகளிடம்தான் கடவுள் சுவிட்சை வைத்திருக்கிறார்! பாவம், அந்தப் பெண்ணுக்கு ஒரு கெடுதியும் நேரக்கூடாது. அவள் நல்ல பெண்!'' என்றார் வயதான ஒருவர்.

அந்த ஹாலில் இப்படிப் பேச்சு நடந்து கொண்டிருந்ததே அல்லாமல் யாரும் சக்ரபாணியின் அறைக் கதவைத் திறந்து அவனுக்கு என்ன ஆயிற்று என்று பார்க்கத் துணியவில்லை.

பொழுது நகர்ந்துகொண்டே இருந்தது. ஆனாலும் சக்ரபாணியின் படுக்கை அறையிலிருந்து சத்தடியே இல்லை. மானேஜருக்கு உண்மையிலேயே கலவரம் ஏற்பட்டது. மெள்ளப் போய்க் கதவைத் திறந்து பார்ப்போமா என்று நினைத்தார். ஒருவேளை சக்ரபாணி ஏதாவது வேலையில் ஈடுபட்டிருந்தால், கூப்பிடாமல் கதவைத் திறப்பது சரியல்லவே என்று நினைத்தார்.

மேலும் ஐந்து நிமிடங்கள் கழிந்தன. சத்தம் இல்லை. எல்லோரும் கூட்டமாகப் போய்க் கதவைத் திறப்போம் என்று தீர்மானித்து, அடிமேல் அடிவைத்து வரிசையாகச் சக்ரபாணியின் அறையை நெருங்கினர்.

கதவின் வெளிப்புறத்து 'க்ரோமியம் ப்ளேட்'டில் செய்த கைப்பிடியை வைத்த கண் வாங்காமல் நெருங்கினர்.

மின்னும் கதவின் கைப்பிடியே இன்று அவர்களுக்குப் பயம் தரும் சர்ப்பம்போல் தோன்றியது.

எல்லோரும் கூட்டமாக அறைக் கதவு வரை வந்து விட்டனர். எல்லோரும் சேர்ந்து கைப்பிடியைப் பிடிக்க முடியாது. யாராவது ஒருவர் தானே கைப்பிடியைப் பிடித்துக் கதவைத் திறக்க வேண்டும். யார், கைப்பிடி என்ற நாக சர்ப்பத்தைத் தொடுவது என்ற பிரசினை எழுந்தது.

அந்தஸ்திலே உயர்ந்தவர் மானேஜர். அவர்தான் கைப்பிடியைப் பற்றிக் கதவைத் திறக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

மானேஜர் ஒரு சாதாரண குமாஸ்தாவாகத்தான் இந்த நிமிடத்தில் இருக்கக் கூடாதா என்று நினைத்தார். ஆனால் அந்த யோசனையிலும் ஒரு நன்மை இருப்பதை மானேஜர் உணர்ந்தார். கதவின் கைப்பிடியைப் பிடித்து, படீரென்று நாம் கதவை வெளிப்புறமாகத் திறக்கும் போது, நம் முகத்தைக் கதவு மறைத்து விடும். சக்ரபாணியின் கொடூரமான பார்வையில் மற்றவர்கள்தான் தென்படுவார்கள். இதுவே அறையின் உட்புறம் திறக்கும் கதவாக இருந்தால், நாம்தான் கதவைத் திறந்து, முதலில் உள்ளே நுழைய வேண்டும். அந்த அசுரன் பார்வையில் முதலில் தென்பட நேரும். நல்ல வேளை, இந்தக் கதவு வெளிப்புறம் திறப்பதாக இருக்கிறது. வாழ்க வெளிப்புறம் திறக்கும் கதவுகள்!' தனக்குத்தானே நினைத்துக் கொண்டு, கம்பீரமாகச் சென்று, கதவின் கைப்பிடியைப் பிடித்துக் கதவைப் படீரென்று திறந்தார்.

மானேஜர் நினைத்தபடியே அவர் கதவின் மறைவில் தான் இருந்தார். மற்றவர்கள் அறையின் உட்புறம் பார்த்தபடி நின்றனர்.

''இடியட்ஸ்!'' என்ற சக்ரபாணியின் இரைச்சலை எதிர்பார்த்து நின்றார் மானேஜர். ஆனால் நிசப்தம் நிலவியது. மற்றவர்களும் பேச்சு மூச்சில்லாமல் நின்றனர், விறைத்துப் பார்த்தபடி.

'எந்தக் காட்சி அவர்களை அப்படித் திகைக்க வைத்து விட்டது?' என்ற அறிய மானேஜரும் கதவின் கைப்பிடியை விட்டு விட்டு மெள்ள வெளியே வந்தார். மற்றவர்கள் பார்த்ததுபோல் மானேஜரும், சக்ரபாணி பேச்சு மூச்சற்றுக் கிடப்பதைப் பார்த்தார்.

புலிபோல் உறுமியபடி உலவும் மனிதன், இப்படித் துணி போல் துவண்டு கிடப்பதை இன்றுதான் பார்த்தது

www.t.me/tamilbooksworld



அந்தக் கூட்டம். எல்லோர் மனத்திலும் தோன்றியது ஒரே ஒரு எண்ணம்தான்! 'சில நிமிடங்களுக்கு முன்புதான் அவன் முடிவைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். அதுவே நிகழ்ந்து விட்டதா!' என்று நினைத்தனர்.

உள்ளே போய் நெருங்கிப் பார்த்து உறுதி செய்து கொள்ளவும் பயம். 'ஸெயின்ட் ஹெலினா தீவில் சிறையிருந்த நெப்போலியன், அவன் விடுதியில் இறந்து விட்டான் என்ற செய்தி கிடைத்த பின்பும் அவன் உடலை நெருங்கிப் பார்க்க அச்சமடைந்தனர் பிரிட்டிஷ் படையினர்' என்று ஒரு கதையுண்டு அந்தப் பிரிட்டிஷ் சிப்பாய்களின் நிலையில் இருந்தனர் சக்ரபாணியின் சிப்பந்திகள்.

''கிட்டே போய்ப் பாரய்யா!'' என்று மானேஜரை உந்தினான் ஒருவன். மானேஜர் தட்டுத் தடுமாறி, சக்ரபாணி படுத்திருந்த இடத்தருகில் வந்து நின்றார்.

நிர்மலமான முகத்தோடு லேசாக மூச்சு விட்டபடி அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான் சக்ரபாணி. கைக் குழந்தைக்கு ஒரு தாய் எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டி, பால் புகட்டியவுடன் அது உலகத்தை மறந்து தூங்குவதுபோல் தூங்கிக் கொண்டிருந்தான்.

சக்ரபாணியா தூங்குகிறான்? மானேஜரால் நம்ப முடியவில்லை. கண்களைக் கசக்கிவிட்டுப் பார்த்தார். உண்மைதான். அது தூக்கம்தான். வேறு எதுவும் இல்லை.

மானேஜர் வெளியே வந்தார். அவரைத் தொடர்ந்து சிப்பந்திகள் கூட்டமும் வெளியே வந்தது. அவர்கள் தங்கும் ஹாலுக்கு வந்தனர்.

மானேஜர் இன்னொரு பிஸ்கெட்டை எடுத்துச் சாப்பிட்டார். ஒரு கோப்பை டீயை அதனுடன் சேர்த்து விழுங்கினார். எல்லோரும் அவர் முகத்தையே கேள்விக் குறியோடு பார்த்தபடி இருந்தனர்.

''நடக்காதது நடந்து விட்டது? மனிதன் பேயாகத் தூங்குகிறான். ரொம்ப நேரமாகத் தூங்கிக் கொண்டிருக்கிறான்'' என்றார்.

எல்லோரும் ஆச்சரியத்துடன், ''நம்ம முதலாளி தூங்கறாரு! நம்ம முதலாளி தூங்கறாரு! இனிமேல் நாளைக்கும் தூங்குவாரு. நமக்குக் கண் விழிக்கும் தொந்தரவு இல்லை! வீட்டிலே சாப்பிட்டுவிட்டு நிம்மதியாகத் தூங்கலாம்'' என்றனர்.

உடனே விழிப்புள்ள ஒருவன், ''ராத்திரி ஆபீஸ் நடக்கிறதனாலேதான் நமக்கு எக்ஸ்ட்ரா போனஸ், ஐம்பது, எழுபத்தைந்து, நூறுரூபாய் என்று ரகவாரியாகக் கிடைக்கிறது. சக்ரபாணி தூங்க ஆரம்பிச்சுட்டால், அதிலே மண் விழுந்தது!'' என்றான்.

''பணம் போகட்டும்! மனிதன் தூங்குவதைப் பார்த்தால் அவனைச் சுற்றின பாவம் திடீரென்று விலகின மாதிரியல்லவா தெரியுது!'' என்றார் வழுக்கைத் தலைச் சிப்பந்தி.

விடியும் வரையில் காத்திருந்தனர். சக்ரபாணி தூங்கியபடியே இருந்தான்.

காலைக் காப்பி எடுத்து வந்த சமையல்காரர், எஜமான் தூங்குவதைக் கண்டு மகிழ்ச்சியில் துள்ளினார்.

சக்ரபாணி தூங்குகிறார் என்ற மகிழ்ச்சியான செய்தியைப் பாலாவிடம் சொல்ல வேண்டுமென்று நினைத்துச் சமையல்காரர், பாலாவின் தோழி படுத்திருக்கும் அறைக்குள் சென்றார்.

அப்போதுதான் அவள் எழுந்து, பல் துலக்கிக் கொண்டு இருந்தாள். அவளுக்கு விஷயம் தெரிந்ததும், ''நிஜமாவா!'' அய்யா தூங்குகிறாரா?'' என்றாள்.

''மணி ஏழுக்கு மேலே ஆகுது. இன்னும் தூங்கிட்டுத்தான் இருக்கிறார்.''

தோழி மாலா, பாலாவின் அறைக்குள் ஓடினாள், ''பாலா! பாலா! அப்பா நேற்றைக்குத் தூங்கிவிட்டார்!'' என்று கூறியபடி.



ஆனால் அறையில் பாலா இல்லை. படுக்கை விரித்தது விரித்தபடி கிடந்தது. அதில் இரவு பூராவும் யாரும் படுக்கவில்லை என்பது தெரிந்தது.

## 30

தந்தை தூங்கினார் என்ற செய்தியைச் சொல்ல பாத்ரூம், மற்ற இடங்களில் பாலாவைத் தேடினாள் அவள் தோழி.

பாலா எங்கும் இல்லை, தோழிக்குக் குழப்பம் ஏற்பட்டது.

அதே விநாடி படுக்கை அறையில் சக்ரபாணி கண் விழித்தான். பல வருடங்களாக மூடாமல் விழித்திருந்த கண்கள், மூடியதனால் அவனுக்கு ஒரு தனி உற்சாகமும் மகிழ்ச்சியும் இருந்தன. அவனால் நம்பவே முடியவில்லை. விழித்தவுடன் இன்னோர் ஆச்சரியம். கபகபவென்று பசி எடுத்தது. பசி, தூக்கம் என்ற இரண்டு உணர்ச்சிகளையும் இழந்து எவ்வளவோ நாட்களாகின்றன. எப்படி இரண்டும் திரும்பின என்று அவனுக்கே புரியவில்லை.

தன் இருக்கையை விட்டு எழுந்து ஓடினான். தன் மனைவி லட்சுமி இருக்கும் அறை நோக்கி.

வெளியில் காவல் இருந்த நர்ஸுகள், சக்ரபாணியைத் தடுத்தனர். ''எஜமான், அம்மா நேற்று இரவு அதிசயமாய்க் கூச்சல் போடாமே தூங்கினாங்க. தூக்க மாத்திரை கொடுத்தால்கூடத் தூங்காதவங்க நேற்றைக்குத் தூங்கினாங்க. இன்னமும் தூங்கிட்டிருக்காங்க. ஜெர்மன் வைத்தியர் முறைகளில் பலன் இருக்குங்க'' என்றனர்.

'லட்சுமிக்கு வேண்டுமென்றால் ஜெர்மன் டாக்டரின் வைத்தியம் என்று சொல்லலாம். எனக்கு எந்த வைத்தியர் மருந்து கொடுத்தார்?' என்று சக்ரபாணி நினைத்தான்.

சிறுபிள்ளைபோல் துள்ளியபடி பாத்ரூமுக்குள் நுழைந்து, பல் துலக்கினான்.

"அய்யர்!" என்று கூப்பிட்டபடி டைனிங் ரூமில் நுழைந்தான்.

அய்யர் கொண்டுவந்து வைத்த மூன்று இட்லிகளைச் சட்னியுடன் கலந்து சுவைத்துச் சாப்பிட்டான். வயிற்றில் எரிச்சல் இல்லை. குமட்டல் இல்லை. லால்குடி சீனிவாசன் வீட்டில், ஏழையாக அவர் வீட்டு உணவுக்குக் காத்திருந்த காலத்தில் இருந்த பசி மறுபடியும் திரும்பி விட்டதை உணர்ந்தான்.

சமையல்கார அய்யர் கண்ணீரோடு சக்ரபாணியைப் பார்த்தார்.

"எஜமான், இத்தனை வருஷமாய் யார் யாருக்கோ பலகாரம் சமைப்பேன். ஆனால் நீங்கள் சாப்பிடுவதில்லை. இன்றைக்குத்தான் நீங்கள் சாப்பிடுகிறீங்க. எனக்கு இன்றைக்குத்தான் திருப்தி" என்றார்.

சக்ரபாணி சிரித்தான்.

"இன்னும் கொஞ்சம் சட்னி போட்டுச் சாப்பிடுங்க" என்று உபசரித்தார் சமையல்கார அய்யர்.

குனிந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த சக்ரபாணி சட்டென்று திரும்பி, அய்யரின் முகத்தைப் பார்த்தான்.

அந்தக் குரல் அய்யருடையதாக இல்லை. பல வருடங்களுக்கு முன் கேட்ட லால்குடி சீனிவாசனின் குரலாக இருந்தது. அந்தக் காலத்தில் அவர் அப்படித்தான் சக்ரபாணி சாப்பிடும்போது சொல்லுவார், 'இன்னும் கொஞ்சம் சட்னி போட்டுக்கோ' என்று.

இன்று ஏன் அவர் நினைவு வரவேண்டும் என்று சக்ரபாணி ஆச்சரியத்துடன் தன்னையே கேட்டுக் கொண்டான்.

அதே நேரத்தில் சீனிவாசனின் வீட்டில், இரவு



மருத்துவம் பார்க்க வந்த பெண், தன் முயற்சியால் பிறந்த குழந்தையை அழகு பார்த்துக் கொண்டிருந்தாள்.

குழந்தையின் தாய் அன்னபூரணி நன்றியோடு அந்தப் பெண்ணைப் பார்த்தாள்.

வெளிப்புறக் கதவு திறந்தது. சம்பந்தய்யா உள்ளே நுழைந்தார். அவரைப் பார்த்ததும் நர்ஸுக்கு ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது!

சம்பந்தய்யாவுக்கும் அதிர்ச்சி ஏற்பட்டது! அவர் நர்ஸையே வெறைத்துப் பார்த்தார்.

"வாங்க பெரியவரே!" என்று உபசரித்த மரகதம் மாள், சம்பந்தய்யாவின் பார்வை நர்ஸின் மீது நிற்பதைக் கவனித்தாள்.

"பாருங்க பெரியவரே, இல்லாதவர்களுக்குத் துணை தெய்வம்னு சொல்லுவாங்க. முன்பின் தெரியாத இந்தப் பெண் சுமதி, நேற்றைக்குக் கொட்டுகிற மழையிலே எங்கள் வீட்டு வாசலிலே ஒதுங்கவும், அன்னத்துக்கு இடுப்புவலி எடுக்கவும் சரியாய் இருந்திருக்கு. இந்தப் பெண் வந்து பிரசவம் பார்த்திருக்கிறாள். நாங்க எல்லாம் தூங்கிட்டிருந்தோம். இப்படி நடந்து கேள்விப்பட்டிருக்கீங்களா?" என்று கேட்டாள்.

சம்பந்தய்யா ஒன்றும் பேசாமல் நர்ஸையே பார்த்தபடி இருந்தார். நர்ஸும் அவரிடம், 'என்னைக் காட்டிக் கொடுக்காதீங்க' என்று கெஞ்சும் பார்வை பார்த்தாள்.

"இந்தப் பெண் பேர் என்ன சொன்னீங்க?" என்று சம்பந்தய்யா மறுபடியும் கேட்டார்.

"என் பேர் சுமதி" என்று அழுத்தம் திருத்தமாக அந்தப் பெண்ணே கூறினாள்.

கிழவர் புரிந்து கொண்டார். "பொருத்தமான பேர் தான்" என்று சொல்லிவிட்டு, குருமூர்த்தியிடம் நூறு ரூபாய் கொடுத்தார்.

"இவ்வளவுதான் என்னாலே புரட்ட முடிந்தது;

வச்சுக்கோப்பா'' என்று கூறிவிட்டு, இதர விஷயங்களைப் பேசி கொண்டிருந்துவிட்டு மெள்ள வெளியே சென்றார்.

நர்ஸும் ஜாடையாக வாசல்புறம் நழுவினாள். வெளியே வந்ததும் சம்பந்தய்யாவும் அந்தப் பெண்ணும் தனியே இருந்தனர்.

பெரியவர், ''என்ன பாலா, உனக்குப் பிரசவம் பார்க்கத் தெரியுமா? நேற்று நான் உன்னை அன்னபூரணி விடம் அறிமுகப்படுத்தறேன் என்று சொன்னப்போ, வேண்டாமென்று போனாய். அப்புறம் தனியாய்த் துணை யில்லாமல் இங்கே வந்திருக்கிறாயே, எனக்கு ஒன்றுமே புரியவில்லையே அம்மா!''

''என்னை அறிமுகப்படுத்தியிருந்தால், நான் இப்படி ஒரு சாதாரணப் பெண்ணாக இந்த வீட்டிலே நுழைந் திருக்க முடியுமா? நுழைந்த உடனே ஒரு தாய் பெற்றுப் பிழைக்க உதவியிருக்க முடியுமா? நீங்களே சொல்லுங்கள். மருத்துவக் கல்லூரியிலே வேடிக்கையாய் நர்ஸிங் படித்தது, நேற்று இரவு எனக்கு உதவியது. ஏதோ ஓர் உருப்படியான நல்ல காரியத்தைச் சாதித்த சந்தோஷத் திலே இருக்கிறேன் தாத்தா!'' என்றாள் பாலா.

கிழவர் கண் கலங்கியது. ''பாலா, உங்கப்பா இந்த வீட்டிலே நுழைஞ்சதன் காரணமாக இந்த வீட்டுப் பெரிய வரின் உயிர் போகக் காரணமாயிருந்தான். ஆனால் உன்னாலே இந்த வீட்டிலே இரண்டு உயிர் பிழைத்திருக் கிறது. இதைவிடச் சிறந்த பரிகாரம் இருக்க முடியுமா குழந்தை?'' என்று கேட்டுவிட்டுக் கண்களைத்துடைத்துக் கொண்டார்.

அப்போது குருமூர்த்தி கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான். ''பெரியவரே, காலையிலே வந்து விட்டுக் காப்பி சாப்பிடாமல் போறீங்களே!'' என்று அழைத்தான்.

பெரியவர் சிரித்தபடியே உள்ளே சென்றார். பாலா வும் பின் தொடர்ந்தாள்.

www.t.me/tamilbooksworld



குழந்தைகள் ரகுவும் சுகுவும் பாலாவை நோக்கி ஓடி வந்தனர். ரகு ஓடிவந்து பாலாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டான்.

''அக்கா, நேற்றைக்கு ராத்திரி நீங்கதான் குழந் தையை வீட்டுக்குக் கொண்டு வந்தீங்களாமே?'' என்று கேட்டான்.

சுகு, ''அக்கா கொண்டு வரலேடா. அக்காவோட குழந்தையும் வந்துடுச்சு'' என்றாள்.

இரண்டு குழந்தைகளும் பாலாவின் முகத்தைத் தொட்டுப் பேசுவதும் விளையாடுவதும் பாலாவுக்கு ஒரு புது அனுபவமாக இருந்தது. ஒரு தனி வீட்டில் சகோதர சகோதரிகள் இல்லாமல் வாழ்ந்தவள் பாலா. சிறியவன் ரகுவின் பிஞ்சுக் கரங்கள் பாலாவைத் தொடும்போது, அவளுக்குக் கிளுகிளுப்பு ஏற்பட்டது. சுகுவின் நெற்றியில் சுருட்டை மயிர் விழுந்து அதைப் பாதி மறைத்திருந்தது.

''அக்கா, உனக்குக் குழந்தை இருக்கா? அந்தக் குழந்தைக்குப் பேர் என்ன?'' என்று கேட்டாள் சுகு.

பாலா சிரித்தாள். ''எனக்கு மூன்று குழந்தை இருக்கு. ஒரு குழந்தைக்குப் பேரு ரகு. இன்னொரு குழந்தைக்குப் பேரு சுகு. மூன்றாவது குழந்தைக்குப் பேரு இன்னும் வைக்கலே!'' என்று சொன்னதும், குழந்தைகள் சிரித் தனர். அங்கு வந்த ரங்கனும் சிரித்தான்.

குழந்தைகளிடம் சரளமாகப் பாலா பேசிப் பழகு வதைப் பார்த்தபடி கிழவர் சம்பந்தய்யா காப்பி அருந்தி னார்.

மரகதம்மாள், பெரியவரிடம், ''நல்ல சமயத்திலே நீங்க வந்திருக்கீங்க. உங்க வாயாலே சொல்லுங்க. குழந்தைக்கு என்ன பேர் வைக்கலாம்?'' என்று கேட்டாள்.

''பிறந்த உடனே பேர் வைக்கிறதில்லீங்களே? எட்டுப் பத்து நாள் ஆனப்புறம்தானே வைக்கிறது வழக்கம்?'' என்றார் பெரியவர்.

"வழக்கம் கிடக்கட்டும்! சம்பிரதாயப்படி தொட்டில் கட்டி மேளம் கொட்டி எல்லாம் நடத்த வசதியா இருக்கு. இப்போது ஏதோ பெரியவங்க சமயத்திலே வந்திருக்கீங்க. சொல்லுங்கன்னு கேட்டா..." என்றாள் மரகதம்.

"தெய்வம் அனுப்பினாற் போலத் திடீர்னு வந்து உதவியிருக்கிறாளே அந்தப் பொண்ணு; அவளையே கேட்போம் ஏம்மா, குழந்தைக்கு என்ன பேர் வைக்கலாம்? சொல்லு பார்க்கலாம்!" என்று புன்முறுவலுடன் கேட்டார்.

பாலாவுக்கு ஒரே குழப்பமாகி விட்டது. ஒரு விநாடி யோசித்தாள்.

"பெண் குழந்தைக்குப் பொருத்தமான பேர், 'லட்சுமி' தான்!" என்று சொன்னாள். அவளுக்குத் தாயின் நினைவு தான் முதலில் வந்தது!

பெரியவருக்கு மகளின் நினைவு வந்தது.

மரகதம்மாள், "சுமதி, நீ புத்திசாலிப் பெண்! பொருத்தமான பேர் சொல்லிட்டே. இந்த வீட்டிலே லட்சுமி வாசம் பண்ணி ரொம்ப நாளாகிறது. இந்தக் குழந்தை லட்சுமி வந்த வேளையிலிருந்தாவது எல்லாம் சிறப்பாக இருக்கட்டும். பெரியவரே, நர்ஸ் உங்கள் பெண் பேரையே என் பேத்திக்கு வைத்து விட்டாள். உங்கள் லட்சுமிக்கு என்ன குறைவு, சித்த ஸ்வாதீனம் இல்லைங்கிறதைத் தவிர? பெரிய கோடீஸ்வரன் வீட்டிலேதான் ஜாம் ஜாம் என்று இருக்கிறாள்" என்றாள் மகிழ்ச்சியோடு.

அப்போது குருமூர்த்தி வந்து, மரகதம்மாளை மனைவி அழைப்பதாகச் சொல்லி, உட்புறம் அழைத்துச் சென்றான்.

பாலா மறுபடியும் கிழவருடன் தனிமையில் விடப்பட்டாள். "ஏம்மா அந்தப் பேரைத் தேர்ந்தெடுத்தாய்?" என்று அவர் கேட்டார்.



"இந்த லட்சுமிக்கு நான், என்னாலே ஆன நல்லது செய்தால், அதனாலேயாவது செல்வத்தில் வாழும் அம்மா லட்சுமிக்கு ஆண்டவன் இரங்க மாட்டானா என்கிற ஆசையிலேதான் தாத்தா! தெய்வத்தின் சட்டப்படி ஓர் இடத்திலே நல்லது செய்தால், இன்னோர் இடத்திலே நல்லது நிகழும் என்று நீங்கள் சொல்லியிருக்கீங்க. நேற்று ராத்திரி ஏனோ எனக்குத் தூக்கம் வரலே. வீட்டிலேயே இருக்கப் பிடிக்கலே. வெளியே வந்துட்டேன் தாத்தா. வெளியே வந்ததும் நேராக இந்த வீடு இருக்கிற தெருவிலே வந்தேன். இடி, மழை! இந்த வீட்டு வாசல்லே ஒதுங்கினேன். அன்னபூரணி வந்து கதவைத் திறந்தாங்க. அன்னபூரணி இருந்த நிலையைப் பார்த்ததும், எனக்கு ஒண்ணும் தோணலே, என்னாலே முடிஞ்சதைச் செய்தேன். சுகப்பிரசவம் ஆயிற்று. இது தெய்வ சங்கல்பம் என்று நினைக்கிறேன். என் கடமை என்ன என்று புரிஞ்சு போச்சு!"

கிழவர் ஆச்சரியத்துடன், "உன் கடமை என்ன என்று புரிஞ்சுக்கிட்டே?" என்றார்.

பாலா திருப்பிக் கேட்டாள்: "தாத்தா, இந்த வீட்டிலேயே ஒரு வேலைக்காரி போல உழைத்து இவங்களுக்கு நல்லது செய்தால், அப்பாவின் கடனை ஒருவிதமாய்ச் செலுத்தின மாதிரி ஆகாதா தாத்தா...?"

## 31

பாலாவின் உயர்ந்த உள்ளத்தை வெளிப்படுத்தும் வார்த்தைகளைக் கேட்ட சம்பந்தய்யாவுக்கு அழுகையே வந்து விட்டது. அவர் பாலாவுக்கு அவள் தந்தையின் இரக்கமற்ற போக்கை எடுத்துக்காட்டி, அவள் மனத்தில் தர்மசிந்தனை, இரக்கம், நன்றி போன்ற நல்லுணர்ச்சிகளை ஏற்படுத்தவே விரும்பினார். ஆனால் பாலா இவ்வளவு சீக்கிரம் செயலில் இறங்குவாள், இவ்வளவு உறுதியுடன் செயல்படுவாள் என்று எதிர்பார்க்கவில்லை.

''என்ன பாலா, நீ இந்த வீட்டிலே வேலை செய்வதா! அது முடியுமா?'' என்று ஆச்சரியத்துடன் வினவினார், ரகசியமாக.

''ஏன் தாத்தா முடியாது? அப்பாவின் மனம் இறுகி உறைந்து விட்டது. அவர் என் வார்த்தைகளைக் கேட்டு மாறமாட்டார் என்பதை அவர் நேற்று இளைய ஜோன்ஸ் விஷயத்தில் நடந்து கொண்டதைப் பார்த்துப் புரிந்து கொண்டேன். அவர் மீது பிரியம் வைத்த நான் செய்யக் கூடியது இனி ஒன்றே ஒன்றுதான். என் உடலால், என் உள்ளத்தால், இந்தக் குடும்பத்துக்கு உழைத்துப் பாடுபடுவதன் மூலம் கழுவாய் தேட வேண்டியதுதான்! சும்மா வீட்டில் அமர்ந்தபடி அப்பாவோடு கூச்சல் போடுவதனால் என்ன பலன்? என் சுகத்தை, என் ஆணவத்தை நான் துறந்து விட்டு, அப்பாவின் வாழ்வை ஆரம்பத்தில் வளப்படுத்திய இந்த வீட்டில் சந்தோஷம் ஏற்படுத்துவதை என் லட்சியமாகக் கொண்டு பாடுபடுகிறேன். அதன்பின் ஆண்டவனை வேண்டினால், அவன் மனம் இரங்கி அப்பாவின் மனத்தையும் மாற்றலாம்; அம்மாவுக்கு ஏற்பட்டிருக்கும் நோயும் குணமாகலாம், இல்லையா?'' என்றாள்.

கிழவர் என்ன சொல்வது என்று தெரியாதபடி சும்மா இருந்தார்.

இளம் உள்ளங்களில் விதைக்கும் கருத்துக்கள் எவ்வளவு வேகமாக வளர்ந்து பயனளிக்கின்றன என்பது சம்பந்தய்யாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒரு கோடீசுவரனின் செல்லப் பெண்ணை இம்மாதிரி சூழ்நிலையில் கொண்டு வந்து விட்டோமே என்ற அச்சமும் அவருக்கு எழுந்தது. இதன் விளைவுகள் எப்படியெல்லாம் போய் விடுமோ என்ற பயமும் தோன்றியது.

''நீ இந்த வீட்டில் வேலை செய்துதான் ஆகணுமா பாலா?'' என்று கேட்டார்.

''ஆமாம் தாத்தா! பணத்தால் மட்டும் தீர்க்கக்கூடிய கடன் அல்ல, எங்கப்பா இந்த வீட்டுக்குப் பட்டிருக்கும்

www.t.me/tamilbooksworld



கடன். உழைப்பால், உள்ளத்தால் தீர்க்க வேண்டியது இது! நான் இவர்களுக்குக் கொடுக்கலாம். அப்பாவின் பணத்தை அவருக்குத் தெரியாமல் கொடுத்தால், இந்த வீட்டுக்காரர்களைத் திருடர்களாக்கினவள் ஆவேன். அப்பாவுடன் போராடி ஏதாவது வாங்கிக் கொடுத்தாலும் அது பிச்சைக்காசு போல் ஆகும்! எனக்குச் சொந்தமானவை என் அன்பும் உழைப்பும்தான். அதைக் கொடுப்பதில் எந்தவிதத் தவறும் இல்லை. நேற்று இரவு வெகு நேரம் யோசித்து இந்த முடிவுக்கு வந்தேன். என் முடிவு சரியென்று ஆண்டவன் நினைக்கிறார் என்பதற்கு அடையாளமாக, நான் இவ்வீட்டில் நுழைந்ததும் அன்னபூரணி என் உதவியால் பிரசவித்தாள்'' என்று கூறி நிறுத்தினாள்.

கிழவர் சம்பந்தய்யா தழுதழுத்த குரலில், ''பாலா, நீ இவ்வளவு சிறப்பானவள் என்று நான் நினைக்கவில்லையம்மா! உன் யோசனை உயர்ந்ததுதான். ஆனால் ஒரு ஆபத்து இருக்கும்மா. நீ வீட்டில் இல்லையென்பது தெரிந்ததும் உங்க அப்பா சென்னைப் பட்டணத்தையே புரட்டிவிடுவான். அப்போது நீ இந்த வீட்டில் இருப்பது தெரிந்தால் இந்த வீட்டுக்காரர்களுக்குத் தீங்குதானே விளையும்! சக்ரபாணிக்கு உள்ள செல்வாக்கால் கெடுதல் செய்யவும் முடியும். நல்லது செய்யவும் முடியுமே!'' என்றார்.

''அதையும் யோசித்துவிட்டேன், தாத்தா. அப்பாவுக்கு என் மீதுள்ள பிரியம் எனக்குத் தெரியும். அவர் என்னைத் தேட மாட்டார்!''

கிழவர் திகைப்புடன் பார்த்தார். ''சக்ரபாணி உன் மீது உயிரையே வைத்திருக்கிறான் பாலா!'' என்றார்.

''அந்த ஒரு காரணத்தினால்தான் அவர் என்னைத் தேடமாட்டார். தனிமையிலே ரகசியமாக நினைத்துப் புழுங்கிப் புழுங்கி வேதனைப்படுவார். வெளிப்படையாகப் போலீஸின் உதவி கொண்டோ, ஆட்களின் உதவி

கொண்டோ என்னைத் தேடுவதற்குத் துணிய மாட்டார்!''

இவ்வாறு பாலா கூறிக் கொண்டிருக்கும்போதே குருமூர்த்தியும் மரகதம்மாளும் நுழைந்தனர். மரகதம்மாள் கையில் ஒரு தட்டு இருந்தது. அதில் வெற்றிலை பாக்கும் பழமும், இருபத்தைந்து ரூபாய் பணமும் இருந்தன.

மரகதம்மாள், தட்டைப் பெரியவரிடம் நீட்டி, ''நீங்களே உங்கள் கையாலே இதைச் சுமதிக்குக் கொடுங்கள். ஏதோ எங்களாலே ஆனதைக் கொடுக்கிறோம்'' என்றாள்.

கிழவர் தட்டை வாங்கிக் கொண்டு திருதிருவென்று விழித்தார்.

''எனக்குப் பணம் வேண்டாம். மன்னியுங்கள் அம்மா. எனக்கு உங்கள் அன்பு ஒன்று இருந்தால் போதும்'' என்றாள் பாலா.

''ஏனம்மா சுமதி, நீ சமயத்திலே செய்த உதவிக்கு ஒன்றுமே வேண்டாம் என்கிறாயே? நாங்கள் உன்னைச் சும்மா வீட்டுக்கு அனுப்புவது எங்களுக்கு நன்றாயிருக்குமா'' என்றான் குருமூர்த்தி.

பாலா தரையைப் பார்த்தபடி, ''எனக்கு இப்போ வீடு என்று ஒன்று இல்லை!'' என்றாள். அப்போது அவள் கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் தரையில் விழுந்தது.

சம்பந்தய்யாவுக்குத் துக்கம் பீரிட்டு வந்தது.

மரகதம், ''உனக்கு வீடு இல்லைன்னு சொன்னால் என்னம்மா அர்த்தம்? நீ எங்கேயோ ஒரு வீட்டிலேருந்து தானே வந்திருக்கணும்! திடீர்னு ஆகாசத்திலேருந்து குதித்திருக்க முடியாதே?'' என்றாள் மரகதம்.

''உனக்கு அப்பா அம்மா எங்கே இருக்கிறார்கள்

www.t.me/tamilbooksworld



என்று சொன்னால், நானே கொண்டு போய் விடுகிறேன்'' என்றான் குருமூர்த்தி.

அதற்குமேல் பாலாவால் பொறுக்க முடியவில்லை. ''தயவு செய்து என்னை ஒன்றும் கேட்காதீர்கள் நான் செய்த உதவிக்குப் பதிலாக ஏதாவது செய்யணும் என்றால் என்னை இந்த வீட்டிலே தங்க தயவு செய்து அனுமதியுங்கள். நான் வீட்டு வேலையெல்லாம் கவனித்துக்கொள்கிறேன். குழந்தைகள் ரகு, சுகு, லட்சுமியைக் கவனித்துக் கொள்கிறேன். நீங்கள் சம்பளம் ஒன்றும் தரவேண்டும். இரண்டு வேளை சாப்பாடும், தங்குவதற்கு இடமும் கொடுத்தால் போதும்.''

மரகதம்மாள் குழப்பத்தோடு பெரியவர் முகத்தைப் பார்த்தாள்.

''அவருக்குத் தெரியும். இந்த வீட்டிலே ஒரு காலத்திலே வேலைக்கு ஆள் போட்டுத்தான் வாழ்ந்தோம். இப்போது எங்கள் நிலையே சரியில்லை, சுமதி!'' என்றாள் மரகதம்மாள்.

சம்பந்தய்யா குறுக்கிட்டார்.

''சீனிவாசன் இருக்கிறப்போ எவ்வளவோ பேருக்கு நிழல் தந்த வீடு இது. இந்தப் பெண் ஒன்றும் பெரிசாய்க் கேட்கவில்லை. சாப்பாடும், தங்க இடமும்தான் கேட்கிறாள். குழந்தை லட்சுமியோடு இந்த வீட்டிலே சுமதியும் நுழைந்திருக்கிறாள். அவள் வந்த வேளை உங்கள் குடும்பமே சிறப்பாக ஆனாலும் ஆகலாம்! ஒரு மாசம் இருக்கட்டுமே அப்புறம் யோசிப்போம்.''

அடுத்த அறையில் மடேர் என்று ஏதோ கனமான பொருள் விழும் சத்தமும், அதைத் தொடர்ந்து சுகுவின் அலறல் சத்தமும் கேட்டன.

பாலா பதறியபடி பக்கத்து அறைக்குள் ஓடினாள்.

அதைப் பார்த்த கிழவர், ''பார்த்தீர்களாம்மா? பெற்றவள், உடன் பிறந்தவள் போல் பதறிப் போய் ஓடு

கிறாள், அந்தப் பெண்! வீட்டில் நேற்று நுழைந்தவள் போலவா இருக்கிறாள்? ஏதோ கடவுள்தான் அவளை அனுப்பியிருக்கிறார். நீங்கள் யோசிக்காமல் அவளை வீட்டிலே உங்கள் மகள் மாதிரி வைத்துக் கொள்ளுங்கள்'' என்றார்.

பாலா, சுகுவைத் தூக்கியபடி வந்தாள். அவள் நாற்காலியின் கைப்பிடியின் மீதிருந்து கீழே விழுந்திருக்கிறாள் அவள் நெற்றியில் ரத்தக் கறை படிந்து இருந்தது.

''அண்ணா என்னைத் தள்ளிவிட்டான். அவனை அடியுங்கள்!'' என்று அலறியபடி பாலாவின் இடுப்பிலிருந்தபடியே அவள் அழுதாள்.

குருமூர்த்தி ரகுவின் மீது ஆத்திரமடைந்து, அவனை அடிக்கக் கையை ஓங்கினான்.

பாலா உடனே குறுக்கிட்டாள். ''ரகுவை அடிக்காதீங்க! அப்புறம் அவன் சுகுவை அதிகமாய் வெறுப்பான். ஏதோ சிறு குழந்தைகளுக்குள்ளே தவறு நடந்து போச்சுன்னு விடுங்கள். அதை ரகுவே உணர்ந்துவிட்டான்'' என்றாள்.

ரகு அறையின் மூலையில் குற்ற உணர்ச்சியோடு நின்று கொண்டிருந்தான்.

பாலா சமையல் அறைக்குச் சென்று சர்க்கரை எடுத்து வந்து காயத்தின்மீது தடவிவிட்டுத் தலையைச் சுற்றிக் கட்டினாள்.

பெரியவர் பாலாவைக் கவனித்தபடி இருந்தார்.

மரகதம்மாளும் பாலாவைப் பார்த்து, ''சுமதி, நீ இந்த வீட்டிலே இருக்கிறதும் நல்லதுதான்!'' என்றாள்.

பாலா, லால்குடி சீனிவாசனின் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படுத்தி வைத்த அதே நேரத்தில் சக்ரபாணி, 'நானும் சாப்பிட்டேன். என் மனைவியும் தூங்கிவிட்டாள்' என்ற அக மகிழ்வில் இருந்தான்.

இந்த நல்ல செய்தியைப் பாலாவிடம் சொல்லி மகிழ

www.t.me/tamilbooksworld



வேண்டும் என்று துடித்தான் சக்ரபாணி. ஆனால் பாலா எங்கோ வெளியே சென்றிருக்கிறாள் என்றுதான் தோழி மாலா சொன்னாள். எங்கே போயிருப்பாள் என்று அவளுக்கும் தெரியவில்லை.

மூன்று நான்கு முறை சக்ரபாணி தன் அறைக்கும் பாலாவின் அறைக்கும் சென்று திரும்பிவிட்டான். ஆபீஸிலிருந்து சாரங்கன் செய்த போன் தகவல்களில்கூட இன்று அவனுக்கு அக்கறையில்லை. பாலா அதிகாலையில் எங்கே போனாள். ஏன் இன்னும் திரும்பவில்லை என்று ஆச்சரியத்துடன் உலாத்தினான்.

எழுந்து மறுபடியும் தன் மனைவி லட்சுமி காவல் வைக்கப்பட்டிருக்கும் அறைக்குச் சென்றான். அப்போது காலை மணி பத்து அடித்தது.

அறைக்குள் நுழைந்தவுடனே அவன் ஆச்சரியமடைந்தான். அவன் மனைவி தலை சீவிக் குங்குமப் பொட்டணிந்து நின்று கொண்டிருந்தாள். விரிந்த தலையும் மருண்ட பார்வையும் காணோம்!

''வாங்க! உட்காருங்க!'' என்று சொல்லி நாற்காலியை இழுத்துப் போட்டாள்.

பல வருடங்களுக்கு முன் அவன் ஏழையாக இருந்த போது அவனை விரும்பி மணந்த மனைவிதான் அங்கு இருந்தாள்.

லட்சுமி கேட்ட அடுத்த கேள்வி சக்ரபாணியை இன்னும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

''பலகாரம் சாப்பிட்டீங்களா? காப்பி சாப்பிட்டீங்களா?'' என்று லட்சுமி, மனைவியின் பொறுப்பை உணர்ந்தவள் பேசுவதுபோல் பேசினாள். உதடுகள் விரிந்து அந்த அழகான பற்களின் காந்தி சக்ரபாணியைப் பரவசப்படுத்தி அவனை இளைஞனாக்கின.

பெண் தொடர்பே இல்லாமல் பல வருடங்களாக யோகி போல் வாழ்ந்தவனுக்கு, இன்று லட்சுமியைப்

பார்த்ததும் பழைய இளமைப் பருவத்து ஞாபகங்கள் எழுந்தன. லட்சுமியையே ஆர்வமாய்ப் பார்த்தபடி இருந்தான்.

வாசல் காக்கும் கூர்க்கா ஒரு கடிதத்துடன் அறையினுள் நுழைந்ததைக்கூடச் சக்ரபாணி கவனிக்கவில்லை. அவன் கையிலிருந்த கடிதம் என்ன செய்தி கொண்டு வந்திருக்கிறது என்பதையும் நினைக்கவில்லை.

கால் நூற்றாண்டுக்கு முன் கல்யாணமாகாத லட்சுமி, கோவிலில் அர்ச்சனை செய்துவிட்டு, தேங்காய் பழத் தட்டுடன் நடந்துவரும் காட்சிதான் சக்ரபாணியின் மனத் திரையில் நின்றது!

## 32

சக்ரபாணியின் பார்வையில் கடந்த காலக் காட்சி தோன்றி, இறுகிப் போன அவன் இதயத்தில், மறுபடியும் ஒரு படபடப்பை உண்டு பண்ணியது.

பணத்தைச் சேர்க்க வேண்டும்; உயர்ந்த நிலைக்கு வர வேண்டும் என்று ஜபம் செய்து வந்த சக்ரபாணியின் மன அமைப்பில் காமம், காதல் என்ற இரண்டுக்கும் இடமில்லாதிருந்த காலம்! சேட்டின் மகள் வலிய வந்து அணையத் துடித்த போதும், அவளுடைய குங்கும மேனி, தள தளவென்று தளும்பிய உடல்கட்டு, இரண்டும் மனத்தில் மயக்கத்தை விளைவித்த போதும் சக்ரபாணி நிதானம் இழக்கவில்லை.

ஆனால், கோயில் உட்புறமிருந்து பிரசாதத் தட்டுடன் லட்சுமி வந்த போது சக்ரபாணியின் பாறை போல் உறைந்த மனோதிடம் தளர்ந்து தடம் புரண்டது. அநாதையான அவன் அதுவரை உணராத ஓர் நெகிழ்ச்சி அவனைப் பற்றிக் கொண்டது. அவனையுமறியாமல் அவன் லட்சுமியைப் பின்தொடர்ந்தான்.

லட்சுமி, சக்ரபாணியைப் பார்த்தும் பாராதவள்

www.t.me/tamilbooksworld



போல் நடந்தாள். சந்நிதித் தெரு முடிந்ததும், ஒரு சிறு தோட்டம். அதனுள் நுழைந்தாள். நுழையும் போதே விழிக்கோணத்தால் சக்ரபாணியைப் பார்த்தாள்.

சக்ரபாணியும் நுழைந்தான். லட்சுமி, மலர்களைப் பறிப்பதுபோல் நின்றாள். சக்ரபாணி, அவளை நெருங்கினான்.

லட்சுமியின் முகம் சிவந்தது, நாணத்தால் கோபத்தால், புரியாத ஓர் உணர்ச்சியால்! சூடான வார்த்தைகள் வெளி வந்தன.

"இப்படியா தினமும் ஒரு பெண்ணைப் பின் தொடர்வது? நீங்கள் செய்வது சுத்த அயோக்கியத் தனம்!" என்றாள் லட்சுமி.

"இல்லை, நான் செய்வது சுத்த அசட்டுத்தனம்!" என்று பதில் அளித்தான் சக்ரபாணி.

லட்சுமி புரியாமல் விழித்தாள்.

"இம் மாதிரி அசட்டுத்தனங்களுக்குப் பழகியவன் அல்ல நான்! பெண்கள் என்னை விரும்பி நோக்கியிருக்கிறார்கள். நான் அவர்களை விரும்பிப் பின் தொடர்ந்தவன் இல்லை, லட்சுமி. எஜமானை நாய் தொடர்வதைப் போல் நான் உன்னை ஏன் தொடருகிறேன், என்று எனக்கே புரியவில்லை!"

"இனிமேல் தயவு செய்து என்னைப் பின்தொடர வேண்டாம்! எனக்கு என்னவோ பேபல் இருக்கிறது" என்றாள் லட்சுமி.

"தண்ணீர் கிட்டாத வரையில் தாகம் தணியாது!" என்றான் உறுதியுடன்.

"இந்தக் கன்னி கிட்டாதவரையில் உங்கள் மோகம் தணியாது என்று சொல்கிறீர்களா?" என்றாள் ஆத்திரத்துடன் லட்சுமி.

"ஆமாம், அதையேதான் தினமும் சொல்ல விரும்பினேன். ஆனால் இன்றுதான் சொல்ல முடிந்தது. லட்சுமி, இன்று இரவு உங்கள் வீட்டுக் கொல்லைக்

கதவைத் திறந்து வை. நான் வருகிறேன்'' கூறிவிட்டுப் புறப்பட்டான்.

'என்ன ஆணவம்! இவன் இரவு வருவானாம்! இவனுக்கு நான் கதவு திறந்து வைக்க வேண்டுமாம்! என்னை எவ்வளவு கேவலமாக எடை போட்டுவிட்டான்!' அவள் ஆத்திரப்பட்டாள்.

தரையில் குனிந்து ஒரு சிறு கல்லை எடுத்துச் சக்ரபாணியின் மீது எறிந்தாள்.

அது அவன் முதுகில் விழுந்தது. சக்ரபாணி திரும்பினான். தன்னைச் சிறு கல்லால் அடித்தது லட்சுமி என்று புரிந்து கொண்டான். சிரித்தான்.

''கரெக்டா பன்னிரண்டு மணிக்கு வந்துவிடுகிறேன்!'' மறுமுறையும் சொல்லிவிட்டு நகர்ந்தான்.

வியாபாரத்தில் மற்றவன் அபிப்பிராயத்தைப் பற்றி அக்கறையில்லாமல் தன் திட்டத்தைப் பின்தொடர்வது போல் காதலிலும் நடந்து கொண்டான்.

சக்ரபாணியின் மீது பொங்கும் கோபத்தோடு வீடு திரும்பினாள் லட்சுமி.

மாலை மணி ஏழு ஆனதும் லட்சுமிக்குக் குழப்பம் ஏற்பட்டது.

அன்று இரவு படுத்ததும் தூக்கம் வரவில்லை. சக்ரபாணியின் உறுதியான உத்தரவை நினைத்து, அதில் தொனித்த கேவலமான அர்த்தத்தையும் நினைத்து மனம் புழுங்கி உடல் வியர்த்தாள். படுக்கையில் அப்படியும் இப்படியுமாகப் புரண்டாள்.

இரவு பன்னிரண்டு மணி அடித்தது. வீட்டில் நிசப்தம் நிலவியது. ஆனால், லட்சுமியின் மனத்தில் பேரிரைச்சல்!

''என்னை அவன் எவ்வளவு கேவலமாக நினைத்திருக்க வேண்டும்? நான் என்ன விலைமகளா? அவன் வந்து கொல்லைக் கதவைத் தட்டுவானாம்; நான் திறக்க வேண்டுமாம்!'' என்று திரும்பத் திரும்பத் தனக்குத்தானே கூறிக் கொண்டாள்.

www.t.me/tamilbooksworld



புறக்கடைக் கதவில் ''டொக்... டொக்...'' என்று கதவு தட்டும் சத்தம் கேட்டது.

ஆத்திரத்துடன் லட்சுமி படுக்கையை விட்டு எழுந்தாள். கொல்லைப்புறம் நோக்கி நடந்தாள்.

கொல்லைக் கதவருகில் தொங்கிய இரும்புக் கரண்டியைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

கதவைத் திறந்தாள். சக்ரபாணி நின்று கொண்டிருந்தான் பனியனுடன். நீண்டு உயர்ந்த தோள்கள் மங்கிய வெளிச்சத்தில் தெரிந்தன. அவன் கையில் சட்டையைச் சுற்றி வைத்துக்கொண்டிருந்தான். அசடு வழியச் சிரித்தான்.

லட்சுமி, சக்ரபாணியைத் தலை முதல் கால் வரை பார்வையிட்டாள். அவள் கையிலிருந்த இரும்புக் கரண்டி நழுவிச் சத்தத்துடன் தரையில் விழுந்தது.

''உஷ்... சத்தம் போடாதே! யாராவது எழுந்து கொள்ளப் போகிறார்கள்'' என்றான் சக்ரபாணி.

லட்சுமியின் கால்கள் அவளும் அறியாதவாறு நகர்ந்தன, சக்ரபாணியை நோக்கி. அடுத்த விநாடி லட்சுமி சக்ரபாணியின் மார்பில் தனது தலையைப் புதைத்துக் கொண்டு அழுதாள்.

''ஏன் அழுகிறாய் லட்சுமி?'' என்றான் சக்ரபாணி.

''நீங்க என்னைச் சரியாக எடை போட்டு விட்டீர்கள். நீங்கள் எதிர்பார்த்தபடி நான் மானவெட்கம் இல்லாதவள் தான். இல்லையென்றால் வந்து கதவைத் திறந்திருப்பேனா?'' முனகியபடி சொன்னாள்.

''இதில் மான வெட்கத்தைப் பற்றிப் பேச என்ன இருக்கிறது? எனக்கு நீ எப்படித் தேவையோ, அப்படி நான் உனக்குத் தேவை! இல்லையென்றால் பெண்கள் விஷயத்திலே கொஞ்சம்கூடத் தளராதவன் நான். இப்படி அசட்டுத்தனமாக இந்த ராத்திரியில் இங்கே வந்து நிற்பேனா?'' என்றான்.

அவன் கைகள் அவளை இறுக அணைத்தன.

அன்றிரவு அவள் சக்ரபாணியை வெறுப்பின் எல்லைக்குச் சென்று வெறுத்தாள். அடுத்த விநாடியே விருப்பத்தின் எல்லைக்குச் சென்று விரும்பினாள்.

வெறுப்பின் எல்லையேதான் விருப்பத்தின் எல்லையா? அது வாழ்வு பூராவும் லட்சுமிக்குப் புரியாத ஒரு விஷயமாகி விட்டது.

அந்த இரவு இன்பத்தின் எதிரொலி, சக்ரபாணியின் மனத்தில் இன்று மறுபடியும் தோன்றி அவனை வதைத்தது.

சில நிமிடங்கள் லட்சுமியைப் பார்த்தபடியே இருந்த சக்ரபாணி சுய உணர்வுக்கு வந்தான்.

கூர்க்கா கொண்டு வந்த கடிதத்தைப் பார்த்தான். அதைக் கையில் எடுத்தான். அதை உடனே பிரித்துப் படிக்கத் தோன்றவில்லை. கையில் கடிதத்துடன் மறுபடியும் லட்சுமியைப் பார்த்துவிட்டு மெல்ல அறையை விட்டு வெளியே வந்தான்.

கடிதத்தின் வெளிப்புறம் பார்த்தான். "அன்புள்ள அப்பாவுக்கு..." என்ற இரண்டு வார்த்தைகள்தான் எழுதப்பட்டிருந்தன. சுருக்கென்றது. தொலைவில் துப்பாக்கியுடன் வந்து கொண்டிருக்கும் வேடனது வாடையைப் புலிகள் உணருவதுபோல் சக்ரபாணியின் மனம், கசப்பான செய்தியை எதிர்பார்த்தது.

வேகமாகத் தன் அறைக்குச் சென்றான். சிறு அச்சம் அவனைப் பற்றிக் கொண்டது.

அவன் வீட்டில் வாழும் அவன் செல்வ மகள் அவனுக்குக் கடிதம் எழுதுவானேன்? கையிலுள்ள உறைக்குள் பயங்கரமான ஏதோ ஒன்று அவனுக்குக் காத்திருக்கிறது என்று 'ஊகம்' தோன்றியது.

ஊகங்களால் உருவானவன் சக்ரபாணி. அவன் ஊகங்கள், அனுமானங்கள் இதுவரை தவறியதில்லை.

www.t.me/tamilbooksworld



கடிதத்தைப் பிரிக்கத் தயங்கினான். இன்று காலையில் ஒன்றன்பின் ஒன்றாக அவனுக்குப் பெருமகிழ்ச்சியூட்டும் நிகழ்ச்சிகளே நடந்திருக்கின்றன. தூங்காதவன், தூங்கியிருக்கிறான்! பசிக்காத வயிற்றில் பசி தோன்றியது! இரக்கம், அன்பு இரண்டும் வறண்டு போன மனத்தில், மனைவியைப் பார்த்ததும் லேசாக அவை மறுபடியும் தலையெடுத்து இருக்கின்றன. ஒருவேளை இந்தக் கடிதத்தில் உள்ள செய்தியும் நல்ல செய்தியாக இருக்குமோ?

மெள்ளக் கடிதத்தைப் பிரித்தான்.

"அன்புள்ள அப்பாவுக்கு,

அப்பா! எனக்கு வீடு புளித்துவிட்டது. இனி ஒரு நிமிஷமும் செல்வம் நிறைந்த உங்கள் வீட்டில் தங்கினால், மூச்சுத் திணறிவிடும்போல் இருந்தது. நான் இனிமேல் திரும்பமாட்டேன். தயவு செய்து என்னைத் தேடாதீர்கள். உங்கள் செல்வாக்கு, பணம், அந்தஸ்து இவற்றைக் கொண்டு என்னைத் தேடுவதாகத் தெரிந்தால், என் பிணம்தான் உங்களுக்குக் கிடைக்கும். என்மீது உயிரையே வைத்திருக்கும் உங்களது நிரந்தர நன்மைக்காகத்தான் நான் வெளியே செல்கிறேன்.

பாலா."

திரும்பத் திரும்பப் படித்தான். ஒன்றும் புரியவில்லை. ஆயிரம் தேள் சேர்ந்து கொட்டியதுபோல் இருந்தது.

'என்மீது உயிரையே வைத்திருக்கும் உங்கள் நிரந்தர நன்மைக்காகத்தான் நான் வெளியே செல்கிறேன்.' இந்த வார்த்தைகள்தான் சக்ரபாணியைக் குழப்பின.

குழப்பம் தெளிந்ததும், அவன் நிலை அவனுக்குப் புரிந்தது. போலீஸைக் கொண்டு தேடவும் முடியாது. வேறு ரகசியமாகத் தேடவும் முடியாது. பிணம்தான் கிடைக்கும் என்று எழுதியிருக்கிறாளே, பைத்தியக்காரி! சொன்னபடி செய்து விட்டால்...?'

ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. பைத்தியமே பிடித்து விடும்போல் இருந்தது.

கையோடு கையை மோதினான். ஆத்திரம் தணிய வில்லை. மேஜையை எட்டி உதைத்தான். பொருள்கள் சிதறின. பித்தம் பிடித்தவன் போல் எல்லாவற்றையும் தூக்கி எறிந்தான்.

வெளியே ஹாலுக்கு வந்தான். தியேட்டர்கள் டிபார்ட்மென்ட் மானேஜர் எதிரே வந்தார். அவர் ஏதோ பேச வாயெடுத்தார்.

சக்ரபாணி ஆத்திரத்துடன், "ஷட் அப்! யூ ஆர் டிஸ்மிஸ்ட்!" என்று கத்திவிட்டு நடந்தான்

அவர் புரியாமல் விழித்தார்.

வீட்டின் வெளிப்புறம் வந்ததும், சக்ரபாணியின் டிரைவர் காரை எடுத்து வந்தான்.

சக்ரபாணி, "கெட் அவுட்!" என்று கூறிவிட்டுக் காரில் ஏறாமல் நடக்க ஆரம்பித்தான்.

"எஜமான்! நடந்தா போறீங்க?" என்றான் டிரைவர்.

பதில் பேசாமல் வெறி பிடித்தவன்போல் நடந்தான்.

வேலைக்காரர்கள், நடந்து செல்லும் எஜமானை ஆச்சரியத்துடன் பார்த்தனர்.

வெளிக் கேட்டில் நின்று கொண்டிருந்த கூர்க்கா, "இப்படித்தான் சின்னம்மா ஒரு மாசமா நடந்து வெளியே போய்க்கிட்டிருந்தாங்க... இன்னிக்கு அய்யா நடக்க ஆரம்பிச்சிட்டாரு!" என்றான்.

வேகமாக, எங்கே போகிறோம் என்று தெரியாமல் நடந்தான் சக்ரபாணி.

## 33

தன் எண்ணங்களை விட்டு ஒளிந்து கொள்ளச் செல்பவன்போல் சக்ரபாணி சாலையில் நடந்து சென்றான். ஆனால் பாலாவைப் பற்றிய எண்ணங்கள் வந்துகொண்டே



இருந்தன. இன்னும் வேகமாக நடந்தான். அவனை விட்டே விலகி, அவனால் வேகமாக ஓட முடியாது என்ற தத்துவத்தைப் புரிந்து கொண்டான்.

சுமார் ஒரு மைல் தூரம் நடந்திருப்பான். நடக்கவே மறந்துவிட்ட சக்ரபாணியின் கால் சதைகள் திடீரென்று எதிர்பாராத வகையில் புதிய வேலைக்கு உந்தப்பட்டமையால் தள்ளாடின.

வீட்டில் குளிர்சாதன அறை, காரில் குளிர் சாதனப் பெட்டி, ஆபீஸில் குளிர்சாதனப் பெட்டி இருந்தமையால் சக்ரபாணிக்கு வியர்வை பற்றியே சிலகாலமாகத் தெரிய வாய்ப்பில்லாமல் இருந்தது. ஆனால் இன்று வியர்வைச் சுரப்பிகள் வெகு வேகமாக வேலை செய்தது. அவன் அணிந்திருந்த சட்டையை நனைத்தன. தேகத்தில் பல பாகங்களுக்கு அதிகப்படி ரத்தத்தைச் செலுத்தியமையால் இருதயம் பட் பட்டென்று அடித்துக் கொண்டிருந்தது. ஆனால் சக்ரபாணி உடலைப் பற்றி நினைப்பு இல்லாமலே நடந்து கொண்டிருந்தான். போதாதற்குக் காலை இளம் வெயில் வேறு சக்ரபாணியைத் தாக்கியது. சக்ரபாணியின் தேக உறுப்புக்கள், சக்ரபாணியின் சிப்பந்திகள் போல். போனஸுக்காக வேலை செய்யத் தயாராயில்லை. பழக்கமில்லாத அளவுக்கு உழைத்துவிட்ட உறுப்புக்கள் சோர்வுடன் வேலை செய்ய மறுத்தன.

சக்ரபாணியின் கால்கள் தள்ளாடின. அவன் கண்கள் இருண்டன. சாலையின் இரு பக்கத்து மரங்களும், உருவம் மங்கி மறையத் தொடங்கின. அப்படியே சக்ரபாணி சாலையில் சாய்ந்தான்.

அவன் விழுந்து கிடந்த காட்சி வழிப்பிச்சைக்காரன் போல் தோன்றியது. ஒரு சில கார்கள், விழுந்து கிடக்கும் சக்ரபாணியைக் கடந்து சென்றன. காரில் உள்ளவர்கள், யாரோ ஒருவன் விழுந்து கிடப்பதைப் பாராமல் இல்லை. 'உயிர் இருக்கிறதோ இல்லையோ, நமக்கேன் வம்பு' என்று நினைத்துப் போனவர்கள்தான் அப்பிரமுகர்கள்.

அடுத்தபடி வந்த கார் சற்றுத் தொலைவில் நின்றது. அதில் இருந்தவன்தான் இளைய ஜோன்ஸ். முதல்நாள் இரவு தற்கொலை முயற்சி செய்து தோற்றுப் போய் இரவு பூராவும் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று, ஓரளவு தேறிய பின் வீடு திரும்பிக் கொண்டிருந்தான்.

இளைய ஜோன்ஸ், தன் வாழ்வைப் பாழாக்கிய விரோதி சக்ரபாணி, மறுநாள் காலையில் சாலையில் இப்படி மல்லாக்கக் கிடப்பான் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை.

கார் நிறுத்தப்பட்ட தூரத்திலிருந்து விழுந்து கிடக்கும் உருவம் யார் என்று அவனால் அனுமானிக்க முடியாது. இளைய ஜோன்ஸின் பார்வையைக் கவர்ந்தது சக்ரபாணி அணிந்திருந்த சட்டைதான்! பாரிஸில் பெயர் பெற்ற சிறப்பான கடையில் கோடீஸ்வரர்களுக்கென்றே ஸில்க்கை விட உயர்ந்த, டெரிலினைவிடச் சிறப்பான ஒரு புதுவித இழையினால் தைக்கப்பட்ட சட்டை. ஒரு சட்டையின் விலை ஆயிரம் ரூபாய்க்கு மேல். அந்தச் சட்டையின் அடையாளத்தைப் பார்த்துத்தான் இளைய ஜோன்ஸ் காரை நிறுத்தச் சொன்னான்.

அந்நிய நாட்டுச் செலாவணி கிடைக்காத நாட்களில் ஜோன்ஸ் பன்னிரண்டாயிரம் ரூபாய்க்கு மேல் அனுப்பி, ஒரு டஜன் சட்டைகள் தருவித்து, தனக்கென்று வைத்துக் கொள்ளாமல் அவ்வளவையும் சக்ரபாணிக்கே கொடுத்திருந்தான். அன்று ஜோன்ஸுக்குச் சக்ரபாணியிடம் இருந்த நன்றி உணர்ச்சியின் காரணமாகச் செய்தான். அம்மாதிரி சட்டைகள் சென்னையிலே யாரிடமும் இருக்க முடியாது என்று தெரியும்.

இளைய ஜோன்ஸ் மெள்ளக் காரைத் திறந்து இறங்கினான். பயத்துடன் இரண்டடி எடுத்து வைத்தான். கீழே கிடப்பது சக்ரபாணியே என்று புரிந்து கொண்டான்.

முதல் நாள் மாலை ஜோன்ஸின் வக்கீல்கள் எவ்வளவோ மன்றாடியும், ஆறு பைசா கூடக் கொடுக்க



மாட்டேன் என்று சொல்லி, ஜோன்ஸை நீண்ட தூக்கத்தின் வாசலுக்கே அனுப்பிய கிராதகன். இன்று காலை ஆறு அடிக்குக் குறைவான அளவு மண்ணை அணைத்து வாயில் நுரை தள்ளிக் கிடப்பதைப் பார்த்து, முதலில் ஆச்சரியம் அடைந்தான். பின்பு திருப்தி அடைந்தான். மறுபடியும் ஒருமுறை சக்ரபாணியை நோக்கினான்.

சக்ரபாணியின் மூச்சு மெள்ள வந்து போய்க் கொண்டிருந்தது. இளைய ஜோன்ஸ் அந்த இடத்தை விட்டு ஓட நினைக்கவில்லை. கீழே கிடப்பவன் சட்டைப் பையில் தன்னைச் சம்பந்தப்படுத்தி ஏதாவது கடிதம் இருக்கிறதா என்றும் அவன் தேடவில்லை. டிரைவரை அழைத்து, சக்ரபாணியைத் தூக்கிக் காரில் போடச் சொன்னான்.

கார் மெள்ள சக்ரபாணியின் பங்களா நோக்கிச் சென்றது. இளைய ஜோன்ஸின் கார், பங்களாவினுள் நுழைந்தது. அங்கு வெளியே சாரங்கன் நின்று கொண்டிருந்தார். அவர், ஜோன்ஸ் நிலையில் எந்தவித அபாயமும் இல்லை என்று தெரிவிக்க அப்போதுதான் வந்தார். ஆனால் அதே ஜோன்ஸ், மயங்கிக் கிடக்கும் சக்ரபாணியை எடுத்து வரவும், சாரங்கனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

சக்ரபாணியை, அவன் படுக்கை அறைக்கு எடுத்துச் செல்லுமுன்பே அவன் விழித்துக் கொண்டான். தன்னுடன் இளைய ஜோன்ஸ் இருப்பதைக் கண்டு குழப்பமடைந்தான்.

ஜோன்ஸ், இரண்டு மூன்று வாக்கியங்களில் எல்லாவற்றையும் விளக்கினான். சக்ரபாணி நட்புக்காக அவனுக்கு நன்றி தெரிவித்ததும், ஜோன்ஸ் அந்த வீட்டில் நிற்கவும் விருப்பமில்லாமல் புறப்பட்டான்.

சாரங்கன், இடையில் சக்ரபாணிக்கு நேர்ந்த விபத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளாத வகையில், பிஸினஸ் விஷயங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்தார். இதுதான் சமயம் என்று இளைய ஜோன்ஸ் சார்பில் அவனுக்கு அவன் கேட்கும் தொகையைக் கொடுத்துவிட வேண்டுமென்றார்.

சக்ரபாணி ஒன்றும் பேசாமல், சாரங்கனையே பார்த்தான். "என்னை நடுத்தெருவில் கிடந்த நிலையில் வீட்டுக்குத் தூக்கி வந்தவன் என்பதற்காக ஆறு லட்சம் கொடுக்கச் சொல்கிறீர்களா? என்னைத் தூக்கிய டாக்ஸி போர்டரேஜ் வகையறாவுக்கு மொத்தச் செலவு பதினைந்து ரூபாய் கொடுத்தால் எதேஷ்டம். அதை வேண்டுமானால் ஜோன்ஸுக்குக் கொடுத்து விடும்!" என்றான்.

சாரங்கன் வாயை மூடிக்கொண்டு வெளியேறினார்.

சக்ரபாணியின் மனம் பாலாவின் விஷயத்திலேயே நிலைத்து நின்றது. பாலா வெளியே சென்றதற்கும், அவன் நிலையிலும் அவன் மனைவியின் மன நிலையிலும் ஏற்பட்ட நல்ல மாறுதலுக்கும் ஏதோ சம்பந்தமிருக்கக் கூடும் என்று சக்ரபாணி நினைக்கவில்லை. அவன் மனத்தில் தோன்றியதெல்லாம் அவன், பாலாவின் விஷயத்தில் தோற்று விட்டான் என்பதுதான். பல ஆயிரக்கணக்கான சிக்கல்களை அவன் சந்தித்திருக்கிறான். அரசாங்க அதிகாரி, அவன் லாபத் திட்டத்துக்கு முட்டுக் கட்டை என்றால், உடனே லஞ்சம் கொடுத்து வேலையை முடிக்கத் தெரியும். ஆனால் பாலாவின் விஷயத்தில் என்ன செய்வதென்றே புரியவில்லை.

வேகமாக எழுந்து அவன் பாலாவின் அறைக்குச் சென்றான். சுற்று முற்றும் பார்த்தான். பாலாவின் படுக்கை அறை. அடுத்த சிறிய அறையில் அவள் விளையாடிய பொம்மைகளைப் பார்த்தான். வேதனையாக இருந்தது. பாலாவின் ஆசைக்காக எவ்வளவோ பொருட் செலவில் நிர்மாணிக்கப்பட்ட குளியல் அறைக்குள் சென்றான். ஒவ்வொரு ஸ்விட்சாக அழுத்தினான். ஒவ்வோர் இயந்திரமும் இயங்கியது. ஆனால் பாலாதான் இல்லை. அந்த நீச்சல் குளத்து நீரில் பாலா நீந்துவதுபோல் ஒரு விநாடி பிரமை ஏற்பட்டது. அடுத்த விநாடியே அதில் அவள் கண்மூடி மிதப்பதுபோல் தோன்றியது.



தன்னுடைய பணம், பலம் இவற்றை உபயோகப்படுத்தி அவளைத் தேடினால், அவள் இம்மாதிரி ஏதாவது செய்து கொண்டால்... சக்ரபாணி நினைக்கவே பயப்பட்டான்.

பாத்ரூமிலிருந்து ஓடினான். 'ஐயோ, உன்னைத் தேடக் கூட முடியாமல் செய்துவிட்டு ஓடிவிட்டாயே! நான் என்ன செய்வேன்...?' என்று துடித்தான்.

அவன் மனத்தில் பாலாவின் மீதுள்ள அன்பு எத்தனை ஆழமானது என்பதை உணர்ந்தான். அதே சமயத்தில் இனிமேல் ஒவ்வொரு நிமிடமும் பாலாவுக்காகப் பயந்து சாகவேண்டும் என்று நினைத்து வருந்தினான்.

இந்த முள்மேல் நிற்கும் நிலை, மற்றவன் ஒருவனைக் கோவில் நோக்கிச் செலுத்தும். சக்ரபாணிக்கு அம்மாதிரி நம்பிக்கை கிடையாது. அதனால் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

இந்தச் சமயம் பார்த்து, சக்ரபாணியின் மில்லில் வேலை நிறுத்தம் செய்யப் போவதாக டெலிபோன் மூலம் மானேஜர் தகவல் கொடுத்தார்.

"மில்லை இழுத்துப் பூட்டி மூடுங்கள்! குறைந்த வாடகையில் குடியிருக்கும் மில் காலனியிலிருந்து அந்தத் தொழிலாளர்களை விரட்டுங்கள்?" என்று சக்ரபாணி கூச்சலிட்டான்.

"சட்டப்படி அவர்களை உடனே விரட்ட முடியாது சார்...!" என்றார் மானேஜர், போனில்.

"சட்டத்தை உடையுங்கள்! அவர்களை விரட்ட முடியவில்லை என்றால் மில் காலனி குடி தண்ணீரில் விஷத்தைப் போடுங்கள். அந்த ராஸ்கல்கள் கூண்டோடு கைலாசம் செல்லட்டும்!" என்று சொல்லிப் போனை வைத்தான்.

தனக்கு ஏற்பட்ட துக்கத்தைத் தீர்த்துக் கொள்ள யார் மீதாவது பழி வாங்கவேண்டும் என்று தோன்றியது. யாரையாவது வாட்டி வதைக்க வேண்டும் என்று

தோன்றியது. பாலாவின் நினைவை மறக்க ஏதாவது செய்ய வேண்டுமே!

ஆடையை மாற்றிக்கொண்டு, காரில் ஏறிப் புறப்பட்டான் சக்ரபாணி. ஏறிய கார், ஆயிரம் விளக்குப் பகுதியை நெருங்கும்போது, போக்குவரத்து, நெருக்கடியாக நிறுத்தப்பட்டது. எதிரே சாரி சாரியாக ஏழைப் பெண்களும், மக்களும் ரோடைக் கடந்து கொண்டிருந்தனர். அந்தக் காரை வேகமாக அந்தக் கூட்டத்தின் மீது ஓட்டச் சொன்னால் என்ன என்ற அசுரத்தனமான ஆசை எழுந்தது.

நீதிமன்றம், வழக்கு, வக்கீல்களின் கேள்விகள் இவை மனத்தில் எழவே, தன் ஆசையை அடக்கிக் கொண்டான்.

மறுபடியும் பாலா இந்தப் பரந்த பட்டணத்தில் எங்கு இருக்கிறாளோ, எப்படிச் சாப்பிடுகிறாளோ என்று ஒரு நிமிடத்துக்குச் சாதாரண தந்தையாக நினைத்தான். பித்தம் பிடித்தவன்போல் ஆபீசில் நுழைந்தான். அங்கே தலைமை ஆபீசின் வெளிப்புறத்தில் வைக்கப்பட்டிருக்கும் பலகைகள் எல்லாம் பாலாவின் பெயர் தாங்கி நின்றன.

பாலா தியேட்டர்ஸ், பாலா ரெஸ்டாரண்ட்ஸ், பாலா மில்ஸ், பாலா டெக்ஸ்டைல்ஸ்... கண்களை இறுக மூடிக்கொண்டு உள்ளே நுழைந்தான்.

ஆபீசில் அவன் இருக்கையில் அமர்ந்ததும், வெங்குசாமி என்ற முதிய குமாஸ்தா ஒரு லெட்ஜருடன் உள்ளே நுழைந்தார்.

''என்ன வெங்குசாமி, உமக்கு எவ்வளவு குழந்தைகள்?'' என்று திடீரென்று கேட்டான் சக்ரபாணி.

ஒரு விநாடிக்கு வெங்குசாமி திகைத்து விட்டார். ''எனக்கு ஆறு பெண்கள் சார்!'' என்று மரியாதையுடன் சொன்னார்.

சக்ரபாணி, மேஜையைப் பார்த்தபடி, ''எல்லாப் பெண்களும் வீட்டிலேதான் இருக்கிறார்களா?'' என்று கேட்டான்.



''எல்லோரும் வீட்டிலேதான் இருக்கிறார்கள். எல்லாம் சின்னக் குழந்தைகள். படிக்கிறார்கள். மூத்தவளுக்குத்தான் கல்யாணமாகியிருக்கிறது. அவளும் மாப்பிள்ளையும் என்னோடுதான் இருக்கிறார்கள்'' என்று சொன்னார்.

''அப்படியா!'' என்று ஒருவிதமாக உறுமினான் சக்ரபாணி. ''சிப்பந்திகளின் சம்பள லெட்ஜரை எடுத்து வாருங்கள்.''

வெங்குசாமி நடுங்கியபடி வெளியே சென்றார். அடுத்த பத்து நிமிடங்களில் ஆபீஸ் பூராவும் விஷயம் பரவிவிட்டது. சக்ரபாணி சம்பள லெட்ஜரைக் கேட்டது இரண்டு வருடங்களுக்கு முன்புதான். அப்போது பலருக்குச் சீட்டுக் கிழிந்தது.

குமாஸ்தாக்கள், அவரவர் குலதெய்வங்களைப் பற்றி நினைக்க ஆரம்பித்தனர். யாருக்குமே வேலை ஓடவில்லை.

வெங்குசாமி சம்பள லெட்ஜரை எடுத்துச் சென்று வைத்துவிட்டு வந்து அரைமணி நேரம் ஆகியும் சக்ரபாணி இன்னும் ஸ்டெனோ டைப்பிஸ்ட்டைக் கூப்பிட்டு வேலை நீக்க உத்தரவுகள் டிக்டேட் செய்யவில்லையே என ஆச்சரியப்பட்டனர்.

சக்ரபாணி, சிப்பந்திகளின் தவிப்பைத் தன் அறையில் இருந்தபடி கதவை நீக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதை அவர்கள் உணரவில்லை.

சில நிமிடங்களுக்குச் சக்ரபாணி, சிப்பந்திகளின் தவிப்பை நினைத்து, தன் தவிப்பை மறந்திருந்தான்.

ஒருமணி நேரத்தில் சக்ரபாணி வெளியே சென்றான். எதற்காகச் சம்பள லெட்ஜரைக் கேட்டான் என்று கவலை நிறைந்த ஆராய்ச்சியிலே அன்று பொழுது போக்கினர் சிப்பந்திகள்.

'நான் மட்டும் என் மகளைப் பிரிந்து புரியாத ஒரு தவிப்பில் இருப்பானேன்? என்னைச் சேர்ந்த மற்றவர்

களும் ஏதாவது ஒரு விதத்தில் தவிக்கட்டுமே' என்று சக்ரபாணி எண்ணிச் செய்தானோ என்னவோ!

ஆனால் பாலா, மரகதம்மாளின் பேரப்பிள்ளைகள் ரகு, சுகுவுக்கு எந்தவிதக் கஷ்டமுமில்லாதபடி எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்தாள்.

புடைவையை எடுத்து முழங்காலுக்கு மேல் கட்டிக் கொண்டு, ரகுவின் தலையில் சீய்க்காய் வைத்துத் தேய்த்துக் கொண்டிருந்தாள். அவள் பார்வையில் ரகு எண்ணெய்த் தலையுடன் கண்களைக் கொட்டியபடி நிற்பது என்னவோ பாலாவுக்கு அத்தான் மோகனை ஞாபகப்படுத்தியது. அத்தான் மோகனுக்கு மகன் பிறந்தால் எவ்வளவு அழகாக இருப்பான் என்று நினைத்தாள். அவளுக்கு வெட்கமாக இருந்தது.

## 34

குழந்தைகளுக்கு எண்ணெய் தேய்த்த பின் பாலா, சமையல் அறைக்குள் சென்றாள். பிள்ளை பெற்றவளுக் கென்று செய்ய வேண்டிய மருத்துவச் சமையல் பற்றித் தெரியாமல் தவித்து நின்றாள்.

பாலாவின் குழப்பத்தை உணர்ந்த மரகதம்மாள், "மருத்துவச் சமையலை நான் பார்த்துக் கொள்கிறேன். சுமதி, நீ போய் மார்க்கெட்டிலிருந்து காய்கறி வாங்கி வா!" என்று கூறி அனுப்பினாள். அவள் கையில் இரண்டு ரூபாய் கொடுத்து அனுப்பினாள்.

ஒரு துணிப்பையை எடுத்துக்கொண்டு பாலா புறப் பட்டாள்.

காய்கறி வாங்குவது என்பதையே உணராதவள்; எந்தக் காய்க்கு என்ன விலை கொடுப்பது என்பதை அறியாதவள். புரியாத விஷயத்தைச் சாமர்த்தியமாகச் செய்து முடிக்க வேண்டும் என்ற உணர்வும் உறுதியும் ஏற்பட்டன. தனக்குத்தானே சிரித்துக் கொண்டாள்.



அவள் மனத்தில் சம்பந்தமில்லாத ஒரு காட்சி உருவாகியது. அதுதான் அவள் சிரிப்புக்குக் காரணம்.

அத்தான் மோகனும் அவளும் சேர்ந்து புறப்பட்டு மார்க்கெட்டுக்குப் போய்க் காய்கறி வாங்கிவர வேண்டும்; பிறகு அதை அவள் சமைக்க வேண்டும்; அத்தானுக்குப் பரிமாற வேண்டும்! இது சாதாரணமாக ஆயிரக்கணக்கான வீடுகளில் அன்றாடம் நிகழும் காட்சி. ஆனால், அது பாலாவுக்கு ஒரு லட்சியக் காட்சியாகத் தோற்றமளித்தது.

பாலா நடந்துகொண்டே தெரு மூலைக்கு வந்தபோது மற்றொரு காட்சி அவளைத் திகைக்க வைத்தது.

குருமூர்த்தி, ஒரு மூல்தானியிடம் மன்றாடிக் கொண் டிருந்தான். அந்த மூல்தானி குருமூர்த்தியிடம் இரைந்து கத்திக் கொண்டிருந்தான்.

"கொஞ்சம் பொறுத்துக்கோப்பா...முந்நூறு ரூபாய் தானே பேட்டு...அதற்கு ஏன் இப்படிச் சத்தம் போடு கிறாய்? எங்க அம்மாவுக்குத் தெரிந்தால் ரொம்பக் கஷ்டப் படுவாள். என் சம்சாரம் பிரசவித்திருக்கிறாள். நீ இந்தச் சமயத்திலே வீட்டிலே நுழைந்து சாமானை எடுத்து வைத்தால் நன்றாயிருக்குமா! ஒரு மாதம் தவணை கொடு, வட்டியும் முதலுமாகத் தீர்த்துவிடுகிறேன்."

"என்ன மனுஷன் நீ! உனக்கு எவ்வளவு தவணை கொடுத்தாச்சு! பெண்சாதியிடம் ஒழுங்கா வட்டி கட்டிட்டு வர்ரே, நம்பள்கி அசலுக்கே நாமம் போடப் பார்க்கிறே! முடியாது, வா வீட்டுக்கு!" என்று கையிலுள்ள கறுப்புக் கழியைச் சுழற்றினான்.

"இல்லை. கொஞ்சம் பொறுத்துக்கொள். பத்து நாளில் கொடுத்து விடுகிறேன்" என்று குருமூர்த்தி மறு படியும் கெஞ்சினான்.

"அதெல்லாம் முடியாது. ஒருநாள் தவணை தர்றேன். அதுக்குள்ளே தீர்க்கல்லே, வீட்டிலே பூந்து சாமான்களைக் கை வண்டியிலே எடுத்துட்டுப் போயிடுவேன்!" என்று

கூறிவிட்டு, குருமூர்த்தியைத் தன் முரட்டுக் கைகளால் தள்ளிவிட்டு நகர்ந்தான்.

குருமூர்த்தி குழப்பத்தோடு திரும்பினான். பாலாவின் பார்வையைச் சந்தித்தான். பாலா தலை குனிந்தபடி நகர்ந்தாள்.

அசடு வழிய, "எங்கே சுமதி புறப்பட்டே?" என்றான்.

"காய்கறி வாங்கிவரப் போகிறேன்."

"அப்படியா, சரி போய்விட்டு வா! நீ பார்த்ததை அம்மாவிடமோ, அன்னத்திடமோ சொல்லிவிடாதே சுமதி!" என்று கெஞ்சினான்.

"உங்கள் கஷ்டம் எனக்குப் புரிகிறது. நான் ஒன்றும் பேசமாட்டேன்" என்று சொல்லிவிட்டு நகர்ந்தாள்.

லட்சக்கணக்கான ரூபாய் கடனுக்காகத் தன் தந்தையிடம் கதறிவிட்டுச் சென்ற இளைய ஜோன்ஸின் நிலையும், முந்நூறு ரூபாய்க்காகத் தவிக்கும் குருமூர்த்தியின் நிலையும் ஒரே ரகம்தான். தொகையில்தான் வித்தியாசம் என்பது பாலாவுக்குத் தெளிவாகியது.

பாலா, காய்கறிக்கடை வரிசையில் நுழைந்ததும், அவள் மனத்தில் காய்கறிகளுக்கு என்ன விலை கொடுத்து வாங்குவது என்ற யோசனை எழுந்தது. காய்கறிகளைப் பார்த்தபடி ஒவ்வொரு கடையிலும் சில நிமிடங்கள் நின்றாள். அங்கு மற்றப் பெண்மணிகள் ஒவ்வொரு பொருளுக்கும் விலை பேசி முடிப்பதைப் பார்த்தாள். அவள் வாங்க வேண்டிய காய்களின் விலையை மனத்தில் இருத்திக்கொண்டாள்.

பிறகு, பசுமையான காய்கள் வைக்கப்பட்டிருந்த கடையில் நுழைந்தாள். அனுதினமும் காலையில் காய் வாங்கிப் பழகியவள் போல் விலை பேச ஆரம்பித்தாள். அவள் குரல், அவளுடைய தோற்றம், அவளுடைய குரலில் இருந்த ஒரு கண்டிப்பு—கடைக்காரனைத் திகைக்க வைத்தது. முடிவில் அவள் சற்றுச் சல்லிசான விலைக்கே காய்களை வாங்கிப் பைகளில் நிரப்பிவிட்டாள்.

www.t.me/tamilbooksworld



இன்று மார்க்கெட்டில் அவள் அடைந்த வெற்றியே அவளுக்குப் பெருமையாக இருந்தது. எப்படித் தனக்கு இந்த வியாபாரத் திறமை வந்தது என்று ஆச்சரியத்துடன் நினைத்தாள். அவளுக்கு அவள் தந்தையின் நினைவு வந்தது. அப்பா இதே திறமையைத்தான் லட்சக்கணக்கான ரூபாய்களுக்குச் செலவிட்டுப் பொருள் சேர்க்கிறார் என்று தனக்குத்தானே கூறிக் கொண்டாள். நல்லவேளை! அவளுடைய முதல் வியாபாரப் பயிற்சி, குருமூர்த்தியின் குடும்பத்தின் சார்பில் என்று நினைக்கவும் அவளுக்கு ஒருவிதத் திருப்தி ஏற்பட்டது.

மூல்தானியிடம் குருமூர்த்தி பட்டிருக்கும் கடன், தானே பட்ட கடன் போல் தோன்றியது பாலாவுக்கு. அந்தக் கடனைத் தீர்க்க என்ன வழி என்ற பிரச்சினையில் ஈடுபட்டாள்.

காய்கறிப் பையைத் தூக்கிக்கொண்டு வீடு திரும்பிய போது, அவள் சென்ற திசையிலேயே ஒரு கை வண்டிக் காரன் நிறைய மேஜை நாற்காலிகள், பீரோக்களை ஏற்றிக்கொண்டு இழுத்துச் சென்று கொண்டிருந்தான். அதைப் பார்த்ததும், மூல்தானி குருமூர்த்தியிடம் சொல்லிச் சென்ற பயங்கரமான சொற்கள் ஞாபகத்துக்கு வந்தன.

இந்த வண்டியில் செல்லும் பீரோ, நாற்காலிகள் மூல்தானியால் ஜப்தி செய்யப்பட்டுத்தான் செல்கின்றனவோ என்ற எண்ணம் எழுந்தது. குருமூர்த்தியின் வீட்டுப் பொருள்களுக்கும் இதே நிலைதான் வருமோ? கை வண்டிக்காரனுடன் பேச்சுக் கொடுத்தாள்.

வண்டிக்காரன், அந்தப் பொருள்களை பர்னிச்சர் கம்பெனிக்கு எடுத்துச் செல்வதாகவும், இம்மாதிரி பழைய சாமான்களை வாங்கி, வார்னிஷ் அடித்து மெருகு செய்து புதுப் பொருள்களாக விற்பதே அந்தக் கம்பெனியின் வேலை என்றும் சொன்னான்.

பாலா சிந்திக்க ஆரம்பித்தாள். "இந்த வண்டியி

லுள்ள பொருள்களுக்கு உங்கள் கடைக்காரர் எவ்வளவு பணம் கொடுத்திருப்பார்?'' என்றாள்.

''எனக்கு எவ்வளவுன்னு தெரியாதுங்க. வீட்டுக்காரரிடம் கொடுத்த பில்லின் நகல் மடியிலே இருக்குங்க. பார்க்கறீங்களா?''

கை வண்டிக்காரன் கேட்ட முறையிலிருந்து, அவன் காப்பிச் செலவுக்கு ஏதோ எதிர்பார்க்கிறான் என்று தெரிந்தது. பாலா சட்டென்று ஒரு தீர்மானத்துக்கு வந்தாள்.

''அந்தப் பில்லைக் கொஞ்சம் காட்டுகிறாயா? ஒரு வேளை நானே இம்மாதிரிப் பொருள்கள் வாங்கலாம்'' என்றாள்.

வண்டிக்காரன், வண்டியைச் சாலையோரமாக நிறுத்திவிட்டு, ஓய்வெடுக்கச் சிறு சந்தர்ப்பம் கிடைத்த மகிழ்ச்சியில் பெருமூச்சு விட்டான். தன்னுடைய வேட்டியில் மறைத்து வைத்திருந்த ஒரு வெள்ளைக் காகிதத்தை எடுத்துக் கொடுத்தான்.

பாலா அதை வாங்கிப் பார்த்தாள். அதில் கிட்டத் தட்ட ஆயிரம் ரூபாய்க்குக் குறிப்புகள் இருந்தன. அதில் பீரோ, மேஜை நாற்காலிகள், ஒவ்வொன்றின் விலையும் போடப்பட்டிருந்தது. இரண்டு மூன்று முறை அதைப் பார்த்தாள். திரும்பவும் வண்டியில் உள்ள பொருள்களையும் பார்த்தாள். மிகத் தாழ்ந்த ரகமரத்தால் செய்யப்பட்டவை என்பது தெரிந்தது.

இதுவே ஆயிரம் ரூபாய் பெறும் என்றால், அப்பா வீட்டில் வாங்கிப் போட்டிருக்கும் சோபாக்கள், நாற்காலிகள் கிட்டத்தட்ட லட்ச ரூபாயாவது இருக்குமே என்று நினைத்தாள்.

வண்டிக்காரனிடம் பில்லைக் கொடுத்துவிட்டு, அதோடு பதினைந்து பைசாவும் கொடுத்தாள்.

வண்டிக்காரன் சிரித்தான். ''அம்மா காசிலே கணக்கு!''



பாலாவுக்குச் சுருக்கென்றது. காலேஜ் பியூன்கள், கடைக்காரப் பையன்கள் ஆகியவர்களுக்கு டிப் செய்யும் போது குறைந்தபட்சம் ஐந்து, பத்து ரூபாயாவது கொடுப்பதுதான் வழக்கம். ஆனால் இன்று அவள் கையில் உள்ள பணம் மரகதம்மாளின் வீட்டுப் பணம் அல்லவா! ஒவ்வொரு பைசாவுக்கும் ஒரு முக்கியத்துவம் கொடுத்தாள்.

பாலா வீடு திரும்பினாள். வாசல்புற ஹாலில் மரகதம்மாள் உட்கார்ந்திருப்பதைப் பார்த்த அவளுக்கு ஒரு பயம், காய்கறி வாங்கியதில் அதிகப் பணம் செல வழித்து விட்டதாகப் பெரிய அம்மாள் நினைப்பாளோ என்று.

மரகதம்மாள் பையை வாங்கி உதறினாள். பாலா, மிருந்திருந்த சில்லறையைப் பெரிய அம்மாளிடம் கொடுத்தாள்.

மரகதம்மாள் ஆச்சரியத்துடன், ''என்ன சுமதி, மிச்சம் கொண்டு வந்து விட்டாய்! குருமூர்த்தி, பாருடா, நீ மார்க்கெட்டுக்குப் போனால் இதிலே பாதிகூட வாங்கிக் கொண்டு வரமாட்டாய்? எவ்வளவு சிக்கனமாக வாங்கிக் கொண்டு வந்திருக்கிறாள். சுமதி! வறுமையிலே அடிபட்டாலும் சிலருக்குத்தான் உன் மாதிரி சிக்கனம் பிடிக்கத் தெரிகிறது'' என்று புகழ்ந்தாள்.

பாலாவுக்கு மகிழ்ச்சி. சொந்தமாகச் செய்த முதல் பேரத்தில் வெற்றி. மகிழ்ச்சியை வெளிக்காட்டாமல் அன்னபூரணி படுத்திருக்கும் அறைக்குள் சென்றாள்.

அங்கு, அவள் முயற்சியால் உலகத்தில் நுழைந்த குழந்தை கண்மூடி, வாய் திறந்தபடி படுத்திருந்தது. அந்தக் குழந்தையிடம் பாலா தனக்கு ஏதோ ஒருவிதச் சொந்தம் இருப்பதாக நினைத்தாள்.



www.t.me/tamilbooksworld

குழந்தை லட்சுமியைத் துணியோடு வாரியெடுத்துக் கொண்டாள். குழந்தை அரைகுறையாகக் கண்களைத் திறந்து பாலாவைப் பார்த்தது. பற்கள் இல்லாத வாயுடன் மெல்லச் சிரித்தது.

படுக்கையில் மெல்ல எழுந்து உட்கார்ந்த அன்னம், "பார் சுமதி, குழந்தைக்கு நன்றாகத் தெரிகிறது, நாம் சித்தி மடியிலே இருக்கிறோமென்று. அதுதான் அது சிரிக்கிறது!" என்றாள்.

'சித்தி' என்ற உறவு வார்த்தை பாலாவின் மனத்தில் ஒரு கிளர்ச்சியைக் கொடுத்தது.

அதே சமயத்தில் ஓடி வந்தான். "சித்தி, வந்து பார். சுகு படிக்கட்டு வளைவு அறையிலே ஓடிப் போய்க் கண்ணாடி ஜாடியை உடைத்துவிட்டான்!"

படுக்கையிலிருந்த அன்னம், தன்னை மறந்தாள். "படிக்கட்டு வளைவு அறை எப்பவும் பூட்டியிருக்குமே; அதை யார் திறந்து விட்டார்கள்?"

"அப்பாதான் அம்மா திறந்தார்" என்று தந்தைமீது புகார் போட்டான் ரகு.

பாலா, குழந்தையைத் தாயிடம் கொடுத்துவிட்டு, ரகுவுடன் மாடி வளைவு அறைக்குள் சென்றாள். புழுதி படிந்த அந்த அறையின் உட்புறம் நுழைந்தாள்.

உருண்டையான ஒரு கண்ணாடி ஜாடி உடைந்து கிடந்தது. அதன் அருகில் சுகு ஏதோ பெரிய கொலைக் குற்றம் செய்தவன்போல் சிதறிக் கிடக்கும் துண்டுகளைப் பார்த்தபடி நிற்கிறான்.

பாலா நுழைந்த மறு நிமிடமே குருமூர்த்தி நுழைந்தான். உடைந்து கிடக்கும் ஜாடியைப் பார்த்த குருமூர்த்திக்கு ஆத்திரம் வந்தது.

"தரித்திரமே! நாம் இன்றைக்கு விலை கொடுத்து வாங்கக்கூடிய ஜாடியா? உடைத்துவிட்டு முழிச்சுப் பார்க்கிறியா?" என்று கையை ஓங்கி அறையப் போனான்.



பாலா உடனே பாய்ந்து சென்று குழந்தையை அணைத்துக்கொண்டாள்.

"ஐயோ, குழந்தையை அடிக்காதீர்கள்."

"இதெல்லாம் குழந்தைகள் இல்லே சுமதி. என்னைப் பழி வாங்க வந்திருக்கும் பாவத்தின் உருவம். அந்தக் காலத்திலே கோடை நாளில் அப்பா இந்த ஜாடியிலே ஐஸ் போட்டு ஸர்பத் செய்து, நண்பர்களுக்குக் கொடுப்பார். அப்பாவுக்குப் பிரியமான ஜாடி!"

பாலாவின் பார்வை அறையிலுள்ள கண்ணாடி பீரோக்கள், ஸோபாக்கள், இதர பொருள்களில் சென்றது. எல்லாமே தேக்குமரத்தினால் செய்யப்பட்ட உறுதியான சாமான்கள், செல்வம் சென்ற பின்னும் அது விட்டுச் சென்ற கறைபோல் அவை தோற்றமளித்தன. மாடி வளைவு அறை பூராவும் அடைத்துக்கொண்டு, யாருக்கும் பிரயோஜனம் இல்லாமல் கிடந்தன. எல்லாம் லால்குடி சீனிவாசன் பொருள்கள். அவர் ஜபர்தஸ்தாக வாழ்ந்தபோது உபயோகப்பட்டு, இன்று இடைஞ்சலாக நிற்கும் பொருள்கள் என்று தோன்றியது பாலாவுக்கு.

அப்போது, "குருமூர்த்தி! குருமூர்த்தி! சம்பந்தய்யா பேரன் வந்திருக்கிறான். நீ எங்கேடா போய்விட்டாய்?" என்று மரகதம்மாளின் குரல் ஒலித்தது. அதைத் தொடர்ந்து ஸ்கூட்டர் சத்தமும் கேட்டது.

"சம்பந்தய்யாவின் பேரன்!" என்ற சொற்களைக் கேட்ட பாலாவுக்கு நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. ஸ்கூட்டர் சத்தம் ஊர்ஜிதம் செய்தது.

மாடி வளைவு அறையை விட்டு வெளியே வந்தாள். அறையை அடுத்த பாதையில் நின்று வெளிப்புறம் பார்த்தாள்.

மோகன் ஸ்கூட்டரை விட்டு இறங்கினான். ஹாலுக்குள் நுழைந்து மறைந்தான்.

பாலா, வேகமாகப் பக்கத்து அறைக்குள் நுழைந்து கதவு வழியே பார்த்தாள்.

"தம்பி மோகன், உட்காரப்பா" என்று வருந்தி உபசரித்தாள் மரகதம்மாள்.

"உட்கார நேரமில்லை. தாத்தா காலையிலே வீட்டுக்கு வந்திருந்தார். உங்க வீட்டிலே ஒரு பெண் மருத்துவம் பார்த்தாளாமே. அவளுக்கு இரண்டு புடைவையும், ஜாக்கெட் துணியும் வாங்கிக் கொடுக்கச் சொன்னார். தாத்தா, இது நாள் வரையிலே எந்த உதவியும் கேட்டதில்லை. அதனாலே உடனே கடைக்குப் போய் நானே வாங்கிக் கொண்டு வந்தேன்" என்று சொல்லி ஒரு பொட்டலத்தைக் கொடுத்தான்.

"தம்பி, காப்பி சாப்பிட்டுவிட்டுப் போகலாம்."

"அதுக்கெல்லாம் நேரமில்லை. நான் வேலைக்குப் போகவேண்டும். இந்தத் துணிகளை அந்தப் பெண்ணிடம் கொடுத்துவிடுகிறீர்களா?" என்று கூறி விட்டு மோகன் வெளியேறினான்.

மறுபடியும் பாலா மாடி வளைவு அறைக்கு ஓடினாள். அங்கே கம்பிகளுக்குப் பின்புறம் நின்றபடி மோகனைப் பார்த்தாள்.

ஸ்கூட்டர் நகர்ந்தபின், அவள் சேலையைப் பற்றி யாரோ இழுப்பது கண்டு திரும்பினாள். சுகு நின்று கொண்டிருந்தாள். கண்ணாடியை உடைத்த குற்றம் அவள் முகத்தில் இல்லை. சிரித்தாள்.

"சித்தி ஸ்கூட்டர்லே போனாரே, அவருக்கும் என் மாதிரியே நெத்தியிலே மயிர் சுருண்டு விழுந்திருக்கில்லே...?" என்று கேட்டாள்.

பாலா உடனே சுகுவை எடுத்து முகத்தில் சத்தத்துடன் முத்தமிட்டாள்.



## 35

சக்ரபாணியைப் பாலாவின் நினைவு உந்த, இவ்வளவு பணம் இருந்தும், செல்வாக்கு இருந்தும் அவள் எங்கு இருக்கிறாள், எப்படிச் சாப்பிடுகிறாள், ஏன் வீட்டை விட்டுப் போனாள் என்று தெரிந்துகொள்ள முடியாத கையாலாகாதவன் போல் இருக்கிறோமே என்ற ஆத்திரம் அவனைத் தாக்கியது. ஆத்திரத்தோடு ஒரு பயமும் அவனுக்கு ஏற்பட்டது. அவள் உயிருக்கு ஏதாவது தீங்கு நேர்ந்தால்...? அல்லது உடலுக்கு, அவள் மானத்துக்குப் பங்கம் விளைந்தால்...

நினைக்கவும், சக்ரபாணியின் மனம் நடுங்கியது.

இதுவரை பாலா, சக்ரபாணியின் அன்புக்குப் பாத்திரமான ஓர் அதிர்ஷ்ட பொம்மையாக இருந்தாள். அவளுக்கு எல்லாம் கொடுத்துவிட்டோம், அவளுக்கு ஒரு குறைவுமில்லை என்று எண்ணிக் கவலையில்லாமல் தன் பணிகளில் ஈடுபட்டிருந்தான் சக்ரபாணி. இப்போது அவள் பிரிந்து விட்டாள். சக்ரபாணி சாதாரணத் தந்தையானான்!

எந்த விஷயத்திலும் சாதாரண மனிதனாக இருக்க விரும்பாத சக்ரபாணிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. கடல்போல் குமுறிய கோபத்தின் ஒரு பகுதி கூடப் பாலாவின் நினைவைச் சூழவில்லை. தன் ஆத்திரத்தை, கண்ணற்றவன் கல் வீசுவதுபோல் பலர் மீது காட்டினான். பல துப்பாக்கிகளின் குண்டு வெடியிலே மாட்டிய புலி, தப்ப முயலுவதுபோல் தாறுமாறாகப் பாய்ந்தான். தன் துக்கத்தை மறக்க, மற்றவருக்குத் துக்கம் விளைவித்தான்.

அவனுக்குச் சொந்தமாக இருந்த ஒவ்வொரு கிளை ஸ்தாபனமாக நுழைந்து, சிலரை நீக்கினான். சிலரை ஸஸ்பெண்ட் செய்தான்.

போனஸ் கேட்டுக் கிடைக்காததால் 'பாலா

பஞ்சாலை' தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்யத் தயாராயிருந்தனர். அதற்கெனச் சிவப்புக் கொடி பிடித்துக் கூட்டமே போட்டனர்.

பாலாவின் பிரிவை மறக்க அங்காவது செல்வோம் என்று நினைத்தான். மனத்தில் தோன்றும் வேதனை எண்ணங்களை மறக்க ஏதாவது செய்ய வேண்டும் என்று தோன்றியது; சாரங்கனைத் தன்னுடன் வரும்படி அழைத்தான். ஆனால் சாரங்கனுக்கோ பயமாக இருந்தது.

''ஸார்... அவங்க காலிப் பசங்க. அவங்க மீட்டிங்குக்கு ஏன் சார் போகணும்? கூச்சல் போடுவாங்க. கை தொட்டு அடிச்சாலும் அடிப்பாங்க! கல் வீசுவாங்க...!'' என்றார்.

''சாரங்கா, உனக்குப் பயமா இருக்கிறதா? அவர்கள் செய்வதைச் செய்யட்டும். நான் கோழ இல்லை. எனக்கு எஃகு நரம்புகள் இருக்கின்றன. வா என்னோடே!'' என்றான் சக்ரபாணி.

சாரங்கனுக்கு உடன் செல்லத் தயக்கமாக இருந்தது. அதைப் புரிந்துகொண்ட சக்ரபாணி, ''இப்போ ஏன் தயங்குறே? ஸ்பெஷல் போனஸ், கணக்கிலே காட்டாத பணம் தந்தப்போ, வாங்கத் தயங்கவில்லையே! வா. புலிக்கு ஸெக்ரடரியானவன் குகை இருட்டுக்குப் பயப்படலாமா?'' என்று சொல்லி, சாரங்கனின் பதிலுக்குக் கூடக் காத்திராமல் அவனைப் பிடித்துக் காரில் தள்ளினான்.

சாரங்கன் நடுங்கியபடி முன் ஸீட்டில் கிடந்தார். 'சக்ரபாணிக்குப் பைத்தியமே பிடித்து விட்டது!' என்று நினைத்தார்.

''தொழிலாளர் கூட்டம் நடக்கும் திடலுக்கு விடு காரை!'' என்று சக்ரபாணி டிரைவருக்கு உத்தரவிட்டான்.

டிரைவர், ''திடலுக்குங்களா?'' என்று இழுத்தவாறு கேட்டான்.



''ஏன், உனக்கும் பயமா? அப்போ நான் காரை ஓட்டிட்டுப் போறேன்!'' என்று கூறிவிட்டுக் காரில் ஏறினான் சக்ரபாணி.

''வேண்டாமுங்க'' என்று டிரைவர், பயந்து கொண்டே காரை ஓட்டினான். கார் திடலை நெருங்கியது.

திடலில் பல சைக்கிள்கள் கூட்டமாக நிறுத்தப் பட்டிருந்தன. தொழிலாளர் கூட்டத்தின் முன்பு சிறு மேடை இருந்தது. அதில் இரண்டு பேர் நின்று கொண்டு, சக்ரபாணி போல் கோட் சூட் போட்ட கொடும்பாவியைப் பிடித்துக் கொண்டிருந்தனர். அந்தப் பொம்மைக்கு முடியலங்காரம் கூடச் சக்ரபாணியின் முடி போலவே செய்திருந்தனர். தலைவன் ஒருவன், ''கலியுக அரக்கன் சக்ரபாணி ஒழிக! இரக்கமில்லாத அரக்கன் ஒழியப் போகிறான்! இதோ இந்தச் சக்ரபாணி எரிந்து சாம்பலாகப் போகிறான்! போனஸ் கொடுக்க மறுத்தவன் மடியப் போகிறான்!'' என்று கூறிவிட்டு, சக்ரபாணி உருவம் கொண்ட பொம்மைக்குத் தீ வைத்தான்.

துணிப் பொம்மை எரிய ஆரம்பித்தது. கூட்டத்திலிருந்து ''சக்ரபாணி ஒழிக! சக்ரபாணி ஒழிக!'' என்ற சத்தம் வானை முட்டியபடி எழும்பியது. பொம்மையை எரித்துவிட்டு, சக்ரபாணியையே எரித்துவிட்ட மகிழ்ச்சியில் கூட்டத்தில் உள்ள இளைஞர்கள் குதித்தனர்.

கூட்டத்தின் வெறுப்பு வெறியின் காரணமாகவும், எரித்த மகிழ்ச்சியிலும் அங்குள்ளவர் யாரும் சக்ரபாணியின் கார் நெருங்கியதையும், அதிலிருந்து சக்ரபாணி இறங்கியதையும் கவனிக்கவில்லை.

தன் உருவத்தை எரிப்பதைப் பார்த்த சக்ரபாணியின் மூச்சு வேகமாக வந்தது. அவன் கண்கள் தீயைப் போல் சிவந்தன. அவன் முகத்திலிருந்து படபடப்பு மறைந்தது. சாவின் அமைதி நிலவியது. பாலாவைப் பற்றிய குழப்பமான நினைவுகள்கூடச் சற்று மறைந்தன. அவன்

முகத்தில் ஒருவிதப் பயங்கரமான வெறுப்புத்தான் நிறைந்தது.

சாரங்கன் வெடவெடவென்று நடுங்கியபடி நின்றார். சக்ரபாணி, சாரங்கனைக் கவனித்தான். 'தூ!' என்று துப்பினான்.

''சாரங்கா, உனக்கு அவர்கள் எவ்வளவோ மேல்!'' என்று கூறிவிட்டுக் கூட்டத்தை நோக்கி நடந்தான்.

அந்தக் கூட்டத்தில் யாரும் சக்ரபாணியை எதிர் பார்க்கவில்லை. சக்ரபாணியைப் பார்த்ததும் ஆச்சரியம் அவர்கள் வாயை அடைத்தது. திகைப்போடு பார்த்தனர்.

வேங்கை போல் நடந்து தாவி, மேடை மேல் ஏறினான் சக்ரபாணி. உருவத்துக்குத் தீ வைத்தவன் அப்படியே வாய் திறந்து நின்று கொண்டிருந்தான்.

சக்ரபாணி, எரியும் உருவத்தை எடுத்துக் கூட்டத்தில் வீசினான். நெருப்போடு கூட்டத்தில் விழுந்த உருவத்தைப் பார்த்ததும் பயந்து, அந்தப் பகுதியிலுள்ள கூட்டம் விலகியது. குழந்தையொன்றைத் தோளில் தாங்கியபடி நின்ற ஒருவன், பயத்தில் குழந்தையை விட்டுவிட்டு ஓடினான். குழந்தை நெருப்பினால் சூழப் பட்டது. அது அலற ஆரம்பித்தது. இதைச் சக்ரபாணி கவனித்தான்.

சக்ரபாணி, ஒரு மாணவனைப் போல் மேடையிலிருந்து தரையில் குதித்தான். எரியும் பொம்மையின் கால்களுக்கிடையில் கிடந்த குழந்தையைத் தூக்கினான். தன் மணிக்கட்டில் தீ பட்டதைக்கூடக் கவனிக்கவில்லை. குழந்தையின் கைகளில் நெருப்புச் சுட்டிருந்தது.

நடுங்கியபடி நின்ற அந்தக் குழந்தையின் தகப்பனை ஏறிட்டுப் பார்த்தான்.

''நீ இந்தக் குழந்தையைப் பெற்றவன்தானே! நெருப்பு என்றதும் அதை எறிந்துவிட்டு, உன்னைக் காப்பாற்றிக் கொண்டாய். நீ அவ்வளவு தைரியசாலி!



உன் குழந்தையைக் காப்பாற்றத் தெரியாத நீ, தொழிலாளர் இனத்தைக் காப்பாற்றுவதாகக் கூச்சல் போடுகிறாய்! பிடி, குழந்தையை! உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போ! இந்தா நூறு ரூபாய், வைத்தியச் செலவுக்கு வைத்துக் கொள்'' என்று பணத்தையும் குழந்தையையும் கொடுத்தான்.

குழந்தையின் தந்தை பணத்தையும், குழந்தையையும் வாங்கிக் கொண்டான். குழந்தை அழுது கொண்டே இருந்தது.

தன் மகள் எங்கு இருக்கிறாள் என்று கண்டுபிடிக்க முடியவில்லையே என்ற சக்ரபாணியின் கையாலாகாத நிலைதான், அவனை அந்தக் குழந்தையைக் காப்பாற்றும் படியும், அதன் தந்தையைக் குற்றம் சாட்டும்படியும் தூண்டியதோ என்று சொல்ல முடியாது. அவனது மாமூலான பண்புக்குப் பொருத்தமில்லாத ஒரு காரியத்தைச் செய்து முடித்தான்.

குழந்தையைச் சக்ரபாணி பாய்ந்து தூக்கியது கூட்டத்தில் ஒருவித அமைதியை ஏற்படுத்தியது. கூட்டம் மரியாதையுடன் சக்ரபாணியைப் பார்த்தது.

''நான் ஏழையாயிருந்து பணக்காரனானவன். செல்வத்தை எனக்கு ஆக்கவும் தெரியும்; அதை அழிக்கவும் தெரியும்! நீங்கள் வேலை நிறுத்தம் செய்தால், நான் பஞ்சாலையை மூடிவிடுவேன். அப்புறம் திறக்கவே மாட்டேன்! இந்தக் கூட்டத்தின் செலவு, எரியும் இந்தப் பொம்மைக்கான செலவு, அதற்குத் தீ வைத்த நெருப்புப் பெட்டியின் செலவு எல்லாம் என் பணத்திலிருந்து வந்தவை. வீடு திரும்பியதும் நீங்கள் சாப்பிடப் போகும் உணவு, நான் கொடுத்த பணம். உங்கள் தொழிலாளர் தலைவன் கொடுத்த பணம் அல்ல! உங்கள் தலைவர்கள் எலிகள்! அவர்களுக்குச் சுரண்டத் தெரியும், வாங்கத் தெரியும், கொடுக்கத் தெரியாது! அவர்களால் கொடுக்கவும் முடியாது! எலிகளின் பேச்சைக் கேட்டுச் சாகப்

போகிறீர்களா? அல்லது வாழப் போகிறீர்களா? அதை நீங்களே முடிவு செய்யுங்கள். நீங்கள் கேட்கும் போனஸ் கிடையாது, கிடையாது என்று ஆயிரம் முறை சொல்கிறேன். 'பாலா பஞ்சாலை' மூடப்படும், வேலை நிறுத்தம் செய்த மறுநாளே!'' என்று கூறிவிட்டுக் கொஞ்சம் கூடப் பதற்றமில்லாமல் காரை நோக்கி நடந்தான் சக்ரபாணி.

அந்தக் கூட்டத்தை நடத்திய கட்சித் தலைவர்கள் இருவரும் ஆத்திரத்தோடு, ''ஏன் சும்மா நிற்கிறீங்க?'' என்று கூட்டத்தைத் தூண்டினார்கள்.

கூட்டம், தலைவனின் கூச்சலுக்குச் செவி சாய்க்கவில்லை. நடந்து செல்லும் முதலாளியை மரியாதையோடு பார்த்தபடி நின்றது.

தொழிலாளிகளின் தலைவரான இருவர் மட்டும், ''சக்ரபாணி ஒழிக!'' என்று கோஷமிட்டபடி நின்றனர்.

சக்ரபாணி காரில் ஏறியதும், சாரங்கன், ''ஒண்டர்புல் சார்! ஒண்டர்புல்! காலிப் பசங்க அப்படியே அசந்து போயிட்டாங்க!'' என்று சக்ரபாணியின் தைரியத்தைப் புகழ ஆரம்பித்தார்.

ஆனால் சக்ரபாணியின் மனத்தில் மறுபடியும் பாலாவின் நினைவு வரத் தொடங்கியது. அரை மணி நேரத்துக்கு மறைந்திருந்த எண்ணங்கள் மறுபடியும் குவிந்து வேதனை கொடுத்தன!

சக்ரபாணி, ''ஷட் அப் சாரங்கன்!'' என்று கூறிவிட்டு டிரைவரிடம், வீட்டுக்கு வண்டியை ஓட்டும்படி உத்தரவிட்டான்

வீடு நோக்கி வண்டி நகரவும், பாலா இல்லாத வீட்டில் நுழையப் போகிறோம் என்ற உணர்வு அவன் மனத்தைப் பிடித்துக் கொண்டது.

வண்டியிலிருந்து இறங்கியதும் பாலாவின் தோழி மாலா கேட்ட முதல் கேள்வி, பாலாவைப் பற்றித்தான்.



''பாலா இன்னும் வீடு திரும்பலியே...'' என்றாள்.

அவளுக்கு என்ன பதில் சொல்வது! அவள் ஓடிவிட்டாள் என்று சொன்னால், போலீசை விட்டு ஏன் தேடவில்லை என்ற கேள்வி பிறக்கும். தேட ஆரம்பித்தால்—பாலா கடிதத்தில் எழுதியபடி ஏதாவது செய்துவிட்டால்...? இந்தப்பிரச்சினைக்கு முடிவு காணவேண்டுமே!

சாரங்கன், ''பாலா வீட்டிலே இல்லையா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

சக்ரபாணி புன்முறுவல் செய்தான். பாலாவின் தோழியைப் பார்த்து, சிறிதுகூடக் கவலை இல்லாதவன் போல், ''பாலா பாம்பே போயிருக்கிறாள். மலேயாவிலிருந்து நண்பர்கள் வந்தாங்க. அவர்களோடு போயிருக்கிறாள். நாளைக்கு ஃபோன் பண்றேன்னு சொல்லியிருக்கிறாள். யாரும் கவலைப்பட வேண்டாம்!'' என்று ஒரு பொய் சொல்லிவிட்டு வீட்டினுள் நுழைந்தான்.

இனி இந்தத் துன்பம் ரகசியமாக, தான் மட்டும் அநுபவிக்க வேண்டிய துக்கமாகத்தான் இருக்க வேண்டும் என்று தீர்மானித்தான்.

தன் படுக்கை அறையில் போய்ப் படுத்து, குழந்தை போல் விம்மினான். ஊரைக் கண்டு பயப்படாதவன், எதிரிகளைக் கண்டு அஞ்சாதவன், பாலாவின் கடிதத்தில் இருந்த வரிகளை—''என்னைத் தேடுவதாகத் தெரிந்தால், என் பிணம்தான் உங்களுக்குக் கிடைக்கும்'' என்ற வார்த்தையை—நினைத்து நடுங்கினான்.

## 36

சக்ரபாணி கூட்டம் நடந்த திடலிலிருந்து புறப்பட்டபோது பெருவாரியான தொழிலாளர்களின் மனத்தை வென்று விட்டான் என்றே சொல்லவேண்டும். அதை அவனே எதிர்பார்க்கவில்லை. அவர்கள் மனத்தை

வெல்லவும் அவன் முயலவில்லை. பாலாவை மறக்க, தன் ஆத்திரத்தைக் காட்டவே திடலுக்குள் நுழைந்தான். பிரசாரத்தால் தன்னை விஷமாக வெறுக்கும் ஒரு கூட்டத்தின் நடுவே செல்கிறோம் என்ற பயமோ வெறுப்பு உணர்வோ இல்லாது நுழைந்தான். அப்புறம் நிகழ்ச்சிகள் ஒன்றன் பின் ஒன்றாக நிகழ்ந்து விட்டன. ஆனால் தொழிலாளர்கள் சக்ரபாணியின் துணிவையும், அவன் குழந்தையைத் தீயிலிருந்து காப்பாற்றிய காட்சியையும் பார்த்து முதலாளியிடம் ஒரு மரியாதை கலந்த பயத்தை அடைந்தனர்.

தொழிலாளர்களிடம் இதுவரை பிரசங்கத்தின் மூலமாகப் பிரசாரம் செய்த தலைவர்கள், சக்ரபாணியைக் கஞ்சனாகவும், கோழையாகவும், நகைச்சுவைப் பாத்திரமாகவும் வர்ணித்திருந்தமையால், இப்போது சக்ரபாணியின் நடத்தை முற்றும் மாறாகத் தோற்றமளித்தது, தொழிலாளர்களுக்கு.

அவன் அவர்களிடம் பயப்படவில்லை; தொழிலாளர் தலைவர்களிடமும் பயப்படவில்லை. அவன் திடலில் நுழைந்த பின்பு வாய்ப்பூட்டு போடப்பட்டவர் போல் திகைத்து நின்றவர்கள், தொழிலாளர் தலைவர்களே.

கூட்டத்துக்கு அதன் தலைவர்கள் மீது வைத்திருந்த நம்பிக்கை அசைவு கொடுத்தது. சக்ரபாணி சென்ற பின்பு தொழிலாளர் தலைவர்கள் மறுபடியும் உறும ஆரம்பித்ததும், கூட்டம் பேச்சை அவ்வளவாக ரசிக்கவில்லை. கூட்டத்திலுள்ளவர்கள் மெல்ல நகர ஆரம்பித்தனர்.

கூலிப் பணத்தில் ஒரு பகுதிப் பணத்தைக் கூட்டச் செலவுக்கும், தலைவர்களுக்கும் காணிக்கையாகக் கொடுத்து விட்டு நிரந்தரப் பட்டினியைத் தேடுவது சரியல்ல என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டது.

மில் தொழிலாளர் தலைவன் மரியசூசை என்பவன் வார்த்தைகளை அடுக்கினான், குரலை எழுப்பிக் கூச்சலிட்டான்.

www.t.me/tamilbooksworld



''உழைப்பாளிகளின் ஒற்றுமை தளரக் கூடாது!'' என்று கர்ஜித்தான். வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியை உடைக்காதீர்கள். சிம்மாசனத்தில் வீற்றிருந்த முதலாளி, நம்மைத் தேடி வந்து விட்டான். அடுத்தபடி அவன் சரணாகதியாகிவிடுவான்'' என்று மரியசூசை பேசிய போது, கூட்டத்தில் வழக்கமாக ஏற்படும் கைத்தட்டல் ஏற்படவில்லை.

மரியசூசை பேசுவது வெறும் பேச்சு. ஆனால் சக்ரபாணி பேசியது அப்படியல்ல. ஒவ்வொரு வார்த்தையையும், அவன் செயல்படுத்துவான் என்ற பயத்தைக் கொடுத்தது.

''மில்லை இழுத்து மூடிவிடுவேன்'' என்று சொன்னால் அது உண்மையிலேயே நடந்துவிடும் என்று நம்பினார்கள்.

தொழிலாளர்களுக்கு நடுவில் முதல் நாள் வரை உயர்ந்து நின்ற மரியசூசையின் உருவம் சற்றுக் குறைந்த பரிமாணத்துடன் தோன்றியது. அதை மரியசூசையும் அவனுக்கு நெருக்கமான தோழர்களும் உணர்ந்தனர். முதலாளி எங்கோ தூரத்தில் இருந்தபோது அவனை வெறுப்பின் சின்னமாக, அரக்கனாக நினைக்க, வர்ணிக்க முடிகிறது. ஆனால் அதே முதலாளி நேருக்குநேர் கூட்டத்தின் நடுவில் வந்து சாதாரண மனிதனாக, சாதாரண மனிதனுடைய கோபத்தோடு நடந்து கொண்டபோது முதலாளியும் நம்மைப் போன்ற மனிதன்தான் என்று நம்பினார்கள்.

சக்ரபாணி சிரித்து மழுப்பல் வார்த்தைகளைப் பேசியிருந்தால், பொய்ப் பிரமாணங்கள் செய்திருந்தால், கூட்டம் ஆத்திரத்தில் அவன்மீது பாய்ந்து அவனைக் கிழித்திருக்கும். ஆனால் சக்ரபாணி கூட்டத்தின் ஆத்திரத்தைத் தன்னுடைய கோபத்தால் சந்தித்தான்.

முதலாளி சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் அவர் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து வருகிறது. நம்பிக்கை

யோடு பேசுகிறார். நமக்குக் கோபம் வருகிறது என்றால் அவர் கட்சியிலும் ஒரு வேளை நியாயம் இருக்குமோ?

சக்ரபாணி வெறும் கோபக்காரனாக, அரக்கனாக இருந்தாலும், எப்படிப் பாய்ந்து அந்தக் குழந்தையின் உயிரைக் காப்பாற்றினார்! நம் தலைவர்கள் செய்தார்களா? மரியசூசை கைகட்டி வாய் மூடித்தானே நின்றிருந்தான்? இப்படிப் பலவித குழப்பமான எண்ணங்கள் தொழிலாளர்களின் மனத்தில் எழுந்தன.

கூட்டத்தை மயக்கும் சக்தி தன்னை விட்டு நகர்வதை மரியசூசை, கூட்டம் கலைவதிலிருந்து புரிந்து கொண்டான். மரியசூசைக்குச் சக்ரபாணியின்மீது பன்மடங்கு ஆத்திரம் வந்தது. மேக்கப் இல்லாத சுயநிலையில், அழகில்லாத பெண் நட்சத்திரத்தை ஒருவன் போட்டோ எடுத்து விட்டால், அவள் மனம் என்ன பாடுபடுமோ அந்தப் பாடுபட்டான் மரியசூசை. சக்ரபாணியைத் திட்ட ஆரம்பித்தான்.

கூட்டம் சிரிக்க ஆரம்பித்தது. சிரித்தபடி கூட்டம் கலைந்தது.

அந்தக் கூட்டத்தில் கூடியிருந்த சில பத்திரிகையாளர்கள், பத்திரிகைக்குச் சுவாரஸ்யமான செய்தி கிடைத்தது என்று ஆவலோடு சென்று சக்ரபாணியின் துணிவைச் சற்று அதிகமாகவே வர்ணித்து எழுதினார்கள்.

மறுநாள் காலை காய்கறிகள் வாங்குவதற்குப் பாலா மார்க்கெட்டுக்குச் சென்றிருந்தபோது, அங்கு ஒரு கடைக்காரன் பேப்பரில் வந்த செய்தியை ஒரு தொழிலாளிக்குப் படித்துக் காட்டிக் கொண்டிருந்ததைக் கேட்க நேர்ந்தது.

தொழிலாளிகள், தந்தையைப் புகழ்ந்து பேசியது பாலாவுக்கே ஆச்சரியமாக இருந்தது. அமைதியுடன் இரக்கமில்லாது நடந்துகொள்ளும் தந்தை, ஏன் விரோதிகள் கூட்டத்தில் சென்று இளைஞன்போல் நடந்து கொண்டார்? ஜோன்ஸ் தற்கொலை செய்துகொண்டான்



என்ற செய்தியைக் கேள்விப்பட்டபோது கொஞ்சம்கூட இரக்கம் காட்டாதவர், எப்படிக் குழந்தையைக் காப்பாற்றினார்? நாம் வீட்டைவிட்டு வந்தபின்பு அவர் மனப்பக்குவத்தில் ஏதாவது மாறுதல் நிகழ்ந்திருக்குமோ என்று நினைத்தாள்.

அந்தப் பேப்பரை வாங்கி முழு விவரமும் படிக்க வேண்டுமென்று ஆவல் எழுவே, அதை வீடு திரும்பும் போது வாங்கினாள்.

வீட்டுக்கு வந்ததும் பாலாவுக்குச் சமையல் வேலைக்கே காலம் போதவில்லை. ஆகையால் உடனே பேப்பர் படிக்காமல் வைத்துவிட்டாள்.

ரங்கனும் கமலாவும் கல்லூரிக்குப் புறப்பட ஆயத்தமாயினர். கமலா தன் தாயிடம் நடுப்பகல் டிபனுக்காக ஒன்றரை ரூபாய் பணம் கேட்டாள்.

பாலாவுக்கு, வீட்டுப் பொருளாதாரம் இருக்கும் நிலையிலே பணம் கொடுத்துக் கடையில் பலகாரம் வாங்கிச் சாப்பிட வேண்டுமா என்று தோன்றியது.

மெல்ல மரகதம்மாளிடம் பேச்சுக் கொடுத்தாள்.

''ஏனம்மா வீட்டிலேயே ஐந்து நிமிஷத்திலே உப்புமா தயார் செய்து கொடுத்து விடுகிறேன். வீட்டு டிபன் எடுத்துப் போனால் ரூபாய் மிஞ்சுமே! ஒரு நாளைக்கு மூன்று ரூபாய் என்றால் ஒரு மாதத்துக்குத் தொண்ணூறு ரூபாயாகிறது'' என்றாள்.

''என்ன செய்கிறது? அவளுக்கு வருத்தமே தெரியவில்லை. ஓட்டலிலே சாப்பிடுவதைக் கௌரவமாக நினைக்கிறாள் கமலா'' என்றாள் மரகதம்மாள்.

''சுமதி உப்புமா தயார் செய்தால், நான் கல்லூரிக்கு எடுத்துப் போகத் தயாரம்மா. என் வகையிலே ஒன்றரை ரூபாய் மிச்சம்'' என்றான் ரங்கன்.

www.t.me/tamilbooksworld

இதைக் கேட்ட கமலாவுக்குச் சுமதியின்மீது எரிச்சலாக இருந்தது.

''கல்லூரிக்கு அடுத்தாற்போல இருக்கிற பாலா ரெஸ்ட்டாரண்டிலேதான் எல்லா மாணவிகளும் சாப்பிடுகிறார்கள். நான் மட்டும் டிபன் பொட்டலத்தைத் தூக்கிப் போனால் சிரிப்பார்கள்'' என்றாள்.

பாலாவுக்குச் சிரிப்பு வந்தது. ''ரொம்பப் பெரிய வீட்டுப் பெண்கள் ஓட்டலிலே சாப்பிட மாட்டார்கள். வீட்டிலேயிருந்துதான் சாப்பாடு கொண்டு வருவார்கள் கமலா!'' என்றாள்.

''உனக்குப் பெரிய இடத்து விஷயம் ரொம்பத் தெரியுமோ! நான் டிபன் மூட்டையைத் தூக்க முடியாது!''

''நீ தூக்க வேண்டாம் கமலா. நான் கல்லூரி டிபன் ரூமுக்கு எடுத்து வருகிறேன். நீ சாப்பிடுகிறவரையிலே அங்கே இருந்து அப்புறம் பாத்திரத்தை வீட்டுக்கு எடுத்துக் கொண்டு வருகிறேன். அப்போது சரியா?'' என்று சிரித்தபடி கேட்டாள் பாலா.

கமலாவால் ஒன்றும் பதில் பேச முடியவில்லை.

''நீ எதற்குச் சுமதி டிபன் தூக்கணும்?'' என்றாள் மரகதம்மாள்.

''எனக்கும் பகல் பன்னிரண்டிலிருந்து மூன்று மணி வரையிலும் வேலையில்லை. பகலிலே தூங்குகிற பழக்கமும் இல்லை. அப்படியே கொஞ்ச தூரம் போய்விட்டு வந்தால் நன்றாயிருக்கும்'' என்றாள் பாலா.

ரங்கன் மட்டும் சுமதி தயார் செய்த உப்புமா பொட்டலத்தை எடுத்துச் சென்றான்.

ஒரு மணிக்குப் பாலா ஒரு டிபன் பாக்ஸில் டிபனை எடுத்துக்கொண்டு, கமலா படிக்கும் கல்லூரிக்குச் சென்றாள்.



வகுப்புக்கள் முடியும் வரையில் கல்லூரி டிபன் ரூமில், தன் தந்தையைப் பற்றி எழுதியிருந்த செய்தித் தாளைப் படித்தாள். தொழிலாளர் கூட்ட நிகழ்ச்சியைப் படிக்கவே அவளுக்குப் பெருமையாக இருந்தது. அவள் பிரிவைத் தந்தை எப்படி எடுத்துக்கொள்கிறார் என்பதை அறிய ஆவலாக இருந்தது. வீட்டைவிட்டு வந்து சில நாட்கள் ஆகிவிட்டதால், அவளுக்குத் தாயைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையும் எழுந்தது. ஆசையை அடக்கிக் கொண்டாள்.

மணி அடித்ததும் சில மாணவிகள் நேராக டிபன் ஷெட்டுக்கு வந்தனர். அவர்களோடு கமலாவும் வந்தாள். கமலாவுக்கு, டிபன் பாக்ஸோடு நிற்கும் சுமதியைப் பார்த்ததும் கடுகடுப்பாக இருந்தது.

''என்ன சுமதி நின்றுகொண்டிருக்கிறாய்? சீக்கிரம் இலையைப் போட்டுப் பரிமாறு'' என்று வேலைக்காரியைக் கட்டளையிடுவதுபோல் சொன்னாள்.

பாலாவுக்கு உண்மையிலேயே ஆத்திரம் வந்தது. ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு பரிமாறினாள். கமலா மடமடவென்று சாப்பிட்டாள். மறு வார்த்தைகூடப் பேசாமல் எழுந்து சென்று அருகிலுள்ள குழாயில் கை கழுவினாள்.

அப்போது வேறு ஒரு மாணவி, ''என்ன கமலா, யார் இந்தச் சுமதி? உங்கள் வீட்டு வேலைக்காரியா?'' என்று கேட்டாள்.

கமலா பெருமையுடன், ''ஆமாம். அவள் வந்து கொஞ்சநாள்தான் ஆகிறது'' என்று கூறிவிட்டுச் சுமதியைப் பார்த்தாள்.

''பார்க்கிறதற்கு வேலைக்காரி மாதிரியே தெரியவில்லை. சினிமா ஸ்டார் மாதிரி இருக்கிறாளே!'' என்றாள் அந்த மாணவி.



www.t.me/tamilbooksworld

கமலா பதில் பேசாமல் டிபன் அறையை விட்டுச் சென்றாள்.

பாலாவுக்கு அழுகையாக வந்தது. கண்ணீர் வடித்தபடியே டிபன் டப்பாவை எடுத்துக் குழாயில் கழுவினாள்.

'நான் ஏன் இந்த வேலையைச் செய்ய வேண்டும்?' என்று ஒரு விநாடிக்கு நினைத்தாள். அடுத்த விநாடியே, 'அப்பாவினால் எவ்வளவு பேர் அழுதிருக்கிறார்கள்! என் கண்ணீரால்தானே அதையெல்லாம் நான் கழுவ வேண்டும்!' என்று தனக்குத் தானே தேற்றிக் கொண்டாள்.

காலியான டிபன் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு வெளியே நடந்தாள். மரகதம்மாளின் கைவசமுள்ள பணத்தில் மூன்று ரூபாய் மிச்சம் செய்துவிட்டோம் என்ற திருப்தி ஏற்பட்டது. உடனே, குருமூர்த்தி ஈட்டிக்காரனிடம் உள்ள கடனைப் பற்றி பாலாவுக்கு நினைவு வந்தது. அதைத் தீர்க்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது.

அப்போது கல்லூரியின் உட்புறம் சிறிய ஃபியட் கார் நுழைவதைப் பார்த்தாள். அந்தக் காரில் முன் சீட்டில், சக்ரபாணியின் கோயமுத்தூர் நண்பர் தியாகராஜனின் செல்வமகனான மணி உட்கார்ந்திருப்பதைக் கவனித்தாள்.

மணியின் ஒழுக்கம் எப்படிப்பட்டது என்று ஏற்கனவே பீச்சில் பாலாவுக்கு அறிமுகமாகியிருந்ததால், அவன் பெண்கள் கல்லூரிக்கு வருவதில் ஆச்சரியமில்லை. இவன் கோயமுத்தூரிலிருந்து எப்போது வந்தான். இங்கே கல்லூரியில் யாரைப் பார்க்க வந்திருப்பான் என்று அறிய ஆவலுடன் செடிகளின் மறைவில் நின்று கவனித்தாள்.

மணி காரைப் போர்டிகோவுக்கு அருகில் கொண்டு போகாமல் நிறுத்தி விட்டு, யாருக்காகவோ காத்திருப்பது அவள் சந்தேகத்தை அதிகப்படுத்தியது.

சிறிது நேரத்தில் பெல் அடிக்கவும் மாணவிகள் வகுப்புக்குள் சென்றனர். மணி சிகரெட் பிடித்தபடி

www.t.me/tamilbooksworld



காரிலேயே அமர்ந்திருந்தான். சில விநாடிகளில் கமலா, அவன் காரை நோக்கிச் சிரித்தபடி வந்தாள். மணி அவளைக் காரில் ஏறச் சொன்னான். கமலா தயங்கினாள். "இப்போது வேண்டாம். நாலு மணிக்கு வாருங்கள்" என்று சொல்லிவிட்டு வகுப்பை நோக்கி ஓடினாள்.

மணி ஏமாற்றத்துடன் அர்த்தமில்லாத காரின் ஹாரனை அடித்தபடி சென்றான். பாலா குழப்பத்தோடு நின்றாள். மரகதம்மாள் வாழ்வில் அவள் மகளால் சோகம் ஏற்படாமல் எப்படிக் காப்பது என்று பாலாவுக்குப் புரியவில்லை.

## 37

கோயமுத்தூர் மில் முதலாளி தியாகராஜனின் மகன் மணிக்கும், வசதியில்லாது தத்தளிக்கும் மரகதம்மாளின் மகள் கமலாவுக்கும் எப்படி நட்பு ஏற்பட்டிருக்க முடியும்?

கோயமுத்தூர் தியாகராஜனைப் பற்றி நினைக்கும் போது பாலாவுக்கு வேடிக்கையாக இருந்தது. மணியைத் தனக்குக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நினைத்தவர் தியாகராஜன். இது விஷயம் அவருக்குத் தெரிந்தால் என்ன சொல்வார்?

'உருப்படாத நாய் மணியைச் சென்னைப் பட்டணத்துக்கு அனுப்பிச்சா, அந்த நாய் தெருவிலே சுத்துது!' என்று சொல்ல மாட்டாரா? இப்படிப்பட்ட அயோக்கியனை, அப்பா கண்மூடித்தனமாகத் தனக்கு மணமகனாகப் பொறுக்கியிருக்கிறாரே! பாவம் மரகதம்மாள்! ஏழ்மையில் வாடும் நிலையில், பெண் வலையில் ஏதாவது விபரீதமான அவமானம் நேர்ந்து விட்டால்... அந்த அம்மாள் பொறுக்கவே மாட்டாளே!

கமலாவிடம் இது விஷயமாகப் பேசலாமா? எப்படிப் பேசுவது? நான் யார் என்று சொல்ல வேண்டும்! மணியை எப்படி எனக்குத் தெரியவந்தது என்று சொல்லவேண்டும்!

கமலாவுக்கு இப்போது இருக்கும் மயக்கத்தில் அவள் மணியைத்தான் நம்புவாள், தன்னை நம்பமாட்டாள் என்பதும் பாலாவுக்குத் தெளிவாகத் தெரியும்

மணி உறுதியான எண்ணத்தோடு கமலாவை மணப்பான்; அவளுக்கு மனைவி என்ற அந்தஸ்தைக் கொடுப்பான் என்று நம்பவும் இடமில்லை. லால்குடி சீனிவாசன் குடும்பத்தைப் பொருளாதாரப் பிரசினையை விடப் பயங்கரமான வேறு ஓர் ஆபத்து சூழப் போகிறதோ என்று நினைத்துக் குழம்பினாள்.

இவ்வாறு சிந்தித்தபடி நடந்துகொண்டு வந்தபோது எதிரே வரிசையாக இரண்டு மூன்று ஃபர்னிச்சர் கடைகளின் போர்டுகள் பாலாவின் கண்களில் தென்பட்டன. உடனே கடைகளுக்குள் நுழைந்தாள். ஒவ்வொரு கடையிலும் நுழைந்து, அங்குள்ள முதலாளிகளிடம் சிலவிநாடிகள் பேசினாள். அவற்றில் ஒரு கடை ஏலக் கடை என்பதைப் புரிந்து கொண்டாள். பழைய சாமான்களை ஏலம் விடும் கடையில் வைக்கப்பட்டிருந்த பீரோக்களின், மேஜை நாற்காலிகளின் குறைந்தபட்ச விலையை முதலாளியுடன் பேசிய பேச்சிலிருந்து நிர்ணயித்துக் கொண்டாள். பிறகு ஒவ்வொரு கடை முதலாளியிடமும் தன் வீட்டில் விற்பனைக்குப் பொருள்கள் இருப்பதாகவும், அதை மறு நாள் காலை பத்து மணிக்குமேல் வந்து பார்க்கும்படியும் கேட்டுக் கொண்டாள்.

பாலாவின் தோற்றமும், அவள் பேசிய முறையும். அந்தக் கடைக்காரர்கள் மனத்தில் ஒருவித மதிப்பைக் கொடுத்தது. பாலா பேசிய பேச்சு, அவள் ஏதோ பணத் தேவையில் இருக்கிறாள். அதனால் பழைய பொருள்களை விற்கிறாள் என்பதுபோலத் தோன்றவில்லை.

பழைய பொருள்களைக் கழித்துவிட்டுப் புது மாதிரியான ஃபர்னிச்சர் வாங்கப் போகிறவள்போல் அந்தஸ்து விடாமல் பேசினாள். ஒருவிதத் திருப்தியுடன்



வெளியே வந்த பாலா மனத்தில் அந்தத் திருப்தி சில விநாடிகளுக்குத்தான் இருந்தது.

நாம் எல்லா ஏற்பாடும் செய்து விட்டோம். மாடி வளைவு அறையில் வைத்திருக்கும் பழைய பொருள்களைக் குருமூர்த்தியோ, அவன் தாயோ விற்கச் சம்மதிப்பார்களா?

எப்படியாவது மரகதம்மாவின் மனத்தைத் தன் வழிக்குக் கொண்டுவர வேண்டுமென்று நினைத்தாள். அப்போது பாலாவுக்கு எப்போதோ சக்ரபாணி சொன்ன வார்த்தைகளும், ஒரு நிகழ்ச்சியும் ஞாபகத்துக்கு வந்தன.

ஒரு பெரிய துணிக்கடையைக் காட்டி பாலாவிடம் காரில் அமர்ந்தபடியே சக்ரபாணி சொன்ன வார்த்தைகள் அவை:

''பாலா, அந்தத் துணிக் கடையை உன் பேரிலே வாங்கப் போகிறேன்!''

''ஏம்ப்பா, அவர் விற்கச் சம்மதித்து விட்டாரா?'' என்று கேட்டாள் பாலா.

''இல்லைம்மா, அவனுக்கு நல்ல லாபம் வருது, அவர் விற்கமாட்டான்.''

''பின்னே எப்படியப்பா வாங்கப் போகிறீர்கள்?''

''பாலா, மனிதன் ஆசை மயமானவன்! ஆசைதான் மனிதன் மனத்தைக் குழப்புகிறது. அந்தக் கடைக்காரன் மனத்தில் சில ஆசைகளை விதைக்கப் போகிறேன். இந்தத் துணிக்கடை பிஸினஸ் ஒன்றுமில்லை, இதைவிடப் பிரமாதமான பிஸினஸ் ஒன்று இருக்கிறதென்று அவன் மனத்தில் ஓர் எண்ணம் தோன்றி விட்டால் இதை விற்று விடுவான்!'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தார்.

இந்தப் பேச்சு நிகழ்ந்த ஒரு வாரத்துக்கெல்லாம் அந்தத் துணிக்கடை 'பாலா டெக்ஸ்டைல்ஸ்' ஆக மாறியது.

சக்ரபாணி, பாலாவைச் சிரித்தபடி அந்தக் கடைக்கு

www.t.me/tamilbooksworld

அழைத்துச் சென்று, அவளிடம் பணம் கொடுத்து முதல் சேலை வாங்கிக்கொள்ளச் சொன்ன காட்சி நினைவுக்கு வந்தது.

'அப்பாவின் சாமர்த்தியம் மட்டும் எனக்கு இருந்தால், குருமூர்த்தியின் வீட்டுப் பொருளாதாரத்தை எவ்வளவு சீக்கிரத்தில் மாற்றிவிடலாம்! இல்லை, தந்தையிடம் சென்று, குருமூர்த்திக்கு இவ்வளவு ரூபாய் கொடுத்தால் தான் வீடு திரும்புவேன் என்று சொல்லிவிட்டால் தொந்தரவு இல்லாமல் பிரசினை தீர்ந்துவிடுமல்லவா? ஒரு வேளை தந்தை ஜோன்ஸ் விஷயத்தில் பிடிவாதமாக இருந்த மாதிரி பணம் தர மறுத்துவிட்டால்...? தந்தை லட்சக்கணக்கில் பணம் கொடுக்கச் சம்மதித்தாலும், அது அவர் மனமுவந்து கொடுத்தது ஆகாது! பாலாவின் மிரட்டலுக்காகக் கொடுத்தது ஆகும்! லால்குடி சீனிவாசன் குடும்பத்துக்கு பாலா பிச்சைப் பணம் அளிக்கவா வந்தாள்? இல்லை! உடலை, உள்ளத்தை வருத்திச் சேவை செய்யவே வந்தாள். என் உழைப்பால் இந்த வீட்டில் சிறிது கஷ்டம் நீங்கினாலும், அதுவே எனக்குப் பொருத்தமான சரியான வழி' என்று தோன்றியது.

வீடு திரும்பியதும் பாலா, பழைய மேஜை நாற்காலிகளையும் பீரோக்களையும் விற்கும் பிரச்னை பற்றி எப்படிப் பேச்சுத் தொடங்குவது என்று யோசித்தாள். அப்போது மரகதம்மாள் அன்னபூரணியின் அறையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தாள். மரகதம்மாள் மடியில் புதிதாகப் பிறந்த பேத்தி படுத்துக் கொண்டிருந்தாள். குருமூர்த்தி எங்கோ சென்று பணம் புரட்ட முயன்றுவிட்டு அப்போதுதான் தோல்வியுடன் திரும்பியிருந்தான் என்பது அவன் முகத்தில் எழுதி ஒட்டியது போல் தெரிந்தது.

மரகதம்மாள் தன் மகனைப் பார்த்து, "டேய் குரு குடும்பங்களுக்குக் கஷ்டம் வருவதும் ஒரு பிறப்பாலே என்று சொல்வாங்க. உன் குழந்தை லட்சுமியாலே நம்ம

www.t.me/tamilbooksworld



கஷ்டமெல்லாம் தீர்ந்துவிடுமென்று தோன்றுகிறதடா!" என்றாள்.

குருமூர்த்தி, "நான் என்ன கஷ்டம் தீரவேண்டாமென்றா சொல்கிறேன்? தீரட்டுமே?" என்று வெடுக்கென்று சலிப்புடன் பதில் சொன்னான்.

"ஏண்டா சலித்துக்கொண்டு பதில் சொல்கிறே? கஷ்டம் இருக்கிறதென்று தெரிந்து எதை நிறுத்தி விட்டோம்? ரங்கன் படிக்கவில்லையா? கமலா காலேஜ் போகவில்லையா? கஷ்டத்துடனே வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறோம். குழந்தை லட்சுமி தரையிலே, பாயிலே கிடக்கிறது எனக்கு என்னவோ போல இருக்கிறதடா, அவளை ஒரு நல்ல வேளையிலே தொட்டிலிலே போட்டுப் பார்க்க வேண்டுமென்று ஆசையாயிருக்கிறது" என்று கூறினாள்.

"தொட்டில்தான் குறைச்சல்! கடன்காரன் வந்து வாசலிலே நிற்கிறான். வீட்டிலே இருக்கிற சாமானை அவன் எடுத்துக்கொண்டு போகாமல் இருந்தால் அதுவே பெரிதென்று நினைக்கிறேன். இப்போது போய்த் தொட்டில் வாங்கச் சொல்கிறாயே அம்மா?" என்றான் தன்னையும் மறந்தபடி.

மூல்தானி விஷயம் குருமூர்த்தியின் பேச்சில் அவனையும் அறியாமல் மறைமுகமாக வெளிப்பட்டது.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த பாலா இதுதான் சமயம் என்று குறுக்கிட்டாள்.

"எனக்குக்கூட அதே ஆசைதானம்மா! நம்ம லட்சுமியை ஓர் ஸ்டீல் தொட்டிலில் படுக்கவைத்து, மேலே ஒரு செலுலாய்ட் மணி கட்டின கிலுகிலுப்பை கட்டிவிட வேண்டும்."

"நீயும் சேர்ந்துவிட்டாயா சுமதி! 'பிச்சையெடுக்குதாம் பெருமாள், பஞ்சாமிர்தத்துக்கு அழுததாம் அனுமார்' என்று இருக்கிறது நம் நிலைமை! அம்மா, இனி

மேலும் உன்கிட்ட விஷயத்தை மூடிவைக்கப் போவ தில்லை! மூல்தானியிடம் கடன் வாங்கியிருக்கிறேன். அந்தக் கடனைக் கட்டவில்லையென்றால் அவன் எந்த நிமிஷம் வேண்டுமானாலும் வீட்டிலே நுழைந்து அவனுக்குத் தோன்றுவதை எடுத்துக்கொண்டு போய் விடுவான்! இதுவரையிலே ஜப்தி நடக்கவில்லை. இந்த லட்சுமி பிறந்த அதிர்ஷ்டம் அதுவும் நடக்கப் போகிறதோ என்னவோ! அடுத்த மாதத்துக்குள்ளே எனக்கு வேலை கிடைக்கவில்லை, கமலா, ரங்கன் படிப்பை நிறுத்த வேண்டியதுதான்! என் கஷ்டத்தை நான் மூடி வைப்பதால்தான் எல்லோரும் பொறுப்பில்லாமல் அவரவர்களுக்குத் தோன்றுகிறபடி செலவு செய்கிறீர்கள்!" என்று படபடப்புடன் இரைந்தான்.

மரகதம்மாளுக்கு மூல்தானி விஷயம் தெரியா தாகையால் அப்படியே திகைத்து விட்டாள்.

அன்னபூரணியின் கண்கள் கலங்கின. அம்மாகிட்டே ஏன் இப்படிப் படபடப்பாகப் பேசுகிறீர்கள்? கொடுத்து வாழ்ந்த கை அம்மாவுக்கு. திடீரென்று பிடித்து வாழ்கிற தென்றால் முடியுமா?" என்று மாமியாருக்குச் சாதகமாகப் பேசினாள்.

"கொடுத்து வாழ்ந்த காலம் மலையேறிப் போயிற்று, அன்னம்! இனிமேல் ஒவ்வொரு பைசாவையும் இழுத்துப் பிடித்து வாழ்ந்தால்தான் முடியும். வீட்டுச் செலவு சரிபாதி யானால்தான் கட்டிவரும். கமலாவின் டாம்பீகச் செலவை, காலேஜ் படிப்பை உடனே நிறுத்த வேண்டும்."

"ஏண்டா குரு, குழந்தைக்குத் தொட்டிலைக் கேட்கப் போனால் ஏதேதோ சொல்கிறாய்!" என்றாள் மரகதம் மாள், விஷயத்தைப் புரிந்து கொள்ளாமல்.

"பணத்தைக் கையிலே வைத்துக்கொண்டு ஏன் கஷ்டப்பட வேண்டும்? கடன் வாங்கவேண்டும்?" என்று அமைதியாகக் குறுக்கிட்டாள் பாலா.

குருமூர்த்தி ஆத்திரத்துடன் பாலாவின் மீது எரிந்து

www.t.me/tamilbooksworld



விழுந்தான். "பணமா! எங்கே இருக்கிறது? அந்த மூல்தானி தெருவிலே எங்கிட்டே பேசினதைக் கவனித்துக் கொண்டுதானே இருந்தாய் நீ சுமதி!" என்றான்.

"மாடி வளைவு அறையிலுள்ள சாமான்களை நாம் உபயோகப்படுத்துவதே இல்லை. வீணாக இடத்தை அடைக்கிறது. மூல்தானியோ மற்றக் கடன்காரர்களோ எடுத்துக்கொண்டு போவதற்கு முன்னால் அதை விற்று விட்டால் உங்கள் தேவைக்கு மேலேயே பணம் கிடைக்காதா?"

"அதெல்லாம் பழங்காலத்துச் சரக்கு. அதை யார் வாங்கிக் கொள்வார்கள்? அதை விற்று என்ன பணம் வரும்?" என்றான் அலட்சியமாக.

"அதை விற்றுப் பணமாக்குகிற பொறுப்பை என் கிட்டே விட்டுவிட்டீர்களானால் நான் பார்த்துக் கொள் கிறேன். கொஞ்சம் வார்னிஷ் வாங்கி அதைச் சுத்தம் பண்ணிப் பளபளப்பாக வைப்பதற்கு மட்டும் அனுமதித் தால் போதும்" என்றாள்.

குருமூர்த்தி ஒரு வினாடி யோசித்தான்.

மரகதம்மாள், "ரொம்ப நாளாக நம் வீட்டோடு இருக்கிறது. அதை விற்கவா?" என்றாள்.

"எனக்கு மட்டும் பொருளை விற்கிறது சரியென்றா படுகிறது? ஆனால் மூல்தானி வந்து அவனுக்குத் தோன்றின விலையைக் கொடுத்துக் கை வண்டியிலே எடுத்துக்கொண்டு போகிறதைவிட, நாம் விற்றுவிடுவது மேல் இல்லையா?" என்று பாலா சன்னமான குரலில் சொன்னாள்.

மரகதம்மாளுக்கு மறுப்புச் சொல்லத் தோன்ற வில்லை. "சுமதிக்குத் தோன்றியது நம் யாருக்கும் இது நாள் வரையிலும் தோன்றவில்லையே?" என்றாள்.

அன்னபூரணி, குருமூர்த்தி கையிலிருந்து இரண்டு பத்து ரூபாயை எடுத்துக் கொடுத்து, "சுமதி, இந்தா

இருபது ரூபாய். இதைக் கொண்டு உனக்குத் தோன்றியதைச் செய்யம்மா'' என்றாள்.

பாலா, இருபது ரூபாவை எடுத்துக்கொண்டு கடைக்குப்போய் உப்புக் காகிதம், வார்னிஷ் வாங்கிக் கொண்டு வந்தாள்.

அன்று இரவு வெகுநேரம் வரை மாடி வளைவு அறையில் உட்கார்ந்து பீரோக்களைத் தேய்த்து மக்கு வைத்து வார்னிஷ் பூசினாள்.

விடிந்ததும் அவற்றைக் கூலி ஆள் கொண்டு வரவேற்பு அறைக்கு நகர்த்தினாள். ஓரளவுதான் வார்னிஷ் உலர்ந்திருந்தது. இருந்தபோதிலும் ஒவ்வொரு சாமானுக்கும் ஒரு காகிதத்தில் விலை மதிப்புக் குறித்துக் கொண்டாள்.

வேலைகள் முடியும்போது காலை எட்டு மணி ஆகிவிட்டது. பாலாவின் உடல், ஓயாத உழைப்பால் வியர்த்துக் களைத்து விட்டது.

ரங்கனுக்குப் பாலாவைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

''சுமதி, எதற்காக இப்படி உழைக்கிறாய்? ஃபர்னிச்சர் கடைக்காரன் இதையெல்லாம் வாங்கிக் கொள்வானா? நீ கேட்கப் போகும் விலைக்கு வாங்கிக் கொள்வானா?'' என்றான்.

''என் உழைப்பால் நான் செய்யவேண்டியதைச் செய்து விட்டேன். இனிமேல் கடவுள் விட்டவழி!''

காலை ஒன்பது மணிக்கு முதல் ஃபர்னிச்சர் கடைக்காரன் வந்தான். அவனுக்கு, தனக்கும் மற்றவர்களுக்கும் ஒரே சமயத்தில் பாலா அழைப்புக் கொடுத்திருப்பது தெரியாது. ஆகையால் குறைந்த விலையில் அவ்வளவையும் எடுத்துக் கொள்ளலாம் என்ற நினைப்பில், மிகக் குறைவான விலைக்கு எல்லாவற்றையும் கேட்டான்.

சுமதியே வியாபாரத்தை முடிக்கட்டும் என்று அடுத்த அறையில் குருமூர்த்தியும் மரகதம்மாளும் காத்திருந்தனர்.



கமலா மட்டும் சுமதியைக் கேலியாகப் பேசியபடி பொறுப்பில்லாமல் இருந்தாள்.

''மொத்தம் எவ்வளவு ரூபாய் சொன்னீர்கள்?'' என்று கேட்டாள் பாலா.

''மொத்தம் ஐந்நூறு ரூபாய்'' என்றான்.

பாலாவுக்கு உண்மையிலேயே எவ்வளவு மதிப்பு வரை போகலாம் என்று தெரியாது. ஆனால் சக்ரபாணியின் மகளாதலால் உடனே ஒப்புக்கொள்ளக் கூடாது என்று மட்டும் அவளுக்குப் புரிந்தது.

''வேண்டாம் சார். அந்த விலைக்குக் கொடுக்க முடியாது!'' என்றாள்.

பக்கத்து அறையிலிருந்த குருமூர்த்தி அவளை அழைத்தான். மொத்தமாக ஐந்நூறு ரூபாய் என்றால் ஓரளவுக்குத் துன்பங்களைத் தள்ளிப் போடலாம் என்று தோன்றியது.

''என்ன சுமதி, கொடுத்துவிடலாம் போலிருக்கிறதே'' என்று கிசுகிசுவென்று சொன்னான்.

''சும்மா இருங்கள். பார்ப்போம்'' என்றாள்.

கடைக்காரன், ''அம்மா, என்ன விலைதான் முடிவு, சொல்லுங்க?'' என்றான்.

''உங்கள் விலைக்கும் என் விலைக்கும் சம்பந்தமே இல்லை. நீங்கள் போகலாம்!'' என்றாள் தைரியமாக.

கடைக்காரன் திகைத்து விட்டான்: ''முடிவான விலை அறுநூறு ரூபாய். என்ன சொல்கிறீர்கள்?'' என்றான்.

பாலாவுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. 'ஐந்நூறிலிருந்து பத்து இருபது இல்லாமல் நூறு ரூபாயாகத் தாண்டுகிறானே, காரணமில்லாமல் இருக்காது' என்று நினைத்து மறுபடியும் மௌனம் சாதித்தாள்.

கடைக்காரன் வெளியே போக முயற்சி செய்தான்.

குருமூர்த்தி அடுத்த அறையிலிருந்து பதறினான், காரியத்தைக் கெடுத்துவிட்டாளே என்ற தவிப்பில்.

கடைக்காரன் வெளியே போகும்போது, அடுத்த கடைக்காரன் உள்ளே நுழைந்தான். அவனைப் பார்த்ததும் முதல் கடைக்காரனுக்கு ஆச்சரியமாக இருந்தது. இரண்டாவதாக நுழைந்தவனுடன் ஒரு வெள்ளைக்காரத் துரையும் இருந்தான். அந்தத் துரைக்குச் சாமான் வாங்கிக் கொடுக்கத்தான் இரண்டாவது கடைக்காரன் வந்திருக்கிறான் என்பதை முதல் கடைக்காரன் புரிந்து கொண்டான்.

பாலா, இவர்களைக் கவனித்தபடி நின்று கொண்டிருக்கும்போது மூன்றாவதாக ஏலக் கடைக்காரன் நுழைந்தான்.

அது மற்ற இரண்டு கடைக்காரர்களுக்கும் திகைப்பை ஏற்படுத்தியது!

## 38

வீட்டினுள்ளே நுழைந்த மூன்று ஃபர்னிச்சர் கடைக்காரர்களும் மற்றவர்களை எதிர்பார்க்கவில்லையாதலால் ஆச்சரியத்துடன் ஒருவரையொருவர் நோக்கினர்.

பாலா ஒவ்வொருவருக்கும் ஒரே காலத்தைக் குறிப்பிட்டு வரச் சொன்னது தெரிந்தால், அவர்களே வந்திருக்க மாட்டார்கள். முதலில் வந்து விலை கேட்டு விட்டுத் திரும்பும் நிலையில் இருந்தவனுக்குப் பாலாவின் மீது கோபமே வந்தது.

"ஏம்மா, நீ தெளிவா சொல்லியிருக்கலாமே, அவுங்களையும் கூப்பிட்டிருக்கேன்னு" என்றான்.

"எங்க சரக்கு நல்ல சரக்கு. உறுதியானது. நல்ல வேலைப்பாடு உள்ளது; ஒருத்தருக்கு மூன்று பேர் பார்த்தால் நல்ல விலை கிடைக்குமென்றுதான் சொல்லி வைத்தேன்" என்று ஆங்கிலத்தில் துரைக்குப் புரியும்படியாகச் சொன்னான் பாலா.

www.t.me/tamilbooksworld



அங்கு வந்திருந்த துரையின் கண்கள், யானைச் சிற்பம் வைக்கப்பட்டிருந்த மேஜையிலேயே லயித்தது. அவன் ஒவ்வொரு பொருளாகத் தடவிப் பார்க்க ஆரம்பித்தான்.

அதைக் கவனித்த பாலாவுக்கு மனத்திற்குள் ஒரு விதத் திருப்தி ஏற்பட்டது.

முதலில் வந்தவன், மற்றவர்களைக் கலைத்து வெளியே அனுப்பும் நோக்கத்தில், "இந்தப் பொண்ணு எக்கச்சக்கமா விலை சொல்கிறாள். நான் அறுநூறு வரையிலும் போயிட்டேன்" என்று சொன்னான்.

அவன் சொன்ன விதத்திலிருந்து அறுநூறுக்கு மேல் யாரும் கேட்காதீர்கள் என்று சொல்வது போலிருந்தது. மற்றக் கடைக்காரர்களும் விஷயத்தைப் புரிந்து கொண்டனர்.

ஏலக் கடைக்காரன், "அவ்வளவு கேட்டுட்டீங்களா?" என்று அவனுக்கு உதவியாகப் பேசினான்.

பாலாவுக்குக் குழப்பமே ஏற்பட்டது. அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் உட்புறம் நகர்ந்தாள்.

பாலா நகர்ந்ததும் இரண்டாவது கடைக்காரனிடம் வெள்ளைக்காரன், "இதுவரையில் நான் பார்த்ததில்லே, இவ்வளவு வேலைப்பாடுள்ள பழமையான சரக்கை ஏதாவது விலைபேசி முடியுங்க" என்றான்.

துரையின் இந்த வார்த்தைகளைக் கேட்டதும், மற்றவர்களுக்கு அநியாயமாகக் குறைந்த விலைக்குச் சரக்கைத் தட்ட முடியாது என்ற எண்ணம் ஏற்பட்டது.

பக்கத்து அறையில் நுழைந்த பாலா குருமூர்த்தியின் காதுகளில் ஏதோ முணுமுணுத்தாள். குருமூர்த்திக்கு ஒன்றுமே புரியவில்லை, விழித்தான்.

"நான் சொல்கிறபடி செய்யுங்க" என்று கூறிவிட்டு மறுபடியும் அறைக்குள் நுழைந்தாள்.

குருமூர்த்தி வீட்டின் வேறு பக்கத்துக் கதவு வழியாக வேகமாகத் தெருவில் மறைந்தான்.

பாலா அறையில் நுழைந்ததும் துரையின் சார்பில் வந்த வியாபாரி, ''முடிவா சொல்றேன். எல்லாத்துக்கும் மொத்தமாக எட்டு நூறு கொடுத்திடறேன்'' என்றான்.

பாலா சிரித்தாள். அவளுக்கு உண்மையிலேயே என்ன கேட்பது என்று தெரியவில்லை. வாங்குபவர்கள் கேட்கும் தொகையிலிருந்தே அவள் விலையை நிர்ணயிக்கும் நிலையில் இருந்தாள். ஏதாவது ஒரு தொகையை உளறி விட்டாலும் நஷ்டமே என்று நினைத்தாள். துரையின் முகத்தைத் திரும்பிப் பார்த்தாள்.

துரை மிக ஆவலுடன் யானை உருவம் செதுக்கிய டேபிளையே பார்த்தான்.

பாலா திரும்பி, ''பரவாயில்லை. நாளை வரையிலும் விற்காமல் வைத்திருக்கிறேன். யோசனை பண்ணிவிட்டு நாளைக்கு வாங்க'' என்று சொல்லி வைத்தாள்.

அப்போது குருமூர்த்தி நுழைந்தான். அவன் வாழ்க்கையில் இதுவரை பழகாத ஒரு நாடகத்தில் பாத்திரமேற்று நடிக்க வேண்டியிருப்பது அப்பட்டமாக அவனுக்குத் தெரிந்தது.

''என்ன, விலை பேசிட்டியா?'' என்று கேட்பவன் போல் கேட்டான்.

''இன்னும் விலை சரியா கிட்டவில்லை'' என்றாள் பாலா.

''அப்போ சக்ரபாணி நடத்தும் பாலா ஃபர்னிச்சர் கம்பெனிக்கே விற்றுவிடுவோம்'' என்றான் குருமூர்த்தி, பாலா சொல்லிக் கொடுத்தபடி.

சக்ரபாணி நடத்தும் பாலா ஃபர்னிச்சர் கம்பெனி என்று கேள்விப்பட்டவுடனே விலை பேச வந்தவர்கள் கிலி அடைந்தனர்.

''சக்ரபாணியின் கம்பெனி ஆளுங்க வந்து பார்த்துட்டாங்களா?'' என்று கேட்டான் வியாபாரி.

www.t.me/tamilbooksworld



பாலா சும்மா விலையை ஏற்றும் நோக்கத்தோடு பொய் சொல்லி வைத்தாள். அவளுக்கு அவள் தந்தை நடத்தும் பாலா ஃபர்னிச்சர் கம்பெனியின் முறைகள் எதுவும் தெரியாது. ஒரு சமயம் சக்ரபாணி, ''நமக்கு ஓட்டல்கள், மில்கள், தியேட்டர்கள் இருக்கின்றன. இவ்வளவு ஸ்தாபனங்களுக்கும் ஃபர்னிச்சர் வாங்குவதற்குப் பல லட்சங்கள் பிடிக்கும். ஆகையால் உன் பேரில் ஒரு ஃபர்னிச்சர் கம்பெனி ஆரம்பித்து விட்டேன்'' என்று சொல்லி, அவளிடம் ஸ்டாம்பு பேப்பரை நீட்டிக் கையெழுத்து வாங்கியதுதான் தெரியும்.

லால்குடி சீனிவாசனின் குடும்பத்துக்காக நடத்தப்படும் வியாபாரத்தில் தன் தந்தையின் பெயரை உபயோகப்படுத்துவது சரியா என்று நினைத்தாள். ஆனால் தந்தை நடத்தும் பாலா ஃபர்னிச்சர் கம்பெனியின் பெயரை உபயோகப்படுத்துவது, ஸ்பென்ஸர் கம்பெனியின் பெயரை உபயோகப்படுத்துவதுபோல்தான் என்று தீர்மானித்து, உபயோகப்படுத்தினாள். அநியாயமாக, சல்லிசான விலைக்குச் சாமானை வாங்கத் துடிக்கும் வியாபாரிகளிடம் பொய் சொல்லாமல் வியாபாரம் செய்ய முடியாது என்று தெரிந்து கொண்டிருந்தாள் அவள்.

சக்ரபாணியின் கம்பெனி பெயர் சொல்லப்பட்டதும், வியாபாரிகள் மூவரும் ஒரு மூலைக்குச் சென்று கூட்டமாகப் பேச ஆரம்பித்தனர். அவர்கள் அங்கே கிடக்கும் பழைய மேஜை நாற்காலிகளில் ஏதோ புதையல் இருப்பதுபோல் நினைத்தனர். சக்ரபாணி கம்பெனியார் இந்தச் சிறுவீடு தேடிவந்து, இதை வாங்க வேண்டுமானால், இது மதிப்பிட முடியாத கலைப் பொருளாக இருக்கவேண்டும் என்று தீர்மானித்தனர்.

விலை ஏற ஆரம்பித்தது. ஆயிரம் ரூபாய்க்கு வந்தது. குருமூர்த்தியும் மரகதம்மாளும் அறையின் வெளிப்புறம் நின்றபடி விற்றுவிடத் துடித்தனர்.

மரகதம்மாள், பாலாவை உள்ளே கூப்பிட்டு, ''பைத்தியம் சுமதி! பணத்தை வாங்கிக் கொண்டு

சாமானை வண்டியிலே ஏற்றிவிடு. இந்த விலை என்றைக்கும் வராது!'' என்றாள்.

''அம்மா! பொருளின் விலை அதன் உள் மதிப்பைப் பொறுத்து இல்லை. வாங்குகிறவர்களின் மனசில் உள்ள மனக் குழப்பத்தைப் பொறுத்திருக்கிறது என்று இப்போ தான்புரிகிறது. இவர்களோட மனமயக்கம் எவ்வளவுதூரம் போகுது என்றுதான் பார்ப்போமே!'' என்றாள் பாலா.

பாலாவின் உறுதி, சாமான்களின் விலையை மறுபடியும் உயர்த்தியது. இறுதியில் விலை 1600 ரூபாய் என்று முடிவாகியது. மூன்று பேரும் சேர்ந்து கூட்டாகப் பொருள்களை வாங்கிக் கொண்டனர். பணத்தை உடனே கொடுத்து விட்டு, வண்டி கொண்டு வந்து சாமான்களை ஏற்றிச் செல்வதாகக் கூறிச் சென்றார்கள்.

பாலா, பணத்தை வாங்கிக்கொண்டு போய் மரகதம்மாளின் கையில் கொடுத்தாள்.

குருமூர்த்தி, ''என் மூல்தானி கடன் மட்டுமல்ல, மற்றும் சில சில்லறைக் கடன்களும் தீர்ந்தது!'' என்றான்.

மரகதம்மாள் கண்களில் நீர் நிறைந்து நின்றது. ''சுமதி, நீ கெட்டிக்காரி! ஏதோ பத்து வருஷமாய் பீரோ, மேஜை நாற்காலிகளை வாங்கி விற்றவள் மாதிரியில்லே வியாபாரத்தை முடித்துவிட்டாய்!'' என்றாள்.

''இதுதான் நான் பண்ணின முதல் வியாபாரம்!'' என்றாள் பாலா.

குருமூர்த்தி, ''சுமதி, நீ பண்ணின முதல் வியாபாரம், இதுதான் என்று என்னாலே நம்பவே முடியவில்லை!'' என்றான்.

''எங்கப்பாவை வியாபார தந்திரம் தெரிந்தவர் என்று சொல்வார்கள். ஒருவேளை அவர் சாமர்த்தியம் எனக்கும் இருக்கிறதோ என்னவோ நம்மபொருள்களை வாங்கினவர் கள், ஒன்றும் நஷ்டத்துக்கு விற்றுவிடப் போவதில்லை



அவர்கள் இதைப் பிரித்து, இரண்டாயிரம் ரூபாய்க்காவது விற்று விடுவார்கள் என்று நினைக்கிறேன்'' என்றாள்.

மரகதம்மாள், ''சுமதி, இதிலே நீ நூறு ரூபாயாவது எடுத்துக் கொண்டால் தான் எனக்குத் திருப்தி!'' என்றாள்.

''அம்மா, எப்பவும் இப்படி மற்றவர்களுக்குக் கொடுக்கவே துடித்துக் கொண்டிருந்தீர்களானால் குடும்பம் என்னம்மா ஆகிறது? எனக்குப் பணம் வேண் டாம். அன்புக்காக வேலை செய்ய வந்தவள். என் சாமர்த்தியத்தைவிட நம்ம குழந்தை லட்சுமியின் அதிர்ஷ்டம்தான் இந்த லாபத்துக்குக் காரணம் என்று நினைக்கிறேன். குழந்தைக்கு அழகான ஸ்டீல் தொட்டில் வாங்கிப் போட்டு விட்டால் அதுவே எனக்குப் பணம் கொடுத்த மாதிரி!'' என்று சொல்லி விட்டுச் சிரித்தாள்.

மரகதம், ''நீ ஆயிரம் காலத்துக்கு நல்லாயிருக் கணும்'' என்று வாழ்த்தினாள்.

பாலா சிரித்தபடி, 'என்னை வாழ்த்துவதற்குப் பதிலாய் என் பெற்றோரை வாழ்த்துங்கள், அம்மா! குளிர்ந்து போன உங்க மனசாலே எங்கப்பாவும் அம்மா வும் நல்லாயிருக்கணும் என்று சொல்லுங்கள். அது போதும் அம்மா!'' என்றாள்.

''நீ யார், உன் அப்பா அம்மா யார் என்று சொல்ல மாட்டேங்கிறியே?'' என்றாள் மரகதம்.

''அதை மட்டும் என்னைக் கேட்காதீர்கள். அவர்கள் ஒரு விதமான கஷ்டத்திலே இருக்கிறார்கள். நல்லவர் களின் வாழ்த்து அவர்களுக்குத் தேவை என்று உங் களுக்குத் தெரிந்தால், போதும் அம்மா!'' என்றாள் பாலா.

''சுமதி, என் வாழ்த்தினாலே அவர்கள் கஷ்டம் தீர்

கிறது என்றால் தினமும் ஆயிரம் முறை மனமார வாழ்த்தத் தயார்!'' என்றாள்.

பாலா, ''கமலாவுக்கு டிபன் தயார் பண்ணி எடுத்திட்டுப் போகணும். நேரமாகி விட்டது!'' என்று கூறி விட்டுச் சமையல் அறைப் பக்கம் சென்றாள்.

சக்ரபாணி பொதுக்கூட்டத்தில் தைரியமாக நடந்து கொண்ட காரணத்தினால், வேலை நிறுத்தத் திட்டம் நின்று போய், மில்லில் மறுபடியும் வேலை தொடங்கியது.

தொழிலாளர்கள் தங்கள் தலைவர்களை நம்புவதை விட, முதலாளியை நம்புவதே மேல் என்ற முடிவுக்கு வந்து விட்ட செய்தியைச் சக்ரபாணியிடம் கூறுவதற்காகச் சாரங்கன் துடியாகத் துடித்தபடி சக்ரபாணியின் வீட்டுக்கு வந்தார்.

அந்த முதலாளியோ, முகக்ஷவரம்கூடச் செய்து கொள்ளாமல் படுக்கையில் உட்கார்ந்திருந்தார்.

சாரங்கன் ஓடி வந்து, ''நீங்க கூட்டத்திலே பாய்ந்து தைரியமாக அந்தக் குழந்தையைக் காப்பாற்றியது, தொழிலாளர் மனத்தையே மாற்றிவிட்டது சார்! இப்போது மக்களுக்கு 'ஸ்டண்டு'கள்தான் சார், தேவை. நாடகக்காரன், சினிமாக்காரன் மட்டும் நடித்தால் போறாது. மந்திரிகள், அரசியல் கட்சித் தலைவர்கள், முதலாளிகள் எல்லாரும் 'டயலாக்' எழுதி நடிக்க வேண்டியிருக்கிறது'' என்றார்.

''என்ன சாரங்கன், பேசிக்கிட்டே போறீங்க. என்ன விஷயம்?'' என்று கண்டிப்பான தொனியில் கேட்டான் சக்ரபாணி.

''அதுதான் சார், அன்றைக்கு லேபர் மீட்டிங்கிலே தகப்பனார் திகைச்சு நிக்கிறப்போ, நீங்கள் பாய்ந்து ஒரு குழந்தையைக் காப்பாத்தினீர்களே...அது...''

''அது நடிப்பில்லை, சாரங்கன். தகப்பனும் குழந்தையும் பிரிந்து கிடந்தனர். அந்தப் பிரிவின் முடிவு

www.t.me/tamilbooksworld



குழந்தைக்கு மரணமாக முடியலாம் என்பதை என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை...சாரங்கன்...என் பாலா...'' என்று கூற வந்தவன் டக்கென்று நிறுத்திக் கொண்டான்.

''நடிப்போ உண்மையோ, தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை நிறுத்திவிட்டார்கள். அவர்கள் தலைவர்கள் மரியசூசையும் மற்றவர்களும் தலைமைப் பதவியை இழந்து நிற்கிறார்கள். சென்னை நகரத்தில் மற்றத் தொழில் ஸ்தாபன முதலாளிகள் உங்களை மிகவும் பாராட்டிப் போன் செய்து கொண்டே இருக்கிறார்கள்'' என்று சாரங்கன் அடுக்கிக் கொண்டே போனார்.

சக்ரபாணிக்கு அவர் பேச்சைக் கேட்கவே நாராசமாக இருந்தது.

''ப்ளீஸ் ஷட்அப் சாரங்கன்'' என்றான். அப்போது டெலிபோன் மணி அடித்தது.

சலிப்புடனே டெலிபோனை எடுத்தான். உணர்ச்சியில்லாத குரலில், ''நான்தான் சொன்னேனே, என்னை டெலிபோனில்கூட யாரும் தொந்தரவு பண்ண வேண்டாமென்று?'' என்றான்.

டெலிபோன் ஆபரேட்டராக உள்ள பெண்மணி ஏதோ சொன்னாள்.

''யார்? பாலாவின் சிநேகிதியா? என்ன விஷயம்? உடனே கனெக்ஷன் கொடு?'' என்றான் சக்ரபாணி.

அவன் முகத்தில் ஒரு பொலிவு காணப்பட்டது. மறு நிமிடம் அந்தப் பொலிவு இன்னும் அதிகமாகியது.

சாரங்கனைப் பார்த்து, ''கொஞ்சம் ஐந்து நிமிஷம் வெளியே இருக்கிறீர்களா?'' என்றான்.

சாரங்கன் வெளியே சென்றார்.

''யார்? பாலா கண்ணா பேசுவது? சிநேகிதி என்று சொன்னாளே...'' என்று அழாத குறையாக டெலிபோனில் கேட்டான் சக்ரபாணி.

## 39

பேரனைப் பிடித்திருந்த சக்ரபாணியின் கரங்கள் நடுங்கின.

''என்ன பாலா, நீ எங்கே இருக்கிறாய்?''

ஒரு விநாடிக்குப் பதில் இல்லை. ''நம் வீட்டிலே போன் எக்ஸ்சேஞ்சிலே இருக்கிறவளுக்கு விஷயம் தெரிய வேண்டாம் என்றுதான், நான் பாலாவின் சிநேகிதி என்று சொன்னேன். அம்மா எப்படியப்பா இருக்கிறார்கள்?'' என்று கேட்டாள்.

சக்ரபாணி பதற்றத்துடன், ''நீ போன இரவே உங்கம்மா நல்லா தூங்கியிருக்கிறாள் பாலா? கனாக் கண்டு எழுந்து ஓடாமல் அமைதியாகத் தூங்கியிருக்கிறாள். இப்போது அம்மாவின் நிலை பரவாயில்லை பாலா. நான் கூடத் தினமும் இரவு தூங்குகிறேன்!'' என்றான்.

''அப்படியா! ரொம்ப சந்தோஷம் அப்பா!''

''பாலா! நீ எங்கேம்மா இருக்கிறாய்? உங்கம்மாகூட பாலா எங்கே, பாலா எங்கே என்று கேட்கிறாள். எனக்குப் பதிலே சொல்ல முடியலே! உன் செலவுக்கு—பணத்துக்கு என்னம்மா பண்ணுகிறாய்? ஏம்மா வீட்டை விட்டுப் போய்விட்டே? எப்போது திரும்பப் போகிறாய்?'' என்று சக்ரபாணி படபடவென்று கேட்டான்.

டெலிபோனில் சில விநாடிகளுக்குப் பதில் இல்லை.

''உன் செலவுக்குப் பணத்தை எங்கே அனுப்புகிறது என்றாவது சொல்லு குழந்தை'' என்று தொடர்ந்து கேட்டான் சக்ரபாணி.

''பணம்! பணம்! உங்களுக்கு அது தானாப்பா நினைப்பு? பணம் இல்லாமல்கூட வாழ முடியும் அப்பா! என்னைத் தேடாதீர்களப்பா! என்னைப் பார்க்கணும் என்று நினைக்காதீர்களப்பா. நான் உயிரோடு இருக்

www.t.me/tamilbooksworld



கணும் என்றால்...'' என்று பாலா கூறி முடிப்பதற்குள் சக்ரபாணி ஆத்திரத்தில் தன்னையும் மறந்தான்.

''இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப் போகிறது நன்றாயிருக்கிறதா? என்னை இப்படிச் சித்திரவதை செய்கிறது உனக்கே நன்றாயிருக்கிறதா! நான் யாருக்காகச் சம்பாதிக்கிறேன்? எதற்காக நான் இப்படி அலைந்து சம்பாதிக்கிறேன்? எனக்கு உன்னைத் தவிர வேறு யார்? உன் புத்தியை யாரோ கலைத்து, உன்னைப் பைத்தியம் ஆக்கியிருக்கிறார்கள் அது யார் என்று தெரிந்தால் அவனைச் சுட்டுப் பொசுக்கி விடுவேன்!'' என்று போனில் கூச்சல் போட்டான்.

''அப்பா! கூச்சல் போடாதீர்கள்! என் மனசைக் கலைத்தது, நீங்களும் உங்கள் வாழ்க்கையும்தான்! நீங்கள் அன்றைக்குத் தொழிலாளர் கூட்டத்திலே ஒரு தொழிலாளியின் குழந்தையை நெருப்பிலிருந்து காப்பாற்றினீர்களே, அதைப் பேப்பரிலே படித்து மகிழ்ந்தேன். அதைப் பாராட்டத்தான் போன் பண்ணினேன். தொழிலாளி குழந்தையிடம் இரக்கம் காட்டினீர்களே...'' என்று பாலா டெலிபோனில் கூறி முடிக்கு முன்பே சக்ரபாணி இரைந்தான்.

''நான்சென்ஸ்! நான் ஒன்றும் இரக்கம் காட்டலே பேப்பரிலே தப்பாகப் போட்டிருக்கிறான். இரக்கமாவது மண்ணாங்கட்டியாவது! என் குழந்தையைப் பிரிந்து நான் தவிக்கிறேன். எனக்கு யார் இரக்கம் காட்டுகிறார்? சாகிற நிலையிலிருந்த குழந்தையைக் காப்பாற்ற வக்கில்லாமல் எல்லாப் பசங்களும் சும்மா நின்றிட்டிருந்தான். அவர்களுக்குப் புத்தி புகட்டத்தான் நான் பாய்ந்து குழந்தையைத் தூக்கினேன்'' என்றான்.

''என்ன காரணமோ, அப்பா. ஒரு குழந்தையின் உயிர் உங்களாலே பிழைத்தது. அது போல இளைய ஜோன்ஸ் விஷயத்திலேயும் அவருக்கு இரக்கம் காட்டி, அவரை ஏமாற்றின ஆறு லட்சம் பணத்தைக்கொடுத்திருந்

தால் அவர் தற்கொலை முயற்சி செய்திருக்கமாட்டார் இல்லையா?'' என்று சொல்லிவிட்டுப் போனை வைத்து விட்டாள்.

சக்ரபாணி, ''பாலா! பாலா,'' என்று கூப்பிட்டான். பதில் இல்லை.

தன்னையும் மறந்து டெலிபோன் எங்கிருந்து செய்யப்பட்டது என்று கண்டுபிடிக்க முயற்சி செய்ய நினைத்தான். அப்புறம் அது ஆபத்தில் முடியும் என்று தோன்றியது.

பாலா உயிரோடுதான் இருக்கிறாள், இதே ஊரில் தான் இருக்கிறாள் என்பது ஒருவித திருப்தியை அளித்தது. இதற்கு முன்பு அவள் எங்கிருக்கிறாள், என்ன ஆனாள் என்று தெரியாமலே இருந்தது.

'அன்று தொழிலாளர் கூட்டத்தில் அந்தக் குழந்தையைக் காப்பாற்றிய விஷயம் அறிந்து பாலா மகிழ்ச்சி அடைந்திருக்கிறாள். அதைப் பாராட்ட எனக்குப் போன் செய்திருக்கிறாள். நல்ல வேளை! அந்தக் கூட்டத்துக்குப் போனதும் ஒரு விதத்தில் நல்லதாகப் போய்விட்டது' என்று நினைத்தான் சக்ரபாணி.

பாலா, இளைய ஜோன்ஸ் பற்றிக் கூறியது சக்ரபாணிக்குக் குழப்பமாக இருந்தது இளைய ஜோன்ஸ் தன்னிடம் வந்து மன்றாடியபோது பாலா அங்கு இருந்தது சக்ரபாணியின் ஞாபகத்துக்கு வந்தது. அன்று இரவு தானே பாலா வீட்டை விட்டு வெளியேறினாள்?

மறுநாள் காலை ஆஸ்பத்திரியிலிருந்து சிகிச்சை பெற்று வீடு திரும்பும்போதுதான் ஜோன்ஸ் தன்னைத் தெருவிலிருந்து எடுத்து வீடு கொண்டுவந்து சேர்த்தான். பாலாவின் மறைவுக்குக் காரணம் ஜோன்ஸாக இருக்குமோ? இருக்காது. பாலா வெளியே போனபோது ஜோன்ஸ் ஆஸ்பத்திரியில் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தானே...?

www.t.me/tamilbooksworld



இவ்வாறு சக்ரபாணி சிந்தித்துக் கொண்டிருக்கும் போது சாரங்கன் மறுபடியும் நுழைந்தார்.

சாரங்கன், இப்போது முதலாளியின் முகத்தில் ஒரு வித ஒளி இருப்பதை உணர்ந்தார். சாரங்கனைச் சக்ரபாணி பார்த்தான்.

''என்ன சாரங்கன், அன்று நான் தொழிலாளர் கூட்டத்தில் அந்தக் குழந்தையை எடுத்தபோது இரக்கம் காரணமாக எடுத்தேன் என்றா நினைக்கிறாய்?'' என்று கேட்டான்.

''சந்தேகமென்ன பாஸ்? நீங்கள் அன்றைக்கு ஒரு கருணாமூர்த்தியாகவே காட்சி அளித்தீர்கள். அந்த ஒரு செயல் தொழிலாளர் சமூகத்தில் உங்களுக்கு ஒரு நல்ல பெயரைக் கொடுத்துவிட்டது. குழப்பம் விளைவித்து, அதனால் பலன் பெற நினைக்கும் போலித் தொழிலாளர் தலைவர்களுக்கு மதிப்பே போய்விட்டது. மரியசூசையும் அவன் சகாக்களும் பதவி இழக்கும் நிலையிலே இருக்கிறார்கள். வேலை நிறுத்தம் கான்சல் ஆகிவிட்டது. எல்லோரும் ஒழுங்காக மில்லுக்கு வருகிறார்கள். சாமர்த்தியமாகப் பிரச்னையை முடித்ததற்காக மற்ற முதலாளிகள் உங்களைப் பாராட்டுகிறார்கள்!''

''அப்படியா?'' என்று சொல்லிவிட்டுச் சக்ரபாணி சிரித்தான்.

''அன்று நான் அந்தக் கூட்டத்துக்குப் போனபோது அதன் விளைவு அப்படி என்னைக் கருணாமூர்த்தியாக்குமென்றோ, தொழிலாளர் மனத்தில் என்னைப் பொறுத்த வரையில் ஒரு பக்தியை ஏற்படுத்துமென்றோ நினைக்கவில்லை. காக்காய் உட்காரப் பனம்பழம் விழுந்த கதையாகிவிட்டது'' என்று கூறிச் சிரித்தவன், திடீரென்று சிந்தனையில் ஆழ்ந்தான்.

''சாரங்கன், ஜோன்ஸ் வீட்டுக்குப் போன் பண்ணி அவர் இருக்கிறாரா என்று கேள். நான் அவரைப் பார்க்க வேண்டுமென்று சொல்லுங்கள்.''

சாரங்கன், முதலாளி சொன்னதை அப்படியே ஜோன்ஸிடம் தெரிவித்தார்.

ஜோன்ஸ் டெலிபோனில் என்ன சொன்னான் என்பது சக்ரபாணிக்குத் தெரியாது. சாரங்கன் முகம் மாறியதி லிருந்து ஜோன்ஸ் ஏதோ காரசாரமாகப் பேசியிருப்பான் என்று மட்டும் புரிந்தது. ஊகித்துக் கொண்டான்.

''அந்த முட்டாள் என்ன சொன்னான்?'' என்று கேட்டான்.

சாரங்கன் மென்று விழுங்கினார்.

''பரவாயில்லை சாரங்கன். ஜோன்ஸ் சொன்னதைக் கூட்டாமல் குறைக்காமல் அப்படியே சொல்லுங்கள்'' என்றான்.

''சைத்தானின் சகோதரனான சக்ரபாணிக்கு என் பங்களாவில் என்ன வேலை? வீட்டில் எனக்கு மிஞ்சி யிருப்பது பீரோ, மேஜை, நாற்காலி, மோட்டார் கார், சமையல் பாத்திரங்கள். அதையும் ஜப்தி செய்ய வரப் போகிறானா?' என்று கேட்டுவிட்டு ஜோன்ஸ் போனை வைத்துவிட்டான்'' என்று பயத்தோடு சாரங்கன், ஜோன்ஸ் துரையின் டெலிபோன் பேச்சைக் கூறினார்.

சக்ரபாணி புன்முறுவல் செய்தான். ''ஜோன்ஸ் துரை யின் வீட்டு மேஜை, நாற்காலிகளை ஜப்தி செய்தால் அதுவும் சுவாரஸ்யமாகத்தான் இருக்கும். பரவாயில்லை, சாரங்கன்! பத்திரிகை நிருபருக்கும், போட்டோகிராப ருக்கும் போன் செய்து வரச் சொல்லுங்கள். நமக்கு ஜோன்ஸ் வீட்டில் கொஞ்சம் வேலையிருக்கிறது'' என்று சொன்னான்.

சாரங்கன் எழுந்து ஆபீஸ் அறைக்குள் சென்றார்.

ஜோன்ஸ் வீட்டில் சக்ரபாணி சாரங்கனுடனும். ஆபீஸ் அக்கவுண்டண்ட்டுடனும், பத்திரிகை நிருபர்களுட னும் நுழைந்தபோது ஜோன்ஸ் பயந்துவிட்டான்.

www.t.me/tamilbooksworld



இரண்டு நாட்களாக ஜோன்ஸுக்கு வேண்டியவர்கள், பல விதமாக ஜோன்ஸ் மனத்தில் பீதியைக் கிளப்பியிருந் தனர். 'சக்ரபாணியிடம் ஜோன்ஸ் நேரடியாக மரியாதைக் குறைவாக நடந்து கொண்டதற்கு அவன் பழி வாங்காமல் விடமாட்டான். மற்றக் கடன்காரர்களை ஏவிவிட்டு ஒரு வாரமாவது சிவில் சிறையில் வைப்பான் அல்லது ஜப்தி யாவது செய்வான்'' என்று கூறியிருந்தனர்.

ஜோன்ஸின் மனைவியின் ஏசல், கடன்காரர்களின் தொல்லை எல்லாமாக அவனைக் கலக்கியிருந்தன. தூக்க மாத்திரை சாப்பிட்டும் உயிர் தப்பியது இந்த அவமானத் துக்குந் தானா, இவ்வளவு தொந்தரவுகளுக்குத்தானா என்று எண்ணினான். ஜோன்ஸ் மனத்திலிருந்த வெறுப்பும், வேதனையும் உள்ளே நுழைந்த சக்ரபாணியை, 'உட்கார்' என்றுகூடச் சொல்லாதவாறு தடுத்தன.

ஜோன்ஸின் மனைவிதான் சக்ரபாணியை உட்காரச் சொன்னாள். ஒவ்வொரு முறையும் ஏமாந்து போனதற்கு, தன் கணவனை வெறுக்கும் போதெல்லாம் அவள் மனத் தில் சக்ரபாணியிடம் ஒரு கவர்ச்சி ஏற்பட்டது. இந்த மனிதன் எவ்வளவு கெட்டிக்காரன்! இவன் மனத்தில் சலனத்தை உண்டு பண்ணி, இவன் வாழ்வில் நுழைந்தால் எவ்வளவு சுவாரஸ்யமாக இருக்கும் என்று அவள் நினைத்ததுண்டு.

சக்ரபாணியின் அக்கவுண்டண்ட், ஜோன்ஸிடம் நெருங்கி, சில ரசீதுகளில் ஜோன்ஸைக் கையெழுத்திடும் படி சொன்னார்.

ஜோன்ஸ் தயங்கினான். ''என் வக்கீல் இல்லாமல் நான் உம் விஷயத்தில் எந்தக் கையெழுத்தும் போட முடியாது!''

சக்ரபாணி ஏளனமாக, ''உங்கள் வக்கீல்களையெல் லாம் பக்கத்திலே வைத்துக் கொண்டுதான் நீங்கள்

சொத்துக்களை விற்றீர்கள்'' என்று ஜோன்ஸின் வக்கீல்களின் 'தகுதி'யையும், அவன் முட்டாள்தனத்தையும் சுட்டிக் காட்டினான்.

''கையெழுத்துப் போட்டு நாம் இழப்பதற்கு இன்னும் என்ன இருக்கிறது? போடுங்கள்'' என்று ஜோன்ஸின் மனைவி கட்டளையிட்டாள்.

அவள் மற்றவர் முன்னால் இன்னும் ஏதாவது உளறி அவமானப்படுத்துவாள் என்று பயந்துகொண்டே எதற்கு, என்ன என்று கேளாமல் ஜோன்ஸ் கையெழுத்துக்களைப் போட்டான்.

பிறகு ஜோன்ஸ் சக்ரபாணியிடம் திரும்பி, நையாண்டியாக, ''பெரிய மனிதரே! பிரபுவே! சைத்தானின் சகோதரரே! உங்கள் உத்தரவுப்படி இந்த ஏழை கையெழுத்துப் போட்டுவிட்டேன். இனிமேல் சொல்லலாமா, இந்தக் கையெழுத்து எதற்காக என்று?'' என்று கேட்டான்.

சக்ரபாணி சிரித்தபடி, ''சைத்தானின் சகோதரர் என்று கருதும் நாம், ஜோன்ஸ் என்ற ஏழையை மறுபடியும் செல்வந்தராக்கத் தீர்மானித்தோம். அதற்காக நீங்கள் கேட்ட ஆறு லட்ச ரூபாயை உங்களுக்குக் கொடுக்கிறோம். ஆறு லட்ச ரூபாய் நன்கொடை, கையெழுத்தில்லாமல், விளம்பரமில்லாமல் கொடுக்க முடியுமா? ஒரே கையெழுத்தாய் வாங்கினால் அரசாங்கம் உங்களிடமிருந்து, நான் கொடுத்த தொகையைப் பறித்துக் கொள்ளும் என்பதற்காக எதிர்காலத்தில் பல தேதிகளில் கொடுத்ததாகக் கையெழுத்து வாங்கிக் கொண்டு, இன்று மொத்தமாக ஆறு லட்சம் கொடுக்கிறேன்'' என்று சொல்லி, தன் பையைத் திறந்து நோட்டுக் கற்றைகளை ஜோன்ஸின் கையில் வைத்தான்.

www.t.me/tamilbooksworld



## 40

இன்னும் சில கற்றைகள் மிஞ்சவே, அவற்றையும் எடுத்துச் சக்ரபாணி ஜோன்ஸின் மனைவியிடம் தந்தான்.

அவள் பல்லைத் திறந்தபடி வாங்கிக் கொண்டாள். உடனே பத்திரிகை போட்டோகிராபர் பளிச்சென்று வெளிச்சம் போட்டுப் படம் எடுத்தான்.

ஜோன்ஸ் ஒன்றும் புரியாமல் விழித்தான். ''பணம் போகும்போது ஏன் போகிறது என்று புரிவதில்லை. வரும் போதும் ஏன் வருகிறது என்றும் புரிவதில்லை. நிஜமாக எனக்குக் கொடுக்கிறீர்களா? இதிலிருந்து வேறு பாதகம் ஒன்றும் விளையாதே?'' என்று ஐயத்துடன் கேட்டான்.

சக்ரபாணி சிரித்தான். ''அமெரிக்காவில் ஒரு கோடீஸ்வரன் தன் குழந்தைக்கு வைரத்தால் இழைத்த பல லட்ச ரூபாய் பெறுமானமுள்ள பூனைக்குட்டி வாங்கிக் கொடுத்தான். ஏன் எதற்கு என்று அதை விளக்க முடியுமா? கிறுக்குத்தனம் என்றுதானே தோன்றுகிறது! அயோக்கியன் சக்ரபாணிக்கும் கிறுக்குத்தனம் இருக்கிறது என்று புரிந்து கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டு, பத்திரிகை நிருபரைப் பார்த்து, ''உடனே புகைப்படத்துடன் இதை விளம்பரப்படுத்துங்கள். நாளைக் காலையிலேயே நான் ஜோன்ஸுக்குப் பணம் கொடுத்த விஷயம் எல்லாப் பட்டி தொட்டியிலும் தெரிய வேண்டும்'' என்றான்.

''இது விளம்பரமானால் வருமான வரிக்காரர்கள் என்னைப் பிடிப்பார்களே!'' என்றான் ஜோன்ஸ்.

''அதற்காகத்தான் ஐம்பதினாயிரம் அளவில் ரசீது பெற்றுக் கொண்டேன். ஐம்பதினாயிரத்துக்குத்தான் உங்களைக் கேட்பார்கள். எதிர்காலத்தில் பன்னிரண்டு வருஷத்துக்கு ரசீதுகள் பெற்றுக் கொண்டுவிட்டேன். மற்ற விவரங்களை என்னுடைய மானேஜர் சாரங்கன் பார்த்துக் கொள்வார். உங்களுக்கு உதவியாகவும் இருப்

பார். இதில் உங்களுக்கு நஷ்டம் ஏதுமில்லாமல் காப்பாற்றுவேன். உறுதி! ஏனென்றால் நான் இன்று உங்களோடு வியாபாரம் செய்யவில்லை; ஒரு ஜீவனின் மனத் திருப்திக்காக இதைச் செய்கிறேன்!" என்று கூறிவிட்டுச் சக்ரபாணி வெளியேறினான்.

ஜோன்ஸ், "எனக்குப் புரியவில்லையே! ஆறு பைசா கொடுக்க மறுத்தவன், ஏன் ஆறு லட்சம் கொடுக்க வேண்டும்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே!" என்றான்.

ஜோன்ஸின் மனைவி மனக்கசப்புடன், "உங்களுக்கு எப்போது எதுதான் புரிந்திருக்கிறது? புரியாமல் இழந்தது, புரியாமல் திரும்பியிருக்கிறது! பணத்தை எடுத்து வையுங்கள்!" என்றாள்.

பங்களாவுக்கு வெளியே வந்த சக்ரபாணி நிம்மதியாகப் பெருமூச்சு விட்டான். 'இது பாலாவுக்குத் தெரிந்தால் சந்தோஷப்படுவாள்' என்று கூறிக் கொண்டான்.

இந்த விஷயம் தெரியாமலேயே பாலா சந்தோஷமாகி விட்டாள் என்பது சக்ரபாணிக்குத் தெரியாது.

பாலா தன் வெண்பற்களைக் காட்டிச் சிரித்தபடி அத்தான் மோகனுடன் பஸ் ஸ்டாண்டில் பேசிக் கொண்டிருப்பதைச் சக்ரபாணி உணரவில்லை.

"என்ன சுந்தரி, அன்றைக்குத் தியேட்டரிலே நீ கோபித்துக் கொண்டு போனதிலிருந்து எங்கள் வீட்டுப் பக்கமே வரவில்லையே?" என்று மிகவும் உருக்கமாகக் கேட்டான் மோகன்.

பாலாவுக்கு, அவன் கெஞ்சல் குரலில் கேட்டது மிகவும் திருப்தியாக இருந்தது. ஆனால் அதை வெளிக் காட்டிக் கொள்ளவில்லை.

அத்தான் மோகனைப் பார்க்கும்போதெல்லாம் அவள் உள்ளம், அவள் வசம் இல்லாமல் அவனை நோக்கிச் செல்வதும், அவன் எது கேட்டாலும் மறுக்காமல் அதற்கு இணங்கும்படியான ஒருவித பலவீனமும் தன்னிடம் இருப்

www.t.me/tamilbooksworld



பதை உணர்ந்தாள். அந்தப் பலவீனத்துக்கு ஆளாகி அவனோடு அன்று ஸ்கூட்டரின் பின்பக்கம் உட்கார்ந்து தியேட்டருக்குச் சென்றதலால்தானே அத்தான் என்னை அவ்வளவு மட்டமாக நினைக்கக் காரணமாகியது?

மனத்திலுள்ள ஆசையை மிகவும் வெளிப்படையாக காட்டக்கூடாது என்று தீர்மானித்துக் கொண்டாள். இருந்தபோதிலும் அவள் கண்கள், அவன் முகத்திலும் அவன் அழகான நெற்றியிலும், அவளையுமறியாமல் நிலைத்து நின்றன.

"அன்று நீங்கள் அப்படிச் சொன்னது எனக்கு வேதனையாக இருந்தது" என்றாள்.

"அம்மா, தினமும் 'அந்தப் பெண் சுந்தரி வெள்ளிக்கிழமை வருகிறேன் என்றாளே, வரவே இல்லையே' என்று என்னைத் தொணதொணவென்று கேட்டுக் கொண்டிருக்கிறாள். நீ இருக்குமிடம், உன் பெற்றோர்கள் விலாசம் ஏதாவது தெரிந்தாலும் உன் வீடு வந்து உன்னை அழைத்துப் போகலாம். நீதான் மர்மக் கன்னியாக இருக்கிறாயே! நீ யார்? நீ எங்கிருக்கிறாய்?" என்று கேட்டான்.

"ஒரு விஷயம் மர்மமாக இருக்கும் வரை அதற்கு ஒரு தனி மதிப்பு இருக்கிறதல்லவா? மூடிய கைக்குள் இருக்கும் பொருள் என்னவென்று தெரிந்து கொள்வதில் நமக்கு ஆவல் இருக்கிறதல்லவா?" என்று சிரித்தபடி பாலா பதில் கேள்வி கேட்டாள்.

"ஓரளவு வரைதான் விஷயம் மர்மமாக இருக்கலாம். எல்லைக்கு மீறி விஷயம் ரகசியமாக இருந்தால், மனத்தில் தானாகவே சந்தேகங்கள் எழுவதற்குக் காரணம் ஏற்படுகிறதல்லவா?"

"எந்த அளவு விஷயத்தை ரகசியமாக வைத்திருக்க வேண்டும் என்று எனக்குத் தெரியும். அப்புறம் நான் ரகசியத்தை உடைத்துவிடுவேன்!"

அதே சமயத்தில் பஸ் வரவே, பாலா வேகமாகப் பஸ்ஸில் ஏறிக் கொண்டாள்.

மோகன், "எப்போது மறு சந்திப்பு?" என்றான்.

பாலா பஸ்ஸில் நின்றபடியே, "நாளை வெள்ளிகிழமை உங்கள் வீட்டுக்கு வருகிறேன். அம்மாவிடம் சொல்லுங்கள். பூஜை குப் புஷ்பத்துடன் வருகிறேன்" என்று கூறும் போதே பஸ் நகர்ந்து விட்டது.

மோகன் குழப்பத்துடன் நின்றான். அவனுக்குச் சுந்தரி புரியாத புதிராக இருந்தாள். அவன் மனத்தில் திடீரென்று ஒரு யோசனை தோன்றியது.

ஸ்கூட்டரில் ஏறி மெள்ள பஸ்ஸைப் பின் தொடர்ந்தான்.

பஸ்ஸிலிருந்த பாலாவுக்கு மோகன் ஸ்கூட்டரில் பின் தொடருவது தெரிந்தது.

'நாம் எங்கே போகிறோம், எங்கே தங்குகிறோம் என்று கண்டுபிடிக்க வருகிறார் அத்தான்' என்பதில் மகிழ்ச்சி ஏற்பட்டது. அதே சமயம் அவனை எப்படியாவது ஏமாற்றி விடவேண்டும் என்ற எண்ணமும் தோன்றியது.

பஸ் நின்றதும் உடனே கீழே இறங்கினாள். பின்னால் வரும் மோகனைக் கவனியாதவள் போல் ரோட்டைக் கடந்து பக்கத்துச் சந்தில் நுழைந்தாள்.

மோகன், தன் ஸ்கூட்டரை அந்தச் சந்து நோக்கி ஓட்டினான்.

பாலா வேகமாகச் சென்று ஒரு சுவரின் பின் புறம் நின்று கொண்டாள்.

அந்த முட்டுச் சந்து நெடுஞ் சுவரில் முடிந்தது. அந்தச் சந்தில் இருந்தது ஐந்து ஆறு வீடுகள் தான். எல்லாம் ஏழை முஸ்லிம்களின் வீடுகள்.

மோகன் தடதடவென்று ஸ்கூட்டரை ஓட்டிக் கொண்டு சென்றான். சுவரை நெருங்கியதும் திகைத்தான்.

www.t.me/tamilbooksworld



"நான் வருவது அவளுக்குத் தெரியாது. இவ்வளவு சீக்கிரம் எங்கே மறைந்திருப்பாள்? எல்லாம் முஸ்லிம் வீடுகளாய் இருக்கின்றனவே! இங்கே அவள் வீடு இருக்க முடியாது. யாரையாவது வேண்டியவர்களைப் பார்க்க வந்திருப்பாளோ?" என்று நினைத்தான்.

மோகன் படும் பாட்டைச் சுவரின் மறைவிலிருந்து ரசித்தாள் பாலா.

சில விநாடிகளில் மோகன், ஸ்கூட்டரை உதைத்து, பட்பட் என்ற சத்தத்துடன் மறைந்தான்.

ஸ்கூட்டரின் ஒலி தொலைவில் மறையும் வரை சுவரின் பின் புறம் நின்றவள், மெல்ல வெளியே வந்து குருமூர்த்தியின் வீட்டுக்குச் செல்லும் குறுக்குப் பாதையில் நடக்க ஆரம்பித்தாள்.

மோகன் நேராகச் சிந்தாதிரிப்பேட்டை நோக்கி ஸ்கூட்டரை ஓட்டினான்.

கிழவர் சம்பந்தய்யா வீட்டில் இருந்தது அவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

அவர், அவனுக்குத் தாத்தா. அவரிடம் முன்பின் தெரியாத பெண்ணைப் பற்றி எப்படி விசாரிப்பது என்று தெரியாமல் விழித்தான்.

மோகன் இந்தப் பகல் வேளையில் அவரைத் தேடி வந்தது கிழவருக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்தது.

"என்னப்பா, ஏதாவது விசேஷமா? அம்மா அனுப்பினாளா?" என்று கேட்டார்.

அடிக்கடி பொய் சொல்லிப் பழக்கமில்லாத மோகன் எச்சிலை விழுங்கினான்.

"இல்லை. இப்படியே வந்தேன். உங்களைப் பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்."

கிழவர் பேசாமலே மோகனைக் கவனித்தபடி இருந்தார்.

மோகன் அங்கு மாட்டியிருக்கும் படங்களைப் பார்த்த

படி நின்றான். எப்படிக் கிழவரிடம் பேச்சை ஆரம்பிப்பது என்று நினைத்தான். சுவரில் மாட்டியிருந்த பாலா திரிபுர சுந்தரியின் படம் அவன் கண்களில் பட்டது.

''என்ன தாத்தா, அந்த அம்மன் படம் ஒரு குழந்தையின் படம் போல் தெரிகிறதே?''

''அதுதான் பாலாதிரிபுர சுந்தரியின் படம். நான் உபாசிக்கும் தெய்வம்!''

''திரிபுரசுந்தரி என்றவுடனே ஞாபகம் வருகிறது. அன்றைக்கு ராத்திரி ஒரு முரடனிடம் மாட்டிக்கொண்டு விழித்தாளே ஒரு பெண்ணு—அதுதான் சுந்தரி என்ற பேருள்ளவள். அவள் யாரென்று தெரியுமா தாத்தா?''

கிழவர் மனத்துக்குள் சிரித்துக்கொண்டார்.

''ஏம்பா, அவளுக்கு என்ன? ஏன் விசாரிக்கிறாய்?''

''அம்மாவுக்கு என்னவோ அந்தப் பெண் மேலே அலாதி பிரியம் ஏற்பட்டிருக்கிறது.''

கிழவர் அலட்சியமாகத் தனக்கு அக்கறையில்லாதது போல், ''அப்படியென்றால் உனக்கு அவளைப் பிடிக்கவில்லையா?'' என்றார்.

''அதில்லை தாத்தா. அந்தப் பெண், தான் யார், எங்கே இருக்கிறது என்று சொல்லமாட்டேன் என்கிறாள்.''

''நான்கூட அப்புறம் ஒருமுறை அவளைச் சந்தித்தேன். என்கிட்டேயும் ஒன்றும் சொல்ல மறுத்து விட்டாள். அவள் விஷயமே ஒரே மர்மமாகத்தான் இருக்கிறதப்பா! பெரிய ஜாலக்காரியாக இருக்கிறாள்! அவளை மறுபடியும் சந்தித்தாயா?'' என்று கேட்டார்.

''ஆமாம் தாத்தா. அப்புறம் இரண்டு முறை எதிர்பாராத வகையிலே சந்திக்க நேர்ந்தது. நன்றாகச் சிரித்துத்தான் பேசுகிறாள். ஆனால் தன்னைப் பற்றி மட்டும் சொல்ல மாட்டேன் என்கிறாள்!''

''அவள் யாரோ, நீ யாரோ! எதற்கப்பா உனக்கு



அவளைப் பற்றித் தெரிய வேண்டும்? எல்லோருடைய பூர்வோத்திரத்தையும் பற்றித் தெரிந்துகொள்கிறது என்றால் முடியுமா?''

மோகன் குழப்பமடைந்தான். ''அதில்லை தாத்தா, அவள் நாளைக்கு வெள்ளிக்கிழமை பூஜைக்கு, நம் வீட்டுக்கு வருவதாய்ச் சொல்லியிருக்கிறாள்'' என்று மேலே ஏதோ சொல்ல வாயெடுத்தவன் நிறுத்திக் கொண்டான்.

கிழவர், அவன் தவிப்பை ரசித்துக் கொண்டார்.

''சுவாமி பூஜைக்கு யார் வேண்டுமானாலும் வரலாம் அவர்கள் யாராயிருந்தால் என்ன மோகன்? நீ என்ன அவளைக் கட்டிக்கொள்ளப் போகிறாயா? அவள் யார் என்று உனக்கு எதற்குத் தெரியவேண்டும்?'' என்று கூறி விட்டுக் குறும்புத்தனமாக மோகனைப் பார்த்தார்.

மோகன் முகம் சிவந்தது. தொடர்ந்து ஏதோ பதில் சொல்ல வந்தவன் நிறுத்திக் கொண்டான்.

''கரெக்ட் தாத்தா, நீங்கள் சொல்கிறது. சரி, எதற்கும் நீங்கள் நாளைக்கு வெள்ளிக்கிழமை பூஜைக்கு வாருங்களேன் தாத்தா?'' என்று கேட்டான்.

''நீயே சாதாரணமாக உன் அம்மாள் நடத்துகிற பூஜைக்கு வீட்டிலே இருக்கமாட்டாய். உங்கம்மாவோ அமங்கலி. அதனாலே அக்கம் பக்கத்து வீட்டுப் பெண்களைக் கூட்டி வைத்துக்கொண்டு நடத்துகிறாள். நாளைக்குப் பூஜைக்கு நீ இருப்பாயா?'' என்று கேட்டார்.

''நீங்கள் வருகிறதாய் இருந்தால் நான் நாளைக்கு இருக்கிறேன்'' என்றான் மோகன்.

சம்பந்தய்யாவுக்கு மோகன் மனத்திலிருப்பது புரிந்தது. சந்தோஷத்தோடு பேரனை அனுப்பி விட்டு உட்கார்ந்தார்.



www.t.me/tamilbooksworld

அன்று மாலை குருமூர்த்தியின் வீட்டில் எல்லோர் முகத்திலும் மகிழ்ச்சி. குழந்தை லட்சுமிக்கு ஸ்டீல் தொட்டில் வாங்கிப் போட்டிருந்தனர். அதில் குழந்தை தவழ்ந்து கொண்டிருந்தது. அதன் அருகே மரகதம்மாள் நின்று கொண்டிருந்தாள். அன்னபூரணி, சோர்வெல்லாம் மறந்து மகிழ்வோடு இருந்தாள்.

குருமூர்த்தி, கடன்கள் தீர்ந்து மகிழ்ச்சியாக இருந்தான்.

ரங்கன் மகிழ்ச்சியோடு நின்றான். குழந்தைகள் ரகுவும் சுகுவும் கையில் மிட்டாய்ப் பொட்டலங்களுடன் புது நிஜார் சட்டை அணிந்து நின்றனர்.

இந்தச் சூழ்நிலையில் வீட்டினுள் பாலா நுழைந்தாள். அவள் வந்ததை மற்றவர்கள் கவனிக்கவில்லை. ரங்கன் மட்டும்தான் கவனித்தான்.

''வருக வருக! இந்த வீட்டை வாழவைக்க வந்த தெய்வமே, சுமதியே, வருக!'' என்று அங்கு வைத்திருந்த ஜிலேபியை எடுத்துக்கொண்டு போய்ப் பாலாவின் வாயில் போட்டான்.

பாலாவுக்கு ரங்கனின் வெகுளியான குறும்பு வெட்கத்தைக் கொடுத்தது.

குருமூர்த்தி மரியாதையுடன் சென்று, செலவெல்லாம் போக மீதியிருந்த நானூறு ரூபாய் பணத்தை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

''எனக்குப் பணம் எதற்கு?''

''எல்லாம் உன்னுடையதுதான் சுமதி!'' என்றாள் மரகதம்.

''உங்கள் அன்பு ஒன்றுதான் எனக்கு வேண்டும்!'' என்றாள் பாலா.



''கண்ணன் என் சேவகன்'' என்ற பாரதியார் பாட்டிலே, கடவுள் வீட்டுச் சேவகனாக வருகிறான். வீட்டுக்காரர் கூலி கொடுக்கப் போனால் அவன், 'நெஞ்சிலுள்ள காதல் பெரியது. எனக்குக் காசு பெரியதில்லை!' என்கிறான். ஒருவேளை சுமதியும் தெய்வமோ? நம் வீட்டுக்கு வேலை செய்கிறாளோ?'' என்று பாதி கேலியாகச் சொன்னான் ரங்கன்.

பாலா சிரித்தாள்.

''ஒன்றுமே வேண்டாம் என்றால், எங்களுக்குக் கஷ்டமாய் இருக்கிறது சுமதி. நீ ஏதாவது வாங்கிக்கொண்டால்தான் பொருத்தம்!'' என்றாள் அன்னபூரணி.

பாலா யோசித்தாள்.

''நாளைக்குக் காலையிலே நான் ஒரு வீட்டுக்குப் போக வேண்டியிருக்கிறது. காலையிலே சமையல் செய்து விட்டுத்தான் போவேன். அப்போது பத்து ரூபாய் கொடுங்கள். பூ வாங்கிப் போக உதவியாக இருக்கும். ஒவ்வோர் வாரமும் எனக்கு வெள்ளிக்கிழமை விடுமுறை கொடுத்தால் உதவியாய் இருக்கும்'' என்றாள்.

ரங்கன் சிரித்தான். ''என்ன சுமதி, தாட்சண்யத்துக்கு வேலை செய்ய வந்தவள் என்னமோ கூலிக்காரி மாதிரி விடுமுறை கேட்கிறாயே!'' என்றான்.

''ஏம்மா, நீ யார், உன்னைப் பெற்றவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று சொல்லக் கூடாதா? உன்னைப் பெற்ற புண்யாத்மாக்களை நாங்க பார்க்கக் கூடாதா?'' என்றாள் மரகதம்மாள். பாலாவின் கண் கலங்கியது.

''உங்கள் வாயாலே என்னைப் பெற்றவர்கள் புண்யாத்மாக்கள் என்று சொல்கிறீர்கள், அதைக் கேட்க எவ்வளவு இன்பமாய் இருக்கிறது தெரியுமா, அம்மா? அந்த ஒரு வார்த்தைதான் எனக்குச் சம்பளம்! மற்றபடி என்னை ஒன்றும் கேட்காதீர்கள்'' என்று சொல்லிவிட்டுக் குழந்தை லட்சுமியைத் தூக்கிக் கொண்டாள்.

www.t.me/tamilbooksworld

# 41

பாலா மறுநாள் அத்தான் மோகன் வீட்டுக்குச் சென்றபோது அங்கு அவள் பார்த்த காட்சி ஏமாற்றத்தைக் கொடுத்தது.

மோகனின் தாய் காமாட்சி, முதல் நாள் இரவிலிருந்து ஜுரத்தால் தாக்கப்பட்டுப் படுத்திருந்தாள். வெள்ளிக்கிழமையன்று வழக்கமாக நடக்கும் பூஜையை நடத்துவதா, வேண்டாமா என்ற குழப்ப நிலையில் இருக்கும்போது, சிறு கூடை நிறையப் புஷ்பத்தோடு வந்த பாலாவைப் பார்த்ததும், காமாட்சிக்கு ஒருபுறம் மகிழ்ச்சியும் மறுபுறம் வருத்தமும் ஏற்பட்டன.

"சுந்தரி! இருந்திருந்து நீ வருகிற வெள்ளிக்கிழமையன்று என் உடம்புக்கு வந்துவிட்டது பார்! எவ்வளவோ ஆசையாகப் பூ கொண்டு வந்திருக்கிறாய். இன்று பூஜையில்லாமல் அம்மனை மூளியாக வைப்பது சரியில்லை, என்னால் முடிந்த வரை எழுந்து ஏதாவது செய்கிறேன்" என்று கூறியபடி கால்கள் தள்ளாடப் படுக்கையிலிருந்து எழுந்து நடக்க ஆரம்பித்தாள்.

"வேண்டாம். உடம்பு முடியாத நீங்கள் ஏன் கஷ்டப்படணும்? உட்கார்ந்தபடி சொல்லுங்கள், என்னென்ன செய்யணுமென்று. அதை நான் செய்கிறேன்!" என்று சொன்னாள் பாலா.

அதே சமயத்தில் மருந்துப் பாட்டிலுடன் மோகன் நுழைந்தான். சுந்தரி வந்துவிட்டாள் என்பதில் மோகனுக்கு மகிழ்ச்சி. இருந்தாலும் அவள் நேற்றுத் தன்னை ஏமாற்றி விட்டு மறைந்துவிட்டாள் என்பதில் ஒரு விதமான வருத்தமும் இருந்தது.

பாலாவைப் பார்த்த பின்னும் கவனியாதவன் போல் மருந்துப் புட்டியை எடுத்துக்கொண்டு தாயிடம் சென்றான்.



அவன் தாய், "மோகன், பாருடா யார் வந்திருக்கிறதென்று. சுந்தரிடா! பாவம், புஷ்பத்தோடு வந்திருக்கிறாள் இன்னைக்கென்று. நான் பூஜை வேண்டாம்னு முடிவு பண்ணியிருக்கிறேன்" என்றாள்.

"நீ பூஜை செய்யாத நாளாகப் பார்த்து அந்தப் பெண் வந்திருக்கிறாள். என்னம்மா செய்கிறது!" என்றான் மோகன்.

இந்தப் பதிலிலிருந்து மோகன் பஸ் ஸ்டாண்டில் சந்தித்த விவரத்தைச் சொல்லவே இல்லை என்பது பாலாவுக்குத் தெளிவாகியது.

அவன் தன்னைச் சந்தித்த விஷயத்தை ஏன் தாயிடம் மூடிவைக்க வேண்டும்? களங்கமில்லாத மோகன் மனத்தில் ஏன் 'களங்கம்' ஏற்பட வேண்டும் என்று பாலா நினைத்தாள். அவனும் அவள் மீது ஆசை வைத்திருக்க வேண்டும்! அதைத் தாயிடம் சொல்லக் கூச்சம்; சொல்லாமல் விட்டு விட்டான் என்பதைப் புரிந்து கொண்டாள்.

தாய்க்கு மருந்து கொடுத்தபடியே ஓரக் கண்ணால் மோகன் தன்னைக் கவனிப்பதைப் பார்த்த பாலாவுக்கு என்னவோ போல் இருந்தது.

காமாட்சி, "என்னவோ மோகன், வடை பாயசம் செய்து சின்ன அளவுக்காவது இன்று பூஜையை முடிப்போம்" என்றாள்.

"இந்த நிலையிலே நீங்கள் வடைக்கு அரைக்க முடியாது, சமையலை நான் கவனித்துக் கொள்கிறேன்" என்று மகிழ்ச்சியோடு சொன்னாள் பாலா.

"வந்த விருந்தாளி, உன்னைப்போய் ஆட்டாங் கல்லிலே உளுந்தைப் போட்டு அரைக்கச் சொன்னால் நல்லாயிருக்குமா?" என்றாள் காமாட்சி.

வந்த விருந்தாளி எதுக்கு அரைக்கணும்? பெற்ற மகன் உக்கை மாதிரி நான் இருக்கிறனே! நானே அரைத்து விடுகிறேன். விருந்தாளி எண்ணெயிலே போட்டு வடை தயார் செய்யட்டும்!'' என்று கேலியாகச் சொன்னான் மோகன்.

உடனே தாய், ''அதுவும் சரிதான்!'' என்று சொன்னாள்.

மோகனும் பாலாவும் சமையல் அறைக்குள் சென்றனர்.

மோகன், டின்னிலிருந்து உளுத்தம்பருப்பை எடுத்து ஊறவைத்தான்.

பாலா, குமட்டி அடுப்பைப் பற்றவைத்து பாயசம் தயாரிக்க ஏற்பாடு செய்தாள்.

காமாட்சி அம்மாள் பூஜை அறையிலுள்ள பூஜைப் பாத்திரங்களை எடுத்து வந்து உட்கார்ந்து கழுவ ஆரம்பித்தாள்.

மோகன், மேல் சட்டையைக் கழற்றிவிட்டு முண்டா பனியனுடன், ஊறவைத்த உளுத்தம்பருப்பை எடுத்து ஆட்டாங்கல்லில் போட்டு ஆட்ட ஆரம்பித்தான்.

அவன் கைகள் கல்லைப் பிடித்து, 'கடகட குடுகுடு' வென்று சுற்றும்போது அவன் தோள் சதைகளும், மேல் முதுகு சதைகளும் ஒருவிதத் தாள கதியில் சுற்றுவதைப் பாலா கவனித்தாள்.

அவன் உடலில் தளும்பி ஆடிய இறுக்கமான சதைகள், அவள் கண்களைக் கவர்ந்ததோடு நில்லாமல், அவள் உள்ளத்தில் ஒருவித வேதனையைக் கொடுத்தன. அந்தக் கிளர்ச்சி உள்ளத்தோடு மட்டும் நிற்கவில்லை. அவள் உடலையும் தாக்கி, அவள் மூச்சை அடைப்பதை உணர்ந்தாள்.



மாவு அரைத்துக் கொண்டிருந்த மோகன் தற்செயலாகத் திரும்பினான். தன்னை ஒருவித ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டு நிற்கும் பாலாவைப் பார்த்தான்.

''என்ன சுந்தரி அப்படிப் பார்க்கிறாய்'' என்றான்.

கடையிலிருந்து திருடன், ஒரு சாமானை எடுக்கும் போது கடைக்காரர் பார்த்து விட்டால் திருடனுக்கு ஏற்படும் குழப்பம் பாலாவுக்கு ஏற்பட்டது.

மோகன் சிரித்தான். அத்தான் உடலைப் பார்த்த போது அவளுக்கு ஏற்பட்ட பலவீனத்தை அத்தான் புரிந்து கொண்டு விட்டான் என்ற எண்ணம் பாலாவுக்கு ஏற்பட்டதும், பாலாவுக்கு மோகன் மீது ஆத்திரமே வந்தது.

மோகன் விடாமல் தொடர்ந்து கேட்டான்.

''என்ன அப்படி முறைச்சுப் பார்க்கிறே ஆண் பிள்ளைகள் பெண்களைப் பார்க்கிற மாதிரி? இது தேகப் பயிற்சியின் விளைவால் ஏற்பட்ட பலம். பத்துப் படி உளுந்து என்றாலும் சும்மா அரைச்சுத் தள்ளிவிடுவேன்!'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தான்.

அவன் சிரித்தவிதம், ''பெண்ணுக்கு நான் அடிமையாக மாட்டேன்! எவ்வளவு பெரிய அழகி என்றாலும் என்கிட்டே அடங்கித்தான் இருக்கணும்!'' என்று திமிரோடு சொல்வதுபோல் பட்டது.

அவன் மனம் புண்படும்படி ஏதாவது சொல்லி, அவன் கர்வத்தை அடக்க வேண்டும் என்று பாலாவுக்குத் தோன்றியது.

''பலே! பத்துப் படி உளுந்து அரைத்துத் தள்ளிவிடு வீர்களா! உங்களைக் கட்டிக் கொள்ளப்போகிறவள்

www.tamilbooksworld

அதிர்ஷ்டசாலிதான்! ஒரு இட்டிலிக் கடையே வைச்சிடலாமே!'' என்று கேலியாகச் சொன்னாள்.

''பேச்சிலே என்னை வாரப் பார்க்கிறியா? உன் வாய் என்ன பேசினாலும் உன் பார்வை இன்னும் என் தோள் மேலேதான் இருக்கிறது. உன மனசிலே இருக்கிற பலவீனத்தை, அடித்துப் பேசி மறைக்கப் பார்க்கிறாய், சுந்தரி!'' என்றான் மோகன்.

தன் மனத்திலுள்ள பலவீனத்தை அவன் புரிந்து கொண்டு விட்டானே என்று பாலாவுக்குக் கோபம் வந்தது.

''யார் மறைக்கிறாங்க? நீங்கதான் உங்கம்மாவிடம், நேற்று என்னைப்பார்த்ததைக்கூடச் சொல்லாமல் மறைச்சிட்டீங்க. நான் பஸ்ஸிலே ஏறினப்புறம் எதுக்காக என்னையே தொடர்ந்து வந்திர்களாம்! அது மட்டும் பலவீனம் இல்லையா?'' என்றாள்.

மோகன் ஒரு விநாடியில் குழம்பிவிட்டான். குழப்பம், கோபம் தரவே, ஆட்டாங்கல்லை வெகு வேகமாக ஆட்டினான். அப்போது பாதி அரைப்பட்ட மாவு வெளியே தெறித்தது.

''கோபத்தை மாவிடம் காட்டாதீங்க!'' என்று சொல்லி விட்டுச் சிரித்தாள் பாலா.

மோகன் திரும்பினான்.

''போதும்; பல்லை இளித்துக்கொண்டு நிற்காமல் குழுட்டியைக் கவனி! தண்ணீர் கொதிக்குது!'' என்றான்.

அப்போது சமையல் அறையில் சம்பந்தய்யா நுழைந்தார்.

''என்ன சமையல் அறையிலே, சச்சரவு சத்தம் என்று பார்த்தேன். யாராவது புதுசாய்க் கல்யாணமான



இளம் தம்பதிகளைக் காமாட்சி அம்மாள் குடக்கூலிக்கு வச்சிருக்காங்களோ என்று நினைத்தேன்!'' என்றார்.

மோகனுக்கும் பாலாவுக்கும் அதிர்ச்சியாக இருந்தது.

கிழவர் குறும்புத்தனமாகக் கண்களைச் சிமிட்டியபடி பாலாவிடம், ''என்ன சுந்தரி, நீ எங்கே இருக்கிறாய், உங்கப்பா அம்மா யாருன்னு மோகனிடம் சொல்லக் கூடாதம்மா? நேத்திக்குப் பாவம் அவன் எங்கிட்டே வந்து மென்று முழுங்கி விசாரிக்கிறான்!'' என்றார்.

மோகனுக்குத் தன் கௌரவத்தையே பெரியவர் போக்கிவிட்டதுபோல் தோன்றியது.

''தாத்தா, சும்மா இருக்கமாட்டீங்க!'' என்றான்.

கிழவர் சிரித்தபடி வெளியே சென்றார்.

அப்போது காமாட்சி பூஜை அறையிலிருந்து வெளியே வந்தாள்.

கிழவர், ''என்ன காமாட்சி, மோகனுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணியிருந்தால், இப்படி உன் பிள்ளையை விட்டு ஆட்டாங்கல்லுலே வேலை செய்யும்படியான நிலை வந்திருக்குமா?'' என்றார்.

''என்ன பண்றதுங்க, லட்சுமி எவ்வளவோ ஆசையோடு தன் பெண்ணுக்கு மோகனைக் கட்டி வைக்கணும்னு சொல்லிட்டிருந்தாள். அவளுக்கு உலக நினைப்பே இல்லே. அந்தப் பெண்ணுக்கு, தனக்கு ஒரு அத்தை பிள்ளை இருக்கான் என்பதுகூடத் தெரியாது, பாவம்!'' என்றாள்.

சமையல் அறையிலிருந்து காமாட்சி அம்மாள் சொல்லும் வார்த்தைகளைக் கேட்டபடி இருந்தாள் பாலா.

www.t.me/tamilbooksworld

கிழவர், "சக்ரபாணியின் சம்பந்தத்தைப் பற்றி நினைக்கக்கூட முடியாது. மோகனுக்கு வேறே நல்ல இடத்திலே பார்க்க வேண்டியதுதான்!" என்றார்.

சம்பந்தய்யா கூறிய வார்த்தைகள் பாலாவைச் 'சுரீல்' என்று தைத்தன.

அதற்குள் மோகன், "தாத்தா, என் கல்யாணத்தை மறுபடியும் கிளப்பறீங்களா? அதுக்கு ஒன்றும் இப்போ அவசரமில்லை!" என்றான்.

"நீ அவசரம் இல்லைன்னு சொன்னால் சரியாப் போயிடுமா? திடீர்னு நாளைக்கே சக்ரபாணி மனம் மாறி வந்து உன்னைக் கேட்டானானால்?"

"சக்ரபாணியின் பெண்ணா! ஐயோ தாத்தா! நான் நல்லா இருக்கணும்னு உங்களுக்கு ஆசையில்லையா? அந்தப் பெண் நிழல்கூட என் மேலே படக்கூடாது!" என்று மோகன் இரைந்தான்.

கிழவர் பலத்த குரலில் சிரித்தார்.

"என்னடா மோகன், அவள் நிழல்கூட வேண்டாம் என்கிறாயே? அவளே இந்த வீட்டிலே இருக்கிறேனென்று சொன்னால் அப்புறம் என்னடா பண்ணப் போகிறாய்?" என்று சொல்லிவிட்டு, பாலாவின்புறம் திரும்பினார்.

பாலாவுக்கு நடுக்கமே ஏற்பட்டது. பெரியவர் உண்மையைக் கூறிவிடுவாரோ என்று நடுங்கினாள். கிழவரின் பக்கம் திரும்பி, கெஞ்சும் பார்வையில் பார்த்தாள்.

மோகன், "தாத்தா, சக்ரபாணியின் பெண் இந்த வீட்டிலேயா? அவள் இங்கே நுழைந்தால், கழுத்தைப் பிடித்துத் தள்ளிவிடுவேன்!" என்று உறுதியோடு சொன்னான்.

பாலாவுக்கு ஒவ்வொரு விநாடியும் நடுக்கயாக இருந்தது.



காமாட்சி, "மோகன், பாலா திரிபுர சுந்தரி மட்டும் வந்தாள்என்றால், வெற்றிலை பாக்கு வைத்து அழைத்துக் கொள்வேன். அந்தப் பாக்கியம் எனக்கு ஏது!" என்றாள்.

"அந்தப் பாக்கியம் உனக்கு இருக்கிறது காமாட்சி. அதோ பாரி அந்தப் படத்திலே! குழந்தைப் பருவத்துப் பாலா, மோகன் பக்கத்திலே உட்கார்ந்துட்டிருக்கிறாள்!" என்று சொல்லிவிட்டுச் சிரித்தார் சம்பந்தய்யா.

"நல்லவேளை! அந்தப் படத்திலே இருக்கிறவளைப் பற்றித்தான் இதுவரை பேசினீங்களா!" என்று மோகன் நிம்மதியோடு பெருமூச்சு விட்டான்.

சிறிது நேரத்தில் பாலா பூஜை அறையில் இருந்த அம்மனுக்கு விளக்கேற்றி வைத்தாள். புஷ்பம் சூட்டி அலங்காரம் செய்தாள்.

சிறிய அறையில் தீபங்களின் மையத்தில் ஊதுவத்தி சாம்பிராணி மணம் வீச, பெரியவர் மரப் பலகையில் உட்கார்ந்து அம்மனுக்கு அர்ச்சனை செய்தார்.

பாலா, அவளே தயார் செய்த வடை, பாயசத்தை எடுத்து வந்தாள்.

கிழவர் நைவேத்தியம் செய்தானதும் பாலாவிடம் திரும்பினார்.

"சுந்தரி, உனக்குப் பாடத் தெரியுமா?" என்றார்.

பாலா தயங்கினாள். "சுருதிப் பெட்டி இல்லாமல் பாடிப் பழக்கமில்லை" என்று சொல்லி மழுப்பினாள்.

உடனே அங்கு உட்கார்ந்திருந்த பக்கத்து வீட்டுப் பெண், "எங்க வீட்டிலே சுருதிப் பெட்டி இருக்கிறது. நான் எடுத்துட்டு வர்ரேன்" என்று சொல்லி உடனே ஓடிப் போய் எடுத்து வந்தாள்.

பாலாவுக்கு நடுக்கமாக இருந்தது. பூஜை பெட்டியில் உள்ள அம்மன் உருவத்தைப் பார்த்தபடி ஆதிபராசக்தியின் மீது ஒரு துதிப் பாட்டுப் பாடினாள். உள்ளத்தில்

பொருமிய உணர்ச்சிகளைக் கொட்டியபடி, மனம் உருகப் பாடினாள்.

மோகன், அவள்மீது வைத்தகண் வாங்காமல் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான்.

பாட்டு முடிந்ததும் பாலாவே தொன்னையில் பாயசமும் வடையும் வந்தவர்களுக்கு எடுத்துக் கொடுத்தாள்.

ஜுரத்துடன் உட்கார்ந்திருந்த காமாட்சி அம்மாளின் கண்கள் நன்றியோடு கலங்கின.

சாப்பிட்டானதும் காமாட்சி அம்மாளையும், பெரியவரையும் வணங்கிவிட்டு வீட்டுக்குப் போக வேண்டுமென்று உத்தரவு கேட்டாள்.

காமாட்சி அம்மாள், "என்னவோ அம்மா, இந்த வீட்டைச் சேர்ந்தவள் போல் எல்லா வேலையும் செய்து இந்த வெள்ளிக்கிழமையைச் சிறப்பாக்கிவிட்டாய். உனக்கு எப்படித்தான் கைம்மாறு செய்வதென்று எனக்குப் புரியலே!" என்றாள்.

பாலா, பூஜை அறையில் இருந்த அம்மனைப் பார்த்தாள். உடனே பூஜை அறைக்குள் சென்று அம்மனுக்குச் சூட்டியிருந்த புஷ்பச் சரத்தை எடுத்து வந்தாள்.

அதை மோகனின் தாயிடம் கொடுத்து "இதை உங்கள் கையாலே என் தலையிலே சூட்டுங்களம்மா!" என்று கேட்டுக் கொண்டாள்.

மோகனின் தாய் உணர்ச்சி ததும்ப மலர்ச் சரத்தைப் பாலாவின் தலையில் சூட்டினாள்.

"உன் மனதுக்குப் பிடித்த வாழ்க்கையை நீ அடையணும், சுந்தரி!" என்று ஆசிர்வதித்தாள்.

மலர் சூட்டும்போது காமாட்சியின் கைகள் நடுங்கின. 'ஓ'வென்று அழுது விட்டாள்.

மோகன், "ஏம்மா அழறே? என்னம்மா?" என்று

www.t.me/tamilbooksworld



ஓடிப்போய்த் தாயைத் தன் தோள்மீது சாத்திக் கொண்டான்.

காமாட்சி விறைத்த பார்வையோடு பாலாவைப் பார்த்தாள்.

பாலா பயத்தோடு மோகனின் தாயைப் பார்த்தாள்.

"உண்மையிலேயே நீ யாருடி? சொல்லு!" என்று காமாட்சி கேட்டாள்.

## 42

காமாட்சி அம்மாள் பாலாவை, "உண்மையிலேயே நீ யாரென்று சொல்லு" என்று கேட்டதும் கிழவரும் திகைத்து விட்டார்.

'என்றாவது ஒருநாள் வெளியாக வேண்டிய விஷயம் தானே? இன்று வெளியாகட்டும்' என்று நினைத்தாரோ என்னவோ! கலவரமில்லாமல் பாலாவைப் பார்த்தார்.

ஆனால் பாலாவுக்கோ, 'நான் சக்ரபாணியின் பெண்' என்று கூறிக்கொள்ளத் துணிவில்லை. உண்மையை அப்பட்டமாகக் கூற இன்னும் சமயம் நேரவில்லை என்று நினைத்தாள். 'உண்மையிலேயே நீ யார்?' என்ற கேள்விக்குப் பதில் சொல்லாமல் பாலா வேறு ஏதேதோ பேச ஆரம்பித்தாள்:

"நான் யாராயிருந்தால் என்னம்மா? ஏனம்மா அப்படிப் பார்க்கிறீர்கள்? ஏன் என்னைப் பார்த்து அழுகிறீர்கள்?" ஒரு கேள்விக்குப் பல கேள்விகளில் பதில் கொடுத்தாள்.

பெரியவர், "காமாட்சி, சுந்தரி யாராயிருந்தால் என்ன! உறவு என்பது பிறக்கும்போது ஏற்படுகிறது! மடியும்போது முறிந்து போகிறது! மடிந்த பின் ஜீவன் வேறு கர்ப்பங்களைத் தேடிப் போய், வேறு உறவுகளை

ஏற்படுத்திக் கொண்டு வாழ்கிறது. திருமணத்தின் மூலமாக வாழ்வின் நடுவே சில உறவுகள் ஏற்படுகிறது. நட்பின் காரணமாகவும் உறவுகள் ஏற்படுகிறது. சுந்தரி ஆபத்தில் சிக்கியபோது நானும் மோகனும் அவளைக் காப்பாற்றினோம். அன்று இரவு அவளை இந்த வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்தான். அதுவும் ஒருவித உறவுதான். விசித்திரமான சந்தர்ப்பத்திலே உருவான உறவு'' என்று தத்துவமாகப் பேசினார்.

காமாட்சி கண்களைத் துடைத்துக் கொண்டாள். ''ஆமாம். நீங்கள் சொல்கிறதும் சரிதான். எனக்குத்தான் ஒருவித பிரமை. நாம் நடக்க ஆசைப்படுகிற விஷயத்தைப் பற்றி நாம் கனவு காண்கிறோம். என்னவோ, சுந்தரி சிரிக்கும்போது எனக்கு லட்சுமி ஞாபகம் ஏற்படுகிறது. அவள் எனக்கு இலையிலே வடை வைத்துப் பரிமாறியபோதும் லட்சுமி ஞாபகம்தான் வந்தது. கடைசியாக அவள் அம்மன் மீதிருந்து பூச்சரத்தை எடுத்து வந்து என் தலையிலே ஆசீர்வாதம் பண்ணி வையுங்கள் என்று சொன்னபோது லட்சுமியே நேரிலே வந்த மாதிரி தோன்றிற்று. ரங்கூனுக்குப் போனபோது லட்சுமி இதையேதான் சொன்னாள். 'அண்ணி உங்கள் கையாலே பூ வைத்து அனுப்புங்கள். நான் ரங்கூனிலிருந்து செல்வச் சீமாட்டியாகத் திரும்புவேன். நிச்சயம்' என்று சிரித்துச் சொன்னாள்.

''நானும் பூ வைத்து அனுப்பினேன். செல்வச் சீமாட்டியாகத்தான் திரும்பினாள். ஆனால் அண்ணனை இழந்து, புத்தியை இழந்து திரும்பினாள். அந்த நினைவு வந்ததும் எனக்கு அழுகை வந்துவிட்டது. இரண்டு முறைதான் சுந்தரி இந்த வீட்டுக்கு வந்திருக்கிறாள். ஆனால் இவளைப் பார்க்கிறபோது எனக்கு இதுவரை பத்துமுறை லட்சுமி ஞாபகம் வந்திருக்கிறது; ஒன்றும் புரியவில்லை!''

கிழவரும் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

www.t.me/tamilbooksworld



''கவலைப்படாதே காமாட்சி. இந்தப் பெண் சுந்தரிக்கு நீ பூ வைத்ததனாலே, அவளுக்கு ஒரு குறையும் வராது. நம் குடும்பத்திலே நாம் இழந்த உறவுகளை மறுபடியும் பெற்றாலும் பெறலாம்'' என்று கூறிவிட்டு, பாலாவிடம், ''நேரமாகிறது சுந்தரி. உன் வீட்டுக்குப் போக வேண்டாமா? வாம்மா, நான் உனக்குத் துணையாக வருகிறேன்'' என்று அழைத்தார்.

பாலா, அத்தான் மோகனைத் துணைக்கு அழைக்க வேண்டுமென்று நினைத்தாள். கிழவர், தானே வருகிறேன் என்று சொன்னது ஏமாற்றத்தைக் கொடுத்தது.

அடுத்த விநாடி கிழவர் மோகன் பக்கம் திரும்பி, 'உனக்கு வேலையில்லை என்றால் நீயும் வாயேன் மோகன்'' என்று அழைத்தார்.

மோகன் உடனே ஒரு சட்டையை அணிந்து கொண்டான்.

கிழவரும் பாலாவும் முன்னே நடந்தனர். சில நிமிடங்களில் மோகன் ஸ்கூட்டரை எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

தெருமூலைவரை பெரியவரும் பாலாவும் பேசாமலே வந்தனர்.

கிழவர், ''பாலா, காமாட்சியின் அன்புள்ளத்தை நம்மால் ஏமாற்ற முடியவில்லை பார்த்தாயா? காமாட்சி உன்னையும் லட்சுமியையும் சேர்த்துப் பேசுகிறாள். அவளுக்கு நீதான் லட்சுமியின் மகள் என்ற உண்மை தெரிந்தால் எவ்வளவு மகிழ்ச்சி அடைவாள் தெரியுமா?'' என்றார்.

''ஐயய்யோ! உண்மை தெரிய வேண்டாம் தாத்தா. அத்தானுக்கு அப்பா மீது இருக்கும் வெறுப்பில் என்னை அப்புறம் சந்திக்கக்கூட மாட்டார்.''

"காமாட்சி அம்மாளின் மகிழ்ச்சியைவிட, உனக்கு உன் அத்தான் சந்திப்புத்தான் முக்கியம் இல்லையா?" என்று கிழவர் குத்தலாகச் சொன்னார்.

பாலா தலையைக் கவிழ்ந்துக் கொண்டாள்.

மோகன் ஸ்கூட்டரும் அவர்களை நெருங்கியது. சிரித்தபடி மோகன் திசையில் திரும்பினார் கிழவர்.

"என்னப்பா மோகன், ஸ்கூட்டருடன் வந்து விட்டாய்? ஸ்கூட்டரிலே இரண்டு பேர் போகலாம், மூன்று பேர் போக முடியாதே! சரி, நீயே சுந்தரியை அவள் வீட்டில் கொண்டுபோய் விட்டுவிடு. நான் சிந்தாதிரிப் பேட்டைக்கு பஸ்ஸிலே போறேன்."

"இல்லை தாத்தா. ஸ்கூட்டரை நான் வீட்டிலே கொண்டு போய் விட்டுவிட்டு வந்துவிடுகிறேன். மூன்று பேரும் பஸ்ஸிலேயே போவோம்" என்றான் மோகன் அசடு வழிய.

பெரியவர், அவன் முகத்தையும் பாலாவின் முகத்தையும் ஒரு விநாடி நோக்கினார்.

"இல்லையப்பா. இருட்டு வேளையிலே நான் சுந்தரிக்குச் சரியான துணையாக முடியுமா? யாராவது மறித்தாலும் என்னாலே சண்டை போட முடியுமா? நீயே கூட்டிக்கொண்டு போ. நீயே போய் அவள் அட்ரஸ் என்ன என்று தெரிந்து கொள். அப்புறம் என்னை வந்து தொந்தரவு பண்ணாதே."

பாலாவும் மோகனும் மௌனமாக நின்றனர். ஸ்கூட்டர் மட்டும் பட்...பட் என்று சத்தம் செய்தபடி நின்றது.

பெரியவர், 'என்ன நிற்கிறாய் சுந்தரி? ஏறிக்கொள் ஸ்கூட்டரிலே" என்றார்.

பாலா, கிழவரை ஒருமுறை பார்த்துவிட்டுக் கொஞ்சம் கூடக் கூச்சமில்லாமல் ஸ்கூட்டரில் ஏறிக் கொண்டாள்.

அவள் ஸ்கூட்டரில் ஏறியவிதம், 'எனக்கு இதில் ஏறிச் செல்ல உரிமை இருக்கிறது' என்று தெளிவாகச் சொல்லியது.



கிழவரும் ஒரு விநாடி திகைத்து விட்டார். மோகனும் திகைத்து விட்டான்.

"மோகன், ஏன் தயங்குகிறாய்? ஸ்கூட்டரை ஓட்டிப் போ!"

மோகன் ஸ்கூட்டரை நகர்த்தினான்.

கிழவர் புன்முறுவலோடு பாலாவையும் மோகனையும் தாங்கிச் செல்லும் ஸ்கூட்டரைப் பார்த்தபடி நின்றார். தன் மகனுக்குப் பிறந்த மகனும், தன் மகள் பெற்ற மகளும் ஒருங்கே செல்லும் காட்சியைப் பார்க்க, சொர்க்கத்தையே விலையாகக் கொடுக்கலாம் என்று தோன்றியது பெரியவருக்கு.

சுருங்கிய அவர் முகச் சதைகள் துடித்தன. பல வருடங்களாக அவர் பூரண மகிழ்ச்சி என்பது என்ன என்பதையே மறந்திருந்தார். இன்று அவர் அடைந்த மகிழ்ச்சி அவருக்கு இளமையைக் கொடுத்தது.

அப்போது அவர் ஏறிச் செல்ல வேண்டிய பஸ்ஸும் ஸ்டாண்டுக்கு வந்து சேர்ந்தது. அன்று ரிலீஸான, 'பெரியவர்களுக்கு மட்டும்' என்று குறிப்பிட்ட வெளிநாட்டுத் திரைப்படத்தைப் பார்க்கச் செல்லும் கல்லூரி மாணவன் போல் குதூகலத்துடன் ஓடிப் போய்த் தன்னுடைய பஸ்ஸில் ஏறினார்.

ஸ்கூட்டரில் சென்ற பாலாவும் மோகனும் சில வினாடிகளுக்கு வார்த்தைகள் எதுவும் பேசாமலே சென்றனர்.

அவள் தலையில் சூடியிருந்த மல்லிகைப் பூவின் மணம், மோகன் நாசியோடு பேசியது. மோகனின் வலிமை மிகுந்த தோளும் முதுகும் பின்புறம் அமர்ந்திருந்த பாலாவின் கண்களோடு பேசின. மற்றபடி வார்த்தைகள் ஒலிக்கவில்லை.

"பெரியவர் ஸ்கூட்டரிலே ஏறிக் கொள் என்றால் உடனே ஏறிக்கொள்கிறதா?" என்றான் அவன்.



www.t.me/tamilbooksworld

"நான் ஏறிக் கொண்டவுடன், பெரியவர் ஸ்கூட்டரை ஓட்டு என்றால், நீங்கள் உடனே ஓட்டுகிறதா?" என்று பதிலுக்குக் கேட்டாள் அவள்.

"சரி சரி, எங்கே ஓட்டுகிறது?"

"என்னைக் கூட்டிப்போக இஷ்டமில்லை என்றால் இங்கேயே இறங்கிக் கொள்கிறேன். நிறுத்துங்கள்!"

மோகன் பதில் பேசவில்லை. திருப்பத்தில் ஸ்கூட்டரை வேகமாக ஓட்டினான். உள்ளே எழுந்திருந்த ஆத்திரத்தை மறைக்க, திருப்பத்தில் ஸ்கூட்டர் பயங்கரமாக வளைந்தது பாலாவுக்கு விழுந்து விடுவோமோ என்ற பயம். பயத்தில் மோகனைக் கட்டிக்கொண்டாள்.

பாலாவின் உடல் மோகன் முதுகில் அழுத்த, அவள் உடலில் புரியாத ஒருவித அதிர்ச்சி ஏற்பட்டது.

மோகன் நெஞ்சு, பாலாவின் ஸ்பரிசத்தால் படபட வென்று அடித்துக் கொண்டது. அவன் நாவில் ஒருவித வறட்சி ஏற்பட்டது.

ஸ்கூட்டர் சென்று கொண்டிருந்தது. பாலா கைகளை எடுக்கவில்லை. மோகனும் ஒன்றும் சொல்லவில்லை.

சில நிமிடம் கழித்து பாலா கைகளை எடுத்தாள். நிலா வெளிச்சத்தில் ஸ்கூட்டர் பீச் ரோடில் சென்று கொண்டிருப்பதை உணர்ந்தாள்.

மோகன் ஸ்கூட்டரை நிறுத்தினான். பாலா இறங்கி னாள்.

மோகன், பாலாவைப் பார்த்தான். பாலா பீச்சைப் பார்த்தாள்.

பீச்சில் ஒதுக்குப்புறமான பகுதி.

பாலா தயக்கத்துடன், "யாருமே இல்லையே!" என்றாள்.

"கூட்டம் இருந்தால்தான் பீச்சுக்கு வருவாயோ? நான் இருக்கிறேனே, போதாதா?" என்று சொல்லிவிட்டு மோகன் மணலை நோக்கி நடந்தான்.

www.tamilbooksworld



மணல் தரையைப் பார்த்தபடி பாலா நடந்தாள்.

மோகன், ஒரு படகை நோக்கி நடந்தான். படகின் நிழலில் அமர்ந்தான். பாலாவும் அமர்ந்தாள்.

இருவரும் பேசாமல் கடலைப் பார்த்தனர். பாலா திரும்பினாள். மோகனின் விரிந்து பரந்திருந்த மார்பில் அவள் பார்வை நின்றது. ஆட்டங்கல்லில் மோகன் மாவு அரைத்தபோது அவன் புஜ சதைகளின் அசைவைப் பார்த்த ஏற்பட்ட உணர்ச்சி மறுபடியும் பாலாவுக்கு ஏற்பட்டது.

"அத்தான்...! என் அத்தான்...!" என்று சொல்லி தன் முகத்தை அவன் மார்பில் புதைத்துக்கொள்ள வேண்டும்போல் தோன்றியது.

மோகன் ஓர் அடி நெருங்கினான். பாலாவையும் அறியாமல் அவள் கைகள் நடுங்கின.

காற்றில் அவள் சேலை ஒருபுறமாக ஒதுங்கியிருந்ததை அவள் உணரவில்லை. மோகன் பார்வையைக் கவனித் ததும்தான், அவளுக்குச் சேலை விலகியிருப்பது தெரிந்தது. உடனே சரி செய்துகொள்ள முயன்றாள்.

மோகன் கரங்கள், அவள் கைகளைத் தடுத்தன. சேலை துவண்டு மடிமீது விழுந்தது. மோகனின் பலமான கரங்கள் அவளைப் பற்றி இழுத்தன.

மணலில் அவள் நகர்ந்து மோகனை நெருங்கினாள். மோகன் கரங்கள் அவளை அணைத்தன.

அவள் தலை மெள்ள அவன் மடியில் சாய்ந்தது. மோகன் அவள் மடிமீது படுத்தபடி தன் இரண்டு கைகளாலும் அவள் கழுத்தை அணைத்தான்.

பாலாவின் உடல் சிலிர்த்தது. மடியில் படுத்து மோகன் சிரித்தான்.

அவன் கைகள் அவள் முகத்தை, அவன் முகம் நோக்கி இழுத்தன.

பாலாவின் முகத்துக்கும் மோகன் முகத்துக்கும் இடையே உள்ள இடைவெளி அங்குலம் அங்குலமாகக் குறைந்தது.

பாலாவின் உஷ்ணமான மூச்சு அவன் முகத்தில் வீசி, அவனுடைய ஆசையைக் கிளறியது.

மோகன், தலையைத் தூக்கி, கீழிறங்கும் பாலாவின் முகத்தைச் சந்தித்தான். இருவர் உதடுகளும் தொட்டன. இருவர் உடலும் தீயால் எரிக்கப்பட்டதுபோல் இருந்தது.

அப்போது எக்களிப்பு நிறைந்த ஓர் ஆண் மகனின் சிரிப்பு பாலாவின் காதுகளில் ஒலித்தது.

அந்தச் சிரிப்பொலி, எங்கோ காற்றில் மிதந்து கொண்டிருந்த பாலாவை, பூமிக்குக் கொண்டுவந்தது.

பாலா தலையைத் தூக்கித் திருப்பினாள். சற்றுத் தொலைவில் படகின் வேறு ஒரு மூலை நிழலில் ஓர் ஆண் மகனும் பெண்ணும் அணைத்தபடி கிடப்பதைப் பார்த்தாள்.

ஆண் மகன் மல்லாந்து படுத்திருந்தான். அவன் மார்பின் மீது புரண்டபடி பெண் இருந்தாள்.

நிலவொளியில் அந்தப் பெண்ணின் முகம் தெரிந்தது. அது கமலாவின் முகம். கீழே படுத்திருந்தது மணி என்று அவன் சிரிப்பொலியிலிருந்து தெளிவாகத் தெரிந்தது.

பாலாவுக்கு, வெகு நாட்களுக்கு முன் மணி தன்னிடம் காரில் நடந்து கொண்ட முறை ஞாபகத்துக்கு வந்தது.

அன்று தன்னிடம் வெற்றி காண முடியாதவன், இன்று கமலாவிடம் வெற்றி கண்டுவிட்டான் என்று நினைத்தாள்.

அவளும் மோகனும் இருக்கும் நிலையில், கமலாவைக் குற்றம் சொல்லும் நிலையில் தான் இல்லை என்பது தெளிவாகப் புரிந்தது.



எந்த நிமிடம் கமலாவோ, மணியோ திரும்பிப் பார்த்தாலும், தன்னை அவர்கள் அடையாளம் கண்டுகொள்ள முடியும் என்ற பயம் எழுந்தது.

மணி, தன்னைச் சக்ரபாணியின் மகளாகவும், கமலா, தன்னை வேலைக்காரி சுமதியாகவும் அடையாளம் கண்டு கொள்வார்கள். விருட்டென்று எழுந்தாள்.

கமலாவும் மணியும் விலங்குகள்போல் மிகவும் நெருக்கமாக இருந்ததால் அவர்கள், இந்த இருவர் இருப்பதைப் பற்றிக் கவனிக்கவில்லை.

பாலா எழுந்து நடக்க ஆரம்பித்ததும் மோகன், ''சுந்தரி!'' என்று கூப்பிட்டபடி அவளைப் பின்தொடர்ந்தான்.

''சுந்தரி!'' என்ற வார்த்தையைக் கேட்டு, கமலா மணியைவிட்டு விலக நினைத்தாள்.

''யாரோ வருகிறார்கள்'' என்றாள் கமலா.

''யார் வந்தால் என்ன கமலா! இன்பத்தின் உச்ச கட்டத்திலே பிரிகிறதா!'' என்று சொல்லி மணி அவளை இறுக அணைத்தான்.

## 43

பாலா வெட்கத்தோடும், படபடப்போடும் ஓடி வந்தது மோகனுக்குக் குழப்பத்தைக் கொடுத்தது. அவனுடைய உணர்ச்சிகள் ஒருவித எழுச்சியில் இருந்தமையால் பாலா திடீரென்று ஓடியது, அவனைக் கன்னத்தில் அறைந்தது போல் இருந்தது. ஸ்கூட்டரை நெருங்கியதும் மோகன், ''என்ன சுந்தரி! இப்படி ஓடினால் என்ன அர்த்தம்?'' என்று கேட்டான். பாலா பதில் பேசவில்லை. பேசாமல் மூச்சுவிட்டபடி நின்றாள். கமலாவை அங்கு மணலில்

பார்த்தது. அவளுக்குத் தன் மீதே ஒருவிதமான வெறுப்பைக் கொடுத்தது.

மோகன், "சுந்தரி!" என்று அவள் மீது கையை வைத்தான் "கையை எடுங்க" என்றாள் அவள். "என்ன திடீர்னு கூச்சம் வந்துட்டுது!" என்று கேட்டான் மோகன்! அதற்கு அவள், "நாம் அந்தப் படகு மறைவுக்குப் போயிருக்கக் கூடாது" என்றாள்.

மோகன் ஸ்கூட்டரை ஸ்டார்ட் செய்தபடியே, "நீ சம்மதப்பட்டுத்தானே வந்தாய்?" என்று கேட்டான். "சம்மதப்பட்டு வந்தால் நீங்க எது வேணுமானாலும் செய்வீர்களா?" என்று ஆத்திரத்துடன் கேட்டபடி ஸ்கூட்டரின் பின்பக்கம் உட்கார்ந்தாள். மோகனுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை.

"இதற்கு முன்னாலேயே உங்களுக்கு இதிலே சர்வீஸா?" என்று கேட்டாள். ஸ்கூட்டர் சென்று கொண்டே இருந்தது.

"எல்லாப் பெண்ணோடேயும் இப்படி நடந்து கொள்ள மாட்டேன்" என்றான் மோகன்.

"அப்படியென்றால் நான் வெட்கம் இல்லாதவள்—எல்லாவற்றுக்கும் துணிஞ்சவள் என்று அர்த்தமா? நானும் எல்லாருடைய ஸ்கூட்டரிலேயும் பின்புறம் ஏறிக்கொள்ள மாட்டேன். எல்லாருடனும் மணலுக்கு இறங்கிப் போக மாட்டேன்" என்று குழந்தை போல அழாக் குறையாகச் சொன்னாள்.

"எதற்கு அழறே? உன்னை என்ன தப்பாகச் சொன்னேன்?"

"பின்னே ஏன் உங்கள் குரலிலே இவ்வளவு கடுமை கோபம்?"

"பசித்தவன் முன்னாலே இலை போட்டு, அதிலே பழம்... நல்ல சாப்பாடு, பலகாரம் எல்லாம் பரிமாறி,

www.t.me/tamilbooksworld



அவன் சாப்பிடக் கை வைத்தவுடனே, இலையை வாரி எடுத்து வீசினால், அவனுக்குக் கோபம் வாராமல் சிரிப்பானா?"

"ஐயோ பாவம்! உங்களுக்கு அவ்வளவு பசியா? உங்களைவிட அதிகப் பசியோடு ஒரு பெண்ணும் ஆணும் ஒருத்தரை ஒருத்தர் சாப்பிடறதைப் படகின் பின்புறம் பார்த்தேன். நீங்கள் அவர்களைச் சரியாகக் கவனிக்கவில்லை. அவர்களைப் பார்த்ததும் எனக்கு இந்த ரசப்பசி மேலேயே ஒரு வெறுப்பு வந்துவிட்டது அதுதான் ஓடிவிட்டேன்."

"இதெல்லாம் அமெரிக்காவிலே சகஜம். பெரிய சொஸைட்டியிலே சாதாரணம்!"

அவன் சொல்வதை ஒப்புக்கொள்ளக் கூடாது என்ற முறையில் பதில் சொன்னாள் பாலா. "நீங்கள் அமெரிக்காவிலேயும் இல்லை. உங்களுக்குப் பெரிய சொஸைட்டியும் தெரியாது. ஏன் அதைப் பற்றிப் பேசுகிறீர்கள்?"

"என்ன அப்படிச் சொல்லிவிட்டாய் சுந்தரி? என் அத்தை புருஷன் சக்ரபாணி பெரிய சொஸைட்டியைச் சேர்ந்தவர். அதை மறந்து விடாதே!" என்று போட்டிக்காகக் கூறினான் மோகன்.

"அவர்தான் உங்களைத் திரும்பியே பார்க்கிறதில்லையே? ஒரு வேளை அவருக்குத் தெரியாமல் நீங்கள் அவர் மகளைச் சந்திக்கிறது உண்டா? அந்த அனுபவத்தை வைத்துத்தான் பெரிய சொஸைட் யை எடை போடுகிறீர்களோ?" என்று கேட்டாள்.

"அந்தப் பயல் சக்ரபாணியைச் சொல்லு, அவர் பெண் பாலாவைப் பற்றி மட்டும் சொல்லாதே" என்றான் மோகன்.

"உங்கள் அத்தை பெண் மேலே எவ்வளவு அக்கறை" என்றாள் பாலா.

"அக்கறைக்காகச் சொல்லவில்லை சுந்தரி.

அவனையும், அவள் அப்பனையும் ஒரு பொருட்டாகவே நான் நினைக்கவில்லை. பார், ஊரிலே எந்த மூலை திரும்பினாலும் அந்தப் பாலாவின் பெயர்தான் போர்டிலே தொங்குகிறது. ஆனால் அந்தப் பெண்ணின் படமோ, பெயரோ இதுவரையிலும் தினசரிகளில் வரவில்லை. அவ்வளவு செல்வம் உள்ள பெண் பீச்சுக்கு வந்து, விபரீதமான வாழ்க்கை நடத்தினால், அவள் பெயர் எப்படிச் சந்தி சிரித்திருக்கும்? அதிலிருந்து தெரிகிறது அவள் ஒழுக்கமாகத்தான் இருக்க வேண்டும் என்று?'' என்று கூறினான் மோகன்.

பாலாவுக்கு இதைக் கேட்க ஒருவிதத் திருப்தி ஏற்பட்டது. அப்போது ஸ்கூட்டர் ஒரு வெற்றிலை பாக்குக் கடையைத் தாண்டியது. பாலா தனக்குத் தாகமாக இருக்கிறது என்று கூறி, சோடா வேண்டும் என்று கேட்டாள். உடனே மோகன் ஸ்கூட்டரை நிறுத்தினான். சோடாவை வாங்கிவந்து கொடுத்தான். சோடா வாங்கும்போது மோகன் ஒரு தினத்தாளை வாங்கிப் பார்த்தான். அந்தத் தினத்தாளின் பின்புறம் சக்ரபாணி இளைய ஜோன்சுக்கு ஆறு லட்சம் ரூபாய் பணம் கொடுத்ததை தலையங்கமாகப் போட்டுப் படமும் போட்டிருந்தது. மோகனால் நம்பவே முடியவில்லை. ''பார்த்தாயா சுந்தரி, இந்த ஸ்டண்ட்டை!'' என்று சொல்லிப் பத்திரிகையை நீட்டினான்.

எந்த பாலா பார்க்க வேண்டும் என்று சக்ரபாணி ஆறு லட்சத்தையும் கொடுத்து படத்தையும் தினசரியில் பிரசுரித்தாரோ அந்த பாலா அதை இன்று பூராவும் பார்க்கவில்லை. அவள் மனம் அத்தான் வீட்டு நிகழ்ச்சிகளில் தோய்ந்திருந்ததால் அவளுக்குப் பத்திரிகை பார்க்கவே வாய்ப்பில்லை.

படத்தில் இளைய ஜோன்சும் அவன் மனைவியும் பணத்துடன் சிரித்தபடி நிற்பதும், அவள் தந்தை நிற்பதையும் பார்த்த அவளால் நம்பவே முடியவில்லை.

www.t.me/tamilbooksworld



ஆறு பைசாக்கூட கொடுக்க மாட்டேன் என்று சொன்னவராயிற்றே அப்பா; ஏன் கொடுத்தார். எதற்குக் கொடுத்தார்?

அவர் தொழிலாளர் கூட்டத்தில் துணிந்து குழந்தையைக் காப்பாற்றியதைத் தான் புகழ்ந்து பேசியது ஒரு வேளை அவருக்கு மனமாற்றத்தைக் கொடுத்திருக்குமோ?

தன்னைப் பத்திரிக்கைக்காரர் போட்டோ எடுக்கவே விரும்பாதவர், தான் பணம் கொடுக்கும் காட்சியைப் படமாக்கிப் பிரசுரிக்க வேண்டுமென்றால், சென்னையில் ஏதாவது ஒரு மூலையில் மறைந்திருக்கும் மகள் பாலா, ஜோன்ஸுக்குப் பணம் கொடுத்த செய்தியை உணர வேண்டுமென்று செய்திருப்பாரோ என்று கூட நினைத்தாள்.

அவள் எதேச்சையாக நினைத்ததுதான் உண்மைக் காரணம் என்பது அவளுக்கு ஊர்ஜிதமாகத் தோன்றவில்லை.

'தந்தை வருமான வரியை ஏமாற்ற எவ்வளவோ திடீர் 'ஸ்டண்ட்டுகள்' செய்வார். அம்மாதிரியான ஸ்டண்ட்டாக இதுவும் இருக்குமோ' என்று அடுத்த விநாடியே நினைத்தாள்.

எது எப்படியாயினும் தந்தையின் செயல் அவள் மனத்தில் ஒருவித மகிழ்ச்சியைக் கொடுத்தது.

மறுபடியும் மோகன் ஸ்கூட்டரை 'ஸ்டார்ட்' செய்தான். பாலா பின்புறம் ஏறிக் கொண்டாள்.

ஸ்கூட்டர் சென்று கொண்டிருந்தது. திடீரென்று பேச்சு சுவாரசியத்தில் இருவரும், கிண்டியை நெருங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தனர்.

''என்ன சுந்தரி, கிண்டி வரையிலே வந்துவிட்டோம். திரும்பலாமா?'' என்றான்.

''இல்லை. இங்கேயே இறக்கி விட்டு விடுங்கள்'' என்றாள்.

மோகனுக்கு விளங்கவில்லை. "நீ இந்தப் பகுதியிலேயா தங்கியிருக்கிறாய்?" என்றான்.

"இல்லை இங்கு ஒரு உறவுக்காரரைப் பார்த்துவிட்டு நாளைக் காலையிலே வருகிறேன்" என்று சொன்னாள்.

நள்ளிரவில் முன்பின் தெரியாத பகுதியில் தனியாக இறங்குகிறாளே என்று யோசித்தான்.

"உன்னுடைய உறவுக்காரர் வீடு எங்கே சொல்லு. நான் கொண்டுபோய் விடுகிறேன். நம் முதல் சந்திப்பில் ஏற்பட்ட மாதிரி உனக்கு ஏதாவது ஆபத்து நிகழ்ந்தால்...?" என்றான்.

"அப்படி ஒன்றும் நிகழாது. என் உறவுக்காரர் வீடு பக்கத்தில்தான் இருக்கிறது" என்றாள்.

மெள்ள நடக்க ஆரம்பித்தாள். மோகன் ஒரு விநாடி காத்திருந்தான். ஸ்கூட்டரை ஸ்டார்ட் செய்தான்.

"சுந்தரி, ஏன் இப்படித் திடீரென்று பிரிந்து செல்கிறாய்? நான் உன்னிடம் மணலில் தவறாக நடந்து கொண்டேன் என்றா..." என்று கேட்டான்.

"அந்தத் தவறில் நானும் துணைக் குற்றவாளி. நீங்கள் உங்களை மறந்ததுபோல் நானும் என்னை மறந்து விட்டேன். அந்தக் காரணத்துக்காக நான் இறங்கவில்லை. நான் ஒருவிதமான கிறுக்குப் பெண்!" என்று சொல்லி, பற்கள் தெரியும்படி சிரித்தாள்.

"உன்னை எனக்குப் புரியவில்லை சுந்தரி!"

"புரிந்துவிட்டால் சுவாரசியம் இருக்குமா? புரியாத வரையில்தான் கவர்ச்சி" என்று சொல்லிவிட்டு ஓடினாள்.

மோகன் புறப்பட்டான். அவளைப் பின்தொடர நினைக்கவில்லை.

பாலா நிலவொளியில் கால் போனபடி நடந்தாள்.

விவரம் தெரியாத ஒரு மகிழ்ச்சி இருந்தது. 'அத்தானைக் குழப்பி விட்டோம்; நன்றாக அவர்



குழம்பட்டும்! இனிமேலும் அவருக்கு என்மீது ஆசையிருந்தால், அவர் ஆசை உறுதியானது! நான் யார் என்ற உண்மை தெரிந்தாலும், அவர் ஆசை மாறாது' என்று தனக்குத்தானே கூறிக்கொண்டாள்.

கமலா, மணியுடன் இருந்த கோலத்தைப் பார்த்தபின் பாலாவுக்கு, கமலா விஷயத்தில் பயமே ஏற்பட்டது.

மணி ஒருநாளும் குருமூர்த்தியின் சகோதரியை மணக்க மாட்டான் என்று தெரியும். கமலாவின் வாழ்வில் விபரீதம் ஏற்படாமல் காப்பாற்ற வேண்டியது தன்னுடைய பொறுப்பாகவே நினைத்துக் கொண்டாள். அவளிடம் இதுபற்றி எப்படிப் பேசுவது என்று சிந்தித்துக் கொண்டே நடந்தாள்.

நடந்துகொண்டே மின்சார ரயில் பாதையை நெருங்கி விட்டோம் என்பதை உணரவில்லை.

சக்ரபாணியின் மில் தொழிலாளர்கள், மரியசூசை மீது இருந்த நம்பிக்கையை இழந்து அவனைத் தலைமைப் பதவியிலிருந்து நீக்கிவிடவே, மரியசூசைக்கும் அவன் நண்பர்களுக்கும் ஆத்திரம், சக்ரபாணியின் மீது திரும்பியது.

அவன் அன்று கூட்டத்தில் நுழைந்து செய்த ஒரு சிறு செயல், மரியசூசையின் தலைமைப் பீடத்தையே கெடுத்துப் பறித்து விட்டது.

சக்ரபாணியைப் பழிவாங்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர்.

மீனம்பாக்கம் தாண்டியுள்ள ஒரு புதுத் தொழிற்சாலைக்குச் சக்ரபாணி சென்று அன்று இரவு திரும்பும் போது அவனைத் தீர்த்துக் கட்டுவது என்று முடிவு செய்தான் மரியசூசை.

அவனுடைய கைக்கூலிகள், மீனம்பாக்கம் தொழிற்சாலையில் இருந்தமையால், அவர்களின் மூலம் மரியசூசைக்கு மீனம்பாக்கம் தொழிற்சாலையிலிருந்து

www.t.me/tamilbooksworld

சக்ரபாணி எப்போது திரும்புவான் என்ற தகவல் தொலைபேசி மூலம் கிடைத்தது.

மரியசூசையும், அவன் கூட்டாளிகளும் சக்ரபாணியின் வருகைக்குக் காத்திருந்தனர்.

மீனம்பாக்கம் தாண்டியுள்ள ஒதுக்குப்புறமான குறுக்கு சாலையில் சக்ரபாணியின் கார் வந்தது. சக்ரபாணியே காரை ஓட்டி வந்தான். டிரைவர் இல்லை.

சாலையில் நீண்ட ஒரு கல் குறுக்கு நெடுக்காகக் கிடந்தது.

சக்ரபாணி ஆத்திரத்துடன் இறங்கினான். கல்லை நகர்த்தப் போனான்.

மரியசூசையின் ஆட்கள் பின்புறமிருந்து சக்ரபாணியின்மீது பாய்ந்து அவன் தலையில் ஓங்கி அடித்தனர்.

சக்ரபாணி மயங்கி விழுந்தான். தன்னை யார் அடித்தார்கள் என்றுகூடச் சக்ரபாணிக்குத் தெரியவில்லை.

அடுத்த வினாடி, சக்ரபாணியைக் காரில் தூக்கிப் போட்டனர். ஒருவன் டிரைவர் ஸீட்டில் அமர்ந்தான். மற்றவர்கள் பின்புற ஸீட்டில் அமர்ந்தனர். கார் புறப்பட்டது.

ஒருவன் பிராந்தி பாட்டிலைத் திறந்து மயங்கிக் கிடக்கும் சக்ரபாணியின் வாயில் ஊற்றினான்.

சக்ரபாணி விழித்துக் கொண்டான். மறுபடியும் தலையில் அடித்தனர். அவன் ஆடைகளில் பிராந்தியைத் தெளித்தனர்.

கார், லெவல் கிராஸிங்கை நெருங்கியது.

காரை, தண்டவாளத்தின் குறுக்கே நிறுத்தினர். குடிபோதையில் சக்ரபாணி, ரயில் வரும்போது கார் ஓட்டி வந்து இறந்தான் என்று மற்றவர்கள் நினைக்க வேண்டும் என்பது அவர்கள் திட்டம்.

"பணப் பூதமே! உன்னை ரயில் அரைத்து, நீ மடிந்து

www.t.me/tamilbooksworld



போ!" என்று கூறிவிட்டு மரியசூசையின் ஆட்கள் நகர்ந்தனர்.

அதே சமயம் கமலாவின் எதிர்காலத்தைச் சிந்தித்தபடி வந்த பாலா, ரயில்வே லயன் ஓரமாக நடந்து வந்து கொண்டிருந்தது மரியசூசைக்குத் தெரியாது.

ரயில்வே கேட்டின் குறுக்கே அவளுடைய தந்தையின் கார் நிற்பதையும், சிலர் இறங்கி ஓடுவதையும் பார்த்தாள் பாலா.

தன்னையும் மறந்தபடி காரை நோக்கி ஓடினாள்.

அவள் தந்த டிரைவிங் ஸீட்டில் அமர்ந்திருந்தார். அசைத்துப் பார்த்தாள். தந்தை விழிக்கவில்லை.

அதே சமயத்தில் இரவு எழும்பூரிலிருந்து புறப்படும் எக்ஸ்பிரஸ் தடதடவென்று பெரும் சத்தத்துடன் வந்து கொண்டிருந்தது.

காரின் அடித்தளத்தில் சாவிக்கொத்து கிடந்தது.

கார் சாவியைக் கீ போர்டில் பொருத்தி, காரை ஸ்டார்ட் செய்யப் பார்த்தாள்.

எக்ஸ்பிரஸின் விசில் சத்தம் அண்மையில் கேட்டது.

பாலாவின் கை கால்கள் நடுங்கின. தந்தையின் முகத்தைப் பார்த்தாள்.

அப்போது அவர் முகம், ஆதரவற்ற ஒரு குழந்தையின் முகமாகத் தெரிந்தது.

ஒரு கருணையற்ற செல்வ சாம்ராஜ்யத்தின் தலைவனது முகமாகத் தெரியவில்லை.

காரிலிருந்து இறங்கி ஓடி, காரைத் தள்ளப் பார்த்தாள்.

கார் நகரவில்லை.

இரவு எக்ஸ்பிரஸ் தடதடவென்று நெருங்கிக் கொண்டிருந்தது. அதன் ஒளிவிளக்கு தெரிந்தது.

என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தாள் பாலா.

## 44

மறுபடியும் முயன்று ஹாண்ட் பிரேக்கை ரிலீஸ் செய்தாள் பாலா. வண்டியைத் தள்ள முயன்றாள். வண்டி நகரவில்லை. பெரிய வண்டி அல்லவா? அதிகப் பணம் கொடுத்து வாங்கிய வண்டி அல்லவா?

இன்னது செய்வது என்று தெரியாமல் மறுபடியும் டிரைவிங் ஸீட்டில் ஏறி, கார் சாவியைத் திருப்பினாள். இரவு எக்ஸ்பிரஸின் சப்தம் பயங்கரமாக ஒலித்தது. 'நான் நெருங்கிவிட்டேன்!' என்று அந்த எக்ஸ்பிரஸ் ரயில் கூறுவதுபோல் பாலாவுக்குக் கேட்டது. எக்ஸ்பிரஸ் சப்தத்தின் நடுவே, காரின் என்ஜின் லேசாக வேலை செய்து மறுபடியும் அடங்கியது. தந்தையைத் திரும்பிப் பார்த்தாள். சக்ரபாணி அமைதியாகக் கண் மூடியபடி இருந்தான். எவ்வளவு பெரிய பணக்காரன்! எவ்வளவு பேர் வாழ்வுகளை இரக்கமில்லாமல் என்ஜின்போல் அரைத்துத் தள்ளியவன்! அவனுக்குத் தகுந்த முடிவு ஒரு ரயில் வண்டி என்ஜினால் அரைத்துத் தள்ளப்படுவதுதான் என்று மறுநாள் சிலர் கூறவும், வேண்டாதவர் பத்திரிகையில் எழுதவும் நேரும் என்று தோன்றியது பாலாவுக்கு. அன்று மோகன் வீட்டில் வடை தயார் செய்து படைத்த அம்மனின் உருவத்தை நினைத்துக் கொண்டாள்.

"பாலா திரிபுரசுந்தரி! என் அப்பாவைக் காப்பாற்று" என்று அழுதபடி வேண்டிக் கொண்டாள்.

ஓ...ஓ...ஊ... என்று இரவு எக்ஸ்பிரஸ் பயங்கரமாக ஊளையிட்டது. அவளுடைய பிரார்த்தனையை என்ஜின் விசிலடித்துக் கேலி செய்வதுபோல் தோன்றியது பாலாவுக்கு. நம்பிக்கை தளராமல் மறுமுறை கார் சாவியைக் கண்களை மூடியபடி திருப்பினாள்.



கார் என்ஜின் 'புர்ரென்று' பூரண உயிரோடு வேலை செய்யத் தொடங்கியது. பாலாவுக்கு மனத்திலே திருப்தி. அதே சமயம் ரயில் என்ஜின் கார் இருந்த இடத்தை நெருங்கியது. பாலா 'கிளட்சை' ஆப் செய்துவிட்டு, 'கியரை'ச் சரிசெய்யப் போனாள். எந்த 'கியர்' முதல் 'கியர்' என்று புரியவில்லை. அந்த மாடல் காரை ஓட்டி அவளுக்குப் பழக்கமில்லை. எதிரே பார்த்தாள். கேட் சாத்தியபடி இருந்தது. காரைச் சரிசெய்யும் அவசரத்தில் கேட் மூடி இருப்பதை மறந்து விட்டாள். இறங்கிப் போய்க் கேட்டைத் திறக்க முடியாது. ரயில் நூறு கெஜ தூரத்தில் வந்துகொண்டு இருந்தது. குருட்டுத்தனமாகக் கியரை அடித்து, கிளட்சை ரிலீஸ் செய்தாள். ஆக்ஸிலேட்டரை அழுத்தினாள்.

கார் மெள்ள நகர்ந்து எதிரே உள்ள கேட்டை இடித்தபடி சென்று நின்றது.

பாலா கார் டிரைவிங் சீட்டில் அமர்ந்தபடி பின்புறம் திரும்பிப் பார்த்தாள். தண்டவாளம் தெரியவில்லை. காரின் பின்புறம் தண்டவாளத்தைவிட்டு ஓரளவு நகர்ந்து விட்டதா இல்லை, தண்டவாளத்தை ஒட்டினாற்போல் இருக்கிறதா என்ற சந்தேகம் ஏற்பட்டது. ஆனால் அதிக நேரம் அவள் சந்தேகப்படவில்லை. இரவு எக்ஸ்பிரஸ் தடதடவென்று அவளைத் தாண்டிச் சென்றது. ரயில் தொடர் சென்றதும், இறங்கி வந்து பார்த்தாள்.

காரின் பின்புற டிக்கிக்கும், தண்டவாளத்துக்கும் ஓர் அடி தூரம்தான் இருந்தது. சில அங்குலங்களில் கார் பிழைத்தது என்று புரிந்து கொண்டாள்.

அவள் உடல் பூராவும் வியர்த்திருந்தது. ஆபத்து நீங்கிய பின்பும் உடல் படபடவென்று அடித்தபடியே இருந்தது. ஓடிப்போய், ரயில்வே லெவல் கிராஸிங் கதவைத் திறந்தாள். காரில் ஏறிக்கொண்டாள். காரை மறுபடியும் ஸ்டார்ட் செய்தாள். இப்போது எந்தவிதத் தடங்கலுமில்லாது கார் வேலை செய்தது.

www.t.me/tamilbooksworld

சக்ரபாணி முன் சீட்டில் சாய்ந்தபடி கிடந்தான். கண்கள் மூடியிருந்தன. அவனுடைய உதடுகள் மட்டும் ஒரு விதமாகச் சுளித்தன. பாலாவுக்குக் கோபம் வந்தது. ''அப்பா! உங்களுக்காக ஒவ்வொரு நிமிஷமும் செத்துப் பிழைத்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் நிம்மதியாகச் சாய்ந்து கொண்டு உதட்டைச் சுளிக்கிறீர்களே!'' என்று செல்லமாகத் தன் தந்தையைக் கடிந்து கொண்டாள். அவள் தந்தையின் கண்கள் மூடியபடியே இருந்தன. அவனிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை.

அவள் காரை ஓட்டிச் சென்றாள். ரயில்வே கேட்டிலிருந்து சென்னை செல்லும் பாதையில், இரண்டு பர்லாங்கு தூரத்தில் ஒரு பெட்டிக் கடையின் பலகைமீது அமர்ந்தபடி, மரியசூசையும் அவன் ஆட்களும் காத்திருந்தனர். ரயில் வண்டி காரில் மோதிச் சக்ரபாணி இறந்திருப்பான் பிறகு இரவு எக்ஸ்பிரஸ் கேட்டிலேயே நிறுத்தப்பட்டிருக்கும், அரைமணி நேரத்தில் பரபரப்பு ஏற்பட்டிருக்கும், ரயில்வே போலீஸ் அதிகாரிகள் அந்தச் சாலையில் ஜீப்பிலோ, மோட்டார் பைக்கிலோ செல்வார்கள் என்று காத்திருந்தார்கள் அவர்கள்.

ஆனால் அப்படி எதுவுமே நிகழவில்லை. இரவின் நிசப்தத்தில் எக்ஸ்பிரஸ் வண்டி, ரெயில்வே லெவல் கிராஸிங்கைத் தடதடவென்று தாண்டிச் சென்ற சப்தம் மரியசூசையின் காதுகளில் விழுந்தது. மரியசூசைக்குத் திகைப்பு ஏற்பட்டது. அடுத்த ஐந்து நிமிடங்களில் அதே சாலையில் சக்ரபாணியின் கார், எந்தவிதச் சேதமும் இல்லாமல் கடந்து சென்றது. அது அவனுக்கு அதிர்ச்சியையே கொடுத்தது.

மங்கிய வெளிச்சத்தில் மரியசூசைக்கும் அவன் ஆட்களுக்கும் காரை ஓட்டிச் சென்றது யாரென்று புரியவில்லை. அவன் கூட்டாளிகளில் ஒருவன், சக்ரபாணிதான் ஓட்டுகிறான் என்று நினைத்தான். அவன், ''சக்ரபாணி சைத்தானிடம் வரம் வாங்கி இருக்கிறான் மரியசூசை!

www.t.me/tamilbooksworld



அவனை அடித்தால்கூட அவன் சாகமாட்டான். அவனுக்கு நாம்தான் இப்படிச் செய்தோம்னு தெரிஞ்சால் என்ன ஆகும்?'' என்று கூறினான். அவன் குரலில் பீதி ஒலித்தது.

மரியசூசை கூட்டாளியைத் திரும்பிப் பார்த்தான். பீதிதான் நரோகத்துக்குத் தாய் என்று நன்கு உணர்ந்தவன் மரியசூசை. தன்னுடைய கூட்டாளியின் பீதியை எப்படியாவது நீக்க வேண்டும். இல்லாவிட்டால் அவன் உளறி விடுவான் என்ற தீர்மானத்திற்கு வந்தான் மரியசூசை. ''சக்ரபாணிக்கு நம்மை அடையாளம் தெரியாது. இந்த விஷயத்தைப் பற்றி சக்ரபாணி போலீசுக்குப் போக மாட்டான். ஏன்னா, அவனுக்குத்தான் அவமானம். அவன் எந்தவிதப் 'பப்ளிசிடி'யையும் விரும்ப மாட்டான். போலீஸ் என்றால் கேஸ் என்றால் அசிங்கமான 'பப்ளிசிடி' என்பது அவன் அபிப்பிராயம்'' என்றான்.

மரியசூசையின் நண்பர்கள், அவன் வாதத்தில் உள்ள உண்மையை ஆமோதித்தனர். ஆனால் பீதியை வெளியிட்ட கூட்டாளி மட்டும் மருண்டு நோக்கினான்.

தந்தையைக் காரில் வைத்து ஓட்டிச் சென்ற பாலா, ஒரே நாளில், அதுவும் இரவு சில மணி நேரங்களில் எவ்வளவு உணர்ச்சிகளைச் சந்தித்து விட்டாள்! கடற்கரை மணலில் அத்தான் மோகனுடன் அமர்ந்திருந்த போது அவள் பெண்மையின் பூரண உணர்ச்சியின் எக்களிப்பை உணர்ந்தாள். ஆண்மையின் காந்தத்தின் முன் பெண்ணின் தவிப்பை அறிந்தாள் முதல் முறையாக. உணர்ச்சியின் உச்ச வரம்பிலிருந்து தேறி எழுந்து விழித்தாள். அத்தானைப் பிரிந்து ரயில் வழியில் வரும்போது தந்தைக்கு ஆபத்து. அவரைக் காப்பாற்றும் முயற்சியில் அன்பின் துடிப்பு! பயத்தின் எல்லையையே எட்டிப் பார்த்துவிட்டாளே!

சில மாதங்களுக்கு முன்பு இம்மாதிரியான நிகழ்ச்சி

களைக் கனவாகக் கண்டிருந்தால்கூட விழித்து நடுங்கி யிருப்பாள். ஆனால் இன்று அவைகளை நனவில் சமாளிக்க தனக்கு எங்கிருந்து வலிமை பிறந்தது என்று அதிசயித் தாள். உள்ளம் என்பது ஒரு ரப்பர். சந்தர்ப்பத்தின் தேவைக்குத் தக்கபடி அது விரிந்து சுருங்கும் அமைப் புள்ளது என்பதை உணர்ந்தாள். ரங்கூனில் ஏற்பட்ட அதிர்ச்சியில் தாயின் சித்தமே பித்தமாகிவிட்டது. ஆனால் நாம் இம்மாதிரியான பயங்கர நெருக்கடியைச் சமாளித்து விட்டோமே! ஓர் உண்மை தெளிவாயிற்று. உடல் தோற்றத்தாலும் ஜாடையாலும், அவள் தாயை ஞாபகப் படுத்தினாலும் உள்ளத்தின் உறுதியைப் பொறுத்தவரை யில அப்பாவைக் கொண்டு பிறந்துவிட்டோம் என்று நினைத்த பாலா தன் தந்தையைக் கவனித்தாள்.

அவள் தந்தை கார் ஓட்டத்தின் காரணமாகச் சரிந்த தால் அவன் முகம் அவள் தோள் மீது சாய்ந்திருந்தது. அடுத்த பிரச்சினை; தந்தையை எப்படி வீட்டில் சேர்ப்பது? வீட்டிற்கு காரை ஓட்டிச் செல்வது முடியாது. தந்தைக்கு மற்றவர்களுக்கும் அவள்தான் காரை ஓட்டிக் கொண்டு வந்தவள் என்று தெரியக் கூடாதே. தெரிந்தால் அவள் எங்கிருக்கிறாள், எப்படி கிண்டிக்கு அருகில் வந்தாள் என்ற விவரங்களையும் விளக்கியாக வேண்டும்!

கார் ஜெமினி கார்னரை நெருங்கியதும் நிறுத்திவிட்டு யோசித்தாள். தந்தையின் தலையிலிருந்து ரத்தம் கசிவ தைப் பார்த்தாள். ஒரு வேளை அடி பலமாக இருந்தால் உடனே டாக்டரைக் கூப்பிட வேண்டுமே என்ற பயம் எழுந்தது. நேராகக் காரை ஓட்டிக்கொண்டு தன் வீட்டின் அருகே வந்தாள். காரைத் தெரு ஓரமாக நிறுத்திவிட்டு, வீட்டின் உட்புறம் சந்தடியில்லாமல் நுழைந்தாள். வீட்டுத் தோட்டத்து வழியாக வீட்டை நெருங்கினாள். அப்போது அந்தப் பகுதியில் கூர்க்காவின் நடமாட்டமில்லாமல் இருந் தது அவளுக்கு அமைதியைக் கொடுத்தது. சமையல் அறை யில் வெளிச்சம் தெரிந்தது. சமையல்காரர் ஒரு மூலையில்



கிடந்த நாற்காலியில் சாய்ந்தபடி தூங்கிக் கொண்டிருந் தார். சமையல் அறை வழியாக நடு ஹாலில் நுழைந்தாள். அங்கு தான் இரவு வேலை செய்யும் டெலிபோன் பெண் அமர்ந்திருந்தாள். அவளுக்கும் அரைத் தூக்கம்.

அடி மேல் அடி வைத்து மாடிக்குப் போனாள். அங்கே மாடி ஹாலில் விடி விளக்கு எரிந்து கொண்டிருந்தது. தந்தையின் அறைக்குள் நுழைந்தாள். வீட்டு எக்ஸ் சேஞ்சின் உதவியில்லாமல் வெளியே தொடர்பு கொள்ளக் கூடிய டெலிபோன் அந்த அறையில் இருந்தது. அந்த டெலிபோனை எடுத்துக் குடும்ப டாக்டருடன் பேசி னாள். அரைக் தூக்கத்தில் எழுந்து வந்த டாக்டர், "மிஸஸ் லட்சுமி சக்ரபாணிக்கு உடல் நிலை சரி யில்லையா?" என்று கேட்டார்.

பாலா, "சக்ரபாணியையே யாரோ அடித்துப் போட்டு விட்டார்கள். நான் அவரைக் காரில் ஏற்றி அவர் வீட்டு வாசலில் கொண்டு வந்து நிறுத்திவிட்டேன். நீங்கள் உடனே வந்து அவரைப் பாருங்கள்" என்று சொன்னாள்.

"போனில் பேசுவது யார்?" என்று டாக்டர் கேட் டதும், போனை வைத்து விட்டாள். உடனே ஓட்டமாக நடு ஹால் படிக்கட்டு வழியாக இறங்கினாள். நடு ஹாலுக்கு வந்ததும், இடது புறமிருந்து சமையல்காரர் வருவதைப் பார்க்கவே. வலதுபுற அறையில் மறைந் தாள்.

அரைத் தூக்கத்திலிருந்த டெலிபோன் பெண்ணிடம் சமையல்காரர், "என்ன, எஜமானிடமிருந்து ஏதாவது போன் வந்ததா?" என்று கேட்டார். டெலிபோன் பெண், "ஒன்றும் வரலீங்களே!" என்றாள்.

"கொஞ்ச நாளாய் எஜமானால் ஒழுங்காய்ச் சாப்பிட முடியுது. தூங்க முடியுதுன்னு சந்தோஷப் பட்டுகிட்டு இருந்தேன். இன்னைக்கு இவ்வளவு நேரமாகியும் வரல்லியே!"

"நான் எல்லா இடத்துக்கும் போன் பண்ணிட்டேன். அவர் எங்கேயும் இல்லை..." என்றாள் அந்த டெலிபோன் பெண்.

தந்தை கொஞ்ச நாட்களாகச் சாப்பிடுகிறார். தூங்குகிறார் என்பது பாலாவுக்குப் பெரிய ஆச்சரியத்தைக் கொடுத்தது. நாம் வீட்டை விட்டு வெளியே சென்ற பின்தான் அவரிடம் இந்த நல்ல மாறுதல் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று நினைத்தாள். தான் லால்குடி சீனிவாசன் வீட்டுக்குப் போனதுமே எவ்வளவு பெரிய நன்மை இங்கே நிகழ்ந்திருக்கிறது என்று நினைத்தாள்.

எதிரே சமையல்காரரும் டெலிபோன் பெண்மணியும் நிற்கும் போது எப்படி அறையை விட்டு ஹாலுக்குள் செல்வது என்ற திகைப்பு ஏற்பட்டது அவளுக்கு. ஹாலுக்குச் செல்லாமல் வீட்டை விட்டு வெளியேற முடியாது. அந்த அறையில்தான் சக்ரபாணி இரவு ஆபீஸ் நடத்தும் போது டிரைவர்கள் உட்கார்ந்திருப்பது வழக்கம். அடிக்கடி டீ குடித்துக் கொண்டு பொழுது போகச் சீட்டாடுவார்கள். திடீரென்று சக்ரபாணி காரை எடுத்துப் போய் யாரையாவது அழைத்து வரச் சொல்வான் என்பதற்காகக் காத்திருப்பார்கள். இப்போது அந்த அறை காலியாக இருந்ததிலிருந்து, பயங்கரமான இரவு உத்தியோகத்திலிருந்து சிப்பந்திகளுக்கு விடுதலை கிடைத்து விட்டது என்று தெரிந்தது.

திடீரென்று யாராவது அந்த அறைக்குள் வந்து விட்டால் என்ன செய்வது என்று நினைத்தாள் பாலா. ஓரத்தில் போடப்பட்டிருந்த நாடா கட்டிலின் அடியில் ஒளிந்து கொள்ளலாம், இல்லாவிட்டால் கதவோர பீரோவின் பின்புறம் போய் நிற்கலாம்...இவ்வாறெல்லாம் தன் மனதுக்குள்ளே எண்ணிக் கொண்டாள்.

ஹால் கதவு திறந்தது. டாக்டரும் அவர் டிரைவரும் தந்தையைத் தூக்கியபடி ஹாலுக்குள் நுழைந்தனர்.



சமையற்காரர், "எஜமான்...!" என்று அலறியபடி ஓடி வந்தார்.

டாக்டர், "ஒண்ணும் பதறாதீங்க! அவருக்கு ஆபத்து ஒன்றுமில்லை... சூடாய் ஹார்லிக்ஸ் கொண்டு வாங்க" என்றார்.

சமையற்காரர் ஓடினார் சமையல் அறைக்கு. அறையின் கதவோரத்தின் வழியாகப் பாலா ஹாலைப் பார்த்தாள். டாக்டர் தோல் பையிலிருந்து ஊசியை எடுத்து அதில் மருந்தை நிரப்பி, சக்ரபாணியின் புஜத்தில் ஊசி போட்டார்.

சில விநாடிகளில் சக்ரபாணிக்கு ஞாபகம் வந்தது. ஞாபகம் வந்ததும் சக்ரபாணி கூறிய வார்த்தைகள் இது தான்: "நான் இங்கே எப்படி வந்தேன்...? கிண்டி ஸ்டேஷனுக்குப் பின்னாடி என்னை ஒரு கூட்டம் சூழ்ந்து அடிச்சுட்டாங்க. கண் விழித்துப் பார்த்தேன். ஏதோ ரயில்வே லைனிலே காரை நிறுத்தியதாக ஞாபகம்" என்றான்.

டாக்டர், ஒரு பெண் போன் செய்த விவரத்தைக் கூறினார்.

சக்ரபாணி, "பெண்ணா! ஒரு பெண்ணா என்னைக் காப்பாற்றி வீடு கொண்டு வந்து சேர்த்தாள்? யார் அந்தப் பெண்...?" என்று கேட்டான்.

"அந்தக் கேள்வியைத்தான் நான் கேட்டேன்... அந்தப் பெண் ஒன்றும் சொல்லாமல் டெலிபோனை வைத்து விட்டாள்..."

சமையற்காரர் கொண்டு வந்த ஹார்லிக்ஸைக் குடித்தான் சக்ரபாணி. டாக்டரின் தோளைப் பிடித்தபடி மாடிக்கு ஏறும்போது, திடீரென்று படிக்கட்டின் உச்சியிலிருந்து, "பாலா...! பாலாக் கண்ணு...!" என்ற குரல் கேட்டது.

அந்தக் குரலைக் கேட்டதும் பாலாவும் அதிர்ச்சி

அடைந்தாள். சக்ரபாணியும் அதிர்ச்சி அடைந்தான். ஏனென்றால் அது லட்சுமியின் குரல்.

லட்சுமி அவள் அடைக்கப்பட்டிருக்கும் அறையிலிருந்து கீழ்க் கட்டருகில் இது நாள் வரை வந்தது கிடையாது. சக்ரபாணி ஆத்திரத்துடன், ''நர்ஸ்கள் எங்கே? தூங்குகிறார்களா...? லட்சுமி! பாலா இங்கே இல்லை... ஊருக்குப் போயிருக்கிறாள்!'' என்றான்.

''இல்லை ..நீங்க சொல்றது பொய். என் பாலாக் கண்ணு இந்த வீட்டிலேதான் இருக்கிறாள்... நான் அவளைப் பார்த்தேன்'' என்றாள் லட்சுமி.

பாலா நடுக்கமுற்றாள்.

## 45

''பாலா இங்கே இல்லை லட்சுமி. அவள் இந்த ஊரிலேயே இல்லை. மறுபடியும் சொல்கிறேன்!'' என்று சக்ரபாணி கூறவே, லட்சுமி ஒருவிதத் திடமான பிடிவாதத்துடன், ''நான் என் குழந்தையைப் பார்த்தேன். என் கண்ணாலே பார்த்தது பொய்யா? அவளுக்குத் தலையிலே பூ வைத்துப் பின்னி ரொம்ப நாளாகிறது. அதற்குத்தான் சீப்பு எடுத்திட்டு வந்திருக்கிறேன். என் குழந்தைக்கு நான் தலைவாரி ஜடை பின்னப்போறேன்'' என்றுபடிக் கட்டுகளில் இறங்கினாள்.

சக்ரபாணியும் டாக்டரும் அவளைப் பிடித்து நிறுத்தித் தடுத்தனர்.

''என் பெண்ணை நான் பார்க்கணும். என்னை யாரும் தடுக்காதீங்க'' என்று படிக்கட்டுகளில் வேகமாக இறங்கி ஓடினாள்.

சக்ரபாணி அப்படியே சாய்ந்தபடி நின்றான்.

ஹாலின் அடுத்த அறையில் நின்ற பாலாவுக்குத் தாயின் குரல் தெளிவாகக் கேட்டது.



மற்றவர்கள் நான் இந்த வீட்டில் இருப்பது பற்றிச் சிறிதும் சந்தேகிக்காத போது அம்மா மட்டும் என் நிச்சயமாக நான் இந்த வீட்டில்தான் இருக்கிறேன் என்று சொல்கிறாள்? ஒரு கால் மாடியில் தந்தையின் அறைக்குச் சென்றபோது அவள் என்னைப் பார்த்திருப்பாளோ? என்னைப் பார்த்துப் பின் தொடர்ந்திருப்பாளோ? அப்படி இருக்க முடியாது. மாடியில் தந்தை இருக்கும் பகுதிக்கு நேர் எதிர்ப் பகுதி தாய் வசிக்கும் பகுதி. தந்தை அறையை விட்டு நான் வரும்போது அந்தப் பகுதியின் நுழைவாசல் கதவு மூடியிருந்தது. நர்சுகள் தூங்கிய போது விழித்துக்கொண்ட தாயின் பாசம், பெற்ற பெண் வீட்டில் நுழையும் வாடையைச் செங்கல் சுண்ணாம்பு சுவர்களுக்கு அப்பாலிருந்தும் புரிந்து கொண்டு விட்டதா? நான் வீட்டில் இருந்த நாட்களில் ஒருமுறை கூட, 'பாலா' என்று அழைத்தபடி என் அறை நோக்கி வந்தவளல்லவே தாய் லட்சுமி. தாயின் சித்தக் கோளாறிலும் ஒரு முன்னேற்றமிருக்கிறதா?

பாலா இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்கும்போது லட்சுமி கீழ்ப்புற ஹாலில் சீப்பும் கையுமாக நின்று கொண்டிருந்தாள்.

லட்சுமியின் முகத்தில் ஒருவிதக் குழப்பம். இடப்புறமும் வலப்புறமும் மருண்டு பார்த்தபடி நின்றாள்.

இவ்வளவு வருடங்களில் லட்சுமி படிக்கட்டு இறங்கி வந்தது இன்றுதான் முதல் தடவை. ஆகையால் சக்ரபாணிக்கே திகைப்பாயிருந்தது. அதனால் சில விநாடிகளுக்குச் சக்ரபாணி, மனைவியைப் பார்த்தபடி மருண்டு நின்றான்.

டெலிபோன் எக்ஸ்சேஞ்ஜ் அருகில் அமர்ந்துகொண்டிருந்த பெண், பெரிய எஜமானியை வேலைக்கு வந்த நாள் முதல் கண்ணால் பார்த்தவளில்லை. விரித்த தலையோடு நிற்கும் எஜமானி அம்மாளைப் பார்த்து ஆச்சரியத்துடன் இருந்தாள்.

"பாலா கண்ணு! வம்பு பண்ணாதே. தலைவாரி விடுகிறேன்! வாம்மா கண்ணு. நீ எங்கே ஒளிந்து கொண்டிருக்கே? சொல்லுடி கண்ணு!" என்று, குறும்பு செய்து அடம் பிடிக்கும் குழந்தையைக் கூப்பிடுவது போல் கூப்பிட்டாள் லட்சுமி.

இந்த வார்த்தைகளைக் கேட்ட பாலாவுக்கு உள்ளம் நெகிழ்ந்தது. அடுத்த விநாடி பாலாவின் காதில், படிக்கட்டிலிருந்து தந்தையின் குரல் கேட்டது. அவர் குரலில் வழக்கமாக உள்ள கண்டிப்பு இல்லை. குழைவு இருந்தது.

"லட்சுமி, பாலா வீட்டிலே இல்லை. அவள்... ஊரிலேயே இல்லை. நீ போய் உன் அறையிலே படுத்துக் கொள்" என்றான் சக்ரபாணி.

சக்ரபாணியின் குரலில் இருந்த கனிவும் குழைவும் லட்சுமிக்கே ஆச்சரியத்தைக் கொடுத்திருக்க வேண்டும். தலையை நிமிர்த்திப் படிக்கட்டில் நிற்கும் கணவனைப் பார்த்தாள்.

"ஊரிலே இல்லை என்று பொய்தானே சொல்றீங்க? உங்களுக்கு என்னைவிட அவள் மேல்தானே கொள்ளைப் பிரியம்! பாலாக் கண்ணைப் பிரிந்து உங்களாலே இருக்கவே முடியாதே! அவள் ஊரிலே இல்லையென்றால் நீங்கள் சும்மா இருப்பீங்களா?" என்று கேட்டாள். "நீங்கள் பாலா மேலே கொள்ளைப் பிரியம் வைத்திருக்கலாம். ஆனால் பாலாவைப் பெற்றவள் நான். எனக்குத் தெரியும் என் குழந்தை எங்கே இருக்கிறாள் என்று. உங்களுக்குத் தெரியாதே!" என்று சொல்லிவிட்டு அரைச் சிரிப்புச் சிரித்தாள்.

சக்ரபாணி, "டாக்டர், லட்சுமியை மாடிக்குக் கொண்டு போகணுமே!" என்று சொல்லி முடிப்பதற்குள்ளே மாடியிலிருந்த நர்சுகள் இருவரும் வேகமாகப் படிக்கட்டில் இறங்கி வந்தனர்.

"இதுதான் நீங்கள் அம்மாளைக் கவனிக்கிற



லட்சணமா?" என்று இரைந்தான் சக்ரபாணி.

"இல்லீங்க. அம்மாவுக்குக் கொடுக்கிற தூக்க மாத்திரையை அம்மா, நாங்கள் சாப்பிடுகிற டீயிலே போட்டுட்டாங்க போலிருக்கு. இது நாள் வரையிலே நாங்க இப்படித் தூங்கினது இல்லீங்க."

படிக்கட்டில் நிற்கும் நர்சுகளைக் கவனியாமல் லட்சுமி மெள்ள பாலா மறைந்து நின்று கொண்டிருந்த அறை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

பாலாவுக்குத் தாயின் பார்வையிலிருந்து மறைந்து கொள்ள வேண்டுமென்று தோன்றவில்லை. அப்படியே ஸ்தம்பித்து நின்றாள்.

லட்சுமி அறைக் கதவண்டை வந்து நின்றாள். பாலாவைப் பார்த்தாள். பாலாவும் தாயைப் பார்த்தாள். பாலாவின் கண்கள் கலங்கின. தாய்ப் பாசத்தால் அவள் நெஞ்சு விம்மியது. 'அம்மா!' என்று கூப்பிட அவள் வாய் துடித்தது.

லட்சுமியின் கண்களில் கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது. "என்கிட்டே வரமாட்டியா பாலா? என்கிட்டே தலை பின்னிக்கொள்ள மாட்டியா? நீ பணக்கார அப்பாவின் செல்லப் பெண். உனக்கு இந்த அம்மாவைப் பிடிக்காது!"

"இல்லை அம்மா, நான் உன் பெண்தான்! உன் மேலே உயிரையே வைத்திருக்கேன். உன் நிலையை மாற்றிக் கடவுள் உன்னை எல்லோரையும் போலச் சிறப்பாக ஆக்க வேண்டுமென்றுதானம்மா வீட்டை விட்டு வெளியே சென்று தவம் செய்கிறேன்' என்று அலறிச் சொல்லத் துடித்தாள். தன்னையும் மறந்தபடி தாயை நோக்கி ஓர் அடி எடுத்து வைத்தாள்.

லட்சுமி மகிழ்ச்சியோடு, "வா கண்ணு! வா!" என்று இரண்டு கைகளையும் விரித்துத் தன் மகளை அழைத்தாள்.

அடுத்த விநாடி தடதடவென்று நர்சுகள் படிக்கட்டில் இறங்கி வரும் சப்தம் கேட்டது.

பாலா சுய உணர்வுக்கு வந்தாள். நின்ற இடத்திலிருந்து ஓடி பீரோவின் பின்புறம் மறைந்து கொண்டாள்.

நர்சுகள் இருவரும் லட்சுமியை நெருங்கினர். லட்சுமி பாலா இருந்த அறைக்குள் நுழையுமுன்பே, நர்சுகள் அவள் கைகளைப் பிடித்துக் கொண்டனர். அவள் சில விநாடிகள் திமிறினாள். பிறகு பேசாமல் ஓய்ந்து அடங்கி நர்சுகளைப் பின் தொடர்ந்தாள்.

சக்ரபாணி திகைத்துப் பார்த்து நின்று கொண்டிருந்தான்.

நர்சுகள் லட்சுமியின் இருபுறமும் அவள் கைகளைப் பற்றியபடி அவளைப் படிக்கட்டில் இழுத்து வந்தனர்.

நடுப்படிக்கட்டில் நின்று கொண்டிருந்த சக்ரபாணியை நெருங்கியதும் லட்சுமி நின்று ஒரு முறை சக்ரபாணியை வெறுப்புடன் பார்த்தாள்.

''என் குழந்தையிடம் நான் போகிறதைத் தடுக்க இரண்டு பேரா? உங்களைச் சொல்லி என்ன, என் பெண்ணே என்னைப் பார்த்து பயந்து ஓடிப்போய் ஒளிந்து கொண்டாளே'' என்று வருத்தத்துடன் தெரிவித்துவிட்டு, சக்ரபாணியின் முகத்தில் இருந்த காயத்தைக் கவனித்தாள்.

லட்சுமியின் முகத்தில் தோன்றிய வெறுப்பு மாறி, கனிவு தோன்றியது.

''பாவம்! உங்களுக்குக் காயம் பட்டுவிட்டதா? உங்களை யார் அடித்தார்கள்!'' என்று கலங்கிய கண்களோடு சக்ரபாணியைப் பார்த்தாள்.

இத்தனை வருடங்களில் லட்சுமி, சக்ரபாணியைப் பயத்தோடு பார்த்திருக்கிறாள்; வெறுப்போடு பார்த்திருக்கிறாள். இன்றுதான் கனிவோடு அவனைப் பார்த்தாள்.

www.t.me/tamilbooksworld



சக்ரபாணிக்கு அவனையுமறியாமல் நெஞ்சு இளகியது ''லட்சுமி, போய்ப் படுத்துக் கொள்'' என்றான்.

''நீங்களும் வாங்க. நான் தனியாக இந்த நர்சுகளோடு போக மாட்டேன்.''

சக்ரபாணி, லட்சுமியின் கரத்தைப் பிடித்தபடி நடந்தான். டாக்டர் விடைபெற்றுக் கொண்டு வெளியேறினார். டெலிபோன் பெண்ணும் டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் அருகில் போட்டிருந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்தாள்.

பாலா, மறைவிடத்திலிருந்து மெள்ள அடிமேல் அடி வைத்து வந்தாள். வந்து சமையல் அறை வழியே வெளிச் செல்லப் பயமாக இருந்தது. படிக்கட்டின் பின்புறம் தோட்டத்துக்குச் செல்ல வழி இருந்தது. அந்த வழியே மெள்ளத் தோட்டத்தினுள் நுழைந்தாள்.

பயத்தாலும் குழப்பத்தாலும் வியர்த்துப் போயிருந்த அவள் உடல் மீது இரவின் குளிர்ந்த மென்காற்று வீசியது பாலாவுக்கு இன்பமாக இருந்தது. அந்தத் தோட்டத்திலேயே புல் தரையில் படுத்து விடலாமா என்று தோன்றியது.

லால்குடி சீனிவாசன் வீட்டுக்கு உடனே செல்ல வேண்டும் என்று தோன்றவே மெள்ள விக்கட் கேட் வழியே வெளியே செல்ல அடி எடுத்து வைத்தாள்.

விக்கட் கேட்டை நெருங்கியதும், மேல் பால்கனியிலிருந்து பேசும் குரல் கேட்டது. பேசும் குரலிடையே முனகல் அழுகையின் குரலும் கேட்டது. கேட் அருகில் நின்றபடி பாலா தலை நிமிர்ந்து பார்த்தாள்.

பால்கனியில் அவள் தந்தை நின்றிருந்தார். அவர் தோள்மீது சாய்ந்தபடி அவள் தாய்விசித்து அழுது கொண்டிருந்தாள்.

''என்னை நர்சுகளோடு தனியே விட்டுட்டுப் போயிடாதீங்க. அவுங்க என்னைத் திட்டுவாங்க. நீங்க என்னோடவே இருங்க'' என்று அழுது கொண்டிருந்தாள்.

''அழாதே லட்சுமி! உன்னை ஒரு நாளும் தனியாக

விடமாட்டேன்" என்று அப்பா சொல்வதைக் கேட்டு மகிழ்ந்தாள் பாலா.

"பாலாவை ஏதாவது சொன்னீங்களா? அவள் ஏன் பீரோவின் பின்னாடி போய் ஒளிந்து கொண்டாள்?" என்று விளக்கம் கேட்டாள் லட்சுமி.

"பாலா இந்த வீட்டிலே இல்லை, லட்சுமி. வீண் பிரமையிலே நீ ஏதேதோ பேசறே!"

"இல்லை. குழந்தையை ஹால் பக்கத்து ரூமிலே பார்த்தேனே! அவள் என்னைப் பார்த்து பயந்துட்டாளே! நீங்கள் அவள் வேதனைப்படும்படியாக மிரட்டினீர்களா?"

சக்ரபாணி தன்னையும் மறந்தான். வேதனை மிகுந்த குரலில், "நான் பாலாவை மிரட்டுவேனா? அவளை வேதனைப் படுத்துவேனா? என்ன லட்சுமி, அவளல்லவா என்னை வேதனையிலே ஆழ்த்திவிட்டு எங்கேயோ போயிட்டாள்!" என்று தன்னையும் மறந்தபடி சொன்னான்.

தந்தை, தாயை அணைத்தபடி ஆறுதல் சொல்லும் காட்சியை இன்றுதான் பாலா பார்த்தாள்.

'இந்த இன்பக் காட்சியைக் காணத்தான் தந்தையின் உயிரைக் காப்பாற்றினோமா?' என்று மகிழ்ச்சியுடன் நினைத்தாள். இன்னும் அதிக நேரம் பார்த்தால் கண் பட்டு விடும் என்று பயந்தாள்.

வெளியே செல்ல விக்கட் கேட்டைத் திறந்தாள். அது பூட்டு போடப்பட்டிருப்பதை உணர்ந்தாள். ஒரு விநாடி என்ன செய்வது என்று புரியாமல் விழித்தாள்.

அருகிலுள்ள மரத்தில் ஏறினாள். அதன் ஒரு கிளை வழியாக காம்பவுண்ட் சுவரில் குதிக்க ஆயத்தமானாள். அப்பப்பா நம் சொந்த வீட்டில் நுழைவதைவிட அதை விட்டு வெளியே செல்ல எவ்வளவு கஷ்டம் என்று நினைத்தாள். மறுபடியும் பால்கனியைத் திரும்பிப் பார்த்தாள்.

அவள் தந்தை, அவள் தாயின் தலையை, ஓர் இளம்



காதலன் தன் காதலியின் தலையைக் கோதுவது போல் தோன்றியது.

லட்சுமி மகிழ்ச்சியோடு சக்ரபாணியின் முகத்தைப் பார்த்தாள்.

பாலாவுக்கே வெட்கமாக இருந்தது. பொத்தென்று மரத்திலிருந்து காம்பவுண்ட் சுவரில் குதித்தாள். காம்பவுண்ட் சுவரிலிருந்து தரையில் குதித்தாள்.

அடுத்த விநாடி தந்தையின் இரக்கமற்ற கம்பீரமான குரல் ஒலித்தது.

"யாரடா அது தோட்டத்திலே? டேய் கூர்க்கா, நீ தூங்குறாயா!"

அதைத் தொடர்ந்து மணி ஒலித்தது. டிரைவர்கள், கூர்க்காக்கள் நாலு மூலையும் ஓடும் சத்தம் கேட்டது.

தந்தை சில விநாடிகளுக்கு அம்மாவோடு தன் சுய சித்தத்தை இழந்து சாதாரண மனிதராக இருந்ததை, சுவரிலிருந்து குதித்துச் சத்தம் செய்து கெடுத்து விட்டோமே, அப்படியே மரக்கிளையில் இருந்திருந்தால் அவர் இன்னும் சில நிமிடங்கள் இளைஞராக இருந்திருப்பார். அம்மாவும் பல வருடங்களாக இழந்திருந்த இன்பத்தையும் ஆதரவையும் அடைந்திருப்பாளே என்று தன்னையே நொந்து கொண்டாள்.

இனிமேலும் அங்கிருந்தால் தன்னைப் பார்த்து விடுவார்கள் என்று வேகமாக நடக்க ஆரம்பித்தாள்.

ஒரு மணி நேரம் ஓயாமல் நடந்து, உடல் களைத்து லால்குடி சீனிவாசன் வீட்டுக்கு வந்தாள்.

எல்லோரும் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தனர், பயத்தோடு கதவைத் தட்டினாள். கதவு திறந்தது.

குருமூர்த்தியின் மனைவி அன்னபூரணி நின்று கொண்டிருந்தாள்.

அன்னபூரணி அன்போடு, "என்ன சுமதி இவ்வளவு

நேரம்? சத்தமில்லாமல் போய்ப் படுத்துக் கொள். எனக்குத் தெரியும், நீ பத்தரை மாற்றுத் தங்கம் என்று. கமலா உன்னைப் பற்றிக் கண்டபடி பேசிக் கொண்டிருந்தாள். கொஞ்சம் சீக்கிரம் வரக் கூடாதா சுமதி'' என்று கிசுகிசுவென்று கேட்டாள்.

விளக்குப் போடாமல் மெள்ள நடந்து சமையல் அறையை அடுத்துள்ள அறையில் பாலா நுழைந்தாள். அங்கிருந்த பாயில் படுத்துக் கொண்டாள். உடனே தூக்கம் அவள் கண்களைப் பற்றியது. விடிந்து எட்டு மணி ஆனது கூட பாலாவுக்குத் தெரியவில்லை.

கண் திறந்ததும்—

''சம்பளம் இல்லாமல் வேலை செய்கிற லட்சணம் பார்த்தாயா? ராத்திரி எங்கேயோ போய்விட்டு வந்திருக்கிறாள். என்ன தொடர்போ என்னமோ! இன்னமும் தூங்குகிறாள். நம் வீட்டு கௌரவத்தைக் கவனிக்க வேண்டாமா?'' என்று கமலா ஏளனமாகப் பேசுவது பாலாவின் காதுகளில் விழுந்தது. அதைத் தொடர்ந்து குருமூர்த்தியின் குரல் கேட்டது.

''கமலா! வாயை மூடிக்கொண்டு உன் வேலையைக் கவனி! நீ ராத்திரி பத்து மணிக்குச் சினிமா பார்த்துவிட்டு வந்தாய். சுமதி, பன்னிரண்டு மணிக்கு வந்தாள். அந்தப் பெண்ணைப் பார்த்தால் தப்பாகத் தெரியலே! அவளைப் பற்றிப் பேசினால் உன் வாய் புழுத்துப் போய்விடும்!'' என்று சொன்னான்.

பாலா, தன்னைப் பற்றி சர்ச்சை முடியும் வரையில் தூங்குவது போல் பாசாங்கு செய்து படுத்திருப்போம் என்ற தீர்மானித்தாள்.

ஆனால் அதற்கும் வழிவிடாமல் ரகு ஓடி வந்தான். ''சுமதி சித்தி, இந்த பாலா பாடம் படித்துக் கதை சொல்லுங்க!'' என்று சொல்லி எழுப்பினான்.

www.t.me/tamilbooksworld



## 46

ரகு கொடுத்த பாடப் புத்தகத்தில் பாபரின் கதை இருந்தது. அவர் அப்கானிஸ்தானத்திலிருந்து வந்து இந்தியாவில் மொகலாய சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்த விவரங்கள் அதிலிருந்தன.

முடிவில் பாபர் சக்ரவர்த்தியின் மகனுக்கு உடல்நலக் குறைவு ஏற்படவும், பாபரால் அதைப் பொறுக்க முடியவில்லை, தான் பெற்ற மகன் நலிவுற்று இறப்பதை அவரால் நினைக்கவும் முடியவில்லை. 'சாக வேண்டிய பருவத்தில் நான் இருக்க, வாழ வேண்டிய பருவத்தில் இருக்கும் மகன் மண்ணைவிட்டு மறைவதா?' என்று அவர் ஏங்கினார். அரண்மனை மருத்துவர்கள், மகன் வாழ மாட்டான் என்று உறுதி கூறவே, பாபர் ஆண்டவனை நோக்கித் திரும்பினார். ஆண்டவனிடம் மானசிகமாக ஒருவித ஒப்பந்தம் செய்து கொண்டார்.

''வாழ்வுக்கும் வியாதிக்கும் மரணத்துக்கும் மூல காரணமான அல்லாவே! உனக்கு ஓர் உயிர் தேவை என்றால் என் உயிரை எடுத்துக் கொள்! என் மகனை வாழ விடு! அவன் நோயை எனக்குத் தா! என் வலிமையை அவனுக்கு அளித்து விடு!'' என்று அல்லாவிடம் பேரம் பேசினார் என்ற கதையை பாலா உருக்கமான முறையில் படித்துக் காட்டினாள்.

அரசுரிமைக்காக மகன் தந்தையையும், தந்தை மகனையும் கொல்லும் சூழ்நிலை மலிந்திருந்த காலத்தில், தந்தை—மகன் அன்புக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக அமைந்திருந்தது பாபரின் கதை.

குழந்தைகளி ரகுவும் சுகுவும் இந்த மனிதப் பண்பு நிறைந்த கதையைக் கேட்டு உருகி விட்டனர்.

பாலா கதையை மேலும் தொடர்ந்து படித்து முடித்தாள்.

"பாபர் விரும்பியது போலவே அவர் மகனுக்கு ஏற்பட்ட நோய் அவரைப் பற்றிக் கொண்டது. பாபர் இறந்து போனார்; அவர் மகன் பிழைத்து விட்டான்!" என்று சொல்லியதும், சுகு விசித்திரமான கேள்வியைக் கேட்டான்.

"என் சித்தி, லட்சுமிப் பாப்பாவுக்கு உடம்பு சரியில்லைன்னா, நான் அல்லாவிடம், 'பாப்பாவைக் காப்பாத்து, எனக்கு நோயை கொடு'ன்னு கேட்டா, பாப்பாவுக்கு நோய் போய் விடுமோ?"

முளையிலேயே தன்னலமற்ற பண்பு நிறைந்த குழந்தையை எடுத்து அணைத்துக் கொண்டாள் பாலா.

அவள் பார்வை பக்கத்து அறையில் மாட்டியிருந்த லால்குடி சீனிவாசலின் படத்தின் மீது விழுந்தது. அந்த உத்தமரின் பேரனுடைய மனப் பக்குவம் வேறு எப்படி இருக்க முடியும் என்று நினைத்தாள்.

அப்போது அந்த அறையில் கமலா நுழைந்தாள். அவள் முகத்தில் ஒருவித வெறுப்பின் குறி தெரிந்தது.

"என்ன சுமதி, வெள்ளிக்கிழமை ப்ரோக்ராம் ராத்திரி பூரா ஆகி, மறுநாள் சனிக்கிழமையும் விடியறவரையிலே இருந்திருக்கு போலிருக்கிறதே! எங்கே எங்கே போனே? யார் யாரைப் பார்த்தாய், சொல்ல முடியுமா?" என்று குத்தலாகக் கேட்டாள்.

இந்த வார்த்தைகளைப் பாலாவால் பொறுக்க முடியவில்லை.

"வேண்டியவர்களைப் பார்க்கப் போயிருந்தேன். அப்புறம் பீச்சுக்குப் போயிருந்தேன். அங்கு கொஞ்ச நேரம் ஒரு படகின் பக்கம் உட்கார்ந்திருந்தேன். அங்கு என்ன என்ன விசித்திரமான காட்சிகளைப் பார்த்தேன் தெரியுமா?"

கமலா, பாலாவையே விறைத்துப் பார்த்தாள். கமலாவின் முகத்தில் குழப்பமும் வெட்கமும் படர்ந்தன.

www.t.me/tamilbooksworld



தன்னையும் மறந்தபடி, "படகின் அருகிலா!" என்று பதட்டத்துடன் கேட்டாள்.

"ஏன், படகின் மூலையிலே உட்காரக் கூடாதா?" பதிலுக்குப் பாலா கேட்டாள்.

கமலாவால் அதற்குமேல் ஒன்றும் பேச முடியவில்லை. அலமாரியில் இருந்த புத்தகங்களை எடுத்துக்கொண்டு வேகமாக நடந்தாள். அவள் பதட்டமாக நகரும்போது அவள் கையிலிருந்து விழுந்த சில்க் கைக்குட்டையைக் கூடக் கமலா கவனிக்கவில்லை.

கமலா சென்றதும், பாலா அந்தக் கைக்குட்டையை எடுத்துப் பார்த்தாள்.

லேஸ் வேலை செய்த அற்புதமான அயல்நாட்டுக் கைக்குட்டை. அதிலிருந்து ஷானல் நம்பர் 5. செண்டின் வாசனை வீசியது. அந்த அயல்நாட்டுச் செண்ட் சிறு பாட்டில் ஐம்பது ரூபாய்க்கு மேல் பெறும் என்பது பாலாவுக்குத் தெரியும்.

கைக்குட்டையின் மூலையில் குறிக்கப்பட்டிருந்த 'எம்' என்ற ஆங்கில எழுத்து. அது மணி கொடுத்ததாகத்தான் இருக்க முடியும் என்பதை ஊர்ஜிதப்படுத்தியது. இந்தக் கைக்குட்டையை அன்பளிப்பு என்று கண்ணியமாகக் கூறுவதா, கூலி என்று கூறுவதா? பாலாவுக்குப் புரியவில்லை.

மறுபடியும் அவள் பார்வை லால்குடி சீனிவாசன் படத்துக்குச் சென்றது.

'இந்த உத்தமரின் குடும்பத்துக்கு அவமானம் ஏற்படக் கூடாதே!' பாலாவின் கண்களில் நீர் நிறைந்தது.

குருமூர்த்தியின் மனைவி அன்னபூரணி ஒரு கண்ணாடி டம்ளரில் காபி எடுத்துக்கொண்டு நுழைந்தாள்.

"சுமதி, களைத்துப்போய்த் தூங்கிக் கொண்டிருந்

தாள். உன்னை எழுப்ப விரும்பவில்லை. பரவாயில்லை காபியைச் சாப்பிட்டுவிட்டு அப்புறம் மற்ற வேலையைக் கவனி'' என்று ஒரு சகோதரியின் பரிவோடு காபியைக் கொடுத்தாள். அன்னம், பாலாவின் விழியோரத்தில் தளும்பி நின்ற கண்ணீரைக் கவனித்து விட்டாள்.

''என்னம்மா சுமதி, கமலா ஏதாவது பட்டென்று உன்னைச் சொல்லிவிட்டாளா? அவள் சுபாவமே அப்படித் தான்!''

சுகு, தன் தாயின் கேள்விக்குப் பதிலளித்தான்.

''அதில்லேம்மா, சுமதி சித்தி பாபர் கதையை எங்க கிட்டே படித்துக் காட்டினாங்க. அதைக்கேட்டு எங்களுக்கு அழுகை வந்துட்டுது. அதே மாதிரி சித்திக்கும் அழுகை வந்துட்டதம்மா'' என்று தனக்குத் தோன்றியதைக் கூறினான்.

சுகுவின் பேச்சைக் கேட்டு பாலாவுக்குச் சிரிப்பு வந்தது.

''சுகு, அந்த பாபர் கதையை நீ மறக்கவே மாட்டே போலிருக்கிறதே!''

''நீங்க எவ்வளவு ஜோரா அந்தக் கதையைப் படிச் சீங்க. மறக்க முடியுமா சித்தி?''

''பாருங்க அக்கா, நாம் எவ்வளவோ படிக்கிறோம். மனசிலே நிற்கிறதில்லை. ஆனால் குழந்தைங்க மனசிலே ஆணி அடிச்ச மாதிரி பதிந்து விடுகிறது.''

''என்னவோ சுமதி, தினமும் கதை சொல்லி இரண்டு பசங்களையும் கெடுத்து விட்டாய். நாளைக்கு நீ போன பிறகு என்னைக் கதை சொல்லுன்னா நான் என்ன செய்வேன்?''

காலையில் எழுந்ததிலிருந்து சக்ரபாணியின் மனம் பழிவாங்கும் யந்திரம்போல் இயங்கத் தொடங்கியது. தன் காரை வழியிலே நிறுத்தி, தன்னைத் தலையில் அடித்து, தன் ஆடையில் சாராயத்தை ஊற்றி, 'குடிபோதையில்

www.tamilbooksworld



கார் ஓட்டிச் செல்கையில் ரயிலில் மோதி இறந்துவிட்டிருக் கிறான்' என்று பிறருக்குத் தோற்றமளிக்கும்படி யார் செய் திருப்பார்கள் என யோசித்தான்.

அதைவிட அவனுக்கு ஆச்சரியமளித்த விஷயம், யாரோ ஒரு பெண், டாக்டருக்கு டெலிபோன் செய்திருக் கிறாள். அவளேதான் அவன் காரை ரயில்வே லைனிலி ருந்து அப்புறப்படுத்தி இருக்க வேண்டும்.

விடிந்து எழுந்ததும் சக்ரபாணி சாரங்கனுடன பரங்கிமலை அருகிலுள்ள ரயில்வே கேட்டுகளைப் பார்வை யிடப் போனான்.

சந்தேகத்துக்கு இடமான கேட்டுக்கு வரும்போது இரவு டியூட்டியிலிருந்த கேட் பியூனைச் சந்திக்க நேர்ந்தது.

ஒரு சிறு கூட்டம் வந்து தன்னைக் கட்டிப் போட்ட தாக அவன் சொன்னான். ஒரு பெண் காரை நகர்த்த முயற்சி செய்ததையும் சொன்னான். ரயில் ஸர்ச் லைட் வெளிச்சத்தில் அந்தப் பெண் காரை நகர்த்த முயன்றதைப் பார்த்த விவரம் தெரிவித்தான்.

''எனக்கு விரோதிகள் இருப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால் என்னைக் காப்பாற்ற ஒரு பெண் பாடுபட்டாள் என்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது! உன்னைக் கட்டிப் போட்டவர்களின் அடையாளம் தெரியுமா?'' என்று கேட்டான்.

''ஆளுங்க முகமூடி அடையாளம் தெரியாதுங்க. ஆனால் அவுங்களுக்கு உத்தரவு போட்டுட்டிருந்தான் ஒரு ஆளு. அவன் கட்டைக் குரலிலே ஆண் போலவும் பெண் போலவும் பேசிட்டிருந்தான். அவன் தலைமுடி சுருட்டையா அடர்த்தியாக இருந்ததுங்க...''

உடனே சாரங்கன், ''அந்த ஆளு உயரமா இருந்தானா?'' என்று கேட்டார்.

''நல்ல வளர்த்தியான ஆளுங்க.''

"யாராயிருக்கும் சாரங்கன்?" என்று சக்ரபாணி கேட்டான்.

"எனக்குத் தெரிஞ்ச வரையிலும் உயரமாக, சுருட்டைத் தலையோடு இரட்டைக் குரல்லே பேசறவன் மரியசூசை ஒருத்தன்தான்!" என்று சாரங்கன் சொன்னதும், சக்ரபாணியின் முகம் சிவந்தது.

லெவல்கிராஸிங் ஆளிடம் உடனே நூறு ரூபாய் நோட்டைக் கொடுத்து, நேற்று இரவு விஷயத்தைப் பற்றி யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று சொன்னான். நிச்சயமாக இந்த விஷயம் போலீசுக்குத் தெரியக் கூடாது என்று உத்தரவிட்டான்.

சாரங்கனும் சக்ரபாணியும் உடனே காரில் சென்னை நோக்கிப் புறப்பட்டனர்.

வழிநெடுக சக்ரபாணி பேசவே இல்லை. சாரங்கன், உடனே இது விஷயம் போலீசுக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்றார்.

"இந்த விஷயம் போலீசுக்கோ அல்லது பத்திரிகைகளுக்கோ செல்லக் கூடாது. அந்த மாதிரி விளம்பரம் நமக்குக் கூடாது. மரியசூசைக்குத் தக்க தண்டனையைத் தானே நிறைவேற்றப் போகிறேன். அந்தத் திட்டத்தின் ஒவ்வொரு அங்கமும் எனக்கு இன்பம் தரப் போகிறது!"

சாரங்கனுக்குப் புரியவில்லை.

"சாரங்கா! நீ எந்தவிதமான சந்தேகத்தையும் காட்டாமல் சிரித்துப் பேசி மரியசூசையைப் பின்புற வழியாக நமது ஆபீசுக்கு அழைத்து வா. அவனிடம் நான் மிகவும் பயப்படுவதாகவும், அவன் தயவை நான் நாடுவதாகவும், அதற்காக நான் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் கொடுப்பதாகவும் சொல்லு" என்று சொல்லி சாரங்கனை அனுப்பினான்.

பிறகு தனித் தனியே ஆள் அனுப்பி, மற்ற தொழிலாளர் தலைவர்களை மரியசூசைக்குத் தெரியாமல்

www.t.me/tamilbooksworld



ஆபீசுக்கு அழைத்து வந்து பக்கத்து அறையில் அமர வைத்தான்.

மரியசூசையின் மனைவி பணத்தாசை பிடித்தவள் என்று தெரிந்ததும், அவளையும் மரியசூசையுடன் அழைத்து வரச் சொன்னான்.

மரியசூசை வருவதன் முன்பே அவன் கூட்டாளிகளிடம் முதல் நாள் இரவு விபத்து பற்றிக் கேட்டான்.

அவர்கள் வாய் திறந்து ஒன்றும் பேசவில்லை. மரியசூசையைக் காட்டிக் கொடுக்கவும் இல்லை.

"உங்கள் உறுதி உங்கள் தலைவனுக்கு இருக்கிறதா பார்ப்போம்" என்று சொல்லிவிட்டுத் தன் ஆபீஸ் அறைக்கு வந்தான்.

அங்கு மரியசூசையும் அவன் மனைவியும் காத்திருந்தனர்.

சக்ரபாணி திட்டப்படி மணி அழுத்தவே சக்ரபாணிக்கு வேண்டிய ஓர் ஆபீஸ் சிப்பந்தி போலீஸ் உடை அணிந்து உள்ளே நுழைந்தான்.

போலீஸ் அதிகாரி உள்ளே நுழைந்ததைப் பார்த்ததும் மரியசூசை கலங்கினான். அவனைவிட மரியசூசையின் மனைவிதான் நடுங்கினாள்.

"என்னங்க, முதலாளி பணம் கொடுப்பார்னு சொல்லி சாரங்க ஐயா கூட்டிட்டு வந்தாரு. நீங்க போலீஸைக் கூட்டிட்டு வர்ரீங்க" என்றாள்.

"போலீஸ் வந்தால் என்ன, பயமா?" என்று ஜம்பமாக மனத்தில் தோன்றிய பயத்தை மறைத்தபடி பேசினான் மரியசூசை.

சக்ரபாணி சிரித்தான். "உனக்குப் பணம் உண்டு. உன் கூட்டாளிகளுக்காக போலீஸ் வந்திருக்கிறார். இதோ பார், பத்தாயிரம் ரூபாய் பணம். நேற்று இரவு என்னைக் கொல்ல முயற்சித்த சதியின் விவரம் இந்தக் காகிதத்தில் எழுதியிருக்கிறது. அந்தச் சதியில் பங்கு கொண்டவர்களின் பெயர்களை மட்டும் நீ அந்தக் காகிதத்தில் எழுத

வேண்டும். எழுதினால் உனக்குப் பணம் உண்டு. உன்மீது கேசும் தொடர மாட்டேன். அவர்கள் பெயரை எழுதத் தவறினால் நீ மட்டும் அந்தக் குற்றத்துக்காகச் சிறை செல்ல வேண்டும்!'' என்றான்.

மரியசூசையின் மனைவியின் பார்வை பணத்தை ஆவலுடன் பார்த்தது.

மரியசூசை மட்டும் அமைதியாக, ''நீங்க சொல்வது பொய். உங்களைக் கொல்ல யாரும் எந்தவிதச் சதியும் செய்யவில்லை'' என்றான்.

''ரயில்வே லெவல்கிராசிங் கேட் கீப்பர் உன்னை அடையாளம் கண்டு சொல்லி விட்டான். என்ன இன்ஸ்பெக்டர், அவன் வாக்குமூலத்தைச் சொல்லுங்க'' என்று இன்ஸ்பெக்டர் உடையிலிருந்த குமாஸ்தாவைக் கேட்டான்.

குமாஸ்தா, தோல் பையிலிருந்து சக்ரபாணி சொல்லிக் கொடுத்தபடி ஒரு பேப்பரை எடுத்துப் பின்வரும் வரிகளை படித்தான்.

''என்னைக் கட்டிப் போட்ட கூட்டத்தின தலைவன் உயரமானவன். சுருட்டைத் தலையன். இரட்டைக் குரலில் உத்தரவுகள் கொடுத்தான். அவனை அருகிலிருந் தவன் 'சூசை' என்று அழைத்தான்...'' என்று வாக்கு மூலத்தைப் படிப்பதுபோல் படித்தான்.

மரிடசூசை உண்மையிலேயே குழம்பிப் போய் விட்டான். லெவல்கிராஸிங் கேட் கீப்பரைக் கட்டிப் போடும் போது தன்னை யாரும் 'சூசை' என்று கூப்பிடவே இல்லை என்ற விஷயமே மறந்து போய் விட்டது.

சூசையின் மனைவி, ''அப்பவே சொன்னேன், கேட்டீங்களா! இந்த வம்பெல்லாம் வேண்டாம்னு. இப்ப மாட்டிக்கிட்டீங்க! ரங்கன், மாணிக்கமெல்லாம் தப்பிச்சிட் டாங்க. நீங்க ஜெயிலுக்குப் போகப் போறீங்க'' என்றாள்.



''உன் கணவன் ஜெயிலுக்குப் போக வேண்டாம். அது மட்டுமில்லை. பத்தாயிரம் ரூபாய்ப் பணமும் கிடைக்கும்! இந்தச் சதியில் பங்கு கொண்டவர்கள் பெயரை மட்டும் குறிப்பிட்டால் போதும்!'' என்று சூசையின் மனைவியிடம் சொன்னான் சக்ரபாணி.

சூசையின் மனைவி, அவர்களின் பெயர்களைக் காகிதத்தில் எழுதிக் கொடுக்கும்படி கணவனிடம் கூச்ச விட்டாள்.

சூசை வேறு வகை தெரியாமல் பெயர்களை எழுதினான்.

அவன் மனைவியிடம் பணம் கொடுக்கப்பட்டது. அதே சமயத்தில் அறைக் கதவு திறந்தது. சூசையின் கூட்டாளிகள் அறையில் நுழைந்தனர்.

சூசை மனைவியின் கையில் கட்டுக் கட்டாக நோட்டுகள் இருப்பதையும், சூசை குனிந்து பெயர்களை எழுதுவதையும் பார்த்தனர்.

சக்ரபாணி சிரித்தபடி, ''சூசை என் நண்பன். என்னைக் கொல்லச் சதி செய்த உங்கள் பெயர்களை எழுதிக் கொண்டிருக்கிறான்!'' என்றான்

சூசை திகைத்து நின்றான். அடுத்த விநாடி இன்ஸ்பெக்டர் உடையிலிருந்த குமாஸ்தா சூசையின் மனைவி கையிலிருந்த பணத்தைப் பிடுங்கினான்.

ரங்கன், சூசையின் மேல் பாய்ந்தான்.

''துரோகி! உன் பேச்சைக் கேட்டு நாச வேலையிலே இறங்கினோம், நீ எங்களையே காட்டிக் கொடுக்கிறாயா? டேய், முதலாளி மூஞ்சியிலே கொட்றதுக்காக நைட்ரிக் ஆஸிட் கொண்டு வந்தேன். நீ வாங்கிக்கோடா கைக் கூலி!'' என்று கூறி சூசையின் முகத்தில் அமிலத்தைக் கொட்டினான்.

சூசை அலறினான். சக்ரபாணி புன்முறுவல் செய்தான்.

www.t.me/tamilbooksworld

''உங்கள் எல்லோரையும் மன்னித்து விட்டேன். யார் மீதும் போலீஸில் நான் புகார் செய்யப் போவதில்லை. நீங்கள் அமைதியாக வீடு செல்லுங்கள்!'' என்றான்.

## 47

அமிலம் முகத்தில் வழிய மரியதூசை அலறித் துடித்தான். அவன் துடிப்பைக் கூடக் கவனியாமல், ரங்கன் அவனை அடிக்கக் கை ஓங்கினான்.

சக்ரபாணி எழுந்து ரங்கனைத் தடுத்தான். பிறகு சாரங்கனிடம் திரும்பி, ''இதை நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. பாவம் மரியதூசை! அவனை ஆஸ்பத்திரிக்கு அப்புறப்படுத்துங்கள். அவன் வைத்தியச் செலவு நம் பொறுப்பு. எல்லோருமே தவறு செய்திருக்கிறார்கள். ஆனால் யாரும் சிறை செல்வதில் எனக்கு விருப்பமில்லை'' என்று சொல்லி எல்லோரையும் வெளியே அனுப்பி வைத்தான்.

சக்ரபாணிக்கு, தன்னைக் கொல்லத் திட்டமிட்ட மரியதூசையைப் பழி வாங்கியதில் அலாதி திருப்தி. நல்ல பசியோடு இருக்கும்போது ஒவ்வொரு அயிட்டமாக ருசித்து அந்தச் சாப்பாட்டைத் திருப்தியோடு சாப்பிட்ட மகிழ்ச்சி ஏற்பட்டது. வெளியில் தெரியாமல், தன்னுடைய விரோதியைப் பழிவாங்கிவிட்ட திருப்தியுடன், தொழிலாளர்களுக்கு அவர்கள் தலைவனின் உண்மை யோக்யதையும் வெளிப்படுத்தி விட்டோம் என்ற வெற்றி உணர்ச்சியும் ஏற்பட்டது. திருப்தியும் மகிழ்ச்சியும் இருந்தாலும் சக்ரபாணியின் மனத்தில் பூரணமான சந்துஷ்டி மட்டும் இல்லை.

அவன் மனத்தின் ஒரு பகுதியில் பாலா வீட்டை விட்டுச் சென்றதிலிருந்தே, உறுதி ஆட்டம் கண்டிருந்தது. நமக்கு எவ்வளவோ விரோதிகள் இருக்கின்றனர். அவர்கள்

www.t.me/tamilbooksworld



என் உயிருக்கும் என் அந்தஸ்துக்கும் முடிவு தேடலாம். அந்த முயற்சியில் மரியதூசை தோற்பதுபோல் தோற்காமல், வெற்றியும் அடையலாம் என்ற பய உணர்ச்சி லேசாக ஏற்பட்டது.

யாரோ ஒரு பெண், சமயத்தில் வந்து அவனைக் காப்பாற்றியிராவிட்டால் அவன் கதை அந்த லெவல் கிராசிங்கில் முடிந்திருக்க வேண்டியதுதானே? இம்மாதிரி அதிர்ஷ்டம் ஒருமுறை ஏற்படலாம். பலமுறைகள் ஏற்பட நியாயமில்லை என்பதைச் சக்ரபாணி உணராமல் இல்லை. அவனைக் காப்பாற்றியவள் யார்?

வாழ்வின் ஆரம்பத்தில் அவனே ரயில் வண்டியிலிருந்து குதித்து வாழ்வை முடிக்கப் போகும்போது அவனைக் காப்பாற்ற லால்குடி ஸ்ரீநிவாசன் தோன்றினார். தோல்வியாக முடிந்திருக்க வேண்டிய அவன் வாழ்வை, வெற்றிமுனை நோக்கி திருப்பிவிட்டார். ஆனால், அவர் வாழ்வு வெற்றி அடையாமல் தோல்வியிலேயே முடிந்தது. இப்போது ஒரு பெண் தோன்றி அவனுக்கு உயிர்ப்பிச்சை அளித்திருக்கிறாள்.

அந்தப் பெண்ணுக்குக் கார் ஓட்டத் தெரிந்திருக்கிறது. அவனுக்கு ஆபத்தான நிலையில், பதட்டமில்லாமல் காரை நகர்த்திச் சமாளிக்கும் சாமர்த்தியம் இருந்திருக்கிறது. 'யாரோ ஒருவனாகிய என்னை ஏன் அவள் காப்பாற்ற வேண்டும்? என்மீது ஏன் அக்கறை ஏற்பட வேண்டும்?' என்று சிந்தித்தான் சக்ரபாணி. இதேபோல் வேறு ஒரு நபர் இரவு வேளையில் லெவல் கிராசிங்கில் ஒரு காரில் கிடந்தால் அவன் தன் வேலையை மறந்து அந்த நபரைக் காப்பாற்ற ஒரு சிறு விரலை அசைத்திருப்பானா என்று கேள்வியைத் தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். அந்தக் காரில் அவன் மனைவியோ, பாலாவோ இருந்திருந்தால் அவன் நிச்சயமாகப் பாசத்தின் காரணமாகத் தன் உயிரைக் கொடுத்தாவது அந்தக் காரை நகர்த்த முயற்சித்

திருப்பான். சிந்திக்கும் போதே அவனுக்கு ஒரு பெரிய சந்தேகம் ஏற்பட்டது.

சக்ரபாணி யோசித்தான். அவனைப் காப்பாற்றிய பெண்ணுக்கு அவன் வீடு இருக்கும் இடம் தெரிந்திருக்கிறது. அவனுடைய டாக்டரின் போன்நம்பர் தெரிந்திருக்கிறது. அவள் அவன் பார்வையின் முன்பு வரக்கூடத் தயங்கியிருக்கிறாள். வேறு எந்தப் பெண்ணாக இருந்தாலும் அவனைக் காப்பாற்றி வீடு சேர்த்த காரணத்துக்காகச் சன்மானம் எதிர்பார்த்திருப்பாள்.

ஒரு செல்வந்தரின் உயிரைக் காப்பாற்றியதற்குப் பெருமைப்பட்டிருப்பாள். ஆனால் இந்த மர்மப் பெண் அவன் பார்வை முன்பு வருவதற்கே தயங்கி இருக்கிறாள்.

ஒருவேளை அவனைக் காப்பாற்றியது பாலாவாக இருக்குமோ? மற்றவர்கள் முன்பு பாலா ஊரில் இல்லை என்று தம்பட்டம் அடித்தாலும், சக்ரபாணிக்கு அவள் சென்னையில்தான் எங்கோ இருக்கிறாள் என்பது நன்றாகத் தெரியும்.

அவள் சென்னை நகர எல்லைக்கு அப்பால் இரவு வேளையில் ரயில்வே பாதையில் வரக் காரணம் என்னவாக இருக்க முடியும் என்று சிந்தித்தான். பாலா வீட்டை விட்டுப் போனதற்கே காரணம் புரியவில்லை. பாலாவின் செயல்களுக்குக் காரணம் எப்படிச் சொல்லமுடியும் என்று தன்னைத்தானே தேற்றிக் கொண்டான்.

அடுத்த விநாடி, பாலா உண்மையிலேயே சாமர்த்திய சாலிதான் என்று நினைத்தான். இரவின் தனிமையில் இரவு எக்ஸ்பிரஸ் நெருங்கும்போது, அவள் காரை நகர்த்தி என்னை வீடு சேர்த்திருக்க வேண்டுமென்றால் அவளுக்கு என்மீது எவ்வளவு அன்பு இருக்கவேண்டும்! நினைக்கவே சக்ரபாணிக்குப் பெருமையாக இருந்தது.

அவன் மனைவி லட்சுமி, பாலா வீட்டில் இருப்பதாகத் திரும்பத் திரும்பச் சொன்னதும் அவன் ஞாபகத்துக்கு வந்தது. சித்தத் தெளிவுள்ள எனக்கும் டாக்டருக்கும்



தெரியாத ஒரு விஷயம், சித்தம் குழம்பிய மனைவிக்குப் புரிந்திருக்கிறது.

அவள் ஒரு பைத்தியம் என்று கருதி அன்று அவள் வார்த்தைகளைச் செவி சாய்க்கவில்லையே என்று வருந்தினான். பாலாவை உடனே பார்க்க வேண்டுமென்று துடித்தான்.

அதே வேளையில் பாலா கையில் ஒரு சாக்குப் பையைத் தாங்கியபடி, லாயிட்ஸ் ரோட் மூலையில் நடந்து போய்க்கொண்டிருந்தாள். போக்குவரத்து நெருக்கடி காரணமாகச் சில கார்கள் தடைப்பட்டு நிற்பதையும் அந்தக் கார்கள் ஒன்றிலிருந்து மணியின் தந்தை கோயமுத்தூர் தியாகராஜன் கவனிப்பதையும் அவள் அறியவில்லை.

பெரிய கோடீசுவரன் சக்ரபாணியின் மகள் சாதாரணப் புடைவை அணிந்து கையில் ஒரு சாக்குப் பையுடன் தெருவில் நடந்து செல்வது அவருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

ஒருவேளை வேறு யாராவது பெண்ணாக இருக்குமோ என்று சந்தேகப்பட்டார், மணியின் தந்தை. கார்கள் நகர ஆரம்பித்தன. பாலா செல்லும் வழியிலேயே டிரைவரைக் கார் ஓட்டச் சொன்னார். கார் மெல்ல பாலாவை நெருங்கியது. பாலாவை அருகில் பார்த்ததும், அவர் சந்தேகம் தீர்ந்தது. "பாலா!" என்று கூப்பிட்டார். பாலா திரும்பினாள்.

காரில் அமர்ந்திருந்தவரின் முகத்தைப் பார்த்ததும் குழப்பம் ஏற்பட்டது. அருகிலிருந்த ஒரு சந்தில் வேகமாக மறைந்து விட்டாள்.

காரில் அமர்ந்திருந்த தியாகராஜனுக்கு ஆச்சரியம் அதிகமாகியது. சிந்தனையில் ஆழ்ந்தார். காரைச் சக்ரபாணியின் ஆபீஸ் நோக்கி ஓட்டச் சொன்னார்.

பாலாவை எப்படியாவது தேடிப்பிடிக்க வேண்டும்

www.t.me/tamilbooksworld

என்ற நினைப்போடு சக்ரபாணி ஆபீசிலிருந்து புறப்படத் தயாராயிருக்கும்போது, கோயமுத்தூர் தியாகராஜன் ஆபீசின் உள்ளே நுழைந்தார். அந்தச் சமயத்தில் தியாகராஜனைப் பார்க்கவே சக்ரபாணிக்குப் பிடிக்க வில்லை. ஆனால் தியாகராஜன் முகத்தில் ஒளி வீசிய வெற்றிப் புன்னகை சக்ரபாணிக்கு ஒருவிதக் கலக்கத்தைக் கொடுத்தது. "என்ன, வெளியே புறப்பட்டுட்டு இருக் கிறாய் போல இருக்கு? பாலா சுகமாக இருக்கிறாளா? மணி எப்படி வேலை செய்கிறான்?" என்று தியாகராஜன் கேட்டார்.

சக்ரபாணி ஒரு விநாடி தயங்கினான். "மணியை நான் ரெஸ்டாரன்ட் டிபார்ட்மெண்ட்லே ஒரு மானேஜராகப் போட்டிருக்கிறேன். அந்த டிபார்ட்மெண்டிலேகூட அவன் ஒழுங்காக வேலையைக் கவனிக்கிறது இல்லை."

"கழுதை மணி என்ன செய்வான்? அவன் என் மகன் தானே? யாரையாவது இழுத்துக்கிட்டுத் திரிவான். அதுக்குத்தான் அவனுக்குச் சீக்கிரமே கட்டி வச்சுடணும்னு பார்க்கிறேன். ஆமாம், பாலா கல்யாண விஷயமாய் என்ன சொல்லுது?"

"பாலா இப்போ ஊரிலே இல்லை. சிநேகிதிகளுடன் வெளிநாடு போயிருக்கிறாள்" என்று தடுமாற்றத்துடன் கூறினான் சக்ரபாணி.

"யோவ், சக்ரபாணி, யாரிடம் டுப் விடறே? லாயிட்ஸ் ரோடுதான் வெளிநாடா? அவள் பையைத் தூக்கிட்டு லாயிட்ஸ் ரோடிலே நடந்து போறதை நான் கண்ணாலே பார்த்தேன். ஏன் என் மகனுக்கு அவளைக் கட்டி வைக்க உனக்கு இஷ்டமில்லையா?"

சக்ரபாணி பேசாமல் இருந்தான்.

"நீ உன் ஒரே மகளை என் மகனுக்குக் கொடுப்பே என்கிற ஆசையிலேதானய்யா நான் நீ காட்டின இடத்திலே கையெழுத்துப் போட்டேன்? என் பம்பாய்



வியாபாரம் பூராவும் உன் பெயருக்கு மாத்தினேன்?" பூராவும் உன் பெயருக்கு மாத்தினேன்?" என்று கூச்ச லிட்டார் தியாகராஜன்.

சக்ரபாணியின் கண்கள் சிவந்தன. "பாலாவின் கல்யாணத்தைப் பாலாவைக் கேளாமல் செய்ய முடியாது. பாலாவைக் கட்டிக் கொள்ள மணிக்கு யோக்கியதை இருக்கிறதா என்பது பற்றி நீங்களே முடிவு செய்யுங்கள்."

"யோக்யதை என்னய்யா வேண்டி இருக்கிறது? பணக்கார வீட்டுப் பசங்களுக்கு ஏது யோக்கியதை? அதுதான் பிஞ்சுலே பழுத்துடறதுங்களே. சொத்துக்குத் தானே இனத்தில் கல்யாணம் நடக்குது... உன் மகள் உனக்குத் தெரியாமல் எங்கோ ரோட்டிலே நடந்து போயிருக்கிறாளே அவள் யோக்கியதையைப் பத்தி என்ன சொல்றே?"

"எனக்குப் பாலாதான் எல்லாம்! அவள் கண்கலங்க கல்யாணம் செய்ய மாட்டேன். அது நிச்சயம்."

தியாகராஜன் விழுந்து விழுந்து சிரித்தார். "சக்ரபாணி! நீ பெரிய கில்லேடி. ஆனால் நான் உனக்கும் பெரிய கில்லேடி. தெரிஞ்சுக்கோ. எல்லோரையும் ஏமாத்துற மாதிரி என்னை ஏமாத்த முடியாது. நீ எத்துக்காரன், இப்படித்தான் சொல்லுவேன்னு சந்தேகப் பட்டேன். அதுனாலே தக்க புலத்தோடதான் வந்திருக் கேன். நீ ஜோன்ஸ் எஸ்டேட் வாங்கின விதம் தெரியும், உன் சிநேகிதர் மலாயாக்காரரைத் தயார் பண்ணி அவரிட மிருந்து ரிக்கார்டெல்லாம் வாங்கிட்டேன். அந்த ரிக்கார்டைக் கோர்ட்லே கொடுத்தா போதும், வரி இலாகா உன் சொத்து பூராவும் ஜப்திக்குக் கொண்டு வந்துடும் அது மட்டுமில்லை சக்ரபாணி. உன்னைக் கிரிமினல்லே பிடிக்க சிறையிலே வைக்க வேண்டிய அளவுக்கு ரிகார்டு எங்கிட்டே இருக்கு!"

சக்ரபாணி கல்லாகக் கதவருகில் நின்றான். தியாக

ராஜன் தொடர்ந்து, "இது வெறும் பேச்சில்லே. ஒரு அடையாளம் சொல்றேன் கேளு. நீ ஜோன்ஸ் ஆடிட்டருக்கு எழுதின கடிதம் என்கிட்டே இருக்கு" என்றார்.

அதே சமயம் அறையில் டெலிபோன் மணி அடித்தது.

சக்ரபாணி பாய்ந்து டெலிபோனை எடுத்தான். "யாரு?" என்று தன்னையும் மறந்தபடி கேட்டான்.

"நேற்று உங்களை ரெயில்வே லெவல் கிராசிங்கிலிருந்து காப்பாற்றியவள்" என்ற குரல் டெலிபோனில் ஒலித்தது!

## 48

ஏற்கனவே சக்ரபாணியின் மனத்தில் சந்தேகம் படியால், டெலிபோனில் பேசும் பெண்ணின் குரல் பாலாவினுடையது என்பதைக் கண்டுபிடிக்க அதிக நேரமாகவில்லை.

சக்ரபாணியின் உள்ளம், "பாலா! என் பாலா கண்ணு!" என்று அன்போடு கூப்பிடத் துடியாகத் துடித்தது. ஆனால் அவனுடைய இயற்கையிலே உள்ள உஷாரான பாவம், அவனைத் தடுத்தது. அதே அறையில் நின்று கொண்டு அவனைப் பயமுறுத்திக் கொண்டிருக்கும் தியாகராஜனின் மிரட்டல்களைக் கூட ஒரு விநாடி மறந்தான்.

"யாரம்மா நீ? எனக்கு இவ்வளவு பெரிய உதவி செய்துவிட்டு என்னைச் சந்திக்காமலே சென்று விட்டாய்?" என்று டெலிபோனில் சொன்னான்.

'அப்பாவுக்கு நான்தான் பேசுகிறேன் என்று புரியவில்லை' என்பதில் பாலாவுக்கு ஒருவித மனத் திருத்தி.

"யாராயிருந்தால் என்ன சார்? ஒரு உயிருக்கு ஆபத்து ஏற்பட்டபோது அதைக் காப்பாற்றியதில் எனக்குத் திருப்தி. உங்கள் உடல்நலம் எப்படி இருக்கிறது? தலையில் பட்ட அடி பலமில்லையே! காரில் நீங்கள் மயங்கிக் கிடந்



ததைப் பார்த்தபோது எனக்கு ஒரேயடியாகத் திகிலாய்ப் போய் விட்டது" என்றாள்.

"திகில் நிறைந்த நிலையிலும் நீ நிதானம் இழக்கவில்லை. எப்படியோ காரை நகர்த்தி என்னை வீடு சேர்த்துவிட்டாய். நான் யார், என் வீடு எங்கே இருக்கிறது என்பதை எப்படியம்மா புரிந்து கொண்டாய்? நீ எனக்குத் தெரிந்தவளா? என்னைப் பார்த்திருக்கிறாயா?" என்று ஒன்றும் புரியாதவன்போல் கேட்டான் சக்ரபாணி.

பாலாவுக்குக் குழப்பமாயிருந்தது. என்ன பதில் சொல்வது என்று புரியவில்லை. நன்றி உணர்ச்சி என்பது சிறிதும் இல்லாத தந்தை இப்படிக் கனிவோடு பேசுகிறாரே! அவர் சுபாவத்தில் மாறுதலோ; அல்லது தன்னையே ஒருவேளை புரிந்து கொண்டிருப்பாரோ என்றுகூடச் சந்தேகப்பட்டாள்.

பாலா டெலிபோனின் மறுபுறத்தில் யோசித்துக் கொண்டிருக்கும்போது, சக்ரபாணியின் கவனம் தியாகராஜன்மீது சென்றது.

"கொஞ்சம் வெளிப்புறம் இருங்கள். நான் முக்கியமான போன் பேசிக் கொண்டிருக்கிறேன்" என்றார்.

தியாகராஜன் ஆச்சரியத்துடனும் ஆத்திரத்துடனும் வெளியே சென்றார். 'கோர்ட் விவகாரம் என்ற முறையில் பேராபத்து காத்திருக்கிறது. அதைவிட என்ன முக்கியமான டெலிபோன் பேச்சு வேண்டிக்கிடக்கிறது? அதுவும் யாரோ ஒரு பெண்ணுடன்?' என்று நினைத்தார் தியாகராஜன். பேசுவது சக்ரபாணியின் பெண் என்பது அவர் எண்ணத்தில் படவில்லை.

தியாகராஜன் வெளியே சென்றதும், சக்ரபாணியின் கவனம் போனில் சென்றது. "என்னம்மா பதில் பேசாமல் இருக்கிறாய்?" என்றான்.

"சார், நான் உங்கள் ஸ்தாபனத்தில் வேலை செய்யும் ஒரு முக்கியமான நபரின் பெண். உங்களை அடையாளம்

www.t.me/tamilbooksworld

தெரிந்ததால்தான் நான் அன்றிரவு காப்பாற்ற முடிந்தது...'' என்று மழுப்பலான பதிலைச் சொன்னாள்.

சக்ரபாணி சிரித்துக் கொண்டான். 'என் ஸ்தாபனத்தில் வேலை செய்யும் முக்கியமான நபர்களில் என்னையும் ஒருவனாகக் கருதுகிறேன். எனக்கும் ஒரு பெண் இருக்கிறாள். ஆனால் அவளுக்கு என் மீது உனக்கு இருக்கும் அக்கறை இருந்தால்...'' என்று கூறிவிட்டு வாக்கியத்தை வேண்டுமென்றே முடிக்காமல் நிறுத்தினான்.

பாலாவுக்கு இந்தக் குற்றச்சாட்டைக் கேட்கவே வேதனையாக இருந்தது. உங்களுக்கு இருப்பது ஒரே ஒரு பெண். அவளுக்கு உங்களிடமும், உங்கள் மனைவியிடமும் அக்கறையில்லை என்று சொல்வது சரியாயிருக்குமா?'' என்று குரல் நடுக்கத்துடன் கேட்டாள்.

சக்ரபாணியின் குற்றச்சாட்டு அவள் மனத்தைத் தைத்துவிட்டதைப் பாலாவின் குரல் நடுக்கமே காட்டியது. சக்ரபாணிக்கு அவன் மனம் மகிழ்ச்சியடைந்தது. ''என் உயிரைக் காப்பாற்றிய நீயும் என் பெண் போலத்தான். உன்னிடம் உண்மையைச் சொல்வதில் தப்பொன்றும் இல்லை. என் மகள் என்னிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் எங்கோ போய்விட்டாள். எல்லா வசதியும் செல்வமும் இருக்கும்போது அவள் ஏன் போனாள் என்று எனக்குப் புரியவில்லை...'' என்று சொல்லி நிறுத்தினான்.

பாலா ஒரு விநாடி யோசித்தாள். பிறகு, ''உடலளவில் வாழ்ந்தால் செல்வம் போதும். சில சமயம் மனத்தளவில் வாழ்பவர்களுக்கு மனத்திருப்தி பண்பின் வழி வரும். அந்தத் திருப்தி இல்லாவிட்டால், செல்வமே மூச்சைத் திணற வைத்து ஓட வைக்கும். ஒரு வேளை உங்கள் மகளுக்கு மனத்தில் குறையிருக்கலாமோ என்னவோ?'' என்றாள்.

சக்ரபாணி யோசித்தான். பாலா, வீட்டை விட்டு

www.t.me/tamilbooksworld



ஓடிய தன் காரணத்தை இப்போதுதான் முதல் முறையாகக் கேட்டான்.

''என் அறிவுக்குத் தெரிந்த வரையில் அவளுக்கு நான் ஒரு குறையும் வைக்கவில்லை. ஒருவேளை, அவளைப் பணத்தாசை பிடித்த இளைஞன் எவனாவது மயக்கிக் கடத்திப் போயிருந்தால்...?''

''என்ன சார் நீங்கள், புத்திசாலியாக இருப்பீர்கள் என்று நினைத்தேன். இப்படிப் பேசுகிறீர்களே! பணத்தாசை பிடித்த எந்த இளைஞனும், பணத்தின் நடுவே வாழும் பெண்ணைப் பணத்திலிருந்து பிரித்துக் கடத்திப் போவானா? அவனுக்குப் பைத்தியமா? உங்கள் பெண் ஒருவிதக் கிறுக்காக இருந்தால்...!''

சக்ரபாணி சிரித்தான். ''கரெக்டம்மா, நான் ஒருவிதக் கிறுக்கு. என் மனைவி இன்னொரு விதத்தில் கிறுக்கு. அதே போல் என் பெண்ணும் இருக்கலாம். ஆனால் அவளைப் பற்றி நான் கவலைப்படாமல் இருக்க முடியுமா? நீயே சொல்லம்மா.''

''ஒருவேளை நீங்கள் கவலைப்பட வேண்டும். மற்ற மனிதர்களுக்கு இருக்கும் ஆசாபாசங்களைப் புரிந்து கொள்ளவேண்டும். இரக்க குணத்தை அடைய வேண்டும் என்றே உங்கள் பெண் போயிருக்கலாம் அல்லவா?''

''வியாபாரத்தில் இரக்கம் காட்ட முடியுமா? என் பெண்ணுக்காகத் தானே நான் பொருள் சேர்க்கிறேன்? அது அந்த முட்டாளுக்குப் புரிய வேண்டாமா?'' என்று சக்ரபாணி கோபத்துடன் இரைந்தான்.

''இரக்கத்தைப் பற்றி நான் பேசும்போதே உங்களுக்கு இவ்வளவு கோபம் வருகிறதே! உங்களிடம் இரக்கம் பற்றிப் பேசியிருந்தால் நீங்கள் இப்படித்தான் கத்துவீர்கள் என்று அவள் முடிவு செய்திருக்கலாம். அதனால் அவள் ஒன்றுமே சொல்லாமல் வெளியேறி இருக்கலாம்.''

''அப்பாவையும் அம்மாவையும் விட்டுப் போவது

மட்டும் இரக்கமுள்ள செயலா? நான் அவளைப் பிரிந்து எப்படித் துடித்தேன் தெரியுமா? எனக்கு இரக்கம் காட்ட யார் இருக்கிறார்கள்?'' என்று அழாக் குறையாகச் சொன்னான்.

அது பாலாவின் மனத்தை இளக்கியது. ''ஒருவேளை உங்கள் பெண், உங்கள் நலத்துக்காக, குடும்ப நலத்துக்காகத் தவ வாழ்க்கை வாழ வேண்டுமென்ற நோக்கத்தோடு சென்றிருக்கலாம் அல்லவா?'' என்று சக்ரபாணிக்கு ஆறுதல் கூறும் நோக்கத்தோடு சொன்னான்.

சக்ரபாணி ஒரு விநாடி பேசவில்லை. அப்புறம் அவனுக்கு அறைக்கு வெளியே நிற்கும் தியாகராஜன் நினைவு வந்தது. அத்தோடு அவனுடைய மிரட்டல்களும் நினைவுக்கு வந்தன. தியாகராஜன் கோர்ட்டிலே வழக்காடும் டச்சி என்பது சக்ரபாணிக்குத் தெரியும்.

'நாம் கோர்ட் ஏறினால் நம் வியாபாரத்துக்கு ஆபத்து. ஏராளமான எதிரிகளை உடைய நான் ஒரு வழக்கில் தோற்று விட்டால், எல்லோரும் எதிரே திரும்பி விடுவார்கள். அப்புறம் விஷயங்கள் எங்கு போய் விடுமோ!'' என்ற பயமும் இருந்தது.

உடனே தன் நிலையைத் தன் மகளிடம் கூற வேண்டும் என்ற எண்ணமும் எழுந்தது. ''என் மகள் விஷயம் இருக்கட்டும். எனக்கு வந்திருக்கும் புதுச் சிக்கலை உன்னிடம் சொல்லி ஆலோசனை கேட்க வேண்டும் போல், தோன்றுகிறது.''

''வியாபாரத்திலே நீங்கள் புலி. உங்களுக்கு நான் ஆலோசனை கூறுவதா?''

''இது பூராவும் வியாபார விஷயம் இல்லை. இது ஓரளவு குடும்ப விஷயம்தான். என்னை ஆபத்தில் காப்பாற்றிய நீ இதில் எனக்குச் சரியான யோசனை சொல்வாய் என்று நம்புகிறேன். என் மகளைக் கோயமுத்தூர் தியாகராஜன் என்ற செல்வந்தரின் மகன் மணி என்பவனுக்குக் கொடுப்பதாக ஒரு முறை சொல்லி



இருந்தேன். அவர் இப்போது அந்தக் கல்யாணத்தை நடத்தும்படி வற்புறுத்துகிறார். இல்லாவிட்டால், என் வியாபார ரகசியங்களை அம்பலப்படுத்துவதாக மிரட்டுகிறார். என் மகள் ஊரில் இல்லை; வெளிநாடு போயிருக்கிறாள் என்று மற்றவர்களிடம் சொல்லிவருவது போல் அவரிடமும் பொய் சொன்னேன். அந்தப் பாவி மனிதன் என் மகளை இன்று லாயிட்ஸ் ரோடு மூலையில் பார்த்திருக்கிறான். ஆகையால் நான் சொல்வது பொய் என்று என்னிடம் சண்டை போடுகிறான். அவனைப் பகைத்துக் கொள்வதால் நான் என் சொத்தின் ஒரு பகுதி, என் அந்தஸ்து, நல்ல பெயர் முதலியவற்றை இழக்க நேரிடும். என் மகள் இருக்குமிடமோ தெரியவில்லை. அவள் வீட்டை விட்டு ஓடிப்போய் விட்டாள் என்ற உண்மையை வெளியே சொல்லவும் முடியவில்லை. எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை!'' ஒன்று கூறினான்.

பாலாவுக்கு மனம் பகீரென்றது. மணியை மணப்பதா? ஒருகாலும் முடியாது. அவள் தந்தையின் கவலை நிறைந்த குரலிலிருந்து, விஷயம் அவருக்கு ஆபத்தானது என்றும் புரிந்தது.

''இந்தச் சம்பந்தத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

சக்ரபாணி யோசித்தபடி பதில் சொன்னான். ''தியாகராஜன் சிறந்த செல்வந்தர். ஓரளவுக்குப் பொருத்தமான சம்பந்தம்தான் என்று நினைக்கிறேன்.''

பாலா அதிர்ச்சி அடைந்தாள். தன்னையும் மறந்தாள்.

''அந்த மணி அயோக்கியனாக இருந்தால்...? உங்கள் பெண் அவனை முற்றிலும் வெறுத்தாலும், உங்களை விவகாரத்திலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்காக நீங்கள், அவளை மணி என்ற பலிபீடத்தில் பலியாக்குவீர்களா?'' என்று படபடப்புடன் கேட்டாள்.

சக்ரபாணி, ''என் சொத்தே போனாலும் என் கண்மணியை நான் எந்தப் பலிபீடத்திலும் பலியிட

www.t.me/tamilbooksworld

மாட்டேன். அவள் வாழ்வின் வளம்தான் எனக்கு முக்கியம்! ஆனால் அவள் எங்கிருக்கிறாள், என்ன நினைக்கிறாள் என்று தெரியாத நிலையில் தியாகராஜனிடம் மாட்டிக் கொள்ள விரும்பவில்லை. விவகாரம் தொடங்கி விட்டால் எவ்வளவோ வம்புகள் கிளம்பும். அப்புறம் அவற்றைச் சரிப்படுத்த முடியாதே என்று யோசிக்கிறேன். உன் யோசனை என்னம்மா?" என்று கனிவுடன் கேட்டான்.

டெலிபோன் சம்பாஷணை மெல்ல மெல்ல நகர்ந்து 'நான் உங்கள் மகள் பாலா' என்று ஒப்புக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு வந்து விட்டதே என்று பாலா வருந்தினாள். தந்தைக்கு என்ன யோசனைகூறுவது என்று புரியாமல் யோசித்தாள்.

"என்னம்மா பதில் பேசவில்லை? என் சிக்கலுக்கு ஒரு வழி சொல்லம்மா!" என்று சக்ரபாணி தூண்டினான்.

"இவ்வளவு அவசரப் படுகிறீர்களே! மிகவும் கெட்டிக்காரரான உங்களாலேயே தீர்க்க முடியாத பிரசினைக்கு இவ்வளவு சீக்கிரம் நான் எப்படி ஒரு முடிவு சொல்ல முடியும்? நாளைவரை அவகாசம் கொடுங்கள்."

சக்ரபாணி, "நீ எங்கே இருக்கிறாய்? உன்னை எங்கே சந்திப்பது என்று சொல்லு" என்றான்.

"நாளை மாலை நீங்கள் 'பாலா' தியேட்டரில் பால்கனியில் முதல் வரிசையில் இடது கோடியில் உட்கார்ந்திருங்கள். நான் உங்களுக்குப் பின்புற சீட்டில் வந்து அமர்வேன். அப்புறம் பேச வேண்டியதைப் பேசுவோம். உங்களை நான் நேரில் சந்திக்க முடியாததற்குச் சில காரணங்கள் இருக்கின்றன. உங்களுக்குச் சொந்தமான தியேட்டர் என்ற எண்ணத்தில் விளக்கைப் போடச் சொல்லி என்னைப் பார்க்க முயல வேண்டாம். அது உங்களுக்கும் உங்கள் பெண்ணுக்கும் பெரிய தீங்கு விளைவிக்கும்!"

"உன் உத்தரவுப்படியே காத்திருப்பேன்" என்று சொல்லிவிட்டுப் போனை சக்ரபாணி வைத்தான்.

www.t.me/tamilbooksworld



அதே சமயத்தில் கோயமுத்தூர் தியாகராஜன் அறையில் நுழைந்தார். "என்னய்யா இம்புட்டு நேரம் போன்லே பேசிட்டிருக்கே, அதுவும் ஒரு பொட்டைக் கழுதையோடு?" என்று இழுத்தார் தியாகராஜன்.

தியாகராஜன் பொட்டைக் கழுதை என்ற வார்த்தையை உபயோகித்தது சக்ரபாணிக்கு ஆத்திரத்தைத் தூண்டியது. கட்டுப்படுத்திக் கொண்டு, "தியாகராஜன், கொஞ்சம் பொறுங்கள். ஒரு வாரம் டயம் கொடுங்கள்" என்றான்.

"பொறுக்க முடியாதய்யா! சக்ரபாணி, பொறுத்தா காங்கேயத்தார் கதையாயிடும்; உமக்குத் தெரியுமில்லே? அவர், மகன் செங்கோடனுக்குக் கட்டி வைக்காமல் இருந்தாரு. பயல் ஈரோடு, பவானியிலே எக்கச்சக்கமா மேஞ்சிருக்கான். பெரியப்பாகாரர், செங்கோடனுக்குப் பொண்ணு பார்த்தாரு. உடனே அரை டஜன் ஜீவனாம்சம் கூட்டு வந்துடுச்சு, கோயமுத்தூர் கோர்ட்டிலே. எல்லாம் கைக்குழந்தையோட.

"ஒருத்தி சென்னிமலையிலே கட்டிக்கிட்டாங்கிறா. இன்னொருத்தி குருவாயூர்லேங்கிறா. மேளகாரன், புரோகிதர் சாட்சியோட வந்துட்டாங்க. பாவம், காங்கேயத்தார் காடு பூமியைச் சாசனம் பண்ணி அக்கப் போரை நிறுத்தினாரு."

"நான் பெத்த நாய் மணி, செங்கோடனோட ஆறு வருஷம் சேர்ந்து படிச்சிருக்கான், ஒரே ஸ்கூல்லே. இவன் அவனுக்கு மட்டமாயிருப்பானா! அதான் சக்ரபாணி பயப்படறேன்!"

"என்ன தியாகராஜன், உங்க மகனைப் பத்தி இவ்வளவையும் பேசிட்டு, என் மகளைக் கேட்கிறீங்களே, நல்லாயிருக்கா? அந்த நாய்க்கு என் மாணிக்கத்தைக் கொடுக்கலாமா?"

''உங்க மகன் மட்டும் என்னவாம்? அவனுந்தான் உமக்குத் தெரியாமல் லாயிட்ஸ் ரோட்டிலே சுத்திக் கிட்டிருக்கிறான்!''

''உங்க மகனைப் பேசறமாதிரி என் மகளைப் பத்திப் பேசாதீங்க. பேசினால் கல்யாணமே கிடையாது. நீங்க எந்தக் கோர்ட்டுக்குப் போனாலும் அக்கறையில்லை.'' அவன் எரிந்து விழுந்தான்.

''கோபிக்காதே! உம் மகள் உம்மாதிரி இருக்கட்டும். என் மகன் எம்மாதிரி இருக்கட்டுமே. ஆம்பிளை நாய் ஆறு தெருவு சுத்தறது ஒண்ணும் தப்பில்லை. கட்டி வச்சுட்டா சொத்துக்கு வேலி போட்ட மாதிரி ஆயிடும். விளையாட்டு விபரீதமாகாது பாரு'' என்று சொல்லி விட்டு நேராக மணி தங்கியிருக்கும் அறைக்குப் புறப் பட்டார் தியாகராஜன்.

மணி அப்போது தான் வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்தான். அவனிடம் அவர், பாலாவை லாயிட்ஸ் ரோடு முனையில் சந்தித்ததாகவும், அவள் அங்கு ஏன் வந்தாள் என்ற விவரங்களை அறியும்படியும் சொன்னார்.

விஷயம் புரியாத மணி அவரிடம் விளக்கம் கேட்டான்.

''கேள்வி என்னடா நாய், சொன்னபடி செய்யடா! சக்ரபாணி மகளை உனக்குக் கட்டி வைக்கப் போறேன். அதுவும் ஒரு வாரத்திலே முடிவு எடுத்தாகணும்!'' என்றார் அவர்.

''சரி, சரி'' என்று சொல்லி விட்டுக் காரில் புறப் பட்டான்.

அன்று அவன் ஒரு முக்கியமான விஷயத்தை முடிவு செய்யவேண்டும். கமலாவைச் சந்தித்து, அவன் முடிவைக் கூற வேண்டும்.

கார், கமலா படிக்கும் பள்ளியின் வெளிப்புறம் வந்து நின்றது.



கமலா, டிபன் அறை ஜன்னல் வழியே பார்த்தாள். அவள் கண்கள் கலங்கி இருந்தன.

அண்ணன் வீட்டில் குறுகிய இடத்தில் ஏழை வாழ்வு வாதவதா, அல்லது திரண்ட செல்வத்தின் நடுவே சிறப்பாக வாழ்வதா என்ற பிரசினைக்கு இன்று முடிவு தெரியும்.

மணியின் கார் வருவதையும், அதை நோக்கிக் கமலா பறந்தோடுவதையும் கவனித்தபடி பாலா நின்றாள்.

வழக்கம்போல் கமலா காருக்குள் ஏறிக் கொள்ள வில்லை வெளியே நின்றபடி பேசினாள். மணி முகத்தை வேறு பக்கம் திருப்பியபடி நின்றான். கமலா கைகளை ஆட்டி, தன்னையும் மறந்தபடி பேசிக் கொண்டிருந் தாள்.

சில விநாடிகளில் மணி காரில் ஏறிச் சென்றான். கமலா அழுதபடி அங்குள்ள கல்லில் உட்கார்ந்துவிட்டாள்.

பாலாவின் பெண்மை கமலாவுக்காக வருந்தியது.

மெல்ல மெல்லக் கமலாவை நெருங்கினாள் பாலா. அவள் தோளைத் தொட்டாள். ''என்ன கமலா?''

கமலா திடுக்கிட்டாள். வெடுக்கென்று தலையைத் திருப்பிக் கொண்டாள்.

''என்னிடம் சொல்லக் கூடாதா கமலா? ஏன் அழுது கொண்டு உட்கார்ந்திருக்கிறாய்?'' என்றாள் பாலா.

''எதுவானால் உனக்கென்ன?'' என்றாள் கமலா கோபத்துடன்.

''சந்தோஷமாய்த் துள்ளித் திரிய வேண்டிய வயசில் ஏன் வருத்தப்படுகிறாய் என்றுதான் கேட்கிறேன்.''

கமலா பதிலொன்றும் பேசவில்லை. எழுந்து போய் விட்டாள்.

## 49

பெரிய சுமைதாங்கி, மனம் என்பது! பாலா வீட்டை விட்டுப் புறப்பட்டதிலிருந்து அவளுக்குத்தான் எத்தனை

சோதனைகள்! எத்தனை இன்னல்கள்! இன்பமாக, குழந்தைபோல் மனச்சுமையில்லாது வாழ்ந்த பாலாவுக்குத் தான் ஒன்றன்மேல் ஒன்றாக எவ்வளவு சிக்கல்கள்!

லால்குடி சீனிவாசன் வீட்டில் 'சுமதி'யாகவும், அத்தான் மோகன் வீட்டில் 'சுந்தரி'யாகவும் வாழவேண்டி இருந்தது. இப்போது எல்லாவற்றுக்கும் மேலாக மணியின் பிரசினை!

பாலா, தந்தையோடு டெலிபோனில் பேசிய பேச்சிலிருந்து ஒன்று அவளுக்குத் தெரிந்தது. அவர், கோயமுத்தூர் தியாகராஜனிடம் மாட்டிக் கொண்டிருக்கிறார். அவளை மணிக்குக் கொடுக்காவிட்டால், அவருடைய அந்தஸ்து, கௌரவம், செல்வம் இவைகளுக்குக் கெடுதி விளையும் என்பது தெளிவாகத் தெரிந்தது. பாலாவுக்கு அவளுடைய தந்தையின் மனநிலையை நினைக்கும்போது பரிதாபமாக இருந்தது.

அதைவிடப் பயங்கரமான ஒரு சூழ்நிலையில் கமலா சூழப்பட்டிருக்கிறாள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் கமலா அவளிடம் மனம்விட்டுப் பேச விரும்பவில்லை என்பதும் தெரிந்தது. அதற்குக் காரணம், கமலாவின் மனத்தில் பாலாவிடம் இருந்த வெறுப்பு, உதாசீனமே.

தந்தையின் மனக்கவலை என்ற பிரசினைக்கும், கமலாவின் துயரத்துக்கும் மருந்து, மணி ஒருவன்தான்.

எப்படி இந்தச் சிக்கலைத் தீர்ப்பது என்று தெரியாமல் யோசித்தாள்.

பெரியவர் சம்பந்தய்யாவிடம் போய் எல்லா விஷயத்தையும் சொல்லி, என்ன செய்வது என்று கேட்போமா என்று தோன்றியது. மனதுக்காவது ஓர் ஆறுதல் கிடைக்குமே என்று நினைத்தாள்.

காலேஜிலிருந்து பஸ் ஏறி நேரே சிந்தாதிரிப்பேட்டை வந்து சேர்ந்தாள்.

www.t.me/tamilbooksworld



பெரியவர் கிணற்றடியில் வேட்டியை மடித்துக்கட்டிக் கொண்டு, சமையல் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்தார். முதிர்ந்து வயிரம் வாய்ந்த அவர் தோள் சதைகள் சுருக்கம் விழுந்து ஆடியபடி இருந்தன. அவர் பானையைத் தேய்க்கும்போது, அவர் மூச்சு 'புஸ்...புஸ்' என்று வெளிவந்தபடி இருந்தது. நரைத்த நெற்றிப் புருவத்திலிருந்து வியர்வை வழிந்தபடி இருந்தது.

பாத்திரம் கழுவும் வேலையில் ஈடுபட்டிருந்த பெரியவர், பாலா அங்கு வந்ததைக் கவனிக்கவில்லை.

பாலாவின் மனக்கண் முன் அவளுடைய தந்தையின் பரந்த மாளிகையும், அதன் கணக்கற்ற அறைகளும் தோற்றம் அளித்தன. கால் புதையும் கம்பளங்கள் விரிக்கப்பட்டு, சோபாக்கள் குளிர்சாதனப் பெட்டிகள் பொருத்தப்பட்ட வசதி நிறைந்த அறைகள் கண்முன் தோன்றின.

உழைத்து, பின் உல்லாச ஓய்வு அடைய வேண்டிய பருவத்திலுள்ள இந்தப் பெரியவர், கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து, அவரே சோறாக்கி அந்தப் பாத்திரங்களைக் கழுவ வேண்டுமா? சென்னை நகரத்தின் கோடீஸ்வரனின் மாமனார் தன் வயோதிகத்தை இப்படி வருந்தி உழைத்துக் கழிக்க வேண்டுமா என்று நினைத்தாள். இம்மாதிரியான வாழ்க்கை அமைப்பில் அர்த்தமே இல்லையே என்று நினைத்தாள். அவள் கண்களில் நீர் நிறைந்தது.

கிழவர் தலை நிமிர்ந்து பார்த்தார். காற்றில் கேசம் பறந்த தலையுடனும், நீர் நிறைந்த கண்களுடனும் தன்னுடைய பேத்தி நிற்பதைக் கண்டார்.

அவள் கையில் கமலாவுக்காக டிபன் எடுத்துச் சென்ற டிபன் பாத்திரம் காக்கிக் கலர் பையிலிருந்து எட்டிப் பார்த்தது.

சொர்க்க வாழ்வில் வாழ்ந்து வந்த தன்னுடைய ஒரே பேத்தியை, வறண்ட தத்துவம் பேசி, ஒரு வேலைக்காரி

யின் நிலைக்குக் கொண்டு வந்து விட்டோமே என்று எண்ணினார், வருந்தினார்.

தத்துவ ஞானி சாதாரண மனிதரானார். ''என்னம்மா பாலா கண்ணு, ஏம்மா அழறே?'' என்று கேட்டார்.

பாலா பேசாமல் உழைப்பால் வியர்த்து நிற்கும் பெரியவரைப் பார்த்து நின்றாள்.

வெண்கலப் பானையைத் தூக்கி எடுத்துக் கொண்டு, ''வாம்மா பாலா உள்ளே போகலாம்'' என்று தள்ளாடிய படி அவர் தன் அறையை நோக்கிச் சென்றார்.

பாலா பேசாமல் பின் தொடர்ந்தாள்.

கிழவர் மறுபடியும் கேட்டார். ''ஏம்மா! என்ன நடந்தது? ஏன் அழறே?''

பாலா, கண்களைத் துடைத்துக் கொண்டு, ''என் மனத்திலே பல குழப்பம் தாத்தா. அதன் சுமை தாங்க முடியவில்லை. உங்களிடம் ஆறுதல் பெறலாம்னு வந்தேன். நீங்கள் கிணற்றங்கரையிலே வெண்கலப் பானை தேய்க்கிற கஷ்டத்தைப் பார்த்தவுடனே என் மனச்சுமையெல்லாம் பறந்து போய்விட்டது. நீங்கள் இந்த வயசிலே தன்னந்தனியாக இப்படிக் கஷ்டப்படுகிறீர்களே என்கிற வருத்தம் ஒன்றுதான் எனக்கு இப்போது. மற்றவர்கள் கஷ்டத்திலே நம்ம கஷ்டம் மறந்து போகிறது தாத்தா!'' என்றாள்.

கிழவர் அன்போடு அவளைப் பார்த்தார். ''எங்கிருந்து வருகிறே பாலா?'' என்று கேட்டார். அவள் கையிலிருந்த பையின் வெளிப்புறம் தெரிந்த டிபன் பாக்ஸைப் பார்த்தபடி.

பாலா தலைகுனிந்தபடி சொன்னாள். ''கமலாவுக்கு டிபன் எடுத்துட்டுப் போய்க் கொடுத்து வருகிறேன்.''

கிழவருக்கு உடல் நடுங்கியது. ''எனக்கு ஒன்றுமே புரியவில்லை பாலா. நீ இந்த மாதிரி ஆனதற்கு நான்தான் காரணம்'' என்று வருத்தத்துடன் சொன்னார்.

www.t.me/tamilbooksworld



''இந்த மாதிரி ஆனதிலே குறைவு ஒன்றுமில்லை தாத்தா. எனக்கு வாழ்க்கை சுவையாகத்தான் இருக்கு. அப்பா இப்போது இரவிலே தூங்குகிறார். அம்மாவின் மனநிலையிலே ஒரு நல்ல மாறுதல் ஏற்பட்டிருக்கிறது தாத்தா. அப்பாவின் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டபோது அதிசயமாக நான் அங்கே போய்ச் சேர்ந்தேன். என்னால் அவரைக் காப்பாற்ற முடிந்தது. அதிலே ஒரு விசேஷம்: அப்பாவுக்குத் தெரியாமலேயே அவரைக் காப்பாற்றி விட்டேன். நீங்கள் சொன்னது கரெக்ட் தாத்தா! நாம் ஒரு நல்லது செய்தால் நமக்குத் தெரியாமலே பத்து நல்லது ஏற்படுகிறது... ஆனால் திடீரென்று இப்போது தான் ஒரு புரியாத திருப்பம் வந்திருக்கிறது...''

''என்ன திருப்பம் பாலா?'' என்று கேட்டார் பெரியவர்.

கோயமுத்தூர் தியாகராஜனால் சக்ரபாணிக்கு ஏற்பட்டிருக்கும் நிர்ப்பந்தத்தையும் அதை நீக்க அவள் தியாகராஜன் மகன் மணியை மணக்க வேண்டிய சங்கடத்தையும் விளக்கினாள்.

பிறகு மணிக்கும் கமலாவுக்கும் இடையே உள்ள உறவையும் சொன்னாள்.

கிழவர் கவலையோடு சிரித்தார். ''நீ மணியை மணக்க விரும்புகிறாயா?'' என்று கேட்டார்.

பாலா சிரித்தாள். ''என்ன தாத்தா ஒன்றும் தெரியாதவர் மாதிரி பேசுகிறீர்கள்! என் மனத்தில் யார் இடம் பெற்றிருக்கிறார் என்பது கூடவா உங்களுக்குத் தெரியாது?''

''நீயும் மோகனும் மணக்கிறதுதான் முறை. அது தான் கடவுளுக்கும் சம்மதமாக இருக்கும்'' என்றார் பெரியவர்.

''அதே போல அந்த மணி கமலாவை மணக்கிறது தான் முறை. நான் நுழைந்தபின் லால்குடி சீனிவாசன்

பெண்ணுக்கு ஒரு ஏமாற்றம் துக்கம் வருவது எனக்குப் புரியலே தாத்தா. அந்த வீட்டு மரகதம்மாள், தன் மகள் வாழ்வு பாழாகி விட்டதென்று வருந்தினால், அது எனக்குப் பொறுக்காது. அதே சமயத்திலே, அப்பா கோர்ட் ஏறி தியாகராஜன் சூழ்ச்சிக்குப் பலியாகிறதும் பிடிக்கவில்லை. அப்பாவை எப்படியாவது காப்பாற்ற வேண்டும்.''

''இந்தச் சிக்கலுக்கு ஒரே ஒரு வழிதானம்மா இருக்கிறது. மணியே மனம் மாறி உன்னை மணக்க விருப்பம் இல்லேன்னு சொன்னால்தான் உண்டு. அந்த அயோக்கியன் சொத்துக்காக உன்னையும், சல்லாபத்துக்காக வேறு பெண்களையும் விரும்பறவன். எப்படியம்மா அப்பனை எதிர்த்துக் கமலா என்ற ஏழைப் பெண்ணை மணக்கத் தீர்மானிப்பான்?'' என்று கேட்டார்.

பாலாவுக்கும் அதேதான் தோன்றியது.

''நான் வேண்டுமானால் சென்று மணியிடம் பேசட்டுமா?'' என்று கேட்டார்.

''வேண்டாம் தாத்தா. நீங்கள் போனால் உங்கள் முகத்துக்கு மதிப்புக் கொடுத்துப் பேசும் பண்பாடு உள்ளவனல்ல'' என்று சொல்லிவிட்டு தாத்தாவின் அறையில் உள்ள அம்மன் படத்தை வணங்கி விட்டு, லால்குடி சீனிவாசன் வீட்டுக்குப் புறப்பட்டாள்.

குழந்தைகள் ரகுவும் சுகுவும் பள்ளியிலிருந்து வீடு திரும்பும் நேரமாகி விட்டதே! அவர்களுக்குப் பொரியும் கடலையும் வறுத்துத் தருவதாகக் காலையில் கூறி இருந்தேனே. குழந்தைகள் வீடு வந்ததும் ஏமாறக் கூடாது, என்ற பதட்டத்துடன் பஸ் ஏறி வேகமாக வீடு வந்தாள்.

வீடு வந்தவுடன் சமையலறையில் சென்று இருப்புச் சட்டியை அடுப்பில் போட்டு அதில் முட்டைப்பொரி, சிறு கடலை, பச்சைமிளகாய் போட்டு வறுத்து இறக்கினாள்.

www.t.me/tamilbooksworld



பிறகு உப்பும் மிளகும் பொடி செய்து போட்டாள். உடனே அதைத் தாளித்தாள். பிறகு வெள்ளரிக்காயைப் பொடியாக நறுக்கிப் பொரியினிடையே தூவினாள்.

கமலா திடுக்கிட்டாள். வெடுக்கென்று தலையைத் திருப்பிக் கொண்டாள்.

பொரி தயாராய் முடியும்போது சரியாகக் குழந்தைகள் ஓடி வந்தனர். புஸ்தகத்தை நடு ஹாலிலே தூக்கி எறிந்து விட்டு, ''பொரி சித்தி, பொரி'' என்று கூச்சலிட்டபடி சமையல் அறையினுள் நுழைந்தனர்.

சிறு தட்டில் இருவருக்கும் பொரியை வைத்தாள். பொரியுடன் நடுவே வெள்ளரிக்காய் கடிபட்டது. ரகு ரசித்துச் சாப்பிட்டான்.

''சித்தி, நீ வருவதற்கு முன்னாலே, ஸ்கூல்லேயிருந்து வந்தவுடனே இங்கே டிபனே கிடையாது. வீடு இருக்கிற இருப்பிலே டிபன் வேறயான்னு திட்டுவாங்க'' என்று சொன்னான்.

ரகுவின் முகத்தில் ஆனந்தம் தாண்டவம் ஆடியது. அவன் முகத்தைப் பார்ப்பதிலேயே தன் கவலையெல்லாம் மறந்தாள் பாலா.

அப்போது பொடிப் பயல் சுகு ஓர் அதிர்ச்சி தரும்படியான கேள்வியைக் கேட்டான்.

''என்ன சித்தி, நீ கொஞ்ச நாளைக்குத்தான் இருப்பாயாம். அப்புறம் போய்விடுவாயாமே?'' என்று கேட்டான்.

''அப்படி யார் சொன்னது?'' என்று கேட்டாள் பாலா.

''கமலா சொன்னாள்'' என்று ரகசியமாகச் சொன்னான்.

''அது மட்டுமில்லே சித்தி. இன்னும் என்னென்னமோ சொன்னாள் கமலா.''

''என்ன சொன்னாள்?'' என்று கேட்டாள் பாலா.

ரகுவும் சுகுவும் பயத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''எல்லாத்தையும் சொல்லலாமாடா?'' என்று பெரியவன் ரகு சிறியவனிடம் கேட்டான்.

''சும்மா சொல்லுடா. இந்த சித்தி நல்லவ!'' என்று தைரியம் கொடுத்தான்.

உடனே ரகு, ''சித்தி, உன்னை ஒரு மைனர் கெடுத்துட்டானாம். அதனாலே நீ வீட்டை விட்டு ஓடி வந்துட்டியாம். மைனர்னா யார் சித்தி?'' என்று சட்டென்று பேச்சை நிறுத்திக் கேள்வி கேட்டான்.

''பூராவையும் சொல்லிவிட்டு அப்புறம் கேள்வி கேளடா மக்கு!'' என்று சிறியவன் அண்ணனைக் கண்டித்தான்.

ரகு தொடர்ந்து கூறினான். ''அந்த மைனர் வர்ற வரையிலும் தான் நீ இந்த வீட்டிலே இருப்பியாம். அந்த மைனர் வந்தா, நீ மறுபடியும் ஒருத்தரிடமும் சொல்லாமல் ஓடிப் போயிடுவியாமே! நிஜம்மாவா?''

''அப்படி ஓடினாலும் என்னையும் தூக்கிட்டு ஓடுடு சித்தி'' என்றான் சிறுவன் சுகு.

பாலாவுக்கு வேதனையாக இருந்தது. கமலா தன் வாழ்வில் உள்ள குறைபாடு மற்றவர்களுக்கு இருப்பதாகக் கற்பனை செய்து மகிழ்கிறாள் என்பதை நினைக்கவே, பாலாவுக்கு ஒரு பக்கம் சிரிப்பு வந்தது. மறுபக்கம் அழுகை வந்தது. குழந்தைகளிடம் இதுபற்றிப் பேசுவதே தவறு என்று நினைத்தாள்.

''நீங்கள் பொரியைச் சாப்பிட்டுப் போய் விளையாடுங்க'' என்று சொல்லிப் பேச்சை மாற்ற முயன்றாள்.

ஆனால் சிறுவன் சுகு விடுவதாயில்லை. ''சித்தி, அப்படி அந்த மைனர் வந்தான்னா சொல்லு. நான் போய் அவனிடம் கெஞ்சிக் கேட்கிறேன். டேய் மைனர் என்னை



எடுத்திட்டுப் போடா, எங்க சித்தியை விட்டுடறான்னு கேக்கப் போறேன்'' என்றான்.

''ஆசை ஆசை! நீ கேட்டா மைனர் விட்டுடுவானா?'' என்றான் ரகு.

''ஏன்டா அண்ணா விடமாட்டான்? பாபர் கேட்டவுடனே கடவுள் ஹுமாயூன் உயிரை விட்டுட்டு பாபர் உயிரைத்தானடா எடுத்துட்டுப் போனார்! அது மாதிரி தானேடா இதுவும்?'' என்றான்.

குழந்தை சுகு தன்மீது வைத்திருந்த கள்ளமில்லாப் பாசத்தைக் கண்டு பாலா மகிழ்ந்தாள். அப்படியே சுகுவை எடுத்து முத்தமிட்டாள்.

''என்ன சித்தி எப்பப் பார்த்தாலும் அந்தப் பயலை மட்டும் முத்தமிடறே! எனக்குக் கிடையாதா?'' என்றான் ரகு.

''அண்ணா, உனக்குத்தான் வாய் நிறையப் பொரி இருக்கிறதே'' என்றான் பதிலுக்குச் சிறுவன் சுகு.

பெரியவனின் குற்றச்சாட்டு உண்மை என்பதை உணர்ந்தாள் பாலா. சிறுவன் சுகுவை முத்தமிடுவதற்குக் காரணம் அவன் பிஞ்சு குழந்தை என்பதனாலா? அப்படியானால் ரகு பெரியவனல்லவே. சுகுவின் நெற்றியும், அதன் மீது விழுந்த கேசமும், குறுகுறுவென்ற கண்களும் அத்தான் மோகனை ஞாபகப்படுத்துவதனாலா? பாலா, தனக்குத்தானே சிரித்துக் கொண்டாள்.

ஆனால் அதே வேளையில் சக்ரபாணி வேதனையில் ஆழ்ந்திருந்தான். சாரங்கன் உதவி கொண்டு ஆபீஸில் பைல்களைப் புரட்டியதில், யாரோ ஆபீஸ் துரோகி சில முக்கியமான கடிதங்களை எடுத்துத் தியாகராஜனிடம் கொடுத்திருக்க வேண்டும் என்பது தெளிவாயிற்று.

சில கடிதங்கள் பைலில் இல்லை. இரும்புப் பெட்டியைத் திறந்து கடிதங்களை யார் எடுத்திருப்பார்கள் என்று புரிய

வில்லை. அவனையும் சாரங்களையும் தவிர வேறு யாரும் இரும்புப் பெட்டியைத் திறப்பதில்லை.

சாரங்கனை நிமிர்ந்து பார்த்தான். சாரங்கன் நடுங்கினார்.

''சார், நான் அப்படியெல்லாம் செய்ய மாட்டேன் சார். நான் உங்களுக்குத் துரோகம் செய்வேனா சார்?'' என்று சொல்லிவிட்டு அடியற்ற நெடுமரம் போல் காலில் விழுந்தார்.

சக்ரபாணி அமைதியாக, ''நான் ஒன்றும் சொல்ல வில்லையே! ஏன் காலிலே விழுகிறீர்கள்?'' என்றான்.

''நீங்கள் வார்த்தையிலே சொல்ல வேண்டுமா? முழித்தாலே புரிகிறதே சார். இவ்வளவு வருஷம் உங்களோடு பழகிட்டு இது கூடவா தெரியாது?'' என்று நடுங்கியபடி நின்றார்.

சக்ரபாணி சிந்தித்தான். சாரங்கன் குற்றவாளியாக இருந்தாலும், அவரைத் திருடன் என்று சொன்னால் அவர் உடனே தியாகராஜன் சார்பில் கோர்ட் சாட்சியாகி விடுவார் என்று நினைத்தான்.

மனத்திலுள்ள ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, ''நீங்க செய்யவில்லை! நீங்க எப்படிச் செய்வீங்க! நீங்க எனக்குத் துரோகம் செய்த மறுநாள் என்ன ஆகும் என்று உங்களுக்குத் தெரியாதா...! இது யார் செய்த வேலை என்று தெரியணும். அவனை உடனே அழிக்கணும்!'' என்று கூறிவிட்டுத் தியாகராஜனை எப்படி மடக்குவது என்று யோசித்தான்.

## 50

அன்றிரவு கமலா ஒருவித உணர்ச்சியுமில்லாது சாப்பிடுவதைப் பாலா கவனித்தாள்.

வழக்கமாக அவள் சமையலைப் பற்றிக் கோளாறு சொல்லாமல் சாப்பிட மாட்டாள். பாலாவை இடக்காக



இரண்டு வாக்கியங்களிலாவது மடக்காமல் இருக்க மாட்டாள். ஆனால் இன்று அவள் சாதாரணமாக இருந்தாள்.

கமலா படுக்கப் போகுமுன் நடுக் கூடத்தில் மாட்டியிருந்த முருகன் படத்தின் முன்பு சில விநாடிகள் நின்று கொண்டிருந்தாள்.

அதைப் பார்த்து ரங்கன் புரளியாக, ''என்ன கமலா, அதிசயமாக முருகன் படத்தின் முன்னே கண் மூடி நிற்கிறாய்? இப்போது பரீட்சை சமயம்கூட இல்லையே. காரணமில்லாமல் நீ கடவுளை நினைக்க மாட்டாயே என்ன விஷயம்?'' என்று கேட்டான்.

கமலா, ரங்கன் பக்கம் திரும்பினாள். சாப்பாட்டு அறையின் மூலையில் நின்று கொண்டிருந்த பாலாவின் பார்வையைக் கமலாவின் பார்வை சந்தித்தது. கமலா தலை குனிந்தாள். ரங்கனுக்குப் பதில் சொல்லாமலே படுக்கை அறைப்புறம் சென்றுவிட்டாள்.

ரங்கன் பாலாவின் புறம் சிரித்தபடி திரும்பினான்.

''பார்த்தியா சுமதி, இன்னிக்கு கமலா பதில் பேசவே இல்லை! ஏதோ விசேஷம் இருக்கு. இல்லாட்டி நான் இந்த மாதிரி பேசினதுக்கு வட்டியும் முதலுமா அவள் பதில் பேசாமல் இருக்கமாட்டாள்'' என்று சிரித்தபடி சொன்னான்.

பாலா, ரங்கன் கூறியதை ஆமோதிக்கவும் இல்லை; மறுக்கவும் இல்லை. மௌனமாகச் சமையல் பாத்திரங்களை எடுத்து வீட்டின் பின்கட்டிலுள்ள குழாயடியில் கொண்டு போய்ப் போட்டாள்.

காய்ச்சிய பாலை எடுத்து அன்னபூரணியின் கைக் குழந்தை லட்சுமிக்குப் புகட்டினாள். பிறகு குழந்தையை அன்னபூரணியிடம் கொடுத்துவிட்டு, அவள் வழக்கமாகப் படுக்கும் அறையில் பாயை விரித்துப் படுத்துக் கொண்டாள்.

பாலாவின் மனத்தில் பல குழப்பங்கள் மோதிய போதிலும், அவள் உடலும் உள்ளமும் சோர்ந்து போயிருந்த காரணத்தால், படுத்த சில விநாடிகளில் கண் அயர்ந்து விட்டாள்.

ஆனால், தூக்கம் நீடிக்கவில்லை. ஓரளவு களைப்பு தீர்ந்ததும் அவள் விழித்துக் கொண்டாள். இருளில் கண்களைத் திறந்தபடி படுத்திருந்தாள்.

தொலைவில் எங்கோ சாலையில் செல்லும் மோட்டார் ஹாரன்களின் சத்தம்தான் கேட்டது. அவள் படுத்திருந்த இடத்திலிருந்து இருபது அடி தூரத்தில் வீட்டின் கொல்லைப்புறம் இருந்தது. கொல்லைப்புறத்திலிருந்து, யாரோ வாந்தியெடுக்கும் சத்தம் கேட்டது. அதுவும் சத்தம் வெளி வராமல் வாந்தியெடுக்க முயல்வது போல் இருந்தது.

பாலா மெல்ல எழுந்து, சத்தமில்லாமல் நடு ஹாலைப் பார்த்தாள். நடு ஹாலில் மரகதம்மாள் படுத்திருந்த இடத்தின் அருகில் இருந்த படுக்கை காலியாக இருந்தது.

பாலா குழப்பத்தோடு திரும்பி வந்து சாய்ந்து கொண்டாள்.

கொல்லைப்புறத்திலிருந்து எந்தவித சத்தமும் கேட்கவில்லை.

பிறகு ஒரு பெண் விசித்து அழும் சத்தம் கேட்டது. பாலா மறுபடியும் எழுந்தாள். கொல்லைப் புறம் சென்றாள்.

அங்கு, பாத்திரங்கள் துலக்க வேண்டியதற்காகப் போடப்பட்டிருந்தன. முற்றத்தில் குழாயடியில் துணிகளை அடித்துத் துவைக்க, ஒன்றரை அடி உயரமுள்ள பாறாங்கல் புதைக்கப்பட்டிருந்தது. அந்தத் துவைக்கும் கல்லின்மீது உட்கார்ந்தபடி கமலா அழுது கொண்டிருந்தாள்.

அவளைப் பார்க்கவே பாலாவுக்கு வேதனையாக

www.t.me/tamilbooksworld



இருந்தது. ஆனால், அவளுடன் இந்த நிலையில் பேச்சுக் கொடுக்கவும் பாலாவுக்குப் பயம்.

வந்து, தன் படுக்கையில் கண்களை மூடிக் கொண்டு படுத்துக் கொண்டாள். ஆனால், தூங்கவில்லை.

சில நிமிஷங்களில் கமலா நுழைந்தாள். பாலா பாதிக் கண்களைத் திறந்தபடி கமலாவைக் கவனித்தாள்.

கமலா, சில விநாடிகள் பாலாவைக் கவனித்தபடியே நின்றாள்.

திடீரென்று ஒரு தீர்மானத்துக்கு வந்தவள் போல் அந்த அறையின் ஒரு கோடிக்குச் சென்றாள். அங்கு மூலையில் வைக்கப்பட்டிருந்த ஒரு சிறு பெட்டியை எடுத்தாள். அதே அறையில் கொடியில் உலர்த்தியிருந்த ஒரு புடவை ரவிக்கையை எடுத்துப் பெட்டியில் அடைத்தாள்.

பிறகு மூலையில் மாட்டியிருந்த அவள் தந்தை லால்குடி சீனிவாசனின் படத்தைப் பார்த்தபடி நின்றாள். என்ன தோன்றிற்றோ தெரியவில்லை! அந்தப் படத்தின் அடியில் மண்டியிட்டு வணங்கினாள். வணங்கி எழும் போதே அவள் குரலில் ஒருவித முனகல் தெரிந்தது. அவள் கண்களில் நீர் நிறைந்து கன்னங்களில் வழிவதைப் பார்த்தாள் பாலா.

பிறகு, கமலா, நடுக் கூடத்துக்குப் போனாள். அங்கு தூங்கும் அவள் தாயைப் பார்த்தபடி நின்றாள். கண்களைத் துடைத்துக் கொண்டு மறுபடியும் அறைக்குள் நுழைந்தாள். பெட்டியை எடுத்துக் கொண்டு கொல்லைப் புறம் சென்றாள்.

பாலாவுக்கு விஷயம் விளங்கவில்லை. பெட்டியுடன் வீட்டை விட்டு ஓடுகிறவளாக இருந்தால், நடுக் கூடத்து வழியே வெளிப்புறக் கதவைத் திறந்துகொண்டு போக வேண்டும். கொல்லைப்புறம் ஏன் செல்கிறாள்?

பாலா யோசித்தாள். உலர்த்தியிருந்த புடவையை எடுத்துக் கொல்லைப்புறம் சென்றது, ஒரு வேளை

கொல்லைப்புற குளியல் அறையில் உள்ள குறுக்கு விட்டத்தில் புடவையைக் கட்டிக் கழுத்தில் சுருக்கிட்டுக் கொள்ளவோ?

பாலாவுக்குப் பயம் ஏற்பட்டது. எழுந்து கொல்லைப்புறம் நோக்கி ஓடினாள்.

அங்கு கமலா இல்லை. அடுத்தபடி பாத்ரூமுக்குள் நுழைந்தாள். அங்கும் அவள் இல்லை. பாலாவுக்கு நிம்மதி ஏற்பட்டது. அவள் எங்குதான் மாயமாய் மறைந்திருப்பாள் என்று ஆச்சரியப்பட்டாள்.

அப்போது ஓரடி சதுரமுள்ள கதவு காற்றில் அடித்துக் கொள்ளும் சத்தம் கேட்டது.

குப்பைக்காரி பாத்ரூமைச் சுத்தப்படுத்துவதற்காகத் தனியே வசலிலிருந்து அமைக்கப்பட்ட சந்தின் கதவு அது. கமலா அந்தக் கதவு வழியே சென்றிருக்கிறாள் என்பது தெளிவாயிற்று.

பாலாவும் அதே வழியில் சந்தில் நுழைந்து, தெருவுக்கு வந்தாள்.

சற்றுத் தூரத்தில் கமலா சென்று கொண்டிருப்பது தெரிந்தது.

பாலா அவளை நோக்கி ஓடினாள், ''கமலா! கமலா!'' என்று கூப்பிட்டபடி.

கமலா ஸ்தம்பித்து நின்றாள். ''நீ விழுச்சிட்டு இருந்தாயா சுமதி!''

''ஆமாம். நீ எங்கே போகிறாய்?''

''நான் எங்கே போனால் உனக்கென்ன?''

''அது தப்பு. நீ ஆத்திரப்பட்டு ஒன்றும் செய்து விடாதே!'' என்றாள் பாலா.

''ஒன்றும் செய்துவிடாதே என்றால்? நீ என்ன சொல்கிறாய்?''



''வாழ்வை முடிக்கிறது தப்பு! வீட்டுக்கு வா கமலா'' என்று மன்றாடினாள் பாலா.

கமலா சிரித்தாள். பாலா திகைத்தாள்.

''என்ன சுமதி, நானா தற்கொலை செய்துக்கிறவள், நான் ஒரு கோழை சுமதி! உன் மாதிரி நான் தப்பு செய்துவிட்டு வீட்டைவிட்டு ஓடுகிறேன். இப்போது புரிந்ததா?'' என்று கேலியும் துக்கமும் கலந்த குரலில் சொன்னாள்.

''தப்பு செய்துவிட்டுத்தான் வீட்டை விட்டு ஓட வேண்டும் என்பதில்லை கமலா. பிறரது தவறுகளைத் திருத்தவும் நடந்து போனதுக்குப் பிராயச்சித்தம் தேடவும் சில பேர் வீட்டைவிட்டு வெளியேறுவது உண்டு. என் விஷயம் எதுவானாலும் சரி, உன் கஷ்டத்தை என்னிடம் சொல்லு. நான் உனக்கு வேண்டியதைச் செய்கிறேன்!'' என்றாள்.

''நீயே ஒரு ஓடுகாலி! தங்க இடமில்லாமல், எங்கள் வீட்டுத் தரித்திரத்திலே வந்து ஒதுங்கியிருக்கிறாய். எனக்கு நீ உதவி செய்கிறாயா? என்ன திமிரடி உனக்கு!''

பாலா, 'நில் கமலா!' என்று மன்றாடினாள். ஆனால் கமலா பைத்தியம் போல் சிரித்தபடி நடந்தாள்.

பாலா பொறுமையை இழந்தாள். ஒருவித வெறி அவளைப் பற்றிக் கொண்டது. கமலாவின் முன்பு ஓடிப் போய், அவள் கன்னத்தில் 'பளார் பளார்' என்று அறைந்தாள்.

கமலா அந்தத் திடீர்த் தாக்குதலை எதிர்பார்க்கவில்லை. திகைத்துப் போனாள்.

பாலா தொடர்ந்து அவளை அடித்தாள்.

என்னை விடு சுமதி! நீ சொல்கிறபடி நான் கேட்கிறேன். என்னை அடிக்காதே சுமதி!'' என்று பிறவிக் கோழையின் குரலில் கெஞ்சினாள் அவள்.

''பெட்டியைத் தூக்கிக் கொண்டு வீட்டுக்கு வா.

உன்னை ஏமாற்றினது மணிதானே?''

கமலா பயத்தோடும் ஆச்சரியத்தோடும், ''மணியை உனக்குத் தெரியுமா? அவன்தான் உன்னையும் ஏமாற்றி வீட்டைவிட்டு ஓடும்படி செய்தானா!'' என்று அசட்டுத் தனமான ஒரு கேள்வியைக் கேட்டாள்.

பாலாவுக்குக் கோபம் வந்தது. ''முட்டாள் பெண்ணே, உன் மாதிரி நான் ஒன்றும் யாரிடமும் ஏமாறவில்லை. மணியோடு நீ பேசியதைப் பார்த்தேன். அப்போதே சொல்லியிருப்பேன். உன் திமிர் மனசு என் வார்த்தையை நம்பியிருக்காது. மணியுடைய அப்பா, அவர் யோக்கியதை எல்லாம் எனக்குத் தெரியும். நீ உண்மையிலேயே மணியை விரும்புகிறாயா?''

''ஆமாம் சுமதி. என் வாழ்வு, உயிர் எல்லாவற்றையும் அவரிடம் ஒப்படைத்து விட்டேன். அவரை மணந்தால் அது போதும்! இரண்டு மாதமாக நான் முழுகவில்லை, சுமதி. எனக்கு ஒன்றும் புரியவில்லை'' என்று அழுதாள்.

பாலாவுக்கு அவளைப் பார்க்கவே வெறுப்பாக இருந்தது.

''இப்போது அழுது என்ன பிரயோசனம்? வெள்ளிக் கிழமை ராத்திரி பீச்சிலே படகு மறைவிலே உலகத்தை மறந்து சிரி சிரி என்று சிரித்தாயே, அப்போது எப்படி இருந்தது?'' என்று தன் மனத்தில் பொங்கிய ஆத்திரம் தீரக் கேட்டாள்.

கமலா, பாலாவின் முகத்தைப் பார்த்து நடுங்கி நின்றாள்.

''மணியைப் பற்றித் தெரிந்திருக்கிறது. அவர் அப்பா வைத் தெரிந்திருக்கிறது. நான் செய்தது எல்லாமே தெரிந் திருக்கிறது. நீ என்ன யட்சிணியா? பேயா? சுமதி!'' என்று பயத்துடன் கேட்டாள்.

''நான் உன்னைக் காப்பாற்றப் போகும் உன் அன்பு சகோதரி. வா வீட்டுக்குப் போவோம்'' என்று தேறுதல்

www.t.me/tamilbooksworld



சொல்லி, கமலாவை அழைத்துக் கொண்டு மறுபடியும் வீட்டுக்கு வந்தாள்.

கமலாவுக்கு, சுமதி ஏன் தன்னுடைய விஷயத்தில் அக்கறை கொள்ள வேண்டும் என்று புரியவில்லை.

''நான்தான் சுமதி உன்னை எப்போதுமே கேவல மாகப் பேசி இருக்கிறேனே, உன்னோடு வெறுப்புடன் பழகி இருக்கிறேனே! நீ ஏன் எனக்காக இவ்வளவு சிரத்தை எடுத்துக் கொள்கிறாய்?''

''அதெல்லாம் உனக்குப் புரியாது. நான் எல்லாவற்றை யும் இப்போ சொல்ல முடியாது. வாழ்விலே நன்மையும் தீமையும் வலை மாதிரி பின்னப்பட்டிருக்கிறது. நீயும் உங்கள் வீடும் செழிப்பாக, துக்கமில்லாமல் இருப்பது எனக்கு ரொம்ப அவசியம். அதற்காகத்தான் கொட்டுகிற மழையிலே உங்கள் வீட்டுக்கு வந்தேன். நீ நினைக்கிற மாதிரி தப்பு செய்து விட்டு நான் வீட்டை விட்டு ஓடி வரவில்லை. அது மட்டும் உனக்குத் தெரிந்தால் போதும் கமலா!'' என்றாள்.

''உன் குணம் கதையிலே வருகிற பாத்திரங்களின் குணம் மாதிரி அல்லவா இருக்கு!'' என்றாள் கமலா நன்றியுடன்.

''ஒவ்வொருத்தருக்கும் நல்ல கதாபாத்திரங்கள் போல பண்பு, தயை, கடமை என்ற நல்லுணர்ச்சிகள் வந்து விட்டால், வாழ்வே ஒரு இன்பமான கதையாயிடும் கமலா'' என்று சொல்லிவிட்டு, கமலாவிடம் மணி சென்னையில் வசிக்கும் முகவரியைக் கேட்டாள்.

கமலா தயங்கினாள்.

''ஏன் தயங்குகிறாய்?'' சொல்லு கமலா. நான் அவனைப் பார்க்கவேண்டும்'' என்றாள்.

''வேண்டாம் சுமதி. மணியின் அறையில் பெண்களின் மனத்தைக் குழப்பும் சாதனங்கள் உள்ளன. அங்கேதான் நான் என் சீலத்தை இழந்தேன். நீ அங்கே போக வேண்டாம்.''

"என்னைப் பற்றிக் கவலைப்படாதே. என் மனத்தைக் குழப்பக் கூடிய ஜீவன் இந்த உலகில் ஒருவர்தான். அவர் என் சிறு வயதிலேயே என் மனத்தில் நிறைந்து விட்டார். மணியின் அற்புதமான சாதனங்கள் என்னை ஒன்றும் செய்யாது. மணி உன்னை மணக்க வேண்டும். அதற்கு நான் வழி தேட வேண்டும். உன் கழுத்தில் தாலி கட்டும் வரையில், நீ மணியைச் சந்திக்கக் கூடாது! இது பற்றி உங்களண்ணா, அம்மா யாருக்கும் தெரிய வேண்டாம்" என்று உறுதி மொழி வாங்கிக் கொண்டாள்.

மறுநாள் காலை தியாகராஜன், தன் மகன் மணியிடம் அவன் எப்படியாவது சக்ரபாணியின் மகள் பாலாவை மணக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்திக் கொண்டிருந்தார்.

மணி தயங்கினான். "அப்பா, அந்தப் பெண் பாலா அழகிதான். ஆனால் ஒரு மாதிரி. அவள் நாம் சொல்கிறபடி கேட்க மாட்டாள்" என்றான்.

தியாகராஜனுக்கு ஆத்திரம் வந்தது. "டேய் மணி! சுத்த மக்கு மாதிரிப் பேசறியேடா! சக்ரபாணியை நான் கிடுக்கி போட்டுப் பிடிச்சு வச்சிருக்கேன். எங்கோ லாயிட்ஸ் ரோடு பக்கம்தான் அவன் மகள் இருக்கிறாள். அப்பன் வீட்டுலே அவள் இல்லை. அவளைக் கண்டுபிடிச்சாகணும். ஏன் வீட்டை விட்டுப் போனாள்னு தெரிஞ்சுக்கிட்டாகணும்!" என்றார்.

"எப்பா, ஒரு வேளை அவள் வேறு யாரையாவது காதலிச்சு ஓடிப் போயிருப்பாளோ? ஒரு ஸெகண்ட் ஹாண்ட் மனைவியா எனக்குத் தேடறீங்க!" என்றான் மணி.

தியாகராஜனுக்கு ஆத்திரம் வந்தது. "கழுதை! நீ மட்டும் என்னடா, ஆயிரம் கேணியிலே ஊறிப்போன உளுத்த மட்டைதானே? அந்தப் பொண்ணு உத்தமிடா! உத்தமியின் லட்சணம் என்னைப் போன்ற தீர்ந்த

www.t.me/tamilbooksworld



அயோக்கியனுக்குத்தான் புரியும்டா. காதலனை அவள் அவ விட்டுக்கு அழைச்சுக்கிட்டால் தடுக்க யாருடா? அம்மாவுக்கோ புத்தி சரியில்லே. அப்பன்தான் பணம் பணம்னு ராப்பகலா பேயாப் பறக்கிறானே! அவள் வீட்டை விட்டுப் போனதுக்கு வேறே ஏதோ உத்தமமான காரணம் இருக்கணும். நான் சொல்றதைக் கேளுடா. அந்தப் பெண்ணைக் கண்டுபிடிச்சு, அவளைக் கெடுத்துப்புடு. அவளாகக் கெட்டுப் போகச் சம்மதிக்க மாட்டா கெட்டப்புறம், உத்தமியானதினாலே இன்னொருத்தனுக்குத் தாலி கட்டமாட்டாள். நீ சக்ரபாணி மாப்பிள்ளையாயிட்டா அப்புறம் எனக்கு நிம்மதி" என்றார்.

"எதுக்கப்பா இப்படி அவசரப் படுத்தறீங்க?" என்றான்.

"அடே மண்டு, கோயமுத்தூர் கடன்காரங்க நெருக்கறாங்க. மில்களை வித்துத்தான் கடன் அடைக்கணும். சொத்தெல்லாம் நிலம், பூமி, மில்லுன்னு இருக்கு. காசு இல்லேடா. காசா வச்சிருக்கிறவன் சக்ரபாணி. புரிஞ்சுதா? நீ அவளைக் கண்டு பிடிச்சு அவளைக் கட்டிக்கல்லே, உனக்கு என் சொத்திலே சல்லிக் காசு வராது!" என்று சொல்லி விட்டு வெளியேறினார்.

மணி சிந்தனையிலே ஆழ்ந்தான். சிந்தித்தபடியே குளித்து டிரெஸ் செய்து கொண்டான்.

வேலைக்காரப் பையன் வாங்கி வைத்திருந்த சிற்றுண்டியை அருந்தி விட்டுக் கண்ணாடி முன் வந்தான். தன்னுடைய அழகைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டான். சென்ட்டை எடுத்து ஒரு முறை தன்னுடைய ஆடைமீது 'ஸ்ப்ரே' செய்து கொண்டான்.

"பாலா...பாலா...அவளை என்னால் கவர முடியுமா!" என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

அப்போது அவன் பார்வை கண்ணாடியில் லயித்து நின்றது. அவன் முகம் ஆச்சரியத்தால் மாறியது.

பாலா அறையின் கதவைத் திறந்து நிற்பது கண்ணாடியில் பிம்பமாகத் தெரிந்தது. அவள் கதவை மூடிவிட்டு அறையில் நுழைவதைப் பார்த்தான்.

"குட்மார்னிங் மிஸ்டர் மணி!" என்று பாலா சொன்னாள்.

## 51

கண்ணாடியின் முன் நின்றிருந்த மணி விர்ரென்று திரும்பினான். வெள்ளைக்காரன் போல, "குட்மார்னிங் மிஸ் பாலா! என்ன ஆச்சரியம்! கும்பிடப் போன தெய்வம் குறுக்கே நிற்கிறது. இப்போதுதான் அப்பா உன்னை லாயிட்ஸ் ரோடிலே பார்த்ததாகச் சொன்னார். அங்கு போய் நீ தங்கும் இடம் முதலியவற்றைக் கண்டுபிடிக்கத் திட்டமிட்டிருந்தேன்!"

"அதற்குள்ளே நானே உங்களை விரும்பிப் பார்க்க வந்து விட்டேன். அப்படித்தானே?" என்று பாலா சொன்னாள்.

அவள் குரலில் உள்ள ஏளனம் அவன் காதுகளில் விழவில்லை. 'விரும்பிப் பார்க்க வந்துவிட்டேன்' என்ற வார்த்தை மட்டும் அவன் மனத்தில் பதிந்தது. அதைக் கேட்டு அவன் பெருமையால் மகிழ்ந்தான்.

பாலா என்னைப் பார்க்க விரும்பி வந்திருக்கிறாள்! என்னுடைய அழகையும் சாகசத்தையும் அவள்மீது கொட்டி அவளை மடக்கி முடிக்க வேண்டும் என்று நினைத்தான். உடனே பற்களைக் காட்டி கைகளை அகல விரித்து உடலைத் தாழ்த்தி, "ப்ளீஸ் உட்காரு" என்று சொன்னான்.

அவன் நடிப்பு பாலாவுக்குச் சிரிப்பைக் கொடுத்தாலும், அவள் சிரிக்கும்படியான நிலையில் இல்லை.

"பிரெஞ்சு நாவலில் வரும் காதலர்கள் போல பேசுகிறீர்களே!" என்றாள் அவள்.

www.t.me/tamilbooksworld



"பிரெஞ்சுக்காரர்கள் காதலின் ரகசியம் உணர்ந்தவர்கள்தான். ஆனால் எனக்குத் தெரியும் அளவு அவர்களுக்குத் தெரியாது" என்று சொல்லி விட்டுச் சிரித்தான்.

பாலா சிரித்தாள். "நீங்கள் கவர்ச்சி உள்ளவர் தான்!"

அவன் அவளை நெருங்கினான்.

பாலாவும் அவன் திட்டத்திற்கு ஒப்புக் கொண்டவள் போல் தென்பட்டாள்.

தேன் குடித்த நரிபோல் மகிழ்ச்சியோடு மணி, பாலாவைக் கூர்ந்து நோக்கினான் பாலாவின் நிர்மலமான கண்கள் மணியின் உள்ளத்தில் ஆசைப் புயலைக் கிளப்பின. தந்தங்கள் போன்ற அவள் கரங்கள் தோள் வரை மூடப்படாமல் தொங்கின. பருவத்தின் எழிலில் ஒளிவீசும் தோள்களை மணியின் கரங்கள் பற்றத் துடித்தன.

பாலா, அவனையே கவனித்தபடி இருந்தாள். அவள் முகத்தில் எந்தவித கலக்கமோ குழப்பமோ இல்லை. அவள் கையோடு எடுத்து வந்திருந்த சிறு பையை மட்டும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

மணி பாலாவின் திறந்த தோள்களைப் பற்றிக் கொள்ளக் கை நீட்டினான்.

பாலா சிரித்தபடி, "ரொம்ப அவசரப் படுகிறீர்களே! இதுவா பிரெஞ்சு நாட்டிலே நீங்கள் கற்றுக்கொண்ட காதல் பாட லட்சணம்?" என்றாள்.

மணி அசடு வழியச் சிரித்தான்.

பாலா எழுந்துபோய் அந்த அறையின் கதவை உட்புறம் தாளிட்டுவிட்டு வந்து படுக்கையில் உட்கார்ந்தாள்.

இதை மணியால் நம்ப முடியவில்லை. "மன்னித்து விடு பாலா! நானே கதவைத் தாளிட்டிருக்க வேண்டும்"

என்று சொல்லிவிட்டு அவள் அருகில் வந்து உட்கார்ந் தான்.

பாலா அவனைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தபடி உட்கார்ந்திருந்தாள்.

ஏனென்று மணிக்குப் புரியவில்லை.

மணி முகத்தில் அசடு வழியத் தொடர்ந்து பேசி னான்: ''நீ இங்கு வருவாய் என்று நான் சற்றும் எதிர் பார்க்கவில்லை. அன்று ஒரு நாள் காரில் நீ நடந்து கொண்ட விதத்திலிருந்து என்ன நினைப்பது?''

பாலா, குழந்தை போல், ''நான் எப்படி நடந்து கொண்டேன்?'' என்று கேட்டாள்.

''நீ என்னை அன்று கடித்து விட்டாய். அது கிடக்கட்டும் பாலா, எங்கப்பா எங்கோ லாயிட்ஸ் ரோடில் உன்னைப் பார்த்ததாகச் சொன்னார். உங்கப்பா, நீ ஊரில் இல்லை என்று சொல்கிறாராம். உனக்கும் அப்பா வுக்கும் மனஸ்தாபமா? ஏன் வீட்டை விட்டு நீ ஓடி வந்து விட்டாய் பாலா?'' என்று கேள்விகளை அடுக்கினான்.

''அதெல்லாம் உங்களுக்கு விளக்கமாகச் சொல்ல முடியாது. சொன்னாலும் உங்களுக்குப் புரியக் கூடிய பக்குவம் இல்லை.''

''அதென்ன அப்படி எனக்குப் பக்குவம் இல்லை என்று சொல்கிறாய்?''

''பக்குவம் இருந்தால் உங்கப்பா உங்களை எடுத்ததற் கெல்லாம் நாய், கழுதை என்று திட்டும் போது, மந்தி மாதிரி கேட்டுக் கொண்டா இருப்பீர்கள்?'' என்று அவனை நேரடியாகத் தாக்கினாள்.

மணி கலங்கினான்.

''உங்களை நாய் என்று சொல்வது போல் என்னை எங்கப்பா சொன்னால் நான் பொறுக்க மாட்டேன். ஆமாம், நாயின் சுபாவம் என்னவென்று தெரியுமா உங்களுக்கு?''

www.t.me/tamilbooksworld



மணி, பேச்சு எங்கோ செல்கிறதே என்று குழப்பத் துடன் விழித்தான்.

பாலா சிரித்தபடியே அவனிடம் சொன்னாள்: ''ஒரு வீட்டிலிருந்து எச்சில் இலையை எறிவார்கள். நாய் ஓடிப் போய் எச்சிலைத் தின்னும். உடனே அடுத்த வீட்டி லிருந்து இன்னொரு இலை விழுந்தால், சாப்பிடும் இலையைப் பாதியிலேயே புறக்கணித்து விட்டுப் புது இலைக்கு ஓடும். அம்மாதிரி உங்களுக்கு இலையை விட்டு இலைக்கு ஓடும் சுபாவம் இருந்தால், நீங்கள் நாய் என்று ஒப்புக் கொள்ளலாம். உங்கள் தந்தை சொல்வது சரி என்று கூறலாம்''என்று சொல்லி மணியை அர்த்தத்துடன் பார்த்தாள்.

''என்ன பாலா, நாலு நல்ல காதல் வார்த்தைகளாக ஜாலியாகப் பேசாமல் எச்சில் இலை, நாய் இதையெல் லாம் பற்றிப் பேசுகிறாயே?'' என்று அவன் சலித்துக் கொண்டான்.

''நான் காரணமாகத்தான் பேசுகிறேன் மணி. உங்கப்பா என் தந்தையிடம் என்னை மருமகளாகக் கேட்டிருக்கிறார். அதாவது உங்களுக்கு மனைவியாக்க நினைக்கிறார். நான் மணக்கப் போகும் கணவன் நான் விரிக்கும் இலையில்தான் சாப்பிட வேண்டும். வேறு இலையைப் பார்த்ததும் ஓடும் நாயாக இருக்கக் கூடாது என்று நினைக்கிறேன். என் அர்த்தம் உங்களுக்குப் புரிந்ததா?''

''ஒரு நாளும் நான் அப்படி இருக்க மாட்டேன் பாலா. என்னை உனக்குப் புரியாது.''

''அப்படியென்றால் கமலாவின் விஷயமென்ன? கடற் கரையில் அவளோடு விளையாடினீர்களே!'' நீங்கள் என்னை மணந்தால், அவள் நிலை என்ன? நீங்கள் ஒரு எச்சில் இலை நாய்தானே? ஒரு இலை விட்டு மறு இலைக்கு ஓடும் நாய்தானே?''

''கமலாவைப் பற்றிப் பேசவா இங்கு வந்தாய்?

அவளை நான் மணக்க என் தந்தை, ஒரு நாளும் சம்மதிக்க மாட்டாரே!"

"உங்கள் சம்மதம் என்ன? அவளைக் கிழிந்த சேலையை எறிவது போல் எறியப் போகிறீர்களா?"

மணியின் முகம் குழம்பியது. பேசாமல் இருந்தான்.

"உங்கள் நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள். கமலாவோடு நீங்கள் இன்பம் அடையவில்லையா?"

மணி சிந்தித்தபடி ஜன்னல்புறம் பார்த்தான். "உண்மை தான்! கமலாவிடம் கண்ட பக்தியும் ஆர்வமும் வேறு எந்தப் பெண்ணிடமும் காணவில்லை."

"என்னை நீங்கள் மணந்து கொண்டாலும், என்னிடமும் நீங்கள் காண முடியாது. நான் வேறு ஒருவரை விரும்புகிறேன். அது மட்டுமல்ல, உங்கப்பா என் தந்தையை வற்புறுத்தி, என்னை நீங்கள் மணக்கும்படிச் செய்யலாம். நானும் என் தந்தையின் கட்டாயத்துக்காக உங்களை மணக்கலாம். மணவறையில் நீங்கள் என்னை அணைக்க வரும்போது நான் மறுப்பேன். மீறி என்னை நீங்கள் அடைய முயன்றால், அப்புறம் நீங்கள் என்னையோ, வேறு எந்தப் பெண்ணையோ அடைய முடியாதபடி செய்து விடுவேன்.

மணி திகைப்போடு அவளைப் பார்த்தான்.

பாலா சாவதானமாகத் தன் கைப் பையிலிருந்து ஒரு கத்தியை எடுத்தாள். அந்தக் கத்தியை அங்குள்ள மரக் கட்டை மீது வீசினாள்.

மணியின் உடல் நடுங்கியது.

"எங்கப்பாவைப் போல் சில விஷயங்களில் நான் இரக்கமற்றவள். அதுமட்டுமல்ல, கமலாவைத் தவிர வேறு யாரை நீங்கள் மணந்தாலும் அதே கதிதான். பெண் என்றால் ஏமாற்றப்படுவதற்குப் பிறந்தவள் என்று நினைக்காதீர்கள். கமலாவை ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் உங்கள் வாழ்வின் முடிவு பயங்கரமாக இருக்கும்!"

www.t.me/tamilbooksworld



பாலா பேசிய விதம், அவள் சொன்னதைச் செய்து விடுவாள் என்று தோன்றியது.

"பாலா, நீ பெண் மாதிரியாப் பேசுகிறாய்? பேய் மாதிரிப் பேசுகிறாயே!"

"ஆண் என்னும் பண்பும் யோக்கியதையும் இல்லாத வனிடத்தில் பெண் பேயாக மாறினால்தான் பிழைக்க முடியும். இல்லாவிட்டால் கமலா கதிதான் எனக்கும். உங்கள் ரூமுக்குள்ளே வந்தவுடனே கையை என் மீது வைத்தீர்களே, இப்போது வைப்பீர்களா?" என்றாள், கையிலே கத்தியை நீட்டியபடி.

மணி திகைத்து நின்றான்.

பாலா சிரித்தாள். "தாளிடப்பட்டிருக்கும் கதவை ஏன் பார்க்கிறீர்கள். இந்த அறையை விட்டு நீங்கள் ஓடலாம். ஆனால் உங்களுடைய கோழை மனத்தைவிட்டு ஓட முடியுமா? கமலாவின் நிலையை விட்டு ஓட முடியுமா உங்களால்?"

கோழை என்று அழைக்கப்பட்டதும் மணியின் உள்ளத்தில் ஆத்திரம் எழுந்தது. அவன் தான் ஒரு கோழை என்பதை உணர்ந்தான். தந்தையின் முன்னால் கோழை; வாழ்க்கைப் பிரசினைகள் முன்னால்தான் ஒரு கோழை என்பது உண்மை என்பதை நன்றாக உணர்ந்தான்.

தன்னைப் பற்றிக் கேவலமான உண்மையை ஒரு மனிதன் உணரும்போது முதலில் ஏற்படுவது கோபம் தான். அந்த உண்மையை எடுத்துக் காட்டிய நபர் மீதும் கோபம் ஏற்படுவதுதான் இயற்கை.

மணியின் மனத்தில் பாலா மீது கண் தெரியாத கோபம் ஏற்பட்டது. அந்தக் கோபத்தின் காரணமாக அவன் மனத்தில் பாலாவின் கத்திக்கு இருந்த பயம் மறைந்தது. அவன் கண்மூடித்தனமாக பாலாவின் மீது பாய்ந்தான். அவள் கத்தி பிடித்திருந்த கையைப் பிடித்

தான், அதை மடக்கினான். வலியின் காரணமாகப் பாலாவின் கை, கத்தியை நழுவ விட்டது.

பாலா துவண்டு படுக்கையில் விழுந்தாள். அவள் மீது குறுக்காக மணி விழுந்தான். அவன் உடல் அவள் உடலை அழுத்தியது. பாலாவின் உடல் பூராவும் ஒருவித வெறுப்பு பரவியது. மணி வெறியோடு உளறியபடி இருந்தான்.

''என்னையா கோழை என்று சொல்கிறாய்? என்னையா நீ ஆண்மகன் இல்லையென்று சொல்கிறாய் யாரிடம் விளையாடுகிறாய்? உன்னைக் கெடுத்துவிடப் போகிறேன்! எங்கப்பா சொன்னது போல் உனைக் கெடுத்துவிடப் போறேன்! அப்புறம் நீ யாரையும் மணக்க முடியாது. என்னைத் தவிர!'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தான்.

பாலா நடுங்கினாள். தனியாக மணியைச் சந்தித்து அவனை மிரட்டி மனத்தை மாற்றலாம் என்று வந்தது எவ்வளவு பைத்தியக்காரத்தனம் என்பதை அந்த நிமிஷம் உணர்ந்தாள்.

மணியின் பார்வையும் மூச்சும் சித்தஸ்வாதீனம் இழந்த ஒரு பைத்தியக்காரனின் தோற்றத்தைக் கொடுத்தன.

இன்று நாம் புனிதத் தன்மையை இழந்து விடுவோம் என்ற பயம் பாலாவைப் பிடித்துக் கொண்டது. அவன் வயிற்றில் எட்டி உதைத்தாள். மணி தரையில் போய் விழுந்தான்.

பாலா பாய்ந்து தரையில் கிடந்த கத்தியை எடுக்கு முன்பே, மணி அதை எடுத்துக் கொண்டான். பாலாவின் மனத்தில் இருந்த மயிரளவு நம்பிக்கையும் மறைந்தது. அப்படியே நயடுக்கத்துடன் அவனைப் பார்த்தாள்.

''கத்தியின் உதவியால் நான் உன்னைக் கமலாவிடம் சேர்க்க நினைத்தேன். அதே கத்தி இப்போது என் பண்பைச் சூறையாடப் போகிறது. கத்தி கொண்டு அடைபவன் ஒரு கோழைதான். நீ ஒரு புழு, நீ ஒரு புழு. நெளியும் புழு. நீ ஒரு புழு; புழு...'' என்று கூச்சலிட்டாள்.



விறைத்த விழிகளுடன் மணி அவள் உடலைப் பற்றினான்.

''எடுத்துக்கொள் என் உடலை. உன் பசி தீர்ந்ததும் அதே கத்தியால் என் உடலைக் கிழித்து விடு. என் மூச்சை நிறுத்திவிடு'' என்று சொல்லிவிட்டு அப்படியே மயங்கிச் சாய்ந்தாள்

மணி அவளையே பார்த்தபடி நின்றான். அவன் கைகள் ஆடவில்லை. அவளை அடைய அவனுக்கு எந்த விதத் தடையும் இல்லை. அவள் சேலை சரிந்து கிடந்தது. ஆனால் அவன் மனத்திலிருந்த காமவெறி எங்கோ மறைந்து விட்டது.

எந்தப் பெண்ணிடமும் இதுவரை ஏற்படாத உணர்ச்சி அது. அந்த உணர்ச்சி அவனுக்குப் புதியது.

பாலா அரை மயக்கத்தில், அடுத்தபடி மணி என்ன செய்வானோ என்று பயந்து கிடந்தாள்.

மணி அவளை உற்று நோக்கியபடி நின்றான். தேகம் பூராவும் தன்னைப்பற்றிய வெறுப்பு பரவியது. அவன் வாழ்நாளில் இவ்வளவு தீவிரமாகத் தன்னை அவன் வெறுத்ததில்லை.

பாலாவின் சேலையால் அவள் தேகத்தை மூடிவிட்டு, தரையில் உட்கார்ந்து அழ ஆரம்பித்தான். குழந்தை அழுவதுபோல் அழுதான்.

பயத்தின் எல்லையில் கிடந்த பாலாவுக்கு உணர்வு வந்து, எழுந்து உட்கார்ந்தாள். மணி கைகளால் முகத்தை மூடிக்கொண்டு அழுவான் என்று எதிர்பார்க்கவில்லை.

மணி அழுதபடியே கூச்சலிட்டான். ''பாலா, போ வெளியே! தயவு செய்து போ வெளியே!''

பாலா புரியாமல் மெல்ல எழுந்தாள். அவனை உற்று நோக்கினாள்.

மணி மேலும் அலறினான். ''என்னை அப்படிப் பார்க்காதே பாலா! உன் கண்கள் என் முகத்தைப்



www.t.me/tamilbooksworld

பார்க்கும்போது நான் என்னையே வெறுக்கிறேன். என்னையே நான் ஒரு புழுப்போல் நினைக்கிறேன். தயவு செய்து இந்த அறையை விட்டுச் சென்று விடு'' என்று அழுகையும் துக்கமும் கலந்த குரலில் வார்த்தைகள் வெளி வந்தன.

பாலா நகராமல் ஆச்சரியத்துடன் மணியைப் பார்த்த படி நின்றாள்.

''நீங்கள் உண்மையிலேயே நல்லவர்தான். தைரிய மாகக் கமலாவை நீங்கள் கல்யாணம் செய்து கொண்டால் இன்னும் எவ்வளவு நல்லவராகி விடுவீர்கள் தெரியுமா!'' என்றாள் அறைக் கதவை நோக்கி நடந்து கொண்டே.

''கமலாவைப் பற்றிப் பேசாதே! போ வெளியே. நான் நல்லவனில்லை! இது கொஞ்ச நேரத்துக்கு இருக்கும் மயக்கம். நீ போய்விடு! நான் எங்கப்பா காலடியிலே ஊர்கிற புழு. உன்னைக் கெடுத்து உன்னைக் கட்டிக் கொள்ளச் சொல்லியிருக்கிறார் அவர். அந்தக் கட்டளையை மீறினால் எனக்குச் சொத்திலே சல்லிக் காசு வராது. அதனாலே நான் கமலாவை மணக்க முடியாது'' என்று இரைந்தான்.

கதவைத் திறந்து அதன் அருகில் நின்றபடி, பாலா மறுபடியும், ''மணி, கொஞ்ச நேரத்துக்கு உங்களுக்கு ஏற்பட்டிருக்கு. இந்த நல்ல மயக்கம் நீடித்தால் நீங்கள் எவ்வளவு பெரிய மனிதராகிவிடுவீர்கள்! கமலாவின் வாழ்வும் வளம் பெறுமே! கமலாவை நினைத்துப் பாருங்கள்'' என்றாள்.

''பாலா! நீ போகிறாயா இல்லையா? நான் கமலாவை நினைக்காமல் இல்லை. அவள் ஆசை எவ்வளவு ஆழமானது என்று தெரியாமல் இல்லை. அவளைக் கட்டிக்கொண்டால் நான் நடுத் தெருவிலே நிற்கணும். அப்பா சொத்திலோ சுகமாக வாழப் பழகிவிட்டேன். கார், நல்ல துணி, நல்ல சாப்பாடு இப்படி மாதம் ஐயாயிரம் இல்லாமல் என்னால இருக்க முடியாது. எனக்குச் சொந்தமாகச் சம்பாதிக்க



யோக்கியதை இல்லை. நான் ஒரு புழுதான். அந்தப் புழு மனிதனாக மாற முடியாது. பாலா, என் மனம் மறுபடியும் மாறுகிறதுக்குள்ளே போகாமல் ஏன் நிற்கிறாய்? போ!'' என்று கூச்சலிட்டான்.

## 52

பாலா சிரித்தபடி அறையினுள் மெல்ல அடி எடுத்து வைத்தாள். மணி ஆச்சரியப்பட்டான்.

''மாப்பிள்ளை, நான் சொல்கிறதைக் கேளுங்கள்.''

மணி திகைப்புடன், ''மாப்பிள்ளையா?'' என்றான்.

''என் வீட்டுச் சகோதரியின் புருஷனாக வேண்டிய உங்களை நான் எப்படிக் கூப்பிடுவது? எங்கள் வீட்டு மாப்பிள்ளை என்றுதானே சொல்ல வேண்டும்? உங்கள் தந்தை கொடுக்கும் பணம் போய்விடுமே என்றுதானே பயப்படுகிறீர்கள்? இப்போது சென்னையிலுள்ள எங்கப்பா நிர்வாகம் செய்யும் 'பாலா ரெஸ்டாரண்ட்'களின் மொத்த லாபம் மாதத்துக்கு எவ்வளவு வரும்?'' என்று அவள் கேட்டாள்.

''நான் அந்த செக்ஷனிலே தானே வேலை செய்கிறேன்? மாதம் முப்பதாயிரம் ரூபாய் தேறும்.''

''அவ்வளவும் கமலாவின் சீதனமாகி விட்டால், நீங்கள் அவளை மணக்கலாம் அல்லவா? அப்போது உங்களுக்கு வாழ்க்கைத் தரம் மாற வேண்டாமே?''

''உங்கப்பா ஒரு நாளும் அதைக் கமலாவுக்குக் கொடுக்க மாட்டார். நடக்காத விஷயங்களைப் பேசி என்ன பயன்?''

''எங்கப்பா என்ன செய்வார் என்பது எனக்குத் தெரியும். நீங்கள் கமலாவைத்தான் மணப்பேன் என்று உறுதி சொன்னால் போதும். சொத்தோடு கமலா வந்த பிறகு நீங்கள் அவளை மணந்தால் போதும்!''

மணி அவளைப் பார்த்தபடி நின்றான். அவன் கண்கள் நீரால் குழம்பின. "சொத்தில்லாமலே கமலாவை மணக்க வேண்டியவன்தான் நான்! ஆனால்..."

"மாப்பிள்ளை, கமலாவின் அப்பா, காணி பூமி பணமாகச் சொத்து வைக்கவில்லை. ஆனால் நிறையப் புண்ணியத்தை வைத்துவிட்டுப் போயிருக்கிறார். அதனாலே கவலைப்படாதீர்கள். அந்தப் புண்ணியம் அவளுக்குப் பணத்தையும் கொடுக்கும். உங்களுக்கு நல்ல எண்ணத்தையும் கொடுக்கும். தைரியமாகச் சொல்லுங்கள், 'எங்கப்பாவுக்குப் பயம் இல்லை. நான் கமலாவைதான் மணப்பேன்' என்று. பண விஷயத்தை நான் கவனித்துக் கொள்கிறேன்."

மணி மெல்லச் சிரித்தான்.

"நீ சொல்கிறபடி உறுதியாக இருக்கிறேன்."

பாலா மகிழ்ச்சியுடன் வெளியே செல்ல அடி எடுத்து வைத்தாள்.

மணி, "பாலா, நில்லு. கத்தியை மறந்து போய் விட்டாயே. இந்தக் கத்தி உடலைக் கிழிக்காவிட்டாலும் ஓரளவுக்கு என் மனத்தைக் கிழித்து விட்டது. எடுத்துக் கொண்டு போ" என்றான்.

பாலா சிரித்தபடியே கத்தியைப் பெற்றுக் கொண்டு வெளியேறினாள்.

அப்போது படபடப்புடன் தியாகராஜன் வீட்டுக்குள் நுழைந்தார். அவர் அவசரத்தில் போர்ட்டிகோவின் வேறு புறம் நிற்கும் பாலாவைக் கவனிக்கவில்லை.

"டேய் மணி, ஏண்டா இன்னுமா கிளம்பவில்லை? நாய், இன்னும் என்னடா ரூம்லே செய்துட்டிருக்கே?" என்றார் அவர்.

மணி அவரைப் பார்த்து நடுங்கினான். பிறகு சமாளித்துக் கொண்டு, "அப்பா, என்னை நாய்னு



கூப்பிடாதீங்க! நான் அந்தப் பாலாவைக் கட்டிக்கப் போறதில்லே!" என்றான்.

பாலா இந்த வார்த்தைகளைக் கேட்டதும் ஒருவித மகிழ்ச்சியுடன் புறப்பட்டாள்.

அவள் தந்தையைச் சந்திக்க வேண்டும் என்ற நினைவு வந்ததும் ஒருவித குழப்பம் ஏற்பட்டது.

சக்ரபாணியின் தலைமைக் காரியாலயத்தில் சிப்பந்திகள் வரும்போது ஏற்கனவே சக்ரபாணி அமர்ந்திருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டனர்.

இதைவிட ஆச்சரியமான விஷயம், சிறு கிளார்க், பியூன், இப்படி எல்லோரிடமும் சக்ரபாணி சிரித்தபடி காணப்பட்டான். திடீரென்று எப்படி இவ்வளவு கருணை பெருக்கெடுத்து ஓடியது என்று ஆச்சரியப்பட்டனர்.

சக்ரபாணியின் புன்முறுவலைப் பார்த்தவர்கள், அவன் கண்களைப் பார்த்திருந்தால், அவர்கள் அந்தக் கண்கள் இரவு பூராவும் தூங்காது கவலையோடு விழித்த கண்கள் என்பதைப் புரிந்து கொண்டிருக்கலாம். அவனுடைய இரு புருவங்களுக்கு இடையேயுள்ள சதையில் ஒரு முக்கோணம் தென்பட்டது. அவன் பல மணி நேரங்களாகப் பெரிய பிரசினைக்காகப் பல இடங்கள் அலைந்து, சிந்தித்துக் களைத்துப் போயிருந்தான் என்பதன் அடையாளம் அது.

வரி வசூல் இலாகாவுக்குப் போய் வருவதற்கென்று நியமிக்கப்பட்டிருந்த குமாஸ்தா ரமணி நீளோடு உயர்ந்து வளர்ந்தவர். பிள்ளைகுட்டி, மனைவி ஏதும் இல்லாத தனிக்கட்டை. அவர் வாழ்க்கையின் ஒரே பற்றுதல், அவர் வாழும் பகுதியில் உள்ள விநாயகர் கோவில். அவருடைய சம்பளம், போனஸ் எல்லாம் அந்தக் கோவில் பஜனை, உற்சவம் திருப்பணிகளுக்கே செலவழிக்கும் பழக்கம் உண்டு.

அந்த விநாயகர்தான் அவருடைய மூத்த பிள்ளை, இரண்டாவது பிள்ளை, மூன்றாவது பிள்ளை. குமாஸ்தா

ரமணி அந்த விநாயகரைத்தான் சொந்தப் பிள்ளை போல் நினைப்பார்.

"இன்று என் கணேசனுக்கு டெரிலின் வேட்டி வாங்கினேன். இன்றைக்கு அவனுக்கு மல் நுணி வாங்கினேன்" என்று சொல்வார்.

அந்தத் தெருமூலைக் குருக்கள், ரமணியின் பக்தியைக் கண்டு சில நாட்கள் கோவிலையே அவரிடம் விட்டுச் செல்வார். அப்போது எல்லாம் பிஸ்கட், மங்குஸ்தான் பழம், ஜிலேபி போன்ற சிறுவர் விரும்பும் பழங்கள் தின்பண்டங்களையெல்லாம் அன்போடு பிள்ளையாருக்கு நைவேத்தியம் செய்வார். கணேசனுக்கு அதிகம் படைத்து விட்டால் அஜீரணம் ஏற்படும் என்று நைவேத்தியத்தோடு இஞ்சி மருந்தும் நைவேத்தியம் செய்து விடுவார்.

சில நாட்களில் பிள்ளையாருக்கு உடல்நிலை சரியில்லாது அஜீரணம் என்ற பிரமை ரமணிக்குத் தோன்றும். சிலையின் உடல் சுடுவதுபோலத் தோன்றும். வருந்துவார். ரகசியமாக மருந்துகளைக் கொடுப்பார்.

யாருமில்லாத சமயங்களில் அந்தச் சின்னக் கோவில் கதவைத் திறந்து விநாயகரோடு ஆபீஸ் விவகாரங்களைப் பேசிக் கொண்டிருப்பார். தனக்குப் பிரமோஷன் வேண்டுமென்றோ, பணம் வேண்டுமென்றோ அவர் கேட்டது கிடையாது. தெய்வத்தை மனிதனாக்கி, அதுவும் தனக்குப் பிறவாத பிள்ளையாக்கி வழிபட்டு வந்தார்.

"கணேசா, நான் கண்ணை மூடினால் என்னைக் காட்டுக்கு எடுத்துட்டுப் போய், என் உடலுக்குக் கொள்ளி வைக்க வேண்டியது நீதாண்டாப்பா...!" என்று கண் கலங்க, நெஞ்சு தழுதழுக்கக் கூறும்போது அருகில் நிற்கும் குருக்களுக்கே அழுகை வந்துவிடும்.

சக்ரபாணியும், ஆபீசிலுள்ள மற்றவர்களும் அவரை ஒரு கிறுக்கு என்றே கூறினார்கள். சக்ரபாணி அவரைக் 'கிறுக்கு ரமணி' என்றே கூப்பிடுவான்.



ஆனாலும் அவருடைய தொழில் திறமையும், ஒழுக்கமும், உறுதியாக ரகசியங்களைக் காப்பாற்றும் பண்புமே அவரை வேலையில் வைத்திருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக, ஆபீசிலேயே சக்ரபாணியைக் கண்டு பயப்படாதவர் அவர் ஒருவர்தான்.

அந்த ரமணி அதிகாலையில் விநாயகர் முன்னால் தேங்காய் பழத்தை வைத்து நைவேத்தியம் செய்துவிட்டு, மகனோடு உரையாடுவதுபோல் உரையாடிக் கொண்டிருந்தார்.

அப்போது "ரமணி" என்ற குரல் கேட்டுத் திரும்பினார். அவருடைய எஜமான் சக்ரபாணி அருகே நிற்பதைப் பார்த்தார். ஆச்சரியமடைந்தார். 'பரம நாஸ்திகன்' அங்கு வந்தது அவருக்குப் புரியவில்லை.

சக்ரபாணி ஒரு டஜன் ஆப்பிள்களை அவரிடம் கொடுத்தான். சிரித்தபடியே, "உங்க கணேசனுக்கு வாங்கி வந்தேன்" என்றான்.

சக்ரபாணியின் குரலில் உள்ள நையாண்டி அவருக்குப் புரியவில்லை. உண்மையான மதிப்போடு முதலாளியைப் பார்த்தார்.

"சார், என் கணேசன் உங்களைக் கைவிடமாட்டான்! அவன் தடைகளை நீக்கும் விக்னராஜன். கேட்டதைக் கொடுப்பான் என் குழந்தை, இது சத்தியம்! இல்லையாடா கணேசா!" என்று விக்கிரகத்தைப் பார்த்தார்.

சக்ரபாணிக்கு விநாயகர் தன்னைத் தியாகராஜனிடமிருந்து காப்பாற்ற முடியுமென்று நம்பிக்கையில்லை. சாரங்கனோடு பணியாற்றும் ரமணியால் தன்னைக் காப்பாற்ற முடியும் என்று தெரியும். ரமணியின் பலவீனம் விநாயகர். ஆகையால் சக்ரபாணி விநாயகரைத் தோத்திரம் செய்தான்.

"என்ன ரமணி, உங்க கணேசன் காப்பாற்றும் நிலைக்கு நான் வந்துவிட்டேன் பாருங்க, சாரங்கன் கோயமுத்தூர் தியாகராஜனுடைய கைக்கூலியாகி

விட்டான். ஜோன்ஸ் துரை விஷயமாக நான் அவனுடைய ஆடிட்டர்களுக்கு எழுதின கடிதத்தை எடுத்துத் தியாக ராஜனிடம் கொடுத்திருக்கிறான். இன்னும் என்னவோ கடிதம் எல்லாம் கொடுத்திருக்கிறான். இதெல்லாம் என்னை எங்கே கொண்டு போய் விடுமோ புரியவில்லை!'' என்று சொன்னான்.

ரமணி ஒரு விநாடி சும்மா இருந்தார். பிறகு சிரித்த படி, ''முதலாளி, கவலைப் படாதீங்க. எனக்கு விஷயம் தெரியும். கடிதம் போக்குவரத்து எல்லாம் என்கிட்டே தானே இருக்கிறது. எல்லாவற்றையும் தியாகராஜன் கேட்டார். பணம் கொடுக்கிறேன்னார். நான்தான் முடியாதென்றுவிட்டேன். ஆனால் நீங்க ஜோன்ஸ் விஷயத்திலே நடந்து கொண்டது எனக்குப் பிடிக்கவில்லை. அதனாலே ஜோன்ஸின் ஆடிட்டருக்கு நீங்கள் எழுதின மட்டமான கடிதத்தை மட்டும் கொடுத்தேன். அப்புறம் பேப்பரிலே பார்த்தேன். நீங்கள் ஜோன்ஸுக்கு ஆறுலட்சம் கொடுத்து விட்டதாக. ஒரே வருத்தமாகப் போய் விட்டது அவசரப் பட்டுக் கடிதத்தைக் கொடுத்துவிட்டேன். முதலாளிதான் ஆறுலட்சம் கொடுத்துத் தன் தவறைத் திருத்திவிட்டாரே என்று வருத்தப்பட்டேன். சாரங்கனிடம் கடிதத்தைத் திருப்பிக் கேட்டேன். அவன் தியாகராஜனிடம் கொடுத்து விட்டதாகச் சொன்னான்...'' என்று அடுக்கிக் கொண்டே போனார்.

''வேறு வருமானவரி விஷயமாக ஒரு கடிதமும் சாரங்கன் வசம் இல்லையே...'' என்று ஆவலுடன் கேட்டான் சக்ரபாணி.

''ஒன்றும் இல்லை முதலாளி. தியாகராஜனும் சாரங்கனும் சேர்ந்து உங்களைத் தொங்க விடுகிறாங்க முதலாளி! அதனாலே அந்த டாக்யுமென்ட் இருக்கிற பீரோ சாவியை நான் மறந்து போய்க் கூடச் சாரங்கனிடம் கொடுக்கிறதில்லை. ஏதாவது பேப்பர் கேட்டால், முதலாளி வந்து கேட்கட்டும், இல்லை அவர் லெட்டர் எழுதிக் கேட்கட்டும், அப்புறம்தான் கொடுப்பேன் என்று சொல்லிவிட்டேன்.''



சக்ரபாணி நிம்மதியாகப் பெருமூச்சு விட்டான்.

''அப்போ, சாரங்கனிடம் இருப்பது எல்லாம் நான் ஜோன்ஸின் ஆடிட்டருக்கு எழுதிய கடிதம் ஒன்றுதான் அல்லவா?'' என்று கேட்டான்.

''எனக்குத் தெரிந்தவரையிலும் அவ்வளவுதான்'' என்றார் ரமணி.

ரமணிக்குத் திடீரென்று ஞாபகம் வந்தது. ''அது மட்டுமில்லே, கோயமுத்தூர் தியாகராஜன் கோயமுத்தூரி லிருந்து சாரங்கனுக்கு எழுதிய கடிதம் என்னிடம் இருக்கிறது. அது சாரங்கனுக்குத் தெரியாது. அவன் தான் என்னை ஒரு கிறுக்குன்னு நினைக்கிறானே! நீங்களும் தான் அப்படி நினைக்கிறீங்க...!'' என்று பேச்சோடு பேச்சாகச் சொன்னார்.

''அந்தக் கடிதத்தில் என்ன எழுதி இருக்கிறது. தெரியுமா?'' என்று ஆவலுடன் கேட்டான் சக்ரபாணி.

''அதைத்தான் சாரங்கனே என்னிடம் வாசித்துக் காட்டினாரே. அந்தக் கடிதத்தில், உங்கள் கையெழுத்தை போர்ஜரி செய்தாவது நீங்கள் மாட்டிக் கொள்ளும்படி யான ஒரு கடிதம் எழுதி தியாகராஜனிடம் கொடுத்தால், சாரங்கனுக்குக் கோயமுத்தூர் மில்லில் கால் பங்குகூட தருவதாக எழுதியிருந்தார். சாரங்கன் எனக்கும் அந்த மில்லில் அதிக சம்பளத்தில் வேலை வாங்கித் தருவதாகச் சொன்னார்'' என்று ரமணி கூறினார்.

சக்ரபாணி படபடப்புடன் ''அந்தக் கடிதம் உன்வசம் இருக்கிறதா?'' என்று கேட்டான்.

''அதை வைத்திருக்கிறேன். உங்களிடம் அதைக் கொடுத்தால் நீங்கள் ஜோன்ஸின் ஆடிட்டருக்கு எழுதிய கடிதம், சாரங்கனுடைய போர்ஜரி என்று ஆகிவிடும். அதைக் கொடுக்கவும் தயார். ஆனால் ஒரு நிபந்தனை!'' என்றார்.

''என்ன நிபந்தனை கிறுக்கு ரமணி?'' என்று தன்னையும் மறந்தபடி கேட்டான் சக்ரபாணி.

ரமணி சிரித்தார். ''இப்போ நீங்கள் இந்தக் கிறுக்கு ரமணியின் கையிலே இருக்கிறீங்க. ஞாபகம் இருக்கட்டும் சக்ரபாணி!''

கிறுக்கு ரமணி திரும்பி விநாயகர் விக்கிரகத்தைப் பார்த்தார். ஒருவிதச் சோகச் சிரிப்புடன் கேட்டார். ''நிபந்தனை இதுதான். எனக்கு என்று ஒன்றும் வேண்டாம். என் குழந்தை கணேசனுக்கு நான் கண் மூடிய பின் ஒருவழி வேண்டும். பத்து ஏக்கர் நிலம் பார்த்திருக்கிறேன். வானம் பார்த்த பூமிதான். விலை முப்பது ஆயிரம்தான். அதை இந்தக் கோவிலுக்கு எழுதி வைத்து விட்டால், சக்ரபாணி, நான் உன் வேலைக்கு முழுக்குப் போட்டுவிட்டு இருபத்து நாலு மணி நேரமும் என் கணேசன் பக்கத்திலேயே இருப்பேன். தப்பான வழியிலே தான் கேட்கிறேன். தப்புப் பண்ணாமல் இந்த உலகத்திலே அவரவர் குழந்தைக்குப் பொருள் சேர்க்க முடியாதென்று தோன்றுகிறது. உங்களுக்குப் பாலா எப்படியோ, அப்படி இந்தக் குழந்தை கணேசன் எனக்கு!'' என்று சொல்லி விட்டுப் பிள்ளையாரைப் பார்த்தார்.

''கிறுக்கு ரமணி, உங்க மனசு எனக்குப் புரிகிறது. என் விக்னம் தீர அந்தப் பத்து ஏக்கராவை நான் காணிக்கையாகத் தருகிறேன். எங்கே கடிதம்?'' என்றான்.

கிறுக்கு ரமணி சிரித்தார். ''என் விஷயமாக நான் உங்களிடம் எவ்வளவோ ஏமாந்து போயிருக்கிறேன். ஆனால், இது என் கணேசன் விஷயம். ஏமாற மாட்டேன்! எப்போது பத்து காணி கோவில் பேரிலே கிரய சாசனம் ஆகிறதோ, அப்போதான் கடிதம் உங்கள் கைக்கு வரும். பொதுவாகப் பணக்காரர்களே வாக்குச் சுத்தம் இல்லாதவர்கள். அதிலேயும் நீங்கள் எப்படி என்கிறது அடியேனுக்கு இருபது வருஷமாகத் தெரியும். மன்னிக்கணும். நான் இந்த விஷயத்திலே ஏமாறப் போவதில்லை!'' என்றார்.



''சரி வாங்க கிறுக்கு ரமணி, லெட்டர் எப்போது கொடுக்கணுமோ கொடுங்கள். கொஞ்சம் ஆபீஸ் வரையிலும் வாங்க!'' என்றான்.

அப்படி சக்ரபாணியால் தயார் செய்து அழைத்து வரப்பட்ட கிறுக்கு ரமணி, சக்ரபாணியின் ஆபீஸில் அமர்த்தப்பட்டார். இது மற்ற சிப்பந்திகளுக்கு ஆச்சரியம் தந்தது.

சாரங்கன் வழக்கம்போல் ஆபீஸில் நுழைந்ததும் சக்ரபாணி அவனைப் புன்முறுவலுடன் எதிர்கொண்டழைத்தான். சாரங்கன் தோளில் கைபோட்டு அன்போடு பேசினான்.

சாரங்கன் வயிற்றில் பகீரென்றது. சக்ரபாணி யார் தோளிலாவது கை போட்டுச் சிரித்துப் பேசினால், அது அவனுக்கு ஆபத்து என்பது சாரங்கனுக்கு அனுபவபூர்வமாகத் தெரிந்த விஷயம். சாரங்கன் கால்கள் நடுங்கின.

''என்ன சாரங்கன், நீங்க எனக்கு எவ்வளவு வேண்டியவர்! என்னாலே எவ்வளவு வசதியடைந்தவர். உங்களைத் தெரியாதா எனக்கு! தியாகராஜன் பாருங்க உங்களைப் பற்றி என்ன அவதூறு பேசறார்? நீங்கள் அவர் மில்லிலே பங்கு கேட்டீர்களாம். அதற்கு என் ஆபீஸ் ரிகார்ட் எல்லாம் எடுத்துக் கொடுக்கிறதாச் சொன்னீர்களாம். என்னை மாட்டிவிடறதாகச் சொன்னீர்களாம். அந்தப் பாவி மனுஷன் தியாகராஜன் இதை இத்தனை நாளா சொல்லாமல், என் பெண்ணை அவர் மகனுக்குக் கட்டிக் கொடுக்கிறதாக நான் ஒப்புதல் சொன்னப்புறம் சொல்றார்!''

சாரங்கன் முதலில் நடுங்கினாலும், அவ்வளவும் பொய் என்று புரிந்து கொண்டார்.

சக்ரபாணி மணி அடித்ததும், ஆபீஸ் கதவு திறந்தது. குமாஸ்தா ரமணி சிவப்பு ஃபைல் ஒன்றை எடுத்துக் கொண்டு வந்தார். அதேமாதிரி ஃபைல் ஒன்றில்தான் கடிதத்தைப் போட்டுத் தியாகராஜனிடம் கொடுத்திருந்தார் சாரங்கன்.

அதைப் பார்த்ததுமே சாரங்கனுக்குப் பயம் வந்தது. ரமணி விஷயத்தைக் கூறிவிட்டார் என்று தெரிந்தது. இருந்த போதிலும், தியாகராஜன் வேசில் ஃபைலை சக்ரபாணியிடம் கொடுக்க மாட்டார். மரியதையை மடக்கப் பட்டதுபோல் நாம் மடங்கக்கூடாது என்று தீர்மானித் தார்.

## 53

சக்ரபாணி, ''இந்த ஃபைலைப் பார்த்திருக் கிறீர்களா?'' என்று கேட்டான்

சாரங்கன் உறுதியுடன், ''இது மாதிரி நம் ஆபீஸில் ஆயிரம் ஃபைல்கள் இருக்கின்றனவே!'' என்றார்.

சக்ரபாணி இந்த உறுதியான பதிலை எதிர்பார்க்க வில்லை. ''தியாகராஜனிடம் கொடுத்த ஃபைல் இது தானே?'' என்று கேட்டான்.

''தியாகராஜனிடம் நான் எந்த ஃபைலும் கொடுக்க வில்லை?''

சக்ரபாணி தன்னுடைய டெக்னிக்கை மாற்றினான். ''தியாகராஜன் உங்களை போர்ஜரி செய்யத் தூண்டிய கடிதம் என்னிடம் இருக்கிறது. அதன்படி நீங்கள், நான் ஜோன்ஸ் துரையின் ஆடிட்டருக்கு எழுதியதாக ஒரு கடிதம் டைப் செய்து, என்னுடைய கையெழுத்தைப் ஃபோர்ஜரி செய்திருக்கிறீர்கள். இதை நான் போலீசில் சொன்னால் என்ன ஆகும் என்று நினைக்கிறீர்கள்?'' என்று கோபத்துடன் இரைந்தான்.

சாரங்கன் நடுங்கினார். காலில் விழுந்து விடுவோமா என்று நினைத்தார். ஆனால் அவர் மனத்தில் ஓர் எண்ணம் உதித்தது. உண்மையிலேயே சக்ரபாணி போலீசுக்குப் போகும் வலிமையோடு இருந்தால் அதைப் பற்றிப் பேச மாட்டான். போலீசுக்கே போயிருப்பான். இது வெறும்

www.t.me/tamilbooksworld



மிரட்டலாகத்தான் இருக்க வேண்டும் என்று புரிந்து கொண்டு சாரங்கன் மௌனமாக நின்றார்.

''என்ன சாரங்கா மௌனமாக இருக்கிறாய்? நான் போலீசுக்குப் ஃபோன் செய்யட்டுமா?''

''போன் செய்தால், உங்கள் சம்பந்தி தியாகராஜனைப் பற்றியும் போன் செய்ய வேண்டி வரும். அவருமல்லவா மாட்டிக் கொள்ள வேண்டி வரும்? எதையும் யோசனை பண்ணிச் செய்யுங்கள்.'' சக்ரபாணியின் வார்த்தை களிலேயே முன்னுக்குப் பின் முரண் இருப்பதை எடுத்துக் காட்டிவிட்டார் சாரங்கன்.

இது சக்ரபாணிக்கு முழுத் தோல்வியாகப் பட்டது. அதுவும் அவன் காலடியில் நெளிந்து கொண்டிருந்த புழு சாரங்கனிடமா தோல்வி என்று ஆத்திரம் வந்தது. சாரங்கன், நீங்கள் ஒரு மாதத்துக்கு வேலைக்கு வரவேண் டாம். விஷயம் ஒழுங்கானதும் வந்தால் போதும்'' என்று சொல்லிவிட்டு ஆபீஸ் அறைக்குள் சென்றான்.

மாலை தன் மகள் பாலாவைச் சந்திக்க வேண்டியது ஞாபகம் வந்தது. அவள் எப்படிச் சிக்கலைச் சமாளித்திருப் பாள் என்று நினைத்தான்.

எல்லாவற்றுக்கும் மேலாக அவளைப் பார்க்கப் போகி றோம் என்ற உற்சாகமே நிறைந்திருந்தது. ஆனால், அவளைப், 'பாலா' என்று அழைக்க முடியாதே! யாரோ ஒருத்திபோல் அல்லவா அவளோடு பேச வேண்டும், அதுவும் கும்மிருட்டில்!

சக்ரபாணி, ரமணியுடன் அவனுக்குச் சொந்தமான 'பாலா தியேட்டரு'க்குச் சற்றுத் தூரத்தில் காரை நிறுத்தி விட்டு, ரமணியை அனுப்பி பால்கனியின் இடது கோடி ஸீட்டுக்கு ஒரு டிக்கெட் வாங்கி வரும்படி அனுப்பினான்.

எப்போதும் பேண்ட் கோட் அல்லது பேண்ட் ஷர்ட்டுடன் உலவும் சக்ரபாணி அன்று சாதாரண வேட்டியும் சட்டையும் ஜரிகை அங்கவஸ்திரமும் அணிந் திருந்தான். காரணம் எப்போதுமே அவனை பேண்ட்

உடையில் பார்த்த சிப்பந்திகள் உடனே அடையாளம் கண்டு கொள்ளாமல் இருக்கவே.

ரமணி, டிக்கெட் வாங்கி வந்ததும் சக்ரபாணி, "தியேட்டரில் படம் ஆரம்பித்துவிட்டார்களா?" என்று கேட்டான்.

"இப்போதுதான் நியூஸ் ரீல் ஓடிக் கொண்டிருக்கிறதாம் சார்."

"நீங்கள் இங்கே காரிலேயே உட்கார்ந்திருங்கள். நான் அரை மணியிலே வந்து விடுகிறேன்" என்று ரமணியிடம் சொல்லிவிட்டு, சக்ரபாணி தன்னுடைய சொந்தத் தியேட்டரை நோக்கி நடந்தான்.

பால்கனி வகுப்பு மாடியில் இருந்தமையால், அவன் படிக்கட்டுகளில், செல்லும்போது தன்னுடைய ஜரிகை அங்கவஸ்திரத்தை எடுத்து முகம் துடைப்பது போல் முகத்தை மறைத்துக் கொண்டு சென்றான்.

பால்கனி வகுப்பு நுழைவு வழியில் டிக்கெட்டை நீட்டினான். அங்கு காத்திருந்த பணியாள், சக்ரபாணியை அழைத்துப் போய் அவன் டிக்கெட் குறிப்பிட்டிருந்த இருக்கையில் அமர்த்தினான்.

தியேட்டரின் உட்புறத்தில் ஒரே சிரிப்பும் கும்மாளமுமாக இருந்தது. திரையில் ஏதோ ஹாஸ்யக் காட்சிகள் நிகழ்ந்தபடி இருந்தன.

இன்று திரையில் ஓடுவது என்ன படம் என்று அவனுக்குத் தெரியாது. ஆனால் இன்று வசூலாகும் தொகையில் கணிசமான பகுதி நாளைக் காலை அவன் வீட்டுக்கு வந்து சேரும் என்பது மட்டும் தெரியும்.

நெற்றியைத் துடைத்தபடி பின்புறம் திரும்பிப் பார்த்தான். இரண்டு நாற்காலிகள் காலியாக இருந்தன. இன்னமும் பாலா வரவில்லை என்பதைப் புரிந்து கொண்டான்.

சக்ரபாணியின் நெஞ்சு படபடத்தது. அந்தச் சமயம்

www.t.me/tamilbooksworld



இருண்ட நடைபாதையில் பெண்ணுருவம் வருவது தெரிந்தது. முகத்தைத் திருப்பிக் கொண்டு படத்தைப் பார்ப்பதுபோல் அமர்ந்திருந்தான். ஆனால் காதுகள் பின்புறம் நோக்கிக் கவனமாக இருந்தன.

ஒரு பெண் வந்து நேர் எதிர் பின் ஸீட்டில் அமருவதை உணர்ந்தான்.

அந்தப்பெண் சில விநாடிகள் மௌனமாக இருந்தாள். பிறகு மெல்லிய குரலில், "சக்ரபாணி சார்" என்றாள்.

தன்னையும் அறியாமல் சக்ரபாணி திரும்பினான்.

"திரும்பாதீர்கள். நான் சொல்வதை மட்டும் கவனமாகக் கேளுங்கள்" என்றாள் அவள்.

நேர் எதிராகத் திசையைப் பார்த்தபடியே, "என்னம்மா விஷயம்? சொல்லும்மா!" என்றான் சக்ரபாணி.

"உங்கள் பெண் பாலா அவள் விரும்பாத மணியை மணக்கத் தேவை இல்லை. மணி என்பவனே அவன் தந்தை தியாகராஜனிடம், இந்தத் திருமணத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்படி செய்து விட்டேன். ஆனால் அதற்கு நீங்கள் செலவு செய்ய வேண்டி வரும்!"

"செலவா?" என்றான் சக்ரபாணி.

"ஆமாம். நகரெங்கும் நிறுவப்பட்டிருக்கும். 'பாலா ரெஸ்டாரண்டு'கள் தொடரை நீங்கள் கமலா என்று ஒரு பெண்ணுக்கு உரிமையாக்க வேண்டும். அதுவும் நாளைக்குக் காலையிலேயே அதன் சொத்துரிமையை மாற்றிக் கமலாவுக்குச் சாசனம் செய்ய வேண்டும்."

"என்ன 'பாலா ரெஸ்டாரண்டு'களைச் சாசனம் செய்ய வேண்டுமா?" என்று உரத்த குரலில் கோபத்தில் பேசியபடி அவன் திரும்பினான்.

"திரும்பக் கூடாது நீங்கள்" என்று அவள் உறுதியுடன் கட்டளை இட்டாள்.

சக்ரபாணி மறுபடியும் முகத்தை நேர் முகமாகத் திருப்பியபடி சற்று உஷ்ணமாகப் பேசினான்.

"இது சுத்த பைத்தியக்காரத்தனம்! 'பாலா ரெஸ்டாரண்டு' தொடரின் வருமானம் ஒரு நாளைக்கு எவ்வளவு தெரியுமா உனக்கு? அதைப் போய் முன்பின் தெரியாத யாரோ ஒரு பெண்ணுக்கு மாற்றுவதா?" என்று அவன் இரைந்தான்.

சற்று அருகில் படம் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் சக்ரபாணியின் குரல் கேட்டுப் படத்தைப் பார்ப்பதை நிறுத்தி விட்டு சக்ரபாணியின் பக்கம் திரும்பினார்கள்.

"பாருங்கள், பாருங்கள். சொத்தை இழப்பது என்றால் உங்களுக்கு எவ்வளவு கஷ்டமாய் இருக்கிறது! கூச்சல் போட்டுப் படம் பார்ப்பவர்களையும் நம் பக்கம் பார்க்கும்படி செய்துவிட்டீர்களே! 'பாலா ரெஸ்டாரண்ட்'களை இழந்து விட்டால் நீங்கள் ஏழையாகி விடுவீர்களா?"

சக்ரபாணி வந்த கோபத்தை அடக்கிக் கொண்டான். "அதில்லை. பாடு பட்டு உருவாக்கிய ஒரு ஸ்தாபனத்தை எதற்காக இழக்க வேண்டும்? அதுவும் கற்பக விருட்சம் போன்று தினமும் பணம் கொட்டும் ஒரு ஸ்தாபனத்தை இழக்க வேண்டும். அதுவும் யாரோ ஒரு கமலாவுக்காக!" என்றான்.

"அவள் யாரோ ஒரு கமலாவல்ல? நீங்கள் மீளாது கடன்பட்டிருப்பவரின் மகள்!"

'மீளாது கடன் பட்டிருப்பவர்' என்ற பதம் காதில் விழுந்ததும் சக்ரபாணியின் ஆத்திரம் எல்லை கடந்தது. சென்னையிலேயே பெரும் பணக்காரன், மற்றவர்களுக்குக் கடன் கொடுப்பவன். அவனைக் கடனாளி என்று கூறினால் அவன் அந்தராத்மா பொறுக்குமா?

"நானா கடனாளி?" என்று துள்ளி எழுந்தான். சூழ்நிலையை மறந்தான். திரும்பி ஆத்திரத்துடன் பாலாவை நோக்கினான்.

www.t.me/tamilbooksworld



அதற்குள் பாலா எழுந்து கதவை நோக்கி அடி எடுத்து வைத்து விட்டாள். அவள் முதுகுப்புறம்தான் தெரிந்தது, அதுவும் இருளிலே.

என்னுடைய ஆத்திரத்தால் பூராவும் கேளாமல் அவளை விரட்டி விட்டேனே என்ற எண்ணம் வந்ததும், சக்ரபாணி ஒரு வினாடியில் மாறி, கெஞ்ச ஆரம்பித்தான்.

"பொறு! பொறு! உட்கார். நீ சொல்வதை நான் இனிமேல் அமைதியாகக் கேட்கிறேன்."

பாலா தன் கைப்பையால் முகத்தை மூடியபடி திரும்பினாள். சக்ரபாணி தன்னுடைய ஸீட்டில் அமர்ந்தான். பாலாவும் அவளுடைய ஸீட்டில் வந்து உட்கார்ந்தாள்.

"சரி உன்னிஷ்டப்படியே நான் 'பாலா ரெஸ்டாரண்டு'கள் தொடரில் அடங்கிய நூறு பலகாரக் கடைகளைக் கமலாவின் பெயருக்கு மாற்ற வேண்டுமென்றால், என் கையெழுத்து மட்டும் போதாதே. அந்தப் பலகாரக் கடைகளின் தொடருக்குப் பூரண உரிமை உள்ளவள் சட்டப்படி என் மகள். அவள் கையெழுத்தில்லாமல் சாசனம் செய்ய முடியாது. அவள் இருக்குமிடம் தெரியாமல் இருக்கிறேனே!" என்று சட்ட பாயிண்டைக் கூறிவிட்டு, தப்பி விட்டோம் என்று மகிழ்ந்தான்.

"உங்கள் மகள் இருக்குமிடம் எனக்குத் தெரியும். அவளும் கமலாவுக்கு வேண்டியவள்தான்! உங்கள் மகள் பூரண சம்மதத்துடன் கையெழுத்திட்ட சாசன அனுமதிப் பத்திரம் இங்கு இருக்கிறது" என்று அவள் கூறினாள்.

ஒரு பத்திரம் இருளில் சக்ரபாணியின் முன் நீட்டப் பட்டது. சக்ரபாணி, பாலா இதையும் யோசித்துத் தயாராக எழுதிக் கொண்டு வந்திருப்பாள் என்று எதிர் பார்க்கவில்லை. அப்படியே ஒரு விநாடி அயர்ந்து விட்டான். அவனுக்கு ஒரு விநாடி ஒன்றுமே பேசத் தோன்றவில்லை. தொண்டையைக் கனைத்துக் கொண்டான்.

"என் கடனாளியின் மகள் என்றாயே இந்த கமலா! என் மகள், அவளுடைய தந்தை கஷ்டப்பட்டுச் சம்பாதித்த சொத்தின் ஒரு பகுதியைத் தூக்கிக் கொடுக்கத் தயாராக இருக்கும் அளவுக்கு உயர்ந்துவிட்ட இந்த கமலா யார்? அவள் தந்தையின் விலாசம் என்னவென்று தெரிந்து கொள்ளலாமா? அவள் பெயரில் இந்தச் சொத்தைச் சாசனம் செய்ய அவள் விலாசம் எனக்குத் தேவை" என்று சொல்லி இடக்காகக் கேட்டான்.

"அவள் விலாசம் தருகிறேன். ஆனால் நீங்கள் அங்கு சென்று அவர்களை மிரட்டினாலோ, மற்ற எந்தவிதமான துன்பம் இழைத்தாலோ உங்கள் மகள் பாலா அதை விரும்ப மாட்டாள். அவள் வீட்டுக்குத் திரும்பவும் மாட்டாள்."

"சரி, உன் இஷ்டப்படியே பாலா ரெஸ்டாரண்டுகளைக் கமலாவின் பெயருக்கு மாற்றினால் என் மகள் வீடு திரும்புவாளா? எப்போது வீடு திரும்புவாள் என்று சொல்ல முடியுமா?"

பாலாவுக்குத் தந்தையின் குரலில் தொனித்த பாசம் தெளிவாகத் தெரிந்தது.

"நான் சொல்வதைக் கவனித்துக் கேளுங்கள். வருகிற வெள்ளிக்கிழமை கமலாவுக்கும் கோயமுத்தூர் தியாகராஜன் மகன் மணிக்கும் கோவிந்தப்ப நாயக்கன் தெரு சத்திரத்தில் திருமணம் நடக்கும். அதை நீங்கள் வந்து நடத்தி வைக்க வேண்டும். அங்கு உங்கள் மகள் வருவாள். அவளை வீட்டுக்கு அழைத்துப் போகலாம். கல்யாணத்துக்கு முன்பே பலகாரக் கடைகளை மாற்றி கமலாவுக்குக் கொடுத்துவிட வேண்டும். ஏனென்றால் தியாகராஜன் மகன் மணி, பண்பை விடப் பணத்தை அதிகமாக மதிப்பவன். மணக்கும்போதே ஸ்ரீதனம் நிறைந்த பெண்ணைத்தான் மணக்க விரும்புகிறான்."

"இருளிலே வந்து பேரம் செய்யும் பெண்ணே, உன்னை ஒன்று கேட்கலாமா? இந்தக் கமலா யார்? இதில் உனக்கு என்ன லாபம்?" என்று கேட்டான் சக்ரபாணி.

"எனக்கு ஒருவித லாபம். ஆனால் அதைச் சொன்னால் உங்களுக்குப் புரியாது. இந்த கமலா உங்களுக்கு மிகவும் தெரிந்தவர் மகள். உங்கள் வாழ்வைத் திருப்பியவர் மகள், லால்குடி சீனிவாசன் மகள். அவளுடைய விலாசம் இந்தப் பேப்பரில் இருக்கிறது. இந்த விலாசம், பத்திரத்தில் இடம் பெறக் கொடுக்கிறேன். அவளைத் தேடிப் போய்த் தொந்தரவு செய்வதற்கு அல்ல!"

சக்ரபாணி பேயறைந்தவன்போல் இருந்தான்.

பாலா மெல்ல இருக்கையை விட்டு எழுந்தாள்.

"நில்லு பெண்ணே, நில்லு! ஒரே ஒரு வார்த்தை. இந்தச் சென்னை நகரத்துப் பேர்வழிகள் எவ்வளவோ பேரை ஏமாற்றிக் கவிழ்த்த என்னை, நீ கவிழ்த்து விட்டதாக நினைக்காதே! உன் இஷ்டப்படி பாலா ரெஸ்டாரண்டுகள் கமலாவின் பெயருக்கு மாற்றப்படும். அவளுக்கு ஒரு தீங்கும்செய்ய மாட்டேன். ஆனால் ஒன்று தெரிந்துகொள். நான் ஏமாறவில்லை! முன்பின் தெரியாத ஒரு பெண்ணின் வார்த்தைக்காக நான் கஷ்டப்பட்டு இவ்வளவு தூரம் வந்து, இவ்வளவு வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு இருப்பேனா? அன்று போனிலேயே தெரிந்து கொண்டேன் என் உயிரைக் காப்பாற்றியது, நான் என் உயிருக்கும் மேலாக நினைக்கும் ஒரு ஜீவன், என் மகள் தான் என்று! அந்த மகளுக்காக இதைச் செய்கிறேன். அவள் சீக்கிரம் வீடு திரும்ப வேண்டும் என்று செய்கிறேன். பாசத்துக்காகச் செய்வதைப் பயந்து செய்கிறேன் என்று நினைக்காதே பாலா!" என்று கூறிவிட்டு, அவள் பக்கம் திரும்பாமலே கதவை நோக்கி நகர்ந்தான் சக்ரபாணி.

பாலா அப்படியே திகைத்து நின்றாள். அவள் தந்தையின் குணத்தின் புரியாத ஒரு பகுதி அவளுக்கு இன்று புரிந்தது.

சக்ரபாணி, வெறி பிடித்தவன் போல் தெருவில் நிறுத்தியிருக்கும் தன் காரை நோக்கிச் சென்றான்.

ரமணி எழுந்து கார் கதவைத் திறந்தான். சக்ரபாணி பேசாமலேயே காரில் ஏறிக் கொண்டான். காரை ஸ்டார்ட் செய்தான்.

வேகமாக அங்கும் இங்கும் ஓட்டிச் சென்றான். அவன் பார்வையில் மின்சாரப் பல்புகள் பொருத்தி அலங்காரம் செய்யப்பட்டிருந்த 'பாலா ரெஸ்டாரண்ட்' பட்டது.

காரை நிறுத்தி, ''ரமணி, இறங்குங்கள்'' என்றான்.

ரமணி ஒன்றும் புரியாமல் இறங்கினார்.

சக்ரபாணி ரெஸ்டாரண்டில் நுழைந்தான். பலகாரக் கடை மானேஜர் ஓடிவந்தார். சக்ரபாணி இதுநாள் வரை கடையில் நுழைந்ததே இல்லை.

''சார், வாருங்கள், சார். வாருங்கள்'' என்று அழைத்துச் சென்று தனி அறையில் உட்கார்த்தி வைத்தார்.

சக்ரபாணியின் மனம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தது.

மானேஜர், ''என்ன சார் கொண்டு வர?'' என்று கேட்டார்.

''எல்லாம் கொண்டு வா!'' என்று கூச்சலிட்டார்.

''எல்லாம் என்றால் என்ன சார்?'' என்று மானேஜர் இருந்தார்.

''ஆமாம். எல்லாம் என்றால் எல்லாம்தான்! இத்தனை வருடம் என் கடைப் பலகாரங்களை நான் சாப்பிட்டதில்லை. நாளைக்குக் கடை மாறப் போகிறது. இப்போதாவது சாப்பிட வேண்டாமா? கொண்டு வா! ரமணிக்கும் கொண்டு வா. நீங்களும் சாப்பிடுங்கள்'' என்றான் அவன்.

மணி, பாலாவை மணக்கும் விஷயத்தில் உறுதியாக மறுக்கவே, தியாகராஜனுக்கு ஆத்திரமாக வந்தது.

தன்னுடைய ஆத்திரத்தை மறக்க மதுவை அருந்தினார்.

www.tamilbooksworld



மது அருந்தியதும் அவருக்கு விபரீதமான யோசனைகள் தோன்றின. இரவு பன்னிரண்டு மணி சுமாருக்குச் சக்ரபாணியை நேரில் சந்தித்து, மிரட்டுவது என்ற விசித்திரமான அபிப்பிராயத்துக்கு வந்தார்.

ஒரு டாக்ஸியில் ஏறிக் கொண்டு அவர் சக்ரபாணியின் வீட்டுக்கு வந்தார். வேலைக்காரர்கள் தடுத்தும் கேளாமல் கண்டபடி கூச்சலிட்டபடி சக்ரபாணியின் அறைக்குள் நுழைந்தார்.

வாய் சென்றபடி சக்ரபாணியைத் திட்டினார். ''என் மகனைக் கலைத்து விட்டாயேடா. நீ ஒரு நாய்! அவன் இப்போது அப்பனுக்குத் துரோகியாகி விட்டான். உன் மகளை அனுப்பி அவன் புத்தியைக் குழப்பிட்டே. உன் மகள் என்னடா மானங் கெட்டவளா?''

சக்ரபாணிக்கு ஆத்திரம் தாங்கவில்லை. அவரைத் தூக்கித் தெருவில் எறியும்படி வேலைக்காரர்களுக்கு உத்தரவிட்டான்.

குடிபோதையில் தியாகராஜன் டாக்ஸியில் ஏற்றப் பட்டார்.

மறுநாள் போதை தெளிந்து எழுந்தார் தியாகராஜன்.

அழுதபடி அப்படியே படுக்கையில் சாய்ந்தார்.

விழித்து எழுந்ததும் எதிரே உணவு வைக்கப்பட்டிருந்தது, மணி உட்கார்ந்திருந்தான்.

அவன் தந்தைக்கு முகம் கழுவிவிட்டு, அவரை உணவு உண்ணச் செய்தான்.

தியாகராஜனுக்கு மணியின் பரிவு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

கடிகாரத்தைப் பார்த்தார். நடுப்பகல் மணி இரண்டு ஆகிவிட்டதை உணர்ந்தார்.

''மணி, பாலாவைக் கட்டிக்கொள்கிற விஷயமாக என்னடா சொல்கிறாய்?'' என்றார் தியாகராஜன்.

மணி பேசாமல் தரையைப் பார்த்தபடி இருந்தான்.

அப்போது சக்ரபாணி அறையில் நுழைந்தான்.

"தியாகராஜன், கவலைப்படாதீர்கள். மணிக்குக் கல்யாணம் நடக்கப் போகிறது—பாலாவோடு அல்ல கமலாவோடு!"

"அது யாருடா கமலா என்கிற பிச்சைக்காரி? உன் சரக்கா மணி?"

"அப்பா, அவள் நல்ல பெண். அவளைக் கல்யாணம் செய்து கொண்டால்தான் நான் உருப்படுவேன்."

"உருப்படுகிறவன் லட்சணத்தைப் பாரு!"

"தியாகராஜன், கமலா பிச்சைக்காரியல்ல. 'பாலா ரெஸ்டாரண்ட்' பூராவும் அவளைச் சேர்ந்தது. பாருங்கள் சாசனப் பத்திரத்தின் நகலை!" என்று பத்திரத்தின் நகலைக் காட்டினான்.

தியாகராஜன், சக்ரபாணியை ஏற இறங்கப் பார்த்தார். அவர் மட்டமான மனத்தில் ஒரே ஒரு யோசனை தான் தோன்றியது. "மணி அந்தப் பொண்ணு கமலா வயிறும் பிள்ளையுமாய் இருக்கிறாளோ?" என்றார்.

"ஆமாம். அந்த அவமானத்தைத் தடுக்கத்தான் அவசரமாக, வருகிற வெள்ளிக்கிழமை கல்யாணம்!" என்று, விஷயத்தை விளக்கினான் சக்ரபாணி.

தியாகராஜன் வெறுப்புடன் மணியைப் பார்த்து, "மணி நீ சோதாப் பயல் என்று தெரியும். இவ்வளவு வெட்கம் கெட்டவன் என்று தெரியாதுடா. சக்ரபாணி ஒரு பெண்ணைக் கெடுத்து அவளை உன் தலையிலே கட்டுகிறான் அதைக் கட்டிக்கப் போகிறாயா?"

"அப்பா! அபத்தமாய்ப் பேசாதீர்கள்!" என்றான்.

"எதடா அபத்தம்! சக்ரபாணி ஓரணா ஒருத்தருக்குக் கொடுக்காதவன், ஒரு பெண்ணுக்குப் பலகாரக்கடை பூராவும் எழுதி வைக்கிறான் என்றால் சரியான நெருக்கடி

www.t.me/tamilbooksworld



யில்லாமல் செய்வானாடா? சக்ரபாணி தன் குழந்தைக்கு உன்னைத் தகப்பனாக்குகிறாண்டா!"

சக்ரபாணி, தியாகராஜனை அடிக்கக் கையை ஓங்கினான். மணி பாய்ந்து சக்ரபாணியின் கையைத் தடுத்தான்.

## 54

சக்ரபாணி, தியாகராஜனை வெறுப்புடன் பார்த்தான்.

"தகப்பனுக்கும் மகளுக்கும் இருக்கும் புனித உறவு தெரிந்தால், நீ இப்படிப் பேசமாட்டாய்! நீ உண்மையிலேயே ஒரு நாய்! இனிமேல் நாய்க்குப் புரியும் மொழியிலே தான் பேசவேண்டும்! சவுக்கடி மொழியில்தான் பேச வேண்டும்! என்ன சொல்கிறாய்? மணி கமலாவை மணப்பதற்கு ஒப்புக் கொண்டால், உனக்கு லாபம், மணிக்கு லாபம் என்ன சொல்கிறாய்?" என்று கேட்டான்.

"டேய் சக்ரபாணி! நான் மறுத்தா, நீ என்னடா செய்வே?"

சக்ரபாணி சிரித்தான்.

"நான் எதையும் செய்வேன்னு சொல்லி மிரட்டிட்டு அப்புறம் செய்றதில்லே! நான் ஏற்கனவே செய்தாச்சு. பாரு!" என்று ஒரு ஃபைலை தியாகராஜன் முன்பு வீசினான்.

அதில் கோயமுத்தூர் பங்கார நாயுடுவுக்குப் பத்து லட்ச ரூபாய்க்கு அவர் வீடும், மில்லும் ஈடு கட்டிய அடமானப் பத்திரத்தின் நகல் இருந்தது.

தியாகராஜன் பரம ரகசியம் என்று நினைத்த பத்திரத்தின் நகல், பங்காரு நாயுடுவின் கையிலிருந்து இப்போது சக்ரபாணியின் கையிலே வந்து விட்டது என்றதும் தியாகராஜன் திகைப்புடன் பார்த்தார்.

''இந்நேரம் மில்லுக்குச் சீல் வைச்சிருப்பாங்க. வீட்டை அட்டாச் பண்ணியிருப்பான் அமீனா. நீங்க கோயமுத்தூர் ஸ்டேஷனை விட்டு இறங்கினா, உங்க கையிலே இந்த விஷயங்களை விளம்பரப் படுத்தும் தினசரிப் பத்திரிகை தான் கிடைக்கும்! திவால் தியாகராஜன்னு உங்களைக் கூப்பிடுவாங்க. கல்யாண விஷயத்திலே வம்பு செய்தா, இந்தச் செய்தி பத்திரிகைக்குப் போகும். இல்லே ஒழுங்கா நடந்துக்கிட்டா இந்த விஷயம் வக்கீல் கோர்ட்டோடு அமுங்கிடும். நாளைக்கே அட்டாச்மென்டை வாபஸ் வாங்கிடறேன். மில்லைத் திறந்துடறேன். என்ன சொல் றீங்க?'' என்று சக்ரபாணி கண்களை உருட்டிக் கேட்டதும் தியாகராஜன் பேயறைந்தவர்போல் ஆனார்.

''சரி சரி, உன் இஷ்டப்படியே செய்கிறேன் சக்ரபாணி! நீ கில்லாடிதான்! உங்கிட்டே போராட முடியுமா? என் மகளை எங்கிட்டேருந்து பிரிச்சிட்டியே!'' என்றார்.

''தியாகராஜன், கல்யாணத்தை நீங்க இருந்து நடத்தி வைக்கணும். அதுதான் என் மகள் ஆசை, விருப்பம்! பாருங்க, மணி மணக்கப்போகும் கமலாவின் பெயருக்கு தான் 'பாலா ரெஸ்டாரண்ட்டு'களை மாற்றி விட்டதன் விளம்பரம். மணி ஏழையை மணக்கலே!'' என்றான்.

தியாகராஜன் ஒன்றும் பேசாது தரையைப் பார்த்தபடி இருந்தார்.

குருமூர்த்தி கடைத் தெருவில் நடந்து வரும்போது, பொழுது போக்குக்காக ஒரு தினசரி வாங்கினான்.

அதில் 'நன்கொடை' என்ற தலைப்பில் ஒரு செய்தியைப் பார்த்து அதிர்ச்சி அடைத்து விட்டான்.

பணம் கொட்டும் பாலா ரெஸ்டாரண்டுகள், கமலா என்ற பெண்ணின் பெயருக்கு மாற்றப்பட்டுவிட்டதையும், கமலாவின் வாழ்நாள் பூராவும் அந்தப் பலகாரக் கடைகளின் வருமானம் கமலாவைச் சேர்ந்தது என்றும் போடப் பட்டிருந்தது.



யாரோ ஒரு கமலா எப்படியோ சக்ரபாணியின் இரக்க மற்ற மனத்தில் இடம் பிடித்துவிட்டாள் என்றுதான் நினைத்தான். ஆனால் செய்திக் குறிப்பின் இறுதியில் பொறிக்கப்பட்டிருந்த வாக்கியம் அவனுக்கு மிகப்பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது.

''கமலா என்ற அந்தப் பெண்ணின் தந்தை லால்குடி சீனிவாசன் என்று கூறப்படும் நபர், ஒரு காலத்தில் சக்ரபாணிக்குப் பெரிய உதவியாக இருந்தார் என்பது தெரிகிறது. இப்போது அந்த சீனிவாசன் உயிரோடு இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது'' என்று எழுதி யிருந்தது.

குருமூர்த்தி அவன் சகோதரி கமலாதான் திடீரென்று பணக்காரியாகிவிட்டாள் என்பதை உணர்ந்து கொண்டான். அவனுக்குத் தலைகால் புரியவில்லை.

அவன் போய்ச் சிறு உதவி கேட்டபோது அறையை விட்டு அவனை விரட்டிய சக்ரபாணி திடீரென்று ஏன் இப்படி உதவி செய்கிறான்? கமலாவுக்கும் அவனுக்கும் என்ன தொடர்பு? ஒரு மனிதன் ஒரு பெண்ணுக்குத் திடீரென்று இவ்வளவு பெரிய செல்வத்தைக் கொடுப்பது என்றால், அதற்குக் கீழ்த்தரமான காரணங்களும் இருக்கலாம் அல்லவா!''

குருமூர்த்தியின் மனத்தில் எதிர்காலத்தைப் பற்றிய சந்தோஷம் ஒரு விநாடி இருந்தாலும், காரணமற்றுச் செல்வம் வரும்போது ஏற்படும் குழப்பமும் ஆத்திரமும் இருந்தன.

பேப்பரைக் கையில் எடுத்தபடி வீடு நோக்கிச் சென்றான்.

குருமூர்த்தி அடைந்த குழப்பத்தைவிட அதிகக் குழப்பம் அடைந்தார் சம்பந்தய்யா. அவருக்கு ஒருவிதத் திருப்தி ஏற்பட்டாலும், ''கொடுக்காதவன் கொடுத்தால்

www.t.me/tamilbooksworld

அதில் ஏதோ ஒரு பொடி இருக்க வேண்டும்'' என்ற ஐயப்பாடு அவருக்கு ஏற்பட்டது.

கமலாவுக்கு அவளைத் தேடிச் செல்வம் வந்த விவரம் எதுவுமே தெரியாது. அவள் மனத்தில் இருந்த கலவரம் எல்லாம் மணியைப் பற்றி. பாலா அவளிடம் கவலை வேண்டாம், மணி உன்னை மணந்து கொள்வான் என்று கூறியிருந்தாலும் அவளுக்குப் பயம் இருந்தது.

கமலாவுக்குப் பாலா சக்ரபாணியின் மகள் என்று தெரியாதாகையால் அவளைச் 'சுமதி' என்றே நினைத்திருந்தாள். அவளைப் பற்றிய விஷயம் தெரிந்தும், அதை வீட்டில் யாரிடமும் சொல்லாமல் மூடிவைத்த பண்பும், அவளை மணிக்கு எப்படியாவது மணம் முடித்து வைப்பேன் என்று கொடுத்த உறுதியும், கமலாவை ஆச்சரியத்தில் ஆழ்த்தின. சுமதியிடம் மதிப்பும் அன்பும் ஏற்பட்டன.

சுமதி வெளியே சென்றிருந்தபோது, வீட்டின் கொல்லைப்புறம் வந்தாள். அங்கு சுமதியின் ஏழ்மையான புடைவையும் ரவிக்கையும் ஒரு பக்கெட்டில் நீரில் மிதந்து கொண்டிருந்தன. கடைத்தெருவிலிருந்து திரும்பியபின் துவைத்துப் பிழிவதற்காக வைத்துவிட்டுப் போயிருந்தாள் சுமதி.

கமலாவுக்குப் பக்கெட்டிலுள்ள துணிகளைப் பார்த்ததும் இரக்கம் ஏற்பட்டது. 'பாவம்! ஒரு நாளைக்கு எவ்வளவு வேலைதான் செய்வாள்! அவள் சேலையை எடுத்துத் துவைத்தால் என்ன?' என்று தோன்றியது.

சேலையை எடுத்துத் துவைத்துப் பிழிந்து அங்குள்ள கொடியில் உலர்த்தினாள்.

கமலா உலர்த்திக் கொண்டிருக்கும்போதே, பாலா அங்கு வந்துவிட்டாள்.

''என்ன கமலா, என் சேலை நீ...'' என்றாள்.

கமலா, பாலாவை அன்போடு பார்த்தாள்.

www.t.me/tamilbooksworld



''சுமதி அக்கா! இதை நான் செய்யக்கூடாதா? என் வாழ்க்கையில் உள்ள அழுக்கும் களங்கமும் நீங்க, நீ இவ்வளவு பாடுபடுகிறாயே! உனக்கு நான் இந்தச் சிறு உதவிகூடச் செய்யக் கூடாதா?'' என்று கேட்டாள்.

பாலாவின் உள்ளம் நெகிழ்ந்தது.

''கமலா, பெரிய பங்களாவிலே வாழணும். கார்லே போகணும், நல்ல புடவை கட்டணும் என்பதுதானே உன் ஆசை?'' என்று கேட்டாள்.

''அந்த ஆசையெல்லாம் முந்தி இருந்தது சுமதி. இப்போ கண்ணியமான புருஷனோடு ஒரு வாய் கஞ்சி குடிச்சாப் போதும்னு ஆயிட்டது!'' என்றாள்.

''கவலைப்படாதே கமலா! விரும்பிய புருஷனோடவும் வாழப்போறே. நல்ல பங்களா, செல்வமான வாழ்வோடும் இருக்கப் போறே!'' என்றாள்.

பாலா இவ்வாறு பேசிக் கொண்டிருக்கும்போதே பேரிடி போன்ற குரலில் குருமூர்த்தி, ''கமலா! கமலா!'' என்று கதறிய வண்ணம் வீட்டில் நுழைந்தான்.

கமலா பதறியபடி நடு ஹாலுக்கு ஓடினாள்.

மரகதம்மாள் தன் கணவன் படத்தின் முன்பு நின்று கொண்டிருந்தவள், ஹாலுக்கு வந்தாள்.

குருமூர்த்தி கமலாவைப் பார்த்ததும், ''இது எத்தனை நாளா நடக்குது? உனக்கு எவ்வளவு துணிச்சல்'' என்று விவரம் ஒன்றும் கூறாமல் இரைந்தான்.

கமலாவுக்கு ஒன்றும் விளங்கவில்லை. மணியோடு அவள் கொண்டிருந்த தொடர்பு அண்ணனுக்குத் தெரிந்து விட்டதோ என்று பயந்தாள்.

''குரு, என்னடா சொல்றே? புரியும்படி சொல்லுடா!'' என்று மரகதம்மாள் கேட்டாள்.

''செல்வமா இருந்து ஏழையாயிட்டோம்மா. ஆனால் பணத்துக்காக நம்ப குடும்பத்துப் பொண்ணு இப்படிச்

செய்வான்னு நினைக்கலே. உன் செல்லப் பெண் என்ன பண்ணத் துணிஞ்சுட்டாம்மா! வாயைக்கட்டி, வயித்தைக் கட்டி ஒரு ராணி மாதிரி வளர்த்துப் பள்ளிக்கு அனுப்பினியே, பாரு! என்ன ஆச்சுன்னு பாரு!'' என்று கூச்சலிட்டுக் கொண்டே போனான் குருமூர்த்தி.

கமலாவுக்குச் சந்தேகம் நீங்கியது.

''அண்ணா! நீ சொல்றபடி நான் பணத்துக்காகச் செய்யலே அண்ணா. மணியை என் உள்ளத்தாலே நேசித்தேன். அவர் பணக்காரன் என்கிறதுக்காக அல்ல! எனக்கு அவரைப் பிடிச்சுப் போச்சு!'' என்று சொன்னாள்.

'மணி' என்ற புதுப் பெயரைக் கேட்டதும் குருமூர்த்தியின் அதிர்ச்சி அதிகமாயிற்று.

''மணின்னு இன்னொருத்தன் வேறயா? எவ்வளவு பேர் சிநேகம் உனக்கு. சொல்லு!'' என்று சொன்னான்.

அதே சமயத்தில் வெளிப்புறக் கதவு திறந்தது. மணியே உள்ளே நுழைந்தான்.

குருமூர்த்தி முன்பின் தெரியாத இளைஞன் நாகரீக உடையில் நிற்பதைக் கண்டு திகைப்புற்றான்.

''நீ யாருப்பா?''

மணி முதலில் தயங்கினான். மணியின் தயக்கத்தையும் கமலாவின் குழப்பத்தையும் கதவின் மறைவில் நின்றபடி பார்த்து பாலா தவித்தாள்.

பாலாவுக்கு வெளியே வந்து விளக்கம் தர பயம். 'தான் யார்' என்று சொல்லியாக வேண்டும்.

இந்த இக்கட்டான நிலையில் மணியே பேச ஆரம்பித்தான். ''நீங்கள்தான் கமலாவின் அண்ணனா?'' என்று அசடு வழிய மணி கேட்டான்.

''ஆமாம். நீ யாரு?'' என்று குருமூர்த்தி உறுமினான்.

''நான்தான் மணி; இதுநாள் வரை உங்களைச் சந்திக்காததற்கு மன்னிக்கவும். கமலாவை நான் மணக்கப்



போகிறவன். கல்யாண சத்திரம், மற்ற கல்யாண ஏற்பாடுகள் எல்லாம் முடிந்து விட்டது.''

மரகதம்மாள், ''என்னப்பா சொல்றே? நீ யாருன்னே தெரியாதே! கல்யாண ஏற்பாடா?'' என்றாள்.

''பாலா ஒன்றுமே சொல்லவில்லையா? அவள் முயற்சியால்தானே எல்லாமே நடக்கிறது. பாலாதான அவள் அப்பா சக்ரபாணியின் மனசை மாற்றி, 'பாலா ரெஸ்டாரண்டு'கள் பூராவையுமே கமலாவின் பேரில் எழுதச் சொன்னாள். அவள் தன்னலமற்ற முயற்சியால் தானே என் மனத்தில் தைரியம் பிறந்தது. என் தந்தையை எதிர்த்து நான் இந்தத் திருமணத்துக்கு ஒப்புக் கொண்டேன்'' என்று குருமூர்த்திக்கும் மரகதம்மாளுக்கும் புரியாத உண்மைகளை விளக்கிக் கொண்டே போனான்.

மணி 'பாலா' என்று குறிப்பிட்டவுடன் கமலாவுக்கும் ஒன்றும் புரியவில்லை

மரகதம்மாள், குருமூர்த்தியைப் பார்த்தாள். குருமூர்த்தி, மரகதம்மாளைப் பார்த்தான்.

யாருமே மணியை 'உட்கார்' என்றுகூடச் சொல்லவில்லை. இவ்விதமான வரவேற்பை அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

மணி குழப்பத்துடன், ''நான் வந்தது இந்த வீட்டிலே யாருக்குமே பிடிக்கவில்லை போலிருக்கு'' என்று இழுத்தாற்போல் சொன்னான்.

கமலாவுக்கு இந்த வார்த்தைகள் தைத்தன.

''அண்ணாவுக்கும் அம்மாவுக்கும் ஒரு விஷயமும் தெரியாது. நீங்க போகாதீங்க. உட்காருங்க!'' என்று சொல்லிவிட்டு விர்ரென்று போய் நாற்காலியை இழுத்துப் போட்டாள்.

அப்போது கமலா மணியைப் பார்த்த பார்வையில் எவ்வளவோ அர்த்தம் தொனித்தது. என் உள்ளத்தை ஆள்பவர்; என் வயிற்றில் வளரும் சிசுவுக்கு தகப்பன்

www.t.me/tamilbooksworld

நீங்கள் என்பதைச் சொல்லாமல் சொல்லியது கமலாவின் பார்வை.

கமலா ஓடிப்போய் வெட்கமில்லாமல் மணிக்கு நாற்காலி இழுத்துப் போடுவது குருமூர்த்தியின் ஆத்திரத்தைக் கிளப்பியது.

''மணி, நீயாவது விஷயத்தைப் புரியும்படியாகச் சொல்லு. இந்தப் பேப்பர்லே போட்டிருக்கு, சக்ரபாணி அவருடைய ஹோட்டல்களின் உரிமையைக் கமலாவுக்குக் கொடுத்து விட்டார் என்று. அதற்கு என்ன அர்த்தம்? நீ யார்? உங்கப்பன் பேரு என்ன?''

''சார், மாப்பிள்ளை, வீட்டுக்கு முதல் முறை வந்திருக்கும்போது அவரைக் கேட்கும் முதல் கேள்வி நல்லாருக்கு. நான் செய்த தவறுக்கு இதை தண்டனையாக எடுத்திட்டு, பொறுத்துப் போறேன். எங்கப்பா தியாகராஜன், கோயமுத்தூரிலே மில் முதலாளி. நான் அவருக்கு ஒகே மகன், கமலாவைக் காலேஜிலே சந்திச்சுக் காதலிச்சேன்... அத்துமீறியும் பழகிட்டேன்... கமலா தாயாயிட்டா!''

மரகதம்மாள் தரையில் சாய்ந்து விட்டாள்.

''இந்த நிலையிலே எங்கப்பா எனக்குச் சக்ரபாணியின் ஒரே பெண் பாலாவைப் பார்த்தார். சொத்தாசையோடு, எங்கப்பா ஒருவித முரடன். நானும் பயந்து ஒப்புக்கிட்டேன். அப்போ சக்ரபாணியின் பெண் பாலா கமலாவுக்கு சகோதரி மாதிரி சிநேகம் போலிருக்கு; கமலாவை மணந்து கொள்ளும்படி எங்கிட்டே சொன்னாள். சொத்தில்லாத பெண்ணை அப்பா ஒப்புக்க மாட்டாரேன்னு சொன்னேன். 'பாலா ரெஸ்டாரண்டு'கள் பூராவையும் எங்கப்பாவிடம் சொல்லி கமலா பேருக்கு மாத்தச் சொல்றேன்னா. அப்படியே அவரும் மாத்திட்டார். அதான் பேப்பர்லே வந்திருக்கு.



கல்யாணச் செலவையும் ஒத்துக்கிட்டார். வர்ற வெள்ளிக்கிழமை கல்யாணம்...!'' என்று கூறி முடித்தான்.

கமலாவுக்குக் குழப்பம் ஏற்பட்டது. அவள் வாய் ''பாலா... பாலா...'' என்ற பெயரை முணுமுணுத்தது. கமலா சிந்தனையில் ஆழ்ந்தாள்.

## 55

''சக்ரபாணியின் பெண் உனக்குச் சிநேகமா? இதைச் சொல்லவே இல்லையே கமலா'' என்று கேட்டான் குருமூர்த்தி.

கமலா சிரிக்க ஆரம்பித்தாள், விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தாள்.

''என்னைவிட அம்மாவுக்கும், அண்ணிக்கும்தான் அவள் சிநேகம் அண்ணா!'' என்று கூறிவிட்டு, ''பாலா! பாலா! ஏன் மறைஞ்சிருக்கே வாம்மா! நான் தப்பு செய்திட்டு உலகத்தைவிட்டு ஒளியப் பார்த்தேன். நீ நல்லது செய்துட்டு மறைஞ்சுக்கிறியே பாலா'' என்று பாலா நின்ற அறையை நோக்கிக் கூப்பிட்டாள்.

பாலா சாதாரண நூல் புடவை அணிந்து மெள்ள வெளியே வந்தாள்.

குருமூர்த்தி, ''சுமதி! சுமதி! நீயா!...'' என்று பேச்செடுத்தவன் பேச்சை முடிக்காமலே நின்றான்.

''அதுதான் பாலா. சக்ரபாணியின் செல்வ மகள். கமலாவின் வாழ்வை மாறச் செய்தவள். எனக்கும் தைரியம் தந்து என்னை மனிதனாக்கியவள்!'' என்றான் மணி.

''பாலா, சக்ரபாணியின் மகளான நீ, எங்க வீட்டுக்கு

www.t.me/tamilbooksworld

வேலைக்காரி போல, அனாதை போல ஏம்மா வந்தே?'' என்று மரகதம்மாள் கேட்டாள்.

''ஏன் வந்தேன்னு கேட்கிறதைவிட, இத்தனை நாள் ஏன் வரலேன்னு கேளுங்கம்மா. தாத்தா சம்பந்தய்யா எனக்கு எல்லாம் சொன்னார். எங்கப்பா இந்த வீட்லே ஏவல் செய்தவர்தான். பின்னாலே பெரிய மனிதரானார். நானும் இந்த வீட்டுக்கு வந்ததிலே எவ்வளவோ நல்லது தான் நிகழ்ந்திருக்கு. வருகிற வெள்ளிக்கிழமை கல்யாணம் முடிஞ்சப்புறம் எல்லாம் சொல்லலாம்னு இருந்தேன். அதுக்குள்ளே எல்லாருக்கும் தெரிஞ்சு போச்சு. கல்யாணம் வரையிலும் அப்பாவுக்குத் தெரியாமல் இருக்கிறது நல்லது. நீங்க யாரும் நான் இந்த வீட்டில் இருக்கிற விஷயத்தை அப்பாவிடம் சொல்லாதீங்க?'' என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டாள்.

பிறகு, நடந்த விஷயங்களை மரகதம்மாளுக்கு விளக்கினாள். மரகதம்மாள், கலிகாலத்திலும் இம்மாதிரி நடக்குமா என்று ஆச்சரியப்பட்டாள்.

அன்று மாலை பாலா, அத்தான் மோகன் வீட்டுக்குப் போனாள்.

அவனிடம், தனக்குச் சகோதரி நிலையில் இருக்கும் கமலாவுக்குக் கல்யாணம் என்றும் அவனும் அவன் தாயும் வரவேண்டுமென்றும் கேட்டாள்.

''சகோதரியின் சகோதரிக்கு எப்போது கல்யாணம்?'' என்று விளையாட்டாகக் கேட்டான் மோகன்.

பாலா சிரித்தாள். 'சகோதரியின் சகோதரியை மணக்க வேண்டும் என்று ஒருவர் ஆவலாக இருக்கிறார். ஆனால் அவருக்குச் சிறுகுழப்பம். இந்தப் பெண்ணின் தாய் தந்தை, யாரோ, இவள் என்ன குலமோ என்று ஐயப்படு கிறார். அவர் கமலாவின் கல்யாணத்துக்கு வந்தால்

www.t.me/tamilbooksworld



சந்தேகம் தீர்ந்துவிடும்! மூடுமந்திரம் வெளியாகிவிடும்.'' என்றாள்.

''அந்த நபர் இப்படியே, இந்த நிலையிலேயே ஒன்றும் தெரியாமலே மணக்கத் தயார்!'' என்றான்.

''இருக்கலாம். ரகசியம் வெளியானால் ஒரு வேளை அந்த நபர் மணக்கத் தயங்கலாமே!'' என்று சொன்னாள்.

பாலாவுக்கு உண்மையிலேயே கலக்கம் ஏற்பட்டது. மோகன் மனத்தை அறிந்து கொள்ளும் நோக்கத்தோடு ஒரு கேள்வி கேட்டாள்.

''திடீரென்று எனக்கு லாட்டரியில் பணம் விழுந்து நான் பணக்காரியாகிவிட்டால், நீங்கள் என்னை வெறுப் பீர்களா?'' என்றாள்.

''பணம் வந்தால் பரவாயில்லை. ஆனால் லாட்டரியில் விழும் அதிருஷ்டம் உள்ளவர்கள் என் வீடு தேடி வர மாட் டார்கள்! இந்த ஏழை மோகனுக்கு வாழ்க்கைப் படவும் விரும்ப மாட்டார்கள்'' என்று விளையாட்டாகப் பதில் சொன்னான்.

பாலாவின் மனத்தில் ஒரு பயம் திக்திக்கென்று அடித்துக் கொண்டிருந்தது. வெள்ளிக்கிழமை அன்று அவள் சக்ரபாணியின் மகள் என்று தெரிந்ததும், மோகன் என்ன சொல்வான்? ஏமாற்றுக்காரி, சாகஸக்காரி என்றெல்லாம் சொல்ல மாட்டானா? அவன் மனத்தில் அவளுக்கு இப்போது இருக்கும் இடம் அப்புறம் இருக்குமா?

மணியைப்போல் மோகனுக்கும் சிறிது பணத்தாசை இருந்தால் எவ்வளவு சல்லிசாய் இருக்கும் என்று நினைத் தாள். வெள்ளிக்கிழமை அன்று விதி வேறுவிதமாக திட்ட மிட்டிருந்ததை பாலா எப்படி அறிவாள்!

வெள்ளிக்கிழமை காலையில் பாலா, கமலாவுக்கு அலங்காரம் செய்து, கோவிந்தப்ப நாயக்கன் தெருவில்

உள்ள கல்யாண மண்டபத்துக்கு அழைத்துப் போவதில் முனைந்திருந்தாள்.

காலையிலே சக்ரபாணி தன் மகளைப் பார்க்கப் போகும் ஆவலின் காரணமாக வியாபார வேலைகளை ஒதுக்கி விட்டான்.

பொழுது விடிந்ததிலிருந்து வானத்தின் தூற்றலும் இடியும் ஊருக்கே ஒருவித சோகத்தைக் கொடுத்தபடி இருந்தது.

பாலாவின் தாய் அன்று இரவு பூராவும் தூங்காமல் உலாவிக் கொண்டிருந்தாள். விடியற்காலையில் மழை. இருட்டில் யாருக்கும் தெரியாமல் மாடியிலிருந்து இறங்கி, தோட்டத்துக்கு வந்துவிட்டாள். நர்சுகள் கவனிக்க வில்லை.

விக்கட் கேட்டைத் திறந்து சாலையில் நடக்க ஆரம் பித்தாள். தூற்றலும் இடியும் அவளுக்கு ஒருவிதக் கிளர்ச்சியை உண்டு பண்ணின.

சில மாதங்களாக அவள் அழைக்காத பெயர் அவள் உதடுகளில் மறுபடியும் ஒலித்தது.

''சந்திரன்! சந்திரன்...!'' என்று கூவியபடியே இறந்து போன அவள் அண்ணனைத் தேடியபடி நடந்தாள்.

லட்சுமி விரிந்த தலையோடு அடிமேல் அடி வைத்து மழைத் தூற்றலின் நடுவே நடந்து வந்தாள்.

அவள் தெருவிலே நடந்து பல வருடங்கள் ஆகி விட்டன. ரங்கூனிலிருந்து வந்த நாள்முதல் அவள் வீட்டை விட்டு வெளியே வரவில்லை. அவள் வரும் நிலையிலும் இல்லை. அவள் வெளியே அனுமதிக்கப் படவும் இல்லை. நர்சுகளின் காவலில் வீடு என்ற சிறை யிலேயே வாழ்ந்தவள்.

அவளுக்குத் தெருவிலே தனிமையில் காவல் இல்லாமல் நடப்பதே ஒருவித புது அனுபவமாக இருந்தது.

www.t.me/tamilbooksworld



மழைத் துளிகளின் குளுமை, கொதித்துக் குழம்பிப் போயிருந்த அவள் தலைக்குக் குளிர்ச்சி தந்தது. அப்படியே மழையிலேயே நின்று கொண்டிருக்கலாம் போல் இருந்தது. ஆனால் இடி இடிக்கும்போது, லட்சுமிக்கு அவளை அறியாமலேயே ஒருவித பயம் ஏற்பட்டது. இடியின் ஒலி கேட்டுப் பயம் மட்டுமா ஏற்பட்டது? இல்லை; அவள் மனத்திரையில் ஏதேதோ ஞாபகப் படங்கள் எழுந்தன. லட்சுமி சிரித்துக் கொண்டாள்,

தன்னை இருபது வயதுப் பெண்ணாக நினைத்துக் கொண்டாள்.

''சும்மா இருங்க. சந்திரன் அண்ணா அதோ அங்கே குளத்துப் பக்கத்திலே நிற்கிறார். குழந்தை பாலா முழிச்சுப் பார்க்குது. இப்போ போய் இப்படிச் செய்ய றீங்களே!'' என்று சொல்லிவிட்டு வெட்கத்தால் தலை குனிந்து கொண்டு கணவன் சக்ரபாணியின் பிடிப்பி லிருந்து விலகுவது போல் விலகிக் கொண்டாள்.

அவள் பார்வையில் ரங்கூன் நகரத்து வீதிகள்தான் தோன்றின. அவள் கை இடுப்பில் குழந்தை பாலாவைத் தூக்கிக்கொண்டு நடப்பதுபோல் அவளுக்குத் தோன் றியது.

திடீரென நின்றாள். அவள் எதிரே ஒரு குளம் தெரிந்தது. அது உண்மையில் ஒரு நீரோட்டம். ஆனால் லட்சுமியின் மனம்தான் ரங்கூனில் கடந்த காலத்தில் நிலைத்து விட்டதே.

அந்தக் குளத்தின் அருகில் ஒரு பூங்கா. அங்கே அவள் பாலாவோடு மரத்தடியில் புல் தரையில் படுத்து தன் மார்பு மீது குழந்தை பாலாவை வைத்துத் தூக்கிப்போட்டு விளையாடுவது போல நினைத்துக் கொண்டாள்.

அப்படியே நுங்கம்பாக்கம் ஸ்டர்லிங்ரோடு தாண்டிய பின் சேத்துப்பட்டு பகுதியில் அந்த நீரோட்டத்தின்

கரையில் மல்லாந்து படுத்துக் கொண்டாள். சிரிக்க ஆரம்பித்தாள்.

ஒரு பயங்கரமான இடி இடித்தது. இந்த இடி ரங்கூன் பார்க்கில் பல வருடங்களுக்கு முன் விழுந்த இடி. லட்சுமி பயந்து கைக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு, அவளுடைய அண்ணனும் கணவனும் பேசிக் கொண்டிருந்த இடத்தை நோக்கி ஓடுகிறாள்.

அங்கு அவர் அண்ணன் சந்திரனுக்கும் சக்ரபாணிக்கும் இடையே வாக்குவாதம் நடக்கிறது. சக்ரபாணி, சந்திரனிடம் கத்துகிறான். "சந்திரா, நான் சென்னைக்குப் புறப்படுகிறேன். ரங்கூனில் நான் தொட்டது ஒன்றும் உருப்படவில்லை. நீ செய்த பிஸினஸ் செழித்து, நீ செல்வந்தன் ஆகிவிட்டாய். நீ சம்பாதித்திருக்கும் மூன்று லட்சத்தை என்னிடம் கொடுத்துவிடு! நான் சென்னை சென்றால் ஒருவேளை அதிர்ஷ்டம் எனக்கு இருக்கலாம்!" என்கிறான்.

உடனே சந்திரன் பதில் சொல்கிறான். "சக்ரபாணி இது மட்டும் என்னால் செய்ய முடியாது. நீ உன் தனி வியாபாரத்தால் பணம் இழந்த விஷயத்தை லட்சுமியிடம் கூடக் கூறாமல் இதுநாள் வரை மூடி வைத்திருக்கிறேன். உன் சொந்தக் கடனையெல்லாம் அடைத்து விட்டேன். நான் சம்பாதித்த ரங்கூன் வீடு, ஆயிரம் ஏக்கர் நிலம் இவ்வளவையும் உன் பேரிலே மாற்றி விட்டேன். எல்லாம் என் தங்கை லட்சுமிக்காக நான் செய்கிறேன். சென்னை சென்ற பின்பு அப்பா, லால்குடி சீனிவாசன் யாரிடமும் நீ வியாபாரத்தில் நஷ்டமடைந்ததை நான் சொல்ல மாட்டேன். ஆனால் ரொக்கத் தொகையான இந்த மூன்று லட்சத்தை மட்டும் உன்னிடம் கொடுக்க முடியாது! ஏனென்றால், நான் என் குழந்தை மோகனையும் மனைவியையும் இனிமேலும் பிரிந்திருக்க முடியாது. நீ ரங்கூனில் என் பிஸினஸைத் தொடர்ந்து நடத்து. அதிக ஆசைப்படாமல் இரண்டு வருஷம் பொறுத்தால்,

www.t.me/tamilbooksworld



எனக்கு வந்த லாபம் உனக்கும் வரும். அப்புறம் நீ ஊர் திரும்பலாம்."

இந்த உரையாடலைக் கேட்ட லட்சுமிக்கு பெரிய அதிர்ச்சி ஏற்படுகிறது.

தன் கணவன் வியாபாரத்தில் இழந்து விட்டாரா? அதைப் பற்றி அவர் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லையே! சாடையாக, அண்ணன் சந்திரன் நஷ்டமடைந்து விட்டான் என்றல்லவா பொய் கூறி வந்திருக்கிறார் என்று லட்சுமி நினைத்தாள்.

அடுத்தபடியாக, சக்ரபாணி சந்திரன் காலில் விழுந்து கெஞ்சுது லட்சுமிக்குப் பார்க்கவே அசிங்கமாக இருந்தது.

"சந்திரா, அந்த மூன்று லட்சத்தை என்னிடம்கொடு. எனக்கு ரங்கூன் பிடிக்கவில்லை. நானும் லட்சுமியும் சென்னை செல்கிறோம். தோல்வியடைந்த சக்ரபாணியாக நான் செல்ல விரும்பவில்லை" என்று கெஞ்சுகிறான்.

சந்திரன், "சக்ரபாணி, சென்னையில் மட்டும் உனக்கு லாபம் வந்து விடும் என்று என்ன உறுதி! ஏற்கனவே செலாவணியில் இருக்கும் வியாபாரத்தை உன் கையில் விட்டுப் போகிறேன். கடன் இல்லாமல் விட்டுப் போகிறேன். அதை நீ தொடர்ந்து செய்" என்று பதிலுக்குக் கட்டளையிடுகிறான்.

லட்சுமி, அவள் கணவன் வெறுப்போடு போய் ஒரு மரத்தடியில் உட்காருவதைப் பார்த்தாள். அவளுக்குத் திகில் ஏற்பட்டது.

அவள் கணவன் மனம் ஒருவரை எவ்வளவு தூரம் வெறுக்க முடியும் என்பதை அவள் உணர்ந்திருந்தாள். அண்ணாவுக்கு எந்தவிதத் தீங்கும் வரக்கூடாது என்று நினைத்தாள். அதே சமயத்தில் அவளுக்குக் கணவனிடம் இருந்த கவர்ச்சியும் பயமும் அவளுக்கு வாய்ப்பூட்டு போட்டது போல் இருந்தது.

சக்ரபாணி—சந்திரனுக்கு ஏற்பட்ட சச்சரவை அவள்

மறைந்து நின்று தெரிந்து கொண்டதைக் காட்டிக் கொள்ளாமலே இருந்து விட்டாள். சில விநாடிகள் குழந்தை பாலாவுக்கு விளையாட்டு காட்டிக் கொண்டிருந்தாள்.

அப்போது தொலைவிலிருந்து சந்திரன் குரல் கேட்டது. "லட்சுமி! லட்சுமி!" என்று.

லட்சுமி ஓடினாள். அங்கு குளத்தின் நடுவில் சந்திரன் தத்தளித்துக் கொண்டிருந்தான்.

"சக்ரபாணி, எனக்குக் கால்லே உணர்ச்சி இல்லை. நான் முழுகிடுவேன் போலிருக்கு. என்னைக் காப்பாற்று" என்று அலறினான்.

சக்ரபாணி அப்படியே சந்திரனை விறைத்துப் பார்த்தபடி நின்றான்.

சந்திரனின் வலது கரம் ஒரு பக்கமாக வலிப்பு வந்தது போல் இழுத்துக் கொண்டிருந்தது. அவன் தலை நீரில் மூழ்கியது. மறுபடியும் தலை நீர் மட்டத்துக்கு மேல் வந்தது.

வாயில் நுழைந்த நீரைக் கொப்பளித்தபடி சந்திரன், "லட்சுமி! சக்ரபாணியைக் காப்பாற்றச் சொல்லு!" என்றான்.

லட்சுமி தனக்கு நீந்தத் தெரியாது என்பதைக்கூட மறந்து நீரில் குதிக்க ஓடினாள். "அண்ணா! அண்ணா!" என்று அலறியபடி ஓடினாள்.

சக்ரபாணி பாய்ந்து அவள் கையைப் பிடித்து நிறுத்தினான்.

"அவனை இனிக் காப்பாற்ற முடியாது லட்சுமி! இனி காப்பாற்ற முடியாது!" என்றான்.

லட்சுமி திரும்பிப் பார்த்தாள். அண்ணன் உடல் தண்ணீரில் மறைந்து வெறும் நீர்க் குமிழிகள் மட்டும் நீர் மட்டத்தில் தெரிந்தன.

லட்சுமியின் சித்தம் குழம்பியது. கணவன் முகத்தைப் பார்த்தாள். அவன் முகத்தில் ஒருவித அசுர திருப்தி இருந்தது. என்ன பேசுகிறோம் என்பதை மறந்தாள்.



"நீங்க ஒரு ராட்சதன்! அண்ணாவை நீங்க காப்பாற்ற விரும்பலை! ஆசை உங்களுக்கு! நீங்க வியாபாரத்திலே தோத்துட்டீங்க. அது அண்ணாவுக்குத்தான் தெரியும். அண்ணாவின் பணம் உங்களுக்கு வரும். அதுக்காகத் தானே காப்பாற்றாமல் கையைக் கட்டிட்டு நிக்கறீங்க?" என்றாள்.

சக்ரபாணி, அவளை அறைந்தான். லட்சுமி ஓடித் தண்ணீரில் குதித்தாள். "அண்ணா!" என்று அலறியபடி விழுந்தாள்.

அவள் தண்ணீரிலிருந்து எடுக்கப்பட்டாள். ஆனால் அவள் தன் சித்தசுவாதீனத்தைக் குளத்திலேயே இழந்து விட்டாள்.

அன்று முதல் அவளுக்கு எந்தவித ஞாபகமும் இல்லை. சக்ரபாணிக்கு இது அதிர்ச்சியைக் கொடுத்தாலும், ஒரு விதத்தில் அவனுக்கு அதுவும் சௌகரியமாகவே அமைந்தது.

ரங்கூனிலிருந்து சக்ரபாணி செல்வந்தனாகத் திரும்பினான்.

பல வருடங்களுக்கு முன் ரங்கூனில் நிகழ்ந்த காட்சி, லட்சுமியின் மனத்தின் மேல் தளத்தில் தோற்றமளித்தது. நுங்கம்பாக்கத்துக்கும் சேத்துப்பட்டுக்கும் இடையே உள்ள நீர்மட்டத்தில் லட்சுமி பார்த்த ஒரு காட்சிதான், லட்சுமியின் மனத்தில் புதைந்து கிடந்த இந்த கடந்த காலக் காட்சியை நினைவுக்குக் கொண்டு வந்தது.

அந்த நீரோட்டத்தில் ஒருவன் முழுகுவதும், நீர் மட்டத்துக்கு மேல் எழுந்து நீரைக் கொப்பளிப்பதுமாக இருந்தான். அவன் விளையாட்டாக செய்ததைத்தான் அன்று லட்சுமியின் அண்ணன் சந்திரன் உயிருக்காகத் தண்ணீரில் மன்றாடும்போது செய்தான்.

இந்தக் காட்சி ஒற்றுமை லட்சுமியின் மனத்தைத் தாக்கி, அவளை இறந்த காலத்துக்கு இழுத்துச் சென்றது.

அந்தக் காட்சி இன்று நிகழ்வது போல் தோன்றியது லட்சுமிக்கு.

"அண்ணா! உன்னை நான் காப்பாத்துகிறேன்!" என்று தண்ணீரில் இறங்கப் போனாள்.

அதே சமயத்தில் மோகன் ஸ்கூட்டரில் அவன் வேலை செய்யும் ஸ்தாபனத்தின் மானேஜரிடம் லீவு பெற்றுக் கொண்டு, கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் நடக்கப் போகும் கமலாவின் கல்யாணத்துக்கு வந்து கொண்டிருந்தான்.

## 56

அன்று கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் நடக்கவிருக்கும் திருமணத்தில் அவனுக்குச் சுந்தரியின் தாய் தந்தையர் யார், சுந்தரி யார் என்ற மர்மங்களுக்கு விளக்கம் கிடைக்கும் என்ற ஆவலோடு வந்து கொண்டிருந்தான்.

ஸ்கூட்டரில் வந்து கொண்டிருந்த மோகனுக்கு, தன் தாயின் வயதுள்ள ஒரு மாது தண்ணீரில், "அண்ணா! வர்ரேன்! சந்திரண்ணா நானும் வர்ரேன்" என்று கூவியபடி இறங்குவது, அவன் கவனத்தைக் கவர்ந்தது. 'சந்திரன்' என்ற பெயர் அவனுடைய தந்தையின் பெயர் அல்லவா?

ஸ்கூட்டரை நிறுத்திவிட்டுப் பார்த்தபோது, தண்ணீரில் இறங்கும் பெண்மணியின் சாயல் எங்கோ எப்போதோ பார்த்த சாயலாக இருந்தது. அவள், "சந்திரா... சந்திரா..." என்று வெற்று வெளியைப் பாரத்தபடி கூறிக் கொண்டு இறங்குவது, அவள் சுயநினைவில் இல்லை என்பதைக் காட்டியது. அவள் அணிந்திருந்த சேலை, நகை, அவள் பெரிய வீட்டுப் பெண்மணி என்பதைக் காட்டியது.

மோகன் அந்தப் பெண்மணியைப் பார்த்தபடியே



நின்றான். அவளுக்கு நீந்தவும் தெரியாது, அவள் சுயபிரக்ஞையிலும் இல்லை என்பதைப் புரிந்து கொண்டான்.

நீர் மட்டம் அவள் புருவத்துக்கு வந்ததும், அவள் மூச்சுத் திணறித் தத்தளிக்க ஆரம்பித்தாள்.

மோகன் நீரில் இறங்கினான். வெகு வேகமாய்ப் போய் லட்சுமியை நீரிலிருந்து தூக்கினான். நீந்தி இழுத்தபடி கரை சேர்த்தான்.

லட்சுமி குழப்பத்தோடு பார்த்தாள். "இது ரங்கூன் தானே?" என்று கேட்டாள்.

"இல்லை இது, சென்னைப் பட்டணம். நீங்க யாரு?"

லட்சுமி, மோகனைக் கூர்ந்து கவனித்தாள். "ஏம்பா, நீ எங்கண்ணா சந்திரன் மாதிரியே இருக்கிறாயே" என்று கூறி அன்போடு அவனைப் பார்த்தாள்.

"எங்கப்பா பேரு சந்திரன். அவர் இறந்து போனது ரங்கூன்லேதான். அப்போ நான் குழந்தையா இந்த ஊர்லேதான் இருந்தேன். நீங்க யாரும்மா?'?

லட்சுமி கண்களைக் கொட்டினாள். "நீ சந்திரன் பிள்ளையா! மோகனா! நீ பெரியவனாயிட்டியே என் பாலாவும் பெரியவளாயிருப்பா. இத்தனை நாள் நான் எங்கிருந்தேன்...? நான் எங்கிருந்தேன்?" என்று இருமுறை கூறியவள் மயங்கி விழுந்தாள்.

மோகன் முன்பின் தெரியாத பெண்மணியைத் தாங்கியபடி நின்றான். அவன் மனம் கோவிந்தப்ப நாயக்கன் தெருவுக்குச் செல்ல வேண்டுமென்று உந்தியது. இந்த அம்மாளின் பேச்சிலிருந்து, அவள் தன்னுடைய அத்தையாகத்தான் இருக்க வேண்டும். சித்தசுவாதீனம் இல்லாத நிலையில் அத்தை இருப்பதாகத் தாத்தா சம்பந்தய்யா கூறியிருந்தாரே. மோகன் யோசித்தான்.

வழியில் செல்லும் டாக்ஸியை நிறுத்தினான். மயங்கிக் கிடந்த லட்சுமியை அதில் ஏற்றியபின்... டாக்ஸிகார

னிடம் சக்ரபாணியின் விலாசத்தைக் கொடுத்து ஓட்டச் சொன்னான்.

கோயமுத்தூர் தியாகராஜன் இதே சமயத்தில் ஓட்டல் அறையில் முழு போதையில் உட்கார்ந்திருந்தார். அவருடைய மகன் அவருக்கு எதிரியாகி விட்டான். சக்ரபாணியின் கைக்கூலியாகி விட்டான் என்ற எண்ணமே அவர் மனத்தில் திரும்பத் திரும்ப எழுந்து கொண்டிருந்தது. அதை மறைக்க மது அருந்தினார். ஆனால் அந்த மது அந்த எண்ணத்தையே மறுபடியும் அவர் மனத்தில் தாரக மந்திரம் போல் ஊர்ஜிதம் செய்தது.

மணி அறையில் நுழைந்து, ''அப்பா, முகூர்த்தத்துக்கு நேரமாச்சு. வாங்க புறப்படலாம்'' என்றான்.

தியாகராஜன் உதடுகள் இளக்காரத்துடன் மணியைப் பார்த்தன. அவர் அருகிலுள்ள பாத்ரூமுக்குள் சென்றார். அங்கு தரையில் வாஷ்பேஸின் அடியில் வைத்திருந்த தோல் பையை எடுத்தார். அவர் கால்கள் தள்ளாடின. ஆனால் அவர் உள்ளத்தில் வேர் ஊன்றியிருந்த வெறுப்பு அவருக்குப் பலம் கொடுத்தது. முயன்று, தோல் பையிலிருந்து கைத்துப்பாக்கியை எடுத்துத் தன் இடுப்பில் செருகிக் கொண்டார்.

அவர் உதடுகள், 'கமலா... கமலா...' என்று முணுமுணுத்தன. பாத்ரூமிலிருந்து வெளியே வந்தவர் முகத்தில் புன்னகை ஒளி வீசியது.

''மணிக் கண்ணு, வா கல்யாண சத்திரத்துக்குப் போவோம்'' என்று மிகவும் திருப்தியோடு சொன்னார். மணியை அன்போடு அழைத்த சந்தர்ப்பங்களில் இது ஒன்று.

அவர் இடுப்பில் செருகப்பட்டிருக்கும் கைத்துப்பாக்கி விஷயம் அவனுக்குத் தெரியாது. அப்பா மனம் மாறி விட்டார் என்று நினைத்தான்.

காரில் கோவிந்தப்ப நாயக்கன் தெரு நோக்கிச்

www.t.me/tamilbooksworld



செல்லும் போது தியாகராஜன், மணியிடம் ஒரு கேள்வி கேட்டார். ''மணி, உனக்கு அந்த மில்காரனைத் தெரியுமா!''

''எந்த மில்காரனப்பா?'' என்றான் மணி.

''அதான்டா பொள்ளாச்சி மில்லுக்காரன். அவனைத் தெரியுமில்லே? தனக்கு மானம் போன உடனே எதிரிகளைச் சுட்டுத் தீர்த்துவிட்டு, தன்னையும் பெட்ரோல் ஊத்திக் கொளுத்திக்கிட்டான்டா. அவன் மனுஷன்!''

மணி, தந்தை குடிவெறியில் உளறுகிறார் என்று நினைத்தான்.

தியாகராஜனும் மணியும் கல்யாண சத்திரத்துக்குப் போய்ச் சேரும் போது, அங்கு சக்ரபாணி வந்து சேரவில்லை.

சம்பந்தய்யா, குருமூர்த்தி, மரகதம்மாள் எல்லோரும் சக்ரபாணி வருகைக்கு எதிர்பார்த்தபடி காத்திருந்தனர்.

திருமணையில் தாலி கட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் தயாராக இருந்தன. கமலா, நடுக் கூடத்தில் தனி நாற்காலியில் வந்து அமர்ந்த. அவர் எதிர்கால மாமனார் கோயமுத்தூர் தியாகராஜனைப் பயத்தோடு பார்த்தாள்.

பாலா பேசாமல் இருந்திருக்கலாம். தியாகராஜனிடம் போய் வணக்கம் தெரிவித்தாள். அவருக்குக் காப்பி கொடுத்து உபசாரம் செய்தாள்.

தனக்கு மருமகளாக வரவேண்டியவள் தன்னைப் பார்த்துப் புரளி செய்வதாக நினைத்தார் தியாகராஜன். அடி வயிற்றிலிருந்து புகைந்து எழுந்த ஆத்திரம் இருமலாகக் குமுறி வெளிப்பட்டது.

சக்ரபாணி வீட்டுக்கு வெளியே வந்து காரில் ஏறும் போது மோகன் ஏறி வந்த டாக்ஸி வந்தது.

மோகன், தன்னை யார் என்று அறிமுகப்படுத்திக் கொள்ளாமல் லட்சுமி அம்மாளுக்கு நீரில் ஏற்பட்ட விபத்தைப் பற்றி மட்டும் கூறினான்.

சக்ரபாணி உடனே லட்சுமியைத் தன் தோளில் போட்டபடி தன் வயதைச் சிறிதும் மதியாமல், படிக் கட்டில் தாவி ஏறினான்.

லட்சுமியை அவள் அறையில் அமர்த்திவிட்டு, டாக்டருக்குப் போன் செய்தான்.

பிறகு நர்சுகளிடம் லட்சுமியை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளும்படி கூறிவிட்டுப் படிக்கட்டுக்களில் இறங்கினான்.

மோகன் அவனை மாடிவரை பின் தொடர்ந்தான். பிறகு அவனோடு கீழே இறங்கினான்.

சக்ரபாணி, அவனுக்கு ஒரு நன்றி வார்த்தைகூடச் சொல்லவில்லை. அவன் இருப்பதையே சக்ரபாணி கவனிக்கவில்லை. ஆனால் மோகன் தன்னுடைய அத்தை வீட்டின் செல்வத்தையும், நீண்ட ஹால்களையும் அதன் தரைமீது விரிக்கப்பட்டிருந்த கம்பளத்தையும் பார்த்துப் பிரமித்து நின்றான். அத்தை மகள் எங்கு போயிருப்பாள் என்று ஆச்சரியத்துடன் நினைத்தான்.

சக்ரபாணியும் மோகனும் வெளிப்புறம் வந்ததும் தான் சக்ரபாணி மோகனைப் பார்த்தான்.

"ஏம்பா நீதானே... நீ தானே..." என்று ஏதோ சொல்ல வாயெடுத்தான். அவன் குரலில் தொனித்த அலட்சிய பாவம் மோகனுக்குச் சுருக்கென்று தைத்தது.

"நான்தான் சார் உங்க சம்சாரத்தைக் காப்பாத்தினவன்!" என்றான் மோகன்.

"சரி சரி, நன்றி. நான் அவசரமாகக் கோவிந்தப்ப நாயக்கன் தெருவிலே ஒரு கல்யாணத்துக்குப் போயிட்டிருக்கேன். நாளைக்குச் சாவகாசமா வர்ரியா?"

"நானும் கோவிந்தப்ப நாயக்கன் தெருவுக்குத்தான் போறேன்."

www.t.me/tamilbooksworld



"ரொம்ப நல்லதாப் போச்சு. ஏறிக்கோ" என்று சொல்லி மோகனைக் காருக்குள் திணித்தான்.

"சார்... சார்... என் ஸ்கூட்டர் அங்கே ரோட்லே இருக்கு சார்..."

"பரவாயில்லை, திரும்ப வந்து எடுத்துக்கலாம். இல்லே, உனக்குப் புதுசாவே ஸ்கூட்டர் வாங்கித் தர்ரேன். என் பெண் காத்துக்கிட்டிருப்பா. நான் உடனே போகணும். ஒரு கேவலமான ஸ்கூட்டருக்காக டயத்தை வீணாக்கலாமா? ஏறுப்பா!"

மோகனுக்குச் சக்ரபாணியை அறைந்து விடலாம் போல் இருந்தது. அதற்குள் கார் வேகமாக நகர ஆரம்பித்தது.

"டிரைவர் வேகமாகப் போ!" என்ற சக்ரபாணி அவனிடம், "ராமனுஜ கல்யாண மண்டபம்" என்ற பெயர் சொன்னதும், மோகன் ஆச்சரியம் அடைந்தான்.

"சார், நானும் அதே கல்யாணத்துக்குத்தான் சார் போறேன்" என்று தன்னுடைய முக்கியத்துவத்தை ஒருவாறு காட்டிக் கொண்டான்.

சக்ரபாணி அலட்சியமாக, "அரசனும் ஆண்டியும் ஒரே தப்பைத்தான் சில சமயம் செய்வாங்க. என்னைவிட நீ பரவாயில்லைப்பா. இந்தக் கல்யாணச் செலவு, இதன் ஸ்ரீதனம் எல்லாம் என் கணக்கிலே நடக்குது. ஒரு பலவீனத்தின் காரணமாக நான் ஒப்புக் கொண்டேன். அதுவரையிலும் நீ கொடுத்து வைச்சவன் இல்லியா! செலவு இல்லாம கல்யாணத்துக்கு வந்து சாப்பிடப் போறவன் நீ!" என்றான்.

"உங்களுக்கு இஷ்டமில்லாத விஷயத்திலே ஏன் சார் செலவு செய்யறீங்க!" என்றான் மோகன்.

"அதுதாம்பா எனக்கே புரியலே. ஆமாம், உன் பெயர் என்னப்பா?"

"என் பேர் மோகன். நான் உங்க மைத்துனர் சந்திரன்னு ஒருத்தர் இருந்தாரே, அவர் பிள்ளை. நாம இத்தனை வருஷமா சந்திக்க வாய்ப்பில்லை. என்ன

செய்யறது! அத்தை தண்ணியிலே விழுந்து முழுகற சமயத்திலே, என் கை அவுங்களைக் காப்பாத்தணும்னு இருக்கு விதி'' என்றான் மோகன்.

சக்ரபாணி இப்போதுதான் முதன் முறையாக மோகனை ஒரு மனிதனாக நினைத்து உற்றுக் கவனித்தான்.

''ஆமாம், சந்திரன் ஜாடை உனக்கு இருக்கு'' என்றான்.

''லட்சுமி அத்தையும் அதையேதான் சொன்னாங்க, மயக்கம் போடுவதற்கு முன்னாலே'' என்றான்.

''லட்சுமி உன்னை அடையாளம் கண்டு, உன்னோடு பேசினாளா?'' என்று ஆவலோடு கேட்டான். அதற்குள் ராமானுஜ கல்யாண மண்டபம் வந்துவிடவே, சக்ரபாணி விறுவிறுவென்று காரிலிருந்து இறங்கி உள்ளே சென்றான். மோகன் பின்னால் தொடர்ந்தான்.

சக்ரபாணி நடுக்கூடத்தில் நுழைந்ததும், அங்கு நாற்காலியில் அமர்ந்திருக்கும் தியாகராஜனைப் பார்த்தான்.

''என்ன தியாகராஜன் தாலி கட்ட வேண்டியது தானே?''

தியாகராஜன் சக்ரபாணியை எந்த உணர்வும் இல்லாமல் பார்த்தார். ''நீ மனசு வச்சா நடக்க வேண்டியது தான்!'' என்றார்.

மரகதம்மாள், குருமூர்த்தி, அவன் மனைவி அன்னபூரணி இவர்களையெல்லாம் சக்ரபாணி பார்த்தான். பழைய காலத்து நினைவுகள் எழுந்தன. ஆனால் அவன் ஆணவம் அவனைவிடவில்லை. மகளின் நிர்ப்பந்தம் காரணமாகத்தான் இதெல்லாம் செய்கிறான் என்பது தெரிந்தது.

அவன் கண்கள் பாலாவைத் தேடின. பாலா மறைவிலிருந்து கவனித்தாள். சக்ரபாணியைப் போலவே மோகனும், சுந்தரி என்று நினைத்துக்கொண்டிருந்த பெண்ணைக் கண்களால் தேடிக் கொண்டிருந்தான்.

நடுக்கூடத்தை ஒட்டிய ஒரு சிறிய அறையிலிருந்து

www.t.me/tamilbooksworld



கமலா வெளியே வந்தாள். அவளை அணைத்துப் பிடித்தபடி பாலாவும் வந்தாள்.

## 57

சக்ரபாணியின் கண்கள் பாலாவை நோக்கின. அவள் அணிந்திருந்த சாதாரண நூல் புடவையும் சுருக்கம் விழுந்த அவள் முழுக்கை ரவிக்கையும், எந்தவித நகையும் இல்லாத தோற்றமும், எதுவுமே நெருங்க முடியாத அவன் இதயத்தை அம்புபோல் தைத்தது.

அழகான பற்கள் தெரிய பாலா தந்தையைப் பார்த்துப் புன்முறுவல் செய்தாள்.

பல நாள் சாப்பிடாதவன் சாப்பிடுவதுபோல் அவன் கண்கள் பாலாவின் முகத்தை விட்டு விலகவில்லை. அவன் பார்வையில் கல்யாணக் கூட்டம் தெரியவில்லை, மற்றவர்கள் யாரும் தெரியவில்லை. பாலாவின் ஏழ்மையான எளிமையான தோற்றம்தான் தெரிந்தது. வைர நெக்லஸ் செட்டுகள், பச்சை நெக்லஸ்கள், உடையின் நிறத்துக்குத் தக்கபடி வாங்கிய நகைகள் எதுவும் இல்லை. நாம் இத்தனை நாள் ஏன் சம்பாதித்தோம் என்றுநினைத்தான்.

பாலா, கமலாவை அழைத்து வந்து தியாகராஜனை வணங்கச் செய்தாள். பிறகு தன் தந்தையை வணங்கச் செய்தாள்.

சக்ரபாணி வாய் திறவாமல் பாலாவையே பார்த்து நின்றான்.

''அப்பா, கமலாவை ஆசீர்வாதம் பண்ணுங்க'' என்று ஞாபகப்படுத்தினாள்.

சக்ரபாணி, ''நீ நல்லா இரும்மா'' என்று ஒப்புக்காக உணர்ச்சியில்லாமல் கமலாவிடம் கூறிவிட்டு, பாலாவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

பாலாவுக்கு அவன் பார்வை வெட்கத்தைக் கொடுத்தது.

"என்னப்பா அப்படி முழிச்சுப் பார்க்கறீங்க? எனக்கு வெட்கமா இருக்கப்பா. நீங்க செய்ததுக்கெல்லாம் நன்றிப்பா!" என்றாள்.

சக்ரபாணியின் குரல் தழுதழுத்தது. "பாலா கண்ணு! ரொம்ப இளைச்சுப் போயிட்டியேம்மா!"

"இளைச்சா என்னப்பா? அம்மா, நான், நீங்க எல்லாரும் இனிமே நல்லாயிருக்கப் போறாம். அதுக்குக் கொடுத்த கூலியாக வைத்துக் கொள்வோம்" என்று கூறி விட்டு கமலாவை அழைத்துக் கொண்டு மணமேடையின் பின்புறம் வைக்கப்பட்டிருந்த லால்குடி சீனிவாசனின் படத்தின் முன் கமலாவை வணங்கச் சொல்லிவிட்டுத் தானும் வணங்கினாள்.

சக்ரபாணியும் அப்படத்தை உற்று நோக்கினான். படத்தில் இருந்த பெரியவரின் கண்கள் அவனையே பார்ப்பது போல் தெரிந்தது.

சம்பந்தய்யாவும் மரகதம்மாளும் சக்ரபாணியை நெருங்கினர்.

மரகதம்மாள், "நீங்கதான் எங்க குடும்பத்திலே விளக்கேத்தி வச்சீங்க" என்றாள்.

சம்பந்தய்யா, "எல்லாம் பாலாவின் மனசுதான் காரணம். அவளுக்கு அவ்வளவு உன்னதமான மனசு!" என்றார்.

சக்ரபாணி தன்னுடைய மாமனாரை முறைத்துப் பார்த்தான். ஒரு வினாடியில் அவனுக்கு, பாலா ஏன் வீட்டை விட்டு ஓடினாள், அவளுக்கு எப்படி லால்குடி சீனிவாசனின் விஷயமெல்லாம் தெரிந்தது என்று புரிந்து விட்டது.

சம்பந்தய்யாவிடம் திரும்பி, "இதெல்லாம் உங்க வேலைதானா!" என்று கேட்டான்.

சம்பந்தய்யா, "என் வேலை கால் பங்கு. மீதியெல்லாம் பாலா திரிபுரசுந்தரியின் அனுக்கிரகம்!" என்றார்.

www.t.me/tamilbooksworld